13வது ஜூன்மீ முதல் 1914வது மேமீ வரை

ஒன்பதாம் சம்புடம்

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்

வெளியிடுவோர்:

எஸ். குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1914

விலை ஒரு பாய்



Printed at
The 'Caxton' Press,'
Madras. E.

CONTENTS

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	அபிநய்ப் பாட்டு	116
2.	அரசியல்	230
3.	இடையனும் தத்துவசாஸ்திரியும்	34
4.	இச்சகம் பேசேல்...	169
5.	இந்தியா — அன்றும் இன்றும்	121 - 144
6.	இந்தியாதேச ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்டிங் மஹிபர் அவர்களுக்கு நல்வரவு கூறுதல்	... 145
7.	இயற்கைப்பாடம்	227
8.	இயற்கைப் பூகோளம்	118
9.	இயற்கைப் பொருட்கதைகள்	3, 25, 49
10.	இயற்கைப் பொருட்பாடம்	39, 88, 183
11.	இளைஞர் விளையாட்டு	107
12.	"உபாத்தியாயர் தோழன்"	210
13.	எலிமென்ட்டெரிப் பாடசாலைகளில் இயற்கைப் பாடம் ...	155
14.	எலிமென்ட்டெரிப் பாடசாலைகள்	97
15.	ஒன்பதாம் வருஷம்...	1
16.	ஓர் சம்பாஷணை 46, 66, 69, 253	
17.	கணித விநோதங்கள் 'ஒன்பது'	84
18.	கவர்ன்மென்ட் டிரெயினிங் ஸ்கூல் உபாத்திமை சங்கத்தில் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்	... 63
19.	கனம்பொருந்திய வைஸ்ராய் ஹார்டிங்பிரபு அவர்கள் பிறந்தநாள் கொண்டாட்டம்	 9
20.	காண்டாமிருகம்	15
21.	காற்று	224
22.	கிண்டர் கார்ட்டன்	29
23.	கிருஷி சாஸ்திரம்	57
24.	குமரகுரு	259, 272
25.	குழந்தைகளின் குற்றங்களும் அவற்றைத் திருத்தும் விதமும்	 158
26.	குழந்தைகளின் தோட்டம்	213
27.	சமுத்திர அடித்தல அமைப்பு	101, 284

நல்லாசிரியன் இனி பல அரிய விஷயங்களைத் தொடர்ந்து வெளி வருவதாக எண்ணங் கொண்டிருக்கிறேன். ஆசிரியர்கள் அவனை ஆதரிப்பார்களாயின் மிக உதவியா யிருக்கும்.

நல்லாசிரியன் சென்ற மாதத்தில் தனக்கு விஷயதானஞ் செய்த நண்பர்களுக்கெல்லாம் மனமுவந்த வந்தனம் புரிகின்றேன். மாற்றுப் பத்திரிகை அனுப்பிய சகோதர பத்திராதிபர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றேன். இனி விஷயதானஞ் செய்யும் நண்பர்கள் சற்று சிரமங் கொண்டு நல்ல விஷயங்கள் எழுதி யனுப்ப வேண்டுகின்றேன்.

பத்திராதிபர்

[குறிப்பு — ஒன்பதாம் வருஷ ஆரம்பத்தைப் புகழ்ந்து நல்லாசிரியனுக்கு ஒரு நண்பர் எழுதிய கடிதத்தை இங்கே வெளியிடுகின்றோம்.]

நல்லா சிரியன்

நல்லா சிரியஞ ஞாலத் துலவிவரு
நல்லா சிரியனை யா னண்ணினேன் — பல்லாசம்
போக்கினேன் போக்கிப்பின் போசமுற்றே னுற்றதற்பின்
றேக்கினே னனந்தத் தேன்.

'நல்லாசிரியன்' இது ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை. இவ்வரிய பெரிய நல்லாசிரியருக்கு இப்போது நிகழும் வயது ஒன்பது. இந்த ஆசிரியர் "சமயாசாரியர் ஸ்ரீ. சம்பந்தப் பிள்ளையாரைப் போலவே" இளமைப் பருவத்திலேயே நல்லாசிரியராக மேவி, இந் நிலவுலகின்கண்ணே உலாவி சிறுவர் சிறுமிகள் பண்டிதர் பண்டிதைகள் முதலான மற்றேனையோ ருள்ளத்தி னிலவுறும் சந்தேக விருளகற்றி, மெய்ஞ்ஞான வொளி நிறுத்தி வருதலைச் சில வற்சரங்களுக்கு முன்னரே கேள்வியுற்றுக் கண்ணுறக் கிடைப்ப தெங்ஙனம் எனக் கருதி யிருந்தேன்.

இருந்தேற்கு ஊழ்வலியான் "பூவாய் நெடுங் கோட்டு றுசுந் தேன் கை கான்முடங்கு பொறியிலிதன், னுவா யொழுகிற்றென"க் காருண்ணிய கவர்னமெண்டா ருதவியால் யான் அக்குரவ சிகாமணியை எளிதிற் கண்ணுறக் கிடைத்தது அம்ம அம்ம வியப்பே.

* கா. நமச்சிவாய முதலியார். அவரருட் பேற்று லவதரித்த அச்சமயாசாரியர் ஸ்ரீ-ஞான சம்பந்தப் பெருமானைப்போலவே இந் நல்லாசிரியரும் கா. நமச்சிவாய முதலியா ரருட்பேற்று லவதரித்து, "குலன்ரு டெய்வங் கொள்கை மேன்மை - கலை பயிறெளிவு கட்டுரைவன்மை - நிலமலி நிறைகோன் மலர்நிகர் மாட்சியு - முலகிய லறிவோ டியர்குண மினையவு - மமைபவ னூலுரையாசிரியன்னே" என்ற முறையானே ஆசிரிய இலக்கணங்கள் ஒருங்கே தம்முள் நிரப்பப் பெற்று, (மாற் சாலகிசோர நியாயப்படி) என்னைப் பக்குவ மறிந்து, தம்மிடத்தில் நடபடித்திப் பேரானந்தப் பெருக்கி லமிழ்த்திய எனது பரம குருவாகிய 'இந் நல்லாசிரியர்' ஆரோக திடகாத்திர பூர்ண பரமாயுளுடையவராய் என்றும் நின்றுலவ எல்லாம்வல்ல இறைவன் றிருவருளே இறைஞ்சுகின்றனன். சுபம்! சுபம்!! சுபம்!!

I M. முருகைய உபாத்தியாயர்,
தலைமை, போர்டு ஸ்கூல், செங்கிபட்டி,
தஞ்சாவூர் தாலுக்கா.

NATURE STORIES

இயற்கைப் பொருட் கதைகள்

A Humming Bird — ஊங்காரப் பறவை

இந்தச் சிறு பறவையைப் பார். இது எவ்வளவு அழகாக இருக்கிறது. இது பூப்பூவாகப் பறந்து போவதைக் கவனி. பறக்கும்போது என்ன செய்கிறது. தனது நீண்டு கூரிய அலகை புஷ்பத்திற்குள் நுழைக்கிறது. அதன் அலகு மிகவும் மென்மையானது.

இந்தப் பறவை பூவில் தன் அலகை நுழைக்கும்போது எப்படி அந்தரத்தில் நிற்கிறது தெரியுமா — தன் இரக்கைகளை அதி வேகமாக அடித்துக் கொள்கின்றது. அந்த வேகத்தினால் அது அந்தரத்தில் அசையாம லிருந்து தன் காரியத்தைப் பார்க்கின்றது

* கா - காத்தல்.

ஊங்காரப் பறவை எப்போதாவது சோம்பலாக இருந்ததைப் பார்த்திருக்கிறாயா — அது எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்யும். ஆனால் அது மிகவும் அச்சமுள்ளது. இச்சிறு பறவை மரத்தின் முடிச்சுகளில் தன் கூட்டை யமைக்கிறது. கூட்டைக் கட்டி முடித்தவுடன், அதைப் பாசியினால் மூடுகிறது. அப்போது அக்கூடு மரத்தின் முடிச்சு போலவே தோன்றும். சிறிதும் பேதம் தோன்றாது. கூட்டின் உட்புறம் அதிக மிருதுவாக இருக்கும். அதில் இரண்டு சிறு முட்டைகள் இடும். அம் முட்டைகள் மிக அழகாக இருக்கும்.

கூடு இருக்குமிடம் தெரிந்தால் சிறுவர்கள் அதைத் திருடுவார்கள். வேறு ஜந்துக்களும் அம் முட்டைகளைத் தின்றுவிடும். அதனால் அப்பறவை தன் கூடு வேறொருவர் கண்ணுக்கும் புலப்படாம லிருக்கும்படி தன்னாலானமட்டும் முயல்கின்றது.

ஊங்காரப் பறவையைப் மற்று மொருமுறை உற்றுப்பார் எவ்வளவு அழகாக இருக்கிறது. எத்தனை நிறங்கள் கலந்து விளங்குகின்றன! அதற்கும் புஷ்பத்திற்கும் பேதம் தோன்றுகிறதா பார். நீ நன்றாய்ப் பார்த்தால்தான் தெரியும். புஷ்பங்களின் நடுவில் இருக்கும்போது இதைக் கண்டு பிடிப்பது கஷ்டம். இப்படிப்பட்ட அருமையான பறவைக்கு நாம் துன்பம்செய்யலாமா! இதை நன்றாய்ப் பார்த்து இதன் அரிய குணங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

A Dragon — தும்பி.

குழந்தாய்! என்னை என் பிடிக்க முயல்கிறாய்? என்னைப் பிடிப்பதனால் உனக்கு என்ன வரும்? உன்னைப் போன்ற சிறுவர்கள் என்னைப் போன்ற சிறு ஜந்துக்களைப் பிடித்து வதைக்கிறார்கள். காலை ஒடிக்கிறார்கள்; இரக்கைகளைப் பிய்த்து விடுகிறார்கள்; சிலர் எங்கள் வாயில் சுப்பலை நூழைத்துப் பறக்க விடுகிறார்கள். இப்படி யெல்லாம் செய்யலாமா — நாங்கள் என்ன செய்கிறோம். உங்களுக்கு ஒரு தீங்கும் செய்வதில்லையே — உங்களுக்குப் பெரும் பாலும் உபகாரமே செய்கிறோம். நான் எங்களுடைய சரித்திரத்தைச் சொன்னால் பிள்ளைகள் எங்களைப் பிடித்து வதைக்க மாட்டார்கள். என்னைப் பிடிக்காமல் சற்று நில், என் சரித்திரம் சொல்லுகிறேன் கேள்:

என்னைப் பார், நன்றாய்ப் பார். நான் அசையாமல் இருக்கிறேன், என்னுடைய அழகான இரக்கைகளைக் கவனி. எத்தனை இரக்கைகள் இருக்கின்றன? நன்றாய்ப் பார், நான்கு இரக்கைகள் இருக்கின்றன. என்னுடைய கண்களைப் பார். எனக்குப் பெரிய கண்கள். மிகவும் பளபளப்பாக இருக்கின்றன. என் கண்களால் முன்னும் பின்னும் பார்ப்பேன், நீ என் பின்னால் வந்தாலும் எனக்குத் தெரிந்துவிடும்.



தம்பி, நான் உனக்குச் செய்யும் நன்மைகளைக் கேள். நாங்கள் சிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்று ஜீவிப்போம் — உங்களுக்குத் துன்பம் செய்கிற சிறு ஜந்துக்களை நாங்கள் நாசஞ் செய்தால் உங்களுக்கு இஷ்டந்தானே. கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டேயிரு, எத்தனைக் கொசுக்களைப் பிடித்துத் தின்று விடுகிறேன் பார். நான் ஓர் இடத்தில் அசையாமல் உட்கார்ந்திருந்து, ஏதாவது ஒரு பூச்சி வருமாவென்று பார்த்துக் கொண்டிருப்பேன். ஏதாவது வந்தால் உடனே அதிவேகமாய்

அதன்மேல் பாய்வேன். நம்மிடத்தில் அகப்பட்டால் மறுபடியும் தப்ப முடியாது.

நீர்நிலைகளுக்கு அருகில் இருப்பதற்கு எனக்கு அதிக இஷ்டம், ஏன் தெரியுமா — சொல்கிறேன் கேள்: நீர்நிலைதான் எனக்குப் பழைய வீடு. என்னைப் பார்த்தால் எப்போதாவது தண்ணீரில் வசித்திருந்தவனுக உனக்குத் தோன்றுகிறதா? நான் தண்ணீரில் வசித்திருந்த போது, எனக்கு இரக்கைகள் இல்லை. அப்போது நீர்ப்பூச்சிகளைத் தின்று கொண்டிருந்தேன். அப்போது என்



முகத்திற்கு ஒரு வகையான கவசம் உண்டு; அதனால் பூச்சிகளுக்கு என் வாய் தெரிவதில்லை. நான் மெள்ள நீந்திக் கொண்டேபோய் பூச்சிகளைப் பிடித்துக் கொள்வது வழக்கம். இப்படிக் கொஞ்ச காலம் தண்ணீரில் வசித்துக்கொண்டிருந்தேன்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு என்தோலுக்குள்ளேயே இரக்கைகள் வளரத் தலைப்பட்டன. பிறகு பறக்கலாம் என்னும் தணிவு எனக்கு ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பறந்தேன். நீரிலுள்ள செடிகளின் மேலேயே தவழ்ந்துகொண்டிருந்தேன். பின்பு என் உடற்கவசம் நீங்கி இரக்கைகள் நன்றாய் வளர்ந்தன. அதுமுதல் என் பழைய வீட்டை விட்டுப் பறந்து போகத் தலைப்பட்டேன். ஆஹா, அப்போது எனக்கு உண்டான ஆநந்தத்திற்கு ஓர் அளவும் உண்டோ சூரிய வொளியைக் காணக் காண எனக்கு ஆநந்தம் மேலிட்டது. அதன் பிறகு ஆகாயத்தில் எங்கும் பறந்து திரிய ஆரம்பித்தேன். இப்போது என் இஷ்டம் போல் இருக்கிறேன்.

தம்பி! உன்னோடு வெகுநேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டேன். பசி காதையடைக்கிறது. இனி சும்மாவிருக்க என்னால் முடியாது. இதோ ஒருபெரிய கொசு வந்திருக்கிறது; அதைப்பிடித்துத் தின்னவேண்டும். நீ போய்வருகிறாயா?

பத்திராதிபர்

AGRICULTURE

புன்செய்ப் பயிரின் பொது விஷயம்

நெல் கோதுமை தவிர மற்றத் தானியப் பயிர்களெல்லாம் புன்செய் பயிரென்னப்படும். புஞ்சைப்பயிருக்குக் கொல்லைப் பயிரென்றும் பெயர். இது சாதாரணமாய் மானவாரி அதாவது மழை பெய்தலால் விளையக் கூடிய பயிராகவே யிருக்கும். சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு, தினை, சாமை முதலிய கதிர்த் தானியங்களும் எள், கொள், கடலை, துவரை, பயறு, உளுந்து முதலிய காய்த் தானியங்களும் புன்செய் பயிர் வகைகளிற் சேர்ந்தவைகளே.

வட நாட்டிற் சோளம் முக்கியமான பயிர் - உத்தர ஹிந்தூஸ்தானத்தில் கோதுமை முக்கியப் பயிர் - கோதுமை குளிர்ச்சி மிகுந்த ஐரோப்பிய நாட்டினருக்கு உஷ்ணத்தை யுண்டு பண்ணத் தக்க உணவு. கர்நூல் ஜில்லாவில் விளையும் கம்பு சிரேஷ்டமானது. வரகு, தினை, சாமை முதலிய பயிர்கள் எங்கும் விளையக் கூடிய சாதாரணப் பயிர் வகைகள்.

துவரை, உளுந்து, கடலை முதலிய பருப்புதினுசுப் பயிர்களில் சதையை வளர்க்கிற சக்தி மிகுதியாயுண்டு. இது காரணம் பற்றியே வடதேசத்தினர் கோதுமை சோளம், இவற்றாலாகிய ரொட்டியைச் சாப்பிடுகையில் அதனோடு பருப்பைச் சேர்த்துண்பது வழக்கமாயிருக்கிறது. அரிசி உமியென்னும் ஓரே புரண்யால் மூடப்பட்டிருக்க பருப்பு தினுசு காயிகளுக்கு இரு வகைக் கவசத்தால் மூடப் பட்டிருக்கும். உமி அடுப்பெரிக்கப் பயன்படும்; பருப்புதினுசுகளின் பொட்டு மாட்டுக் குணவாகிறது. இதனால் பருப்பு அதிக உபயோக முள்ளதென்று விளங்குகிறது.

இவ்வகைக் கோதுமைப் பயிர்கள் சாதாரண வாயுவிலுள்ள இலவணவாயுவை பெரும்பாலும் கிரகித்து விருத்தியாகின்றன. பருப்புவகைப் புன்செய் பயிருக்குச் சுண்ணும்பு முக்கியமான எரு. இவற்றின் தாள்களும் மாட்டுக்கு நல்லுணவாவது மன்றி எருவுக்கும் முக்கிய பிரயோசனமாயிருக்கும்.

புழுங்கலரிசியும், பச்சரிசியும்

புழுங்கச் செய்த அல்லது வேகவைத்த நெல்லினுலான அரிசி புழுங்கல் அரிசி. அப்படிக்கு அல்லாதது பச்சரிசி. நெல்லை முதல்நாள் ஜலத்திற்கொட்டி ஊறவைத்தபிறகு வெயிலில் ஆவிகிளம்பி வாசனை வருமட்டும் வேகவைத்து உலர்த்திப் பதமான சமயத்தில் குற்றி எடுக்கும் அரிசியே புழுங்கல் அரிசி. இப்படிச் செய்வதனால் அரிசிருத்தும்போது நெல் இடிந்துபோகாமல் இருக்குமாம். அன்றியும் இதுதேகாரோக்கியத்துக்குஉடனென்று சொல்லுகிறார்கள். இச்செய்கை இந்நாட்டுக்கே அடுத்ததாய் இருக்கிறது. வடநாட்டில் இக்காரியம் அநாசாரமென்று நிராசரிக்கப்பட்டு இருக்கின்றது. வெந்தநெல் சாதத்துக்குச் சமானம். இவ்வகை அரிசியைத்தின்னப் பழகினவர்கள் பச்சரிசியை வாய்வு என்பார்கள்.

பச்சரிசி உடம்புக்கு பலம்தருவதே யன்றி உண்ண உருசியுள்ளதாகவுமிருக்கும். பச்சரிசிச் சாதத்தில் சத்தான வஸ்துவாகிய கஞ்சி வீணாக்கப் படுவதில்லை. உலகமெங்கும் சகலஜனங்களும் நெல்லை பச்சரிசியாக, குற்றிச் சாப்பிட்டுவர இத்தென்னாட்டில் மட்டும் பிராமணர் தவிர மற்ற ஜாதியார் நெல்லோடும் புழுங்கல் அரிசியைத்தின்னும் பழக்கத்தையுடையவராய் இருப்பதற்குக் காரணம் புலப்படவில்லை. பஞ்சகாலத்தில் வெளிதேசங்களில் இருந்து வரவழைக்கப்படும் கப்பல்அரிசி பச்சரிசியே யல்லவா?

நெல்லை அரிசியாக்குவதற்கு அமெரிக்கா ஐரோப்பா முதலிய தேசங்களில், நீராவியந்திரங்களை உபயோகித்துவர, நமது நாட்டில் பெண்டுகள் உலக்கையாலும், ஏற்றத்தாலும் அதிக கஷ்டத்துடன் அரிசியாக்குகின்றனர். சிலபாகங்களில் இதற்காகமறையந்திரமும் மாவுக்கல் யந்திரமும் உபயோகப் படுகிறது. இவற்றால் அதிகவேலை நடக்கும். ஒருத்தி உலக்கையால் ஒருநாளைக்கால் நெல்லைக்குற்றி அரிசியாக்குவாள். அதுவே ஏற்றமாயின் இரட்டிப்பான வேலை நடக்கும்.

கெங்கல்பட்டு சென்ட்டர்
20-6-1913

சி. வே. சண்முக முதலியர்,
செகண்டரி ஸ்கூல்மாஸ்டர்.

H. E. THE VICEROY'S BIRTHDAY CELEBRATION

கனம் பொருந்திய வைஸ்ராய் ஹார்டிங் பிரபு அவர்கள் *பிறந்தநாள் கொண்டாட்டம்

பிள்ளைகளே!

இன்று ஏன் நமக்கு லீவுகிடைத்தது; நாம் எல்லோரும் இங்கு ஏன் கூடியிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? நமது தேசத்தின் ராஜப் பிரதிநிதியாகிய ஹார்டிங் பிரபுவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு இங்கே கூடியிருக்கிறோம்— ராஜப் பிரதிநிதி என்றால் அரசருக்குப் பதிலாக ஆளுகை செய்பவர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா — நமது ஹார்டிங் பிரபு காருண்யம் நிறைந்த நமது சக்ரவர்த்திக்குப் பதிலாக இந்தியா தேசத்தின் வைஸ்ராயாக ஆளுகைசெய்து வருகிறார்.

இந்தக் கனவான் 1858ஆம் ஜூன்மீ பிறந்தனர்; ஆகையால், இவருக்கு இப்போது 55 வயது. இவர் ஆங்கில அரசாட்சியில் அமர்ந்து, பலவித உயர்ந்த உத்தியோகங்களை வகித்து, இவ்வுலகத்தின் பற்பல பாகங்களில் சென்று, அரசருக்கு உண்மையாக உழைத்து வந்தார். இவர் 1910ஆம் அக்டோபர்மீ

* இது, சென்னையில் வைஸ்ராய் பிறந்தநாள் கொண்டாட்டக் கமிட்டியார் வெளியிட்டது. அவர்கள் விரும்பிய வண்ணம் இப்பத்திராதிபர் அங்கில மொழியினின்றும் தமிழில் மொழிபெயர்த்தது.

இந்தியாவின் வைஸ்ராயாக நியமனம்பெற்று, அடுத்த நவெம்பர்மீ அவ்வுத்தியோகத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஹார்டிங் என்னும் பெயர் இந்தியாவில் இவர் விஜயஞ் செய்வதற்கு முன்பே பிரசித்தமாகத் தெரிந்திருப்பதாம். 1844ஆம் முதல் 48ஆம் வரையில் இந்தியாவில் கவர்னர் ஜனரலாக இருந்த ஹார்டிங் பிரபு இப்போதுள்ள நமது வைஸ்ராய் அவர்களுக்குப் பாட்டனாராவர். ஹார்டிங் பிரபு இங்கிலந்தில் தமது கிருகத்தில், இந்தியாவின் பற்பல காட்சிகளை விளக்கும் படங்களும் அரிய கைத்தொழிற் பொருள்களும் அலங்காரமாக அமைக்கப் பட்டிருப்பதைக் காணுந்தோறும் களிப்படைவாராம். அம்மகிழ்ச்சியே அவர் நம்மிடம் அன்புகொண்டு மனமொத்து நன்மை புரிவதற்கு ஏற்ற காரணமாக இருக்கிறதென்று தெரிகின்றது. நமது வைஸ்ராய் அவர்கள் தமது நாட்டைவிட்டு இந்தியாவுக்கு வருவதன்முன் ஹார்ரோ என்னும் பாடசாலையிலுள்ள ஆங்கில மாணாக்கர்களைக் கண்டு, அவர்களோடு வாசிக்கும் இந்திய மாணாக்கர்கள் இங்கிலாந்தில் தங்கியிருக்கும் வரையில் அவர்களிடம் பக்ஷமாக இருந்து அவர்கள் சந்தோஷமாக வசிப்பதற்கு ஏற்ற அனுகூலங்கள் செய்யும்படி வற்புறுத்திக் கூறினர்.

நமது வைஸ்ராய் அவர்கள் தமது உயர்ந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டது முதல் இந்தியா செல்வம் தழைத்து விருத்தியடையவும் ஜனங்களெல்லோரும் திருப்தியோடு நல் வாழ்வைப் பெறவும் பல வகையினும் முயன்று வருகின்றார். இவ்வரிய காரியத்தை நடத்துவதில் இவருக்கு அநேக கஷ்டங்கள் நேர்ந்தும், இம்மகாபுருஷர் தமது மனத் திடத்தினாலும் ஊக்கத்தினாலும் பொறுமையினாலும் தமக்கு நேர்ந்த கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் நாட்டிற்கு நன்மை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து விளங்குகின்றனர். இவரது அரிய குணங்களைக் கண்ட இந்தியரனைவரும் வியப்பும் அன்பும் கொண்டு புகழ்கின்றனர். நமது வைஸ்ராய் அவர்கள் ஜாதி மத வித்தியாசங்களின்றி அனைவரையும் ஒரே விதமாக நடத்தி பிரிடிஷ் துரைத்தனத்தின் நீதி, பிரஜைகளின்பால் அன்பு, பிரஜைகளின் நன்மைக்குரிய உணர்ச்சி முதலியவற்றை விளங்கச் செய்து பிரஜைகளின் நல்லெண்ணத்தை யடையப் பலவகையினும் முயன்று வருகின்றார்.

முக்கியமாக மாணாக்கர்களும் உபாத்தியாயர்களுமாகிய நாம் இவரது அரசாட்சியை என்றும் மறவாதிருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனெனின், இவர் வித்தியாவிஷயமாக அதிக ஊக்கங்கொண்டு அது நாளும் விருத்தியடைய ஏற்ற சாதனங்களைச் செய்து வருகின்றனர். நமது சக்ரவர்த்தியவர்கள், இந்தியா முழுதும் கொடி படர்ந்தாற்போல் பாடசாலைகளும் கலாசாலைகளும் நிறைந்திருக்கும் என்றும் அவற்றிலிருந்து ராஜபக்தியும் ஆண்மையும் நாட்டிற்கு நன்மைபுரியும் நற்குணமும் நிறைந்த குணவான்கள் வெளிப்பட்டு தமது நாட்டிற்குரிய கைத்தொழில், விவசாயம் முதலிய எல்லாத் தொழில்களையும் விருத்திசெய்யக் கூடினவர்களாக இருப்பார்களென்றும் கூறியிருக்கின்றனர். அவரது அபிப்பிராயத்தை நிறைவேற்றுவதற்கு நமது வைஸ்ராய் அவர்கள் ஊக்கங்கொண்டு உழைத்து வருகின்றனர். கல்வி யெங்கெங்கும் பரவி விருத்தியடையவும் எல்லோருக்கும் அவசியமான பொதுஜனக் கல்வி தழைத்தோங்கவும் அதிக அநுகூலங்கள் செய்து வருகின்றார். அதனால் நாம் இப்போது அதிக திரவியசகாயம் பெறுகிறோம். இன்னும் விசேஷ சகாயம் மேலும்மேலும் பெறவும் எதிர்பார்க்கிறோம்.

பிள்ளைகளே!

அஞ்ஞான மென்ப தமலன் தருசாபம்
மெய்ஞ்ஞான மென்னுமோர் மெய்யறிவே — மிஞ்சும்
தடையின்றி மோட்சந் தனையும் பறந்தே
அடையச் செயுமிரக்கை யாம்

என்று ஓர் ஆங்கிலக் கவிஞர் கூறுகின்றார். அதனால் நமது ஹார்டிங் பிரபு பிரஜைகளின் அறியாமையாகிய பெரும் பாரத்தை நீக்கவும், இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் மோக்ஷ சாதகமான இரக்கைகளை உண்டாக்கவும் அரிய முயற்சிகளை ஆர்வத்தோடு செய்து வருகின்றார் — நமது வைஸ்ராய் அவர்கள் பாடசாலைகளையும் பாடசாலைப் பிள்ளைகளையும் மனப்பூர்வகமாய் நேசிக்கின்றார்.

இந்த விஷயத்தில் இவரது கர்ம பத்தினியாகிய ஹார்டிங் பெருமாட்டியும் உடனின்று உழைத்து வருகின்றனர். அப் பெருமாட்டி, நீங்களனைவரும் இன்று சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். இப்படி அவர்களுக்கு நம் மிடத்திலுள்ள அன்பை உணர்ந்து பல கனவான்கள் தங்கள் நன்றி. யறிதலையும் பேரன்பையுங் காட்ட நமது வைஸ்ராய் அவர்கள் பிறந்தநாளாகிய இன்று உங்க ளெல்லோருக்கும் ஒரு விருந்து அளிக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அவ் விருந்-தைச் சந்தோஷத்துடனுண்டு, ஹார்டிங் பிரபுவும் அவர் மனை-வியாரும் நமது விருத்தியின் பொருட்டு கொண்டுள்ள நல் லெண்ணத்திற்காக நாம் அவர்களுக்கு மனமுவந்த வந்தனஞ் செலுத்துவதுடன், அவர்கள் அரோக திடகாத்திரராக இருந்து, தீர்க்காயுளோடு நல்வாழ்வை யடைந்து, அவர்கள் நமது நாட்-டின் நன்மைக்காக மேற்கொண்டுள்ள மேலான ஆட்சியை சம் பூர்ண சக்தியோடு நடத்த அருள்செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துவோமாக.

கனம் பொருந்திய

வைஸ்ராயி அவர்கள் பிறந்தநாள் வைபவம்

[இது மேற்படி கமிட்டியார் விருப்பத்தின்படி இப்பத்திராதிபர் இயற்றியது]

கலிநிலைத்துறை

உலக மெங்கணும் நாடுகள் பலப்பல வோங்கிக்
குலவ நன்னெறி யாட்சியிற் றன்னிடங் கொண்டே
இலகு செங்கதிர்ச் சுடரொளி மறைவின்றி யியங்க
அலகில் சீர்த்தியால் விளங்குவ தாங்கில அரசே. (1)

அரச ரந்தனல் ஆயுதன் படைகளால் அயல்நாட்
டரச ராள்பிற வுயிர்களாற் கள்வரா லாகி
விரவு துன்பினை வேரறக் கடிந்துயிர் விளங்க
அரண மாய்ந்நனி விளங்குவ தாங்கில அரசே. (2)

ஏயும் அன்பினி லன்னையாய்க் கல்வியை யீத
லாய தன்மையிற் றந்தையாய் நலம்பல வளிக்கும்
தூய தன்மையிற் றவமதாய்க் கலைபல தொகுப்பில்
ஆய நல்லறி வாகுவ தாங்கில அரசே. (3)

அரசெ லாந்தொழு மரசிதற் கரசனும் அமைப்பால்
உரவு நீர்க்கடற் பரப்பினை மரக்கல முகைத்துப்
பரிவு டன்பல தேயநூல் லியல்பெலாம் பார்த்து
விரவு நன்மையும் தீமையும் தெளிதரு விரகன். (4)

தருகை நீண்டவன் பலகலைக் கடலையும் தரைமேல்
உரிய தன்னறி வெனுங்கலத் தாற்கடந் துயர்ந்தோன்
பரவு மாண்மையும் ஊக்கமும் வீரமும் படைத்தோன்
அரிய நற்குண மெவைகளு முறையிட மானேன். (5)

ஆன தன்குடைக் கீழுறை மக்களிங் கன்பால்
தான மூற்றுமுன் காண்பதற் கெளியவன் சார்ந்தோர்
ஊன மூற்றிடா துரைப்பன கேட்டுள முவந்தே
மான மூற்றிட வுரைப்பவன் ஜார்ஜெனு மகிபன். (6)

மகித லத்தினி லன்னவன் ஆட்சியில் வயங்கும்
புகல ரும்பல தேயத்தி லொன்றெனப் பொருந்தி
நிகரி லாப்பல வளங்களும் நலங்களும் நிறைந்து
திகழ நின்றது நமதிந்தி யாவெனுந் தேயம். (7)

தேய மாமிது வானுயு வரைகளும் சிறந்த
தூய வாம்பல நதிகளும் மாந்தரும் சொல்லும்
ஏயுந் தண்மையும் வெம்மையும் பன்மத வியல்பும்
மேய தன்மையா லுலகினுக் கொப்பென விளங்கும். (8)

விளங்கு கல்வியில் பலகலை யுணர்ச்சியில் மேலாய்க்
களங்கி லாதநல் லொழுக்கத்தில் கைத்தொழில் தன்னில்
உளங்கொள் தெய்வதக் கொள்கையில் உலகினில் நாளால்
வளங்கொள் தாயக மாயதிவ் விந்தியா மன்னே. (9)

மன்னுமிவ் வெழில் நாட்டினை வளம்பெற ஆளும்
மன்னர் மன்னனும் ஜார்ஜெனு மகிபதி தனக்கு
இன்ன நாளினில் பிரதிநிதி யாகியே யிலகும்
முன்ன வன்லார்ட் ஹார்டிங் கெனும்பெயர் முதல்வன். (10)

முதல்வ னுய்வரு முன்னரே யிந்தியா வின்பல்
விதமு நுந்தொழி லருமையுங் காட்சியும் விளங்கும்
இதமு நும்பல படங்களா இன்புறக் கண்டே
நிதமும் நந்தமக் கின்னலஞ் செய்திட நினைத்தான். (11)

நினைவு கூர்ந்துதன் தேயமா ணவர்களே நேர்ந்து
மனையை விட்டிவண் வந்துள இந்துமா ணவர்கள்
இனைவு ருவகை நண்புகொண் டவரிவ ணிருக்குந்
தனையும் இன்புறச் செய்கெனச் சாற்றினன் தக்கோன்.(12)

தக்க வாறுகம் மன்னவர் கூறிய சார்பில்
மிக்க கல்விநந் நாட்டினி லெங்கணும் விளங்க
எக்க ணத்தினும் தன்மனத் தெண்ணியே என்றும்
ஒக்க பற்பல வகையினும் உதவியே புரிவான். (13)

புரிந்த நன்மைகள் யாவையும் புகன்றிடல் எளிதோ
வருந்து மேழையர் தமக்குநற் கல்வியை வழங்கப்
பரிந்திங் கெங்கணும் பற்பல பாடசா லைகளும்
திருந்து கைத்தொழிற் சாலையும்விளங்கிடச் செய்தான்.(14)

செய்யு நாளினில் நேர்ந்திடுந் திங்குகள் தம்மை
செய்ய தன்மன வன்மையால் சிறிதுமஞ் சாமல்
ஐய னுமவன் கருமமே கண்ணென வமர்ந்து
மெய்யு றும்பல நன்மைகள் புரிவன்மேன் மேலும். (15)

மேலு மேலுநன் மணிகளைத் தேய்க்கினும் விளங்கிச்
சால நல்லொளி தந்திடுந் தன்மைபோ லிடுக்கண்
மேலு மேலும்வந் தெய்தினும் குணத்தினில் விலக்கிச்
சால நன்மைகள் புரிந்திடச் சார்ந்தசற் குணவான். (16)

தானி யற்றிடுஞ் செயற்கெலாம் தன்பெரு மாட்டி
யான லேடிஹார் டிங்கெனும் பெண்மணி யன்பால்
ஊன மின்றியந் நலமெலாம் நிரந்தர மோங்க
ஆன பற்பல முயற்சிகள் செய்திட வமைந்தாள். (17)

அமைந்த வைஹிரா யாகியே விளங்குநம் மதிபற்
கமைந்த தாகுமிப் பிறந்தநாள் தன்னையிங் கன்பால்
அமைந்த நெஞ்சுடன் சிறப்புகள் பலப்பல ஆற்றி
அமைந்த நல்விருந் தருந்தியே வந்தனம் அளிப்போம்.(18)

அளியின் மிக்கவிவ் வண்ணலும் அவன்மனை யாளும்
ஒளியு றுந்திட காத்திரம் சுகமுட னுற்றே
வளனு றும்பல செல்வமும் வாய்ந்திவர் விளங்க
அளவி லாற்றலை ஆயுளை அருளுக அமலன். (19)

அமரு மாங்கில வரசகம் ஜார்ஜ்அதி பதியும்
அமரு மேரியா மிறைவியும் லார்டுஹார் டிங்கென்
றமையும்அண்ணலு மவன்குல மனைவியு மென்றும்
அமல னல்லரு ளார்ந்துவா ழியவுல கதனில். (20)

கலிவிருத்தம்

செம்மை மிக்க திறத்தினும் அன்பினும்
நம்மை யாண்டிடும் லார்டுபென்ட் லெண்டெனும்
செம்ம லுந்தன் திருமனைச் செல்வியும்
இம்மை யிற்சுக முற்றென்றும் வாழியே.

பத்திராதிபர்.

THE RHINOCEROS

காண்டா மிருகம்

இதைப் பாருங்கள். இதில் தெரிவதுதான் காண்டாமிருகம் என்பது. இது இந்தியாவிலும் ஆபிரிக்கா கண்டத்திலும் வசிக்கின்றது. சிலகாலத்துக்கு முன் இந்தியாவில் இது அபரிமிதமாயிருந்தது. சென்ற 100 வருஷங்களாக மிகுதியாய் வேட்டையாடி கொல்லப்பட்டு இந்தியாவில் பலவிடங்களில் இது அற்றுப்போய்விட்டது. இப்பொழுது வட இந்தியாவில் நாணல் மிறைந்த காடு

களிலும், சேறு நிறைந்த சதுப்பு பூமியிலும் வசிக்கின்றது. அங்கு அகப்படும் புல்தழைகளையுண்டு வாழ்கின்றது. காண்டாமிருகம் இரவில் சஞ்சரிக்கும். பகல்முழுதும் காடுகளில் படுத்துறங்கும். இரவில் காட்டோரங்களிலுள்ள தோட்டங்களில் வந்து அங்ஙகப்படு வதையுண்டு நாசம் செய்துவிட்டுப் போய் விடும். இப்படி காடுக

வில் வசிக்கவும் சொடி கொடிகளை யுண்ணவும் இதன் தேகம் எவ்விதம் அமைந்திருக்கிறதென்று கவனிப்போம்.

தோல் — இதன் தேகம் பெரிதாயும் வலிவுள்ளதாயும் காணுகிறது. காண்டாமிருகம் 5 அல்லது $5\frac{1}{2}$ அடி உயரம் வளர்ந்திருக்கும். 10, 11-அடி நீளமிருக்கும். இதன் தலை முன் நீண்டும் பின் அகன்றும் இருக்கிறது. இதனாலேதான் இது காட்டில் அடர்ந்து வளர்ந்திருக்கும் செடிகளை விலக்கிக்கொண்டு சுலபமாய் போகிறது. அப்போது இதன் தேகத்தில் முட்களாவது மரக்கொம்புகளாவது கீறுவதில்லை. இதன் தேகத்தில் ரோமம் அடர்த்தியாயில்லை பாருங்கள். அங்கங்கே இரண்டொன்றே இருக்கின்றன. ஆனால் இதன் தோல் யானையின் தோலைவிட கனமாயும் சுற்பாரை போல் கெட்டியாயு மிருக்கும். அதில் அங்கங்கே சிறுமோஸைகளும் செதில்களும் உண்டு. இத்தோல் ஐந்தமடிப்புகளாக இருந்து அதன் தேகத்தில் ஒரு இரும்புக் கவசம் போட்டதுபோல, அதைக் காப்பாற்றி வருகின்றது. இதன் தலை, கழுத்து தோள்பட்டை உடல், சப்பை, இவ்விடங்களில் பக்கத்துக்கு ஒவ்வொரு மடிப்பு இருக்கின்றது. பாருங்கள் இந்த ஒவ்வொரு மடிப்பும் தன் முன்பின் மடிப்போடு மிருதுவான தோலில் இணைக்கப்பட்டிருக்கின்றதல்லவா. அதனால் தன் தேகத்தை இஷ்டமானபடி திருப்ப இதற்கு முடிகிறது. காண்டாமிருகத்தின் தோல் இப்படி கெட்டியாயிருப்பதால் அதில் துப்பாக்கியால் சுட்டாலும் குண்டு பாயாதென்று சொல்வதுண்டு. அது தப்பு. கோடைகாலத்தில் அதன் தோல் உலர்ந்து பாளம் பாளமாய் வெடித்துப் போவதுண்டு. அப்பொழுது தனக்கு நோகாமலிருப்பதற்கும், சு, எறும்புகள் வந்து தன்மேல் மொய்க்காமலிருப்பதற்கும், தன்தேகம் குளிர்ச்சிபெறுவதற்கும், காண்டாமிருகம் மண்ணையும் தழைகளையும் தன்மேலே போட்டுக்கொள்ளும். பிபில்ஸ் பார்க்கிலிருக்கும் காண்டாமிருகத்தின் தோல் வெடிக்காமலிருப்பதற்கு அதன்மேலே எண்ணெய் ஊற்றிவருகிறார்கள். காண்டாமிருகமும் எருமை பன்றி இவற்றைப்போல அடிக்கடி சேற்றில் முழுகி உல்லாசமாய் விளையாடும். காண்டாமிருகத்தின் தோல் கல்லைப்போல் கெட்டியாயிருப்பதாலும், அதன் மேலுதடு சிறு குதிக்கைபோல் சற்றுநீண்டு வளைந்திருப்பதனாலும், அதைக் கல்லானை யென்று சொல்வதுண்டு. ஆனால் இது கல்லால் செய்ததுமல்ல; யானையினத்தைச் சேர்ந்ததுமல்ல.

கால் கோம்பு — இதன் கால்களைக் கவனியுங்கள். குட்டையாயிருந்த போதிலும் தடித்தும் வலிவுள்ளனவாயு மிருக்கின்றன. இவற்றால்தான் பாரமான தன் தேகத்தைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடக்கிறது. தாவிக் குதித்து ஓடுகிறது. காலொவ்வொன்றிலும் மூன்றேவிரல்கள்தான் இருக்கின்றன. அவை தனித்தனியாகவில்லை. யானையின் காலிலிருப்பதுபோல் அகன்றதோல் அவற்றைச் சுற்றி யிருக்கின்றது. காலில் குளம்பில்லை பாருங்கள். கட்டையான நகங்களே இருக்கின்றன. அவற்றில் நடுவில் இருக்கும் நகம் பெரிதாயிருக்கின்றது. இதன் பாதம் அகன்றிருப்பதால் எருமை, பன்றி இவற்றைப்போல இதற்கு சேற்றில் சுலபமாய் நடக்கவும், ஓடவும் முடிகிறது. காண்டாமிருகம் நீரில் நன்றாக நீந்தும்.

இதன் கண்கள் மிகவும் சிறியதாயிருப்பதால் பார்வை இதற்குப் போதாது. ஆனால் மோப்ப சக்தியும் கேட்கும் உணர்வும் அதிகம் உண்டு. சத்துருக்கள் வெகுதூரத்தில் வருவதை தன் நீண்ட மூக்காலும் அகன்ற காதாலும் அறிந்துகொள்ளும். காண்டாமிருகம் மிகவும் சாதுவானது. சும்மாவிருக்கும் மற்ற மிருகங்களையும் காட்டில் வாழும் யானை புலி சிங்கங்களையும் வழிப்போக்கர்களையும் இது பாய்ந்துவந்து எதிர்க்குமென்று சாதாரணமாய் சொல்வதுண்டு. அது தப்பு. ஆனால் வேட்டையாடும்போது அதை நாம் காயப்படுத்தவோ அதனருகில் போகவோ செய்தால் பயங்கரமாகச் சீறிக்கொண்டு நம்மீது பாய்ந்து அதன் கொம்பால் நம்மையும் குதிரை நாய்களையும் குத்திக் கிழித்து தூக்கி எறிந்துவிடும். இதன் கொம்பில் அனேக விசேஷங்களுண்டு. இவ்வினத்தில் ஆண் பெண் இரண்டிற்கும் கொம்புண்டு. நம்மூர் காண்டாமிருகத்துக்கு ஒரு கொம்புதான் வளர்ந்திருக்கும். அது அதன் மூக்கின் உச்சியிலிருந்து நேர்செங்குத்தாய் நிற்கும். இந்தக் கொம்பு சுமார் 4-அடி நீளமிருக்கும். கொம்பின் அடிபாகத்தில் தனி கூர்மையாயும் சற்றுப் பின் வளைந்துமிருக்கும். ஆபிரிக்கா, பர்மா, சையாம், மலயா இத்தேசங்களிலுள்ள காண்டாமிருகங்களுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. ஆனால் ஆடி மாடுகளுக்கிருப்பதுபோலப் பக்கத்திற்கொன்றாக இவை இரா. மூக்கின்மேல் ஒன்றின்பின் ஒன்றாக இருக்கும். அவற்றில் முன்னிருப்பது சற்றுப் பெரியதாயிருக்கும். இன்னொன்று; மாட்டின் கொம்புபோல் இந்த-

கொம்புபோலானதல்ல. உள்ளே எலும்பாலானதுமல்ல. உரோமங்களால் ஆனதாகும். துடைப்பக் குச்சிகள்போன்ற கோடானுகோடி உரோமங்கள் ஒருவிதமான பிசினால் கெட்டியாக சேர்க்கப்பட்டதாகும். ரோமங்களாலானபோதிலும் கொம்பு மிகவும் உறுதியுள்ளதாகும். மரங்களை வேரோடு பெயர்க்கவும், அவற்றைக் குத்திக்கொல்லவும் திறமையுள்ளதாகும். ஒரேகுத்தில் ஒருயானையையும் கொன்றுவிடும். அதனால் காட்டில் வாழும் எந்தமிருகமும் இதனருகில் செல்வதில்லை. இந்தக் கொம்பு இதன் ஆயுள்காள் பரியந்தம் சதா வளர்ந்துகொண்டே வரும். நகம் தேயத்தேய அடி வளர்ந்துவரும். மானின் கொம்புகளைப்போல இதன்கொம்பு வருஷாவருஷம் தானே கழன்று விழுவதில்லை. சில வேளை பலமாகக் கொம்பால் குத்தும்போது அது அடியோடு ஒடிந்துபோவதுண்டு. நமக்குமயிர் விழும்போதெல்லாம் முளைத்து வருவதுபோல அதன் கொம்பு ஒடிந்தபோனாலும் மறுகொம்பு சில நாட்களுக்கெல்லாம் முளைத்துவிடும்.

காண்டாமிருகம் புல், செடி, கொடிகள், மரத்தின்வேர் தழைகள், கிழங்குகள் இவற்றையெல்லாம் உண்ணும். இதன் பற்கள் சற்றேறக் குறைய குதிரையின் பற்கள் போலவே இருக்கும், காண்டாமிருகம் அசைபோடுவதில்லை. இதன் அடிவாய் முன் பற்களில் இரண்டும் மிகவும் கூர்மையாயுமிருக்கும். இப் பற்களாலும் அது தன் சத்துருக்களைக் கிழித்துக் கொன்றுவிடுவதுண்டு. தன் கொம்பாலும் இப் பற்களாலும் வேர் கிழங்குகளைத் தரையிலிருந்து பேர்த்தெடுக்கும். இப் பற்களைத் தந்தமாகவும் உபயோகப் படுத்துகிறார்கள். காண்டாமிருகத்தைப் பழக்குவது அசாத்தியம். ஐரோப்பியர் இதன் மாமிசத்தை உண்பதுண்டு. மாட்டு மாமிசத்தைவிட உருசியுள்ளதென்று சொல்லுகிறார்கள். காண்டாமிருகம் தடவைக்கு ஒரு குட்டிபோடும். அது குட்டிக்குச் சிறிது காலம் பாலூட்டி வளர்க்கும்.

V. R. DURAISWAMY SASTRY, M. A., L. T.

ஹார்டிங் பிரபுவின் சரித்திரச் சுருக்கம்

1913ஆம் ஜூன்மீ 20உ பாடசாலைக் குழந்தைகள் எல்லாருக்கும் விடுமுறைநாள். அன்று அவர்களுக்கு விருந்தும் உண்டு. அதற்குக் காரணம் என்ன?

மாட்சிமைதங்கிய ஹார்டிங் பிரபு நமது இராஜப்பிரதிநிதி. அவர் டில்லியை ஜார்ஜ சக்கரவர்த்தியின் உத்தரவுபடி தம் முக்கிய பட்டணமாக்க 1912ஆம் டிசம்பர்மாதம் 23உ காள்பார்த்திருந்தார். அன்று பட்டணப்பிரவேச ஊர்கோலம் நடந்தது. மஹா பாபி ஒருவன் அருள் நிறைந்த நமது இராஜப்பிரதிநிதியின் மேல் பாம் என்னும் வெடியை எறிந்தான். அது அவர்மேல் பட்டது. பல இடங்களில் இரணத்தை உண்டாக்கியது. பாதகன் அகப்படவில்லை. சிறந்த வைத்தியர்களுடைய சிகிச்சையால் ஹார்டிங் பிரபு சௌக்கியமடைந்தார்.

1913ஆம் ஜனவரிமீ 27உ அன்று முதல் முதல் வெளியே புறப்பட்டார். அன்று நாடெங்கும் கொண்டாட்டமாகவே யிருந்தது. அச்சமயம் அவர் மனைவிக்கு உண்டான சந்தோஷத்தை அளவிடவும் முடியுமா? அவர் பிறந்தநாளன்று அந்த மாதுசிரோமணியின் குதூகலத்தை நீங்களும் அனுபவிக்கவேண்டுமென்றார். அவரது இஷ்டம் நிறைவேற்ற ஜனங்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இவரது நற்குண நற்செய்கைகளே.

II.

ஹார்டிங் பிரபு அவருக்கு முந்தி இராஜப்பிரதிநிதியாயிருந்த மிண்டோ பிரபுவைப்போலவே பூர்வத்தில் கவர்னர் ஜனரலாயிருந்த ஒருவர் வம்சத்தில் பிறந்தவர். இவரது பாட்டனார், இந்தியாவை 1844—1848 வரையில் பரிபாலித்து வந்தார். அக்காலத்தில் அவர் செய்த நன்மைகள் பல.

(1) இந்தியர்களின் படிப்பை விர்த்திசெய்யப் பல ஏற்பாடுகள் செய்தார். அதற்காக வங்காளத்தார் தங்களுடைய நன்றியறிவைப்பெரிய கூட்டங் கூடித் தெரிவித்தார்கள். (2) உப்புவரியின் ஒரு பகுதியைத் தள்ளினர். (3) இருப்புப்பாதைகள் ஆரம்பிக்கக்

காரணமாக இருந்தார். (4) கஞ்சம் ஓரிஸ்ஸா இவ்விடங்களிருக்கும் காண்ட்ஸ் என்ற பூர்வ குடிகள் தங்கள் தேவதைகளின் திருப்திக்காக நரபலி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதை நிறுத்த ஒரு சட்டம் ஏற்படுத்தினர். (5) இந்தியர்களின் முக்கிய தொழில் விவசாயமே. அதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வது இராஜாங்கத்தின் கடமையே என்று எண்ணம் கொண்டிருந்தார். கங்காநதிக் கால்வாய் அவர்காலத்தில் வெட்டப்பட்டது (6) சுதேசராஜ்யங்களில் நடக்கும் உடன்கட்டை ஏறுதலையும், பெண் சிசுஹத்தியையும் நிறுத்தினர் (7) சரித்திரச் சின்னங்களுக்கு ஹானிவராமல் காக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் அவருக்கு உண்டு.

III

சரித்திரம்.

நமது மாட்சிமை தங்கிய லார்டு ஹார்டிங் 1855-வது பிறந்தவர். இவரது பாட்டனார் நம் இந்தியாவின் கவர்னர் ஜனரலாயிருந்தார். இவர் இரண்டாவது குமாரரானபடியால் மூத்த மகனுக்கே இங்கிலாந்து தேசத்துச் சட்டப்படி பிரபுப்பட்டமும், பூஸ்திதியும் சேர்ந்தது. ஹாரோ பாடசாலையிலும், கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிடி கல்லூரியிலும் வாசித்தார். 1880-ஆவது வருஷத்திலேயே கவர்ன்மெண்டி உத்தியோகத்தி லமர்ந்தார். 1896-ம் வருஷத்தில் பாரசீகத்திற்கு இராஜப் பிரதிநிதியின் காரியதரிசியாக அனுப்பப்பட்டார். இரண்டு வருஷம் சென்ற பிறகு ருஷ்ய தேசத்திற்கு அதே உத்தியோகத்தில் மாற்றப்பட்டார். அவ்வேலைகளில் மிகவும் திருப்திகரமாக நடந்து வந்ததால் லண்டன்மாநகரில் இதர நாடுகளின் உறவைக் கவனிக்கும் உதவி தீர் காரிய தரிசியாக நியமிக்கப்பட்டார். தன் கடமைகளைச் சிறந்த திறமையுடனும் ஊக்கத்துடனும் நிதானத்துடனும் நிறைவேற்றி வந்தபடியால் இவரிடத்தில் லார்ட் லான்ஸ்டவுனுக்கும் 7 - ஆவது எட்வர்ட் சக்கரவர்த்திக்கும் மிகுந்த நம்பிக்கை உண்டாய்விட்டது.

அது பற்றி 1913-வுல் இவரை ருஷ்யா தேசத்தின் இராஜப் பிரதிநிதியின் வேலைக்குத் தகுந்தவராக இராஜாங்கத்தார் எண்ணினார்கள். அப்பொழுது இவருக்கு வயதோ 46 சர்வீஸும் அதிக மில்லை. இவரைக் காட்டிலும் அதிக காலம் இராஜாங்க அலுவலிருந்தவர் பலருளர். அன்றியும் அச்சமயத்தில் ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் கடூரமான சண்டை நடந்துகொண்டிருந்தது. இவரது பொறுமையும், தீர்க்காலோசனையும், இவரைச் சிறந்த இராஜதந்திரி என்று வெளியிட்டன. எட்வர்ட் சக்கரவர்த்திக்கு இவரிடத்தில் உண்டான அபிப்பிராயத்திற்குச் சற்றும் குறையாவண்ணம் நடந்துகொண்டு அவ்விரண்டு தேசங்களின் சினேகத்தைப் பலப்படுத்தினர். அதற்காக இவரை மஹாராஜா லண்டனில் அன்னிய நாட்டு தீர் காரியதரிசியாக நியமனம் செய்தார்.

எட்வர்ட் மகாராஜா ஐரோப்பாவின் நன்மையைக் கருதி பலதரும் இதர நாடுகளுக்கும் பிரயாணம் போயிருக்கிறார். ஏதாவது இரண்டு தேசங்களுக்கு மனஸ்தாபம் சிறிது உண்டானாலும் உடனே எட்வர்ட் மஹாராஜா தானே சென்று சண்டையை நிவர்த்தித்துச் சமாதானத்தை உண்டாக்குவார். இஃது எவ்வளவு புண்ணியமான காரியம் பாருங்கள்! எத்தனை பேருடைய உயிர் பிழைத்தது பாருங்கள்!

அது பற்றியே எட்வர்ட் சக்ரவர்த்திக்குச் சமாதானம் உண்டாக்கினவர் என்ற பட்டம் கிடைத்தது. அப் பிரயாணங்களிலெல்லாம் மஹாராஜாவுடன் சென்றவர் நமது ஹார்டிங் பிரபுவே. இதர தேசத்து இராஜாக்களுடனும் இராஜ தந்திரிகளுடனும் பழகி மஹாராஜாவின் எண்ணத்தை நிறை வேற்றியவர் இவரே. இவரிடத்தில் நமது மஹாராஜாவாயிருந்த எட்வர்டுக்கேயன்றி மற்ற எல்லாத் தேசத்தரசர்களுக்கும் பிரியம் அதிகம். அதை வெளிப்படுத்திப் பல பட்டங்களையும் மெடல் (பதக்கங்)களையும் அளித்திருக்கிறார்கள். இவரது கெட்டிக்காரத்தனத்தையும், நுண்ணறிவையும், தயையையும் கண்டிருந்த எட்வர்ட் மஹாராஜா இவரை இந்தியாவுக்கு தமது பிரதிநிதியாக அனுப்பத் தீர்மானம் பண்ணியிருந்தார். பிதாவின் எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு நம் தேசத்தின் அபிவிர்த்தியை சதா மனதில் வைத்திருக்கும் காருண்ய வள்ளலாகிய நமது ஜார்ஜ் மகாராஜா ஸர்சார்ல்ஸ் ஹார்டிஞ்சை தன் பிரதிநிதியாக நியமித்து அவருக்கு பிரபுப் பட்டத்தையும் அளித்தார். அவர் 1910வுல் டிசம்பர்மீ 21உ கல்கத்தா வந்து சேர்ந்தார்.

கோள்கையும் சீர்த்திருத்தங்களும்

அவர் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன் அவருக்குப் பல விருந்துகள் அளிக்கப்பட்டன. இந்தியாவைப் பற்றிப் பேசும்

போதெல்லாம் தன் மனதில் அவர் கொண்டிருந்த அபிப்பிராயங்களைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார். இந்தியர்களைக் கருணையுடனும் பிரியத்துடனும் அன்புடனும் ஆளவேண்டுமென்றார். இத் தேசத்தவர்களெல்லாம் இராஜ விசுவாசமுள்ளவர்களென்றும், இராஜத்துரோக காரியங்களைச் செய்யும் பைத்தியக்காரர்கள் மிகவுங் குறைவென்றும் அபிப்பிராயப்பட்டவர். இந்தியர்கள் இங்கிலாந்திலும் மற்ற இடங்களிலும் ஆங்கிலேயர்களுக்குச் சமானமானவர்களாகப் பாவிக்கப்படவேண்டும் என்றும், அப்படிச் செய்வது ஆங்கிலேய இராஜ்ஜியங்களின் நன்மைக்கும் அபிவிர்த்திக்கும் அவசியமானதென்றும் சொல்லியிருக்கிறார் "நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை" ஆதலின் நாடெங்கும் வாழச் செய்வ தெப்படி என்பதைச் சதாயோசித்து வழியையும் கண்டறிந்தார்.

இவர் இத்தேசத்திற்கு வந்த ஒரு வருடத்திற் கெல்லாம் மஹாராஜா இந்தியர்களுக்குத் தன் மகுடாபிஷேக வைபவத்தைக்காட்ட எண்ணம் கொண்டார். அதற்கு ஏற்ற இடம் தருமர் வசித்த ஹஸ்தினபுரியே என்றும், முகலாய சக்ரவர்த்திகள் ஆண்ட டில்லிமா நகரமே என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வைபவம் 1911வது டிசம்பர்மீ 12உ நடைபெற்றது. இந்த நாளை மறக்கும் இந்தியருமுண்டோ? ஸ்ரீராமநவமியை மறந்தால் அவரது அவதாரமாகக் கருதப்படும் நமது ஜார்ஜ் அரசரின் மகுடாபிஷேகக் கொண்டாட்ட தினத்தையும் மறக்கமுடியும். அன்று நமக்கு அரசனுமதியின்மேல் லார்ட் ஹார்டிங் தெரியப்படுத்தின கொள்கைகள் எல்லார்க்கும் ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் உண்டாக்கின. அவை பின்வருவன.

1. வருஷா வருஷம் கல்வியின் அபிவிர்த்திக்காக 50 லக்ஷத்திற்குக் குறையாமல் கொடுக்கப்படுதல்.

2. இந்தியாவிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர் எல்லாருக்கும் பாதி மாதச்சம்பளம் இனம் கொடுக்கப்படுதல்.

3. பட்டம் பெறுகிறவர்களுக்கு அடையாளச் சின்னங்களிக்கப்படுதல்.

4. இந்து தேசபாஷைகள் நசித்துப்போகாதிருக்க அப்பாஷைகளில் நிபுணர்களாயிருக்கும் மஹாமஹோபாத்தியாயர்களுக்கும் மற்றவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கப்படுதல்.

5. குஜராத்தியிலுள்ள சிற்றரசர் பட்டத்திற்கு வரும்போது கொடுக்கவேண்டிய நாஜராணு என்னும் வரி ரத்துசெய்யப்பட்டது.

6. குற்றவாளிகளில் சிலர் விட்டுவிடப்பட்டார்.

7. டில்லி இந்தியாவின் தலைநகரமாக்கப்பட்டது.

8. பிரிக்கப்பட்டிருந்த வங்காளங்கள் சேர்க்கப்பட்டு சென்னையைப்போல் இராஜதானி யாக்கப்பட்டது.

மேல் சொல்லப்பட்டவற்றிற் கெல்லாம் காரணமாக இருந்தவர் நமது இராஜப்பிரதிநிதி என்றும் சொல்லவும் வேண்டுமோ. கேவலம் ஒரு ஏழை இந்தியன் முதல் சிற்றரசரீறுக உள்ள எல்லாருக்கும் இவை நன்மையை உண்டாக்க வில்லையா? குருடர்களாயிருக்கும் இந்தியர்களுக்கு "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றபடி கல்விக் கண்ணைக் கொடுத்து வழிகாட்டும் பாக்கியத்தைவிட, நமக்கு வேறெது வேண்டும்? கல்வியே இவ்வுலகையும் கைப்பற்றச்செய்யும். கல்கத்தாவில் நமது மகாராஜா சென்ற 1912வது ஜனவரிமீ 5உ பேசினபோது இந்தியாவுக்கு வேண்டியதெல்லாம் இரக்கம், தயை, கருணை, அருள் என்று சில வருஷத்திற்கு முன் இங்கிலாந்தில் சொன்னதையும் இனி "நம்பினவர் கைவிடப்படார்" என்று பொருள்படச் சொன்னதையும் எளிதில் மறக்க முடியுமா? மேல்நாட்டுப் படிப்பின் அபிவிர்த்தியால் இந்தியர்கள் புதுமாதிரியாக யோசிக்கவும், வாழவும், நடக்கவும் அறிந்திருக்கிறார்களென்றும், அப்படிப்பை கசடறக் கற்றுக்கொள்ள அநேக பாடசாலைகளும், கல்லூரிகளும் ஏற்பட்டு, நாடும், ஜனங்களும், வர்த்தகத்திலும், விவசாயத்திலும், இதர கைத்தொழில்களிலும் இன்னும் மற்ற ஜீவனோபாயங்களிலும் விர்த்தி அடைந்து இல்லந்தோறும் சுகமும், திருப்தியும், செல்வமும், நிறைந்திருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். ஜனங்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் கல்வியே என்றும், தமது மனோரதக்கம் அதன் விர்த்தியைக் கவனிப்பதென்றும் ஐயந்திரிபறக் கூறியுளர்.

இதுவே நமது இராஜப்பிரதிநிதியின் எண்ணம் என்று சொல்லவும் வேண்டுமோ? மாட்சிமை தங்கிய ஹார்டிங் பிரபு சௌக்கியமடைந்து சட்டச் சபையை முதல்தரம் டில்லியில் கூடின 1913வது ஜனவரிமீ 27உ அன்று தம் இனிமையான பேச்சை

முடிக்கும்போது தமக்கு இந்தியர்க ளிடத்திலுள்ள விசுவாசம் இப்பொழுதும் சற்றும் குறையவில்லை என்றும், இந்தியா மேன்மேலும் விர்த்தியடைந்து தகுந்த பதவிக்கு வரவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். இவ்வளவு நன்மையை உண்டாக்கிய தெய்வ குணமாகிய அருள் நிறைந்த வைஸ்ராயை நமக்களுப்பிய கருணைக்கடலாகிய ஜார்ஜ் பூபதியும் "அருளிலார்க் கவ்வுலகமில்லை" என்னும் திருவாக்கை வழிபடும் இராஜப்பிரதிநிதியாகிய ஹார்டிங் பிரபுவும் பதிசொற்றவறுதபாவை லேடி ஹார்டிங் சீமாட்டியும் ஈசனருளால் சர்வமங்களத்துடனும் நீடிழிகாலம் வாழும்படி திரிகரணங்களாலும் வேண்டிக்கொள்வோமாக.

ஆதி யருள்வாழ்க வாண்டகைச் சியார்சரசன்
நீதி மேரி நிதம் வாழ்க —— மேதினியும்
வாழ்கவருஞ் சீமானர் டிங்கு மினத்தாரும்
வாழ்க எவரும் மகிழ்ந்து.

(*Adapted*)

இந்தச் சரித்திரம் கும்பகோணத்தில் வைஸ்ராய் அவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டக் கமிட்டியார் பிரசுரம் செய்தது. கும்பகோணம் ரேஞ்ஜ் ஸப் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்ட்டர் அவர்கள் ஸ்ரீமான் கிருஷ்ணராவ் அவர்கள் எமக்கு அனுப்பினர்கள்.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

நல்லாசிரியன்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1913வது ஜூலை மீ | மாதம் 2.

NATURE STORIES

இயற்கைப் பொருட் கதைகள்

HONEY BEES — தேனீக்கள்

தேனீ ஈயின் இனத்தைச் சேர்ந்ததென்பது உங்களுக்குத் தெரியுமே. ஈயைப்பற்றி முன்பு ஒரு கதை சொல்லியிருக்கிறேன். இப்போது தேனீயைப்பற்றிச் சொல்லுகிறேன் கேள்.

இங்கே மூன்று ஈக்கள் இருக்கின்றன பார். அவற்றில் முதலில் இருப்பது சோம்பேறி ஈ, இரண்டாவது ராணி ஈ, மூன்றாவது வேலைசெய்யும் ஈ, இம் மூன்றும் இருப்பதற்கு மகரந்தக் கூடையென்று பெயர்.

இந்தச் சூரியகாந்திப் பூவின்மேல் உட்கார்ந்திருக்கும் ஈயைப் பார். அது என்ன செய்கிறது தெரியுமா? அது தன்னிடத்தில்

இரண்டு கூடைகளை வைத்திருக்கிறது. அந்தக் கூடைகள் எங்கே இருக்கின்றன கவனித்துப் பார்.

தேனீக்குப் பூந்தோட்டமே கடைவீதி. இந்தத் தேனீ தன் கூடைகளுடன் சந்தைக்கு வந்திருக்கிறது; அது என்ன செய்கிறதென்று சற்று உற்றுக் கவனி. இந்தத் தேனீ தன் இரண்டு கூடைகளிலும் புஷ்பத்திலுள்ள மகரந்தங்களை நிறைக்கின்றது. இதற்குள் எவ்வளவு பொடியைச் சேர்த்துவிட்டது பார். இந்த மகரந்தப் பொடியைச் சேகரித்துக் கொண்டுபோய் என்ன செய்யும். அது இந்தப் பொடியைக் கூட்டிற்குக் கொண்டுபோய் தன் குழந்தைகளுக்கு அடை தட்டிக் கொடுக்கும்.

தேனீயின் கூட்டை நீ பார்த்திருப்பாயல்லவா? மேல் புறத்தை மட்டும் பார்த்திருப்பாய். தேனீக்கள் அக் கூட்டிற்குள் வெகு அவசரமாகப் போவதும் வருவதுமாக இருக்கும். தேனீக்கள் மலர்களில் அமர்ந்து தேனைக் கிரகித்துக் கொண்டுவரும். சில சோம்பேறி ஈக்கள் ஒன்றும் செய்யாமல் கூட்டிலேயே உழன்று கொண்டிருக்கும். ஆனால் அவை நெடுங்காலம் ஜீவித்திருப்பதில்லை. வேலை செய்யும் ஈக்கள், மழைகாலம் வந்தவுடனே அந்தச் சோம்பேறி ஈக்களைக் கொன்று விடுகின்றன. சோம்பேறிகள் இருப்பது சோற்றுக்குக் கேடுதானே!

ஒரு தேன்கூட்டைக் கவனித்துப் பார். அதில் அநேக சிற்றறைகள் காணும். ஒவ்வொரு அறைக்கும் ஆறு பக்கங்கள் அழகாக அமைந்திருக்கின்றன. அதைப் பார்க்கப் பார்க்க ஆச்சரியம் உண்டாகும். கூடுதான் அப்படியிருக்கிறதென்றால் அதின் உள்ளிருக்குந் தேனே வெகு இனிப்பாக இருக்கிறது. தேனினுடைய சுவை உனக்குத் தெரியாமலிருக்குமா! தேனீ எப்படி இந்தத் தேனைச் சேகரிக்கிறது என்று நினைத்தால் எவ்

வளவு ஆச்சரியம் உண்டாகிறது. அந்தக் காரியம் நம்மால் செய்ய முடியுமா? முடியவே முடியாது.

தேன்கூட்டின் மேற்புறமே இவ்வளவு அழகாக இருக்கும்போது, உட்புறம் எப்படி இருக்கும் எண்ணிப்பார். உள்ளே சென்றால் ராணி ஈ உட்கார்ந்திருக்கும்; அந்த ஈதான் இந்த ஈக்களுக்கெல்லாம் தாயார். மற்ற ஈக்கள் தம் தாயாரை வெகு பக்ஷமாகவும் ஜாக்கிரதையாகவும் காப்பாற்றும். தேனீக்களுக்குத் தாயாரிடத்தில் அதிக அன்பும் பக்தியும் உண்டு. தேனீக்கள் மெழுக்கினால் சிறு சிறு அறைகள் செய்கின்றன. ஒவ்வொரு அறையிலும் ஒரு குஞ்சு வசிக்கும். சில சிறிய ராணி யீக்களும் வசிக்கும்.



ஒரு கூட்டில் இரண்டு ராணியீக்கள் இருக்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்டால், புதியராணி புறப்பட்டுப் போகவேண்டியதே. அது போகும்போது சில வேலையாட்களை அழைத்துக் கொண்டு போகும். அவை வேறு வசதியான இடத்திற்குப் போய் தமக்கென் ஒருகூடு கட்டிக்கொண்டு தேன் சேர்க்கும்.

தேனீக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்யும் ஜந்துக்கள். அவைகள் தமக்கு வேண்டிய தேனைச் சேர்க்கவே இவ்வளவு கஷ்டப்படுகின்றன. தேனீக்கள் தமக்கு வேண்டிய அளவிற்கு மேல் அதிகமும் தேனைச் சேகரிப்பதனால், அவை உண்டு மிகுதியானது நமக்கும் உதவுகிறது.

SOME LITTLE HELPERS — உதவி செய்வோர்.

இங்கே ஒரு பறவை இறந்து கிடக்கிறது. இது திக்கற்ற பிணமாகத் தெருவில் கிடக்கலாமா! பாவம் இதை அனாதி பிரேதமாக விடலாகாது. யாராவது இதை எடுத்துப் புதைக்க வேண்டும். யாருக்கு அக்கரை. எல்லோரும் சும்மா இருப்பார்களா. ஒருவர் இருவருக்காவது இரக்கம் பிறக்காதா!

சில சிறு பூச்சிகள் அதைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டிருப்பதைப் பார். அவைகளால் என்ன செய்யக்கூடும். பூமியைத் தோண்டக் கூடுமா. பறவையைப் புதைக்கக்கூடுமா. இரண்டு

காரியமும் சுலபமாகச் செய்யக்கூடும். இப்போது அந்தப் பூச்சிகள் பிணத்தைப் புதைக்க முயற்சி செய்கின்றன.

ஒவ்வொன்றும் பூமியைத் தோண்டுகின்றன. விடாமுயற்சியுடன் வேலை செய்கின்றன. பறவை விழுந்து கிடக்கும் இடத்தை ஆழத் தோண்டுகின்றன. அதனால் பறவை கொஞ்சங் கொஞ்சமாகப் பூமியில் புதைந்து போகிறது.

இந்தப் பூச்சிகள் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த வேலையைச் செய்கின்றன. ஊருக்கு உழைக்க வேண்டும் என்று செய்கின்றனவா? உணவு சம்பாதிக்க வேண்டும் என்று செய்கின்றனவா? இரண்டும் ஒத்துவரச் செய்கின்றன. பிணத்தை புதைக்காமல் விட்டுப் போகலாகாதென்பது அந்தப் பூச்சிகளுக்குத் தெரியுமா — தெரியுமோ, தெரியாதோ. காரியத்தை மட்டும் சரியாகச் செய்து விடுகின்றன. தம்முடைய குஞ்சுகளுக்குப் பறவையின் மாமிசம் தக்க உணவு என்பது அவைகளுக்குத் தெரியும். அதனால் இந்தப் பறவைப் பிணத்தின்மீது தம்முடைய முட்டைகளை இந்தப் பூச்சிகள் இடப்போகின்றன. அதனால் இதைப் பூமியில் புதைக்க முயல்கின்றன. அவை தம்முடைய பிரயோசனத்திற்காக இதைச் செய்தாலும், அதனால் நமக்கும் நன்மை ஏற்படுகின்றது. அவை இப்படிச் செய்வதனால் பூமி சுத்தப்படுவதோடு ஆகாயம் சுத்தமடைகின்றது. அவை தமக்கென்று வேலை செய்வதனாலேயே நம்முடைய காரியமும் நிறைவேறுகின்றது. இப்படிச் செய்யவேண்டுமென்று இப்பூச்சிகளுக்குக் கற்பித்தவர் யாவர்?

பத்மாதிபா.

KINDERGARTEN

கிண்டர்கார்ட்டன்

கிண்டர்கார்ட்டன் என்னும் பெயர் அமெரிக்காவில் 4 வயது முதல் 6 வயது வரையிலுள்ள குழந்தைகள் படிக்கும் பாட சாலைக்கு வழங்குகிறது. சென்ற மேமீ அப்பாடசாலைகள் ஒன்றில் நடந்தேறிய விஷயங்களை, நம் தேயத்து உபாத்தியாயர்களின் நன்மையின் பொருட்டு கீழ் எழுதுகின்றேன்.

"மேமீ நாங்களெல்லோரும் மிகவும் சௌக்கியமாயிருந்தோம். வசந்தகாலத்தின் ஆனந்தத்தை எங்கள் தோட்டம் அதிகரித்தது.

தோட்டத்திற்காக அருகாமையிலுள்ள தோட்டங்களிலிருந்து (Farms) கொண்டுவந்து நிரப்பப்பட்ட மரத் தொட்டிகள் 10 இருந்தன. மண் தயார் செய்யப்பட்டது. விதைகள் சிறுர்களால் நடப்பட்டன. இப்பொழுது உருளைக் கிழங்கும், பட்டாணியும், முள்ளங்கியும், வெங்காயமும், பின்ஸும் பயிராகின்றன. சூரியகாந்தி ஒரு தொட்டியிலும் இன்னொரு புஷ்பம் மற்றொன்றிலும் வளர்கின்றன. வெளியே போகக்கூடிய நாட்களிலெல்லாம் போய் இதர தோட்டங்களைப் (Farms) பார்க்கிறோம்; மூளை வெளியே தோன்றியவுடன் பிள்ளைகளுக்கு உண்டாகும் சந்தோஷம் அநந்தம். தோட்டம் பாடசாலையில் போட்ட காலத்தில் வீட்டிலும் தாய் தந்தையர்கள் தோட்டம் போடுகிறார்களென்றும் தங்களுடைய வீட்டுத் தோட்டத்திற்காக இரண்டொரு விதைகள் வேண்டுமென்றும் கேட்டார்கள், அப்படிக் கொண்டு போன விதைகளின் சரித்திரத்தை சொல்வதில் அவர்களுக்கு மிகவும் சந்தோஷம். தோட்டவேலை காலத்தில் குடியானவனுடைய வேலை நன்றாய் பிள்ளைகளுக்குத் தெரிந்தது, மாரிக்காலத்திற்கும் வசந்தகாலத்திற்கு முள்ள வித்தியாசத்தை பிள்ளைகளறிந்தார்கள். குழந்தைகள் சிறு மண் வெட்டிகளையும், களைக் கொட்டுகளையும் வாங்கி வந்தார்கள்.

குடியானவன் உழுவதை கவனித்தோம். செடிகள் மொட்டுவிட்டு இலைகள் பெறுவதையும் புஷ்பங்களால் அலங்கரிக்கப் படுவதையும் புல் உற்பத்தி யாவதையும் கவனித்தோம். வசந்தகால

புஷ்பத்தை முக்கியமாய் கவனித்து, பட்சிகள் கூடு கட்டுவதையும் பார்த்தோம், இம் மாதத்தில் மிகுந்த குதூகலம் உண்டாக்கியது வெளிப் பிரயாணமே. 60 குழந்தைகளும், அவர்களுடைய சகோதரர்கள் சிலரும், 20 தாய்மார்களும் சேர்ந்த கூட்டம் ஒன்று புறப்பட்டது. பிள்ளைகளெல்லாரும் அவர்களாலேயே செய்யப் பட்டகாகித புஷ்பமாலைகளைச் சூடி இருந்தார்கள். பலர் சண்டாக்கள் தாங்கினர்கள், 6 பேர் மத்தளமடித்தார்கள், மூவர் கொம்பு ஊதினர்கள். ஊர்கோலத்தில் மே கம்பம் (May-pole) கொண்டு போகப் பட்டது. அதனருகே இராஜா இராணி இருவரும் சென்றனர். சங்கீத வித்வான்கள் சேர்ந்தனர். இவ்வளவு வைபவம் கூடிய ஊர்கோலம் நேத்திராநந்தத்தை உண்டு பண்ணிற்று. கூட்டம் சிங்காரத் தோட்டம் ஒன்றிற்கு போயிற்று, கம்பம் நடப்பட்டது, நடனம் நடந்தது, பாட்டுகள் பாடப்பட்டன. சிற்றுண்டியும் முடிந்தது. பிறகு அருகாமையி லிருந்த காட்டு மிருகங்களின் காட்சிச்சாலை பார்க்கப் பட்டது. "சிறு கருப் புசம்போ" என்னும் வேடிக்கைக் கதை போதிக்கப் பட்டது நடித்தும் காட்டப்பட்டது.

ஜூன்மாதத்தில் நடந்த வேலையின் ஜாப்தா.

1. (a) வேனிற்கால அனுபவங்கள்.

   (b) தோட்டமும் தோட்டத்திலுள்ள ஜந்துக்களும்.

2. இயற்கை.

போதுத் தோற்றம் — புஷ்பங்களும், மரங்களும், பூச்சிகள் தவளை, நத்தை முதலியன, புல்.

3. தெருக்களில் விளையாடும் ஆட்டம்.

மேல் வரையப் பட்டவைகள் அத்தேயத்தில் அனுசரிக்கப் படும் முறையை வெளிப்படுத்துகின்றன. உபாத்தியாயர்கள் அதன் சிறப்பை உணர்ந்து அனுசரிப்பார்களென்று நம்புகின்றேன்.

உபாத்தியாயர் நேசன்.

MADRAS PEOPLE'S PARK AND ITS VICINITY

சென்னை மிருக விளைத காட்சிசாலையும் அதன் சுற்றுப் பக்கமும்

நானும் எனது நண்பனும் ஒரு நாள் சாயங்காலம் உலாவச் சென்றோம் போகும்போது மிருக விளைக் காட்சிச்சாலையைப் பார்க்கத் திரள் திரளாக ஜனங்கள் செல்லவே நாங்களும் அக்காட்சிச் சாலைக்குள் சென்று பார்த்ததில், பின் வரும் மிருகங்களையும் பக்ஷிகளையும் ஊரும் ஜந்துக்களையும் கண்டு மிக்க சந்தோஷம் அடைந்தோம். அங்கே பற்பல மிருகங்களையும் பக்ஷிகளையும் பார்த்து, ஆ! ஆ! பஞ்சவர்ணக் கிளியையும், வாலில்லாக் குரங்கையும் (காட்டு மனிதனையும்) கண்டோம். அது மனிதனை ஒத்திருந்தது.

அக் காட்சிச் சாலையில் ஒற்றை முசுப்புள்ள ஒட்டகமும், ஒரு யானையும், வெள்ளை முயல்களும், நான்கு கரடிகளும் அங்கங்கே அடைத்திருக்கக் கண்டோம். அவைகள் ஜனங்களைக் கண்டு பயங்கரமாய் வாயைத்திறந்து ஒருவிதமான கூச்சலிட்டன. பிறகு ஒரு சிறுத்தையையும் கழுதைப்புலியையும் புதிய புலியையும் பழைய புலியையும் உற்று நோக்கினோம், பழைய புலியுடன் ஒருவன் நாயைப்போல் விளையாட அது உடன்படவில்லை; ஆனால் அது அவனை ஒன்றும் செய்யவில்லை. பிறகு ஒரு தரை கழுதைப் புலியின்மேல் எச்சில் துப்ப அதற்குக் கோபம் உண்டாய் கத்த ஆரம்பித்தது.

அப்பால் சதுப்பு நிலத்தில் வசிக்கும் ஒற்றைக் கொம்புள்ள காண்டாமிருகத்தையும் யானைப்போல் லல்லாமல் குள்ள வடிவமுள்ள நீர் யானையையும் இந்தியில் பைகள் உள்ள ஆஸ்ட்ரேலியா தேசத்துக் கங்காரு என்கிற பிராணியையும் பலவிதமான மான்களையும், புலுகுப் பூனையையும், முயல்களையும், திபேத்து தேசத்து லாமா என்கிற அழகிய சாந்தமுள்ள ஆடுகளையும், ஈமு காஸோவாரி என்ற அடர்த்தியாகத் தடித்த மயிரையுடைய ஓடும் பக்ஷிகளையும், கடைசியாக வெள்ளை ஊதா மயிலையும், தங்க நிறமும் வெள்ளி

நிறமுமுள்ள புறுக்களையும், மீரில் வாழும் பகூஷிகளையும், முதலைக் குட்டிகளையும், பலவிதமான குரங்குகளையும்கண்டு ஆனந்திதேதாம்.

இந்த மிருகக் காட்சிச்சாலை 1859ம்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இது 85-காணி (Cawnies) பரப்புள்ள சிங்கார வனமாக அமைக்கப்பட்டது. இந்தச் சிங்கார வனத்தில் ஒரு அழகிய சிறு மண்டபம் உண்டு. இதில் பாண்டுவாத்தியம் வாரத்திற்கு ஒருநாள் காதிற்கு இனிமையாக வாசிக்கப்படும். இந்தச் சிங்கார வனத்தில் ஜனங்கள் உல்லாசமாக சாயங்காலத்தில் உலவ வருவார்கள். மிருகக் காட்சிச்சாலையைப் பார்க்க ஒவ்வொருவரும் 6 பை தரவேண்டும். ஜனங்களின் சௌகரியத்திற்காக அதிக பணம் செலவிட்டு கஷ்டப்பட்டு ஏற்படுத்திவிருத்தி, காப்பாற்றிவருகிற நமது காருண்ய கவர்ன்மென்டாருக்கும் பரோபகார சிந்தனையுடைய கனவான்களுக்கும் ஜனங்கள் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஒருங்கு சேர்த்து வைத்துள்ள இவ்விதி அதிசயமானமிருகக்காட்சிச் சாலையைக் காட்டி அவர்களின் லோகானுபவ ஞானத்தை விருத்தி செய்து உற்சாகப் படித்த வேண்டும். இவ்வகைக் காட்சி அன்னோரின் மனத்தைப் பேரானந்த மடையச் செய்யும். உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் தங்கள் மாணக்கர்களுக்கு வருஷத்திற்கு ஒருமுறையாவது இவ்வகைக் காட்சிகளைக் காட்டி தூண்டி வரவேண்டும். இப்படிப்பட்ட ஆச்சரியமான இடங்களைப் பார்த்தால், சிறுவர்களும் சிறுமிகளும், ஆணும், பெண்ணும், ஞானத்திலும், ஒழுக்கத்திலும் நற்குணங்களிலும் அபிவிருத்தி யடைவார்கள்.

மிருகக்காட்சிச்சாலையையும், சர்க்கஸ் (Circus)களையும் பார்ப்பதாலும் மிருக சம்பந்தமான கதைகளைப் படிப்பதாலும் கேட்பதாலும் சிறுவர் சிறுமிகள் மனோதைரியத்தையும், உல்லாசத்தையும், அடக்கம் முதலிய நற்குணங்களையும் அடைவார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் உண்டு — அமெரிக்கா கண்டத்தின் வாஷிங்டன் என்னும் ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறுவன் யாருக்கும் அடங்காமல் எல்லாருக்கும் உபாத்தியாயருக்கும் அதிக தொந்தரவு கொடுத்துவந்தான். அந்த உபாத்தியாயர் அவனுக்கு நல்ல புத்திமதிகளைக் கற்பிக்க பல உபாயங்கள் செய்து கடைசியில் மிருகங்களின் கதைகளை வாசிக்கும்படிசெய்தார். அக் கதைகளில் மிருகங்கள் ஒன்றோடொன்று விசுவாசித்துவந்த விருத்தாந்தங்களைச் சிறுவன் உபாத்தியாயரிடத்தில் அதிக அடக்க முள்ளவனையும், தன் பெற்றோரிடத்தில் கீழ்ப்படிந்தும், தன்னுடன் படித்து வந்த மற்றப் பிள்ளைகளுடன் பக்ஷமுள்ளவனையும், எல்லோரைக் காட்டிலும் தர்மசிந்தை யுடையவனையும் ஜீவகாருண்ய முள்ளவனையும் ஆனான் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இச் சிங்கார வனத்தில் வருஷாவருஷம் ஜனவரி பண்டிகை காலத்தில் பார்க் பேர் (Park Fair) என்னும் விநோதக்காட்சி நடைபெறும். இங்கு வெகு ஜனக் கூட்டம் கூடும்படியான (South Indian Athletic Association) சௌத் இண்டியன் அதலெடிக் சொஸைடியாரின் கட்டடமும் அழகிய மூர் மார்க்கெட்டும் (Moore Market), விக்டோரியா பப்ளிக் ஹாலும் (Victoria Public Hall), புதிதாய் கட்டப்படுகிற முனிசிபல் கட்டடமும், (Municipal Building), பார்க்கின் எதிரில் ஒரு ஜெயிலும், பார்க்கின் அருகில் ஜெனரல் ஆஸ்பத்திரியும் (General Hospital), கல்கட்டா, பம்பாய், பெங்களூர் முதலிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதை ஸ்டேஷனும் (Central Station), இன்னும் பல பிரயோஜனமுள்ள கட்டடங்களும் உண்டு. இத்துடன் சென்னையில் நேப்பியர் பார்க் (Napier Park), என்று சிந்தாதரிப்பேட்டையிலும், ராபின்ஸன் பார்க் (Robinson Park) என்று ராயபுரத்திலும், சிங்கார வனங்கள் உண்டு. இவைகளை ஜன சௌகரியத்திற்காக நமது காருண்ய கவர்ன்மென்டார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

S. பாஷ்யம் ஐயங்கார்,
சைதாப்பேட்டை.

THE SHEPHERD & THE PHILOSOPHER

இடையனும் தத்துவ சாஸ்திரியும்

பட்டணம் ஒன்றும் பக்கலில் இல்லாப்
பட்டிக் காட்டில் பட்டிகள் கட்டி (2)

ஆடு மேய்க்கும் அமைந்த வாழ்க்கையன்
தேடும் பொருட்காச் சிந்தைகவ லாதோன் (4)

தள்ளரும் முதுமையால் தளர்ந்த வுடலினன்
வெள்ளிக் கம்பியா லெழுந்த மபிரினன் (6)

மன்னிய இயற்கை வனப்பையே நாடித்
தன்னு ராய்ச்சியால் தழைத்த அறிவினன் (8)

கோடை நாளில் கொடியவெய் யிலினும்
நாடும் மழையில் நடுக்குறு குளிரினும் (10)

ஆட்டு மந்தையை அன்புடன் காத்துக்
காட்டில் வசித்துக் காலங் கழிப்போன் (12)

அழுக்கா றெடுபே ராசையு மற்றோன்
வழுத்தகு குணங்கள் வாய்ந்த மேலோன் (14)

அவ்வக் காலத் தமைந்ததன் தொழிலை
செவ்விதாச் செய்யும் சிறந்த முறையினன் (16)

அதனால்
இவனது கீர்த்தி எவ்வெவ் விடத்தும்
நலமுற விளங்கி நாளும் பெருகக் (18)

கேட்டவ ரெவரும் கிளர்ச்சியா லவனை
நாட்டும் நற்குண நாயக னிவனே (20)

வரகவி யென்ன வழுத்தினர் அவர்கள்
கரையும் உண்மையைக் காண்போ மென்ன
ஒருவன் (22)

பாட சாலையில் பயின்ற கல்வியன்
ஏடும் கையுமா இருந்தருப் போட்டே (24)

இலக்கிய இலக்கண மென்னுங் கடலைக்
கலக்கமில் லாமற் கடந்த கலைஞன்

இடையன் இருந்த இடத்தை யணுகிக்
கடையன் இவனும் கற்றதும் யாதோ (28)

வனத்தில் குடிலே வாசமாக் கொண்டனன்
இனத்துப் புலவோர் எவருமிங் கிலரே (30)

எப்படி இவனுக் கெய்திடுங் கல்வி
அப்படி இருப்பின் அறிவோம் அதனை (32)

என்று நினைத்தவ் விடைய னிருக்கும்
குன்றிய அந்தக் குடிலிற் புகுந்தங் (34)

கின்புற இருந்த இடையனைக் கண்டு
சிந்தையிற் கொண்ட செருக்குடன் நின்று (36)

ஐயா உம்மை அனைவரும் மதித்தே
மெய்யா யுணர்ந்த மேதா வியென (38)

விளம்புகின் றனரே வித்தை யனைத்தும்
களங்க மறநீர் கற்ற துமுண்டோ (40)

ஒல்காப் புகழால் உயர்ந்து விளங்கும்
தொல்காப் பியத்தைத் தொட்ட துமுண்டோ (42)

சங்கப் புலவோர் சாற்றிய நூற்றொகை
இங்கெத் தனையென எணியது முண்டோ (44)

பத்துப்பாட்டின் பகுதி யொன்றில்
பத்தடி யேனும் பார்த்தது முண்டோ (46)

எட்டுத் தொகையா இயன்ற நூலின்
திட்ட மிதுவெனத் தேர்ந்தது முண்டோ (48)

நாலடி யாரை நலமுறக் கற்றோர்
காலடி யேனும் கண்டிருப் பீரோ (50)

திருக்குறள் என்னும் தெய்வத் தமிழை
பெருக்குறக் கற்ற பேருமக் குண்டோ (52)

சிந்தா மணியைச் சிந்தை செய்தீரோ
அந்த நாட்டமிழர் அருஞ்செய லனைத்தும் (54)

செப்பமாய் விளக்கும் சிலப்ப திகாரமாந்
திப்பிய நூலைத் திருப்பிய துண்டோ (56)

மணிமே கலையாம் வண்டமிழ் நூலை
அணிபெறச் சற்றும் ஆய்ந்த துண்டோ (58)

நிகண்டெலா முமக்கு நெட்டுருத் தானே
புகன்ற பற்பல புராண மனைத்தும் (60)

பாடங் கேட்டே படித்தது முண்டோ
நாடு மவற்றின் நயமறிந் தீரோ (62)

சித்திரக் கவியின் சிறப் பறிந்தீரோ
இத்திற மனைத்தும் எவரிடங் கற்றீர் (64)

என்னைக் கேட்டே இறுமாந் திருந்த
அன்னவன் தன்னை ஆட்டுக் குடையோன் (66)

அமைவுற நோக்கி ஆதர வோடும்
இமயான்கொண்ட வண்மை கூறுவேன் (68)

கேளு மென்னைக் கிளக்க லுற்றனன்
நீளும் பெயருடன் நீர்வா சித்து (70)

நாடுங் குருவை நண்ணி யென்றும்
ஏடுங் கையுமா யிருந்து மறியேன் (72)

கற்றோர் கடந்த காலடிச் சுவட்டைப்
பற்றி யொருகால் பார்த்து மறியேன் (74)

தேச சஞ்சாரம் செய்து மற்றுங்கே
வாசஞ் செய்யும் மானிடர்க் குற்ற (76)

தன்மையும் கொள்கையும் சாத்திர நிலையும்
இன்ன வென்றுணர எண்ணியும் அறியேன் (78)
எனினின்

நானிலந் தன்னில் நண்ணிய உயிர்களுள்
மானிட னொருவனே வஞ்சக முள்ளோன் (80)

அறியா வெல்லாம் அறிந்தே னென்பான்
உணரா வெல்லாம் உணர்ந்தே னென்பான் (82)

உடையி னெளியால் உரையின் பகட்டால்
அடையும் பொருளால் அதிகா ரத்தால் (84)

மூன்றுற வந்து முதலில் நின்று
மன்று முதறிஞர் வழக்கையு மறுத்து (86)

அவரென் னறிவார் இவரென் னறிவார்
எவரென் னறிவார் யானே யறிவேன் (88)

என்ன வுரைத்தே யிதயங் களிக்கும்
புன்மைக் கெல்லாம் புகலிட மாவர் (90)

நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லெனும்
செஞ்சொ னிவர்பால் சேரா தொழிந்தது (92)

அதனால்,
அந்தநூற் பெயரையும் அறியேன் ஐயா
இந்தப் பூமியில் என்கணிற் காணும் (94)

பொருள்களைக் கண்டே போத மடைந்தேன்
அருட்பெருங் கடவுள் அமைப்பை யுணர்ந்தேன் (96)

பூமியே புத்தகம் புத்தியே போதகன்
ஆமி தொன்றே அறியத் தக்கதாம் (98)

இவ்வா கெளின் இயற்கையைக்கண்டு
செவ்விய அமைதியே சிறப்பெனக் கொண்டேன் (100)

எறிந்ததை யுண்டே இன்புறு நாயை
அறிந்தே நன்றி யறித லறிந்தேன் (102)

சென்றுசென் றுழைக்கும் தேனீக்களினால்
அன்றன் றுழைக்கும் அடைவினை யறிந்தேன் (104)

சிற்றெறும் புகளின் செய்கையை யுன்னி
பற்றுறச் சேர்க்கும் பான்மை யுணர்ந்தேன் (106)

மாடப் புறுவின் மனைகளை கண்டே
நாடி மாறுத நட்பினை யறிந்தேன் (108)

பறவைகள் தத்தம் பார்ப்பை வளர்க்கும்
உறவைக் கண்டே உறவினை யுணர்ந்தேன் (110)

ஆகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலையெனு நீதியும் (112)

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவெனு முரையும் (114)

நிலத்தைக் கண்டும் நீரைக் கண்டும்
நலக்க வுணர்ந்து நானடங்கினனால் (116)

என்கணிற் பட்ட எந்தப் பொருளையும்
நன்குற நோக்கி நண்ணும் அறிவான் (118)

குணநாடிக் குற்றமு நாடி யவற்றின்
மிகைநாடி மிக்க கொண் டுணர்ந்தேனைய (120)

வரிப்புலி ஓநாய் வலிய சிங்கமும்
எரித்திடு விஷமே எய்திய பாம்பும் (122)

மனிதர் காணுது மறைந்து வைகும்
தனிமை யறிந்து சற்குணர் தமக்கும் (124)

வஞ்சகம் பொறுமை வன்கொலை முதலா
நஞ்சமார் குணங்கள் நாடா தொழிந்தேன் (126)

இன்னும் அறியா திருக்கும் சூழ்ச்சிகள்
பின்னும் பற்பல பிறங்கிடு முலகில் (128)

அவையெலா நல்ல அறிஞர் தமக்கே
இவையிவை யென்ன இனிது விளங்கிடும் (130)

இவ்வகை கற்கும் இயற் புலவர்க்கு
அவ்வகை நூலால் ஆகும் பயனென் (132)

ஏடுங் கையுமா இருந்து கற்றோர்
நாடும் இயற்கை நல மறியாது (134)

கல்விச் செருக்கால் கருத்து மாறி
பல்வகை யானும் பாடிப் பாடி (136)

உலகை மயக்கும் உண்மை யறிந்து
இலகும் புலவர் யாமே யென்பர் (138)

என்னைக் கூறிய இடையன் மொழியை
பொன்னெனப் போற்றிப் பொருள் நனியுணர்ந்து (140)

அகந்தை யணைத்தும் அகன்றப் பெரியனை
உகந்து வணங்கி ஓதா துணர்ந்த (142)

ஐய அருள்க விடையென
செய்யதன் நகரைச் சேர்ந்த னன் (144)

பத்திராதிபர்.

NATURE STUDY—FROG

இயற்கைப் பொருட்பாடம் — தவளை

நீர்வளம், நிலவளம் பொருந்திய தஞ்சாவூரைச் சேர்ந்த கும்பகோணத்தில், குடித்தன வேலை செய்து கொண்டிருந்த ம-ரா-ரா-ஸ்ரீ, இராமசாமி பிள்ளை அவர்கள் காலஞ்சென்றபின், அவருடைய மனைவி மீனாட்சியம்மாள் தனது ஒரேமகன் பொன்னுசாமியைப் படிக்க வைக்க விரும்பி தஞ்சையிலுள்ள St. Peter's High School க்கு அனுப்பிவைத்து அவ்விடத்திலுள்ள ம-ரா-ரா-ஸ்ரீ, கோவிந்தசாமி முதலியார் அவர்கள் வைத்திருக்கும் சத்திரத்தில் போஜனம் உண்டுகொண்டிருக்கத் திட்டஞ் செய்தாள். பொன்னுசாமி என்பவன் ஒழுங்காய் கடவுளைத் தியானித்துக்கொண்டும், உபாத்திமார்களுக்கும் பெரியோர்களுக்கும் கீழ்ப்படிதலுள்ள நல்ல பையனாக வளர்ந்து வந்தான். இவனுக்கு ஒரு அருமையான சினேகிதன் தாவீது கூடினான். இவனுடைய தகப்பனார் தஞ்சாவூரில் கீர்த்தி பெற்ற முனிசீப். இவர்கள் ஒரு போதும் பிரியாமல், தங்கள் பாடங்களைப் படித்து வந்தார்கள். கடவுளுக்கும் பயந்து காலங்கழித்து வந்தார்கள். விடுமுறைநாள் தினமாகிய சனிக்கிழமை காலையில் இருவரும் பேசிக்கொண்டு நாகப்பட்டணம் ரெயிலும் சென்னபட்டணம் ரெயிலும் பிரியும் இடத்திற்குச் சற்று முன்னுள்ள ரெயில்வே கேட்டைத் தாண்டிக் கொண்டு தஞ்சாவூருக்குக் கிழக்கே மாமரங்கள் நிறைந்த சோமநாதன் குளத்திற்கு வந்து தந்த சுத்தி செய்து திரும்புகையில் பொன்னுசாமி அந்தக் குளத்தின் வடபக்கத்திலிருக்கிற படித்துறைக்குக் கீழ்பக்கத்தில் வெள்ளை நுரையாய் திரண்டிருந்ததைப் பார்த்து தன் அருமை நண்பனுக்குத் தவளையைப்பற்றிச் சொல்ல விரும்பி, பின் வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினன்.

பொன்னுசாமி — (தாவீதைப் பார்த்து) சினேகிதா! பக்ஷி போல் முட்டையிடும், பக்ஷி அல்ல; மிருகம்போல் தரையில் நடக்கும், மிருகம் அல்ல; மீன்போல் ஜலத்தில் நீந்தும், மீனும் அல்ல, அது எது?

தாவீது—(பொன்னுசாமியைப் பார்த்து) இந்தக் கேள்விக்கு உத்தரவு எனக்குத் தெரியாது. தயவு செய்து எனக்குச் சொல்லக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொன்னுசாமி — (புன்னகை செய்து) அதுதான் தவளை.

தாவீது — நான் உன்னுடன் படித்தாலும் தவளையைப் பற்றி உபாத்தியாயர் கற்றுக் கொடுத்தபோது நான் ஊரில் இல்லை. நான் என் தங்கையைப் பார்க்க தரங்கம்பாடிக்குப் போயிருந்தேன். அது உனக்கு ஞாபகம் இருக்கும். அதனால் தவளையைப் பற்றி பூர்ணமாய் எனக்குச் சொல்ல மிகவும் கேட்கிறேன்.

பொன்னுசாமி — தவளையைப்பற்றி நான் சொல்லு முன் நீ எனக்குத் தரங்கம்பாடியைப்பற்றிய சில விவரங்கள் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாவீது — நான் தரங்கம்பாடியைப்பற்றிக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஐரோப்பாக்கண்டத்திலுள்ள தேசத்தார்களில் போர்ச்சுகல் தேசத்தாரே முதல் முதல் இந்து தேசத்துக்கு வந்தவர்கள். 1497-ஆம் ஆண்டில் கீர்த்திபெற்ற Vasco de Gama என்பவர் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்து தேசத்தில் வந்திறங்கினர். அக்காலத்தில் போர்த்துகேயருடைய அதிகாரமும் பாஷையும், மார்க்கமும் இந்து தேசத்தில் பிரபலமாகும்படி நேரிட்டது. அவர்கள் ரோமன் மார்க்கத்தை அனுசரித்தவர்களாயிருந்தமையால், அந்த மார்க்கமே அதிக பிரசித்தமாகிக் கொண்டுவந்தது. 16ஆம்-நூற்றாண்டில் பிரான்சிஸ் சவரியார் இந்துதேசத்திற்கு வந்து அநேக மாயிரம்பேர் பாப்புமார்க்கத்தை அனுசரிக்கும்படி செய்தார். அவர் தம்மை முழுவதும் ஒறுத்து கர்த்தருக்கென்று ஊழியஞ் செய்து மரித்தார். டச்சுக்காரர் வந்தார்கள், 1626-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் இராஜா தரங்கம்பாடியையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் டென்மார்க் தேசத்தானுக்கு நன்கொடையாக விட்டார். டென்மார்க் தேசத்தில் அரசனாயிருந்த 4-ஆம் பிரடெரிக் என்பவர் சிகன்பால்க், ஹென்றி பிரிஸ்கோ முதலிய கீர்த்திபெற்ற மிஷினெரிமார்களை அனுப்பினர்.

இவர்கள் இராஜ அதிகாரப்பத்திரம் பெற்று வந்தாலும் இங்குள்ள துரைத்தனத்தாரால் இடையூறுகள் நேர்ந்தன: இவர்கள் கடவுளை அதிகமாய் நம்பி தேவ ஊழியத்தைச் செய்தார்கள். இவர்களுக்குப் பிறகு Smarty ஐயர் வந்தார்கள். இவர்களாலும் அநேக நன்மைகள் உண்டாயின. தரங்கம்பாடி அநேக வருஷங்களாய் ஜாத்தரன் மிஷின் தலைமை நகரமாயிருந்தது. அதில் பெரிய மாளிகைகளும், அரண்மனைகளும் உண்டு. தற்சமயம் அநேகமாய் எல்லாம் இடிந்து போயின. சில கட்டடங்கள் உண்டு. முற்காலத்தில் ஐரோப்பியரும், ஜாத்தரன் மிஷின் சபை போதகர்கள் இருந்தார்கள். சங்கத்தலைவரையும் செங்கற்பட்டுக்கு மாற்றிவிட்டார்கள். இதில் ஒரு அங்கிலேய ஆலயம் உண்டு. சுருக்கமாய்ச் சொன்னேன். தவளையைப்பற்றிச் சொல்லவும்,



பொன்னுசாமி — தவளையின் பிறப்பு வளர்ச்சி அதிக அதிசயமானது. ஆகையோடந்தமாகச் சொல்லுகிறேன் கேள், தாவீதைப் பக்கத்தில் அழைத்துப் போய் இங்கே தங்கியிருக்கும் நுரையைப் பார். தவளை தன் முட்டையைத் தண்ணீரின் அடியில் இடும். அது மேலே வந்து ஒரிடத்தில் தங்கும். தவளை இடுகின்ற முட்டைகள் கருநிறமானவை. அவை முதலில் கடுகின் அளவா யிருக்கும். ஒவ்வொரு முட்டையும் வெண்மையான வெல்லப் பாகுபோன்ற ஜவ்வின் மத்தியில் இருக்கும். இந்த ஜவ்வு மூடியிராவிட்டால் அவை

களைப் பக்ஷிகள் பொறுக்கி எடுத்துக் கொள்ளும். அல்லது மீன்கள் பிடித்துத் தின்று விடும். தவளை தான் இடுகிற முட்டைகளைக் கவனிக்கிறதில்லை. வெய்யில் எவ்வளவு நன்றாக உறைக்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளைப் பொரித்து விடும். முட்டை பொரித்ததும், பெரிய தலையும் தட்டை வாலும் மிகச் சிறிய உடலுமாக ஒரு சிறிய ஜந்து தோன்றும். இந்தச் சமயத்தில் இதை டாட்போல் (Tad pole), (Tad = வால், pole = தலை) வால் தலை பிராணி யென்று சொல்லுகிறார்கள்.

கால் இல்லாமையால் மீன்போல் ஜலத்தில் சஞ்சரிக்கும். அதைக் கவனித்தால் இரு பக்கங்களிலும் செதிள்கள் இருக்கின்றன. 4, 6, 8 வாரங்களில் நன்றாய் வளர ஆரம்பிக்கின்றன. கொஞ்சம் நாள் கழித்து வாலின் அடிப்பக்கத்தில் அதன் இருபக்கங்களிலும் சிறிய முண்டுகள் காணப்படும். இம் முண்டுகள் நாளடைவில் வளர்ந்து பின்னங் கால்களாகின்றன. இக் கால்கள் வளர்ந்து வர வீண்டவால் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து வருகின்றன. பின்னங் கால்கள் பூர்த்தியாய் வளர்ந்தவுடன் வால் முழுவதும் சுருங்கி மறைய ஆரம்பிக்கிறது. பின்னங்கால்கள் வளர்ந்து கொண்டு வரும்போது தலைக்குச் சமீபத்தில் தேகத்தின் அடிப்புறத்தில் இருபக்கங்களிலும் இரண்டு முண்டுகள் காணப்படுகின்றன. இம் முண்டுகள் வளர்ந்து முன்னங் கால்களாக மாறுகின்றன. இப்போது இதற்கு நாலு கால்களும் பாதங்களும் பூர்த்தியாய் வளர்ந்து பூர்ண தவளையாகிறது என்று சுருக்கி விளக்கிச் சொன்னேன்.

தாவீது — நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். தயவு செய்து அதின் உறுப்புக்களைப் பற்றியும் ஆகாரம் உபயோகம் முதலியவைகளைப் பற்றியும் தெளிவாய் உரைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொன்னுசாமி — நேரமாகிறது, நாம் சீக்கிரம்போய் காலை போஜனம் உண்டு பின் நம்முடைய பிராணி நூல் பாடத்தைக் கவனிக்கலாம். பின்பு இருவரும் காலை போஜனம் உண்டு படிக்கும் அறைக்குப் போய் ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். மணியும் 8 ஆகி விட்டது. தாவீது பொன்னுசாமியைப் பார்த்து இன்று நாம் ஔவையார் மொழிப்படி "சனி நீராடு" என்பதை மறக்கக்

கூடாது. நாளை ஒய்வு நாள் ஆலயத்திற்குப் போகவேண்டும். இன்று பகல் போஜனத்திற்குப் பிறகு நம்முடைய கணக்கு அப்பியாசங்களையும் அங்கிலேயபாஷை பாடங்களையும் எழுதப் படிக்க வேண்டியிருப்பதால் தவளையைப் பற்றி எனக்கு விளக்கிக்காட்ட அன்புடன் கேட்கிறேன்.

பொன்னுசாமி — மூன்று நாள் மழை பெய்திருந்தமையால் இவர்கள் படிக்கும் அறைக்குப் பக்கத்தில் ஒரு சிறு பள்ளம் இருந்தது. அதில் ஒரு தவளை இருக்கக் கண்டு அதைப் பிடித்து ஒரு பெரிய வாய் அகன்ற புட்டியில் போட்டுத் தாவீதைப் பார்த்து, சிநேகிதா, நான் சொல்லுவதைக் கவனி. தவளைக்கு நமக்கு இருப்பது போல் கழுத்து இல்லை. அகன்ற வாய் உண்டு.

கண்கள் — பெரியவை, சுற்றிலும் மஞ்சள் நிறமாயிருக்கும், மிகவும் பிரகாசமுள்ளவை. தலையில் ஏறக்குறைய முக்கால் பாகம் கண்கள் அமைந்திருக்கிறபடியால் இவைகளுக்குப் போதுமான மூளை கிடையாது.

பற்கள் — பசு, ஆடு, எருதுகளைப்போல் கீழ்வாய்ப் பற்கள் இல்லை. மேல் வாய்ப் பற்கள் மாத்திரம் உண்டு. இப்பற்கள் உள் பக்கம் வளைந்திருப்பதால் ஆகாரத்தை அரைக்கவாவது, கிழிக்கவாவது முடியாது.

நாக்கு — தவளைக்கு இது ஒரு முக்கிய அவயவம். நாக்கானது முன் வாயின் அடிச் சதையிலிருந்து உண்டாகி உள் நோக்கித் தொண்டைப் பக்கம் நீண்டிருக்கிறது. மிகவும் நீளம். நாக்கில் ஒரு விதமான பசை உண்டு. நாக்கு வெளியே நீண்டிருக்கும்போது சு, கொசுக்கள் லேசாய் ஒட்டிக்கொள்ளுகின்றன. அவைகளை சுலபமாய் உள்ளே இழுத்துக்கொள்ளும். தவளைக்கு விலா எலும்புகளில்லை. முது கெலும்பிலிருந்து சில எலும்புகள் நீட்டிக்கொண்டிருக்கின்றன. தவளையின் எலும்புக் கூடு பாடசாலையிலுள்ள பொருட்காட்சி அறையில் உண்டு. அதை நான் திங்கள் கிழமை தலைமை உபாத்தியாயர் அனுமதி கேட்டுக் காண்பிப்பேன்.

தோல் — பச்சையாயிருக்கிறது. கீழ்ப் பக்கத்தில் மஞ்சள் நிறமாயிருக்கிறது. அவைகள் குளங்கள், ஆறுகள், கிணறுகள் முதலிய இடங்களில் வசிப்பதால் வசிக்கும் இடத்திற்குத் தக்கதாய்

அதின் தேகம் அமைக்கப்பட்டிருக்கிறது. தோல் உரிக்க ஆரம்பித்து, தன் கால்களால் உரித்துத் தோலைத் தின்கின்றது.

மூக்கு—ஊசி முனையைப்போல் ஒரு துவாரம் உண்டு. அதின் வழியாய் காற்று அதிகம் செல்லாது. தண்ணீரிலுள்ள ஆகாயத்தைச் சுவாசிக்க அதின் தேகத்தில் சிறு துவாரங்கள் உண்டு. தவளை தண்ணீரில் இருக்கும்போது பருமனுகத்தெரியும். வெளியே போட்டால் சுருங்கிப் போகும். முதுகில் ஒருவித எண்ணெய்ப் பசை உண்டு. இதினால் ஜலத்தில் நீந்த ஏதுவுண்டு. தரையில் தத்தவதுபோல தண்ணீரிலும் தத்தும்: பின்னங்காலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. முன்னங்காலில் நாலு விரல்கள் உண்டு. பின்னங்காலில் ஐந்து விரல்கள் உண்டு. பின்னங்கால் முன்னங்காலை விட மிகவும் நீளம். விரல்களின் இடையில் தோல் உண்டு. போன வருஷத்தில் நாம் கவனித்தபடி வாத்துக்களுக்கு இருப்பது போல இவைகளுக்கும் நீந்த உபயோகப்படுகிறது.

ஆகாரம் — தவளையை தோட்டக்காரருடைய தோழன் என்று அழைக்கலாம். தோட்டத்திலுள்ளவைகளை நாசமாக்கும். பூச்சி, புழு, எறும்பு, ஈ, கொசு முதலியவைகளைத் தின்னும். நான் முன் சொன்னபடி நாக்கு உள் பக்கம் திரும்பியிருப்பதால் சிக்கிரம் புழுக்களை உள்ளே இழுத்துக் கொள்ளுகிறது. புழுக்களைப் பிடித்துக்கொண்டு முன்னங்காலால் உள்ளே தள்ளும். (Lungs) இரத்தாசயம் கிடையாது. இரத்தம் குளிர்ந்திருக்கும். இங்கிலந்து முதலிய குளிர்ந்த இடங்களில் குளிரால் நீர் பனிக்கட்டியாகி விடும். அக்காலத்தில் தவளைகள் தண்ணீர்க்குள் சென்று அங்கே வசிக்கும். அங்குள்ள பாசிகளைத் தின்னும். நம்முடைய தேசத்தில் கோடை காலத்தில் குளத்தில் ஜலம் வற்றிப் போகிறபடியால் உள்ளே வளைதோண்டி வசிக்கும்.

உபயோகம் — தவளையை சீனதேசத்திலுள்ள ஜனங்கள் அதிகப் பிரியமாய்ச் சாப்பிடுகிறார்கள். அதை ஊறுகாய் போட்டுக் கொள்ளுகிறார்கள். நம்முடைய தேசத்திலுள்ள சில ஜாதியார் சாப்பிடுகிறார்கள். தவளையின் இரத்தத்தை பிராந்தியுடன் (Brandy) கலந்து குடித்தால் Asthma வியாதி நீங்கும் என்று பேர் பெற்ற ஆங்கில வைத்தியர்கள் உரைத்திருக்கிறார்கள் என்றனன்.

தாவீது — நான் மிகவும் நன்றியுள்ளவனுயிருக்கிறேன், எலும்புக் கூடு திங்கட் கிழமை காண்பி. தயவு செய்து தேரையைப் பற்றிச் சொல்லும்.

பொன்னுசாமி — தேரை (Toad) அல்லது சண்ணம்புத் தவளை. இதன் தோல் வெளுத்திருக்கும். இது தவளையைப்போல் காணப்பட்டாலும் ஆகாரம் முதலியவைகளில் தவளையிலிருந்து சற்று வித்தியாசப் படுகிறது. வீட்டுத் தேரை செடித் தேரை என இரண்டு விதமுண்டு. மழை காலத்தில் தவளையைப் போலவே இருக்கும். தேரை பார்வைக்கு தவளையைவிடப் பெரியது. மெதுவாய் தத்திப்போகும். பின்னங்கால்கள் தவளையின் பின்னங்கால்களைப் போல் நீண்டு இரா. முன்னங்கால்களில் தோலடிப் பாதமில்லை. கால்கள் குட்டையாயிருக்கின்றன. நீந்த சக்தியில்லை. கற்கள் இடையிலும், ஈரமுள்ள இடங்களிலுள்ள செடிகளிலும் வசிக்கிறது. மேல்வாயிலும் கீழ்வாயிலும் பற்கள் இல்லை. நாக்கு தவளையின் நாக்கைப்போல் பசையுள்ளதாயிருக்கிறது. பூச்சி, புழு, ஈ முதலியவைகளைத் தின்னும். நாற்றமுள்ள நீரைத் தன் பின் பக்கத்தால் பீச்சும். இந்த நீர் நாற்றத்தால் மற்றப் பிராணிகள் அதன் சமீபத்தில் செல்லுகிறதில்லை. சுவாசம் மிகவும் குறைவு, கற்குள்ளிருந்தால் கல் வளரும் என்பார்கள். Grand Holy என்பவர் ஒரு கற்பாறையைப் பார்த்ததாகவும் பிறகு தாம் 28 வருஷத்திற்குப் பின்பு அதை உபயோகித்தபோது அதற்குள் ஒரு தேரை இருந்ததாகவும் எழுதியிருக்கிறார். இது தண்ணீரில் வசிக்காது என்று உரைத்தனன். இதுவுமல்லாமல் தவளையின் உற்பத்தியை காகிதத்தில் வரைந்து காட்டினன்.

தாவீது — பொன்னுசாமிக்கு நன்றியறிதல் கூறினன் மணியும் 10 ஆனதால் இருவரும் எண்ணெய் ஸ்நானம் பண்ணப் போனார்கள்.

A CONVERSATION

ஒரு சம்பாஷணை

இரண்டு பாலிகைகள்

ருக்மிணி — கல்யாணி! அதோ பார் அங்கே நாற்புறமும் ஒருவரும் உள்ளே நுழையாதபடி கருங்கல்லால் கட்டப்பட்ட சுவர்களும், அதற்குள் பலவித சித்திரச்சிலை உருவங்கள் அமையப் பெற்ற மிகவும் உன்னதமான இரண்டு வீடுகளும், அவ்வீடுகளின் வாசற்படியண்டை கருங்கல்லால் செய்யப்பட்ட அதிக உன்னதமான ஒரு தூணும் காண்கின்றன அல்லவா. அது என்ன?

கல்யாணி — ருக்மிணீ! நீ பிறந்தது முதல் இத்தனை நாளாய் இவ்வூரிலிருந்தும் அறியவில்லையா, ஆனல் சொல்லுகிறேன் கேள். அது தேவாலயம் அல்லவா.

ருக்மிணி — தேவாலயம் என்ரு சொல்லுகிரூய். எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே. வீடுபோன்றல்லவோ காண்கிறது.

கல்யாணி — என்ன யோசிக்காமல் சொல்லுகிரூய். ஆலயத்தின் எதிரில் நூண் நாட்டியிருப்பது போல், நம்முடைய வீடுகளின் எதிரில் அவ்விதமான கம்பங்கள் இருக்கின்றனவா?

ருக்மிணி — இல்லை. ஆனல் ஆலயம் என்ரல் என்ன? அதைப்பற்றி எனக்கு விவரமாகச் சொல், தெரிந்து கொள்ளுகிறேன்.

கல்யாணி — நம்மைப் படைத்தவர் யார்?

ருக்மிணி — நம்மைப் படைத்தவர் கடவுள்.

கல்யாணி — அவர் எங்கே பிருக்கிரூர்? உனக்குத் தெரியுமா?

ருக்மிணி — கடவுள் ஒருவர் இருக்கிரூர் என்று மட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் நான் பார்த்ததில்லை, அவர் எங்கே யிருக்கிரூர்.

கல்யாணி — அவர் ஆதியும் அந்தமுமில்லாத பராபர வஸ்துவாயிருக்கிரூர். அவரைக் காண ஒருவராலும் ஆகாது. எங்கும் நிறைந்திருக்கிரூர்.

ருக்மிணி — சரி தெரிந்துகொண்டேன். ஆனல் ஆலயம் என்று சொன்னயல்லவா அதைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே. அதில் குடியிருப்பது யார்?

கல்யாணி — ஒருவரும் அதில் குடியிருக்கவில்லை.

ருக்மிணி — பின் என்ன இருக்கிறது?

கல்யாணி — நம்மைப் படைத்த கடவுளின் பலவித அவதாரங்களில் ஒரு அவதாரத்தை கருங்கல்லால் விக்ரகம் செய்து வைத்திருக்கிறது.

ருக்மணி — ஏன் அவ்விதம் உருவம் செய்து வைத்திருக்கிறது?

கல்யாணி — உம்முடைய வீட்டில் பெரிய படம் ஒன்று சுவரில் தொங்கவிட்டிருக்கிறதே அது என்ன?

ருக்மிணி — அவை எனது பாட்டனரின் உருவப்படம்.

கல்யாணி — ஏன் அதை அங்கே தொங்கவிடப் பட்டிருக்கிறது?

ருக்மிணி — அவரை நாம் எந்நாளும் மறவாமலிருக்க.

கல்யாணி — மறந்து போனல் என்ன?

ருக்மிணி — ஒன்றுமில்லை, ஆனல் நம் வீட்டிலுள்ள அனைவரிலும் அவர் பெரியவரான படியாலும், நமக்கு எவ்விதக் கஷ்டநிஷ்டூரங்களும் நேரிடாதபடி நம்மைக் காப்பாற்றியும் குழந்தைகளாகிய நமக்கு வேண்டிய தின்பண்டங்களும் ஆடையாபரணங்களும் கொடுத்துக் காப்பதுடன் நமக்கு பலவித நற்குணங்கள் அமைய நற்புத்திகளைப் புகட்டி வந்தவரானபடியால், அன்னவரை என்றும் மறக்கலாகாது அல்லவா.

கல்யாணி — உண்மைதான், நம்மை சிருஷ்டித்த கடவுளை மாத்திரம் நாம் மறக்கலாமா?

ருக்மிணி — கூடாதுதான். பின் என்ன செய்யவேண்டும்.

கல்யாணி — உனது பாட்டனருடைய புகைப்படத்தை என்ன செய்கிரூய்?

ருக்மிணி — அவர் ஜீவித்திருக்கையில் அவரை எவ்வாறு வணங்கி வந்தேனை, அம்மாதிரியாகவே இப்போதும் அப்படத்திற்கு வணங்கி வருகிறேன்.

கல்யாணி — சரிதான் அவ்விதமே அனுதினமும், காலை மத்தியானம் சாயந்திரம் இந்த மூன்று வேளையும் கடவுளை வணங்க வேண்டும்.

ருக்மிணி — சரி, ஆனல் இப்போது மாலை 5-மணிதான் ஆகிறது. கடவுளை வணங்குவோமே ?

கல்யாணி — அதோ பார் பெரிய குளமொன்று தெரிகிறது. அக்குளத்திற்குப் போவோம் வா.

ருக்மிணி — குளத்தில் என்ன வேலை, கோவிலுக்கு அல்லவோ போகவேண்டும்.

கல்யாணி — ருக்மிணி, நான் சொல்வதைச் சற்று கவனி. நாம் பலவிடங்களில் அலைந்து திரிந்துவந்ததினல் நம்முடைய கை கால்களை சுத்தம் செய்துகொண்டு போவோம். ருக்மிணி, ஜாக்கிரதையுடன் இறங்கி, கைகால்களைக் கழுவிக்கொள். குளத்திற்குள் விழுந்துவிடுவாய்; மேலும் ஜலம் அதிக மிருக்கிறது பத்திரம்.

ருக்மிணி — நாம் கைகால்களைச் சுத்தம் செய்தாய்விட்டதல்லவா, இனி என்ன தடை, கோவிலுக்குப் போவதுதானே.

கல்யாணி — தடையொன்று மில்லை, போவோம் வா.

ருக்மிணி — அதோ அங்கே போய்க்கொண்டிருக்கிறவர்கள் பார்? அவர்கள் எங்கே போகிறார்கள்?

கல்யாணி — நம்மைப்போல அவர்களும் கோவிலுக்குப் போகிறவர்களே.

ருக்மிணி — அவர்கள் ஒவ்வொருவரும் கையில் தேங்காய் வாழைப்பழம் முதலானவற்றை கொண்டுபோகிறார்களே, அவை எதற்காக?

கல்யாணி — கடவுளுக்குச் சமர்ப்பிக்கக் கொண்டுபோகிறார்கள்.

(இன்னும் வரும்.)

P. S. GURU ROW,
Headmaster, Board Elementary School,
Ramayampatti.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1913வது ஆகஸ்டுமீ | மாதம் 3.

NATURE STORIES

இயற்கைப் பொருட் கதைகள்

Tumble Bugs — உருட்டு வண்டுகள்

இங்கு இரண்டு வண்டுகள் என்ன செய்கின்றன பார். இவற்றைக் கண்டவுடனே ஒருவகை வண்டைப்பற்றி உனக்கு ஞாபகம் வரும். இவைகளும் அந்த வகையிற் சேர்ந்தவைகளே. ஆனல், மலத்தை உருட்டும் வண்டுகள் அல்ல. இவை இரண்டும் ஒரு பந்தை உருட்டிக்கொண்டு போகின்றன. தரையில் உருட்டுவதானல் சுலபம். மேட்டின்மேல் உருட்டிக்கொண்டு போவது சுலபமாகுமா. இவை யிரண்டும் வெகு கஷ்டப்பட்டு தம்மால் கூடியமட்டும் தள்ளுகின்றன. உருட்டுவதும் தள்ளுவதும் முட்டிக்கொடுப்பதுமாகச் செல்கின்றன.

இப்போது கூடியமட்டும் மேட்டின் மேற்பாகத்திற்கு வந்து விட்டன. மேட்டின் உச்சியையும் எட்டிவிட்டன. ஐயோ, கொஞ்சம் நழுவவிட்டது. வண்டும் பந்தும் அடிவாரத்திற்கு வந்துவிட்டன. என்ன செய்யும், திரும்பவும் ஆரம்பிக்கவேண்டியதே. அவைகள் பட்ட கஷ்டமெல்லாம் வீணுயிற்று. வீணுயிற்றென்று அவைகள் வெறுப்புக்கொள்வதில்லை, பழையபடி முதலிலிருந்து ஆரம்பிக்கின்றன. முன்னிலும் சிரமப்பட்டு தள்ளுகின்றன. இதைப் பார்க்க நமக்கு வேடிக்கையாக இருக்கின்றது; வண்டுகளுக்கு வருத்தமாக இருக்கின்றது. வருத்தமென்று தாம் கொண்ட முயற்சியை விட்டுவிடுகின்றனவா. ஒருபோதும் இல்லை. அவைகளுக்கு உதவிசெய்ய எனக்கு இஷ்டந்தான். நான் கிட்டிப்போய் தொட்டால், அவை சும்மாவிருக்குமா. அஞ்சி ஓட்டம் பிடிக்குமே. இதற்கு என்ன செய்வது. அவை மேற்கொண்ட தொழிலை அவைகளே செய்து தீரவேண்டும்.

சரி, இப்போது இரண்டாம் முறை உச்சிக்குத் தள்ளிக்கொண்டு வந்துவிட்டன. இரண்டும் கீழ்ப்புறமாக வந்து நெட்டித் தள்ளுகின்றன. இன்னொருமுறை உருண்டு அடிவாரத்திற்கு வந்து விடுமோ, வராது. வண்டுகள் மிகவும் பக்குவமாக உருட்டுகின்றன. முன்பு ஏமாந்துவிடவே இப்போது இம்மியும் தளராமல் வேலை செய்கின்றன.

இருக்கட்டும், இந்தப் பந்து ஏது? ஏன் இப்படி இந்த வண்டுகள் கஷ்டப்பட்டுத் தள்ளிக்கொண்டு வருகின்றன? இதைக்கொண்டு போய் என்ன செய்யப்போகின்றன? என்பதை ஆராய்வோம்.

சில வண்டுகள் தம் ஆகாரத்தின்பொருட்டு மலத்தை உருட்டிக்கொண்டு போகின்றன. இது மல மன்று. ஒரு வகை இலை. அந்த இலைகளைக் கத்தரித்து ஒன்றின்மேலொன்றுகச் சுருட்டி இந்தப் பந்தைச் செய்கின்றன. இந்தப் பந்தைக்கொண்டு விளையாடப் போகின்றனவா? இல்லை, இல்லை, இந்தப் பந்தைக்கொண்டு தம் குழந்தைகளை வளர்க்கப் போகின்றன. இந்த இரண்டு வண்டுகளில் பெண்வண்டு ஒரு முட்டை யிட்டது. அந்த முட்டையை இந்தப் பந்துக்குள் வைத்திருக்கின்றன. முட்டையிலிருந்து புழு வெளிப்பட்டதும், இந்த இலையை யருந்தும். அந்தப் புழுவுக்கு வேண்டிய உணவே இந்த இலையாகும்.

அந்தப் புழுவுக்கு யாதோரிடையூறும் நேராவண்ணம் அதை ஏற்ற இடத்திற்குக் கொண்டுபோகின்றன. மேட்டின் மேல் கொண்டுபோனல் மழை பெய்தாலும் பயமில்லை. மனிதர் மிருகங்களாலும் இடையூறு நேரிடாது. இம்மாதிரியான வண்டுகள் பாதை ஓரங்களிலும் உருட்டிக்கொண்டு போவதுண்டு. அங்கேயும் ஏற்ற இடத்தைப் பார்த்து இந்தப் பந்தை அமைத்து வைக்கும். ஒருவர் கண்ணுக்கும் தோன்றுதபடி அந்தப் பந்தை மறைத்துவைக்கும்.

தங்களுக்குச் சம்பூர்ணமான திருப்தி உண்டானல்தான் அந்த இடத்தில் தமது முட்டையை அமைக்கும். இல்லாவிட்டால் எவ்வளவு தூரமானலும் தள்ளிக்கொண்டு போகும். அதைக் கொண்டுபோய் ஏற்ற இடத்தில் வைத்து விட்டால் அந்த வண்டுகளின் கடமை தீர்ந்து விட்டதாகும். பிறகு அந்தப் பந்திலிருந்து புழுப் புறப்பட்டு பெரியதாகி வண்டின் உருவத்தை யடைந்து தாமும் தமது தாய் தந்தையைப்போலவே செய்யும்.

The Owls — ஆந்தைகள்.

ஒருநாள் வேடனொருவன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். செல்லும்போது தன் சிறுவனையும் தன்னுடன் கூட்டிச் சென்றான். சிறுவன் காட்டில் சிறிது தூரம் நடந்து, அங்கு விழுந்துகிடந்த ஒரு மரத்தின்மீது உட்கார்ந்தான். வேடன் பின்னல் போய்க்கொண்டிருந்தான்.

தந்தை தன் குமாரன் உட்கார்ந்திருந்த இடத்தைச் சமீபித்தவுடனே, பிள்ளாய், ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்? அருகிலுள்ள ஆந்தை உனக்குத் தெரியவில்லையா? என்றான்.

'எங்கே? அண்ணா!' என்று கேட்டான் பையன்.

நீ உட்கார்ந்திருக்கும் மரத்தின்மேல் தான்; உன் அண்டை யிலிருந்தும் உனக்குத் தெரியவில்லையா? என்று கேட்டான் தந்தை

'தெரியவில்லையே' என்றான் பையன்.

'நல்லது, இதோ பார், உன் கைக்கு எட்டக்கூடிய சமீபத்தில் இருக்கிறது. இவ்வளவு சமீபத்திலிருந்தும் உன் கண்ணுக்குப்

புலப்படவில்லையே, அது ஏன்? தெரியுமா?' என்று கேட்டான் தகப்பன்.

'சொல்கிறேன், யோசித்துத்தானே சொல்லவேண்டும்' என்றான் பிள்ளை.

'யோசித்துத்தான் சொல்லு. எதையும் யோசிக்காமல் சொல்லலாமா? அது எப்போதும் பிசகு. நீ யோசித்தே எதையும் பேசவேண்டும். நல்லது இதற்குக் காரணம் என்ன? சொல் பார்க்கலாம்' என்றான் தகப்பன். சரி, சொல்லுகிறேன். ஆந்தை சற்றும் அசையாமல் உட்கார்ந்திருக்கிறது. இரண்டாவது அதன் சிறகுகள் மரத்தின் பட்டையைப்போலவே இருக்கின்றன. நிறம் மரத்தைப் போலவே இருப்பதனால், ஆந்தையும் மரத்தின் ஒரு பாகம்போல் தோன்றுகிறது. மூன்றாவது ஆந்தை தன் பெரிய கண்களைத் திறவாமல் மூடிக்கொண்டு குறுகிப் பார்க்கிறது. அது கால்களால் பிறாண்டவு மில்லை. அந்தப்புறம் இந்தப்புறம் குதிக்கவு மில்லை. இப்படி இருந்தால் எப்படித் தெரியும்? அண்ணா' என்றான் பையன்.

'நீ சொன்னது சரிதான், அசையாமல் இருந்தால் நாம் ஒருவர் கண்ணுக்கும் புலப்பட மாட்டோமென்று ஆந்தைக்குத் தெரியும் போலிருக்கிறது. அது சரியான எண்ணந்தானே. ஆந்தை இப்படித்தான் தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றது. ஆந்தை மிகவும் யுக்திசாலிதான். உனக்கு என்ன தோன்றுகிறது?' என்றான் தந்தை.

'ஆமாம், அதற்கென்ன தடை' என்றான் பையன். பின்பு இருவரும் வேட்டையாடி வீட்டை யடைந்தார்கள்.

பத்திராதிபர்.

DRAWING

சித்திரம் வரைதல்

இப் பாடமானது அநேக வருஷங்களாக நமது தேசப் பள்ளிக்கூடங்களில் நன்றாகக் கவனிக்கப் படாமல் இருந்தது. சில வருஷங்களுக்கு முன்புதான் நமது ராஜதானி எலிமெண்டெரிப் பாடசாலைகளில் கட்டாயப் பாடங்களுள் ஒன்றாக இப்பாடம் ஏற்படுத்தப் பட்டது. குழந்தைகளின் அபிவிருத்திக்காகவே சிரமப் பட்டு தங்கள் வாழ்நாளைக் கழித்தவர்களாகிய புரோபல், பெஸ்டலோயி முதலிய கீர்த்திபெற்ற உபாத்தியாயர்களால் சித்திரம் வரைதலின் உபயோகம் எடுத்துக் காண்பிக்கப்பட்ட பிறகுதான் இந்நாடுகளில் இப் பாடமானது செவ்வையாய்க் கவனிக்கப் பட்டு வருகிறது. குழந்தைகளின் சுபாவங்களையும், செயல்களையும் நன்கு கவனித்து அவர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்ய சரியான மார்க்கம் கிண்டர்கார்டன் தொழிலில் மிகச் சிறந்ததான சித்திரம் வரைதலே.

குழந்தைகளின் செயல்களை நாம் நன்கு கவனிப் போமானால் அவர்கள் எப்போதும் கரி, மாக்கல், சுண்ணாம்புக் கட்டி முதலியவற்றால் மனத்தில் தோன்றியவாறு பல உருவங்களை தரையிலும் வீட்டுச் சுவரிலும் கிறுக்கிக் கொண்டிருக்கிறார்களல்லவா? இதனால் பிள்ளைகள் ஏதோ ஒரு தொழிலைச் செய்ய விருப்பமுள்ளவர்களென்றும், அவர்களின் கைகள் தறு, தறு என்று அசையும் சுபாவமுடையனவென்றும் அவர்கள் புத்தி பொருள்களின் வடிவங்களை அறிந்து அவற்றை வரையும் சுபாவமுடையனவென்றும் நாம் அறிந்து அவர்கள் விருப்பை ஒழுங்கான சித்திரம் வரைதலின் மூலமாய் நிறைவேற்றுவது நமது கடமையன்றோ?

சித்திரம் வரைதலின் உபயோகம் — சித்திரம் வரைதலானது குழந்தைகளுக்குக் கைப் பழக்கம், கண் பழக்கம் ஆகிய இவைகளை விருத்தி செய்கிறது. கரும் பலகைக்கு எதிரில் நின்று கொண்டு கைகளை வீசி வரைவதால் குழந்தைகளின் கை கால்களுக்குப் பலத்தைக் கொடுக்கிறது. பிள்ளைகளிடத்தில் ஒழுங்குபாடு, சுத்தம், கீழ்ப்படிதல் முதலிய நல்ல குணங்களை விளைவிக்கிறது. முக்கியமாக உபாத்தியாயர்களுக்கே சித்திரம் வரைதல் அதிக உபயோககரமாயும், இன்றியமையாததாயுமிருக்கிறது. எப்படி யெனில் உபாத்தியாயர் போதிக்கும் ஒவ்வொரு பாடமும் சித்திரத்துடன் சம்பந்தப் பட்டிருக்கிறது. சரியான போதனை வார்த்தை ரூபமாய் காதின் மூலமாயும், சித்திரம் ரூபமாய் கண்ணின் மூலமாயும் ஞானத்தைப் புகட்டுவதாம். வாயால் சொல்லி விளக்க முடியாத ஒரு பாடத்தை சித்திரம் எழுதி அதன் மூலமாய் சீக்கிரம் விளக்கலாம். ஆதியில் எழுத்துக்கள் ஏற்படாததின் முன்பு ஜனங்கள் தங்கள் கருத்தை சித்திரம் எழுதி வெளியிட்டார்களன்றே? ஒரு பாடத்தை நெடு நேரம் வாயால் போதிப்பதிலும் சீக்கிரத்தில் சித்திரத்தால் விளக்கிக் காட்டுவது பிள்ளைகளுக்கு எவ்வளவோ வியப்பையும் சந்தோஷத்தையும் உண்டாக்கி 'பசு மரத்தில் ஆணி அறைந்தது போல்' பிள்ளைகளின் மனத்தில் நன்றாய் பதியச் செய்கிறது.

பாலர் வகுப்பிலேயே சித்திரம் வரைதலை ஆரம்பிக்கலாம். (உதாரணமாக) முற்றிலும் எழுத்துக்களையே அறியாத பாலர்களின் முன்னிலையில் ஒரு கரும்பலகையில் கிளியின் படத்தையும் கிளி என்கிற வார்த்தையையும் எழுதி படிக்கச்செய்தால் படத்தை உடனே கிளி என்று சொல்லி விடுவார்கள். ஆனால் எழுதிய எழுத்துக்களையோ அவ்வளவு சீக்கிரம் படிக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். இதனால் பாலர்களுக்கு சித்திரம் சீக்கிரம் தெரிந்ததாயும் எழுத்துக்கள் அவ்வளவு சீக்கிரம் தெரியாததாயுமிருக்கிறதென்று நமக்கு தெரிகிறதல்லவா? ஆகையால் பாலர்களுக்கு சித்திரத்தையே முதலில் ஆரம்பித்து பிறகு எழுத்துக்களை போதிப்பது நலம்.

சித்திரம் வரைவதில் மூன்று விதமுண்டு.

(1) Free Arm Drawing (கையை தாராளமாய் நீட்டி முழு புஜத்தால் வீசி வரையும் சித்திரம்) இச்சித்திரத்தைக் கற்பிக்க ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு கரும்பலகை வேண்டும். அல்லது கருப்பு வர்ணம் பூசின சுவர் (Wall Board) இருந்தால் நலம். கரும்பலகையில் வரைவதற்கென்று தயார் செய்யப்பட்ட சீமைச்சுண்ணாம்புக் குச்சிகளையே (Crayons) உபயோகப் படுத்தவேண்டும். இச்சித்திரம் பழகும்போது பிள்ளைகள் எழுந்து நின்று அப்பியசிக்க வேண்டும். இதை பாலர் முதல் எல்லா வகுப்புகளிலும் நடத்தலாம்.

(2) Free Drawing—(கையை மடக்கி முழங்கையை ஊன்றி கையால் வரையும் சித்திரம்) இதையும் பாலர்வகுப்பிலேயே ஆரம்பிக்கலாம்.

(3) Free Hand Drawing — (மணிக்கட்டை ஊன்றி கையால் வரையும் சித்திரம். இதற்கு கார் ஈயபென்ஸிலும் டிராயிங்-காகிதமுமே (Drawing Paper) தகுதியானவை. இப்பாடத்தை மூன்றாவது வகுப்புக்கும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கும் கற்பிக்கலாம்.

சித்திரபாடத்தில் கற்பிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) சித்திரத்தின் மூலாதாரபாகங்கள். (2) பள்ளிக்கூடத்திலும் சுற்றுப் புறத்திலும் காணக்கூடிய இயற்கைப் பொருள்கள். (3) கூட்டுச் சித்திரம் எழுதுவது. (4) மற்றப் பாடங்களுடன் சம்பந்தப்பட்ட உருவங்களை வரைதல் (5) ஆயுதங்களை உபயோகப்படுத்தி சித்திரம் வரைவது முதலியன.

சித்திரம் கற்பிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்பட வேண்டிய காட்சிச்சாலையில் (School Museum) அட்டைகளில் கத்தரித்த மாதிரி உருவங்களும், களிமண்ணால் செய்த காய், கறி, பழவர்க்கங்களும், மண்ணால் செய்த மிருகங்களின் உருவங்களும், பக்ஷிகளின் கால், இறகு, அலகு முதலியனவும், cube, cylinder, sphere, pyramid, முதலியவைகளும், எலிமென்ட்டரி ஸயன்ஸ் விஷயமாய் வேண்டியவைகளும், அநேகவிதமான சித்திரபுஸ்தகங்களும் சேகரித்து வைத்திருப்பது அவசியம்.

N. KRISHNA RAJACHAR,
Teacher, Board School, Chamanur,
Dharmapuri Taluq.

AGRICULTURE

கிருஷி சாஸ்திரம்

நெல்லறுப்புக்கேற்ற காலம்

அறுப்புக்கேற்ற காலம் தான் பழுத்து மஞ்சள் நிறமாக மாறுந் தருணமேயாம். இன்னும் சற்று முன்னரே அறுத்துவிடுவதினாலும் குணமுண்டு. பயிர் சாறிப்போகாமலும் நெல் தரையில் விழுந்து சேதப்படாமலும் இருக்கும். அறுவடை செய்யத் தாமதப்பட்டால் பயிர்த்தாள் வலிவற்று சாய்ந்துவிடும். மேலும் கதிர் பெருத்த அதில் மணிகள் புஷ்டளமாய் இருந்தால் பயிர் தரையோடு படிந்து விடுமாகையால் தருணத்தில் அறுவடை செய்வதே உத்தமம். பயிர் போதையாய் வளருமாயின் கதிர் விடுமுன் மேல்பாகத்தை அரிந்து விடவேண்டும்.

நிலத்தின் சத்துவத்திற்கேற்ற பயிர் சற்று முன்னும் பின்னுமாக அறுப்புக்கு வருவதுமுண்டு. பச்சரிசிக்காக குத்தவேண்டிய நெல்லை கதிரிலிருக்கும்போதே நசுக்கிப் பார்த்து பால் பிதுங்காமல் சற்று பழுத்திருக்குமாயின் அறுவடை செய்ய அதுவே தருணமாகும். வட நாட்டு ஜில்லாக்களில் இப்படிச் செய்வது வழக்கமாகும். இத் தருணத்தில் உமி இலேசாகவும் தான் ருசியுள்ளதாகவுமிருக்கும். தென்னாட்டில் புழுங்கலரிசியைத் தின்னும் தர்ப்பழக்கத்தால் தானியம் பழுத்தும் அதை நிதானித்து அறுப்பதினால் நெல் அதிகம் சேதாரமாய்ப் போகிறது.

அறுத்த அரிகளை களத்தில் மூன்றுதரம் அடித்து சேர்த்துப் பிணை அடித்து வைக்கோலை மாட்டுக்கு உணவாகும்படி போர் போட்டுவைப்பார்கள். பர்மா தேசத்தில் கால் நடைகளுக்குத் தீனிக்குக் குறைவில்லையாகையால் அந் நாட்டினர் கதிரை மாத்திரம் மேலாக அறுத்துக்கொண்டு தாளைத் தரையிலேயே உலரச் செய்து தீயிட்டெரித்து வயலுக்கு எருவாக்கிக் கொள்ளுவார்கள். வைக்கோலினால் காகிதம், கயிறு, பிரிமணை, தொப்பி முதலியன செய்யப்படும்.

பயிர் நோய்க்குப் பரிகாரம்

நன்செய்ப் பயிர் முளையெடுத்துப் பழுத்து நெல்லாகிறவரைக்கும் பல நோய்களினால் சேதப்பட முகாந்தரமுண்டு. முளையெடுக்-

குந் தருணத்தில் நத்தை முதலிய நீர்ப்பூச்சிகள் முளைகளை அடிக்கத் தொடங்கும். பெரிதாகி வளருங்காலத்திலும் வெட்டுக்கிளி வேர்பூச்சி முதலியவைகளினால் பயிர் நாசமாகும். பயிரில் பூச்சி விழுந்ததென்று தெரிந்தவுடன் அதில் தாளித்த கண்ணும்பைத் தூவினால் வெகுவாய் பூச்சிகள் மடிந்துபோம். பயிரில பூச்சிகள் அதிகரித்தால் அதற்கருகில் பள்ளங்கள் வெட்டி இரவில் அவ்விடத்தில் லாந்தர் விளக்குகளை எரிய விடுவதினால் வெளிச்சத்தை நாடியோடும் பூச்சிகள் சிறகுகள் தீய்ந்து பள்ளங்களில் விழுந்து மடியும். அதை மண்ணால் மூடுவதினால் நல்ல எருவும் கிடைக்கும். சில தேசங்களில் வெட்டுக்கிளிகள் கூட்டங் கூட்டமாக பயிர்மேல் விழுந்து பயிரை இருந்தவிடந் தெரியாமல் பாழாக்கி விடும். அப்போது வயலெங்கும் வெட்டுக்கிளி மயமாகவே இருக்கும்.

இந்நாட்டில் முக்கியமாக புல்லுருவியினால் பயிர் நாசப்படுகிறது. இது கண்ணுக்குப் புலப்படாமல் பயிரோடு முளைத்து வளரும். இப்படி நேரிடாமல் இருக்கும்படி விதையை முன்னரே மயில் துத்தம் சம்பந்தப்பட்ட நீரில் நனைத்து விதைப்பதுண்டு. இப்படி செய்வதற்கு விவரம் விதையைக் காக்கும் முறையில் சொல்லி இருக்கிறது. வரப்பெலிகளாலும் பயிருக்கும் தொந்திரவு நேரும். அவைகளிரண்டையும் கடித்தெடுத்துச்சென்று தம் வளைக்குள் சேர்க்கும்.

செய்கால் நிலங்கள் காட்டுக்கு அடுத்து இருக்குமாயின் கரடி மான் முதலிய காட்டு மிருகங்களினாலும் பயிர் சேதப்படும். அப்படிப்பட்ட இடங்களில் இரவில் ஆள் வயலிலிருந்து கொருப்பெரித்தக்கொண்டு இருப்பானையின் யாதொரு ஜந்துவும் நாடாது. சில சமயங்களில் தப்பட்டை தாம்பாள ஓசைகளினால் அவை வெருண்டு ஓடுவது முண்டு. கொக்கை நெல் வயலுக்கு வயித்தியனென்று சொல்லலாம். அது பயிரைத் தொடாமல் அதை அழிக்கும் நத்தை முதலிய சிறு பிராணிகளைத் தின்று நன்மை விளைவிக்கும்.

கதிர் தானியப் பயிர் வகைகள்

கதிர் தானியப் புன்செய்ப் பயிர்கள் பாடுபட்டுழைக்கும் ஏழைக்குடிகளுக்கு முக்கிய உணவு. அவற்றில் —

சோளம் — செஞ் சோளம், கருஞ் சோளம், வெண் சோளம், மஞ்சட் சோளம் என அது விளையும் நிலத்தின் குணத்துக்கேற்றபடி பலவகைப்படும். சோளப் பயிருக்குக் கொழுமையான களிமண் தரை மிகவும் அடுத்தது. இதைப் பயிரிடும் நிலத்தை ஆழமாகப் பலமுறையும் உழவேண்டும். தூற்றுப்போது காலடியில் விழுந்த சோளமணிகளைப் பாதுகாத்து முழத்துக்கொன்றாய் முளைக்கும்படி விதைக்கவேண்டும். சோளத்தட்டு மாட்டுக்குணவாகும். தினைக்கென்றே பயிரிடுஞ் சோளம் பூக்கும்போது அறுத்து விடப்படும். அது திரும்பவும் கிளைத்து 5,6 அறுப்புக்கும் வரும்.

மக்காச்சோளம் — அமெரிக்காவில் அபரிமிதமாக விளைவிக்கப்பட்டு காரன்ப்ளவர் (Corn flour) மாவாகக் கடைகளில் விற்கப்படுகிறது. கதிர் இருபுறமும் இலைக்கொன்றாய் விடும். தலையில் மலர்மட்டும் விரிந்து நிற்கும். கதிரின் மேல்தோல் காகிதம் செய்யவும் சருட்டு சுற்றவும் பயன்படும். இதன் பொரி பெரிது. அழகும் உருசியுமுள்ளது. இதை நமது நாட்டில் சுலபமாய்ப் பயிரிடலாகும்.

கேழ்வரகு — மைசூரிலும் தமிழ் நாடுகளிலும் விசேஷமாகப் பயிராகின்றது. இப் பயிர் குளிரும் பனியுமுள்ள தேசங்களுக்கடுத்தது. இதைப் பயிரிடத் தொடங்குவதுமுதல் உண்ண உணவாக்கிக்கொள்ளுமட்டும் படும் பாடு அதிகம். கேழ்வரகின் கூழ் குழந்தைகளுக்கு ஏற்ற உணவு; தட்டுமாட்டுக்குத் தகுந்த தீனி.

கம்பு — இலது மண்ணில் நன்றாய் விளையும். கம்பஞ் சோறு தேகத்திற்குக் குளிர்ச்சியான உணவு. கம்புவிளைந்த நிலம் பின் வரும் பயிருக்குப் புஷ்டி தரும். தட்டு கடினமானதால் மாட்டுக்கேற்ற உணவாக மாட்டாது.

கோதுமை — தேகத்திற்கு உஷ்ணமும் வலிவும் தரத்தக்க தானிய வகைகளில் முதற்றரமானது. இது நமது நாட்டிற் சரிவரப் பயிராகிறதில்லை. ஐரோப்பிய நாட்டிற்கே அடுத்தது. கோதுமை பலகாரங்களுக்கேற்ற பண்டம்.

சாமை, தினை, வரகு — முதலியன எவ்வகை நிலத்திலும் எங்கும் விளையக்கூடிய தாழ்ந்ததரமான அற்ப பயிர்கள்.

காய் தானியப் பயிர் வகைகள்

காய் தானியப் பருப்பு தினுசுகள் யாவும் தேகத்திற்கு வலிமை தரத்தக்கவை. கடலை, தவரை, கொள், உளுந்து, பயறு, காராமணி, மொச்சை முதலியவை காய்தானியப் பயிர் வகைகளிற் சேர்ந்தவைகளே.

கடலை — உரப்பான மண்ணில் தனிப்பயிராய் விளையும். கரிசல் மண்ணிலும் செழிப்பாய் விருத்தியாகும். கடலை கோதுமை போலவே பெரும்பாலும் வட நாட்டிற் பயிரிடப்படுகிறது. கடலைப்பருப்பும் கடலைமாவும் பதார்த்த வகைகளுக்கும், பலகாரங்களுக்கும் மிகவும் ஏற்றது. வங்காள நாட்டில் கடலை விஸ்தாரமாக விளைவதினால் அதை அவ்விடத்திற் குதிரைகளுக்கும் முக்கிய உணவாகின்றது.

துவரை — பயிர்களுடன் கலந்தாவது தனித்தாவது விளைக்கப்படுகிறது. துவரை மற்றக் காய் தானிய வகைகளெல்லாவற்றிலும் சிறந்தது. துவரம் பருப்பு அதி உருசியும் வலிவுமுள்ளதாகையால் சோற்றோடு கலந்துண்ணத் தக்கது. துவரம் பருப்புக்கும் நெய்க்கும் தொந்தம். துவரை மிலாறு வெடிமருந்துக் குபயோகப்படுகிறது. துவரம் பொட்டு பசு மாட்டுக்கு வைத்தால் பால் அதிகம் சுரக்கும். துவரை ஆறுமாதப் பயிர்.

கொள்—சாதாரணமாய் எங்கும் விளையக்கூடிய பயிர். இந்தப் பயிரால் குடித்தனக்காரனுக்கு அதிக ஆதாயம் உண்டாகிறதில்லை. ஆயினும் இது விளைந்த நிலம் வேறு வகைப் பயிர்களுக்கு ஊட்டங் கொடுக்கும். மேலும் இப்பயிர் பூக்குந் தருணத்தில் நிலத்திற்குப் பசுந்தாளெருவாகப் பயன்படும்படி மடித்து உழுதிடப்படுவது மூண்டு. கொள் குதிரைக்கேற்ற நல்லுணவு.

உளுந்து — தேகத்திற்கு மாமிசத்தைப்போல் வலிவைத் தரும் தானியம். உளுத்தம் பருப்பிற் கொழுமை யதிகம். உளுத்தம் பருப்புக்கும் நல்லெண்ணெய்க்கும் தொந்தம். உளுத்தந் தாள் மாடு தின்றால் கழியும், ஆகையால் அதை மிகுதியும் எருவுக்காகவே உபயோகிக்கிறார்கள்.

பச்சைபயறு, காராமணி, மோச்சை முதலியன் வெகுவாய்க் கதிர்தானியப் பயிர்களுடன் கலந்து விளைக்கப்படும். இவற்றின் பருப்பு மனிதனுக்கு மேலான வுணவு. செத்தையும், பொட்டும் மாடு தின்ன உதவும்.

தோட்டப் பயிர் வகைகள்

காய்கறிகள், கனிவகைகள், புஷ்பச் செடிகள் முதலிய பயிர்கள் தோட்டப் பயிர் எனப்படும்.

கத்திரி, மிளகாய் இவை சகல ஜனங்களுக்கும் எங்கிலும் பயன்படும். பண்டங்களாகையால் தேசமெங்கும் விஸ்தாரமாய் விளைவிக்கப்படும். இவை பெருநகரங்களிற் கொல்லைகளில் பயிரிடப்படுகின்றன. கத்திரி தக்கபடி பயிரிடப்படுமாயின் நல்ல லாபத்தைக் கொடுக்கும். மிளகாய் சமையலுக்கு வேண்டிய வஸ்து வாகையால் அதை விரும்பாதவர்களில்லை. மிளகாய் எந்தத் தேசத்திலும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகிறது. சீர்மைச் சிறு பச்சைமிளகாய் அதிக காரமுள்ளது. இச்செடிகள் வருஷக் கணக்கில் பட்டுப் போகாமல் வளரும். குடகு தேசத்து மிளகாய் காரமற்று பெருத்திருப்பதால் அது கத்திரிக்காயைப்போல் சமைத்துண்ணப்படுகிறது. மிளகாய்ப் பயிருக்குச் சாம்பல் நல்ல எரு. இதன் மிலாறு வேறுவகைப் பயிர்களுக்கு எருவாகும்.

வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவை கிழங்கைப்போல் மண்ணுக்குள் விருத்தியாகும் ஒருவகைக் காட்டுப் பூண்டு. காலக்கிரமத்தில் இதன் பிரயோஜனம் தெரியவந்தபடியால் மனிதருக்குப் பயன்படலாயிற்று. இக்காலத்தும் அந்தணரில் வைணவர் இவற்றை உபயோகிப்பதில்லை. இவை இயற்கையில் துர்க்கந்தமானவைகளே. ஆயினும் இவற்றின் பிரயோசனம் அதிகம். இவற்றின் சாரம் அதிக காரம். சமையலுக்கு வெங்காயம் மிகவும் பிரயோசனமுள்ளது. வெங்காயம் சேர்ந்த காய்கறிகள் அதிக உருசியாயிருக்கும்.

இஞ்சி, சுக்கு — இஞ்சி மணற்பாங்கான நிலத்தில் நீரை நன்றாய்க் கிரகித்து பயிராகும். இதற்கு நிழல் தரும் இடமே அடுத்தது. இந்த செடி பார்வைக்கு மஞ்சள் செடிபோலிருக்கும். இஞ்சி அரோசிகத்தை நீக்கி ஜீரணத்தைக் கொடுக்கும். இதைத் தேனில் ஊறவைத்துச் சாப்பிட்டால் தேகாரோக்கியத்தைக்கிடம். இது நல்ல வாசனையுள்ள பண்டம். முற்றின இஞ்சியை உலரவைத்தால் சுக்காகும்.

கிழங்குவகைப் பயிர்கள்

கிழங்குவகைப் பயிர்கள் மண்ணின் உட்புறத்தில் விருத்தியாகும். கிழங்குகள் தேகத்திற்கு பலமும் ஆரோக்கியமுமான உணவு. கிழங்குகள் களிப்பும் மணலும் கலந்த மண்ணில் நன்றாய்ப் பயிராகும். இப்பயிருக்கு ஜலாதாரமுள்ள மேட்டுப் பூமியே தகுதியானது.

கருணைக்கிழங்கு — உஷ்ணதேசத்தில் சாதாரணமாய் விளைகிறது. இதில் காராக்கருணை, காருங் கருணை யென் றிரண்டு வகையுண்டு. கருணை வியாதி யணுகவொட்டாமல் தேகத்தைப் போஷிக்கும். இப்பயிர் சித்திரையில் நடப்படும். கருணைக்கிழங்கு எத்தனை வருஷம் மண்ணுக்குள்ளிருந்தாலும் கெட்டுப்போகாமல் முளைக்கும். இப்பயிரை மாடு மேயாது. கிழங்கு தினுசுகளில் கருணை மிகவும் சிரேஷ்டமானது.

சேப்பங்கிழங்கு — சலசமூர்த்தியுள்ள இடங்களில் நன்றாய் விளையும். இது தேகத்திற்குக் குளிர்ச்சியும் வலிமையும் தரத்தக்கது. தாய்க்கிழங்கு வீதைக்கும் விரற் கிழங்கு சமையலுக்குதவும் உபயோகப்படும். சேப்பந் தண்டு பருப்போடு சேர்த்து சமைக்கலாம். புளி சேர்த்துங் கடையலாம்.

வள்ளிக்கிழங்கு — அதிக மாசூல் தரத்தக்க பயிர். இதில் வெள் வள்ளி, செவ் வள்ளி என இருவகையுண்டு. இவை தின்பதற்கு ருசியுள்ளவை. இந்தப் பயிரை மாடு மேயும். சிறுவள்ளிக் கிழங்கைமணலிற் புதைத்துவைத்தால் நாட்படக்கெடாமலிருக்கும். வெற்றிலைவள்ளி யென்னும் வேறுவகைக் கிழங்கு முண்டு.

ஆள்வள்ளிக் கிழங்குச் செடிகள் அழகாயிருக்கும். இதற்கு மாவள்ளி யென்னும் பெயர். இச் செடிகளின் வேரில் ஏராளமாய் கிழங்கு விடும். இக் கிழங்கை யிடித்து மாவாக்கி அதினின்றும் விலையுயர்ந்த டப்பாக்கி யரிசி செய்யப்படும். இது பத்தியக் கஞ்சிக்குபயோகம்.

உருளைக்கிழங்கு தன் உருவத்தால் அப்பெயரடைந்தது. இது குளிர் மிகுந்த பெங்களூர், நீலகிரி முதலிய நாடுகளில் பயிராகும். இக் கிழங்கு நமது நாட்டாருக்குச் சமீபகாலத்தில் தெரியவந்தது. இதைச் சமைத்து செய்யப்படும் பதார்த்தங்கள் வாய்க்கு ருசியாகவிருக்கும். இது மூன்றுமாதப் பயிர்.

கோட்டிக் கிழங்கு குளத்துச் சேற்றில் விளையும். தாமரை, அல்லி முதலிய படர் நீர்கொடிகளுக்கும் கிழங்குகளுண்டு. இவை யாவும் மனிதர் தின்ன உதவும்.

செங்கற்பட்டு,
8—9—1913

சி. வே. சண்முக முதலியார்,
செகண்டல் ஸ்கூல் மாஸ்டர்.

A LECTURE

சென்னை IV வது சர்க்கில் இனிஸ்பெக்டர்
ஸ்ரீமான் ராவ் பஹதூர் A. C. பிரணதார்த்திஹர ஐயரவர்கள்
1-8-13 ல் கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல்
உபாத்திமைச் சங்கத்தில் செய்த

உபந்நியாசத்தின் சுருக்கம்

சகோதரர்களே! நாம் வித்தியாசாலையாகிய கழனியில் கல்வி யென்னும் பயிரை வளர்த்து வருகிறோமல்லவா? நாம் யாவரும் உபாத்திமைத் தொழிலில் இருக்கிறோமல்லவா? உபாத்தியாயர் சிறந்தவரென்பதற்கு சாஸ்திரப்படி 'மாதர்த் தேவோபவ, பிதர்த் தேவோபவ, ஆசாரிய தேவோபவ' என்ற பிரமாணம் உண்டு. தாய் முதலில் சகல கஷ்டநஷ்டங்களையும் பட்டு, நம்மைக் காப்பாற்றுகிறாள்; பிறகு தந்தை யென்னும் உணர்ச்சியை யடைகிறோம். அதன் பிறகு ஆசாரியனுகிய உபாத்தியாயரைப் பணிந்து சகல கலைகளையும் கற்று தேர்ச்சியடைந்தபின் இவர்களே நமக்குக் கண்கண்ட தெய்வங்கள் என்று நம்புகிறோம். ஆதலால் உபாத்தியாயரும் இதில் ஒருவராக இருந்து கொண்டாடப்படுகிறாரல்லவா! ஆகையால் அப்படிப்பட்ட மாணாக்கர்களுக்கு நல்லறிவுக் காதாரமாகிய கல்வியை போதிக்கும் சக்தியை கடவுள் உங்களுக்குக் கொடுப்பாராக. நாம் சரியான உபாத்தியாயராக இருக்கவேண்டுமென்றால் நம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட பிள்ளைகளை நல்ல திறமையுடையவர்களாகச் செய்யவேண்டியதுடன் நாம் முக்கியமாய் இரண்டு யோக்யதைகளை அடைந்திருக்க வேண்டும். அதாவது:— (1) நீதி சம்பந்தமான யோக்யதை (2) ஞானசம்பந்தமான யோக்யதை இந்த இரண்டு யோக்யதையும் திறமையாகக் கற்று இவைகளைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க ஏற்பட்ட நாம் இந்த இரண்டு யோக்யதைகளிலேயே பிள்ளைகளைப் பழக்கவேண்டும். இப்படியின்றி ஒருதரம் துர்மார்க்கத்திலும் ஒருதரம் சன்மார்க்கத்திலும் போதித்தால் ஒரு கையில் விஷத்தையும் மற்றொரு கையில் அமிர்தத்தையும் சேர்த்துப் புகட்டுவதுபோலாகும். நாம் எதைப்பற்றி போதித்தாலும் அதைப்பற்றி நாம் நன்றாய் அறிந்திருக்கவேண்டும். அறிந்திராவிட்டால் நன்றாய் பயனுறபோதிக்க முடியாது.

(உதாரணம்) நிலக்கரியைப்பற்றி போதிக்கவேண்டுமானால் அதன் விஷயம் நன்றாய் தெரிந்திருந்தால் மாத்திரம் போதிக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது. எரிமலையைப்பற்றியும் கரிய மில வாயுவைப்பற்றியும் கிளிப்பிள்ளைகள்போல் நீங்கள் தெரிந்து-கொண்டு பிள்ளைகளுக்குச் சொன்னால் பிரயோஜனம் இல்லை. இப்படிக் கற்பிப்பது ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழி காட்டுவதுபோலாகும். ஆகையினால் நீங்கள் ஒவ்வொன்றையும் சரிவர உணர்ந்து பிரத்தியகூமாகப் போதிப்பீர்கள் என்று நான் பகவானே வேண்டுகிறேன். நீங்கள் இவ்விடத்தில் கற்றுக்கொள்-வது என்னவென்றால் பூகோளபாடம், இயற்கைப் பொருட்பாடம் முதலிய பாடங்களை எப்படி போதித்தால் பிள்ளைகள் சுலபமாய் அறிந்துகொள்ளுவார்களோ அம்மாதிரி போதிக்க இவ்விடத்தில் பயிலுகிறீர்கள். நீங்கள் போதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவென்றால், (1) அனுமானப் பிரமாணம் (2) உபமானப் பிர-மாணம் (3) பிரத்தியகூப் பிரமாணமாகக் கற்பிக்கலாம். அதாவது, (1) அனுமானப் பிரமாணமாவது தூரத்தில் புகை போகிறதைப் பார்த்து அதன்கீழ் நெருப்பு இருக்கிறதென்று நாமே நிச்சயித்துக் கொள்வது, (2) உபமானப் பிரமாணமாவது இதோ படம் என்றும் ஒன்றைப்போல் மற்றொன்றை ஒற்றுமையாகக் கூறுவது அதாவது அவனைப்போல் இவன் இருக்கிறான் என்பது, (3) பிரத்தியகூ பிரமாணமாவது வஸ்துவை கையில் கொண்டுவந்து நிரூபிப்பது அதாவது பட்டைப்பற்றி கற்பிக்கவேண்டுமானால் பிரத்தியகூமா-கக் கற்பிப்பதற்கு பட்டுப்புழுவின் கூடு அல்லது பட்டு வஸ்திர-மாவது அதன் நூலாவது இன்னும் அவை தின்னும் ஆகாரம் பாட-சாலையின் தோட்டத்திலிருந்தால் மிகவும் நலம். பட்டு நெசவு வேலை செய்யுமிடத்தில் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போய் காட்டலாம், அல்லது படத்தைக் கொண்டோ சித்திரம் வரைந்தோ அவை அடையும் மாறுபாடுகளைக் காட்டி போதிக்கலாம்.

இரும்பைப்பற்றி போதிக்க வேண்டுமென்றால் கூடுமானால் கருமான் வேலை செய்யுமிடத்திற்குப் பிள்ளைகளை அழைத்துக்-கொண்டு போய் அவற்றின் குணங்களையும் அதன் உபயோகம் அவைகளைச்செய்யும் விதம் முதலியவைகளை பிரத்தியகூப் பிரமாண மாகக் கொண்டு அறியச் செய்யலாம். ஒரு மண்பாண்டத்தைப்பற்றி யோசித்தாலும் குயவன் வேலை செய்யுமிடத்திற்கு அழைத்துக்-

கொண்டு போய் செய்யும் விதம் முதலியவைகளை போதிக்கலாம். கேழ்வரகு கம்பு சோளம் நெல் முதலியவைகளைப்பற்றிப் போதித்-தாலும் மேற்கண்ட மாதிரியே போதிக்கலாம். இம்மாதிரியாகப் போதிப்பதே சிறந்த போதனை முறையாகும், பிள்ளைகளுக்குப் போதிக்குங்காலத்தில் மிதமாகவும் இதமாகவும் போதிக்கவேண்டும்.

(உதாரணம்) ஒரு தாயானவள் குழந்தை பிறந்ததும் சில நாள் தன் பாலைக் கொடுத்தும், பிறகு பசுவின் பாலில் ஜலம் கலந்து இலேசாகச் செய்து வார்த்தும், பிறகு நெய்யரிசிக் கஞ்சி உண்-பித்து வயது முதிர்ந்தால் சாதம் புகட்டுவதுபோல உபாத்தியாய-ராகிய தாய்மார்கள் நாம் குழந்தைகளை முதலில் வீட்டில் எப்படி விளையாடினார்களோ அதுபோல் பாடசாலையில் விளையாடும்படி செய்திருந்து பிறகு தாய் எப்படி படிப்படியாக ஆகாரத்தை கல-த்திலிருந்து உண்ணும்படி செய்தாளோ அதுபோல் நாமும் கல்வி யென்ற ஆகாரத்தைப் படிப்படியாக வயதுக்குத் தக்கவாறும் வகுப்பிற்குத் தக்கவாறும் போதிக்க வேண்டும். இப்படியல்லாமல் ஒரே பாடத்தை ஒழிவின்றி அநேகமணி நேரம் கற்பித்துக் கழித்-துக் கொண்டும் அவர்களோடு கடூரமான வார்த்தை யாடிக்கொண்-டும் கற்பிக்க வொண்ணாது. எப்போதும் முகமலர்ச்சி யுடையவ ராகவே இருக்க வேண்டும், முக்கியமாகக் கல்வியின் உத்தேசம் என்ன வென்றால், பிள்ளைகளின் பெற்றோர் பல தொழில் செய்வார்-கள். அவரவர்கள் எந்தெந்த தொழிலைச் செய்கிறார்களோ அந்தந்த தொழிலுக்குத் தகுந்தபடி அவர்கள் பிள்ளைகளை விருத்தி செய்வதே யாம். நாம் போஜனம் புசிக்குங் காலத்தில் அளவுக்கு மிஞ்சிப் புசித்தால் தெவிட்டுகிறது. கல்வியோ அப்படிப்பட்ட தன்றி எவ் வளவு கற்றாலும் தெவிட்டாத கல்வியைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து அதன் பிரயோஜனம் இன்ன தென்பதையும் அறிவிக்கவேண்டும்.

ஒருவன் எல்லாம் படித்து விட்டேன் என்று ஒரு சுமை சுவடி படித்தாலும் அநேக நிகண்டு அந்தாதி முதலியவைகளை கெட்டுரு அல்லது குருட்டுப்பாடம் செய்தாலும் அது படிப்பன்று? பிள்ளைகள் எந்தெந்தத் தொழிலில் பிரவேசிக்கிறார்களோ அந்தந்தத் தொழிலில் அவர்களைத் திறமை யுடையவர்களாகச் செய்வதே உபாத்தியாயர்களுடைய முக்கிய கடமையாகும். இந்தப் போதனைப் பாடசாலையில் பயிலுகின்ற நீங்கள் ஒவ்வொன்றையும் நன்றாய் ஊன்றிப் பார்த்துப் போதனை முறையை நன்றாய்ப் பயின்று பிறகு உங்கள் மாணவர்களுக்குப் புத்திசாலித் தனமாய் கல்லறிவைப் புகட்டுவீர்களென்று நம்புகிறேன்.

S. மாணிக்க முதலியார்,
கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல்,
சைதாப்பேட்டை.

A CONVERSATION

ஒரு சம்பாஷணை

(முன் தொடர்ச்சி — பக்கம் 48.)

ருக்மிணி — கொண்டு போகாவிடில் என்ன ?

கல்யாணி — அப்படியல்ல, தேவாலயம், குழந்தைகளுள்ள வீடு, கர்ப்பஸ்திரீகள், இராஜாக்கள் இவர்களைக் காணப்போவதாயிருந்தால், வெறுங் கையோடு போகக்கூடாது. அவசியம் ஏதாவது கொண்டு போகவேண்டும்.

ருக்மிணி — இப்போது என்ன செய்யலாம், நாம் ஒன்றையும் கொண்டு வரவில்லையே ?

கல்யாணி — என்னிடம் ஓரணு இருக்கிறது, அதற்கு அதோ தெரிகிற கடையில் தேங்காய், வாழைப்பழம் வாங்கிக்கொள்வோம், வா ?

ஐயா செட்டியாரே ? இந்தத் தேங்காய்களின் விலை என்ன ?

செட்டியார் — அம்மா உமக்கு வேண்டியதைப் பார்த்து எடுத்துக்கொள்ளும். பின்பு பார்த்து விலை சொல்லுகிறேன்.

கல்யாணி — (ஒரு தேங்காயைக் கையிலெடுத்து) இந்தக் காயின் விலை என்ன ?

செட்டியார் — அம்மா ! அது 6 பை விலையாகிறது.

கல்யாணி — இருக்கட்டும், வாழைப்பழங்களை எவ்வாறு தருகிறீர் ?

செட்டியார் — காலணுவுக்கு 4 பழங்கள் வீதமாக விற்று வருகிறேன்.

கல்யாணி — நான்கு பழங்கள் மாத்திரம் கொடும். போதுமானது, ருக்மிணீ ! செட்டியாருக்கு நாம் கொடுக்கவேண்டிய பணம் எவ்வளவு ?

ருக்மிணி — தேங்காய் ஒன்றுக்கு அரையணுவும், வாழைப் பழங்களுக்காக 3 பையும் ஆக முக்காலணு வாகிறது.

கல்யாணி — மீதி நிற்கும் பணம் எவ்வளவு ?

ருக்மிணி — இன்னும் காலணு மீதியிருக்கும். அதை என்ன செய்கிறாய் ?

கல்யாணி — கற்பூரம் வாங்கிக்கொள்வோம் (செட்டியாரைப் பார்த்து) செட்டியாரே, காலணுவுக்குக் கற்பூரம் கொடுத்துவிடும். இதோ உமக்குக் கொடுக்கவேண்டிய ஓரணுவையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

ருக்மிணி — எல்லாம் வாங்கியாய்விட்டதே, இனி போவோம் வா. (கோவிலுக்குப் போகிறார்கள்.)

கல்யாணி — ருக்மிணீ ! கோவிலைச் சுற்றி பிரதக்ஷணம் செய்வோம்.

ருக்மிணி — இப்போது எங்கு செல்வோம் ?

கல்யாணி — இனி கோவிலுக்குள் சென்று கடவுளை தரிசிப்போம்.

ருக்மிணி — அதோ கோவிலுக்குள்ளே ஒரு பெரியவர் இருக்கிறாரே அவர் யார் ?

கல்யாணி — அவர் தான் ஸ்தானீகர்.

ருக்மிணி — கடவுள் இருக்கின்றார் என்றல்லவா சொன்னாய், ஒரு பெரிய மனிதரல்லவோ இருக்கிறார் ?

கல்யாணி — அவர் கடவுளை அர்ச்சிக்கிறவர். அவருக்குச் சமீபமாக முன்னிலையில் உருவமொன்று தெரிகிறதே அதுதான் நான் முன் சொல்லியபடி கடவுளின் ஓர் உருவம். இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு நில் ? கடவுளுக்கு நேர் எதிராக நிற்காதே.

ருக்மிணி — ஏன் எதிரில் நிற்க வேண்டாமென்று சொல்லுகிறாய், நின்றால் என்ன ? எவ்வாறு நிற்கவேண்டும்.

கல்யாணி — எதிரில் நின்று விட்டால் இன்னும் கடவுளைத் தரிசிக்க வருபவர்கள் உன்னுடைய முதுகைத் தான் பார்க்க நேரிடும். ஆனதால் சங்கிதி விட்டு நிற்க வேண்டும்.

ருக்மிணி — சரி அவ்வாறே நின்று கொண்டேன், நாம் கொண்டு வந்த தேங்காய் பழங்களை என்ன செய்வது ?

கல்யாணி — அவற்றை ஸ்தானீகரிடம் கொடு.

ருக்மிணி — (ஸ்தானீகரைப்பார்த்து) சுவாமீ, தயவு செய்து இவற்றை கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்,

ஸ்தானீகர் — அவற்றை இதோ இந்தத் தட்டில் வை.

ருக்மிணி — கல்யாணீ! நீ சொல்லியவாறு கொடுத்து விட்டேன். ஸ்தானீகர் அவற்றை எவ்வாறு அர்ப்பணம் செய்வார்.

கல்யாணி — தேங்காயை உடைத்து, தேங்காய், வாழைப்பழம் கடவுளின் முன்னிலையில் வைத்து நைவேத்தியம் செய்து, பிறகு கற்பூரதீபாராதனம் செய்வார், அவை யெல்லாம் ஆனபிறகு, அக்ஷதை, புஷ்பம், நைவேத்தியம் செய்த பிரசாதம் இவற்றை நமக்குத் தருவார்.

ருக்மிணி — சரி, சரி, அதோ நீ சொல்லியவாறே தேங்காயை உடைத்துவிட்டார். நைவேத்தியமும் நடந்துவிட்டது. தீபாராதனம் நடப்பதுதான் தடை.

கல்யாணி — தீபாராதனம் நடக்கிறது. மிகவும் பக்தி சிரத்தையுடன் கடவுளை வணங்குவோம்.

ஸ்தானீகர் — அக்ஷதை, புஷ்பம், பிரசாதம் இவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ருக்மிணி — கல்யாணீ! நாம் இவற்றை என்ன செய்வது?

கல்யாணி — அக்ஷதையை நெற்றியில் வைத்துக்கொள், புஷ்பத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு பிரசாதத்தை கையில் வைத்துக்கொள். அம்மனை தரிசிக்கப் போவோம். அதோ பார் குங்குமம் தருகிறார். வாங்கிக்கொண்டு அதையும் நெற்றியில் சாத்திக் கொள்.

ருக்மிணி — அம்மனையும் தரிசனம் செய்துகொண்டோம். பிறகு எங்கே செல்வோம்?

கல்யாணி — ருக்மிணீ? மணியும் 8 ஆய்விட்டது. வீட்டில் நம்முடைய தாய் தந்தையர்கள் தேடுவார்கள் அல்லவா! ஆகையால், வீட்டிற்குச் செல்வோம் வா.

P. S. GURU ROW,
Headmaster, Board Elementary School,
Ramayampatti.

A CONVERSATION

ஒரு சம்பாஷணை.

வாசுதேவன் — சுகுண சேஷமந்தானு? இவ்வூர்விட்டு நான் சென்று என்மாமன் கிராமத்துக்குப்போய் இன்றைக்கு ஆறுமாதமாயது, அவ்வூரிலிருந்த நாளெல்லாம் உன்னையேநினைத்துநினைத்துப் பிரிவாற்றுத்துயரமடைந்தேன். அவ்விடம் புறப்பட்டதும் உன்னையே முதலில் கண்டு பேசி விளையாடவேண்டுமென்னும் பேராவலுள்ளவனுய் நம்மூர்வந்து சேர்ந்ததும் உண்டுன்னைக்காணவந்தேன். விளையாடலாம் வா.

சுகுணன் — வாசுதேவா! நீயும் சேஷமந்தானே. உன்னை ஆறுமாதகாலமாய்க்காணுமல் எனக்கும் மனந்தாளாமற்றானிருந்தது. உன்னைக் கண்டதும் பசுவைக்கண்ட கன்றுபோலும், மழையைக்கண்ட பயிர்போலும், தாயைக்கண்ட சேயைப்போலும் மனம் பூரிக்கின்றேன்.

வாசுதேவன் — ரொம்ப சந்தோஷம், விளையாடலாம் வா இன்று ராஜாகாள்தானே.

சுகுணன் — இதென்ன கிழமை? இன்று வெள்ளிக்கிழமை ஆயிற்றே லீவுமுண்டோ?

வாசுதேவன் — நீ சுகுணனைச்சுதே-லீவில்லாவிட்டால் வீட்டிலு மிருப்பாயோ?

சுகுணன் — சரி, சரி, அப்படியா ஊகித்தனை? நீ கெட்டிக்காரன் உன் புத்தியை மெச்சினேன், இன்று லீவுதான். ஆனல் மணி இரண்டாகிறது. இன்றெதற்கு விடுமுறைதெரியுமோ?

வாசுதேவன் — எதற்குவிடுமுறை? நம்முடைய உபாத்தியாயர் காலை ஆறுமணி முதல் மாலை ஆறுமணி வரைக்கும் சாப்பாட்டு நேரத்திலும்கூட நம்மைச் சரியாய் வீட்டுக் கனுப்பாமல் மடக்கி வைப்பாரே? ஞாயிற்றுகிழமை, அமாவாசை, பௌர்ணமைக்குங் கூட லீவு விடமாட்டாரே அவர் ஏது இன்று லீவுவிட்டது?

சுகுணன் — இன்று ராஜாங்கத்தார் உத்திரவுபடிக்கு ஸ்கூலுக்கு விடுமுறை விட்டிருக்கிறார். இல்லாவிட்டால் விட்டிருக்கமாட்டார்.

வாசுதேவன் — சுகுணா, என்னவிசேஷம்? சென்ற வருஷம் கொண்டாடின ராஜாபிறந்த நாளோ? அல்லது டில்லி தர்பார் தின கொண்டாட்டமோ? சொல்லுவாய்.

சுகுணன்—நீ சொல்லிய இரண்டுமல்ல. இது வேறு விசேஷம்.

வாசுதேவன் — வேறு என்னதான் விசேஷம்? சொல்லமாட்டாயோ?

சுகுணன் — சென்ற வருஷத்தில் டில்லிமாநகரில் நமது மாட்சிமைதங்கிய ராஜப் பிரதிநிதியும் கவர்னர் ஜெனரலுமாகிய லார்டு ஹார்டிஞ்சுப் பிரபுவை டில்லிமாநகரில் முதல் சட்டநிரூபண சபை கூடுமுன் அவர் ஊர்வலம் வந்தபோது Bomb எனும் வெடிகுண்டினல் அவரைக்கொல்ல முயன்ற சமாச்சாரம் உனக்குத் தெரியாதோ?

வாசுதேவன் — என்ன? நம்முடைய கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்சு அவர்களையா சுடத்துணிந்தான்? அந்தோ-பரிதாபம்! மனிதனே மனிதனும் கொல்லத் துணிந்தனனே? உயிர்வதை செய்வது உய்யும் மாந்தர்க் கடாதென எறும்பு முதலான அற்பப் பிராணிகளையும் நாம் கொல்லுகின்றேமில்லை. 'அஹிம்ஸாபரமோதர்மஃ' என்றார் ஆன்றோர்களும். படுபாவி! நீயும் ஒரு ஜன்மமா? அதனினும், உன்னை மனிதஜன்மமென்பபோமோ? கொடும்பாவி! உனக்குக் கடவுள் அருள் அணுவேனும் காட்டுவாரா?

சுகுணன் — வாசுதேவா என்ன! நீ அற்ப மனிதன் ஒருவன் கொல்லப்பட்டதுபோல் சிந்திக்கின்றாய்?

வாசுதேவன்—சுகுணா, அவசரப்படவேண்டாம். என்மனதில் ஆற்றொணாத்துயரம் உண்டாயது. அதனல் நான் எண்ணும் எண்ணமெல்லாம் வெளிவரவில்லை. லார்டுஹார்டிஞ்சு பிரபு நமது காருண்ய ஐந்தாவது ஜியார்ஜ் மகாசக்ரவர்த்தியின் பிரதிநிதியல்லவா? "அரசன் உபாத்யாயன் தாய்தந்தை தம்மூன்றேதான்றல்" இவர்களைத் தொழுதெழல் வேண்டும் என்னும் பாடலை நாம்படிக்கவில்லையா? உலகத்திலுள்ள சர்வமனிதர்களினும், நம்மைபெற்று வளர்த்த தாய்தந்தையர்களினும், நம்முன் தோன்றிய தமையன் தனினும், நமக்கு ஞானோபதேசங்கள் செய்யும் குருவினினும் அரசனே சிறந்தவனென்று நாம் கற்கவில்லையா? அன்றியும் நம்முன்னோர்கள் தொன்றுதொட்டு அரசனையே தெய்வமாக மதித்து வருகின்றார்களன்றோ? அம்முன்னோர் மரபில் நாம் பிறக்கவில்லையா? ஸ்ரீராமபிரான் தனக்குரிய அரசச் செல்வத்தை விட்டுக் காட்டுக் கேகினபோது, நம்மூவர்கள் வீடும் வேண்டாம், வாசலும் வேண்டாம், நாடும் வேண்டாம் நகரமும் வேண்டாம் நம்மரசன் செல்லும் காடே நன்று நன்றென நினைத்து மனப்பூர்வமாய் அவ் விராமபிரானுடன் காட்டுக் கேகவில்லையா? இதென்ன கொடுமை? ராஜத்துரோகம் செய்யத் துணிந்த அப்பாவி எவனே? கொடும்பாவி! கருங்கல்லினும் கடிய மனதுடைய கடும்பாவி! என்ன நீங்கிழைத்தாய்! ஆ — உன்மனம் கல்லோ? நீ மிருகத்தினும் கொடிய மிருகமோ? மிருகமேனும் தனக்கு நன்மை செய்தோரைத் தொடாதே. நம தருமை கவர்னர் ஜெனரல் லார்டு ஹார்டிஞ்சு பிரபுவின் உயிரை வதைக்க எண்ணின உன்மனம் பாழாக! அவரை கொல்லுமாறு வெடிகுண்டு தொட்ட உன்கை உருவிலாமற்போக, சண்டாளா, பரமத்துரோகி, உனக்கு என்னகதி கிடைக்கும்?

சுகுணன் — வாசுதேவா! மனந்தடுமாறேல். அவர் அவ்விபத்தினின்றும் தப்பிவிட்டார், அது உனக்குத்தெரியாது போலும். நாலைந்து மாதம் கலியாயிருந்து தக்க சிகிச்சையினல் தேறிவிட்டார்.

வாசுதேவன் —சுகுணா: கல்லசெய்தி சொன்னாய். மகாசந்தோஷம். கனவிற் கண்ட புதையலை விடிந்ததும் கண்டால் எவ்வளவு பேரானந்த மடைவோமோ அவ்வளவு களிப்படைந்தேன், இச் செய்தியைக்கேட்டு நமது கவர்னர்ஜெனரல் லார்டுஹார்டிஞ்சு சீமான் எவ்வளவோ நமது இந்தியர்களுக்கு நன்மை செய்திருக்கிறார். அவராற்றின இந்தக்களுக்கு ராஜசட்ட நிரூபண சபையில் அதிகமாயிடம் கிடைத்திருக்கின்றது. நமதிந்தியர்களுக்கும் உத்தியோகத்தரையில் பெரும்பதவிகள் கிடைத்திருக்கின்றன. அவராற்றின நமது இந்தமா தேசம் மேன்மேலும் கல்விச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் ஓங்கி வளர்ந்து வருகின்றது. அவர் இவ்விபத்தினின்றும் தப்பினதற்கு நாம் கடவுளுக்கு அளவற்ற விசுவாசமுள்ளவர்களாய் இருத்தல்வேண்டும். இச்சமயம் என் மனக் குதூகலத்திலில் எனக்கும் தெரியாமல் சில தோத்திரப்பாக்கள் என் மனதில் தோன்றுகின்றன. இருவருமாய்ச் சேர்ந்து சொல்லுவோம்.

சுகுணன் — சரி. நேரமாகின்றது. ஹார்டிஞ்சு பிரபு உயிர் தப்பினநிமித்தம் அவர் ஜனனதினமாகிய இன்றைய தினத்தை

ஊரவர்கள் கொண்டாடப்போகிறார்கள். நாமிருவரும் தோத்திரப்-பாக்களைச் சொல்லிக்கொண்டே அவ்விடம் போவோம் வா. சுதர்-மனும் நீலகண்டனும் அதோவருகிறார்கள். அவர்களும் நம்முடன் பாடுவார்கள்.

ராகம். செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

வாசுதேவன் சுகுணன்—நீலகண்டன் சுதர்மன்

போற்றி - போற்றி - புங்கவனே - போற்றி - போற்றியே,
போற்றி - போற்றி - போற்றி - போற்றி பொற்றாள்போற்றியே

வாசுதேவன்—சுகுணன்

நாற்றிசையும் - நறுமலர்கள் - நாறிடும் - இன்று
பார்த்திபனர்டிங் - பிறந்த - கீர்த்திசேர் - நன்னாள் (போற்றி)

வாசுதேவன்—சுகுணன்

பிறப்பிலுயர் ஐந்தாம் ஜியார்ஜின் - பிரதி நிதியண்ணல்
வரப்பில்லாத வரங்கள் தந்தான் - மாகுணவள்ளல் (போற்றி)

மன்னுயிரைத்தன்னுயிர்போல் - உன்னும் மாதவன்
இன்னுயிரை இரையாக்காமல் - இனிது பேணினாய் (போற்றி)

நமதரசன் நலம் அருள - நாடியே தந்தான்
எமனினின்றும் அவரை விடுத்தாய் - எங்கள் ஜெகதீசா (போற்றி)

வெடிகுண்டென்னும் விபரீதத்தால் - வீழ்த்தமுயன்ற
கொடியோனவன்தன் கொடுமையதனைக்-குலைத்தாயீசனே (போற்)

அரசுசெய்யும் அண்ணலாகு - மார்டிங்கு மன்னன்
முரசொலியோ டெங்காளு - மகிழ்வுடன் வாழ்க (போற்றி)

P. PARTHASARATHY NAICKER, B. A., L. T.,
Sub-Assistant Inspector of Schools,
Tiruvannamalai Range.

OFFICE OF THE 21 MADRAS

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1913ஆம் செப்டெம்பர்மீ | மாதம் 4.

THE IMITATIONS

போலிப் பொருள்கள்

இக்காலத்தே போதனை முறைகளெல்லாம் மாறியிருக்கின்றன. அம்முறைகளெல்லாம் மிகச் சிறந்தவை யென்பதிற் சற்றும் சந்தேகமில்லை. ஆயினும் உபாத்தியாயர்களிற் பலர் அம்முறைகளின் தன்மையை யுணராது தம் மனம் போனவாறு திரிந்து அம்முறைகளைக் கெடுத்து வருகின்றனர். தொடர்முறைப் போதனை மிகவும் சிறந்திருக்கின்றது. அதனது சிறந்த தன்மையை உணராத உபாத்தியாயர்கள் பலர் அம்முறைக்குப் பாட்டுங் கூத்துமே ஏற்றவை யெனக் கருதி, எல்லாவற்றையும் பாடலாகவும் சம்பாஷணையாகவும் செய்து இடர்ப்படுவாராயினர்.

பாடல் என்பது இக்காலத்தே சர்வ சாதாரணமான விஷயம் என்று ஏற்பட்டுவிட்டது. செய்யுள் என்பதற்கு ஏற்பட்டுள்ள

அமைப்புக்களெல்லாம் அறவே ஒழிந்தன. எதனைகேமானையும் கிடையா. மிகுமிடமும் மிகாவிடமும் கவனிக்கவேண்டுவதில்லை. சொல்லின் சொரூபம் இன்னதென்றும் வேண்டா, அந்தோ! இந்தப் பாஷை இவ்வாறுங் கெடலாகுமா! செய்யுள் செய்ய விரும்பமுடையவர்கள் அதைப் பற்றிய முக்கிய விஷயங்களேயெனும் உணர்ந்து கொள்வது அவசியமன்றோ!

இனி, பாடங்களுக்கான போதனை முறை பல் வேறு வகைப்பட்டு விளங்குவது போலவே போதனைக்கு வேண்டிய உபகரணங்களும் பற்பலவாக வேண்டியுள்ளன. கணிதம், தாவரசாஸ்திரம், தேகதத்துவ சாஸ்திரம், பூகோள சாஸ்திரம் முதலிய பல் வேறு வகையான பாடங்களுக்குப் போதனைபகரணங்கள் பற்பல வேண்டியுள்ளன. அவற்றை யெல்லாம் உபாத்தியாயர்கள் தக்கவாறு உபயோகப்படுத்தவேண்டும்.

இத்தகைய உபகரணங்களில் பல பொருந்தாதவைகளாகவும் இருக்கின்றன. கணிதத்திற்கு வேண்டிய போலி நாணயங்கள், தேகதத்துவ சாஸ்திரத்திற்கு வேண்டிய மாதிரி உடலுறுப்புக்கள் ஆகிய இவற்றைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். உதாரணப் பொருள்களெல்லாம் எவ்வகையினும் உபமேயப் பொருள்களுக்கு ஒற்றுமை யுடையனவாக இருக்கவேண்டும். அவ்வாறான பொருள் கிடைப்பது அருமை. அருமையான விடத்து போலிப் பொருள்களைக் காட்டுவது சில விஷயங்களில் தீமைபயப்பதாகும். உலமையெல்லாம் ஒரு புடையொப்புமை உடையதன்றோவெனின், அந்த முறையைக்கொண்டு பாலர்களுக்குப் போதிப்பது பொருந்தாதாம். போலிநாணயங்கள் உருவத்திலும் நிறத்திலும் உண்மையான நாணயங்களை ஒத்திருக்கின்றன; நிறையில் ஒத்திருப்பதில்லை. அத்தகைய போலி நாணயங்களை ஆரம்பத்தில் பிள்ளைகள் பார்த்து எடுத்து வழங்குவதில், உண்மையான நாணயங்களின் நிறை தெரியாது இடர்ப்படுவர். முடிவில் பொய் நாணயங்களுக்கும் உண்மையான நாணயங்களுக்கும் வேற்றுமை யுணராது மயங்குதற்கும் இடமுண்டாம். மற்றும் தேகசாஸ்திரத்திற்கு வேண்டிய உதாரணங்களுக்குப் போலியுருக்களைக் காட்டுதலும் தீமையே. ஏனெனின், உடலின் உறுப்பில் கடினமயானவை இவை யென்றும், மிருதுவானவை இவை யென்றும் உணராது இடர்ப்படுவர். இவ்வாறு உண்மையுணராது மயங்குதற்குரிய

காட்டி போதிப்பதினும் அவற்றைக்காட்டாமல், அவற்றின் பாடங்களைக்காட்டிப் போதிப்பதே சாலச்சிறப்பாகும். இத்தகைய திருஷ்டாந்தங்களுக்குக் களிமண் உருச்செய்யச் சொல்வதும் தீமைபயப்பதாகும். படமாயின் உருவம் மாத்திரம் கண்ணுக்குப் புலப்படும். மற்றத் தன்மைகள் தெரியாமையால், உண்மைப் பொருள்களைக் கண்டபோது பிள்ளைகள் உணர்ச்சி மாறுபடாமல் உள்ளதைத் தெரிந்துகொள்ள அநுகூலம் உண்டாகும். உண்மையுறப் போதிக்கும் விருப்பமுடைய உபாத்தியாயர்கள் உண்மைப் பொருள்களைக் கொண்டே போதிப்பது நலமாகும். பத்திராதிபர்.

PRACTICAL GEOMETRY

கேஷத்திர கணிதம்.

(முன் தொடர்ச்சி பக்கம் 263 of 1912.)

முதல் வகுப்பு.

புள்ளி, நிற்கிறகோடு, படுக்கிறகோடு, சாய்கிறகோடு.

உபகரணங்கள் — காகிதம், பென்சில், ரூல்தடி, கற்பலகை ஊசி, பிரம்பு, கரும்பலகை.

I. புள்ளி —

(a) உபாத்தியாயர் பிள்ளைகளைத் தங்கள் கற்பலகைகளிலாவது காகிதத்திலாவது ரூல் தடியைக்கொண்டு இரண்டு கோர்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டும்படிப் போடச் செய்க.

(b) உபாத்தியாயரும் இம்மாதிரி கரும்பலகையில் வரைக.

(c) பிறகு இவ்விரண்டு கோடுகளுக்கும் பொதுவாக உள்ள இடம் எவ்வளவு என்பதை மாணக்கர்களைக் கவனிக்கச் செய்து இவ் விரண்டிற்கும் பொதுவாய் எவ்வளவு இடம் இருக்கிறதோ அம்மாதிரி பொட்டு ஒன்று தனிமையாய் கற்பலகைகளில் வரையச் செய்வதுடன் உபாத்தியாயரும் கரும்பலகையில் ஒரு பொட்டு வரைக.

(d) இவ்விதமான பொட்டுகளுக்கு நீளம் அகலம் யாதொன்றும் நிர்ணயிக்க முடியாதென்பதை மாணக்கர்களிடமிருந்து வருவிக்க.

(e) பிறகு மறுபடியும் காகிதத்தில் ஊசியினால் ஒரு குத்து குத்தி, இந்தப் பொட்டை மாணாக்கர்களை கவனித்துப் பார்க்கச் செய்து இதற்கும் அகலம் நீளம் யாதொன்றும் நிர்ணயிக்க முடியாது என்பதை வருவிக்க.

(f) உடனே இவ்விதப் பொட்டுகளைத் தான் புள்ளி என்று அழைப்பது என்பதை போதிக்க.

II. நிற்கிற கோடு —

(a) உபாத்தியாயர் ரூல் தடியை எடுத்து மேஜையின்மீது அல்லது பூமியின்மீது வைத்து நேராய்ப் பிடித்துக்கொண்டு ரூல் தடியானது இப்போது நேராய் நிற்பதுபோ லிருக்கிறது என்பதை மாணாக்கர்களின் மொழியால் வருவிக்க.

(b) ரூல்தடி நிற்கிற மாதிரி கரும்பலகையில் பிள்ளைகளையே ஒரு கோடு வரையச் செய்க.

(c) உடனே வேறு ஒரு மாணாக்கனை வருவித்து அவன் மொழியால் கரும்பலகையில் வரைந்திருக்கும் கோடு நேராய் நிற்கிறதுபோ லிருக்கிறது என்பதை வருவிக்க.

(d) இம்மாதிரி கோடுகளுக்குத்தான் நிற்கிறகோடு எனப் பெயர் என்பதைப் போதிக்க.

(e) பிறகு பிள்ளைகளைத் தங்கள் தங்கள் கற்பலகைகளில் நிற்கிற கோடுகள் வரைந்து காண்பிக்கச் செய்க.

III. படுக்கிற கோடுகள் —

(a) உபாத்தியாயர் பிரம்பு ஒன்றை எடுத்து மேஜையின்மீது அல்லது பூமியின்மீது சாதாரணமாய்ப் போட்டு, இப்பிரம்பு படுத்திருப்பதாகத் தோன்றுகிறது என்பதை மாணாக்கர்களின் மொழியால் வருவிக்க.

(b) பிறகு ஒரு மாணாக்கனை பிரம்பு படுத்திருக்கும் மாதிரி உருவம் வரையச் செய்து, மற்றொருவனிடமிருந்து இந்தக் கோடு படுத்திருப்பதுபோ லிருக்கிறது என்பதை வருவிக்க.

(c) இவ்விதமான கோட்டிற்குத்தான் படுக்கிற கோடு என்பது என்று போதிக்க.

(d) உடனே, ரூல் தடியினால் ஒரு கோடு கரும்பலகையில் வரைந்து இதுவும் படுத்திருப்பதாகத் தோன்றுவதால் இவ்விதக் கோட்டிற்கும் படுக்கிற கோடு எனச் சொல்லலாம் என்பதை நிரூபிக்க.

(e) பிறகு, மாணாக்கர் தங்கள் கற்பலகைகளில் ஒரு படுக்கிற கோடு வரையச் செய்க.

IV. சாய்கிற கோடு —

(a) உபாத்தியாயர் ரூல் தடியை மேஜையின்மீது வைத்து சாய்த்துப் பிடித்துக்கொண்டு அதிருக்கும் மாதிரி மாணாக்கர்களிட மிருந்து வருவிக்க.

(b) ரூல் தடியை வைத்திருக்கும் மாதிரி ஓர் உருவம் கரும்பலகையில் வரையச் செய்து, அது சாய்ந்திருக்கிறது என்பதை மாணாக்கரிட மிருந்து வருவிக்க.

(c) இவ்விதம் சாய்வான கோட்டிற்குத்தான் சாய்கிறகோடு எனச் சொல்வது என்பதை சொல்லி, மாணாக்கர்களை தங்கள் கரும்பலகையில் வரையச் செய்க.

அப்பியாசம் —

1. "ட" என்னும் எழுத்தில் எத்தனை கோடுகளிருக்கின்றன. அவைகளின் பெயர் என்ன?

2. எ. பி-வி. டி. என்ற இரண்டு கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டுவதால் புதிதாய் என்ன உண்டாகும்? புள்ளி.

3. ஒரு குச்சியானது பூமியிலிருந்து சாய்ந்தாற்போல் நட்டிருக்கிறது. உருவம் வரைக?

4. ஒரு நேரான படுக்குங் கோடு வரைந்து அதன் இரு ஓரங்களிலும் இரண்டு சாய்ந்த கோடுகள் வரைக?

5. பூமியில் இரண்டு கல்தூண்கள் நேராக நடப்பட்டு அதன்மேல் ஒரு கல்லைப் போட்டு ரோட்டுகளிலிருக்கும் மாதிரி உருவம் வரைக?



சமதார நேர்கோடுகள், கோணம், நேர்கோணம்.

உபகரணங்கள் — சட்டப்பலகை அல்லது சிலேட்டின் சட்டம், கரும்பலகை, காகிதத்தண்டு, கற்பலகை.

I. சமதூர நேர்கோடு —

(a) உபாத்தியாயர் சிலேட்டுச் சட்டத்தைக் காண்பித்து அதற்கு நான்கு ஓரங்களிருக்கின்றன வென்பதை வருவிக்க.

(b) அந்த ஓரங்கள் எல்லாம் நேராக இருக்கின்றன என்பதையும் வருவிக்க.

(c) அதன் இரண்டு எதிர் ஓரங்களைப்போல் கரும்பலகையில் மாணாக்கர்களை கோடுகள் வரையச் செய்து அவர்களிட மிருந்தே அவ்விரு கோடுகளுக்கும் இடையிலுள்ள ஸ்தலம் (Space) ஸமமாய் இருக்கும் என்பதை வருவிக்க.

(d) இவ்விதம் ஒரே அளவாய் வரையப்பட்டிருக்கும் கோடுகளுக்குத்தான் ஒன்றுக்கொன்று சமதூரத்திலுள்ள நேர் கோடுகள் என்பதை வருவிக்க முயன்று, தெரியாவிடின் போதிக்க.

(e) பிறகு, மாணாக்கர்களைத் தங்கள் கற்பலகைகளில் சமதூர நேர்கோடுகள் வரைந்து காண்பிக்கச் செய்க.

II. கோணம் —

(a) உபாத்தியாயர் கரும்பலகையில் 'ட' என்னும் எழுத்தை வரைந்து, இதில் இரண்டு நேர்கோடு இருக்கிறது என்பதை வருவிக்க.

(b) பள்ளிக்கூடத்தின் அறைக்கு நான்கு சுவர்களிருக்கின்றன வென்றும் அவைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கும் என்பதையும் வருவிக்க.

(c) உடனே, பள்ளிக்கூட அறையின் ஒரு மூலையில் ஒரு வஸ்துவை வைத்து, அது மூலையிலிருக்கிறது என்பதை வருவிக்க.

(d) பிறகு, இரண்டு சுவர்கள் சேரும் மாதிரி உருவம் கரும்பலகையில் வரையச் செய்க.

(e) உடனே, 'ட' என்னும் எழுத்தில் எத்தனை மூலையிருக்கிறதென்றும், வகுப்பு அறையில் எத்தனை மூலைகளிருக்கின்றன என்பதையும் வினவி வருவிக்க.

(f) இவ்விதம் மூலை யென்று சொல்லக்கூடியதற்குத்தான் கோணம் என்பது என்று போதிக்க.

(g) கடைசியில், மாணாக்கர்களை பரீக்ஷார்த்தமாக கோணம் உண்டாகும் வடிவம் வரையச்செய்து பார்க்க.

III. நேர்கோணம் —

(a) உபாத்தியாயர் நேரான ஓரங்களையுடைய ஒரு கடிதத்தை ஒவ்வொரு மாணாக்கனுக்கும் கொடுத்து உபாத்தியாயரும் ஒன்று வைத்துக்கொள்க.

(b) அதன் நான்கு ஓரங்களையும் மாணாக்கனை காண்பிக்கச் செய்து இதன் இடது வலது ஓரம் ஒன்றின்மேல் ஒன்று பொருந்தும்படி மடிக்கச் செய்க.

(c) பிறகு, அதை பிரித்துப் பார்க்கச் செய்து அதில் புதிதாக நேரான கோடு ஒன்று தெரிகிறது என்பதை வருவித்து, மறுபடியும் அதன் மேல்ஓரம், கீழ்ஓரம் இவ்விரண்டையும் ஒன்றின்மேல் ஒன்று பொருந்தும்படி மடிக்கச் செய்க.

(d) மறுபடியும், பிரித்துப் பார்க்கச் செய்து அதில் இன்னொரு நேரான கோடு உண்டாயிருக்கின்றன என்பதையும் வருவிக்க.

(e) இவ்விரண்டு கோடுகளும் ஒன்றோடொன்று சேரும் இடத்தில் இரண்டு கோணங்கள் உண்டாயிருக்கின்றன என்பதையும் வருவித்து அவ்விரண்டும் ஒரே அளவு என்பதை நிரூபிக்க.

(f) பிறகு, இக்கோணமானது ஒரு நிற்குங் கோடும், ஒரு படுக்குங் கோடும் சேர்வதாலானது என்பதையும் வருவிக்க.

(g) இவ்விதம் உண்டாகும் கோணத்திற்குத்தான் நேர்கோணம் என்று சொல்வது என்பதைப் போதிக்க.

(h) இதற்கு நிதர்சனமாக, பள்ளிக்கூட அறையின் கதவு, சரும்பலகை இவைகளைக்கொண்டும் நிரூபிக்கலாம்.

(i) உடனே காகிதத்தில் காணப்படும் மாதிரி உபாத்தியாயர் கரும்பலகையில் வரைந்து மாணாக்கர்களையும் தங்கள் கற்பலகைகளில் வரையச் செய்யவும்.

அப்பியாசம் —

Ans. ———— ————

1. ஒரு ரஸ்தாவில் இரண்டு தண்டவாளக் கம்பிகள் ஒன்றுக் கொன்று சமதூரத்தில் போடப்படிருக்கிறது ஏனென் வரைக?

2. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மூன்று கப்பல்கள் புறப்படுகின்றன. அதில் ஒன்று வடக்காயும், ஒன்று தெற்காயும், ஒன்று மேற்காயும் போகின்றன. பிளான் வரைய எத்தனை கோணங்கள் உண்டாகின்றன?

Ans.  ; 3 கோணம்.

3. 'ப' என்னும் எழுத்தில் எத்தனை கோணங்களிருக்கின்றன? அவை எப்பேர்ப்பட்டவை?

Ans. 2 நேர் கோணம்.

4. ஒரு ஸ்கூல் கட்டடத்தில் எத்தனை கோணங்கள் உண்டாகின்றன?

Ans.  நேர்கோணம்.

5. ஒரு நிற்குங் கோடும் ஒரு படுக்குங் கோடும் சிலுவையைப்போல் இழு இதில் உள்ள கோணங்கள் எத்தனை? எப்பேர்ப்பட்டவை?

6. ஒருவன் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு நேர் வடக்காகக் கொஞ்சம் தூரம் போய், பிறகு நேர் கிழக்காகத் திரும்புகிறான். இதற்கு உருவம் வரைந்து, எத்தனை கோணங்கள் உண்டாகின்றன? எப்பேர்ப்பட்ட கோணம்?

Ans. ; 1 நேர்கோணம்.

7. ஒருவன் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு நேர்மேற்கே கொஞ்சம் தூரம் போய் பிறகு நேர் வடக்காகத் திரும்பிப்போகிறான். மறுபடியும் நேர்கிழக்காகத் திரும்பிப்போகிறான். பிளான் வரைக. எத்தனை நேர்கோணங்கள் உண்டாகின்றன.

Ans. ; 2 நேர்கோணம்.

8. ஒரு காகிதத்தின் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்கு ஒரு கோடு இழு. இது என்ன விதமான கோடு? Ans. சாய்ந்த கோடு.

9. ஏ. பி. என்கிற படுக்கிற கோடு கிழி. பி. யிலிருந்து நேர் கோணம் உண்டாகும்படி இன்னொரு கோடு கிழி. இரண்டாவது கோடு என்ன விதமான கோடு.

Ans.  ; நிற்குங் கோடு.

G. NARAYANASWAMI IYER,
II Assistant P. Section The State Training School,
Pudukottah.

BIOLOGY

ஜீவசாஸ்திரம்

(118 வது பக்கத் தொடர்ச்சி.)

நாம் இப்பிரபஞ்ச சிருஷ்டியில் சேதனம் அசேதனம் என இருவித பேதங்களைக் காண்கிறோம். சேதனங்களுக்கு ஜீவன்களென்றும், அசேதனங்களுக்கு நிர்ஜீவன்களென்றும் பெயர்.

சேதனங்களைக் குறித்துச் சொல்லும் சாஸ்திரத்திற்கு ஜீவ சாஸ்திரமென்று பெயர். ஜீவன், பிராணன் என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கின்றவைகள். ஒவ்வொரு ஜீவபதார்த்தமும் ஜடபதார்த்தமான தேகத்தோடு கலந்து வியாபித்திருக்குமேயல்லது ஜடத்தை விட்டு ஸ்வாதீனமாய் காணக்கூடாது. ஆகையால் ஜீவசாஸ்திரத்தில் சரீர மூலமாய் காணப்படும் ஜீவன்களைக் குறித்துச் சொல்லப்படுமே யல்லது தேகத்தைவிட்டு ஜீவனைக் காணமுடியாதாகையால் அதைமட்டும் இதில் விவரிக்க முடியாது.

ஜீவன் என்பவன் வேறொருவனுண்டா, அல்லது ஸர்வேந்திரிய வியாபார ஸமூஹமே ஜீவனு, மரணந்தத்தில் ஜீவன் என்னவாகிறான் என்னும் விஷயங்களெல்லாம் காணமுடியாதாகையால் அவைகளோடு ஜீவ சாஸ்திரத்திற்கு ஒன்றும் வேலையில்லை. தத்துவ சாஸ்திரமே அவைகளைக் குறித்துப் போதிக்கும்.

நம் இந்திரியங்களுக்குக் காணப்படும் சேதனங்களின் சரீர நிர்ணயங்களையும் (Morphology), இந்திரிய வியாபாரங்களையும் (Physiology) ஜீவன்களின் சரீரத்தைக் குறித்த மனோவிகார பேதங்களையும் ஜீவன்களில் ஏற்படுகிற உட்பிரிவுகளையும் ஜீவன்களுக்குள்ள சம்பந்தங்களையும் கண்டு கொள்வதே ஜீவசாஸ்திர விஷயங்களாம்.

இந்த சாஸ்திரத்தை அப்பியசிப்பவர்கள் முதன் முதலில் சேதனங்களுக்கும் அசேதனங்களுக்குமுள்ள பேதத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

அசேதனங்களிட மில்லாத கீழ்க்குறித்த தருமங்கள் சேதனங்களிடமுண்டு.

(1) சரீர நிர்மாணம் — சாதாரணமாய் சரீரத்தை ஒரு யந்திரத்திற்கு ஒப்பிடலாம். இந்த சாஸ்திரத்தில் சரீர மென்றால் கேவல

மானவ சரீரமல்ல. சூக்ஷ்மதர்சனி (Microscope)யின் சகாயத்தாலல்லாது காணக்கூடாத அவ்வளவு சிறிய அணுமாத்திரையாய் விளங்கும் விகாரிணி (Amœba) என்னும் ஜீவன் முதல் சமஸ்த ஜீவர்களுக்கும் ராஜாவான மனிதர் வரையிலுள்ள கணக்கில்லாத ஜீவர்களுடைய சரீரத்திற்கும் இந்த சாஸ்திரத்தில் சரீரமென்று பெயர். விருக்ஷங்களும் ஜீவன்களே யாகையால் அவைகளின் அவயவ நிர்மாணங்களுக்கும் சரீரமென்றே பெயர். இத்தகைய பிரதி சரீரமும் யந்திரத்தைப் போன்றது.

கடியாரம், பஞ்சு மிஷின், தணிதைக்கும் மிஷின் முதலான யந்திரங்களைப் படிப்பவர்கள் பார்த்திருப்பார்கள். இவ்வியந்திரங்களில் என்ன இருக்கின்றன. அனேக சிறிய சக்கரங்களும் பெரிய சக்கரங்களும் இருசுகளும், வேறு சில அவயவங்களும் உடையதாய் இதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரயோசனார்த்தம் நியமிக்கப்பட்டு அதது ஒவ்வொரு வேலை செய்துகொண்டிருக்கிறதாகக் காணப்படுகிறது. அவ்விதமாகவே ஒவ்வொரு சரீரத்திலும் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் கபாலம் ஹிருதயம் ஞான நாடிகள் வயிறு குடல் முதலிய அவயவங்களில் யாவுமோ சிலவோ அமைந்து தம் வியாபாரத்தைச் செய்துகொண்டிருக்கும்.

யந்திரத்தின் அவயவங்கள் எவ்வளவு குறைவாயிருக்கின்றனவோ அவ்வளவும் அதன் வேலை குறைவாயிருக்கும். அதிக அவயவங்களுள்ளவை அதிக வேலை செய்யும். இதற்கு உதாரணமாய் கடியாரத்தை வைத்துக்கொள்வோம்.

நிமிஷம், மணி இவைகளைத் தெரிவிக்கும் கடியாரத்தில் சில சக்கரங்கள் மட்டும் இருக்கும். அதோடு வினாடியையும் காட்டுவதில் இன்னொரு சக்கரம் அதிகமாயிருக்கும், அதைவிட அதிக சக்கரமுள்ளதுதான் மணியடிக்கும். தேதி, வாரம், மாதம் இவைகளையும் காண்பிக்கும் கடியாரம் மற்ற கடியாரத்தைவிட அதிக சக்கரத்தையும் சமத்காரநிர்மாணத்தையும் உடையதாயிருக்கும், இப்படியே ஜீவர்கள் விஷயத்திலும் அறியவேண்டும்.

பிராணி கோடியில் ராஜாவென்று சொல்லத்தகும் மனிதன் சரீரத்தில் அவயவ உறுப்புகள் அதிக சமத்காரத்தோடும் அமைக்கப்பட்டன. அதில் இதர பிராணிகளைக் காட்டிலும் எத்தனையோ

அவயவங்கள் உள்ளும் புறமும் அதிகமிருக்கின்றன. அதினால் மானவ சரீர வியாபாரங்கள் இதர ஜந்துக்களைக்காட்டிலும் அதிகமாயும் உயர்ந்த யோக்கியதையும் உபயோகமும் உடையதாயும் இருக்கும். அவயவ நிர்மாணத்தை யனுசரித்தே மனிதர்களிடம் வாக்கு புத்தி மேதை முதலான விசேஷங்களிருக்கின்றன. நாம் கீழ்த்தர ஜீவஜாதிகளில் சிலவற்றைக் காணும்போது அவைகளுக்கு இந்திரிய வியாபார ரசனங்களும் ஞானமும் குறைந்ததுபோல் காணப்பட்டாலும் மிகுந்த அணுவிலும் அணுப்பிரமாணமான (Amœba) தண்ணீரிலிருக்கும் ஒரு சிறு புழுவின் சரீரத்தை பூதக்கண்ணடியில் பார்க்கும்போது அதற்கும் ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5. இவைகளின் வியாபாரங்கள் யாவும் ஒரேதுவக் இந்திரியமாத்திரம் செய்வதாய் காணப்படும். அதினால் அதன் வியாபாரங்களும் ஞானமும் குறைந்திருக்கும். இப்படியே மிகுந்த கீழ்த்தர ஜீவராசி முதல் உயர்தர ஜீவன்வரையில் அவயவ ரசனபிவிருத்தியும் ஞான விருத்தியும் காணப்படும்.

கேவலம் ஜடபதார்த்தத்தில் இந்த சரீர நிர்மாண விசித்திரமிராது. இரும்பையாவது கல்லையாவது பார்க்கும்போது அதில் பரமாணுக்க ளெல்லாம் சேர்ந்து ஒரு மொத்தாகார மானது போல் காணுமேயல்லது அதில் சிருஷ்டிக்குட்பட்ட ஒரு சிநஷ்டியை வேறு சிருஷ்டியாய் மாற்றும் யந்திர நிர்மாணம் போன்ற நிர்ணயங்கள் தோன்ரு. இதுவே சேதனசேதனங்களுக்குள்ள முக்கிய பேதம்.

இப்படியே யந்திரங்களுக்கும் ஜீவர்களுக்கும் ஒத்துப்பார்க்கும் போது சாதாரண யந்திரங்களுக்கும் ஜீவசரீரங்களுக்கும் ஒரு பேதமுமில்லை யென்று படிப்பவர்கள் நினைப்பார்களோ என்னவோ. ஆனால் இவைகளுக்கு ஒற்றுமையுள்ளது போலவே பேதங்களுமுண்டு. நாம் காணும் யந்திரங்கள் நடப்பதற்கு வெளிப்படையான சாமர்த்தியம் வேண்டும். கடியாரத்தில் சக்கரங்கள் நடப்பதற்கு ஸ்பிரிங்கு வேண்டும். எஞ்சின் நடப்பதற்கு ரோவி வேண்டும். இந்த யந்திரத்திலுள்ள எந்தப் பாகம் கெட்டுப் போனலும் யந்திரம் கெட்டுப்போகும். கெட்டுப் போன அந்தப் பாகத்தைச் செவ்வைப் படுத்திக்கொள்ளும் சக்தி அந்த யந்திரத்திலில்லை. இவ்வியந்திரங்கள் எவ்வளவு விசித்திர சிருஷ்டியைச் சேர்ந்ததானலும் தன்னைப் போன்ற இரண்டாவது யந்திரத்தை சிருஷ்டித்துக் கொள்ளமுடியாது.

ஜீவர்களென்னும் யந்திரத்திற்குத் தங்கள் வியாபாரங்களை செய்து கொள்ளும் சாமர்த்தியம் சுயமாய் உண்டு. அது இதர பதார்த்தங்கள் மூலமாய் அவைகளுக்கு உண்டாக அவசியமில்லை. இதில் கீல் நரம்பு முதலிய பிசகினாலும் அதை சரிப்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியம் இந்தச் சரீர யந்திரத்திற்கு உண்டு. இன்னும் தம்போன்ற சரீரத்தை உண்டு பண்ணிக்கொள்ளும் சாமர்த்தியமுமுண்டு. இதுவே அவ்விரண்டு யந்திரங்களுக்கு மூள்ள வித்தியாசம்.

இப்படி ஜடபதார்த்தங்களுக்கும் சேதனபதார்த்தங்களுக்கு மூள்ள ஒரு பேதம் காண்பித்து அசேதனங்களுக்கு இல்லாததும் சேதனங்களுக்கு உள்ளதுமான சாதாரண தருமங்களைக்கூறுவாம்.

(இன்னும் வரும்.)

P. V. DORASAWMI AIYANGAR.

ARITHMETICAL CURIOSITIES

9. 'NINE.' 9.

கணித விநோதங்கள்

'ஒன்பது'

ஒன்பது என்பது 'ஒன்று ஒழிந்த பத்து' என்னும் கருத்தைப் பொருத்தும் இருமொழித் தொடராலான ஒரு மொழி. 'ஒன்று' எனுஞ் சொல் ஒன் எனவும், 'பத்து' எனுஞ் சொல் பது எனவும் முறையே கடைக் குறையாகவும் இடைக் குறையாகவும் சிதைந்து ஒன்பது எனுஞ்சொல்லைப் பிறப்பித்தன. 'ஒன்று ஒழிந்த பத்து'— இம் மூன்று வார்த்தைகளால் நிகழ்ந்த வாக்கியம் விரைந்து உச்சரிக்குந் தன்மையால் காலக் கிரமத்தில் (ஒன்று..... பத்து, அதுவே) ஒன்பது என நிகழ்வதாயிற்று. இனி இதனடியில் ஒன்பது என்னும் இலக்கத்தாலான சில கணித விநோதங்களைக் காட்டுவோம்.

ஒன்பது எத்தனைமுறை எழுதிக் காட்டினாலும் அக்கூட்டுத் தொகையிலுள்ள இலக்கங்களின் கூட்டுத் தொகையும் ஒன்பதாகவே வரும்.

9+9 ... ... = 18 இதுவே 1+8 = 9.
9+9+9 ... ... = 27 இதுவே 2+7 = 9.
9+9+9+9 ... ... = 36 இதுவே 3+6 = 9.
9+9+9+9+9 ... ... = 45 இதுவே 4+5 = 9.
9+9+9+9+9+9 ... ... = 54 இதுவே 5+4 = 9.
9+9+9+9+9+9+9 ... = 63 இதுவே 6+3 = 9.
9+9+9+9+9+9+9+9 ... = 72 இதுவே 7+2 = 9.
9+9+9+9+9+9+9+9+9 = 81 இதுவே 8+1 = 9.
9+9+9+9+9+9+9+9+9+9 = 90 இதுவே 9+0 = 9.

இப்படியே இன்னமும் மேலும் மேலும் கூட்டிப் பார்த்தாலும் ஒன்பதே வரும் இனி அதைச் சுருக்கமாகப் பெருக்கிக் காட்டுவோம். (பெருக்கல் கூட்டலின் சுருக்கமேயாம்.)

9 × 11 = 99 இதுவே 9 + 9 = 18 இதுவே 1 + 8 = 9.
9 × 12 = 108 இதுவே 1 + 0 + 8 ... ... = 9.
9 × 13 = 117 இதுவே 1 + 1 + 7 ... = 9.
9 × 14 = 126 இதுவே 1 + 2 + 6 ... ... = 9.
9 × 15 = 135 இதுவே 1 + 3 + 5 ... = 9.
9 × 16 = 144 இதுவே 1 + 4 + 4 ... ... = 9.
9 × 17 = 153 இதுவே 1 + 5 + 3 ... = 9.
9 × 18 = 162 இதுவே 1 + 6 + 2 ... ... = 9.
9 × 19 = 171 இதுவே 1 + 7 + 1 ... = 9.
9 × 20 = 180 இதுவே 1 + 8 + 0 ... — = 9.

இனி ஒன்பதைத் தொடர்ந்த கீழ் இன எண்களை ஒன்பதால் பெருக்கி 7, 6, 5 முதலிய இலக்கங்களை முறையே அப்பெருக்குத் தொகையோடு கூட்டினால் விடை முழுதும் பல எட்டுகளாக வருகிற கணித விநோதத்தைக் காண்க —

9 × 9 + 7 = ... 88
98 × 9 + 6 = ... 888
987 × 9 + 5 = ... 8888
9876 × 9 + 4 = ... 88888
98765 × 9 + 3 = ... 888888
987654 × 9 + 2 = ... 8888888
9876543 × 9 + 1 = ... 88888888
98765432 × 9 + 0 = ... 888888888

இனி ஒன்பதை அதனை அடுத்துள்ள 8 என்னும் எண்ணை மாத்திரம் சேர்க்கி, மற்ற எண்களை முறையே ஒன்று முதல் ஒன்பது

வரையில் வரிசையாக எழுதி ஒன்பதினுலும், அவ்வொன்பதின் பெருக்குத் தொகைகளாகிய 18, 27, 36 முதலிய இலக்கங்களா லும் பெருக்கினுல் பல ஒன்றுகளும், இரண்டுகளும், மூன்றுகளும் முறையே வற்படுகிற கணித விநோதம் காண்க—

I, 23, 45, 67'9 × 9 = II, II, II, III.
I, 23, 45, 67'9 × 18 = 22, 22, 22, 222.
I, 23, 45, 67'9 × 27 = 33, 33, 33, 333.
I, 23, 45, 67'9 × 36 = 44, 44, 44, 444.
I, 23, 45, 67'9 × 45 = 55, 55, 55, 555.
I, 23, 45, 67'9 × 54 = 66, 66, 66, 666.
I, 23, 45, 67,9 × 63 = 77, 77, 77, 777.
I, 23, 45, 67'9 × 72 = 88, 88, 88, 888.
I, 23, 45, 67'9 × 81 = 99, 99, 99, 999.

செங்கற்பட்டு,
20—9—1913

சி. வே. சண்முக முதலியார்,
செகுனல் ஸ்கூல் மாஸ்டர்.

மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதியும், இந்தியாகவர் னர் ஜெனரலுமாகிய லார்டு ஹார்டிங் பிரபுவின் பிறந்தநாள் கொண்டாட்டக் கும்மி

ராகம்-புன்னகவராளி-தாளம் ரூபகம்

கும்மியடி பெண்கள் கும்மியடி யின்று - கூடிக்களித்துக் கும்மியடி நம்மையாளும் ஆர்டிங்குபிறந்த — நாளில் கும்மியடியுங்கடி-நல்ல சுவீள கும்மியடியுங்கடி.

மன்னன் ஜார்ஜவர் மகிழ்நேசன்
மகிதலம் புகழ்மாசிலன்
முன்னேர் காலத்து முத்தமிழ்வாணர்கள்
முதியோரிவரைப்பாடினர்காண். (கும்மி)

பாலும் பழமும் மிகவினிதாமதைப்
பார்க்கினும் தித்திப்பவர் வாய்ச்சொல்
நாவோ ஆயிரம் நவில்இதணை
நாடுநகரம் தேசமெல்லாம். (கும்மி)

இந்துமாதேசத்தை யிதமாய் ஆளவே
எண்ணிடும் புண்ணியசீலரிவர்
தந்தேபாக்யங்கள் தரணி மாந்தர்க்கு
தற்காத்தருளும் தண்கொடையோர். (கும்மி)

ஆறுங்குளமும் நீராகப்பாயும்
அகிலமெல்லாம் பூ மணமுறவே
ஆறுவளமும் அண்ணலவர் ஆளுகை
அருள் புரிவதை நோக்குங்கடி. (கும்மி)

மாற்றூர் எல்லாம் மயங்குவார் நம்
மன்னர்ஜியார்ஜ மகிழ்ந்திடுவர்
சீற்றமேகொண்டு சீறியெழுந்திடும்
சிங்கங்கள் பதுங்கும் பாருங்கடி. (கும்மி)

ஆளும் அரசரும் வாழுங்குடிகளும்
ஆர்த்து மகிழ்ந்திட மன்னரையே
நாளும் எவரும் வாழ்த்தவே டெல்லியில்
நன்முடிசூட்டினர் பாருங்கடி. (கும்மி)

ஆளும் அரசரும் வாழுங்குடிகளும்
ஆர்த்து மகிழ்ந்திடமன்னரையே
நாளும் எவரும் வாழ்த்தவே டெல்லியில்
நன்முடி சூட்டினர் பாருங்கடி. (கும்மி)

பூர்வீகநகர அத்தினபுரியில்
போர்மன்னர் பாண்டவராதியர்கள்
பேரோடாண்டனர் ஆதலினலங்கு
பெருமையாய் ஆளவேநாடினராம். (கும்மி)

இந்துக்கள் நம்மையே நாடிலாநேசரென்
றெண்ணியே யிந்தனர் பல்லரங்கள்
சிந்தையில் ஒருவன் ஆர்டிங்கைத் தீர்க்கவே
தில்லியில்பலனின்று தீரங்கொண்டான். (கும்மி)

பாவியொருவன் பார்த்தீபன் தன்னையே
பார்த்து மேசமயம் காத்தானும்
பாதகமாமொரு *பாம்பென்னும் வெடியால்
பட்டிடப்பார்த்தான் பலனின்று. (கும்மி)

பாவியவள் செய்த பாதக * பாம்புமே
பார்த்தீபனுர்டிங்கை மாய்க்காமல்
பார்மீதெவரும் பல்லாண்டு சொல்லவே
பறந்தசே யோர்புறம் பாலிகைகாள். (கும்மி)

சீறும் வெடிகுண்டின் கூரியபாகங்கள்
சீமான் அவரின் மேலேதைக்க
சீர்சாலவரும் சின்னுள் சுகங்கெட்டு
சீராய்த்தேறினுர் பாருங்கடி. (கும்மி)

களித்தார்யாவரும் கூடினேம் களிப்பால்
காந்தாரம் பாடியே கொண்டாட
காணுத்தாளிணைக்கத்தனும் ஆர்டிங்கைக்
காத்தருள்கவென் றுங் கண்மணிபோல். (கும்மி)

* Bomb

P. PARTHASARATHY NAICKER, B. A., L. T.,
Sub-Assistant Inspector of Schools,
Tiruvannamalai Range.

OBJECT LESSONS AND NATURE STUDY

SYLLABUS

இயற்கைப் பொருட் பாடம்

INFANT CLASS

பாலர் வகுப்பு

I. உருவங்கள் —

1. கோடுகள் — நேர்க்கோடுகள், வளைந்த கோடுகள், மிகவும் கோணலான கோடுகள், சிறு குச்சி, ஈர்க்கு இவற்றால் இவ்வகைகளை நன்கு விளக்கி, பிள்ளைகள் அவ்விதமான கோடுகளைப் பலகையில் வரையச் செய்க.

பெஞ்சுகளின் ஓரங்கள், நாற்காலிக் காலைச் சுற்றி வளைத்த இரும்புக் கம்பிகளின் ஓரங்கள் இவைகளைக் காட்டி விளக்க. இவை போன்ற மற்ற உதாரணங்களைப் பிள்ளைகளிட மிருந்து வருவிக்க (சுவர், புஸ்தகம், பலகை, நாணயம் இவற்றின் ஓரங்கள்.)

நேர்க்கோடு வளைந்த கோடு மிகவும் கோணலான கோடு.

2. கோடுகள் — செங்குத்துக் கோடுகள். சாய்ந்த கோடுகள். படுத்த கோடுகள். ரூல்கழி, பென்சில், சிலேட்டு, புஸ்தகம், இவற்றால் விளக்க.

பிள்ளைகள் இவ்விதக் கோடுகளை பலகையில் போடச் சொல்லவும்.

3. சதுரம் (Square), நீளம் அதிகமான சதுரம் (Oblong)— கரும் பலகையில் இவைகளை வரைந்து, பிள்ளைகளைப் பார்த்து எழுதச் சொல்லவும். களிமண், குச்சி, கடிதம் மடித்தல் முதலிய வற்றால் விளக்க இவ்வுருவங்களுள்ள பொருள்களைப் பிள்ளைகளை சொல்லச் செய்க.

4. வட்டம் (Circle) — வட்டமான அட்டை, வளையம் குச்சி இவற்றால் விளக்க.

க. ப. வில் ஒரு வட்டம் வரைந்து, பிள்ளைகள் அதைப் பார்த்து, இரண்டு பென்சில் நூல் இவற்றால் சிலேட்டில் வரையச் சொல்லவும்.

பிள்ளைகளிடம் இவ்வுருவமுள்ள பொருள்களை வருவிக்க, (நாணயம், தட்டு, பத்தான் முதலியன.)

5. வளையம் (Ring) — ஒரு மோதிரம், வளைய அட்டை (Cardboard Ring), இவற்றைக் காட்டி, உள் ஓரம், வெளி ஓரம் ஆக இரண்டு ஓரங்களிருப்பதை விளக்க.

க. ப. வில் வரைந்து, பிள்ளைகளையும் வரையச் செய்க.

6. பந்து (Ball) — நாணயம் (Coin), பந்து இவற்றில் வித்தியாசங்களை விளக்க.

i. நாணயம் ஓரத்தில் மாத்திரம் ஓடும். பந்து எப்படி வைத்தாலும் ஓடும்.

ii. நாணயத்திற்கு 2 தட்டைப் பக்கங்களும், ஒரு வட்டமான பக்கமும் உண்டு.

பந்து ஒரே வட்டமானது. ஒரு கம்பியை இரண்டைச் சுற்றிலும் சுற்றிக்காட்டி, உருவத்தை விளக்கி, இவை போன்ற பொருள்களை வருவிக்க — கோலி, நார்த்தம் பழம், எலுமிச்சம் பழம், உருளைக்கிழங்கு முதலியவை.

ஒரு எலுமிச்சம் பழத்தைச் சரிபாதியாய் அறுத்து, ஒவ்வொரு பாதி உருண்டைக்கும், பந்துபோல் வட்டமான ஒரு பக்கமும் தட்டையான ஒரு பக்கமும் உண்டென்பதை விளக்க.

7. முக்கோணம் (Triangle) — முன்போலவே விளக்கி, க. ப. வில் முக்கோணங்கள் வரைந்து, பிள்ளைகளைப் பார்த்து வரையச் செய்க.

II. வர்ணங்கள் (Colours) —

வெள்ளை, சிவப்பு, நீலம், கறுப்பு, மஞ்சள், பச்சை — இவைகளை முதலிலிருந்து இரண்டிரண்டாய் எடுத்துக்கொண்டு, பந்துகள், தணித்துண்டுகள், கடிதத்துண்டுகள் இவற்றில் விளக்க.

புஸ்தகங்களின் அட்டை, பிள்ளைகளின் உடை இவைகளை காட்டி, இவ்வர்ணங்களுள்ள பொருள்களை பிள்ளைகளிடமிருந்து வருவிக்க.

III. தொடுதல் (Touching) —

i. கெட்டி, மிருது — (பொருள்களை வெட்டி, அழுத்தி, நீறி இரண்டு தன்மையையும், வாழைக்காய், பழம், களிமண், பென்சில், ஈணயம், சோப்பு, இவற்றைக் கொண்டு விளக்க.)

2. மழமழப்பானவை, சொர சொரப்பானவை செங்கல், சிலேட்டு, அனேக வகை பலகைகள் இவைகளைக் கொண்டு விளக்கிக் காட்டவும்.

3. பாரமானவை, லேசானவை, நெட்டி, கோலி, இரும்புப் பந்து, ஈணயம், அட்டை இவற்றில் பிள்ளைகளுக்கு விவரிக்க.

IV. ருசி (Taste) —

i. திக்திப்பு, புளிப்பு — (கரும்பு, வெல்லம், சர்க்கரை, மாங்காய், நாரத்தை — காய், பழம் — முதலியவற்றில் விளக்க.)

2. புளிப்பு, உப்பு, கரப்பு — எலுமிச்சை, உப்பு, வேப்பிலை இவற்றில் விளக்க.

V. சாதாரணப் பொருள்கள் —

பெட்டி, பெஞ்சி, மேஜை, நாற்காலி, சட்டி, பருத்தி அல்லது கம்பளித்துணி இவைகளைக் கொண்டு, எவற்றில் செய்யப்பட்டவை, அவற்றின் குணம், உருவம், அளவு, பாகங்கள், உபயோகங்கள் முதலியவற்றை வருவிக்க.

கடிதப் பெட்டி செய்யவும், களிமண்ணால் அனேக வகைப் பொருள்கள் செய்யவும், பனை ஓலையால் பாய் முதலியவை முடையவும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவும்.

VI. சாதாரணக் கருவிகள் —

1. களிமண் — பூமியிலிருந்து அகப்படுகிறது. சுட்ட, சுடாத செங்கற்கள் — களிமண்ணை ஈரமாயிருக்கையில் நன்றாய்ப் பிசைந்து, சட்டி, பானை, செங்கல் முதலியவை செய்யலாம் — (களிமண்ணால் பிள்ளைகளைச் செய்யச் சொல்லவும்.) சுட்டால் இவை கெட்டியாய் விடும்.

2. தண்ணீர் உபயோகங்கள் — ஓடும், தவறினால் தானே தானே கீழே விழும்.

எங்கிருந்து கிடைக்கிறது? — ஊற்றுகள், ஆறுகள், மழை, மேகம் இவைகளால் என்பதை விளக்க.

3. நெருப்பு — எவ்வகைப் பொருள்கள் எரியும்? — அடுப்புக்கு நேரே உயரப் புகை — (சிறு குச்சிகள், இலைகள், கரி முதலியவை எரியும்.)

கரி, சாம்பல் — கரி மறுபடியும் எரியும், நெருப்பு எப்படி உண்டு பண்ணுகிறது?

4. பருத்தி — செடியிலிருந்தும், மரத்திலிருந்தும் உண்டாகிறது. சில வகை நூல் வேஷ்டிகளுக்கும், வேறு சில தலையணை மெத்தைகளுக்கும் உபயோகப்படும்.

நூல் நூற்றல் — நெய்தல் (கூடிய வரையில் விளக்கிக் காட்ட) தறியிலிருந்து, ஒரு நூலை எடுத்துக் காட்டு.

5. கம்பளி மயிர் — கம்பளி எதினால் செய்யப் படுகிறது? நாட்டுக் கம்பளியைக் காட்டி, அதில் ஒரு இழையை எடுத்து, முறுக்கைப் பிரித்து, கம்பளி மயிரைக் காட்டவும்.

சட்டை, துணி முதலியவற்றிற்கு பருத்தியை விட, கம்பளி மயிர் ஏன் மேலானது?

6. ஆணி — எதால் செய்யப்படுகிறது. மரத்தோடு ஒப்பிடுக.

இரும்புக் கம்பி — ஒரு பருமனுள்ள இரும்புக் கம்பியையும் நூலையும் ஒப்பிட்டுப் பார்க்க.

இருப்பாணி — அதே பருமனுள்ள குச்சியோடு ஒப்புபிடுக. ஆகவே, இரும்பின் உபயோகங்களை பிள்ளைகளிடம் வருவிக்க.

பெட்டி, மேஜை இவைகளின் பாகங்களைச் சேர்க்க உபயோகப் படுகிறது. அனேக இரும்புப் பொருள்களைக் கொண்டு விவரிக்க.

7. தென்னை நார் — எப்படி எடுக்கப்படுகிறது - உபயோகம் கயிறு திரிக்கப்படுகிறது. (நாரைக் கயிறு திரித்துக் கட்டவும்.) நாரை நன்றாய் கொட்டாப்புளியால் அடித்து சோற்றை எடுத்து, கயிறு திரித்து, தாம்புக்கயிறு உறி முதலியவை செய்யலாம்.

VII. சாதாரணப் பிராணிகள் —

மாடு, குதிரை, கழுதை, ஆடு, பன்றி, கோழி, காக்கை, - உருவம்; அளவு, உடம்பின் பாகங்கள், அநேகவித பிராணிகளின் வித்தியாசங்கள், ஆகாரம், பழக்க வழக்கங்கள், உபயோகங்கள் (உயிரோடிருக்கையில், செத்த பிறகு) இவற்றை பொம்மைகள், படங்கள், க. ப. வில் சித்திரங்கள், நிஜபிராணிகள் இவைகளைக் கொண்டு விளக்க. பிள்ளைகளும் சித்திரங்கள் வரைக.

பிராணிகளின் உடம்பின் பாகங்கள் — கொம்பு, தோல் இறகுகள், மூக்கு, பற்கள், மயிர் முதலியவை.

VIII. பிராணிகளின் வகைகள் —

நடப்பன, பறப்பன, ஊறுவன, நீந்துவன, இவற்றின் உறுப்புகள், முக்கிய வித்தியாசங்கள் - (நிஜபிராணிகள், பொம்மைகள், படங்கள், க. ப. வில் சித்திரங்கள் இவைகளால் விளக்க.)

IX. மரஞ் செடிகள —

1. மரம் — பாகங்கள் - உபயோகங்கள். அடிமரம், கிளை, இலை, பூ, காய், பழம், விதை, வேர் இவைகளைக் காட்டி விளக்க.

2. விதை பாகங்கள் — வேர்ப்பாகம், தண்டாகும் பாகம், இலைபாகம், விதைப்பாகம்.

3. பூ பாகங்கள் — காம்பு, பச்சையிலைகள், நிறமுள்ள இலைகள்,

4. பழம் — மாம்பழம் தோல், சதை, ஓடு.

5. புளியமரம் - பாகங்கள் - ஓடு - சதை - கொட்டை.

6. வாழைமரம் - பாகங்களும், உபயோகங்களும்.

7. மா, புளி, தென்னை, ஆல், பருத்தி, இலவு, கரும்பு, நெற்பயிர் — பாகங்கள், உபயோகங்கள்.

X. கட்டடம் —

1. ஸ்கூல்ரூம் — தரை, சுவர்கள், கூரை, கதவுகள், ஜன்னல்கள், அவற்றின் அமைப்பு இவற்றை விளக்க.

(க. ப. வில்) ரூமின் பிளான் போட்டு, பிள்ளைகளைப் போடச் சொல்லவும்.

2. வீடு — திண்ணை, வாசற்படி, நடை, முற்றம், தாழ்வாரம் கூடம் சமையல் உள் அறை, கொல்லை, திண்ணை சுவர், கதவு, ஜன்னல் இவற்றை பிள்ளைகளிடமிருந்து வருவிக்க. (கடிதம், அட்டை, களிமண் இவற்றால் பிள்ளைகளை வீடு செய்யச் சொல்லவும்.

XI. பிளான் (Plan.) —

பெட்டி, ரூம், ஸ்கூல், மைக்கூடு, தோட்டம், ஸ்கூல் இருக்கும் வீதி முதலியவற்றிற்கு பிளான் வரையப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவும், ஈர்க்குக் குச்சிகளால் அப்படியே செய்யச் செய்யவும்.

XII. திசைகள் —

சூரிய உதயம், அஸ்தமனம் இவற்றால் விளக்க.

ஸ்கூல், பிள்ளைகளின் வீடு, கோயில் முதலியவற்றிற்கு நாற்புறமும் உள்ளவைகளைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்க.

XIII. பகல், இரவு —

சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே போவதாகக் காணப் படுகிறது.

பூமிதான் சுற்றுகிறது என்பதை நாம் ரயில் வண்டியில் போகையில், சுற்று மரங்கள் எதிராக ஓடுவதாகக் காணப்படுவதிலிருந்து விளக்கிக் காட்டு.

தீபத்தை நடுவில் வைத்து, பம்பரத்தை சுற்றிக் காட்டி, வெளிச்சம், இருட்டு உண்டாவதை விளக்கிக் காட்டி, அதுபோலவே பகல் இரவு என்பதை தெளிவாகச் செய்க.

XIV. மனித சரீரம் —

பாகங்கள் — தலை, கண், காது, வாய், மூக்கு, கை, கால், முதலியவை —

இவை தோல், மாமிசம், ரத்தம், எலும்பு முதலானவைகளால் ஆனவை என்பதை விளக்கிக் காட்டு.

(மற்ற வகுப்புகளுக்குப் பின்னல் வரும்.)

S. SUBRAHMANIA IYER,
Trained F. A.,
Assistant, Municipal High School,
Mayavaram.

MORAL TEACHING

நன்னடத்தையைப் போதிக்கும் விதம்.

1. நன்னடத்தையின் அவசியம் — பூமியில் ஜனித்தது முதல் மரிப்பதுவரை மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாக இருக்க வேண்டியது நன்னடத்தை; இது இல்லாவிடில் எது இருந்தும் பிரயோஜனமில்லை. இந் நன்மார்க்கத்தைக் கொண்டுதான் இம்மை மறுமைப்பயன்களை ஒவ்வொருவரும் அடைய வேண்டும். நன்னடத்தை யில்லாத எந்தத் தேகமும் வீண் என்பது அனுபவத்தினாலும், சாஸ்திர புராணங்களினாலும் தெரிந்ததே (பிள்ளைகள் பாடசாலைகளிலுள்ள நியதிகளினாலும், கதை முதலானவைகளாலும் நன்மையின் பயனை அறிந்து கொள்ளும்படி செய்யவேண்டும்.)

2. நன்னடத்தைகள் — கொலை, களவு, பொய் முதலான மகாபாதகங்களும், அவற்றுட் பிரிவினையாகிய இதர துர்குணங்களும், மனச்சாட்சிக்கும் தெய்வ நீதிக்கும் சரியல்லாதவையுமானவைகள் நீங்கலாக மற்றவைகளே நீதியாம் (மனச்சாட்சி யென்பதைப் பிள்ளைகளுக்குள் நடக்கும் சில துஷ்டச் செய்கைகளையும் அப்போது நெஞ்சம் பயங்கரமடைவது முதலியவைகளையும் சொல்லித் தெரியச் செய்யவேண்டும்.

3. கற்பிக்கப் பருவமும், இடமும் — (1) மிகச் சிறிய இளம் பிராயமாய் கல்வி கற்பிக்க ஆரம்பிக்குமுன் வீட்டிலே தாயாரும் தகப்பனாரும் கற்பிக்கலாம்.

(2) பாடசாலையில் பிரவேசித்ததுமுதல் ஆசிரியர் போதிக்கலாம்.

(3) பகுத்தறிவு வந்தபின் சுயஞானமும், பிறஞானமும் கைப்பற்றி நல்வழியில் நடக்கவேண்டும்.

(தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்) என்றுற் போல பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பு முன் தாய் தந்தையர்கள் தங்களாலியன்றவரை நற்பழக்கம் பயிற்றியே வரவேண்டும்.

4. கற்பிக்கும் வழி — (1) பிள்ளைகளின் படிப்புக்கு எப்படி உபாத்தியாயர் பொறுப்பாளியோ அப்படியே நடத்தைக்கும் பொறுப்பாளி யென்று நினைத்துச் சந்தர்ப்பம் நேரிட்ட போதெல்லாம் நடத்தை கற்பிக்க வேண்டும்.

(2) பெரியவர்கள் அனுபவத்தையும் சாஸ்திரங்களையும் உதாரணமாய்ச் சொல்வது போலப் பிள்ளைகளுக்குக் கதைகளினால் திருஷ்டாந்தப் படுத்தவேண்டும்.

(3) பிள்ளைகள் ஒன்றுக்கொன்று விரோதப்பட்டு முறையிடும் போது அதை நன்றாய் விசாரிக்க வேண்டும். சௌகரியத்தையும் சிரமத்தையும் கவனிக்கக் கூடாது.

(4) 'கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக' என்று சொல்லியிருக்கிற நீதிக்கிணங்கவே பிள்ளைகளைப் புத்திசாலியாக்க முயலவேண்டும்.

(5) பிள்ளைகள் பெரியவர்களாகும்போது சீர் திருத்த மடைந்து விடுவார்க ளென்று நினையாமல் ஆகியந்தமாய் அவர்களைக் கவனித்துக் கொண்டே வர வேண்டும்.

(6) ஒரு பையன் யாதாமோர் பிசகு செய்து விட்டானெனில் அவனை விசாரித்துப் புத்தி போதிக்கிறதிலிருந்தே, மற்றவர்கள் நன்மார்க்க மடைய வழியாயிருக்க வேண்டும்.

(7) பால போதனை முறை (கிண்டர்க்கார்ட்டன் மெதட்) யையனுசரித்தும் சகல நற்செய்கை, நற்குணங்களுக்கும் உபாத்தியாயர் மாதிரியா யிருக்கவேண்டும்.

5. கன்னடத்தை கற்பிப்பதின் நோக்கம் — (1) தெய்வபக்தி, ராஜபக்தி, குருபக்தி, பெற்றோருக்குரிய கடமைகள் தெரிந்து நடக்க ஹேதுவாகும்.

(2) ஜீவகாருண்யமும், பரோபகாரமும் தெரிய வேண்டும்.

(3) தனது வாழ்நாட்கள் முழுமையும் வீணாட்களாக்காது உலகவாழ்வுக்கும், தனது ஜீவிய காலத்திற்கும் உரியனவாயுள்ள விஷயங்களில் பிரவேசித்து நற்கதி யடையும்படி முயல வேண்டும்.

குறிப்பு — விவேக சிந்தாமணி

மண்டலத் தோர்கள் செய்த பாவம்மன் னவரைச் சேரும்
தெண்டிறை மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேரும்
தொண்டர்கள் செய்த தோஷந் தொடர்ந்ததங் குருவைச் சேரும்
கண்டன மொழியாள் செய்த கன்மங் கணவர்க்காமே.

பிரதி உபாத்தியாயரும், தங்கள் தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் சிஷ்யர்களுக்கு உழைத்து மேலே கண்ட பாட்டின் மூன்றாவது அடிப்பிரகார மில்லாது, கல்வி அபிவிருத்தி மேன்மேலும் ஓங்கி உலகம் கன்மையடைய சர்வேசுவரன் கிருபை செய்வாராக.

ரா. சேந்திப் பெருமாள் கவண்டன்,
உபாத்தியாயர்,
போர்டு ஸ்கூல், பேரையூர்,
திருமங்கலம் தாலூகா.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1913வது அக்டோபர்மீ | மாதம் 5.

THE ELEMENTARY SCHOOLS
எலிமென்ட்டெரிப் பாடசாலைகள்

எலிமென்ட்டெரிப் பாடசாலைகள் எங்கெங்கும் பரவவேண்டுமென்பது அனைத்தனத்தார் அபிப்பிராயம். இவ்விஷயத்தில் நாம் கனம் கோக்கலே என்னும் சீமானுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். முன்னிருந்த பிரைமரிப் பாடசாலைகளும் இப்போதுள்ள எலிமென்ட்டெரிப் பாடசாலைகளும் அமைப்பில் ஒத்திருப்பினும் போதனை முறையிலும் வித்யாபிவிருத்தியிலும் மிகவும் வித்தியாசப்பட்டவை யென்பது அனைவரும் அறிந்த விஷயம்.

முன்பு பிரைமரிப்பாடசாலைகளுக்குப் பாடப்பட்டி ஏற்படுத்தி ஒவ்வொரு வகுப்பிற்கும் இன்னின்ன பாடத்தில் இவ்வளவு பாடம் கடத்தவேண்டும் என்னும் நியதி ஏற்பட்டிருந்தது. இப்போதும்

பாடப்பட்டி ஏற்பட்டிருந்தாலும், இன்ன வகுப்பிற்கு இன்ன பாடத்தில் இவ்வளவுமட்டும் நடந்தே தீரவேண்டும் என்னும் வரையறையில்லை. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கும் பிள்ளைகளுடைய திறமைக்கும் ஏற்றவாறு பாடமும் அளவும் எற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று குறித்திருக்கிறது.

முன்பு எந்த உபாத்தியாயராக இருந்தாலும் வாசகம், எழுத்து, கணிதம் என்னும் கட்டாயப் பாடங்களைப் போதிப்பதோடு இஷ்டமான பாடங்களில் சிலவற்றையும் போதிக்கவேண்டும் என்னும் ஏற்பாடும் இருந்தது. இப்போது உபாத்தியாயர் தமக்கு நன்றாகத் தெரிந்த விஷயங்களை மாத்திரம் செவ்வையாகப் பிள்ளைகளுக்குப் போதிக்கலாம் என்னும் சுயேச்சை கொடுக்கப் பட்டிருக்கிறது. உற்றுநோக்கினால், ஒரே ஜில்லாவின் ஒரு பாகத்தில் வேண்டியுள்ள விஷயங்கள் மற்றொரு பாகத்திற்கு வேண்டியிரா. ஒரு ஜாதியாருக்கு வேண்டிய விஷயங்கள் மற்றொரு ஜாதியாருக்கு வேண்டியிரா. வடஜில்லாக்களின் மலைநாடுகளிலுள்ள ஜனங்களுக்கும் சென்னையிலுள்ள ஜனங்களுக்கும் நடையுடைபாவனைகளில் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அத்தகைய வித்தியாசங்களுக்கு ஏற்கப் பாடசாலைகளும் பாடமும் போதனையும் வித்தியாசப்பட்டிருக்கவேண்டும் என்பதில் சற்றுந் தடையிராது. இவ்வித்தியாசங்களை உபாத்தியாயர்கள் உணர்ந்து தத்தம் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களுக்கு ஏற்கப் பாடங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். தசாம்ச பின்னம் என்னும் கணிதம் எல்லாப் பாடசாலைகளுக்கும் வேண்டுமோ என்பதைக் கவனிக்க.

வித்யா விசாரணை அதிகாரிகளும் பாடசாலைகளைப் பற்றிப் பற்பல விஷயங்களைக் கவனிக்கவேண்டும். பாடசாலைக்குப் போவதும், பிள்ளைகளைப் பார்ப்பதும், பரீக்ஷிப்பதும், உபாத்தியாயருடைய திறமையைக் கவனிப்பதும், பாடசாலை போதனோபகரணம் முதலியவற்றைப் பார்ப்பதும் இவை முதலான காரியங்களைச்செய்வது மாத்திரம் போதாது. அதிகாரிகள் பாடசாலையுள்ள ஊருக்குப் போய், இரண்டொரு நாள் தங்கி, அங்குள்ள மேட்டுக்குடிகளோடும் கிராமாதிகாரிகளோடும் அளவளாவி, அவர்கள் பாடசாலையைப்பற்றியும் பாடசாலை உபாத்தியாயர்களைப் பற்றியும் கொண்டுள்ள அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளவேண்டும்.

அவர்களுடைய அபிப்பிராயங்கள் சரியானவைகளாக இருப்பின் அவற்றிற்கு ஏற்ற காரியங்களைச் செய்ய முயலவேண்டும். அவர்கள் தப்பிப்பிராயங் கொண்டிருந்தால், ஏற்ற காரணங்கள் கூறி அவ்வபிப்பிராயங்களை மாற்றவேண்டும். சில கிராமவாசிகளுக்கு ஸ்கூல் என்றால் சரிப்படாது. திண்ணைப் பள்ளிக்கூடமே திவ்வியமானது என்று கூறுவார்கள். அவர்கள் அப் பள்ளிக்கூடத்தைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்டால் வெகு விந்தையாக இருக்கும்.

ஒரு கிழவனுக்குப் பேரன் ஒருவன் இருப்பான். அத்தப் பையனுக்குத் தகப்பன் அவனை ஒரு ஸ்கூலுக்கு அனுப்ப எண்ணங்கொண்டு, பெரியவரைக் கேட்பான். பெரியவருக்கு உடனே உண்டாகும் பெருங் கோபம். "ஸ்கூலுக்கா அனுப்பப் போகிறாய்! ஸ்கூலிலே என்னடா இருக்கிறது. களிமண்ணைப் பிசைகிறதும், சுச்சிவைக்கிறதும், கொட்டைவைக்கிறதும், தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றுகிறதும், கடைசியில்வெளியில்வந்து குதிக்கிறதும், இதுதானே ஸ்கூல், படிப்பா கிடிப்பா. இன்னும் ஸ்கூல் என்று போனால், குதிகால் தெரியாமல் வேட்டி வேணும், சட்டைமேலே சட்டைவேணும், தொப்பி வேணும், ஊர்பட்ட புஸ்தகம் வேணும். இதெல்லாம் எதற்கு? பக்கத்திலேயே நமக்குப் பள்ளிக்கூடம் இருக்கிறதே, பையன் பக்கத்திலேயே இருப்பான். "புதியகால் வெட்டாதே பழையகால் தூர்க்காதே" என்பார்கள். நீயேன் வீணை வழிக்குப் போகிறாய், நமது பாட்டன் பூட்டன் எல்லாம் ஸ்கூலில்தானே வாசித்தார்கள். ஸ்கூலில் என்னபாடம் நடக்கிறது? கழுதையும் குதிரையும், சூரியனும் சந்திரனும், செடியும் கொடியும் இப்படிப்பட்ட பாடங்கள்தானே. இது யாருக்கு வேண்டும்? யாருக்குத் தெரியாது? அம்மியைக் காட்டுவதாம் அஅஅ சொல்லுகிறதாம். ஆட்டைக் காட்டுவதாம் ஆவன்னு சொல்லுகிறதாம். என்ன வேடிக்கை இது. ஒரு அரிச்சுவடியா, வரிக்காப்பாடமா, (வருக்கபாடம்) பேர் சுவடியா ஒன்றுமில்லை. "திருப்புகழி, (திருப்புகழ்), நேகிழ்தம் (நைடதம்) அதெல்லாம் எங்கேயோ காணோம். லக்கம், எண்சுவடி யெல்லாம் எந்த மூலையோ. ஒரு சதகம்படித்தாலும் போதுமே — என்னமோ சொல்லவேண்டியதைச் சொன்னேன். பிறகு உன் இஷ்டம், எக் கேடாவது கெட்டுப்போ" என்பது முதலான இராமாயணங்களை எடுத்துக் கூறுகின்றனன். இவ்வகையான தப்பிப்பிராயங்களால் சிலர்

உபாத்தியாயர்களை மதிப்பதேயில்லை. இப்படியிருந்தால் ஸ்கூல் எப்படி விருத்தியாகும். ஊரார் களிமண் வேலை வேண்டாம், தோட்டவேலை வேண்டாம் ட்ரில் வேண்டாம் என்கிறார்கள். அதிகாரிகள் இவற்றை வேண்டும் என்கிறார்கள், என்ன செய்வார் உபாத்தியாயர். ஊருக்கும் நல்லவராக வேண்டும் உத்யோகஸ்தருக்கும் உத்தரவு சொல்லவேண்டும். தரும சங்கடம் என்பது இதைவிட வேறு ஏது! கிராமவாசிகள் இவ்வகையில் கொண்டிருக்கிற துரபிப்பிராயங்களை நீக்க அதிகாரிகள் முயலவேண்டும்

அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று அந்தக் கிராமத்தின் ஜனத்தொகை எவ்வளவு? பாடசாலையில் படிக்கக் கூடிய பிள்ளைகளின் தொகை யென்ன? அந்தத் தொகைக்குப் போதுமான பாடசாலைகள் அந்தக் கிராமத்தில் உண்டா? இல்லாதிருந்தால் காரணம் என்ன? அந்தக் கிராமத்தில் எவ்வகையான ஜனங்கள் அதிகம். அவர்களுடைய கல்வி யபிவிருத்தி என்ன? அவர்களுக்கு எவ்வகையான கல்வி உபயோகமாகும்? முதலிய விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, அவர்களுக்கு ஏற்ற பாடவரையறை செய்து கொடுக்கவேண்டும். இவ்விஷயங்களில் சிலவற்றை அதிகாரிகள் இப்போதும் கையாடிவருகிறார்கள். ஆயினும் இன்னும் பல குறைவுகள் உண்டென்பதை மறுக்கமுடியாது. அதிகாரிகள் எவ்வளவோ சீர்திருத்தங்களைச் செய்தும் கிராமவாசிகளுக்குத் திண்ணைப் பள்ளிக்கூடத்தின்மேல் விருக்கும் அபிமானம் ஒழியாதிருப்பது என்னே! கிராமவாசிகள் தாம் உண்மை யுணராது இப்படி எண்ணுகிறார்கள் என்றால், சென்னையைப் போன்ற சிறந்த நகரங்களில் உள்ளவர்களுக்கும் இவ்வெண்ணம் மாறியதாக ஏற்படவில்லை. பச்சையப்பன் காலேஜ் என்பது பிரசித்தமான பாடசாலை யென்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் கட்டடத்தைப் பார்த்தாலே படிக்கவேண்டும் என்னும் அவா உடனே தோற்றும். இத்தகைய பாடசாலை பக்கத்திலிருந்தும், அப்பாடசாலைக்கு மூன்றுவது வீட்டின் முட்டுத்திண்ணைமேல் சுமார் 100 பிள்ளைகள் காலை முதல் மாலைவரையில் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். படிப்பவர்கள் ஏழைகளோ வென்றால் அப்படியும் அல்ல. பெரும்பாலும் தனிகர் வீட்டுப் பிள்ளைகளே வாசிக்கிறார்கள். இப்படியே நன்றாக நடத்தப்படும் பெரிய பாடசாலைக்கு அருகில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இடம் பெற்றிருக்கின்றன,

இதற்குக் காரணம் என்னே அறியக் கூடவில்லை. அப்பாடசாலைகளில் என்ன விசேஷம் என்பதைக் கவனித்து அப்படிப்பட்ட பாடங்களை ஸ்கூல்களில் அமைப்பதோ அல்லது அவை தீயவை என்று பட்டால், அத் தீமைகளை அதிகாரிகள் கிராமவாசிகளுக்கு நன்கு புலப்படுத்தி அவர்கள் கொண்டுள்ள துரபிப்பிராயங்களை ஒழிக்க முயலவேண்டும்.

பத்திராதிபர்.

162439

OCEAN BEDS.

சமுத்திர அடித்தல அமைப்பு

சிறுவர்காள்!

உங்களுடைய பூகோள படமஞ்சரியை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் நீரின் கீழாழத்தையும் பூமி யுயரத்தையுங் காட்டும் படத்தை நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். ஐரோப்பாவையும் ஆசியாவையும் யூரேசியா வென்ற பேருள்ள ஒரே கண்டமாகப் பாவிப்போம். அந்த யூரேசியாவுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கடற்கரை யோரங்களில் சமுத்திரத்தின் அடித்தலம் அவ்வளவு ஆழமில்லாதிருக்கக் காண்கிறோம். யூரேசியாவின் வடமேற்குப் பாகத்திலுள்ள கடல், பிரிடிஷ் தீவுகள், அயர்லாந்து, கிரீன்லாந்து வரையிலும்கூட 600 அடி ஆழத்திற்கு உள்ளாகவே யிருக்கிறது அப்படியே யூரேசியாவின் வட பாகமும் அநேக காததூரத்துக்கு 600 அடிக்குட்பட்ட ஆழமுள்ளதாகவே யிருக்கக் காண்பீர்கள். யூரேசியாவின் வட கீழ்ப்பாகம் ஒருகால் அமெரிக்காவோடு சேர்ந்திருந்ததென்று எண்ணும்படி கடலாழமில்லாது இருப்பதைப் பாருங்கள். யூரேசியாவின் மேற்றட்டில் பிரிடிஷ் தீவுகள் இருப்பது போலவே கீழ்த்தட்டில் ஜப்பான் தீவுகளிருக்கக் காண்பீர்கள்.

ஆசியாவின் தென் கீழ்ப்பாகத்தில் நாம் காண்பது என்ன? ஆழமில்லாத கடற்பாகம் பர்மியாவிலிருந்து சுமத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன் தீவுகள், நியூகினி, ஆஸ்திரேலியாவும் நியூஜீலந்துங்கூட ஒரு பெரிய பூபாகமாக இருந்திருக்கும் என்று எண்ணும்படி பரவியிருக்கிறது. தொல்காப்பியம்

முதலிய பழய நூல்களில் குமரியாறு என்றொன்றிருந்த தென்றும் அதற்கு வெகுதூரம் தெற்குப் பாகத்தில் நிலமிருந்து கடல் கொண்ட தென்றும் படிப்பீர்கள். அந்த வாசக முண்மை யென்னும்படி ஆழமில்லாத கடல் இந்து சமுத்திரத்தில் வெகுதூரம் எட்டியிருப்பதைப் பாருங்கள். மாகேந்திரத்தைச் சூரபத்மனிறந்ததன் பிறகு கடல் கொள்ளுவித்தாரென்றது அக்காலத்து நடந்த இயற்கை மாற்றை விளக்கிற்றுப் போலும். இலங்கையும் ஆழமில்லாத கடலிலேயே யமைந்திருக்கக் காண்கிறோம். இக் கடற்பாகத்தைப் பூகோள ஆசிரியர்கள் கண்டத்தட்டு என்பர். இவற்றால் நாம் உணர்வது என்ன? பழைய காலத்துக் கண்டங்கள் இப்போதிருப்பதுபோலிருந்தில வென்பதும், இப்பொழுது ஆழமில்லாத கடலெல்லாம் முன்பு பூபாகமாக இருந்து 'உள்ளழுந்தல்' என்ற முறையினால் நீர்ப்பாகமாக ஆயின வென்பதுமே.

(இன்னும் வரும்)

சிவத்தியாகானந்தன்,
ஆனந்தாச்சிரமம்.

OBJECT LESSONS IN ELEMENTARY SCIENCE — A MINERAL OIL

பொருட் பாடம்

I. Propeities — (1) மண்ணெண்ணெய் தெளிவானதும் நிறமில்லாததுமானது. (2) இது மிகவும் வீரியமும், அநுவருக்கத் தக்க வாசனையும் உருசியு முடையது. (3) இது தண்ணீரிலும் இலேசானது. (4) இதில் திரிவைத்து எரித்தால் இது திரியை எரியும்படி செய்யும். ஆனல்தான் எரியாது. (5) இது நீராவியாக மாறக்கூடியது. (6) இதிலிருந்து உண்டாகிற நீராவி எரியும் ஆனல் அது எரியாது.

II. What it is — இது பூமியிலிருந்து எடுக்கப்படுகிற படியால் ஒரு உலோக எண்ணெய். இது நேர்த்தியான பாரை எண்ணெய் (Fine Rock Oil) என்னும் பெட்ரோலியம் (Petroleum) என்றும் சொல்லப்படும்.

III. Where obtained — அமெரிக்கா கண்டத்திலுள்ள, ஐக்கிய மாகாணம், கனடா முதலிய தேசங்களிலும் ருஷியாவிலும் பர்மாவிலும் பூமியிலிருந்து எடுக்கப்படுகிறது.

IV. How obtained — உவர் நீர் ஊற்றுக்கள், மருந்து ஊற்றுக்கள் முதலியன பூமியிலிருப்பது போல மண்ணெண்ணெய் ஊற்றும் பூமியிலிருக்கிறது. அநேக வருஷங்களுக்கு முன்னல் கடற் செடிகளும் பிராணிகளும் அழிந்து போனதிலிருந்து உண்டானதாய் நினைக்கப்படுகிற ஷாலையும் (Shall) மணற் கல்லாயுமிருக்கும் பழைய பாறைகளிலிருக்கும் பாறை எண்ணெய் (Rock Oil) எடுக்கப்படுகின்றது. மற்ற ஊற்றுக்களைப்போல் மண்ணெண்ணெய் ஊற்று சில விடங்களில் தரையின் மேல்மட்டத்திற்கு மேலும் எழுகிறது. ஆனல் முக்கியமாக ஆழமான கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றிலிருந்து குழாய் வைத்து எடுக்கப்படுகிறது. ஒரு கிணற்றில் ஒருவருஷத்திற்கு சுமார் 90-மில்லியன் காலனுக்குக் குறையாதபடி கிடைக்கும். பூமியிலிருந்து எடுக்கப்பட்டதும் அழுக்குள்ளதாயும் பச்சையான மஞ்சள் நிறமுள்ளதாயும் மிகவும் கனத்ததாயு மிருக்கும். அப்பொழுது அது காற்ற முடையதா யிருப்பதுடன் உபயோகத்திற்கு ஏற்றதாயு மிராது.

V. How cleaned — கிணற்றிலிருந்து எடுத்த மண்ணெண்ணெய் மேலே குளமாக ஏற்படுத்தப் பட்டிருப்பதில் நிரப்பப் பட்டு, பின் அதிலிருந்து குழாய் வழியாய் சுத்தி செய்யுமிடத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றது. அங்கு அவ்வெண்ணெய் சுத்தி செய்யப்பட்டு அதில் கலந்திருக்கும் மற்ற வஸ்துக்கள் பிரிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் எண்ணெய் யிருக்கு மிடங்களில் ஒன்றில் எண்ணெய் எடுக்க 200 மைலுக்கதிகம் இருப்புக் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

VI. A dangerous Liquid — உஷ்ணமான மண்ணெண்ணெயிலிருந்து உண்டாகிற ஆவியானது காற்றுடன் கலந்தால் பயப்படும்படி வெடிக்கக் கூடியதாகிறது.

VII. Golden Rules — (1) மண்ணெண்ணெயை குளிர்ந்த இடத்தில் வைக்கவேண்டும். அப்படியானல் ஆவியெழும்பி கெடுதியுண்டு பண்ணுது. (2) ஓர் உஷ்ணமான அறையில் மண்ணெண்ணெய் விளக்குகளை நிரம்ப ஏற்றி வைக்கக்கூடாது. (3) தினி

எண்ணெய்கூட சிக்கிரிரதபடி விளக்கைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். (4) விளக்கைத் தாழ்ந்த இடத்தில் வைக்கக் கூடாது. இப்படிச் செய்வது அதிர்ச்சியை யுண்டாக்கும். (5) முக்கியமாய் விலே குறைந்ததாகவும் கெட்டதாகவும் செய்யப்பட்டிருக்கிற விளக்குகளே உபயோகிக்கக் கூடாது. (6) திரியை மிகவும் கீழிறக்கி அல்லது சிம்னியை எடுத்து விட்டு விளக்கை வைக்கக் கூடாது இப்படிச் செய்வதனால் ஜ்வாலையான உஷ்ணம் குப்பியிலுள்ள எண்ணெயிலிருந்து உண்டாகிற ஆவியாக்கப்படுகிறது. அப்பொழுது நிச்சயமாய் ஒரு வெடிப்பு உண்டாகும். (7) கொஞ்சம் ஜ்வாலையிருக்கும்படி முதலில் திரியை கீழிறக்கிபின் சிம்னியின்மேல் பக்கம் கூட்டி ஒரே ஊதாக ஊதி அணைக்க வேண்டும். (8) மேஜையின்மீது வைக்கப்படும் விளக்கு கவிழ்ந்து விடாதபடிக்கு அகன்று கனத்த தண்டை உடையதா யிருக்க வேண்டும்.

VIII. Remedy — மண்ணெண்ணெய் தப்பித் தவறி வயிற்றில்சென்று விட்டால் புளித்த தயிரைச் சாப்பிடுவதால் அதன் கெடுதல் சிறிது மாறும்.

T. A. EGYAMIAR,
Head-master, Board Elementary School,
and Secretary, Teachers' Association,
Elazarasanandal.

BIOLOGY

பிராணி சாஸ்திரம்

களூர் உபாத்தியாயர் சங்கத்தில் களூர் ரெஞ்ஜ் பாடசாலைகளின் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ம-ா ா-ஸ்ரீ, N. S. ஜம்புநாதய்யர் அவர்கள், B A., L. T., F. Z. S., , அக்ராசனம் வகித்துச் செய்த வுபந்நியாசம்.

I. ஜீவவஸ்து —

1. சேர்க்கையும் தொழில்களும் அமீபா.

2. மனுஷ சரீரத்தின் ஒற்றுமை.

ஜீவவஸ்து என்பது ஜீவனுக்கு ஆதாரமாக உள்ளது. தேகமானது ஜீவவஸ்துவினுல் ஆக்கப்படிருக்கிறது. வஸ்துவைப் பிரித்துப் பரிசோதிக்குங்கால் முக்கால்பங்கு ஜலமும் மற்றைய வஸ்துக்களில் கரிவாயு இருந்தும், பிராணவாயு, உப்புவாயு, கந்தகம், விஷவாயு முதலியவைகளும் சேர்ந்து காணும். இவைகள் இன்ன அளவில் சேர்ந்திருக்கின்றன வென்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனல் அப்படி லோகம் பொருள்களே சேர்த்து ஜீவவஸ்து உண்டு பண்ணினது உண்டா என்று கேட்டால் இன்னும் இல்லையென்று தான் சொல்லவேண்டும். ஜீவவஸ்துவின் தொழில்களே அமீபா என்னும் ஒரு ஜீவராசியின் சரித்திரத்தால் அறியலாம். கட்டுக்கடை ஜலத்தில் வசிக்கும் அமீபா மிகவும் சிறிய தேகமுடையது. பூதக்கண்ணுடி கொண்டுபார்த்தால் தான் தெரியும். ஜீவிய தொழில்களாகிய சுவாசித்தல், உண்டு பெருத்தல், மக்கட்பேறு என்பவைகளே இவைகளிடம் கண்டபோதிலும் அவைகளுக்கேற்ற விவரமான குறிப்புகளே அவைகள் பெறவில்லே. அசைவுக்கு காரணமாகிய மூலவஸ்துவும், திரவபதார்த்தத்தை உண்டுபண்ணும்படியான மற்றைய உறுப்புகளும் நமது தேகத்தில் இருப்பதுபோல அமீபா போன்ற ஜீவன்களிடம் கிடையா.

II. பிராணிகளின் பிரிவுகள் —

1. பிராணிகளே மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். அமீபாபோன்ற விஷசுரமுண்டாக்கும் மூலக் கிருமிகளும் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

2. கடற் பஞ்சு, பவழ பிராணி முதலியவை இருதோல் அமைப்புடன் ஒரு துவாரமுள்ள ஒரு அறையுடன் விளங்கும்.

3. ஜீர்ணக் குழாயானது வாய் ஆசனத்துடன் ஒரு அறையின் ஊடுருவிச் செல்லும்படியான அமைப்பு. இவ்வித அமைப்பு வகையில் புழு பூச்சி முதல் குரங்கு மனுஷன் வரையில் அடக்கலாம், நத்தை இனமும் இந்த பிரிவுக்குள் அடங்கும். மீன், ஊர்வன, பறவை, மிருகம் இவைகள் முதுகெலும்புள்ள பிராணிகளின் உட்பிரிவுகள்.

III. பிராணிகளின் ஜீவியதொழில்களே எவ்வாறு நடத்துகின்றன வென்பதை சற்று கவனிப்போம்.

1. சுவாசம் — தரையில் வசிப்பன பிராணவாயுவை காற்றினின்று, தண்ணீரில் வசிப்பன. அதனுள் கலந்த பிராணவாயுவை

தண்ணீரினின்றும் பெறுகின்றன. அற்ப ஜீவராசிகள் தேகத்தின் வழியாகவும், மீன்போன்ற ஜலசரங்கள் காதின்பக்கம் உள் அமைந் திருக்கும் இரத்தம் நிறைந்த ரப்பைகளின் வழியாகவும் (gills) மற்ற வைகள் (மனிதன் போன்ற) தவளைக்கு மேல்பட்ட பிராணிகள் சுவாசப் பைகளின் வழியாகவும் பிராணவாயுவைப் பெறுகின்றன.

2. உணவு — நமக்கு உண்ண வாயும், விழுங்கத் தொண்டைக்குழாயும், ஜீர்ணிக்க வயிறும், குடல்களுமிருக்கின்றன. இவைகளோடு சம்பந்தப்பட்ட கோளங்களிலிருந்து உமிழ்நீர் முதலிய திரவபதார்த்தங்களின் சேர்க்கையால் உணவு ரக்தம் உறுஞ்சி எடுத்துக்கொள்ளக் கூடிய மாதிரி ஜீர்ணிக்கப்பட்டு உறுஞ்சி மிஞ்சிய சக்கை மலமாகக் கழிகிறது. வாயும், வயிறுமுள்ள மற்றப் பிராணிகளும் இப்படியே உண்டு ஜீவிக்கின்றன.

3. மக்கட்பேறு — அற்ப பிராணிகள் அமீபாவைப்போல் தம் தேகத்தைப் பகுத்தும், மற்றைய பிராணிகள் சுக்லஸ்ரோணி தங்களை ஆண்பெண்ணுக வகுக்கக்கூடிய உறுப்புகளினின்றும் பெற்று அவைகளின் சேர்க்கையால் கருதரித்து விருத்தியாகின்றன. ஆண்பெண் உறுப்புகள் ஒரு பிராணியினிடமே காணலாம் மண்ணுண்ணிப் புழு, அட்டை இவைகள் உதாரணம். ஆண்பெண்ணுக பிரிந்து மனிதன் போன்ற மற்றைய பிராணிகளில் பார்க்கிறோம், பிராணிகளில் பெரும்பான்மை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. சிறுபான்மை மிருகங்களைப்போல குட்டிகளை உயிருடன் பெற்று போஷிக்கின்றன.

IV. பிராணிகளை காணுமிடங்கள் —

1. உஷ்ணதேச பிராணிகள்.

2. குளிர்தேச பிராணிகள்.

3. கண்டங்களின் அபூர்வ ஜந்துக்கள் பிராணிகளை உஷ்ணதேச பிராணிகளென்றும், குளிர்தேச பிராணிகளென்றும் பிரிக்கலாம், ஜலசரங்களென்றும், பூசரங்களென்றும் விவரிக்கலாம். குளிர்தேசத்துப் பிராணிகளுக்கு அடர்ந்த ரோமங்கள் உண்டு. (உ-ம்) கரி, கலைமான், கரடி முதலிய மிருகங்கள் தான் வடக்கே போகப் போக பார்க்கலாம். யானை, புலி, சிங்கம், ஒட்டகம் இவைகளை உஷ்ண பிரதேசங்களில் தான் காணலாம்.

Zebra என்னும் வரிக் குதிரையையும், ஜிராப் என்கிற ஒட்டச் சிவிங்கியையும் Ostrich என்னும் தீப்பறவையையும் ஆப்பிரிக்கா

கண்டத்தில் தான் காணலாம். கங்காரு என்ற மிருகம் ஆஸ்திரேலியாவுக்கும், கீர்யானை அமெரிக்கா தேசத்துக்கும் உரித்தான பிராணிகள். மயில்கள் இந்தியாவைத் தவிர வேறு இடங்களில் காணக்கிடையா. ஜலத்தில் வசிப்பது ஜலசரம். பூமியில் வசிக்கும் பிராணிகள் பூசரங்கள் ஆகும். திமிங்கிலம், கடற்பூனை இவைகள் மீன்களைப்போல் ஜலத்தில் வசிப்பினும் மிருக ஜாதியைச் சேர்ந்தன.

V. உற்பத்தி —

1. வீட்டுப் பிராணிகள்.

2. காட்டுப் பிராணிகள்.

ஆடு, மாடு, குதிரை, நாய், பூனை, கோழி, வாத்து முதலிய பிராணிகள் மனிதனால் பிடித்து வளர்க்கப்படுமாகையால் அவைகளை வீட்டுப் பிராணிகள் என்றும் சொல்லப்படும்.

யானை காட்டுப் பிராணியாயினும் மனிதனால் பழக்கி வீட்டுப் பிராணி ஆக்கப்படுகின்றது, மற்றைய பிராணிகள் காட்டுப் பிராணிகள்.

V. S. NATARAJAIYAR,
Head-master, Municipal Elementary School,
Pasupathipalayam,
Karur Town.

GAMES AND SPORTS FOR YOUTHS.

இளைஞர் விளையாட்டு

சென்னை வித்தியா இலாகா விசாரணைத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட பாடக் கிரமத்தில் யுக்தமாய் கற்பிக்க வேண்டிய விஷயங்களுள் ஒன்றுய்த் தேகப் பயிற்சியை வகுத்திருக்கிறது. அதில் அடங்கியது மூன்று அம்சங்கள். (a) ட்ரில் அப்பியாசமும் தேகப் பயிற்சியும் (b) இந்த தேசத்து ஜிம்நாஸ்டிக்ஸ் (c) இந்த தேசத்து விளையாட்டுகள். முதல் இரண்டு அம்சங்களை முறைப்படி கற்பிக்க யோக்கியதையுள்ள உபாத்தியாயர் பெரும்பான்மை பள்ளிக்கூடங்களில் இல்லாததால் சுலபமான மூன்றும் அம்சத்தைக் குறித்துச் சற்று விவரிப்போம்.

விளையாட்டென்பது நம் நாட்டிற்குப் புதிதல்ல. வெகு காளாக நம் குழந்தைகள் மாத்திரமல்ல முதிர்ந்த பெரியோர்களும் விளையாடுவதுண்டு. திருஷ்டாந்தமாக சங்கராந்தி (பொங்கல்) பண்டிகையன்று பெரியோர்களும் சிறியோர்களும் கலந்து பந்து பளிச்சப்பளி ஒட்டம் இன்றைக்கும் விளையாடுவதைப் பார்க்கிறோம். ஆனல் நாகரீகமென்ற வேஷம்பூண்ட சில நகரவாசிகளும் சுவரைவிட சித்திரத்தி லாசையுள்ள சில பெற்றோர்களும் உற்சாகமும் அதிக உழைப்பையும் கொடுக்கிற மேற்கண்ட விளையாட்டுகள் மரியாதைக் குறைவென்றும் வீண்காலப் போக்கென்றும் கைவிட்டார்கள். இவைகளின் உண்மையை யறிந்த இராஜாங்கத்தார் நம் சிறுவர் சிறுமியர்களின் க்ஷேமத்தை முன்னிட்டு முக்கியமான பாடங்களுள் ஒன்றாய் வகுத்ததுமன்றி, தேகப் பயிற்சியில் விசேஷ தேர்ச்சிக்கு அதிக திரவிய சகாயம் செய்வதாயும் திரவிய சகாயச் சட்டத்தில் புகுத்தி யிருக்கிறார். இப்படிப் பல விதமாயும் நமக்கு அநுகூலம்யுள்ள விளையாட்டுகள் விசேஷமாய் கையாடப்படாததால் அவைகளின் விதங்களும் முறைகளும், அனேகமாய் மறந்துபோயின. ஆயினும் நம் தேசத்தவை, பிற தேசத்தவை, இவைகளில் சிறிது விரிப்பம். விளையாட்டின் பெயர்களும், மாதிரிகளும் இடங்கள் தோறும் வேறுபடும்.

1. Plain touch—தொடுகை மிகவும் சுலபமான விளையாட்டு, எத்தனை பிள்ளைகளானலும் சேரலாம். ஒரு பெரிய வட்டம் செய்து கொள்ளுங்கள். ஒருவன் தொடுகிறவனாகவும் மற்றவர்கள் அவன் கையில் அகப்படாமல் ஓடுகிறவர்களாகவும் இருக்கட்டும். எல்லாரும் வட்டத்திற் குள்ளேயே ஓடவேண்டும். முகம், மயிர் இவைகளைத் தொட்டால் தொட்டதாகாது. கோட்டைத் தாண்டினவனும் அகப்பட்டவன். அகப்பட்டவன் முதற் பையன் போல் தான் மற்றொரு பையனைப் பிடிக்கும் வரையில் தான் விளையாட வேண்டும்.

2. Cross touch — முன் சொல்லிய விளையாட்டைவிட, இதில் தொடுகிறவனுக்கு விசேஷ முயற்சி தேவை. தொட ஏற்பட்டவன் எல்லாரையும் தொட வேண்டாம். தொட ஏற்பட்டவனை தரியமுள்ள வாலிப னொருவன் புயத்தில் தொட்டு "பிடி" என்று சொல்லி ஓடுகிறது. அவன் கனக்கிற தருணம் பார்த்து அவ்விருவருக்கும் மத்தியில் புதியவன் புகுந்து கொள்ளுகிறது. தொட ஏற்பட்டவன் இப்புதியவனைத் தொடவேண்டுமே யொழிய முந்தியவனைத் தொடவேண்டாம். இவ்விதமாக எத்தனை பெயர் வேண்டுமானலும் சேர்ந்து விளையாடலாம்.

3. Warning — இவ்விளையாட்டிற்கு சுமார் 10, 12 பேர்கள் தேவை. முதலில் சமர்த்தனை பையன் விளையாட ஆரம்பிக்க வேண்டும். ஓடுகிற இடத்தில் ஒருமூலையை வீடாக (தாக்கி) நியமித்துக்கொண்டு அதிலிருந்து தான் பிடிக்கப் புறப்பட்ட முதல்வன் கைகளைக் கட்டிக்கொண்டு யாரையாவது ஒரு வாலிபனைத் தொட முயலவேண்டும். கை அவிழ்த்தால் மறுபடி வீட்டிலிருந்தே விளையாட் டாரம்பம். ஒரு பையனைத் தொட்டவுடன் அவனும் இவனும் கலந்து வீட்டுக்குப் போய் தங்கள் இரண்டு கைகளையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டு, மற்ற இரு கைகளால் பிடிக்க முயலவேண்டும். ஒவ்வொருவனையும் தொட்டவுடன் ஒவ்வொருதரம் வீட்டுக்குப்போய் விளையாட்டு ஆரம்பிக்க வேண்டும். எல்லாரையும் பிடித்துவிட்டால் ஆட்டம் முற்றுப் பெற்றது.

4. I-spy also called (whoop) — கண்ணாம்பூச்சி பிள்ளைகள் இருகக்ஷிகளாகப் பிரியவேண்டும். ஒரு கக்ஷிக்காரர்கள் வீட்டிலிருந்து (தேர்ந்தெடுத்த இடம்) கண்களை மூடிக்கொள்ள வேண்டும். எதிர் கக்ஷிக்காரர்கள் ஒளிந்து கொள்வதை எட்டிப் பார்க்கக் கூடாது. எல்லாரும் ஒளிந்து கொண்டவுடன் ஒளியும் கக்ஷி கடைசிப் பையன் "பூச்சி" என்று கத்திக்கொண்டு தானும் ஒளிந்து கொள்வான். ஒளிந்தவர்கள் திடீரென்று வெளிவந்து எதிர் கக்ஷிக்காரர்கள் வீடுபோய்ச் சேருவதற்குமுன் தொட வேண்டும். ஒளிந்துகொண்ட யாரையாவது எதிர் கக்ஷிக்காரர் ஒளிந்த விடத்தில் கண்டுபிடித்தால், இருவரும் கலந்து மற்ற எதிர் கக்ஷிக்காரர்களைப் பிடிக்க வேண்டும். ஒளிந்தவர்க ளெல்லாம் வெளிவந்தவுடன் அடுத்தகக்ஷி ஒளியவேண்டும். எதிர்கக்ஷி ஆட்களில் அதிகமானவரைத் தொட்ட கக்ஷி ஜயித்தது.

5. Baste the bear—கரடி, கரடிக்காரன். கைக்குட்டைகளை முறுக்கி நுனியில் சுமாரான முடிச்சுப் போட்டுக்கொள்ளவும். ஒருவன் கரடியாகவும் மற்றொருவன் கரடிக்காரனாகவும், மற்றவர்கள் வேடிக்கைப் பிள்ளைகளாகவும் நடிக்கச் செய்கிறது. ஒருகயிற்றின் ஒரு முனையை கரடியும் மறு முனையை கரடிக்காரனும்

பிடித்துக்கொள்ளவும். பிள்ளைகள் தங்கள் குட்டையால் கரடியை விஷமம் செய்யப் பார்ப்பார்கள், கரடிக்காரன் கயிற்றையும் விடாமல், முழங்காலினுல் நடக்கும் கரடியை கீழ் வீழ்த்தாமல் ஒரு பையனைத் தொடவேண்டும். தொட்டவுடன், தொடப்பட்டவன் கரடியாயும் கரடி கரடிக்காரனுகவும், கரடிக்காரன் பையன்களாயும் ஆய்விடுவார்கள்.

6. Prisoner's Base (சிறை விளையாட்டு) 16 முதல் 20 பேர் வரையில் விளையாடலாம். இரண்டு தலைவர்களால் சரியான இருகக்ஷிகள் வகுக்கப்பட்வேண்டும். இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் இருபக்கத்தில் இரண்டு வீடுகள் ஏற்படவேண்டும். அவ் வீடுகளின் எதிரில் சுமார் 20 கஜதூரத்தில் எதிர் கக்ஷிக்காரர்கள் சிறைகள் ஏற்பட வேண்டும்.

1 வது வீட்டிலிருந்து ஒரு பையன் புறப்பட்டு, வீடுகளுக்கும் சிறைகளுக்கும் மத்தியில் போய் "வா சண்டைக்கு" என்று மூன்று தரம் அறைந்து தன் வீட்டிற்குள் ஓடிப்போக வேண்டும். அப்படி ஓடுவதற்கு முன் 2 வது வீட்டிலிருந்து ஒருவன் வந்து இவனைத் தொடவேண்டும். தொட்டவுடன் தொடப் பட்டவன் தன் வீட்டுக் குரிய சிறைக்குத்தான் போய் தன் கக்ஷிக்காரன் ஒருவன் வந்து எதிர்கக்ஷிக்காரன் கையில் அகப்படாமல் தன்னைத் தொட்டு சிறை மீட்கும் வரையில் அதில் தான் இருக்க வேண்டும். தன் கக்ஷிக்காரன் சிறை மீட்க வந்தவன் தொடாமல் போனுல் அவனை எதிர் கக்ஷிக்காரன் பின் தொடரலாம். பின் தொடர்ந்து தொட்டு விட்டால் தான் கைதியாகிறன். இப்படி விடுவிக்கப் போன ஒவ்வொருவனும் எதிர்க் கக்ஷிக்காரனுல் தொடப்பட்டால் கைதியாவான். தலைவர்கள் அவசரமிருந்தால் மாத்திரம் வீடுகளை விடுவது உசிதம். சிறையில் அனேகர் இருந்தால் கடைசியானவன் கால் சிறையிலிருந்து மற்றவர்கள் கைகள் கோத்துக் கொண்டு தன் கக்ஷிக்காரர்களைத் தொட்டுக் கொண்டு சிறை மீளலாம். ஒரு தடவை வீட்டிலிருந்து புறப்பட்டால் ஒருவனை மாத்திரம் மீட்கலாம். இருகக்ஷியிலும் எல்லாரும் சிறை மீண்டால் புதுஆட்டம். எந்தக் கக்ஷியில் எல்லாரும் சிறையானர்களோ அவர்கள் தோல்வியடைந்தார்கள்.

7. Leap frog — பச்சைக் குதிரை பிள்ளைகளை சிறுவர் முதலாய் வைத்து வரிசையாய் நிற்கச் செய்யவேண்டும். முதல் பையன்

கொஞ்சம் முன் சென்று பக்கத்தில் திரும்பி குனிந்துகொண்டு, தலையை கூடுமானவரையில் மார்புடன் சேர்த்து வைத்துக்கொள்ளவும். இரண்டு கைகளும் இரண்டு முழங்கால்களில் ஊன்றி நிற்கட்டும், ஒருகால் சற்று முன்னேக்கி இருக்கட்டும். அடுத்த பையன் ஒருகுதி குதித்து எழும்பி, முன் நிற்கிறவன் முதுகில் கைகளை ஊன்றி அவன் தலை, பின்புறம் இலைகளில் தாக்காமல் முன்னேக்கிக் குதித்து கொஞ்சதூரம் சென்று, தானும் அவன் போல் குனிந்திருக்க வேண்டியது. மூன்றவது பையன் மூன்று இருவரைத் தாண்டித்தான் குனியவேண்டும். நான்காவது பையனுக்கு மூவரும் ஐந்தாவது பையனுக்கு நால்வருமாக குதிக்க ஏற்படுவார்கள். எத்தனைபேர்கள் வேண்டுமானலும் களைக்கிறவரையில் விளையாடலாம். குதிக்கும் காலத்தில் விஷமத்திற்கு சரியாய் எழும்பாமல், கீழ் இருக்கும் பையனுக்கு உபத்திரவம் செய்தால், அப்பையனை அன்றைக்கு விளையாட்டிலிருந்து விலக்கி வைக்க வேண்டும்.

இதில் ஒரே பையன் பிசகு செய்து மற்றொரு பையன் தன்னைப்போல் குதிரையாகிற வரையில் தான் குதிரையாயிருக்கிற தென்று மற்றோர் தினசு ஆட்டமுண்டு.

8. Catch the ball — குதிரைப்பந்து. பிள்ளைகளை இருவகுப் புகளாக and horse back வகுத்து பந்தை ஒரு கக்ஷியிலிருந்து மற்றொரு கக்ஷிக்கு எறிகிறது. பந்தைப் பிடித்த கக்ஷிக்காரனுக்கு எதிரி கக்ஷிக்காரன் தன் சிநேகிதர்களில் ஒருவனைக் குதிரையாக அனுப்ப, தன் நண்பரில் ஒருவனை குதிரைச் சவாரி செய்ய ஏற்படுத்தி அக் குதிரையை இருநிறத்தக்கும் நடுமையத்தில் இருக்கச் செய்யவேண்டும். பிறகு குதிரை பெற்ற கக்ஷிக்காரன் பந்தை எறிய, குதிரை கொடுத்த கக்ஷிக்காரன் பந்தைப் பிடித்து விட்டால் அப்பந்தினுல் குதிரை சவாரி செய்பவன் மேல் எறிவான். அவன் அடிபடாமல் தன் கக்ஷிக்கு ஓடிவந்து விடவேண்டும். குதிரைகொடுத்த கக்ஷிப் பந்தைப் பிடிக்காமல் தன் கக்ஷியே பந்து பிடித்தால், குதிரை மேலிருப்பவன் குதிரைமேல் "சபாஷ்" என்று தட்டிக்கொடுக்கிறது. எதிரி கக்ஷிப் பந்தைப் பிடிக்காமல் இருக்கும் பொழுது, பயந்து பிடித்ததாக குதிரைக்காரன் ஓடிவிட்டால் குதிரையும் தன் கக்ஷிக்கு ஓடிவிடும். இவ்விளையாட்டில் ஜாக்கிரதை ஊக்கம், ஐக்கியம் முதலிய நற்குணங்கள் விருத்தியாகும்.

9. Strike ball பிள்ளையார் பந்து. இரண்டு கக்ஷிகள் பிரித்து ஓரிடம் வீடாகவும் அவ்விடத்தில் கல்லை "பிள்ளையார்" குறி என்றும் ஏற்படுத்துகிறது. முதலில் ஆட்டம் ஆரம்பிக்கிற கக்ஷிக்காரன் தன் கையால் பந்தை அடிக்க, எதிர்க் கக்ஷிக்காரர்கள், பந்தை சாதாரணமாய் பிடித்தாலும், பந்தை காலால் எழும்பவிட்டுப்பிடித்தாலும், அடித்தவன் ஆட்டம் போய்விட்டது. பிடிக்காவிடில், பந்தை பிள்ளையாரைப் பார்த்துக் குறிவைத்து எறிய, பிள்ளையார் விழுந்தாலும் அவன் ஆட்டம் போய்விட்டது. பிள்ளையாரை வீழ்த்தியாவது எழும்பியாவது காலால் எழுப்பப்பட்டாவது ஆட்டக்காரர்களில் யாராவது பிடித்துவிட்டால் ஆட்டம் போனதாக மாட்டாது. பிள்ளையார் குறி தவறி, பந்து ஆட்டக் கக்ஷிக்காரர்கள் எழும்பியாவது சுபாவத்திலாவது பிடிபட்டால் ஆட்டக்காரனுக்கு "சொணை" என்ற விசேஷ ஆட்டமொன்று உண்டு. பந்தெறியும் கக்ஷிக்காரர்கள் எறியும் பந்து, பிள்ளையார் வரையில் வராவிட்டால், ஆட்டக்காரர்களுக்கு, பந்து வந்தவிடத்திலிருந்து, எறிகிறவர்களை நோக்கி எறியலாம். ஆட்டக்காரர்கள் பிள்ளையாருக்கு முன்வந்து பந்தை பிடிக்கக்கூடாது. ஆட்டக் கக்ஷியில் எல்லாருடைய ஆட்டமும், சொணையுடனும் போய்விட்டவுடன் அடுத்த கக்ஷி ஆட ஆரம்பிக்கவேண்டும்.

10. Buck Buck மாடு. "ஒரு பையனை பெஞ்சியில் உட்காரவைத்து அவன் தொடையில் தலையை குப்புறவைத்து மற்றொரு பையன் நிற்கிறான், மற்றொருவன் அவன் முதுகில் ஏறி விரல்களை நீட்டி (எறிகிற கக்ஷியிடம்) "மாடே, மாடே எத்தனை கொம்பு" என்று கேட்கிறது. மாடாயிருக்கிறவன் சரியாய் ஊஹித்துச் சொல்லும் வரையில், தான் மாடாகவே யிருந்து வருவான். மாடாயிருக்கிறவன் சரியாய் ஊஹித்துவிட்டால், தான் மாடாகவும், மாடாயிருந்தவன் சவாரி செய்பவனாகவும் ஆய்விடுகிறது.

11. Odd and Even (ஒற்றை அல்லது இரட்டை) இரண்டு பிள்ளைகளிடம் ஒவ்வொருவரும் சரியான சங்கியை கோலி அல்லது புளியம் விதை நிறைந்த பைகள் வைத்துக்கொள்கிறது. ஒருவன் கையில் சில கோலியை எடுத்து மூடிக்கொண்டு எதிரிலிருப்பவனை "ஒற்றையா இரட்டையா" என்று கேட்க, எதிரிலிருப்பவன் சரியாய் ஊஹித்தால் தான் ஒன்று அவனுக்குக் கொடுக்கவேண்டும். பிசகு சொன்னால் தான் ஒன்று பெறவேண்டும். இவ்விதமாய் ஒருவனிடத்திலுள்ள கோலிகள் ஆகும் வரையில் விளையாடலாம். இவ்விதமாய் மாறி மாறி விளையாடலாம்.

12. Eggs in the bask (பொந்திலுள்ள முட்டை) இதிலும் இருவர்தான் விளையாட வேண்டும். இருவரிடத்திலும் சமான சங்கியை கோலிகளாவது புளியம் வித்தையாவது தேவை. ஆட்டக்காரன் கையில் விதைகளை எடுத்துக்கொண்டு எதிரிலிருப்பவனை "எத்தனை?" என்று கேட்கிறது.

அவன் இவன் மூடிக்கொண்ட கைகளை, திறக்காமல் தடவிப் பார்த்து இத்தனை யென்று சொல்லவேண்டும். சரியாய்ச் சொல்லிவிட்டால் கையிலுள்ளதை எதிரிக்குக் கொடுத்துவிடவேண்டும். தப்புச் சொன்னால், எத்தனை விதை தப்புச் சொன்னார்களோ அத்தனை விதை பெறவேண்டும். உதாரணம். 7 கையிலிருக்க 5 அல்லது 9 என்று சொன்னால், 2 விதையும், 6 அல்லது 8 என்று சொன்னால், ஒருவிதையும், கேள்வி கேட்கிறவன் பெறுவான். கையில் 10க்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது.

பிள்ளைகளின் வயதையும் சாதுரியத்தையும் கவனித்து அவர்களுக்கு ஏற்ற விளையாட்டுகளை ஏற்படுத்துவது நலம்.

A. VENKATRAMA AIYAR,
Supervisor of Elementary Schools,
Namakal Sub-Range.

HOME WORK
வீட்டப்பியாசம்

நாம் பிள்ளைகளுக்கு வீட்டில் செய்து வரும்படி கொடுக்கும் பார்த்தெழுதல், வியாசம் எழுதல், சட்டம் எழுதல், கணக்குப் போடல் முதலிய அப்பியாசங்களை சரிவர எழுத்துப் பிழையின்றி கூடியவரையில் லக்ஷணமாய் எழுதுகிறார்களா வென்று பிரதிதினம் தணிக்கை செய்யவேண்டியது அவசியம்.

1. வீட்டப்பியாசத்தின் உபயோகம் —

(1) அவைகள் பிள்ளைகளின் படிப்புக் காலத்தை விருத்தி செய்து, பாடாபிவிருத்திக்கு ஆதாரமா யிருக்கிறது.

(2) வீட்டில் பிள்ளைகள் சோம்பலாயிருப்பதை நீக்கி அவர்களிடத்தில் சுறுசுறுப்பை விருத்தி செய்கிறது.

(3) பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் படிப்பை அளவிட்டுப் பெற்றோர்களைத் திருப்தி செய்கிறது.

(4) பிள்ளைகளிடத்தில் சுய நம்பிக்கை, கடமை, சிரத்தை முதலிய நற்குணங்கள் அமைகின்றன.

(5) பாடசாலையில் கற்பித்த படத்தைப் பிள்ளைகளின் மனதில் பதியவைக்க ஏதுவாகிறது.

(6) மறுநாள் கற்பிக்கப்போகிற பாடத்தையும் தங்கள் சக்திக்கு உட்பட்டவரையில் பிள்ளைகளைத் தயார் செய்யும்படிச் செய்கிறது. இவ்விதமாய்ச் சுயமாக யோசிக்கும் வழக்கத்தைப் பிள்ளைகளிடத்தில் உண்டாக்குகிறது.

2. வீட்டப்பியாசமானது மனப்பியாசம், எழுத்து அப்பியாசம் என இருவகைப்படும்.

மனப்பியாசமாவது கற்பித்த பாடத்தைத் தயார் செய்தலாம். எழுத்து அப்பியாசமாவது கொடுத்த வேலையை ஸ்லேட்டிலாவது, நோட்டுப் புஸ்தகத்திலாவது எழுதிக்கொண்டு வருவதாம். கீழ் வகுப்புகளுக்கு எழுத்தப்பியாசம் அதிகமாய் கொடுக்கக் கூடாது, மனப்பியாசமும் கொஞ்சமாய்க் கொடுக்க வேண்டும். மேலும், கீழ் வகுப்புகளில் கொடுக்கும் வீட்டப்பியாசம் முதல் வகுப்பில் கற்பித்த பாடத்தைச் சார்ந்ததாய் இருக்க வேண்டும். அப்பியாசங்கள் பிள்ளைகளின் சக்திக்கு மேலிட்டாவது அதிக யுக்தியுள்ளதாகவாவது இருக்கக் கூடாது. அப்படி யிருந்ததால் பிள்ளைகள் அப்பியாசங்களைத் தாங்கள் சுயமாய் செய்யாமல் பிறருடைய உதவியால் செய்துகொண்டு வருவார்கள். அப்பியாசம் அளவில் கொஞ்சமாயும் உபாத்தியாயர் சுலபத்தில் திருத்தக் கூடியதாயும் பள்ளிக்கூட முறைகளுக்கு சம்பந்தப்படாமல் இருந்தாலும் அப்பியாசங்களை பள்ளிக்கூடங்களிலேயே எழுதச் சொண்ணலும் கண்டபடி விதித்து சிரத்தை குறைவாய்த் திருத்தினலும் வீட்டப்பியாசங்கள் பிரயோஜனப் படமாட்டாது. மேலும் அவ்விதமான அப்பியாசங்கள் அசிரத்தை முதலிய கெட்ட குணங்களைப் பிள்ளைகளிடத்தில் உண்டாக்கும். எவ்வளவுக் கெவ்வளவு ஜாக்கிரதையாய் திருத்திப் பிள்ளைகளுக்குத் தப்பிதங்களை எடுத்துக்

காட்டுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அது பிரயோஜனமுள்ளதாகும்.

அரை குறையாய் செய்துவரும் அப்பியாசங்களை உடனுக்குடனே பூர்த்தி செய்யச் சொல்லவேண்டும். பிள்ளைகளின் கையெழுத்தை கவனிப்பதோடு எழுத்துப் பிழைகளையும் சரியாய்ப் பார்க்க வேண்டும்.

3. அப்பியாச புஸ்தகங்கள் ஒரே அளவு முள்ளவையாயும் ரூலிட்டவையாயும் இருக்க வேண்டும். ஒரு வகையான பாடத்திற்கும் ஒரு புஸ்தகம் இருப்பது நலம். புஸ்தகங்கள் அதிகப்பருமனு யிராமல் சிறியவையாய் குறிப்பிட்ட சில காகிதங்கள் அடங்கினவையாயு மிருக்க வேண்டும். இப்படி யிருந்தால் வருஷத்திற்கு ஒரு பாடத்திற்கு இரண்டல்லது மூன்று புஸ்தகங்கள்தான் தேவை. ஆரம்பத்தில் வைத்திருந்த புஸ்தகத்தை விட பின்னிட்டு வைத்து வரும் புஸ்தகம் எல்லா விஷயத்திலும் லக்ஷணமா யிருக்கும். அப்பியாச புஸ்தகங்களி லுள்ள காகிதம் கல்லதா யிருக்க வேண்டும். காகிதம் ஹன்ரு யிராவிடில் ஒருபுறமே எழுத வேண்டும். பக்கங்களின் இடது ஓரத்தில் காலியிடம் I அங்குலம் விட்டு அதன் அப்பியாசத்தின் எண்ணிக்கையையும் தேதியையும் குறிக்க வேண்டும். (உ-ம்.) நெம்பர் $\frac{18}{24\text{-}10\text{-}11}$. ஒவ்வொரு நாள் அப்பியாசத்தின் கீழ் கூறுக்குக் கோடு இழுக்கவேண்டும். ஒருநாளை அப்பியாசம் ஒரு பக்கத்தில் முடிக்கவிடுமாகில் கூறுக்குக் கோடு அவசியமில்லை. மொழி பெயர்த்தல் அப்பியாச புஸ்தகங்களில் ஒவ்வொரு பக்கத்தையும் இரண்டாகப் பிரித்துக்கொண்டு ஒன்றில் அன்னிய பாஷை அல்லது கடின பதங்களையும் மற்றதில் முதல் பாஷையும் பொருளையும் நேருக்குநேர் எழுத வேண்டும்.

T. BUJABALA ROW,
Head-master, Board School,
Kavantandalam.

ACTION SONG

அபிநயப்பாட்டு

கோக்கு — பாட்டு.

ஸாகா, ஸாகா, கமககரீ — பாபாபா — மகரீ பமகரிஸா.

ஆஹா என்ன நேர்த்தி யிது, அருமையான தடாகமிது
ஓஹோ இந்த மீன்களுமே உல்லாசமாய் ஓடுவன ஆ!!

நண்டு — பாட்டு.

(முத்திநெறி யறியாத)

நண்பரேநீர் நாள்தோறும் நலமுடனே இரை தேடி
இன்பமுடன் அருந்துவீரே இன்றைக்கேன் இச்சோகம்.

கோக்கு — பாட்டு.

(நொண்டிச் சிந்து)

என்ன சொல்வேனண்ணே! - உங்களுக்கு
ஏககாலத் தினில் நேர்ந்த துன்பமதை
எண்ணவோ மனம் வாடுதே - செம்படவர்
இங்குவந்து வலைவீசி உங்களை யெல்லாம்
பிடிப்போமென் றேயவர்கள் - பேசுகையில்
பேரிடி யிடித்தாப்போ லெனதுள்ளம்
கலங்கியே ஏக்கமுற்று - இப்போது
காணும்வழி யாதென்று தோன்றுமலே
நண்பர்களே உமக்கு - நேரிட்ட
துன்பத்தை எண்ணி எண்ணித் துயரமுற்றேன் (தந்தன)

நண்டு — பாட்டு.

(ஆரண்யத்தில் ஓரசன்)

சரணஞ் சரணம்-பகராஜனே சரணஞ் செய்தோம் யாம் (சர)
கருணைகூர்ந்து எங்களையும் காத்திடுவீரே (சர)
இச்சமயம் எங்களுக்கு நேர்ந்த துன்பத்தை (சர)
அச்சமின்றி போக்கிடவே அருள் புரிவீரே. (சர)

கோக்கு — பாட்டு.

(இடவேகரா-பாண்டரங்கா)

அருமையரே நானுரைப்பதை அன்புடனே கேளுங்கள் (அரு)
அனைவருமே-நம்பிக்கையாய் மனமுவந்து மேலேவந்து (அரு)
உங்களில் ஒவ்வொருவராய் இங்கிதமாய்க் கௌவிக் கொண்டு (அரு)
அங்குள்தோர் அருங்குளத்தில்சங்கடமின்றிச்சேர்த்திடுவேன் (அரு)

நண்டு — பாட்டு.

(தேமஜ்ஜிவ்யமதி)

என்னையும் எடுத்துச் செல்வீர் என் தோழரே
என்னையும் எடுத்துச் செல்வீர்.
மன்னுயிர்தன்னைத் தன்னுயிரா யெண்ணும்
அண்ணலே யுன்றன் அடிபணிந்தே னிப்போ (என்)

[கோக்கு நண்டைத் தூக்கிக்கொண்டு போக வழியில் மீன் முட்களைக் கண்டு கோக்கு சொல்வது]

ஐயா மகராஜனே, நான் முக்கியமான ஒன்றை மறந்து விட்டேன். என்னுடைய இனத்தார் இன்னுஞ் சிலர் அக்குளத்திலேயே இருக்கிறார்கள். என்னை அக்குளத்துக்குக் கொண்டு போனால் அவர்களையும் காட்டுகிறேன்.

கோக்கு —

வருங்காலத்தி லெதுவும் தானே வரும்.

நண்டு — கும்மி

நம்பின பேர்களை நாசஞ் செய்ய வெண்ணும்
நயவஞ்சக மான கொக்கே யுனை
தெம்புடனே யுன்தன் கழுத்தை இரண்டு
துண்டாய் நறுக்கியே கொன்றிடுவேன்.
நம்பிக்கைத் துரோகம் செய்யவெண்ணும் பேர்கள்
நாசமுறும் வகை கேளும் பல
வம்புக்குள் ளாகியே வாதைகள் மட்டுமே
வாணாள வீணாளாய்ப் போக்குவரே.

V. S. RAMASWAMI SARMA.

PHYSICAL GEOGRAPHY

இயற்கைப் பூகோளம்

3-வது வகுப்பு

விஷயம் — ஆறு

சம்பாஷணை

தம்பி — அண்ணே! இது என்ன மாதம்?

அண்ணன் — இது சித்திரை மாதம், தம்பி.

த — நம் உபாத்தியாயர் இன்று நம் எல்லோரையும் வரச் சொன்னாரே! எதற்கு?

அ — இன்று விடுமுறை வெளியிற்போய் உலாவி சிருஷ்டி வினோதங்களைப் பார்த்துவர.

த — எப்போது புறப்படுவோம். அண்ணே?

அ — காலைப் போஜனம் செய்து வரச்சொல்லி யிருக்கிறார்.

த — அப்படியானால், நாம் சீக்கிரம்கை கால் முகம் கழுவி கடவுளைத் தியானம் செய்து சாப்பிடச் செல்வோம்.

அ — ஆஹா! இன்று ஆகாயம் எவ்வளவு தெளிவாயும், சூரியன் எவ்வளவு பிரகாசமாயும் இருக்கின்றன பார்.

த — அண்ணே! வழிப்பிரயாணத்திற்கு ஏதேனும் சாமான் வேண்டுமோ?

அ — ஆம், சில கூடைகள், கழிகள் முதலியன வேண்டும்.

த — அண்ணே வெளியில் சூரியன் நன்றாய்த் தெரியவில்லை. உள்ளெல்லாம் இருட்டாயிருக்கிறது, இதேன்?

அ — தம்பி மேகம் சூரியனை மறைத்துக் கொண்டிருக்கிறது, இப்போது பார்! எல்லாம் ஒன்று சேர்கின்றன.

த — மழைத்துளி விழுகின்றது. எப்படி நாம் வெளியில் போவது?

அ — இல்லை. ஒரு வேளை மழை நின்றாலும் நிற்கும். நாம் ஆயத்தமாயிருப்போம்.

த — அண்ணே இதோ பார் மழை பலமாகப் பெய்கிறது. நாம் போகமுடியாது என்று எண்ணுகிறேன்.

அ — ஆம், நாம் போக முடியாதுதான். தம்பி! தரையை நன்றாய்க் கவனித்துப் பார்.

த — சிறு கால்வாய்கள் மாதிரியாய் ரோட்டில் ஜலம் ஓடுகின்றது.

அ — இவைகள் எல்லாம் சிறு நதிகள் என்று சொல்லலாம் தம்பி!

த — அண்ணே மணி 8 ஆயிற்று. மழையும் நின்றது இப்போது ஆகாயம் நிர்மலமா யிருக்கின்றது.

அ — எல்லோரும் போகிறார்கள் நாமும் போவோம் வா.

த — இன்னும் சேற்றுத் தண்ணீர் ரோட்டுக் குழிகளில் ஓடுகிறது அண்ணே!

அ — தம்பி! எல்லோரும் ஆற்றின் பக்கமாய்த் திரும்புகிறார்கள், நாமும் விரைந்து செல்வோம்.

மாணாக்கர்கள் — ஐயா, அன்று நாம் ஆற்றில் பார்த்த கற்கள் இன்று தெரியவில்லை.

உபாத்தியாயர் — ஆம்! இன்று அநேக மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன. (இன்னும் வரும்)

V. B. SANGAMESWARAM,
Supervisor of Schools,
Dharapuram.

GEOGRAPHY

பூகோளம்

ஓடும் தண்ணீர் செய்யும் வேலை

பள்ளிக்கூட லீவு நாட்களில் ஒருநாள், துரை, மாணிக்கம் என்னும் இரண்டு தோழர்கள் ஸ்நானம் செய்வதன்பொருட்டு தங்கள் வீட்டுக் கருகிலிருக்கும் ஒரு சிற்றாறுக்குச் சென்றார்கள்.

அவர்களில் துரை என்பவன் மாணிக்கம் என்பவனைக் கேட்கிறான்:

மாணிக்கம்! இன்று ஆற்றில் தண்ணீர் ஏராளமாய்ப் போகின்றது, நாம் கரையிலேயே குளிப்போம். இதோ பார் மாணிக்கம் தண்ணீர் வேகமாயும் செல்கின்றது. இது என்ன வேலை செய்கிறது, உனக்குத் தெரியுமா?

மாணிக்கம் — துரை! தண்ணீரிலேயே கொஞ்சநேரம் அசையாமல் நில். உன் காலின் கீழ் என்ன நடக்கிறதென்று கவனி?

துரை — காலின் அடியிலுள்ள மணல் சரிந்து தண்ணீர் ஓடுகிற பக்கம் போகிறது.

மாணிக்கம் — இதுவும் தண்ணீர் ஓடும்போது செய்யும் வேலைதான். ஓட்டமுள்ள தண்ணீர், தான்செல்லும் தரையிலுள்ள மண், மணல் முதலியவற்றை அடித்துக்கொண்டு போகிறது. மற்றும் இந்தக் கரையைக் கவனி, என்ன நடக்கிறது?

துரை — கரைகள் சரிந்து சரிந்து விழுகின்றன. அது ஏன் மாணிக்கம்?

மாணிக்கம்—ஏனென்றால், தண்ணீரின் ஓட்டத்துக்குத் தடையான கல், கரை முதலியவைகளின்மேல் தண்ணீரின் திசை திரும்பி மோதி இடிக்கும்.

இந் நீரோட்டமானது நான் முன் கூறியதுபோல் அடித்தரையையும், வரவரக் கரைத்து, ஆற்றைப் பள்ள முள்ளதாக்கிவிடும்.

துரை — மாணிக்கம்! இந்தக் கல்லைப் பார், எவ்வளவு வழ வழப்பாயிருக்கிறது, அது ஏன் அப்படி இருக்கிறது?

மாணிக்கம் — நான் சொல்லுகிறேன் கேள். அதுவும் மற்றக் கற்களைப்போன்றதுதான். அக் கற்கள் தண்ணீரின் வேகத்தினால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அடித்துக்கொண்டு வருவதினால் அக்கற்களின் முனை மணலில் உரசி, உரசி, கூர்மழுங்கி, வழவழப்பாகின்றது. அது தான் நீ வைத்திருக்கும் கூழாங்கல்.

இப்படி கல், மண் இவற்றை அடித்துக்கொண்டு வருவதினால் மேடாயிருக்கும் பிரதேசத்திலுள்ள மண், மணல் இவைகளை அடித்துக்கொண்டு வந்து, பள்ளமாயுள்ள பிரதேசத்தில் சேர்க்கும். இதனால் ஆற்றின் ஆழம் பற்பல விடங்களில் பற்பல விதமாய் வித்தியாசப்படும். அதாவது ஏற்கனவே மேடாயிருந்த பக்கத்தில் உள்ள மண் மணல் முதலியவைகளை ஓடும் தண்ணீரானது அறுத்து அடித்துக்கொண்டுவரும். அப்படி வருவதினால் முன் மேடாயிருந்தபாகம் பள்ளமானதாகும். முன்னமே பள்ளமாயுள்ள நதிப் பிரதேசத்தில் ஓடிவரும் தண்ணீரானது மேடாயுள்ள இடத்திலிருந்து அடித்துக்கொண்டு வரும் மண், மணல் முதலியவை தங்கி ஏற்கனவே பள்ளமாயுள்ள இடத்தைச் சற்று மேடாக்கி ஆழத்தைக் குறைக்கும். ஆகையால் ஓடும் தண்ணீரானது தான் ஓடும் தரையை சமமாக்குகிறது.

துரை — நீ சொன்ன விஷயங்கள் என் மனத்தில் நன்றாய்ப் புலப்பட்டன. நேரமாகிறது நாம் வீட்டுக்குப் போவோம், வா.

M. ADAICKALASWAMY,
Teacher, R. C. St. Mary's Feeder School,
Puthoor, Trichinopoly

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1913வது நொவெம்பர்மீ | மாதம் 6.



INDIA
இந்தியா

THEN & NOW — அன்றும் இன்றும்

இடம் :	பாஞ்சாலத்தில் ஓர் அரண்மனை.
காலம் :	முன்மாலை.
பாத்திரங்கள் :	மஹா அலெக்ஜாந்தர், இந்தியமாதா, கிரேக்க வீரர்கள்.

[அலெக்ஜாந்தர் அரண்மனையின் முன்நிலில் நின்று அதன் அமைப்பையும் அழகையும் முற்றும் உற்றுநோக்கி]

அலெக்ஜாந்தர் — ஆஹா, இந்த அரிய அரண்மனையின் அமைப்பே அமைப்பு, அழகே அழகு! நாட்டின் வனப்பேபோல் வீட்டின் வனப்பும் அமையுமன்றே! இந்த அரண்மனையின்

அமைப்பைக் கவனித்தால் இத் தேசத்தின் சிறப்புகளெ யெல்லாம் விளங்கக் காட்டும் பளிங்குபோல் தோன்று-கிறது. ஆஹா, இந்தச் சிற்பத்தொழில் எவ்வளவு சிறந்து விளங்குகிறது! சித்திரமென்றலும் சித்திரமா இது! கண்-ணைக் கவர்கின்றதே! இந்தச் சலவைக் கற்கள் சந்திரனெ-யும் கருகச் செய்யுமே. கருங் கல்லில் இத்தகைய சிற்பத் தொழில் செய்தவன் திறமையை என்னென்று கூறலாம்! இதற்குமுன் நமது சிற்பிகளின் திறமை என்னுகும்! பூமி வளத்திற்கேற்கப் புத்திவளமும் அமையுமன்றே. இவ்-வளவு சிறப்பில்லாவிடில் இந்தப் பெருமாட்டிக்கு ஜகப் பிரசித்தமான கீர்த்தி ஏற்படுமா! — எப்போது காண-லாமோ — யாராவது வந்தாலும் கேட்கலாம் (இரண்டடி எடுத்து வைத்து எட்டிப் பார்க்கிறான்) கதவா இது! பொன் மஹிபோல் தோன்றுகின்றதே! 'நாடா வளத்தது நாடு' என்பது இதுவே யன்றே!

[இந்தியமாதா வருகிறாள்]

இந்தியமாதா — ஐயா! வாருங்கள், இதோ இப்படி அமருங்கள்.

அலெக்ஜாந்தர் — தாங்களும் அப்படி இருக்கலாமே.

இந்தியமாதா — அதற்கென்ன, வந்தவர்களை உபசரிப்பது இருப்-பவர் கடமை யன்றே. (உட்கார்ந்து) தாங்கள் —? எப்-போது வந்தீர்கள்?

அலெக்ஜாந்தர் — எமது நாடு நெடுந்தூரம், கிரீஸ் தேசம் என்-பது கேட்டிருக்கலாமோ?

இந்தியமாதா — கிரீஸ் தேசமா — ஆம், கேள்விதான். அத் தேசத்தை யாளும் அலெக்ஜாந்தர் என்னும் மன்னவரைப் பற்றியும் கேள்வியுற் றிருக்கிறேன்.

அலெக்ஜாந்தர் — (புன்னகையோடு) அப்படியா, அலெக்ஜாந்தரா, இவ்விடத்திற்கும் எட்டக்கூடிய பேர் பெற்றது என் பாக்-கிய வசந்தான்.

இந்தியமாதா — தாங்கள்தானு, சந்தோஷம், நெடுந்தூரத்தி-னின்றும் வந்திருக்கிறீர்கள், என்ன விசேஷமோ?

அலெக்ஜாந்தர் — தங்களையும் தங்கள் நாட்டையும் காண்பது தான் விசேஷம்.

இந்தியமாதா — என்ன இருந்தாலும் தங்கள் நாடு மேல்நாடே-யன்றே?

அலெக்ஜாந்தர் — மேல்நாடுதான், வளம்அற்றிருப்பதால் மேல் நாடாக இருக்கிறது; வளம் உற்றிருப்பதால் தங்கள் நாடு கீழ்நாடாக இருக்கிறது. இரண்டையும் தராசில் வைத்தா-லும் சாக்ஷியம் ஏற்படுமே.

இந்தியமாதா — (புன்னகையோடு) உபசாரமாகக் கூறலாம்.

அலெக்ஜாந்தர் — உபசாரமா, உண்மையாகவே கூறுகின்றேன். டரையஸ் முதலிய பர்ஷியர்கள் இந்த நாட்டைப்பற்றிக் கூறியபோது எல்லாம் புனைந்துரை யென் றெண்ணினேன். இந்த நீர்வளம், நிலவளம், செல்வப் பெருக்கு முதலிய-வற்றை நேரிற் காணும்போது அவர்கள் கூறியது குறைவே என்று எண்ணுகிறேன். எங்கள் நாட்டிற்கும் சிறப்புகள் உண்டு, அவை யாவும் சாஸ்திர சம்பந்தமானவை; கல்வி யும் கல்விமான்களும் மிகுந்த நாடென்று கூறலாம்.

இந்தியமாதா — எங்களுக்கும் சாஸ்திரங்களுண்டு. இங்கும் அரிய கல்விமான்கள் இருக்கின்றனர். (எழுந்து ஒருபுறத்-தைச் சுட்டி) சற்று இப்படி வந்து பார்க்கலாமே; இவை யாவும் சாஸ்திரங்களே.

அலெக்ஜாந்தர் — இவ்வளவும் சாஸ்திரங்களா? என்னென்ன சாஸ்திரங்களோ?

இந்தியமாதா — இவை யனைத்தும் வேத சம்பந்தமானவை, இவை தர்க்க வியாகரணங்கள்.

அலெக்ஜாந்தர் — அவை?

இந்தியமாதா — அவை வைத்தியம், ரசாயனம், தாவரம், பூமி, வானம் முதலியவற்றைப் பற்றியவை.

அலெக்ஜாந்தர் — (ஒரு சுவடியைப் பிரித்துப் பார்த்து) இதென்ன சாஸ்திரம்? பலவிதமான கீற்றுக்கள் விளங்குகின்றனவே!

இந்தியமாதா — இதுவா, இது மிகவும் அருமையான சாஸ்-திரம், சேஷத்திர கணிதம் என்பது இதுதான்.

அலெக்ஜாந்தர் — சேஷத்திர கணிதமா — இது —?

இந்தியமாதா — க்ஷேத்திர கணிதம் பூமியின் அளவைக் குறிக்கும் சாஸ்திரம்.

அலெக்ஜாந்தர் — அப்படியா, எண்ணிறந்த நூல்கள் ஒவ்வொன்றிலும் இருக்கின்றன. இதில் கால் கூறும் இராதே எங்களுக்கு. ஆஹா, நம் இருவர் நாடும் ஒற்றுமைப்பட்டு உழைத்தால் உலகத்தில் உச்சநிலை பெற்று விளங்குமே.

இந்தியமாதா — அதற்கென்ன.

அலெக்ஜாந்தர் — நாம் மனமொத்து மணம் பெற்றால், 'அதற்கென்ன' என்பதற்கு அர்த்தம் ஏற்படும்.

இந்தியமாதா — மணமா, கன்னிகைக் கன்றே மணம் வேண்டும்; கடவுளரே என் காவலர்; மற்றையோரை மணஞ் செய்வது மரபன்று. என் மைந்தருக்கு அது மனஞ் சகிக்குமோ. அவர்கள் மகிழுமாறு நடப்பதே என் கருத்து; அவர்கள் இன்புறக் காண்பதே எனக்கு இன்பம். அவர்கள் இவ் வகையில் சிறிதும் இஷ்டங் கொள்ளார்கள்.

அலெக்ஜாந்தர் — அவர்கள் இஷ்டம்போல் செய்ய எனக்கு யாதும் தடை யில்லையே.

இந்தியமாதா — இருக்கலாம், இவ் விஷயத்தை அவர்கள் கேட்கவும் மனம் பொறார்கள்.

அலெக்ஜாந்தர் — ஆனால் நான் வந்ததும் வீண்தானே?

இந்தியமாதா — வீண் என்ன, தங்கி யிருந்து இந்நாட்டின் இயல்புகளை யெல்லாம் நன்கு உணர்ந்து போகலாமே.

அலெக்ஜாந்தர் — சரி, இருக்கட்டும், யான் விடை கொள்ளுகின்றேன்.

இந்தியமாதா — ஆஹா, அப்படியே.

[இந்தியமாதா வழி விடுகிறாள்; அலெக்ஜாந்தர், தன் வீரர்களுக்குச் சமிக்ஞை காட்டுகிறான்; அவர்கள் சாஸ்திரங்களை யெல்லாம் வாரிக்கொண்டு ஓடுகிறார்கள்.]

இரண்டாங் காட்சி

இடம் : அரண்மனை.
காலம் : காலை.
பாத்திரங்கள் : இந்தியமாதா, புத்தர், பௌத்த பிக்ஷு.

[இந்தியமாதா புஸ்தகசாலையைப் பார்த்து ஒன்றும் காணமல் வருந்துகிறாள்.]

இந்தியமாதா — ஐயோ, என்ன இது! இங்கிருந்த சுவடிகள் எல்லாம் எங்கே? ஒன்றையுங் காணேமே! இனி, என் மக்களுக்கு என்ன ஆதரவு! ஐயோ,

1. நன்மை செய்திட வந்தவர் என்று
நாடியே மனம் மகிழ்ந்தேனே
தின்மை செய்திடும் கிரேக்கருக்கென்றன்
செல்வம் யாவும் இழந்தேனே.

2. மக்களே யுங்கள் செல்வம் யாவையும்
வஞ்சகர் கொண்டு போனாரே
தக்கவா றுமை யாதரித்திடச்
சாரும் புண்ணியர் யாவரே.

புத்தர் — அம்ம, ஏன் இவ்வாறு வருந்துகின்றீர்? உமக்கு என்ன நேர்ந்தது?

இந்தியமாதா — முனிவர! என் குறையை என்னென்று கூறுவேன். என் மக்கள் மனம் போனவாறு திரிகின்றனர். அவர்கள் பொருட்டு யான் அரிதில் தேடிவைத்த செல்வங்களை அன்னியர் வந்து அபகரித்துக்கொண்டு போகின்றனர். என்ன செய்வேன்.

புத்தர் — அம்ம, வருந்த வேண்டா, உன் மக்கள் உணர்ச்சியின்றி இவ்வாறு இருக்கின்றனர். அவர்களுக்குத் தக்கவாறு புத்திமதிகள் போதிப்பாரில்லை.

எல்லோர் தமக்கும் இறையொன் றேயெனும்
நல்லதோ ருணர்வை நாடிடல் வேண்டும்

மாந்தர் கொண்டுள்ள வகுப்பினை யொழித்து
ஏந்திய மதியால் எவரும் ஒன்றெனும்
சமநிலை கண்டதிற் சார்ந்திடல் வேண்டும்,
தமக்கொன் றுற்றால் தாமெண் ணுதல்போல்
அந்நியர் தமக்கொன்ற மைந்த காலையும்
முன்னியே யுதவ முயலுதல் வேண்டும்
யாவினு முதலா எறும்பீ றுக
ஆன எவையும் ஒன்றே யாமெனும்
நன்னிலை கண்டு நாடுதல் வேண்டும்
மன்னிய அமைதியால் மகிழ்ந்திடல் வேண்டும்.

அவர்கள் இந்தக் கொள்கைகளை மேற்கொண்டு நடந்தால் செல்வமெல்லாம் சிறக்க அடைவார்கள். இதன்பொருட்டு நீங்கள் அஞ்சவேண்டாம்.

இந்தியமாதா — முனிவர் நாயக! தேவரீர் இங்கே தங்கியிருந்து என் மைந்தர் சன்மார்க்கத்தை யடையுமாறு அருள்புரிய வேண்டும்.

புத்தர் — அம்ம, யாம் ஓரிடத்தில் நிலைத்திருப்பதில்லை யாம் மேற்கொண்ட கொள்கை ஓரிடத்திலிருக்க இடந்தராது. ஆயினும், உமது மைந்தருக்கு நல்வழி காட்ட நமது சீஷர்களில் ஒருவரை விட்டுப் போகின்றோம். அவர் இங்கேயே இருந்து ஏற்றது செய்வர். யாம் போய் வருகின்றோம்.

இந்தியமாதா — நமஸ்காரம், போய் வாருங்கள்.

[புத்தர் போகிறார், பிக்ஷு வருகின்றார்.]

இந்தியமாதா — சுவாமீ! நமஸ்கரிக்கின்றேன். தங்கள் அருளால் என் மக்கள் தலையெடுக்க வேண்டும். இதுவே அடியாள் வேண்டுகோள், மனங்கொண்டு நல்வழிகாட்டி, அருள் புரிக.

பிக்ஷு — அப்படியா, நல்லது, அவ்வாறே யாகுக. உன்மக்கள் உன்னத பதவியை யடைய வேண்டுமானால், ஒரே தெய்வத்தினிடத்தில் ஊன்றிய நம்பிக்கை கொள்ள வேண்டும், அத்தகைய தெய்வம் புத்த ரென்றே தேறவேண்டும்.

யாகாதிகிருத்தியங்களையும் இதர அனுஷ்டானங்களையும் அறவே கைவிட வேண்டும். யான் கூறும் சில அனுஷ்டானங்களைக் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஒற்றுமை யென்பது ஏற்படும். அதுவரையில் உன் மக்கள் இவ்வாறே இருப்பார்கள்; எதற்கும் பயன்பட மாட்டார்கள்.

இந்தியமாதா — சுவாமி தாங்கள் சொல்லுவது முற்றும் மாறுக இருக்கிறது; எங்கள் அனுஷ்டானங்களைவிட்டு, உங்கள் அனுஷ்டானங்களை மேற்கொள்வதா! இதற்கு என் மக்கள் சற்றும் உடன்பட மாட்டார்கள். அனுஷ்டானத்தைவிட்டு அறிஞர்க ளாவதெப்படி. வேண்டாம், அவர்கள் இப்போது இருப்பது போலவே இருக்கட்டும்; தாங்கள் போய் வாருங்கள். தாங்கள் வந்த சிரமத்திற்கு அநேக வந்தனம் புரிகின்றேன்.

பிக்ஷு — சரி, உன் இஷ்டம். நற்புத்தி ஏறுக, போய் வருகின்றோம். [பிக்ஷு போகிறார்]

மூன்றாங் காட்சி

இடம்:	அரண்மனை.
காலம்:	மாலை.
பாத்திரங்கள்:	இந்தியமாதா, தைமர்.

இந்தியமாதா — ஏதோ சமயத்திற்கேற்ற புத்தி யுண்டாயிற்று. குருவுக்கும் சீஷருக்கும் இவ்வளவு வித்தியாசமா? — புத்தர் தமக்குமேல் ஒரு கடவுள் உண்டு என்கிறார்; அவர் சீஷர் புத்தரே கடவுள் என்கிறாரே. அனுஷ்டானமே வேண்டாம் என்பவர் தாமும் பல அனுஷ்டானங்களை மேற்கொண் டிருக்கிறாரே! என்ன விபரீதம்! மதங்களெல்லாம் இப்படித்தான் மாறுபடுமோ. புத்தர் கூறும் புத்திமதிகளால் நமது புத்திரர் ஒற்றுமைப்பட்டு உயர்வடைவார்களென்று மகிழ்ச்சி யடைந்தேனே. என்

மகிழ்ச்சி யெல்லாம் மண்ணைக் போயிற்றே. நமக்கு இந்த நிலையும் ஏற்படுமா !

[தார்த்தாரியர் வருகின்றனர்]

லால லால லாலலா லால லால லாலலா
லால லால லாலலா லால லால லாலலா.

1. கூடிக்கூடி வாருங்கள் கூட்டமாக வாருங்கள்
நாடிநாடிப் பாருங்கள் நல்லபொருளைச் சேருங்கள்.

2. தூரித்தூரி நுழையுங்கள் சொந்தமாக அழையுங்கள்
வாரிவாரி அடையுங்கள் வந்தால் ஒட்டம் பிடியுங்கள்.

ஒருவன் — ஏ அம்மே! என்ன சொல்றே? வந்தவங்க சும்மா போகமாட்டோம். அதோ இருக்கிறார் எங்க ராஜா, சரியா பாரு.

இந்தியமாதா — என்ன பார்க்கிறது? நீங்கள் யார்? ஏன் இங்கு வந்தீர்கள்? வந்ததும் அன்றி, அன்னியர் வீட்டை இப்படி அதம் செய்கிறீர்களா?

ஒருவன் — அதமென்ன, சதமென்றுதான் செய்கிறோம்.

இந்தியமாதா — வேண்டா, இது உங்களுக்கு அடுக்காது.

தைமர் — அடே, அப்படி யெல்லாம் செய்யலாகாது. இருங்கள், நான் ஏற்றவாறு சமாதானம் சொல்கிறேன். கொஞ்சம் அகன்றிருங்கள்.

நவன் — அப்படியே, இனி உங்கள் இஷ்டம். இதோ எட்டி நிற்கிறோம்.

தைமர் — மாதே! வருந்தவேண்டாம். நான் உன்னை மூன்னின்று காக்கிறேன். நீ என் மனம்போல் நடந்தால் உன் மைந்தரெல்லாம் சுகப்படுவார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு என்றும் துன்பந்தான் நேரிடும்.

இந்தியமாதா — துன்பமா, இருக்கட்டும். உங்களால் வருவது இன்பமே யானாலும் எனக்கு இஷ்டமில்லை.

தைமர் — இஷ்டமில்லை யென்றால் என் வீரர்கள் உன்னைப் பிடித்துக் கஷ்டப்படுத்துவார்கள். வேண்டாம், சொல்வதைக் கேள், சுகப்படுவாய்.

இந்தியமாதா — என்னையா பிடிப்பார்கள்? என்னையா கஷ்டப்படுத்துவார்கள்? எங்களுக்கு இல்லாத சுகம் இனி உங்களால்தானே ஏற்படப் போகிறது. வேண்டியதில்லை, நீங்கள் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போங்கள்.

தைமர் — போவதா? வீரர்களே உங்கள்வேலை ஆகட்டும்.

வீரர் — இதோ ஒரு நிமிஷம். (சமீபிக்கிறார்கள்) அப்பப்பா, சுடுதே, கொதிக்கிதே, அனல் வீசுதே.

[உடம்பைத் துடைத்துக்கொண்டு ஓடுகின்றனர்.]

தைமர் — என்ன இது, ஓடுகிறீர்களே? வீரர்களா நீங்கள்? அனல் என்கிறீர்களே, நெருப்பெங்கே இருக்கிறது? சோம்பேறிகள், இதோ பாருங்கள், இப்படி வாருங்கள். (சமீபத்தில் போகிறான்; இந்திய மாதா உறுத்துப் பார்க்கிறாள்) ஐயையோ சகிக்க முடியவில்லையே! நெருப்பானாலும் நெருப்பா இது! நெருப்பையும் எரிக்குமே இந்தப் பெரு நெருப்பு! கிட்டிப்போக முடியாது, எட்டவே இருங்கள். நாம் வந்த வழியைப் பார்க்கவேண்டியதுதான்.

வீரர்கள் — போறது போறோம், சும்மா போகக்கூடாது. நம்ப வேலையைக் கொஞ்சம் காட்டிவிட்டுப் போவோம்.

[பொருள்களை வாரி எடுத்துக் கொள்கிறார்கள்.]

இந்தியமாதா — இந்த அனியாயமும் உண்டா! கேட்பாரற்ற வீடென்ற இப்படிச் செய்கிறீர்கள். எளியோரை வலியோ ரடித்தால் வலியோரைத் தெய்வந்தான் வாட்டும்.

[கிட்டே போகிறாள்.]

மற்றவர்கள் — நெருப்பு வருதுடா, ஓட்டம் பிடிங்கடா.

[ஓடுகின்றனர்.]

நான்காங் காட்சி

இடம் :	அரண்மனை உபவனம்.
காலம் :	பிற்பகல்.
பாத்திரங்கள் :	ஆக்பர், இந்தியமாதா.

[இந்திய மாதாவும் ஆக்பரும் உபவனத்தில் உட்கார்ந்து உல்லாசமாகச் சம்பாஷிக்கின்றனர்]

ஆக்பர் — விருந்தாக வந்து வேண்டிய தெல்லாம் அனுபவித்து வருகிறேன். நீங்கள் புரியும் நன்மைக்கு ஓர் அளவு முண்டோ. இப்படி யிருந்தால் எப்படி? இதற்கு ஏதேனும் முடிவு வேண்டுமே.

இந்தியமாதா — முடிவென்ன, இருக்குந்தனையும் இப்படியே இருக்கலாம்; எங்களால் இயன்ற வரையில் உபசரிக்கின்றோம்.

ஆக்பர் — உபசரிக்காமலா — உபசரணையோடு உள்ளமும் ஒத்திருந்தால் உத்தமமாக இருக்கும். தங்கள் புத்திரர்களைக் காணுந்தோறும் எனக்குச் சஞ்சலமுண்டாகிறது; அது விஷயத்தில் உங்களுக்கும் மனக்குறை இருப்பதாகவே தோன்றுகிறது.

இந்தியமாதா — ஆமாம், என்ன செய்யலாம். எத்தனையோ பேர் வந்தார்கள், ஏதேதோ சொன்னார்கள், ஒருவரும் உண்மை யுள்ளவர்களாகக் காணவில்லை. மனத்தில் ஒன்றும் வாக்கில் ஒன்றும் வைத்துப் பேசுகிறார்களே.

ஆக்பர் — உண்மைதான், எல்லோரையும் அப்படி எண்ணவொண்ணுது. நானும் இங்கு வந்து கொஞ்சகாலமாகிறதே, எனது எண்ணமும் உமக்குத் தெரிந்திருக்கலாம். வார்த்தையில் என்ன இருக்கிறது? செய்கையில் பார்க்க வேண்டும். எல்லோரையும் அந்நியராக எண்ணிவிடலாமா?

இந்தியமாதா — அந்நியமாக நினைப்பதும் சொந்தமாக நினைப்பதும் தங்கள் மனம் அறியாதா?

ஆக்பர் — அறிந்ததனால்தான் இவ்வளவு நேருங்கிப் பேசுகிறேன். உமது மைந்தர்கள் தந்தையற் றிருப்பதும் என் மைந்தர்கள் தாயற் றிருப்பதும் சற்றே கவனிக்க வேண்டும். நாமிருவரும் மனமொத்து சதிபதிகளாக இருந்தால் எல்லாம் சரியாகமுடியும்.

இந்தியமாதா — (சற்று மயங்கி) சதிபதியாவதா—ஐய! இதுவோ ஆயிரங் காலத்துப் பயிர்; ஆயிற்று போயிற்று என்று செய்கிற காரிய மன்று. தீரயோசிக்க வேண்டும். சில நாட்கள் பொறுத்து விடை கூறுகின்றேன்.

ஆக்பர் — அவசரமென்ன, அப்படியே யாகட்டும். தாம் இதற்கு இசைந்தால், தமது மனம்போல் நடப்பதோடு, தமது மக்களுக்கு என்றும் எவ்வகையிலும் நன்மையே நாடுவேன். என் மக்களோ தாயற்றவர்களாய்த் தனியே வந்திருக்கின்றனர். அவர்களைத் தாங்கள் கைசோர விடலாகாது. இதுவே என் வேண்டுகோள். நான் என்றும் இந்த நன்றியை மறவேன்.

இந்தியமாதா — பார்ப்போம். 'எண்ணித் துணிக கருமம்' என்பதையும் கவனிக்க வேண்டுமே.

[இருவரும் பிரிந்து போகின்றனர்]



ஐந்தாங் காட்சி

இடம் : ஒரு மாளிகை.
காலம் : காலை.
பாத்திரங்கள் : ஆக்பர், அவன் குமாரர்.

[ஆக்பருடன் அவன் புத்திரர் குறைகூறி முறையிடுகின்றனர்]

பிள்ளை 1. — நீங்கள் என்ன சொன்னலும் ஒப்பமாட்டோம். எங்களைப் பக்ஷபாதமாக நடத்துவதை நாங்கள் இன்னும் பொறுக்கமாட்டோம்.

ஆக்பர் — பக்ஷபாதம் என்பது ஒரு போதும் இராது. நீங்களும் ஒன்றுதான் அவர்களும் ஒன்றுதான்.

பிள்ளை 2. — பார்த்தீர்களா, இதிலேயே தெரியவில்லையா உமது வஞ்சகம், நாங்களும் அவர்களும் ஒன்று தானே? பேஷ், நன்றாயிருக்கிறது.

ஆக்பர் — பிள்ளைகளே! நீங்கள் சிறிதும் யோசியாமல் பேசுகிறீர்கள். அவர்கள் இருந்த குடி, நாம் வந்த குடி; அவர்கள் உபசரணையில் நாம் தங்கி இருக்கிறோம். அவர்களோடு நாம் சமமாக இருப்பதே விசேஷமல்லவா?

பிள்ளை 1. — உமக்கே இவ்விதத் திருப்தி ஏற்பட்டு விட்டதா! இன்னும் எங்களுக்கு என்ன குறை, போதும், போதும். இனி உம்முடைய தயவு கொஞ்சமும் வேண்டாம்; தாயைத் துறந்த அன்றே தந்தையையும் துறந்தோம் என்று எண்ணிக் கொள்கிறோம்.

பிள்ளை 1. — இதெல்லாம் சொன்னல் அவருக்கு ஏற்குமா, மயக்கம் தலைக்கு ஏறியிருக்கிறதே. கண்டால் போதும், பேசினல் போதும் என்று இருக்கிற சமயம். இனி நாம் அவரை எதிர் பார்த்துப் பயனில்லை, வாருங்கள் போவோம்.

பிள்ளை 4. — ஏண்டா இப்படி ஏசுகிறீர்கள். முன்பின் யோசிக்காமல் பேசுகிறீர்களே, அவர் சொல்வது நியாயந்தானே என்று இருந்தாலும் நாம் வந்த குடிகளேயன்றோ. பல-

வகையினும் அவர்களை அனுசரித்திருந்தால் நமக்கு நன்மையுண்டு. புத்தியிருந்தால் இதை யோசிக்கமாட்டீர்களா?

சிலர் — எங்களுக்கா புத்தியில்லை. புத்தியுள்ளவன் அவரோடு சேர்ந்துகொண்டாயோ. (திரும்பிப் பார்த்து) அடே, உங்களுக்கு வெட்கமில்லையா? ஒருசிறுபயல் உங்களுக்குப் புத்தியில்லை என்று சொல்வது, நாம் கேட்டுக்கொண்டிருப்பதா! சொல்லும் போதே ஒன்று கொடுத்தால் இப்படிப் பேசுவானு.

[சண்டை யிடுகின்றனர்; ஆக்பர் விலக்குகிறான்; சில அடிகள் தவறி ஆக்பர்மேல் படுகின்றன.]

ஆக்பர் — அப்பா, பொறியில் பட்டுவிட்டதே! ஐயோ, பிள்ளைகளே! இந்தியமணீ! ஆ - ஆ - ஆ.

[விழுந்து விடுகிறான்]

ஆறாங் காட்சி

இடம் : அரண்மனை.
காலம் : முற்பகல்.
பாத்திரங்கள் : ஐரோப்பியர் நால்வர், இந்தியமாதா, இந்திய குமாரர்கள்.

[இந்தியமாதா தன் அரண்மனையில் உட்கார்ந் திருக்கிறாள். 'நான்கு வெள்ளைக்காரர்கள் வருகிறார்கள்]

போர்த்துக்கேசியன் — அம்மா, சலாம்.

இந்தியமாதா — சலாம் ஐயா, வாருங்கள்.

டச்சுக்காரன் — சலாம் அம்மா.

இந்தியமாதா — சலாம் ஐயா, உட்காருங்கள்.

இங்கிலிஷ்காரன் — (பிரெஞ்சுக்காரன் உடன்வர) சலாம், சலாம்.

இந்தியமாதா — சலாம், சலாம், இப்படி இருங்கள். எல்லாரும் ஒன்றுகூடி எங்கு வந்திர்கள்? என்ன விசேஷம்?

போர்த்துக்கேசியன் — அம்மா! நாங்கள் தங்கள் வீட்டின் சிறப்பைக் கேட்டுப் பார்க்கலாம் என்று வந்தோம். உத்தரவானால் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகிறோம்.

இந்தியமாதா — அதற்கென்ன, வீடென்றிருந்தால் பலரும் வரத்தானே வேண்டும். நீங்கள் என் வீட்டைப் பார்ப்பதில் ஆக்ஷேபமில்லை. அதிக சந்தோஷமே. ஆனால், முன்பு ஒருவர் உங்களைப்போலவே வந்தார். அவர் இனிய மொழிகள் கூறி, ஏமாந்திருக்கும் சமயத்தில் ஏதேதோ செய்துவிட்டுப் போனார். அவற்றையெல்லாம் தங்களிடத்தில் சொல்வது மரியாதை யன்று.

இங்கிலிஷ்காரன் — அம்மா! எங்களை அப்படி எண்ண வேண்டாம். நாங்கள் நாட்டு வளப்பத்தைப் பார்க்க வந்தவர்கள். தங்களுக்கு இஷ்டமிருந்தால் பார்க்கிறோம். இல்லாவிட்டால் போகிறோம். பிறருடைய வீட்டில் அவர்கள் உத்திரவில்லாமல் பிரவேசிக்க மாட்டோம்.

இந்தியமாதா — முன்புபட்டதைச் சொன்னேன். உங்களை வேண்டாமென்று மறுக்கவில்லை. தடையின்றி சென்று பாருங்கள்.

பிரேஞ்சுக்காரன் — சந்தோஷம், பார்த்து வருகிறோம்.

[செல்கின்றனர்.]

டச்சுக்காரன் — ஆஹா, என்ன கட்டடம், என்ன அமைப்பு, இவ்வளவு பெரிய கட்டடத்தில் ஒரு துண்டு மரமும் இல்லையே! இந்தச் சிற்ப வேலையைப் பாருங்கள். சித்திரம் கருங்கல்லில் இவ்வளவு அழகாக அமையுமோ. இந்தத் தந்தப் பெட்டியைப் பாருங்கள் சந்தனமும் தந்தமும் இணைந்திருக்கிறது. இது மனிதன் செய்ததென்று மதிக்கக்கூட வில்லையே.

பிரேஞ்சுக்காரன் — அது இருக்கட்டும், இந்தத் திரைச்சீலையைப் பார். இது பஞ்சோ? பட்டோ? பஞ்சுதான். பஞ்சு இவ்வளவு மெல்லிய இழையாக வருமோ. எப்படித்தான் இந்த இழையை எடுத்திருப்பான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே.

போர்த்துக்கேசியன் — எல்லாம் சரிதான், ஆச்சரியப்பட்டு ஆகிற காரியம் என்ன? இவைகளில் கொஞ்சம் கொஞ்சமாவது நமது நாட்டிற்குக் கொண்டுபோனால் குணமாக இருக்கும். அதற்கு யோசியுங்கள்.

இங்கிலிஷ்காரன் — சரிதான், ஆகிற காரியமா அது. நாம் உள்ளே வரக்கேட்டபோதே சொன்னதைக் கவனி.

போர்த்துக்கேசியன் — ஆமாம் அவர்கள் திருடிக்கொண்டு போனார்களாம், நாம் கேட்டு வாங்கிக்கொண்டு போவதில் தடையென்ன?

இங்கிலிஷ்காரன் — முன்னமே எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டாளே, கொஞ்ச நஞ்சம் இருப்பதையும் கேட்டால் கொடுப்பாளா? வீண்பேச்சு, சும்மா வாருங்கள்.

[சுற்றி வருகிறார்கள். இந்திய மைந்தர் சண்டை யிட்டுக்கொண்டு இருக்கின்றனர்]

க்ஷத்திரியன் — என் வல்லமையால் நான் சம்பாதித்தது, நான் எப்படியாவது செய்கிறேன், உனக்கென்ன?

பிராமணன் — நீ சம்பாதித்தால், புத்தியுள்ளவர்களிடம் யோசிக்கவேண்டாமா? தேக பலத்தைவிடப் புத்தி பலம் சிறந்ததல்லவா?

க்ஷத்திரியன் — என் பொருளை அனுபவிக்க உன் புத்தியைக் கேட்க வேண்டுமோ? எனக்கு புத்தியே இல்லையோ?

வைசியன் — ஏன் இப்படி வாதிடுகிறீர்கள். நல்ல பெட்டி; அருமையாகச் செய்திருக்கிறது; இப்படிக் கொண்டுவா, நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கிறேன்.

க்ஷத்திரியன் — உன்னிடமும் கொடுக்க வேண்டுமா? நல்லதாயிற்று, நீ போய்வா.

வைசியன் — உன்னிஷ்டம், நல்லது சொன்னால் உனக்கு ஏற்குமா?

க்ஷத்திரியன் — நல்லதாவது கெட்டதாவது, இனி பேசினால் உதைதான், பத்திரம்.

[நான்கு ஐரோப்பியர்கள் வருகின்றனர்.]

போர்த்துக்கேசியன் — ஐயா, ஏன் இப்படி வாதிடுகிறீர்கள்? என்ன வஸ்து அது?

கூஷத்திரியன் — இவர்கள் யார், வெள்ளை வெளேர் என்று இருக்கிறார்கள்! இவர்களுக்கு இது இன்ன வஸ்து வென்றே தெரியவில்லையே — இது என்னவென்று கேட்கிறீர், இது தந்தப் பெட்டி.

போர்த்துக்கேசியன் — பெட்டியா, எதோ, இப்படிக் காட்டும் பார்ப்போம்.

கூஷத்திரியன் — இதோ பாரும்.

[கொடுக்கிறான், போர்த்துக்கேசியன் பெட்டியைத் திறந்து பார்க்கிறான், மற்றையோர் அதை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள்.]

டச்சுக்காரன் — ஆஹா, என்ன வேலைப்பாடு! நமது ஊரில் நன்றாய் விலைபடும்.

இங்கிலிஷ்காரன் — ஏதோ, இப்படிக் கொடும், சரியாகப் பார்ப்போம்.

போர்த்துக்கேசியன் — பார்ப்பதென்ன, இப்படியே பாருமே.

[போர்த்துக்கேசியன் ஒரு சிறு துப்பாக்கியை எடுத்து வெடிதீர்க்கிறான்.]

கூஷத்திரியன் — என்ன அது! என்ன அது! இப்படிக் காட்டும் பார்ப்போம்.

[கொடுக்கிறான். கூஷத்திரியன் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்க்கிறான்.]

பிராமணன் — என்ன, திருப்பித் திருப்பிப் பார்க்கிறாயே, ஒரு வெடி போடேன்,

கூஷத்திரியன் — அதற்குத்தான் பார்க்கிறேன். ஒன்றையும் காணோமே. (போர்த்துக்கேசியனைப் பார்த்து) ஐயா, இது எப்படி? சற்றே காட்டும்.

[போர்த்துக்கேசியன் மருந்து வைத்து வெடிதீர்க்கிறான்.]

கூஷத்திரியன் — ஓஹோ, அப்படியோ, தெரிந்தது, தெரிந்தது. அதில் ஏதோ ஒன்று வைத்துச் சுடவேண்டுமோ? சரிதான், இதன் பெயர் என்ன?

[போர்த்துக்கேசியன் மயங்குகிறான். இங்கிலிஷ்காரன் சொல்லுகிறான்]

இங்கிலிஷ்காரன் — இதன் பெயர் கன். (Gun)

கூஷத்திரியன் — கன் — கன், என்ன இது, இது ஒரு பேரா!

பிராமணன் — உனக்கு அது இஷ்டமில்லா விட்டால் வேறு பெயர் வைத்துக் கொள்ளேன்.

கூஷத்திரியன் — புது வஸ்துவுக்கு நாமென்ன பெயர் வைக்கிறது?

பிராமணன் — இது தானே தெரியாது, வெடிக்கும் போது டுப் என்று கேட்கிறதே 'டுப்பாக்கி' என்று சொன்னால் போகிறது.

கூஷத்திரியன் — சொல்லுக்கு முதலில் டு வருமா? யோசிக்காமல் சொல்கிறாயே.

பிராமணன் — டுப்பாக்கி என்பதை துப்பாக்கி என்று மாற்றிச் சொன்னால் போகிறது.

கூஷத்திரியன் — சரிதான், சரிதான், துப்பாக்கி. (போர்த்துக்கேசியனைப் பார்த்து) ஐயா, இது என்ன விலை?

போர்த்துக்கேசியன் — அது அதிக விலை, உங்களால் வாங்க முடியாது. இஷ்டமானால், பண்டங்களை மாற்றிக் கொள்வோம். நீ அந்தப் பெட்டியைக் கொடு, நான் இந்தத் துப்பாக்கியைத் தருகிறேன்.

கூஷத்திரியன் — சரிதான், மாற்றிக் கொள்வோம்.

பிராமணன் — (கூஷத்திரியனைப் பார்த்து) அவசரப்படாதே, யோசித்து வாங்குவோம்.

போர்த்துக்கேசியன் — (பிராமணனைப் பார்த்து) ஐயா, இப்படி வாரும், இதென்ன பார்த்தீர், வெகு ருசியான பழம், சாப்பிட்டுப் பாரும். [பிராமணன் மறைவில் சாப்பிடுகிறான்]

கூஷத்திரியன் — மாற்றிக்கொள்ளலாமா, இதை எடுத்துக் கொள்ளும்; துப்பாக்கியைத் தாரும்.

[மாற்றிக்கொள்கின்றனர். கூஷத்திரியன் துப்பாக்கியைச் சுடுகிறான்.]

டச்சுக்காரன் — (போர்த்துக்கேசியனைப் பார்த்து) நாம் இருவரும் இதைப் பங்கிட்டுக் கொள்ளலாம். இல்லாவிட்டால் உண்மையை வெளியிட்டு விடுவேன் ; என்ன சொல்கிறாய்.

போர்த்துக்கேசியன் — இங்கு ஒன்றும் பேசாதே, என்னோடுவா, சொல்லுகிறேன். [இருவரும் போகின்றனர்.]

இங்கிலிஷ்காரன் — (வைசியனைப் பார்த்து) துப்பாக்கியைப் பார்த்து மலைக்காதே. அது ஆபத்தை விளைக்கும். இதோபார் இந்த ஊதுகுழலை. [ஊதிக் காட்டுகிறான்.]

வைசியன் — நாமும் பண்டமாற்று செய்து கொள்ளலாமா.

இங்கிலிஷ்காரன் — உமக்கு இஷ்டமானால் அப்படியே செய்யலாம்.

[வைசியன் வாசனைத்திரவியம் கொடுக்கிறான். இங்கிலிஷ்காரன் ஊதுகுழல் கொடுக்கிறான். வைசியன் ஊதி ஊதிப் பார்க்கிறான்.]

ரிரேஞ்சுக்காரன் — (சூத்திரனைப் பார்த்து) நீயேன் எட்டி நிற்கிறாய்? உன்னிடத்தில் ஏதேனும் இருக்கிறதா?

சூத்திரன் — என்னிடத்தில் பஞ்சுதான் இருக்கிறது.

ரிரேஞ்சுக்காரன் — நல்ல துணி ஏதும் இல்லையா?

சூத்திரன் — கொஞ்சம் இருக்கிறது.

ரிரேஞ்சுக்காரன் — பஞ்சுந் துணியும் கொண்டுவா — உனக்கு எப்படிப்பட்டது கொடுக்கிறேன், பார். இனிப்பா யிருக்கும், இன்பங் கொடுக்கும், சுகத்தைக் கொடுக்கும், சோம்பலை நீக்கும். பார்த்தாயா இந்தப் புட்டியை.

சூத்திரன் — ஐயா, இதை என்ன செய்கிறது?

ரிரேஞ்சுக்காரன் — என்ன செய்கிறதா — உள்ளுக்குச் சாப்பிடுகிறது.

சூத்திரன் — அப்படியா, இப்படிக் கொடும்.

[சூத்திரன் பஞ்சும் துணியும் கொடுக்க, ரிரேஞ்சுக்காரன் ரிராந்தி கொடுக்கிறான். சூத்திரன் குடித்துக்கொண்டே விழுகிறான்.]

ஏழாங் காட்சி

இடம் : ஒரு வெளிப்புறம்.
காலம் : சூரியோதயம்.
பாத்திரங்கள் : இந்திய குமாரர், ஸர் கலஹாட்.

[இந்திய மக்கள் தம் பொருள்களை யிழந்து போராடுகின்றனர்]

க்ஷத்திரியன் — என் தந்தப் பெட்டி அனியாயமாகப் போயிற்றே! எவ்வளவு அருமையானது!

பிராமணன் — போகாமலிருக்குமா? நான் சொன்னால் கேட்டாயா?

க்ஷத்திரியன் — (வைசியனைக் காட்டி) இவனால்தான் போயிற்று. இவனைத்தான் உதைக்கவேண்டும்.

வைசியன் — இதென்ன அனியாயம், என்னாலா போயிற்று. நான்தான் நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கிறேனென்று சொன்னேன். இன்னும் உன்னால்தான் நான் கெட்டேன். எவ்வளவு மிளகு, எவ்வளவு ஏலக்காய்! எவ்வளவு வாசனைத் திரவியங்கள்! நீ கொடுத்ததைக் கண்டு நானும் கொடுத்து விட்டேன்.

க்ஷத்திரியன் — ஏன், சும்மா கொடுத்து விட்டாயோ? ஊது குழல் வாங்கிக்கொள்ள வில்லையா?

வைசியன் — நீ வாங்கியதாவது துப்பாக்கி, உறுதியானது; நான் வாங்கியது இரண்டுதரம் ஊதுவதற்குள் வெடித்து விட்டது. பிறகு ஊதவும் இல்லை.

க்ஷத்திரியன் — துப்பாக்கி உறுதியானதுதான், டப் டப் என்று இரண்டுதரம் வெடித்தது. மருந்தும் ஆய்விட்டது இனி, என்ன பயன். என் பெட்டியை முன்னமே விற்றிருந்தால் ஏமாந்திருக்க மாட்டோமே. முட்டாள் தனமாக நீ கெட்டதுமன்றி என்னையும் கெடுத்தாயே.

வைசியன் — நானா முட்டாள், நானா உன்னைக் கெடுத்தேன்.

க்ஷத்திரியன் — இவ்வளவு கர்வமா உனக்கு? [அடிக்கிறான்.]

வைசியன் — அடே என்னே இப்படி அடிக்கிறயே, உன்னைக் கேட்க ஒருவரும் இல்லையாடா?

க்ஷத்திரியன் — எவன் என்னைக் கேட்கிறவன், அடா என்ற கூப்பிடுகிறாய். அறைகிறேன் பார். [அறைகிறான்.]

வைசியன் — ஐயையோ, என்னால் பொறுக்க முடியவில்லையே, யாராவது வந்து பிடித்துக் கொள்ளுங்களேன்.

பிராமணன் — (வைசியனைப்பார்த்து) நீ யேண்டா வாயாடினை, உனக்கும் வேண்டும். (க்ஷத்திரியனைப் பார்த்து) அப்பா, சும்மாஇரு, ஏதோ புத்தியில்லாமல் சொல்லி விட்டான்.

க்ஷத்திரியன் — சும்மா இருக்கிறதா, நீர் போம், இவனுக்குக் கர்வம் பிடித்திருக்கிறது, ஈனஜாதிப் பயல்.

[அடிக்கப்போகிறான். ஸர் கலஹாட் வருகிறார்.]

ஸர் கலஹாட் — யாரப்பா நீங்கள்? ஏன் இப்படிச் சண்டை யிடுகிறீர்கள்?

க்ஷத்திரியன் — எங்களுக்குள்ளே சண்டை போடுகிறோம், உனக்கென்ன? நீ வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போ.

ஸர் கலஹாட் — நீங்கள் சண்டையிட்டு அடித்துக் கொண்டால் நான் பார்த்துக்கொண்டு போகிறதா? சமாதானமா யிருங்கள். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் இப்படிச் சண்டை இடலாமா? சகோதரர்கள் சமாதானமாக அல்லவோ இருக்கவேண்டும்.

பிராமணன் — எங்களுக்குத் தெரியாதா நாங்கள் இருக்க வேண்டிய மாதிரி — ஒருவர் சொல்லித்தர நாங்கள் நடக்கப் போகிறோம்.

ஸர் கலஹாட் — உங்களுக்குத் தெரியா தென்று நான் சொல்லவில்லை. உங்களுக்குத் தெரிந்ததைத்தான் மறந்திருக்கிறீர்கள்; நன்றாய் யோசித்தால் அது உங்களுக்கே தெரியும்.

வைசியன் — அதற்கென்ன, ஆனால் நாங்கள் யோசனை இல்லாமல் இருந்திருப்போமோ?

ஸர் கலஹாட் — நண்பர்களே, கோபிக்க வேண்டாம். நீங்கள் யோசித்துப் பார்த்தால் இப்படி உங்களுக்குள் சண்டை

யிடுவீர்களா? சண்டையிட்டு விரோதப்படுவதால் எவ்வளவு தீமை விளைகிறது! 'ஒற்றுமை இல்லாத குடும்பம் ஒருமிக்கக்கெடும்' என்பது உங்களுக்குத் தெரியாதா! ஒருவர் ஏதாவது சொன்னால் அதைத் தீரயோசித்துப் பார்க்க வேண்டும். இதோ பார்த்தீர்களா இவைகளை.

நால்வரும் — (ஒரே கூச்சலாய்) அதோ அந்தப் பெட்டி என்னுடையது — உனதல்லடா எனதல்லவா — இப்படிக் கொடுங்கள் என்னிடம்.

ஸர் கலஹாட் — அப்பா, சிறுவர்களே வீணே சண்டை யிடாதீர்கள். இவைகளெல்லாம் உங்களுக்குத்தான் கொண்டு வந்திருக்கிறேன், அவசரப்படாதேயுங்கள்.

வைசியன் — ஆமாம், அடே, சும்மா இருங்கள்; அவர்கொடுப்பார். (எல்லோரும் அடங்கியிருக்கிறார்கள், வைசியன் ரகசியமாக) ஒன்று இப்படிக் கொடுத்து விடுங்கள்.

ஸர் கலஹாட் — இவைகளெல்லாம் உங்களுடையது என்பதற்கு ஆக்ஷேபம் இல்லை; இப்போது கொடுத்தால் மறுபடியும் இழக்கத்தான் போகிறீர்கள். ஆகையால் உங்கள் நற்றாயிடம் கொடுத்து விடுகிறேன். அந்தம்மாள் சொற்படி கேட்டு நடந்துகொண்டால் உங்களுக்கே கொடுப்பாள். நன்மையைச் சொன்னேன், பின்பு உங்கள் இஷ்டம்

பிராமணன் — ஆமாம், அவர் சொல்வது சரிதான். நாம் சண்டையிட்டால் நமக்குத்தானே நஷ்டம். — ஐயா, இனிமேல் நீங்கள் சொன்னபடியே நடந்து கொள்கிறோம்.

ஸர் கலஹாட் — அதுதான் சரி, ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டும்; கல்வி கற்கவேண்டும்; கைத்தொழில் செய்யவேண்டும். அப்போது தான் உங்களுக்குச் சௌக்கிய முண்டாகும்.

பிராமணன் — உங்களுக்கு அநேக வந்தனம் புரிகிறோம். உங்கள் புத்திமதிகளைக் கேட்டு அவற்றின்படி நடக்கிறோம். நீங்களும் இங்கேயிருந்து உதவி செய்யுங்கள்.

ஸர் கலஹாட் — பார்க்கலாம், உங்கள் தாயாரிடம் போவோம், வாருங்கள்.

எட்டாங் காட்சி

இடம்: அரண்மனை.
காலம்: காலை.
பாத்திரங்கள்: இந்தியமாதா, ஸர் கலஹாட், இந்திய மக்கள்.

[இந்தியமாதா தனியே யிருந்து வருந்துகின்றாள்]

இந்தியமாதா —

என்னே என்னே என்னரு மக்கள்
இந்நாள் காறும் இன்பம் அடைந்திலர்
எல்லாம் இருந்தது எல்லாம் தொலைந்தது
பொல்லார் வந்து பொருளெலாங் கொண்டார்
இனியென் செய்வேன் இனியென் செய்வேன்
கனிவொடும் அவர்களைக் காப்பார் யாரே
அணைத்துப் பிடித்து ஆதரித் தவரை
இணைத்திங் கொன்றாய் இருத்துவோர் யாரே
உரிமையா யெமக்கிங் குதவுவார் தம்மை
அரியநற் கடவுள் அருள்புரிந் திடுமோ

ஐயோ, அப் பரமபதி என்று கடைக்கண் பார்க்குமோ தெரிய வில்லையே.

[ஸர் கலஹாட் வருகிறார்.]

ஸர் கலஹாட் — அம்மா, என் இப்படித் தனியே யிருந்து வருந்துகிறாய்? முன்பு துன்பத்தை யனுபவிப்போர் பின்பு இன்பத்தை அனுபவிப்பர். வருந்தவேண்டாம். இதோ உன்னுடைய பொருள்கள். உன்னிடம் அத் தீயோர் கவர்ந்து கொண்டு போன பொருள்களே யெல்லாம் கொண்டுவந்திருக்கிறேன். இவற்றை வாங்கிக்கொண்டு முன்போல் சுகமாக இரு.

இந்தியமாதா — ஐயா, அநேககோடி நமஸ்காரம் புரிகின்றேன். இழந்த பொருள்களைப் பெற்றும் எனக்கு இன்பம் ஏற்படவில்லை! என் மக்கள் ஒற்றுமையின்றி, கலகப்பட்டு திரிகின்றார்கள். அவர்களுக்குத் தம் வீட்டைப்பற்றிய எண்ணம் கொஞ்சமும் இல்லையே. என்ன செய்வேன்!

ஸர் கலஹாட் — அம்மா! இனி அவர்கள் அப்படி இருக்க மாட்டார்கள். அவர்களுக்குத் தக்க புத்திமதிகள் சொல்லியிருக்கிறேன். இனி ஒற்றுமையடைந்து, ஊக்கங்கொண்டு உழைப்பார்கள். (திரும்பிப்பார்த்து) பிள்ளைகளே! இப்படி வாருங்கள்.

[பிள்ளைகள் வந்து தம் தாயைத் தனித்தனி வணங்குகின்றனர்.]

பிராமணன் — அம்மா! இது வரையில் சகோதர பந்தம் இல்லாமல் இருந்து விட்டோம். இப்போது நாங்கள் ஐவரும் ஒரே குடும்பத்தவர் என்பதை யுணர்ந்தோம். இதுவரையில் தங்கள் சொல்லை மதியாமல் இருந்ததற்கு மன்னிக்க வேண்டும்.

இந்தியமாதா — மன்னிப்பேன், நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி வந்ததே போதும். இன்றே என் கண்கள் குளிர்ந்தன, என் இதயம் பூரித்தது, நீங்கள் அரோக திடகாத்திரராக இருந்து சுகமடைவீராக.

பஞ்சமன் — அம்மா, என்னையும் என் சகோதரர்கள் தம்மோடு சேர்த்துக் கொண்டு சமமாகப் பாவிக்கிறார்கள். இப்போதுதான் எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது, அம்மா.

இந்தியமாதா — கண்மணிகாள்! இத்தகைய நற்புத்தி உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? ஆச்சரியமாக இருக்கிறதே!

க்ஷத்திரியன் — அம்மா, இதோ இந்த மகானுபாவரால் இந்த நற்புத்தி ஏற்பட்டது, அவருக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்!

இந்தியமாதா — அப்படியா, அதுதான் சரி, நன்றியறிந்து நடப்பதே நன்றி செய்தவருக்கு நாம் பதில் செய்வதாகும். அதனால் மற்றும் ஒருமுறை அவருக்கு வந்தனம்செய்வோம்.

ஸர் கலஹாட் — அம்மா, நான் மேற்கொண்டுவந்த காரியம் நன்கு முடிந்தது; இனி நான் போய்வருகின்றேன்.

இந்தியமாதா — ஐயா, தாங்கள் இப்போது போய்விட்டால் எப்படி? வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியுடைந்த கதையாகுமே. என் மக்களுக்கு இப்போதுதான் நல்லுணர்ச்சி யுண்டாயிற்று. அது விருத்தியாகப் பார்ப்பதும் தமது கடமையன்றோ?

ஸர் கலஹாட் — அப்படியா — (சற்று யோசித்து) சரி. ஆகட்டும், நான் இங்கேயே தங்கிவிட முடியாது, உன் மக்கள் விருத்தியடைந்து தமது காரியங்களைத் தாமே பார்த்துக் கொள்ளும் சக்தி யடையும் வரையில் இருக்கிறேன்: அவர்கள் தாமே உழைக்க வேண்டும்; தவறிப்போகும் இடங்களில் இப்படி யல்ல, அப்படி என்று மாத்திரம் சொல்லுவேன். என் உதவி வேண்டியதில்லை என்று ஏற்படும்போது நான் போய்விடுவேன்; இதற்குச் சம்மதமானால் சிறிதுகாலம் இருக்கிறேன்.

இந்தியமாதா — ஐயா, அப்படியே செய்யுங்கள். இத்தகைய புண்ணிய சீலரைத்தான் இதுவரையில் எதிர் பார்த்திருந்தோம், இதனினும் எங்களுக்கு என்ன வேண்டும்.

இந்தியமக்கள் — ஐயா, நாங்கள் உங்களை விடமாட்டோம்; எங்களுக்கு உதவிசெய்த நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும். வாருங்கள் வீட்டுக்குள்.

[அனைவரும் போகின்றனர்.]

இச் சிறு நாடகம் இம்மாதம் 15வ மாலை சென்னை வேப்பேரி எஸ். பி. ஜி. ஹை ஸ்கூல் மாணவர்கள் சென்னைக் கவர்னர் லார்ட் பென்ட்லெண்ட் மகிபர் முன்னிலையில் நடித்தது.

OFFICE OF THE REGISTRAR 23 DEC MADRAS.

நல்லாசிரியன்

உபாத்தியாயபர்கட் கெனவே உலவிவரும்

ாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

பது-9. | 1913வ டிவெம்பர்மீ | மாதம் 7.

WELCOME VERSES

TO THEIR EXCELLENCIES

LORD & LADY HARDINGE

இந்தியா தேச ராஜப் பிரதிநிதி யாகிய
லார்ட் ஹார்டிங் மகிபர் அவர்களுக்கு
நல்வரவு கூறுநல்

வஞ்சி விருத்தம்

மன்னும்ஹார்டிங் மகிபதி
மின்னுதன் மனையுடன்
நன்னயம் பெருகிடச்
சென்னையில் வருகவே.

கலித்துறை

மன்னனைக் காணின் திருமாலைக் கண்டதோர் மாண்பதென்பார்
மன்னிய நல்லுயிர் எல்லாம் அளிக்கும் மரபுகொண்டே
அன்னிலை ஹார்டிங் கதிபதி தன்மனை யாந்திருவும்
மின்னிட எம்மனோர் கண்டுளம் இன்புற மேவுகவே

லார்ட் ஹார்டிங்

அகவல்

பாரில் விளங்கும் பயிர்கள் அனைத்தும்
நீர்கொள் முகிலையே நேடி நிற்கும்
அம்முகில் தங்கும் ஆகா யத்தை
விம்மி நோக்கும் விதமொன் றல்லால்
அதனிடம் சென்றே யன்புடன் காணும்
இதமப் பயிர்கட் கியைவ திலையே
அந்தக் கார்முகில் அகல இருந்து
சிந்திய மழையால் செழுமை யடையினும்
தமக்குமேல் நின்று தம்மேல் பொழியின்
உவக்குமப் பயிரெனல் உலகறி யும்மே
அதுபோல்
வளம்பெறும் இந்திய வைஸிரா யாக
விளங்கும் ஹார்டிங் மேதக் கோய்நீ
சேய்மையி லிருந்தெமைச் செழிக்கச் செயினும்
வாய்ப்புற நேரில் வந்தனைக் காண
எம்மனோர்க் கெல்லாம் இயலு மேயோ
அம்மயாம் செய்த அருந்தவப் பயனால்
கருணை யால்வரும் கார்முகில் போல
பரவும் எம்பால் பரிந்து வந்தனை
வருக வருக வள்ளால் வருக
பெருகு நலமெலாம் பெருக வருகவே

லேடி ஹார்டிங்

அன்னைதன் அன்பும் அடியாள் பணியும்
பொன்னின் அழகும் புவியின் பொறையும்
அமைச்சன் மதியும் அரிவையர் தமக்கு
அமைந்த குணமென அறைகுவர் ஆன்றோர்

இவைகட் கிலக்கா இலகுறு மணியே
அவமார் புதல்வரை ஐயன் முனியினும்
தாயும் முனிந்து தள்ளுதல் இலையே
ஏயும் அன்பால் எம்மைக் காத்தல்
நின்கட னுகும் நீள நினைந்து
நன்னில மெமக்கு நாளும் பெருக
ஏற்றவை யாவும் இன்னே புரிவாய்
மேற்றிசை நலமெலாம் மேவச் செய்வாய்
இன்னும்
இந்திய மாதர் ஏற்ற மடைய
சிந்தை களிப்புறச் சேர்ந்தவ ரோடு
குலவிப் பழகும் குணமா மணியே
நலமுறுங் கல்வி நலத்தை அம்மாதர்
நல்லதோர் முறையில் நல்கப் பெற்று
வல்லுந ராகி மாண்புறச் செய்யும்
ஹார்டிங் கென்னும் அம்மை வருக
ஏர்பெறும் இந்திய இறைவி வருகவே.

விருத்தம்

கடல்சூழ் உலகில் எங்கெங்கும் கவினு நாட்டை யுடையபிரான்
கருத்துக் கிசைந்த நிதியாகுங் கண்ணே வருக அவன்மனத்தில்
அடலார் இன்ப முறவுலவும் அரிய துணையாம் மேரியெனும்
அன்னம் மகிழ அருகிருந்த அருமா மணியே யுடன்வருக
மடலார் கஞ்ச மலர்விளங்க வருசெங் கதிர்போல் எம்முள்ளம்
மகிழ ஞானச் சுடர்வருக மதிபோல் முகப்பெண் மணிவருக
இடமார் இந்து தேயத்தின் இறையே வருக வருகவே
எழில்சேர் பெண்கள் நாயகமே இயைந்து வருக வருகவே

பத்திராதிபர்.

COUNT TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் பிரபு — ஓர் உபாத்தியாயர்.

டால்ஸ்ட்டாய் என்னும் பிரபு தாம் எழுத எண்ணியிருந்த பல அரிய நூல்களில் வித்யா விஷயமான புஸ்தகமும் ஒன்றும். அவர் சுமார் நாற்பது வருஷகாலம் வித்யா விஷயமாக உழைத்துக்கொண் டிருந்தமையால் அவர் அது விஷயமாக எழுதும் நூலில் பல அரிய விஷயங்கள் வெளிவரக் கூடுமென்றே ஜனங்கள் எண்ணியிருந்தார்கள். அவர் 1862-ஆம் வருஷத்திலேயே தமது கிராமத்தில் முதலில் ஓர் உபாத்தியாயராக இருந்து தூரைத்தன விஷயமாகவும் ஜனுசார விஷயமாகவும் அவ்வப்போது தமக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை வெளியிட்டுக்கொண்டு வந்தனர்.

அடிமைகள் எல்லாம் அப்போதுதான் விடுதலையடைந்தார்கள். டால்ஸ்ட்டாய் என்பவர் அதிக பூஸ்திதி யுடையவரானபடியால் அவருக்குத் தம் குடிகள் மீது இரக்கம் பிறந்தது. குடியானவர்களுடைய குழந்தைகள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சுயாதீனத்தை நிர்வகித்துக்கொள்ள ஏற்றவர்களாகும்படி, நற்குண நாயகரான அந்தப் பிரபு, அப்பிள்ளைகளுக் கெல்லாம் கல்வி கற்பிக்க முயன்றனர். அதற்காக ஒரு பாடசாலை ஏற்படுத்தித் தன்னோடு மற்றும் மூன்று நான்கு உபாத்தியாயர்களை நியமித்துக் கொண்டார். அப்பாடசாலையில் 34 ஆண் பிள்ளைகளும் 6 பெண்பிள்ளைகளும் சேர்ந்தார்கள். அப்பாடசாலை சரிவர நடந்து வந்தது.

பாடசாலை அமைப்பதுமட்டும் போதாது என்று எண்ணிப் பத்திரிகை யொன்றும் வெளியிடலானர். ருஷியாவில் தன்னைப் போல் வேறு இடங்களில் உழைக்கும் உபாத்தியாயர்களுக்கு அப்பத்திரிகை அதிக உபயோகமாக வேண்டும் என்பது அவருடைய நோக்கம். அதனால் அவர் தாம் உபாத்திமைத் தொழிலில் அடையும் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் அப்பத்திரிகையில் வெளியிட்டு வந்தனர். அவ் விஷயங்கள் அனைத்தும் அவ்வக்காலத்திற்கே பயன்படத்தக்கவையாயினும் சிலர் அவற்றை யெல்லாம் திரட்டி ஒரு பெரிய நூலாகச் செய்ததுமன்றி வேறு பல பாஷைகளிலும் மொழி பெயர்த்து மிருக்கின்றனர்.

அவர் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதை நன்கு ஆராய்ந்து செய்பவராதலால் அக்காரியங்கள் எக்காலத்திற்கும் பயன்படுவன வாயின.

அந்தப் பள்ளிக்கூடத்துக்காக இரண்டு அடுக்குள்ள ஒரு கற் கட்டடம் வாங்கினர். அதில் வாசற்படிக்கு நேராக ஒரு மணி தொங்கவிட்டிருக்கும். காலை எட்டு மணிக்குச் சரியாக மணி அடிப்பார்கள். அரை மணி கழித்துப் பிள்ளைகள் எல்லாரும் வந்து சேருவார்கள். நேரம் கழித்து வருவதற்காக ஒருவரையும் கண்டிப்பதில்லை. அப்படி இருந்தும் வேலை ஆரம்பிக்கும்போது தப்பாமல் எல்லாப்பிள்ளைகளும் வந்திருப்பார்கள். பிள்ளைகள் புஸ்தகம், பலகை முதலிய ஏதும் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வர வேண்டியதேயில்லை. வீட்டில் படிப்பதற்கு உபாத்தியாயர் பாடங்கொடுப்பது மில்லை. முந்தியதினம் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிர்ப்பந்தமும் இல்லை. "இன்று பள்ளிக்கூடத்தில் பாட்டு ஒப்பிக்க வேண்டுமே, நாளையதினம் பரீக்ஷையாயிற்றே, இரவெல்லாம் படிக்க வேண்டுமே," என்னும் கவலையே பிள்ளைகளுக்குக் கிடையாது. "நேற்றுப் போலவே இன்றும் பள்ளிக்கூடத்துக்குப் போய் வேடிக்கையாக இருந்து விட்டு வருவோம்," என்னும் ஆவலோடு அவரவர்கள் வந்து கூடுவார்கள். சொன்னது சொன்னபடியே விஷயங்கள் மனத்தில் பதியக்கூடிய பருவத்தில், சிறுவர்களுக்கு ஞாபக சக்தி ஒன்றே புஸ்தகமும் பலகையும் பாட்டும் பரீக்ஷையுமென்பதும், அது ஒன்றுமே பள்ளிக்கூடத்தில் அவர்களுக்குப் போதுமான துணைக்கருவி என்பதும் டால்ஸ்ட்டாய் பிரபுவின் அபிப்பிராயம்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் போதனை முறையைப்பற்றி அவரே பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

உபாத்தியாயர் தம் வகுப்பில் நுழைகிறார். பிள்ளைகள் கும்பல் கும்பலாகத் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒருவன் மேல் ஒருவன் நெருங்கிக் கொண்டும், கூவிக்கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கிறார்கள். "ஐயோ, நெருக்கமாய் இருக்கிறது, அடே, ஒற்றிப்போ," என்று ஒரு பிள்ளை கத்துகிறான். "அடே என் தலை மயிரைப் பிடித்திழுக்காதே, வேண்டாம், விட்டுவிடு," என்கிறான் மற்றொரு பிள்ளை.

கலவரமான அக் கூட்டத்திலிருந்து ஒரு கூச்சல் எழும், உபாத்தியாயரின் பெயரைச் சொல்லி அழைக்கிறான் ஒரு பிள்ளை. "ஐயோ இவர்கள் என்னைக் கொன்று விடுகிறார்களே! விட்டு விடச் சொல்லுங்கள்" என்று பெருங் கூச்சல் போடுகிறான் மற்றொரு பிள்ளை.

"ஐயா, வாத்தியாரே உங்களுக்கு வந்தனம், வந்தனம்," என்று ஒரே கூச்சலாகக் கூவுகிறார்கள் சில பிள்ளைகள்.

உபாத்தியாயர் பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் புஸ்தகங்களை எடுத்து அவர்களுக்குக் கொடுக்கிறார். பிள்ளைகள் தம் புஸ்தகங்களை வாங்கிக்கொள்ளக் கூட்டமாக ஓடுகிறார்கள். உபாத்தியாயர் தமக்குச் சமீபத்திலிருக்கும் பிள்ளைகளுக்கு முதலில் கொடுக்கிறார். பின்னல் இருக்கும் பிள்ளைகள் 'எனக்கு எனக்கு' என்று கேட்டுக் கத்துகிறார்கள், உபாத்தியாயர் எட்டிய மட்டும் முன்பு கொடுக்கிறார். கொஞ்ச நேரத்திற்குள் கும்பல் குறைந்து விடும். பிறகு மற்றப் பிள்ளைகளும் புஸ்தகங்களைப் பெற்றுக் கொள்வார்கள். பெற்றுக் கொண்டவுடன் பிள்ளைகள் போய் உட்காருவார்கள். உபாத்தியாயர் பாடஞ் சொல்ல ஆரம்பிக்கிறார். இரண்டொரு பிள்ளை இன்னமும் சச்சரவு பட்டுக்கொண்டிருந்தாலும் மற்றப் பிள்ளைகள் அவர்களைப் பார்த்து 'பேசாமலிருங்கள், சும்மா இருங்கள். உங்களுக்காக எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருப்பது? உபாத்தியாயர் சொல்வது ஒன்றுங் கேட்கவில்லையே' என்று அதட்டி அமர்த்துவார்கள்.

பிள்ளைகள் எல்லாம் பெஞ்சின் மேலோ, மேஜையின் மேலோ, ஜன்னலின் மேலோ, தரையின்மேலோ கண்ட கண்ட இடங்களில் எல்லாம் உட்காருவார்கள். இன்னார் இன்ன இடத்தில் தான் உட்காரவேண்டும் என்னும் நியதியில்லை.

பின்பு அமைதியாக இருப்பார்கள். கிள்ளுவது, தட்டுவது, சிரிப்பது, பேசுவது முதலிய சில்மிஷங்கள் ஏதும் இல்லை.

இன்ன பாடத்தை இவ்வளவு நேரம் நடத்த வேண்டும் என்னும் வரையறையை வைத்துக் கொள்வதில்லை. பிள்ளைகளுக்கு பிடிப்பு ஏற்பட்டுவிட்டால் ஒரு மணியில் நடக்க வேண்டிய பாடம் மூன்று மணியும் நடைபெறும். காலம் முடிந்து வகுப்பை விட்டு உபாத்தியாயர் போக முயலும் போது, இன்னும் முடியவில்லை, இன்னும் கொஞ்சம் சொல்லுங்கள் என்று பிள்ளைகள் கத்துவார்கள்.

பிள்ளைகள் பாடசாலைக்கு வந்தே தீரவேண்டும், வந்த பின் இடையில் போகக்கூடாது, உபாத்தியாயர் சொல்வதைக் கவனமாகக் கேட்க வேண்டும் என்பது முதலான நிர்ப்பந்தங்கள் கிடையா. மேலோட்டமாகக் காணும் இந்த ஒழுங்கீனங்கள் எவ்வளவு சிரமமுள்ளவைகளாகத் தோன்றினாலும் அவை உண்மையில் உபயோகமும் அவசியமும் உள்ளவைகளே என்பது டால்ஸ்ட்டாய் அபிப்பிராயம்.

நாம் ஒருவகையான ஒழுங்கை மேற்கொண்டு அநுசரித்து வருவதனால், பிள்ளைகள் யதேச்சையாகக் கொள்ளும் இந்த ஒழுங்கை ஒழுங்கீனமாகப் பாவிக்கின்றோம்.

பத்திராதிபர்.

EXCURSION
வெளிப் பிரயாணம்.

நோக்கம் — வெளிப் பிரயாணம் என்ற பதம் யாத்திரை செய்வதை என்ற அர்த்தத்தை விளங்குகின்றதாயிருந்த போதிலும், அப் பதம் பாடசாலையிலுள்ள சிறுவர்களை கட்டடத்தைவிட்டு அதன் புறமுள்ள இடங்களைக் கவனித்து வர அழைத்துப் போவதற்கு நற்காலத்தில் வழங்கி வருகிறது. பாடசாலையின் சம்பந்தமாக நடத்தப்படுமென்றும், உபாத்தியாயர் கூடச் செல்லவேண்டியிருக்குமென்றும் விளங்கும். ஆகவே இவை வெளிப் பாடமென்று சொல்லினும் பொருந்தும். பாடசாலைக் கட்டடத்தில் போதிக்க முடியாதவற்றைப் போதிப்பதற்கும் போதித்துவரும் விஷயங்களை நிதர்சனமாகக்காட்டி மனத்தில் பதியச் செய்வதற்கும் ஏற்பட்ட முறை என்றுஞ் சால பொருந்தும்.

வகை — இப் பிரயாணம் இருவகைப்படும். ஒன்று பாடசாலை நோக்கங்களில் நடத்தப்படும் பாடங்களை வற்புறுத்த வேண்டியபோது பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல் — உதாரணமாக தபாலாபீஸைப் பாடம் நடத்தும்போது தபாலாபீஸுக்குப் போவதும், பூகோளப் பெயர்களை போதிக்கும்போது ஆற்றிற்குச்

சென்று மணலில் அவ்வுருவங்கள் செய்வதும், நெசவுப் பாடம் படிக்கும்போது பஞ்சு நூற்கும் யந்திரசாலைக்கும் தரிசாலைக்கும் போவதுமாம்.

இரண்டாவது — பாடசாலையி லிருந்து வெளியே போவதற்கு இஷ்டப்படும் குழந்தைகள் எல்லாரும் பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் பின் தொடர்ந்து முன்பு குறிப்பிட்டுக்கொண்ட இடத்தைச் சேர்ந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களைக் கழித்து பாடங்களை அறிதல். இவ்விரண்டும் சரியானபடி ஆசரிணையி லிருப்பதாக தோன்றவில்லை. முதல் வகை மட்டும் சிற்சில இடங்களில் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. ஆனல் பிள்ளைகளுடைய பாட சம்பந்தமாக இல்லாமலும், பிள்ளைகளுடைய அநுபவத்தை ஒட்டாமலும் இருக்கும் இடங்களைக் காட்டுவதும் சரியென்று கருதுவாருமுளர். இரண்டாவது வகை சிற்சில இடங்களில் மட்டும் நடை பெறுவதாகத் தோன்றுகிறது.

நடத்தும் விதம் — பிரயோஜனம். பாடசாலைக் கட்டடத்திற்குள் போதிக்கப்படும் பாடத்திற்கு நோக்கம் ஒன்று எப்படி உண்டோ, அப்படியே வெளிப் பிரயாணத்திற்கும் நோக்கம் உண்டு. அழைத்துப் போகப்படும் இடத்தைப் பற்றியும் பிள்ளைகளைக் கவனிக்கச் செய்யவேண்டிய வஸ்துவைப் பற்றியும் உபாத்தியாயருக்குக் கூடியவரையிலும் பூர்ண ஞானம் இருக்கவேண்டும். சாதாரண பாடத்தைத் தயார்செய்வது போலவே அவ்விடங்களுக்குச் சென்று பிள்ளைகளைக் கவனிக்கச் செய்யவேண்டிய விஷயங்களைக் கவனித்திருத்தல் அவசியம். விஷயங்களைப் பாடங்களுக்குத் தகுந்தபடி தெரிந்தெடுத்தல் போலவே இடங்களையும் அவைகளிலுள்ள விஷயங்களையும் தேர்ந்தெடுத்தல் அவசியமாம். பிற உபாத்தியாயருடைய நோக்கம் முடிவு பெற்ற பிறகு, அடக்கப்பட்டிருந்த அவர்களுடைய சுறுசுறுப்புக்கு இடம் கொடுத்து அவரவர்களுடைய நோக்கப்படி அலைந்து திரிந்து புதிய விஷயங்களைக் கிரகித்து வரவும், அப்படிக் கிரகித்ததைச் சொல்லும்படி செய்யவும் காலம் கொஞ்சம் கொடுக்க வேண்டும். பாடசாலை அடைந்த பின்னர் வெளிப் பிரயாணத்தைப்பற்றி வியாஸம் எழுதச்செய்து திருத்தப்பட்டதைப் பிறகு புஸ்தகத்தில் குறித்துவைக்கச் செய்யவேண்டும். கவனிக்கும் சக்தி விருத்தி அடைவதற்கும் விஷய ஞானத்தின் அபிவிர்த்திக்கும் ஏற்ற வழியை ஆராய்ந்தால்

குறித்த இடத்தைப் பலதரம் சென்று பார்த்தல் ஒருவகையென்று அறியலாம். தோட்டம், குளம், மரம், ஆறு இவைகளைப் பல ருதுக்களில் கவனித்தல். தபாலாபீஸ், ரயில்வே ஸ்டேஷன் முதலியவற்றை ஒரு நாளில் பலகாலங்களில் போய்ப் பார்த்தல். கோர்ட்டுகள், யந்திரசாலைகள், கைத்தொழிற் சாலைகள், பாடசாலைகள் முதலியவற்றை வேலை நடக்கும்போது போய்ப் பார்த்தல். மியுஸீயம், பார்க் முதலியவைகளை சமயம் நேர்ந்தபோதெல்லாம் கவனித்தல்.

மேற் சொல்லப்பட்டவைகளை இதர பாடங்களுக்குச் சம்பந்தப் படுமாறு நடத்துவதே புத்திசாலித்தனமாம்.

இரண்டாவது வகையைப்பற்றிக் கூறுவோம். இவ்வகை இங்கிலாந்தில் அதிகமாக அநுசரிக்கப்பட்டு வருகிறது. பெற்றோர்களின் அநுமதியின்மேல் உபாத்தியாயர்கள் சிலர் கூடி ஓரிடத்திற்குச் சென்று கூடாரங்களில் சில நாட்கள் வசித்து அவ்விடத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், பூகோள விஷயங்கள், கணித சம்பந்தமாக நிலத்தை அளத்தல் முதலியவற்றைப் போதிப்பார்கள். அந்த நாட்களில் விளையாட்டுகளும் விருந்துகளும் வேடிக்கைகளும் நடைபெறு மென்று சொல்லவேண்டிய தில்லை. சுனிமையான இடத்தில் கொண்டுபோகப்பட்ட வாலிபர்களின் சுபாவங்கள் வெளிப்படுவதற்கும், அவர்களுக்குள்ள சிநேகம் முதிர்வதற்கும் தூர அப்பியாசங்கள் தூர்க்குணங்கள் முதலியவை வெளிப் படுவதற்கும் வெளிப்பட்டவற்றை கண்டிப்பதற்கும் தருணம் பல நேரிடும். அன்றியும் ஐக்கியபாவம் நன்கு விருத்தியடைதலும் பலமுள்ளவர்கள் பலஹீனர்களுக்கு உதவி செய்தலும் வியாதிஸ்தர்களுக்கு வேண்டிய உதவி மற்றவர்கள் புரிதலும் தர்மயம் பாராட்டாது ஸமூகத்தின் நன்மையைக் கருதவும் ஏற்படும் சமயங்கள் அநேகம். யோசிக்கு மிடத்து இவ்வகையினல் மனுவாக்குக் காயம் ஆகிய இம் மூன்றும் அபிவிருத்தியடையுமென்று ஏற்படும். இந் நன்மைகளில் பல குழந்தைகளையும் பொருட்டு உபாத்தியாயன் பல விஷயங்களிலும் மாதிரியாக இருக்கக் கடவன் என்றும், அவனிடத்தில் வாலிபர்களுக்கு பூர்ண நம்பிக்கையும், பயபக்தியும் பிரியமும் இருக்க வேண்டுமென்றும் தெளிவாகும். இவ்வகை 15 வயதுக்கு மேற்பட்ட வர்களுக்குத்தான் ஏற்றதென்று சொல்லலாம். இவ் வெளிப்

பிரயாணங்கள் நடத்தப் படும்போது அவைகளைத் தெரியப்படுத்தும் மியுஸீயத்திற்கு வேண்டிய சாமான்களைச் சேகரம் செய்யலாம்.

மேற் கூறப்பட்ட வற்றில் வெளிப் பிரயாணம் என்பது ஒருவகை முறை யென்றும், பாடமல்ல வென்றும் தெளிவாகும். நவீன முறையின் ஒரு ஏற்பாடு என்று சிலர் நினைக்கின்றனர். முற்காலத்தில் குருகுல வாசத்தின் சுபாவத்தையும் சிறப்பையும் அறிந்தவர்கள் இதை அவ்வண்ணம் கருதாமல் பழையவைகளைக் காலத்திற்கும் தேச வர்த்தமானங்களுக்கும் தகுந்தபடி மாற்றிப் புதுப்பித்துக் கொள்வார்கள்.

எம்மட்டில் அநுசரிக்கலாம் — மேற் சொன்னபடி நடத்தி வருவதற்கு இடையூறுகளும் கஷ்டங்களும் பல உண்டாகும். முதலாவது, இப்பேர்ப்பட்ட வெளிப் பிரயாணத்தை நடத்தத் தகுந்த உபாத்தியாயர்கள் வேண்டு மென்பார்கள். பெற்றோர்கள் இங்ஙனம் அழைத்துச் செல்ல அநுமதி கொடுக்கும் நிலைமை தற்காலத்தில் ஏற்படவில்லை என்பார்கள். இவை இரண்டும் ஸௌகரிய மானாலும் பணத்தின் கஷ்டம் வெகு அதிகம். அன்றியும் முன் யோசனையும் உத்யோகஸ்தர்களின் உதவியும் அதிகம் வேண்டும். தேசத்தின் அபிவிருத்தியையும் தம் மாணாக்கர்களின் நன்மையையும் சதா கருத்தில் எண்ணித்த உபாத்தியாயர்கள் ஏற்படும் கஷ்டங்கள் அதனால் உண்டாகும் நன்மையின் பரிமாணத்திற்கு ஒரு பொருட்டாகா வென்று நினைப்பார்கள் என்று நம்பலாம்.

குணனுடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல் —

திருவள்ளுவர்.

N. KRISHNA RAO, B.A.,L.T.,
Ag. Sub Asst. Inspector of Schools,
Kumb. Range.

A LECTURE ON "THE IMPORTANCE OF TEACHING NATURE STUDY IN THE ELEMENTARY SCHOOLS"

எலிமெண்ட்டேரிப் பாடசாலைகளில் இயற்கைப் பாடம்

உபாத்தியாயர்களே!

(1) நேச்சர் (Nature) என்னும் பதம் ஆங்கிலமொழி, இதற்கு தமிழில் இயற்கை என்று சொல்லப்படும். இயற்கை என்று சொல்லப்பட்ட நம்மால் உண்டாக்கப்பட்டதல்ல, நாம் உண்டான காலத்திலேயே, கடவுளின் சிருஷ்டிகளில் (Creations) ஒன்றுகத்தானுகவே அமைந்திருக்கக் கூடியது. உதாரணமாக — மரம், செடி, ஆடு, மாடு, பூமி, ஆகாயம் முதலிய இயற்கைபொருள்களே.

(2) இப்பேர்ப்பட்ட பொருள்களின் அமைப்பிலுள்ள விசேஷங்களைப் பற்றி, நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இவ்விதம் தெரிந்துகொள்வதற்கு சிறுவயதுதான் தகுந்த காலம். ஏனெனில், சிறு குழந்தைகளைக் கவனித்துப் பார்ப்போமானால் எந்த வஸ்துவைக் கண்டாலும் அது என்ன வென்றும், அது எப்படிச் செய்யப்பட்டிருக்கின்றது என்றும், அதன் பிரயோஜனம் என்ன வென்றும் தெரிந்து கொள்வதற்கு முயலுவதைக் காணலாம். ஆகையால், புதிதாய் எதைக் கண்டாலும் அது இன்னதுதான் என்று அறியவேண்டும் என்ற ஆவல் சிறு குழந்தைகளின் உடன் பிறந்ததுபோலிருக்கிறது என்பது நமக்கு நன்கு விளக்கமாகிறது.

(3) இதைக் கருதியே, பெரிய வித்துவான்களும் இப்போது நடந்தேறி வருகிற தூதன முறையில் எவ்விஷயத்தையும் பிள்ளைகளே கூடுமானவரையில் விசாரித்தறியச் செய்யவேண்டுமென்று கருதுகின்றார்கள் எனத் தெரிகிறது. ஆகையால் இயற்கைப்பொருள்களின் தத்துவங்களைப்பற்றி பரிசீலனை செய்வதில் ஆசையை நமது மாணாக்கர்களுக்கு விருத்திசெய்யவேண்டும். தத்துவங்களென்பது இயற்கை வஸ்துக்களின் அமைப்பு. இவைகளின் ஒவ்வொரு

பாகத்தின் உபயோகம், விருத்தி யடையும் இயற்கைச் சாதனம், ஒற்றுமை வேற்றுமை முதலியனவாகும்.

(4) இயற்கைப் பொருள்களின் ரகஸ்யங்களை பரிசீலனை செய்வதென்றால் இதற்குமுன் போதித்துவந்த பொருட்பாடம் (Object lesson) போல் சில வஸ்துக்களைப்பற்றி புஸ்தகத்தினின்று தெரிந்து கொள்வதென்று சிலர் அபிப்பிராயம் கொள்ளலாம். ஆனால் அப்படியல்ல, சிறுவர்களுடைய மனத்திற்குச் சிருஷ்டியிலுள்ள ஸாமான்ய ரகஸ்யங்களை (Facts) பிரத்தியக்ஷமாய் பார்த்துத் தெரிந்துகொள்வதைவிட புஸ்தகம் ஒருபொழுதும் மேலல்ல. ஆகையால் பிள்ளைகள் நேரில் பார்க்கக்கூடிய இயற்கை வஸ்துவின் ஒற்றுமை வேற்றுமைகளையும், அவை யுண்டாகி விருத்தி யடையும் சாதனங்களும், இதன் அமைப்பில் ஒவ்வொரு பாகமும் உதவுகின்ற விதமும் நன்றாய் தெரிந்துகொள்வதுதான் கிரமபரிசீலனையாகும்.

(5) முன் காலத்தில் பொருட் பாடம் (Object lesson) என்பது பெஸ்ட்டலோஜி (Pestalozi) என்னும் வித்துவானால் ஏற்படுத்தப்பட்ட தென்றும், அப்பொழுது நேரில் பார்க்கக் கூடாதப் பொருள்களைப் பற்றியும் படத்தைக் கொண்டாவது, வாய்மொழியாகவாவது புஸ்தகத்திலிருந்து போதித்து வந்தார்கள் என்றும் தெரிய வருகிறது. இவ்விதப் புஸ்தகப் பாடத்தால் ஞாபக சக்தியும், அநேக விஷயங்களை புஸ்தகத்திலுள்ளபடி தெரிந்துகொள்ளுதலும் விருத்தி யடையுமேதவிர மனோபாவம் விருத்தியடைய மாட்டாது.

(6) பாடசாலை ஒரு கிரமவழியில் போதித்து வருவதற்கு ஏற்பட்டதே யொழிய, விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காக மட்டும் ஏற்படவில்லை. நம்முடைய அனுபவத்திலேயே பாடசாலையில் படியாத அநேகர் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறதையும், படித்தவர்களுள் அநேகர் விஷயங்களைத் தெரிந்துகொள்ளாம லிருப்பதையும் காணக் கூடும். ஆனதால் போதனைக் கிரமத்திற்கும் நல்ல ஸகவாஸத்திற்குந்தான் பாடசாலை ஏற்பட்டது. இதுவரை பாடசாலையில் நடத்திவந்தது ஞாபக சக்தியையும், சொற்ப அறிவையும் மட்டும் விருத்தி செய்யக்கூடியதே யொழிய, மனோபாவம் விருத்தியடைய இடமில்லை என்பது முன்னமே சொல்லப்பட் டிருக்கிறது.

(7) வி. எல். மார்கன் (C. L. Morgan) என்னும் வித்துவான் "இப்பரிசீலனையால் உண்டாகும் நன்மைதான் இதன் முக்கிய பிரயோஜனம். இந்தப் பிரயோஜனத்தைக் கொண்டு கல்வியை விருத்தி செய்வது நமது கடமை யல்லவா! பிராணிக்கும் மனிதன் கற்றுக்கொள்ளும் படிப்பிற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் அநேக பேதங்களைக் காணலாம். அவற்றுள் முக்கியமாய் ஒன்றை கவனிப்போம்: முதன்முதல் பிராணிகள் தம் ஐம்புலன்களால் விஷயத்தை கிரஹித்து கொள்ளுகின்றன. நமது குழந்தைகளும் முதலில் இவ்விதமே கிரஹித்துக் கொள்ளுவதுடன் வார்த்தைகள் மூலமாயும் தெரிந்து கொள்ளுகிறார்கள். ஆகையால் ஞானத்துக்கு முதல் ஸாதனம் ஐம்புலன்களும் மறுஸாதனம் மொழியுமாகும். இது இப்படியிருக்க, நாம் ஐம்புலனுக்குப் பதில் மொழியை முதலில் வைத்துப் பாடம் நடத்துவோமானால் அது கிரமவழியாக மாட்டாது. நேரில் பரிசீலனை செய்து சாமான்னிய விஷயங்களின் தன்மைகளைத் தெரிந்து கொள்வது முதல்தரமான ஞானமல்லவா. புஸ்தகத்திலுள்ள வார்த்தைகளால் பிள்ளைகளின் மனத்தை கிரப்பி வைப்பது கிரமபோதனையாகாது. குழந்தைகள் உபாத்தியாயருடைய முன்னிலையில் விஷயங்களை சுயமாய்த் தெரிந்துகொள்வதும் உபாத்தியாயர் அதற்கு வேண்டிய ஸாதகம் செய்துவருவதுமே சரியான பரிசீலனையாகும்" என்று சொல்லியிருக்கிறார்.

(8) Arthur Thompson என்னும் வித்துவான் "இப்பரிசீலனையை கிரமமான வழியில் நமது பாடசாலைகளில் நடத்திவருவதினால் நமது மாணக்கர்கள் அடையக்கூடிய ஞானமானது (Knowledge) அறிவின் வேர்போலாகும்" என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

(9) இவைகளெல்லாம் இங்ஙனம் நிற்க, இயற்கைப் பரிசீலனை (Nature Study) என்னும் பாடத்தினால், சிறுவர்சுட்டு இயற்கையினிடத்தில் ஒருவித அன்பு, விஸ்வாஸம், ஈவு, இரக்கம் ஏற்படக்கூடும். மனோபாவங்கள் (அதாவது கவனித்தல், யோசித்தல், கேட்டறிதல் முதலான தன்மைகள்) விருத்தியடையும். இவ்விதம் பால்யத்தில் பயிலுவது பின்னால் அவர்கள் படிக்கக்கூடிய படிப்பிற்குப் பலம் அதிக மாகும். விளையாட்டைப்போல் அறிவு

புகட்டப்படுகிறது. இவ்விதம் படிப்பது குருட்டுப்பாடமாகாமல் அனுபோக படிப்பாகவுமாகிறது.

(10) ஆகையால் இப்பாடத்தை கிரமமானவழியில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் கீழ் வகுப்பு முதல் ஆராய்ச்சி செய்வது முக்கிய கடமை.

G. NARAYANASWAMI AIYER,
Teacher, State School,
Suppammalpatty.

CHILDREN'S FAULT AND THEIR REMEDIES

குழந்தைகளின் குற்றங்களும் அவற்றைத் திருத்தும் விதமும்.

நமது சகோதர உபாத்தியாயர்களே!

ஒரு சிறு தோட்டத்தில் புல்பூண்டு முதலான களைகள் பெருகி பயிரை நெருக்கி அழித்து நிலத்தைக் கரம்பாக்குவது போல, குற்றமுள்ள குழந்தைகளைக் கவனிக்காமல் விடுவதால் அவர்கள் பயிரைப் போலக் கட்டைக் கரம்பராவார்கள். அவர்கள் யாரிடத்தில் உள்ளூற அன்பும் மதிப்பும் வைக்கின்றார்க ளென்று கவனித்துப் பார்ப்போ மாகில், தங்களை அடக்கி ஆண்டு வருபவர் களிடத்தில் என்று விளங்க வில்லையா? நம்முடைய சிறு பருவத்தில் நாம் யாரிடத்தில் அதிக அன்பு வைத்திருந்தோ மென்று நினைத்துப் பார்த்தால், நாம் யாரிடத்தில் பய பக்தியோடு நடந்து கொண்டோமோ, யாரை முக்கியமானவராய் எதிர்பார்த்திருந் தோமோ, யார் முன்னிலையில் ஒரு பிசகான காரியத்தைச் செய்ய அஞ்சினோமோ, யாருடைய நன்கு மதிப்பைப் பெற விரும்பினோமோ அவர்க ளிடத்தில்தான் என்று நமக்கு ஞாபகம் உணர்த்துகிற தல்லவா? அவர்கள் செய்த தண்டனையை நாம் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள வில்லையா? கண்டிக்கும் காலத் தில் கசப்பா யிருப்பினும், பின்பு அது இனிப்பாய் இருக்கும். இன்னும் பிள்ளைப் பருவத்தில் நடந்தவைகளைக் குறித்து நினைத்துப் பார்க்கையில் யாதொரு நன்மையு மில்லாமல் சிக்ஷையடைந்தது எத்தனையோ தரம் என்று நமக்கு ஞாபகத்துக்கு வரும். நம்மை அப்பொழுது அநியாயமாய்த் தண்டித்ததும், நம்முடைய செய்கைகளும் எண்ணங்களும் குற்ற மற்றவைகளா யிருக்கக் குற்ற

முள்ளவை களாகப் பாவித்து நம்மைக் கர்ஷித்ததும், அத்தருணங்களில் நாம் பொறுக்க மாட்டாமல் நம்மைத் தண்டித்தவர்களைக் கோப தாபத்தோடு சுளித்துப் பார்த்து அவர்களை வெறுத்ததும் மனக் கண்ணிற்குத் தோற்றும். இது உண்மையே. நாம் எவ்வளவு நற்குண நற் செய்கைகளில் பயின்றவர்களா யிருந்தாலும், நம்முடைய பால்ய பருவத்தில் நம்மை நிஷ்காரணமாகத் தண்டித்தவைகள் ஞாபகத்திற்கு வராமற் போகா. குற்ற மில்லாத காரியத்தைக் குற்ற முள்ளதாக நினைத்துப் பெற்றோரும் உபாத்தியாயர்களும் நம்மை சிக்ஷித்ததைப் பற்றி அவர்களை எவ்வளவு ஞானமும் விவேகமும் உள்ளவர்க ளென்று மதித்திருந் தோமோ, அவ்வளவு அவர்க ளிடத்தில் அமைந்திருக்க வில்லை யென்று நினைக்கவும் நேரிட் டிருந்தது. அதிகம் கற்றவர்களும் சில தருணங்களில் பிசகிப் போனார்க ளல்லவா வென்று குறைவாக நினைத்து வருந்தவும் சம்பவித்தது. இவ்வாறு பிள்ளைப் பருவத்தில் நமக்குண்டா யிருந்த வருத்தங்களை உபாத்தியாயர்க ளாகிய நாம் ஞாபகப் படுத்திக் கொள்வதனால், இப்பொழுது நம்முடைய வசத்தில் வாய்த்திருக்கிற குழந்தைகளைக் குணகுண மறிந்து நடத்தவும், அவர்களை அவசரப்பட் டாவது, முன் கோபத்தா லாவது, தீர விசாரியாம லாவது அவர்கள் செய்த சேஷ்டைக ளென்று வழக்கமாகச் சொல்லப்படுகிற அற்ப காரியங்களைச் சீர்தூக்கிப் பாராமலும் தண்டனை செய்யும் மேலே கூறிய தீர் வழக்கத்தை நாம் அநுசரியாமலும் இருக்கச் செய்வோ மானால், நாம் பால்யத்தில் பட்ட அடியும் வருத்தமும் வீணாக மாட்டா. எப்படி யெனில், சிறு பிள்ளைகளிடத்தில் நாம் குற்றமாக நினைக்கும் செயல்களுள் பல அவர்கள் வாலிபப் பருவத்தி னாலும், நோய் வருத்த மில்லாமல் சுகமா யிருப்பதினாலும், சந்தோஷத் தாலும் இயல்பா யுண்டாகிற செயல்களே யல்லாமல் நாம் பாராட்டத் தக்க குற்றங்க ளல்லவே.

நம்முடைய பல ஹீனத்தால் சந்தடி பொறுக்க மாட்டாமல் பிள்ளைகளைப் பேசவேண்டா மென்று கட்டாயஞ் செய்வது நியாயமல்ல. அவர்கள் இடைவிடாமல் ஒருவரோடொருவர் உரத்துப் பேசுவதாலும், சிலவேளைகளில் கூச்சலிடுவதாலும் நமக்குச்சற்று கோபமுண்டாகும். அது நம்முடைய குற்றமே யல்லாமல் அவர்களின் குற்றமல்ல. சந்தடியும் குழந்தையும் ஒன்றோடொன்று

பொருந்தினவையாகையால் அதை விலக்க முயல்வது விபரீதமே யாம். பிள்ளைகள் பேசாமல் மௌனமா யிருத்தல் அரிதாயிருக்க வேண்டுமே யல்லாமல் நிரந்தரமான விதியா யிருக்கக் கூடாது. குழந்தை பிரசவமானவுடன் அழாமலிருந்தால், இது வயது வந்தவுடனும் மந்தமாயிருக்கு மென்றும், நன்றாய் அழுதால் வயது வந்தவுடன் சுறுசுறுப்பா யிருக்குமென்றும் அநேகர் சொல் வதைக் கேட்டிருப்பதுந் தவிர நாமும் சொல்லுவோம். பிள்ளை களைச் சந்தடி செய்யக் கூடாதென்று அதட்டாமல், ஒவ்வொரு சமயத்தில் அவர்கள் ஓடியாடி விளையாடும்படி செய்வது உசித மான காரியமாகும்.

மேலும் பிள்ளைகளுக்குக் கூச்சலிடுவது எப்படி இயல்போ, அப்படியே ஒரே இடத்தில் நிற்காமல் இங்கு மங்கும் திரிவதும் இயல்பாகும். பிள்ளைகள் இருந்தவிடத்தி லிருக்கும்படி கடவுள் உத்தேசித்தாரில்லை. தேகம் சுகமாயிருந்தால் சந்தடியும் செய் யும், பரபரப்பாய் ஓடியுந் திரியும். இதை உணராமல் தினந் தோறும் ஒரே இடத்தில் சும்மா உட்கார்ந்தாவது, நின்றுகொண் டாவது இருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துவோமானால், அவர்களுடைய பரபரப்பு அடங்காமல் இருந்த விடத்திலேயே கை கால்கள் சிறு விஷமம்செய்யவும், திருட்டு நினைப்புகள் நினைக் கவும் இடமுண்டாகும் என்பதற்குச் சந்தேக மில்லை. உடம்பில் ஒரு சங்கடமு மில்லாமல் சுகமாக இருக்கும் பிள்ளை எப்படிக் கைகா லசைக்காமல் சும்மா விருக்கும்? கூச்சலும் ஓடியாடி விளை யாடுதலும் நோயில்லாமைக்கு அறிகுறி யென்றும் அறிந்து அவர்களைக் குற்றமாகப் பாராட்டி அதட்டாமல் இருப்பது நலம்.

ஐந்தில் அறியாதவன் ஐம்பதில் அறியா னாகையால் சிறு வயதிலேயே, பிள்ளைகள், மறதியையும் அஜாக்கிரதையையும் விட்டுச் சற்றுக் காரியங்களில் கருத்தாயும் நம்பிக்கைக்குப் பாத்திர ராயும் நடந்து கொள்ளும்படி நாம் பயிற்சி செய்து வருவது அவசியந்தான். இப் பயிற்சி சிறுவர்களுக்குப் பல விதத்தில்உண் டாக்கி வைக்கலாம். அவர்களைத் தங்களுடைய புத்தகங்களையும் இடத்தையும் உடைகளையும் சுத்தமாயும் பணிக்கையாயும் வைத்துக் கொள்ளும்படி செய்தால் ஒழுங்கும் சுத்தமும் பிடி படும். விளையாட்டுக் கருவிகளையும் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்த சாமான்களையும் அவைகளிருக்கு மிடத்தில் ஒழுங்காய் வைப்பதை

னென்றும், பல சிறு காரியங்கள் ஏவி, அவைகளைச் செய்யும் முறைகளையும் கற்பித்தால் அப் பிள்ளைகள் ஊக்கத்தோடு நான் நான் என்று களிப்புடன் முந்தி வந்து செய்வார்கள். தோட்ட வேலைகளை அவர்களையே செய்ய விட்டுவிட்டால் செய்யவேண்டிய முறைகளைமட்டும் அறிந்து கொள்வதோ டிராமல், முறைப்படி செய்யவும் பழகிக் கொள்வார்கள். இத்தன்மையான காரியங் களைக் குழந்தைகளுக்கு வருத்த முண்டாகும்படி நெடு நேரம் செய்யவொட்டாமல் சிறிதுசிறிதாய்ப் பழக்கிவைத்தால் அவர்க ளுக்கு இதுவே பரமானந்த மாகும். இவ்விதமாயும், இன்னும் பலவாறுயும் பிள்ளைகளுக்குப் படிப் படியாய் ஜாக்கிரதையையும் சுறுசுறுப்பையும் உண்டு பண்ணலாம். இப்படிப்பட்ட முறை களைக் கையாடாமலே, குழந்தைகள் இயல்பாகவே சர்வ ஜாக்கி ரதையுள்ளவர்களாக இருக்கவில்லை யென்று குற்றம் பாராட்டு வது, பிறக்கும் பொழுதே பருவம் வந்த ஸ்திரீ புருஷர்களாய்ப் பிறக்க வில்லையே என்று குறை கூறுவதே போலும்.

பெரியோர்களான நம்மிடத்தி லுள்ள தீக் குணங்களைப் போலவே, குழந்தைகளிடத்தி லிருக்கும் தீக் குணங்களைக் குற் றஞ் சாட்டியும் கண்டிப்பாய் நடத்தியும் விலக்க முடியாது. கல்விப் பயிற்சி செய்விப்பதில் பல புத்தகங்களைப் படித்து முடிக் கும்படி பலவந்தம் செய்வதை விட்டு, அக் கல்வியை நிரும்பவும் அதைப் பெற்றுக் கொள்ளவும் வழி காட்டிக் கொடுப்பதனால் எப் படிக் காரியசித்தி பெறுகிறோமோ, அப்படியே பிள்ளைகள் வெளிப் பார்வைக்கு மாத்திரம் சரியாய் நடக்கும்படி திருத்துவதைவிட, அவர்கள் மனத்தில் நீதி மார்க்கங்கள் பதிந்து செழித் தோங்கச் செய்ய நயமான வழியில் முயற்சி செய்வோமானால் அவர்கள் நன் னடக்கையிலும் தேர்ச்சி யடையப் பார்க்கலாம்.

"உள்ளும் புறமும் ஒத்திருக்க வேண்டும்"
"வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி"

என்னும் நீதி மொழிகளை நினைத்து நமது தோஷங்களையும் குழந் தைகளின் குணகுணங்களையும் தெரிந்து திருத்த வேண்டும். உதாரணமாக:—

காலஞ் சென்ற நமது மாட்சிமை தங்கிய எட்வர்ட் அரச ரானவர், "ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது" என்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கண்டுணர்ந்து தமது அருமைப் புதல்வர்கள்

(ஆல்பெர்ட் விக்டர், ஜார்ஜ் V.) புஸ்தகங்களை மட்டும் வாசித் தடையக் கூடிய கல்வி, அவர்களுக்குப் பிற்காலத்தில் அவ்வள-வாகப் பிரயோஜனப் படாதென்றும், ஆனால் கிரந்தங் (புஸ்தகம்) களினின்று கிரகித்துக்கொள்ளு மறிவோடு, மனிதருடன் தார-ளமாய்க் கலந்து பேசித் தெரிந்து கொள்ளும் ஞானமும் சேர்ந்-தால் மிகச் சிறந்தததாகு மென்றும் நிச்சயித்தார். இவ்விதமான பயிற்சி தமக்குத் தம் தாய் தந்தையரால் கொடுக்கப்படவில்லையே யென்றும் அரச குமாரர்கள் பல முறை விசனித்தார்கள். ஆகை-யால் இவ்விதப் பயிற்சியே தம் புதல்வருடைய படிப்புகளுக் கெல்-லாம் அஸ்திவாரமா யிருக்க வேண்டு மென்றெண்ணி, அவர்கள் கப்பல் மாலுமிகளாகச் சேர்ந்து கற்பிப்பதே தமதாசை யென வெளிப்படுத்தினார்கள். ஏற்கெனவே பிள்ளைக ளிருவருக்கும் கப்பலில் சேர்ந்து வேலை கற்றுக் கொள்வது வெகு பிரியமாக விருந்தது. விசேஷமாய் ஜார்ஜ் அரசர் கப்பல் சேவகத்தில் வெகு உற்சாக முடையவராகத் தோன்றினர். இவர் தந்தையார் இவர் விரும்பியபடி தம்முடைய விருப்பத்தை வெளியிட, அவ் விருப்பத்தின்படியே கப்பலில் சேர்ந்து ஆங்கு அனேக மனிதர்களுடன், தாராளமாய்க் கலந்து பேசுவதினு லுண்டான ஞானமும் கப்பலில் அநேக காலம் பழகி அநேக இடங்களுக்குச் சென்று அதிமேதாவியானது போல், நம்மிடத்தில் வரும் பிள்-ளைகளை ஒருவர்க் கொருவர் பேசக் கூடாதென்றும் சந்தடி செய்-யக் கூடாதென்றும் தடுக்காமல், சில சமயங்களில் (எக்ஸ்கர்-ஷன்) வெளியே சுற்றிப் பார்த்தல் அல்லது உல்லாச சஞ்சாரம் என்பதில் பிள்ளைகளை வெளியே அழைத்துக்கொண்டு போய் புதிய விஷயங்களைப் புகட்டியும், அவர்களின் மனமெவ்வாறு செல்லுகின்றதோ அதைத் தெரிந்து நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதும் உசித மாகும்.

நாம் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லும் சொற்களும் அவர்-களுக்கு விதிக்கும் விதிகளும் எவ்வளவு சொற்பமா யிருக்கின்ற-னவோ அவ்வளவுக்கு அவர்கள் குற்றங்களும் குறைவுபடும். வந்த பின் பரிகரிப்பதை விட வராம லிருக்கக் காத்துக் கொள்-வதே நலமாகும். மூன் யோசனையினும், அன்போடு கூடிய பாதுகாப்பினும், விதிக்கக் கூடாத காரியங்களைப் பிள்ளைகள் கண்ணிலாவது மனதிலாவது தோற்ற விடாமல் விலக்கலாம்.

வயது வந்தவர்கள் விஷயத்தில் எப்படியோ, அப்படியே சிறுவர்களிடத்தும் குற்றம் ஏற்படுகிறவரையில் குற்றமற்றவர்க-ளாகவே நினைத்து நடத்தவேண்டும். தண்டிப்பதற்கு முன்னே அவர்கள் குற்றவாளிதாம் என்று நாம் நிச்சயித்தறியவேண்டும். இல்லாவிட்டால் தண்டனை செய்தது அநியாயமென்று குற்றம் சாட்டப்பட்ட சிறுவன் குறை கூறுவான். இப்படி நிஷ்காரண-மாய் சிக்ஷிப்பதுபோல் பிள்ளைகளுக்கு அவ்வளவு கேடு விளைவிக்-கத்தக்கதும், அவர்கள் மனத்தில் தீயநினைவுகளை உண்டாக்கத்தக்க-தும் வேறொன்றில்லை. கோபதாபங்கள் அச் சிறுவர்களுக்குண்-டாகி, எல்லாவற்றிற்கும் தங்களுக்குத் தானேயென்று விசுவாசித்து நன்கு மதிக்க வேண்டியவர்களை வெறுத்து அலக்ஷியம் செய்வார்-கள். இப்படி நியாய மில்லாமல் சிக்ஷிக்கப்பட்ட சிறுவன் தனக்-குள் என்ன எண்ணுவானென்றால், "அவர்தான் நாம் சொல்வ-தை நம்பவில்லையே, நாம் உண்மை பேசுவதில் என்ன பிரயோஜ-னம்? தப்பும் ஒப்பும் அவருக்கு ஒன்றாயிருக்கிறதே; நாமேன் சரியாய் நடந்துகொள்ளவேண்டும்" என்று, இவ்வாறு பற்பல கெட்ட எண்ணங்களைப் பலநாள் அல்லது அவன் வாழ்நாள் முழு-தும் மனத்தில் வைத்திருந்தாலும் வைத்திருப்பான். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை வருமாறு — ஒரு பள்ளிக்கூடத்தில் டாம் ஜோன்ஸ் என்று ஒரு பையன் இருந்தான். அவன் அப் பள்ளிக்கூடத்தில் கெட்ட பையனென்று பேர் பெற்றிருந்தவன். என்ன பிசகு நேர்ந்தாலும் அவன்தான் செய்து விட்டதாக எல்-லாரும் தீர்மானித்து விடுவது வழக்கம். இவ்வாறு அவன் அவ-மானத்திற்கு வழக்கப்பட்டு அவன் தேகம் தண்டனையால் காய்ப்-பேறிவிட்டது; ஆகவே, கெட்ட பேர் எடுப்பதே தனக்குக் கௌர-வம் என்று எண்ணிவிட்டான். இங்ஙன மிருக்க, ஒருநாள் உபாத்தியாயருடைய மூக்குக்கண்ணாடி காணமற் போய்விட்டது. "யார் எடுத்தது" என்று அவர் தாம் வகுப்பிலுள்ளவர்களைக் கேட்டார். எல்லோரும் மௌனமாயிருக்க, டாம் ஜோன்ஸ் தான் எடுத்தானென்று குற்றஞ் சாற்றினர். அவன் அதனை மறுத்தான். பிறகு யாரேனும் ஒருவர் எடுத்ததாக ஒப்புக்கொ-ண்டாலொழியப் பகலில் ஒருவரையும் வீட்டிற்குப் போகவிடுவது இல்லை என்று உபாத்தியாயர் பயமுறுத்தினர். உடனே டாம் ஜோன்ஸ் தான் எடுத்ததாக ஒப்புக்கொண்டான். ஐந்து நிமிஷங்-கழித்த பிறகு உபாத்தியாயருடைய மனைவி அந்த மூக்குக் கண்-

ணுடியை எடுத்துக்கொண்டு வந்து, அது மேஜையின்மேல் இருந்ததாகவும், அவர் பள்ளிக்கூடத்திற்கு வந்தபின் தான் அதைப் பார்த்ததாகவும் சொல்லி, அதைக் கணவனிடம் கொடுத்தாள். அதன்பின் டாம் ஜோன்ஸைப் பார்த்து "ஏன் நீ எடுத்ததாக ஒப்புக்கொண்டாய்" என்று உபாத்தியாயர் கேட்டபோது, தாங்கள் சந்தேகப்பட்டமையால், நான் பொய்யாகவாவது ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், சரியான நேரத்தில் எல்லோரையும் வீட்டிற்கு அனுப்புவீர்களென்று எண்ணியே ஒப்புக்கொண்டேன்" என்று சொன்னன். உபாத்தியாயர்கள் யோசனையில்லாமல் இவ்விதமாகத் தங்கள் மாணக்கர்களிடத்தில் நடந்து கொள்ளுவதால் அவர்கள் தங்கள் ஆசிரியர்களின்மீது தப்பபிப்பிராயங்கொள்ள ஏதுவாகிறது. ஆகையால் உபாத்தியாயர்கள் குழந்தைகளிடத்தில் கோபத்தைக் காட்டாமல் அன்புள்ளவர்களாய், அவர்கள் குணங்களை நன்றாய்த் தெரிந்து கொண்டுவந்தால், அவருடைய நடை உடைபாவனைகளே குழந்தைகளின் மனதைக் கவர்ந்து, அவர் சொல்லிக் கொடுப்பதையன்றி வேறொன்றையும் கவனியாது இருக்கும்படி செய்து விடும்.

ஒரு பிள்ளை தப்பு செய்தது உண்மையென்று நன்றாய் விளங்கி, பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மற்றச் சிறுவர்கள் கெடாமலிருப்பதற்காக அவனைச் சிக்ஷிக்கவேண்டியது அவசியமாயிருந்தால், அப் பிள்ளையின் மான அவமான உணர்ச்சிக்கும் குணகுணத்திற்கும் ஏற்றதாயும், மற்றப் பிள்ளைகளுடைய சுபாவத்திற்கு எத்தன்மையான சிக்ஷை விதித்தால்போதுமோ, அத்தன்மைதாயும் சிக்ஷையை அளவிட்டுச் செய்யவேண்டும். இது எப்படியென்றால் தந்தை தாயாரை நேசித்து அன்பு பாராட்டுகிற ஒரு பிள்ளைக்கு, அவன் செய்த குற்றத்தால் அவனுடைய பெற்றோர் மிகவும் வருத்தப்பட்டார்களென்று, அவன் மனத்தில் உறைக்கச் சொல்லிக் காட்டினால், அந்த வருத்தம் அவனுக்கும் உண்டாகி, மிகவும் விசனப்படுவான். அதுவே அவனுக்கு ஒரு தண்டனையாகும்.

கடின சித்தமும் கபடமுள்ள மற்றொரு பிள்ளை தேக தண்டனைக்கல்லாமல் மற்றொன்றுக்கு மஞ்சாத துடுக்குமனமிருப்பதுண்டு. அன்னியருடைய பழிப்புச் சொல்லைப் பொறுக்கிற குணமில்லாத மனமும் சங்கோசமுமுள்ள சாதுவான ஒரு பிள்ளை,

நாலுபேர் யோக்கியர் முன்னிலையில் அவன் செய்த காரியத்தைப் பற்றிச் சற்றுக் கண்டித்துப் பேசினால் அவன் மிகவும் அவமானப்பட்டவனைத் துக்கத்தில் முழுகிப்போவான். நெஞ்சுரப்புள்ள மற்றொரு பிள்ளையோ, நாலுபேர் மத்தியில் தன்னை நிறுத்திவைத்துப் பேசினார்களே, அதுவே தனக்குப் பேரும் பிரக்யாதியுமென்று பாவிப்பான். மற்றொரு பிள்ளை பகிரங்கமாய் அவனை இழித்துப் பேசுகிறதையே மேலானதாய் நினைக்கிறான்.

நாம் சிக்ஷை செய்யும்போது பிள்ளைகளுக்கு எளிதில் உண்டாகிற கோபதாபங்களைக் களைந்து பெருகச் செய்யாமல், தாங்கள் செய்த குற்றத்தின் அளவையும், அதனால் விளையும் தீமையையும் உணரும்படியாயும், அதற்காகச் சிந்தை நொந்து இனி இப்படி ஒருபோதும் செய்யலாகாதென்று நீய வழியினின்று விலக முயலும்படியாயும் தண்டிப்பதே உசிதம். காரியம் இப்படியிருக்கப் பல பெற்றோரும் உபாத்திமாரும் பிள்ளைகள் செய்த குற்றத்திற்காகக் கடினமாகத் தண்டித்து விட்டால், தாங்கள் செய்ய வேண்டிய கடமை யெல்லாம் முடிந்ததாக நினைக்கிறார்கள். இதனால் விளையும் தீமை இன்னதென்று யோசிக்கிற தில்லை. அந்தக் கடின தண்டனையினால் அந்தப் பிள்ளை கடுகடுத்த முகமுள்ளவனாவது, மிகவும் பயந்து மிரண்டவனாவது ஆய்விட்டால், அது அந்தப் பிள்ளைக்குக் கெடுதியேயல்லாமல் க்ஷேமமல்லவென்று ஞாபகத்தில் வைக்கிறதில்லை. ஒரு பிள்ளைக்குக் கடின தண்டனை செய்ததினால் அப் பையன் எப்போதும் கடுகடுத்த முகமும் எதிர்த்துப் பேசுங் குணமுமுள்ளவனாகி விடுவான். இதை யானே நேரில் கண்டறிந்தேன். ஆகையால் கடின தண்டனையினால் ஒரு பையனைத் திருத்துவதிலும், சந்தோஷ வார்த்தையினாலும் உற்சாகத்தினால் பல உதாரணங்களால் திருத்த முயல்வதே உசிதமாகும்.

நாம் அடிக்கடி நம்முடைய சிறு பருவத்தை ஞாபகம் பண்ணிக் கொண்டாலல்லாமல், நம்முடைய கடுஞ் சொற்களாலும் கடின தண்டனையினாலும் சிறுவர்களைக் கோபம், தாபம், அவமானம், பீதி முதலானவைகளால் பீடித்து மனங் கலங்கும்படி செய்கிறோமென்கிற உணர்ச்சி நமக்குத் தோன்றாது. சிக்ஷிக்க வேண்டியது அவசியந்தான்; ஆனால் அவர்கள் நல்வழிக்குத் திரும்பி, தம்மைத் தண்டிப்பவர் தங்களுக்கு மித்திரரேயன்றி

சத்துருவல்ல வென்றும், தங்களுடைய நன்மைக்கும் விருத்திக்குந் தான் அவர்கள் சிக்ஷிக்கிறார்க ளென்றும் எண்ணும்படி ஒழுங்கு படுத்துகிற வரையில் பெற்றோரும் உபாத்திமாரும் தங்கள் கடமையைச் செய்து முடித்ததாகத் திருப்தி அடையக்கூடாது.

பாடசாலைகளில் நியாய மறிந்து சிக்ஷிப்பது அதிக பிரயாசையா யிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? உபாத்திமார் கோபத்துக்கு இடங் கொடாமல் நியாயத்தையே நாடி, நடுவு நிலைமையாக நடத்தக் கடவர்களாக. தாங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பருவத்தில் தங்களை உபாத்தியாயர் அநியாயமாய்த் தண்டித்ததை ஞாபகத்தில் வைத்திராதவர்களில்லை. அத்தன்மையானவைகளை நாம் மனத்தில் மறவாமல் வைத்திருந்தால், நம்முடைய வசத்திலிருக்கிற சிறுவர்களை நியாயத்தை உணர்ந்து நடத்தும்படி அவை இடைவிடாமல் எச்சரிக்கை செய்வதும், உபாத்தியாயர்கள் நடந்தவைகளைத் தீர விசாரித்துக் குற்றஞ் செய்த பிள்ளையைச் சரியாய்க் கண்டறியாமல், அவசரப்பட்டுத் தண்டனை செய்வதால் பாடசாலைகளில் நேரிடும் அநியாயங்களுக்கும் நிந்தைக்கும் ஒரு திருஷ்டாந்தம் சொல்லுவோம்:

ஒரு பெரிய பாடசாலையில் பல வருஷம் படித்து வந்து தப்பாமல் தன் வகுப்பில் முதல் ஸ்தானத்தை விடாமலே ஜாக்கிரதையா யிருந்த ஒரு சிறுவன், ஒரு நாள் உபாத்தியாயர் ஆய்ந்தோய்ந்து பாராமல் செய்த ஒரு காரியத்தால் அவரிடத்தில் மதிப்பற்று முதல் ஸ்தானத்தை எப்போதும் விரும்பின தில்லை. அதாவது —

அப்பாடசாலையில் சரியான காலத்தில் வருகிற பிள்ளைகளுக்கும், வீட்டில் செய்து வரும்படி கொடுத்த கணக்கைத் திருத்தமாய்ச் செய்து வருகிறவர்களுக்கும் நன்கு மதித்தற் கடையாளமாக அதிக மார்க்குகள் கொடுப்பது வழக்கம். அப்படியே ஒரு நாள் காலையில் ஒருபிள்ளை காலம் தப்பாமல் குறித்த வேளைக்கு வந்தது மன்றி, கொடுத்த கணக்கையும் வீட்டில் பார்த்து ஒரு தண்டுக் கடிதத்தில் எழுதித் தன் புத்தகப் பையில் வைத்திருந்தான். அப்படி யிருக்கையில் அவனை உதவி உபாத்தியாயரில் ஒருவர் ஓரறைக்குள் போய் ஏதோ ஒரு புத்தகம் எடுத்துக் கொண்டுவரும்படி வேலையிட்டு அனுப்ப, அச்சமயத்தில் அவன் புத்தகப் பையில்,

கணக்கு செய்து வைத்திருந்த தண்டுக் கடிதத்தை, வேறொரு பிள்ளை இரகசியமாய்த் திருடிக் கொண்டு அதைப் பார்த்துப் பரபரப்பாய்த் தான் ஒரு காகிதத்தில் கள்ளப் புள்ளி பதித்துக் கொண்டான். அச் சமயத்தில் தலைமை உபாத்தியாயரும் திடீரென்று வந்து, வீட்டிற் செய்த கணக்குகளைக் காட்டுங்கள் பார்ப்போமென்று சொல்லி, கணக்கு செய்து வராதவர் யாரோ அவர் ஐந்து மார்க்குகள் இழந்துவிட வேண்டுமென்று, காரியங்களை அவனவன் சொல்லிக் கொள்ள இடங்கொடாமல் அவசரத்தில் சொல்லிப் போய்விட்டார்! இதன்றியும், அன்று காலையில் திருட்டுத்தனமாய்க் கள்ளப்புள்ளி செய்து கொண்டவன் திட்டமாய்க் கணக்கு செய்தானென்று மெச்சிக் கொள்ளப்பட்டு அதிகமான நிரபராதியான மார்க்குகளைப் பரிசாகப் பெற்றான். முன் சொன்ன சிறுவன் இப்படி அநியாயமாய் அவமானப்பட்ட பின்பு, அந்தத் தலைமை உபாத்தியாயரை உள்ளுற வெறுத்து அலக்ஷியமாயிருந்து விட்டது ஆச்சரியமல்லவே!

உபாத்திமார் இவ்வாறு அவசரப்பட்டு நீதிதவறிப் போவதனால், பிள்ளைகள் அவரை அமதிக்கவும் அசட்டை செய்யவும் ஏதுவாகிறது. இவை எதனால் உண்டாயின என்று விசாரித்தால், அவசரமும், தெரியாமையும், மூன்கோபமும், பொறுமை யில்லாமையுமே காரணமென்று விளங்கும்.

பிள்ளைகளிடத்தில் கோபத்தைக் காட்டாமல் அன்புள்ளவர்களா யிருந்த ஒருவருடைய சரிதத்தை இங்கு உதாரணமாகக் கூறுவோம்:

காலஞ் சென்ற நமது மாட்சிமை தங்கிய எட்வர்ட் அரசரும் அலெக்ஸாந்தரா அரசியும் தமது புதல்வரை அதட்டி வெருட்டி அஞ்ச வைக்காமல், உள்ள முவந்து அன்பு பாராட்டியே அவர்களைச் சீராய் வளர்த்து வந்தார்கள். ஆகையால் இந்த இராஜ குடும்பத்திற் எந்நாளும் அமைதியும் சந்தோஷமுமே குடிகொண்டிருந்தன வென்றால் அது ஓர் ஆச்சரிய மல்ல. சக்கிரவர்த்தியின் பிள்ளைகள் தங்கள் மாதா பிதாவை எவ்வளவு அன்புடன் நேசித்தார்க ளென்றால், தமதரண்மனைக்கு வந்திருந்த ஓர் பேர் பெற்ற பிரபு அரசிளங் குமாரர் (ஆல்பெர்ட் விக்டர், ஜார்ஜ் V.) இருவரையும் நோக்கி "உங்களுக்கு மிகவும் பிரியமுள்ள ஒரு மனி-

தனுக்கு என்ன பெயர் கொடுப்பீர்கள் ?'' என்றதற்கு மறுமொழி-யாக இருவரும் ''ஆல்பெர்ட் எட்வர்ட்'' என்று மகிழ்ந்து கூறினர். பிறகு ''உங்களுக்கு வெகு இஷ்டமுள்ள ஓர் பெண்ணுக்கு என்ன பெயர் கொடுப்பீர்கள் ?'' என்றதற்கு இருவரும் ஒரே வாய் மொழியாக ''அலெக்ஸாந்தரா'' ஒன்று கூறிக் குதித்தனர். மறுபடியும் அவர் இராஜ புத்திரரை நோக்கி ''நீங்கள் யாரைப்போ லிருக்க விரும்புகிறீர்கள் ?'' என்ற கேள்வி கேட்டு முடியா முன்னே, ''எங்கள் தந்தையைப் போல்'' என்று வெகு வாஞ்சையுடன் விடை யளித்தனராம். ஆகையால் நம் பிள்ளைகள் நம்மிடத்தில் நேச விசுவாசமா யிருக்க, நாம் அவர்களை நேச விசுவாசத்தோடு நடத்த வேண்டு மென்று இதனால் தெரிகிறது.

மேலும் பிள்ளைகளின் சொற்ப பிழைகளுக்கு, அதிக கடினமாய்ச் சிக்ஷிப்பது தகாதென்பதற்கு இன்னுமொரு நியாயமுண்டு. அதாவது சிறு பிழைகளைப் பெருங்குற்றமாக்கிச் சிக்ஷிக்க ஏற்பட்டால், பெருங் குற்றங்களைச் சிக்ஷிக்கிற விதம் எப்படி ? ஆகையாலேதான்,

''சிறியோர் செய்த சிறு பிழை யெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே''

என்று அதிவீர ராம பாண்டியரும் விளங்கக் கூறினர்.

P. பரிமணப் பல்லவராயர்,
கெவர்ன்மென்டு டிரெயினிங் ஸ்கூல்,
திரிச்சிராப்பள்ளி.

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1914ஆம் ஜனவரி மீ | மாதம் 8.

ON THE FALSEHOOD OF FLATTERY

இச்சகம் பேசேல்

1. அரசிளங் குமர அரசிளங் குமர
பரவுநன் னீதிகள் பயிலுமிக் கதைகளை

2. உளங்கொண் டேற்றிவ் வுலகிய லுணர்ந்தே
அளவில்மா னிடர்தம் அமைப்பினை யறிவாய்

3. நல்லோர் வகுத்த நல்லியல் பினைத்தும்
ஒல்லும் வகையால் உள்ளத் தமைத்துக்

4. குற்ற மெவற்றையும் பற்றறக் களைந்து
உத்தம ஞதுக ஓங்கிய மையினே

5. கூச்சமொன் றின்றிக் கூறுமிச் சகமே
தீச்செயல் கட்கெலாம் செவியிற் தாபம் (அதனால்)

6. வஞ்சகர் கூறும் வஞ்சப் புகழ்ச்சியை
அஞ்சியப் போழ்தே யகற்றிடல் வேண்டும்

7. நட்புக் காட்டி நவிலும் உண்மைகள்
திட்பமாய் அரசரைச் சேர்ந்திடல் இலையால்

8. உற்ற தீதிகளை உளந்துணிந் துரைப்பதும்
கொற்றவர் அவையிற் குற்றமாய் முடியும்

9. நண்ணிய நட்பின் நலத்தினை யாங்கே
எண்ணிப் பேசுதல் எவர்க்கும் இயலா

10. உன்னத நிலையை யுற்றதின் னவையில்
மன்னுவோர் நின்னை வணங்குவோ ரன்றே

11. ஏனையோர் போல யானும் நின்பால்
ஈனமார் இச்சகம் இசைத்த லாமோ

12. கலியச் சொல்லினும் நன்மையே பயக்கும்
வலியநீ திகளெலாம் மங்கிடச் செய்கோ

13. நின்சமு கத்தினை நேர்ந்திச் சகமாம்
புன்மொழி யால்நினைப் புகழ்ந்து புகழ்ந்து

14. வயிற்றை வளர்க்கும் வஞ்சகர் வாழ்க்கையைப்
பயின்றுகொள் வாளோ பாமட நெஞ்சமே (மற்றும்)

15. நின்பா லுள்ள நிறைகுணங் களையும்
அன்பா லுலகினர் அறைவன வற்றையும்

16. மறைத்திசைப் பேனென மதித்திடல் வேண்டா
இறைவற் கான இயல்புக ளனைத்தும்

17. அளியநின் னகத்தில் அரும்பிநிற் கும்மென
தெளிவுற மானிடர் தேர்கின் றனரால்

18. இளஞ்சூ ரியனென இயலுநின் மனத்துள்
விளங்குறு மமைதியும் மேவுறல் லன்பும்

19. ஆனு வருளும் அமைந்து வளரவும்
மானவர் இதிக்கணல் வருந்தக் கேட்பினும்

20. நெஞ்சநெக் குருகி நீ நினைந்து
அஞ்சுறு மதனை யகற்றுங் காறும்

21. உள்ளம் பதைக்கும் உயர்நிலை யோச்சவும்
கள்ளமொன் றின்றிக் கருதுகின் றனரால்

22. இவ்வகை யாக இயலுறு குணங்கள்
செவ்விய மனத்திற் சிறந்து விளங்குக

23. இன்றேல் மானிடர் எண்ணிய வெல்லாம்
அன்றே யவல மாகிடும் ஐய

24. இளவர சென்னும் இயைபு நீங்கி
வளவிய செங்கோல் மன்னனு கிடுநாள்

25. இங்கிறை குணமெலாம் எழில்பெற் றோங்க
நன்னய மானிடர் நாடுகின் றனரால்

26. இனமார் இடுக்கண் எய்தமக் காலும்
மனமார் உறுதியை மருவிடல் வேண்டும்

27. நின்னைக் கண்டோர் நின்னருந் தன்மை
என்னென் றுனை வென்றிடல் வேண்டும்

28. மன்னிய தீரம் மருவிய வீரரே
இன்னருள் தனக்கிங் கிருப்பிட மாவர் (அவரே)

29. நேரா நிடத்தும் நல்லருள் நிறுத்தி
பேரா னந்தம் பெற்றிடு வாரால்

30. பயமே கொண்டவர் பாதக ராவர்
வயங்கொள் வகையினில் வஞ்சமே புரிவர்

31. இதற்கோ ருவமை இனிதெடுத் துரைப்பேன்
அதனையுள் ளத்தில் அமையக் கேண்மோ (ஒருகால்)

32. கடும்பசி கொண்டு காட்டி லலைந்தோர்
கொடுவரி வேங்கை குழைந்தாங் கிருப்ப

33. மானிட னொருவனவ் வனத்தை யடைந்து
தானவண் தனியாச் சரித்திடல் கண்ட

34. அப்புலி யவனை யறைந்து வீழ்த்தித்
திப்பிய இரையாச் செய்திட நினைத்துக்

35. குறுகிடக் கண்டவன் குலைநடுக் குற்றுத்
தறைமேல் விழுந்து சலியா திருந்தனன்

36. அப்பொழு தங்கண் அடைந்தவோர் சிங்கம்
இப்புலி யிருக்கும் இயல்பினைக் கண்டு

37. சீற்றங் கொண்டு திசையெலாம் நடுங்க
ஏற்றிடி யென்ன இரைந்துமேற் பாய

38. உகிரினும் பல்லினும் உதிரம் ஒழுக
துகளெழு விரண்டும் சூழ்ந்து பொருதன

39. மூடிவிலவ் வேங்கை முடிவினை யடையப்
படியில் விழுந்தவன் பார்த்துட னெழுந்தே

40. இருமாந் தாங்கன் இருந்தசிங் கத்தின்
அருகிற் சென்றதன் அடியிற் படிந்து

41. என்னையா தரியென இரங்கி வேண்டலும்
நன்னயச் சீயமும் நன்றே யாகுக

42. என்னுடன் நீயும் என்னிடம் வருகெனத்
தன்னுட னழைத்துச் சாருங் காலை

43. ஐயான் இப்பொழு தாடிய போரில்
மெய்யுறு மெனது வீரமும் தீரமும்

44. கண்ணுற நேரிற் கண்டனை யன்றே
எண்ணிலா வுயிர்களில் எதுவே யாயினும்

45. என்முன் நிற்கவும் எண்ணிநண் ணிடுமோ
மன்னியென் னடிமையா வாழ்தரு மாக்கள்

46. மேவுதம் இரைக்கா வெளிவர நேரினும்
கூவியே மறைவிற் குலவித் திரிந்திடும்

47. மானும் மரையும் வல்லியல் யானையும்
ஏனமும் கரடியும் இன்னும் பலவா

48. உற்றிடு மாக்கள்தம் உடலுதி ரத்தால்
சித்திரித் திருக்குமிச் சிறப்பெலாங் காணுய்

49. இதுகாண் அதுகாண் இருபுறங் களினும்
மிதிபடு கின்றவிவ் வெள்ளெலும் புகளெலாம்

50. என்னரும் வெற்றியை இனிது விளக்கிடும்
பின்னுமென் பற்கள் பிளந்தவை பலவே

51. ஐயநீ என்றன் ஆற்றலைக் கண்டின்
றெய்திய எண்ணம் எதெனக் கேட்ப

52. அந்த மானிடன் அமைவுடன் சிறிது
சிந்தித் ததற்குச் செப்ப லுற்றனன்

53. தன்னரும் வலியால் தயிரியத் தன்னல்
மன்னரு விளங்கும் வள்ளலே கேணமோ

54. நண்ணுயிர் போலும் நட்பினர் கேட்பின்
உண்மையாப் பட்டதே உரைத்திடல் வேண்டும்

55. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பென் றறிக

56. உண்மைக் கென்றும் உறுபழி யில்லை
உண்மையை வெல்லும் உபாயமொன் றில்லை

57. உண்மையின் மேலாம் ஒழுக்கமு மில்லை
உண்மையின் மேலாம் உறுதியு மில்லை

58. உண்மையின் மேலாம் ஒருதவ மில்லை
உண்மையின் மேலாம் ஓரற மில்லை

59. உண்மையே கடவுள்தன் உருவமா மென்னில்
உண்மையின் மேலொன் றுண்டோ வுண்டோ (அதனால்)

60. உற்றோ ராயினும் மற்றோ ராயினும்
கற்றோ ராயினும் கல்லா ராயினும்

61. பெரியே ராயினுஞ் சிறியோ ராயினும்
அரியதன் தந்தை தாயே யாயினும்

62. செல்வரே யாயினும் அல்லரே யாயினும்
மல்லுயர் திண்டோள் மன்னரே யாயினும்

63. எண்ணி யொன்றை யென்னெனக் கேட்பின்
உண்மை யுரைத்தலே யுத்தம மாகும்

64. அண்ணலே யதனால் அடியேன் மனத்தில்
எண்ணிய உண்மையை இசைப்பேன் கேண்மோ

65. உன்னைப் போலும் உத்தம வீரனும்
மன்னவன் போலியா வந்திடுங் கீர்த்தியை

66. எண்ணி மனத்துள் இறுமாந் திருத்த
லொண்ணு தைய ஒளிவிருந் திரவிற்

67. போந்து பிறர்தம் பொருளைக் கவரும்
மாந்தரும் தஞ்செயல் மதித்தே மகிழ்வர்

68. வழிமறித் தடித்து வெளவிடுங் கொலைஞரும்
பழியுண ராது பண்பின் மகிழ்வர்

69. புன்மை யவாலே பொருந்திய வேந்தர்
அன்னிய நாட்டை யடர்த்துப் பறித்துக்

70. கொள்ளை கொண்டு குடிகளை யலைத்துத்
தள்ளருங் களிப்பால் தம்புகழ் கூறுவர்

71. செங்கோல் மன்னர் திகழ்மன் பதைகளைப்
பொங்கிய அருளால் புரந்திடு வாரே (அதனால்)

72. நீதி யொன்றே நின்வீ ரத்திற்
காதியா மரணு அமைவ தாக

73. எல்லாம் வல்ல இறைவன் நிலைக்கு
எல்லா வுயிர்க்கும் இறைவனும் மேன்மை

74. அளித்தனன் அதனை அன்புடன் ஓம்பிக்
களித்திங் குயிர்களைக் காத்திடு வாயே

75. என்வயின் காட்டிய இன்னருள் நின்னை
நன்னய் வேந்தென நாட்டிய தையா

76. இதுபோ லாதர வற்றவ ரிடத்தெலாம்
கதிசேர் நல்லருள் காட்டுதல் கடனே

77. என்னைக் கூறிய இன்மொழி கேட்டு
மன்னவ னுமவ் வாளரி கூறும்

78. ஐயநீ இப்பொழு தறைந்த துண்மையே
மெய்யா என்னை மேவினை யெல்லாம்

79. வஞ்சக மாக வாழ்த்திப் புகழ்தலின்
விஞ்சிய தென்பால் வீண்புகழ் ஒன்றே

80. வளம்பெற வயிற்றை வளர்த்திடச் சூழும்
அளவில் மாக்களாம் அடிமைகள் என்றும்

81. இச்சகம் பேசி ஏமாற் றினவே
நிச்சய மாக நீமொழிக் தவற்றை

82. உன்ன வன்ன உளப்பதைக் கின்றது
துன்னும் நல்லுணர் வெய்துவேன் ஐயா

83. ஆயினு மொன்றுனை யன்புடன் கேட்பேன்
மாயமொன் றின்றி வழுத்திடல் வேண்டும்

84. மானிட ராகும் மன்னவ ரனையில்
ஆன முறைகளை அறிந்த துண்டோ

85. மானிடரான மன்னரும் எனைப்போல்
ஈனமார் முறைகள் இயற்றுகின் றனரென

86. என்னைச் சூழும் இவ்வஞ் சகர்கள்
உன்னிக் கூறுதல் உண்மை யேயோ

87. என்னைச் சிங்கம் இசைப்பது கேட்டே
அன்னவன் ஐயா ஆமஃ துண்மையே

88. தன்னைப் போல மன்னுயிர் தம்மை
உன்னும் வேந்தன் உலகினி லரிதே

89. கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டிற்
கடுப்புலி வாழும் காடுநன் றேயென

90 எண்ணி யானும் எண்டடைந் தேனுல்
அண்ணலே யுண்மை யறைந்தன னன்றே

91. மல்லுயர் திண்டோள் வாளரி வேந்தே
நல்குக இன்னே நல்விடை யெனக்கே.

பத்திராதிபர்.

MILK

பால்

குழந்தைகள் பிறக்கும்போதும், மிருகங்கள் குட்டி போடும் போதும், அக்குழந்தைகளும் குட்டிகளும் இலேசாகவும் சுலபமாகவும் ஊட்டி வளர்க்கப்படும் பொருட்டு அவற்றின் தாய்மாரிடத்தில் பாற் கருவிகள் அமைக்கப் பட்டுள்ளன.

தாய்மார்கள் உட்கொள்ளும் உணவின் சாரமும் தண்ணீரின் பாகமும் இரத்தமாகி மிகுந்த பாகம் பாலாகமாறி அதற்காக அமைத்துள்ள கருவியில் நிரம்புகின்றது. பால் திரவ பதார்த்தமெனத் தோன்றினும் அதனில் மிகச் சிறிய பொடிப் பொடியான திடபாதார்த்தங்கள் நிறைந்திருக்கின்றன.

தாய்ப் பாலுண்ட குழந்தை குட்டிகள் தாம் செழிப்பாகவும் உறுதியாகவும் வளருகின்றன. குழந்தைகளுக்கு மாட்டுப் பாலேயே மிகவும் ஏராளமாகப் புகட்டி வளர்த்தாலும், அவை தாய்ப் பாலையுண்டபிள்ளைக்குச் சமமாக வளருதல் அருமையே.

உலகில் பால் எனப் பெரும்பாலும் விளங்குவது பசுவின் பாலே. சிலவிடங்களில் எருமைப்பாலும் ஆட்டின்பாலும் வழங்குகிறது. ரெயின்டீயர் (Raindeer) என்னும் மானின் பால் அவை மிகுந்த தேசங்களிலும் ஒட்டகத்தின் பால் அவை மிகுந்த தேசங்களிலும் பாலென வழங்கப்படுகின்றது. யாவராலும் பால் என வழங்கப்படுவது பசுவின் பாலே.

பசுக்களின் தீனி, சௌக்யம், சுபாவம், பலம், நிறம், தேசம் என்னும் வைகளின் வேறு பாட்டுக்குத் தக்கவாறு பாலின் குணமும் வேறுபட்டிருக்கின்றது; முக்கியமாய்த் தீனியே குணவேறுபாட்டுக்கே யல்லாமல் கறக்கும் அளவின் வேறுபாட்டுக்கும் காரணமாயிருக்கின்றது. இரவிற் சாப்பிட்ட தீனி காலையிலும் பகலில் மேய்ந்த தீனி மாலையிலும் பாலாக அமைகின்றது. முதலில் பாற்கறக்க யத்தனித்தால் மடியிற் பால் சுரந்திராது கன்றை யவிழ்த்து விடவேண்டும். நம்மைக் கண்டவுடனே கரந்த பால் கன்றைக் கண்டவுடனே சுரந்து வருகின்றது.

பால் வெண்மை நிறத்த தென்பதும் இனிப்ப தென்பதும் யாவரும் அறிந்த விஷயம். பால் செய்வது யாவும் பரோபகாரமே; அதனிடம் யாம் கண்டு கொள்வது யாவும் நீதியே.

பசித்தோரும், களைத்தோரும் அதனை அருந்தி ஆனந்திக்கின்றனர். பால் தான் கஷ்டப்பட்டுப் பலரூபங்களாக மாறியும், வேறு வேறு பாகமாகப் பிரிந்தும், உபசரிக்கின்றது.

பால் காய்ச்சும் பொழுது அதனிடத்துள்ள தண்ணீர் ஆவியாக, அது பொழுது கொதித்துப் பொங்கி வழிந்து நெருப்பினுள் விழுந்து விடுகின்றது; பின் சிறிது தண்ணீர் தெளித்தால் கொதிப் படங்கி அமைதி யுறுகின்றது. இஃது தன்நேசனைப் பிரிந்திருப் பதினும் நெருப்பினில் விழுந்து நசிப்பதே உசித மென்றுன்னி அதனில் விழுந்து விடுகின்றது; பின் பழைபடி தன் நண்பனை தண்ணீரைக் கண்ட வுடன் ஆனந்த மடைகின்றது. காய்ச்சின பாலின் உபயோகம் யாம் உரைப்பது அனவசியம். அவற்றிற் சிறந்தது தயிராகத் தோய்த்தலாம்.

ஒரு துளி தயிரைப் பிரையாக விட்டு வைத்தால் பாலெல்லாம் தயிராகின்றது. பாலானது, தயிர் அற்பனையிருப்பினும், தனக்கு நண்பனென்று நிச்சயித்து, அதனுடன் சேர்வதன்றி, அதாகவே மாறுகின்றது. தயிருடன் சேர்ந்தாலும் தன் பழைய நிநேகிதனை மறப்பதில்லை; மத்திட்டுக் கடையும் போது தண்ணீரைக் கண்டாற் சேர்த்துக் கொள்ளுகின்றது.

தயிர் கடையப்பட்ட பின் மோராகவும் வெண்ணெய் யாகவும் பிரிய நேர்கின்றது. ஏன்? தான் பிரிந்தும் வெவ்வேறு வழியாகச் உபயோகப்படுகின்றது. வெண்ணெய் தான் நிருதியாய்ப் பிரயோசனப் படாமைக்கு நொந்து நெருப்பில் வெந்து நெய்யாக மாறுகின்றது.

பாலும் தயிரும் தம்முள் நெய்யிருக்கின்ற தென்பதைச் சிறிதும் வெளிப்படையாகக் காட்டாமல் முற்றிலும் அடங்கியிருக்கின்றன. வெண்ணெயும் ஒருவாறு அப்படியே யென்னலாம்.

பால் முதல் நெய் வரையில் சிறிது காலம் உபயோகப் படுத்தப் படாவிட்டால் மிக வருந்திப் பால் சில நாழிகையிலும், தயிர் சில நாட்களிலும், வெண்ணெய் சில வாரத்திலும், நெய் சில மாதங்களிலும், தமது குணமழிந்து, கெடுகின்றன.

பாலைக் கொண்டு நாம் அறிந்து கொள்பவை, பரோபகாரத்தில் ஆசையும் சிநேக வாஞ்சையுமாம்.

R. CHOCKALINGAM,
Coimbatore.

EARLY RISING

தூக்கம் தெளிதல்

உலகத்தில் எதுவும் ஒரு நிலையினின்று மற்றொரு நிலைக்குத் திடீரென்று மாறுவதில்லை. முன்பின் இல்லாமல் ஒரே அடியாகச் சரேலென மாறுவது இயற்கையின் அமைப்பு அன்று. எவ்விடத்தில் எவ்விதமான மாறுபாடு உண்டாவதானாலும், அது மெதுவாகவும், படிப் படியாகவும், நியாயமாகவும் இருக்கின்றது. அப்படிப்பட்ட மாறுபாடு அமைப்பதற்கு மிகுந்த புத்தித் திறமை வேண்டுமென்பதும் நமக்குப் புலப்படுகின்றது. உதாரணமாக, பகலிற் கண்ணைப் பறிக்கும் கடும் வெயிலின் பிரகாசம் இரவிற் கண்ணை மறைக்கும் காரிருளாக மாறுவதையும், அந்த இருள் மறுபடி வெளிச்சமாக மாறுவதையும் கவனியுங்கள்.

வெளிச்சத்திற்கும் இருளுக்கும் இடையிலுள்ள காலம் சந்திவேளை என்னப்படும். இந்தச் சந்திவேளை என்பது ஒன்று இயற்கையில் அமைந்திராவிட்டால், நாம் நாள்தோறும் இருளினின்றும் திடீரென்று வெளிச்சத்திற்கு வருவோம்; மறுபடி, வெளிச்சத்தினின்று திடீரென்று இருளுக்குப் போவோம். இதனால் கண்ணில் எரிச்சல் ஏற்படும். அந்த எரிச்சல் கண்ணுக்குப் பிடையாகும்.

அருமேதையத்திற்கு முன்பு படுக்கையை விட்டு எழுந்திருக்கும் வழக்கம் இல்லாதவர்களுக்கு, இயற்கையில் அமைந்துள்ளதென மேலே சொல்லிய நியமத்தின் பயன் இல்லாமற் போகும். அந்த நியமம் மிகவும் புத்திசாலித்தனமாக அமைக்கப்பட்டு இருக்கிறது என்று மேலே கண்டோம். அவ்வளவு நல்ல நியமத்தின் பயனைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் காந்தி மிகுந்த சூரிய வெளிச்சம் நமக்குத் திடீரென்று அகப்படும்.

நேரஞ் சென்று படுக்கையை விட்டு எழுவதனால் கண்ணில் நோவுண்டாவது நாம் எல்லாரும் அனுபவத்தில் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயமாகும். ஆதலால், படுக்கையை விட்டு எழுவதற்கு உத்தமமான வேளை பொழுது விடிவதற்கு ஐந்து நாழிகை முன்பு ஆகும் (4 a. m.). அந்த வேளை பிராம்ம முகூர்த்தம் எனப்படும்.

பிராம்ம முகூர்த்தத்தில் தூக்கம் தெளிந்து எழுந்து தெய்வத்தைத் தியானிக்க வேண்டும். பின்பு, அன்றைய தினம் செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் மனத்தில் நன்றாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். கண்ணைத் திறந்தவுடனே, விளக்கு வெளிச்சத்தில் விழிப்பது நன்றன்று. சிறிது நேரம் உட்கார்ந்திருந்த பிறகேனும், நடமாடிய பிறகேனும் விளக்கை ஏற்றிக் கொள்ளலாம். இப்படிச் சொல்லியதனால், திருடர் பயம், விஷஜந்துக்களின் பயம், சரீர சங்கடம் முதலிய அவசரமான சந்தர்ப்பங்களில் உடனே விளக்கேற்றக் கூடாது என்பது அர்த்தமன்று.

பிறகு, முகம், வாய், கை, கால் ஆகிய இவைகளைத் தண்ணீரினாற் கழுவவேண்டும். அதற்கு மேல் புத்தியை உபயோகித்துச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தொடங்கலாம். மூளைக்கு அதிகமான கஷ்டமில்லாமல், சாதாரணமாகச் செய்யக் கூடிய காரியங்களைப் பிற்பகலிற் களைத்திருக்கும் பொழுது செய்து கொள்ளலாம்.

PHYSICAL EXERCISE

சரீர முயற்சி

ஒவ்வொருவரும் சரீர முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும். சரீர முயற்சி என்பது ஆங்கிலத்தில் Physical Exercise எனப்படும். ஸம்ஸ்கிருதத்தில் வியாயாமம் எனப்படும். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் சரீர முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சி அவரவர்களுடைய உடற் கூறுக்கும் வயதுக்கும் தக்கபடி இருக்கவேண்டும்.

எளிதாகவுள்ள முயற்சிகளை முதலிற் செய்யத் தொடங்கி, அவைகளிற் பழக்கமுற்ற பின்பு படிப்படியாகக் கடினமான முயற்-

கெளச் செய்து சாதிக்க வேண்டும். வீட்டுக்குள் செய்யும் முயற்சிகளே காலை நேரத்திற்கு ஏற்றவைகளாகும். அவற்றுள், இந்திய முறைப்படி செய்யும் முயற்சிகளே சிறந்தவை. ஸாண்டோ என்பவருடைய பலவர்த்தினி (Sandow's Strength Developer) யைக் கொண்டு முயற்சி செய்வதும் சிறந்ததேயாம். அது எந்த வயதுக் காரருக்கும், எப்படிப்பட்ட உடற்கூறு உள்ளவர்களுக்கும் ஏற்றது.

வெளி நிலத்து முயற்சிகள் அங்கிலத்தில் Out-door Exercises அல்லது Field Games எனவும், ஸ்கிருதத்தில் வனக்கிரீடை எனவும் சொல்லப்பெறும். வெளிநிலத்து முயற்சிகளுக்கு இக்காலத்தில் சாதகங்களாக ஏற்பட்டிருப்பவை :

1. Lawn Tennis சாட்டைப்பந்து
2. Cricket குடுப்புப்பந்து
3. Football காற்பந்து
4. Parallel Bars உபயசலாகை
5. Horizontal Bar ஹரிஜலம சலாகை
6. Trapez தொங்கு சலாகை
7. Vertical Bar லம்ப சலாகை
8. Ring வளையம்
9. Ladder ஏணி
10. Sliding Plank சறுக்குப் பலகை
11. Horse மரக்குதிரை
12. Stilt பொய்க்கால்
13. Long Jump நெடும் பாய்ச்சல்
14. High Jump வேலி தாண்டல்
15. Pole Jump கோற் பாய்ச்சல்
16. Wrestling குஸ்தி, மற்போர்
17. Boxing முஷ்டியுத்தம்
18. Fencing சிலம்பம்
19. Somersault கரணம்
20. Running ஓட்டம்

முதலியனவாம். இந்த முயற்சிகளெல்லாம் நல்ல வெளிச்சத்திற் செய்யத் தக்கவை. இவைகளைப் பிற்பகலிற் செய்வது நன்று. காலையிற் செய்வதாயின் அப்பொழுது உடம்பு குளிப்பதற்கு

அனுகூலமாகும். காலைக்குளி மிகவும் ஆரோக்கியமானதாதலின், அதனைத் தவிர்க்கக் கூடாது.

பலவகைச் சரீர முயற்சிகளுள் ஜபானியருடைய முறையே சிறந்ததென்பது இக்காலத்துக் கொள்கை. நாகரிக மிகுந்த நாடுகளில் வழங்கப் பெறும் சரீரமுயற்சி முறைகளுள் ஜபானிய முறையே முதன்மை வாய்ந்து விளங்குகின்றது. இனி எல்லாரும் அதனையே கைக்கொள்வார்க ளென்று தோன்றுகின்றது. ஜபானியர் நல்ல பலசாலிக ளென்றும், மிகுதியான சரீர கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் திறனுடையவர்க ளென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வளவு திறமைக்குக் காரணம் அவர்களுடைய சரீர முயற்சி முறையாம். அந்த முறை ஜூஜூத்ஸு (யுயுத்ஸு) எனப்படும். இந்த முறையிற் பயிலுவதனால், பலவீனனும் பலவானை எதிர்த்து வெல்லும் திறமை யுண்டாகின்றதாம்.

வானினுல் பரம் அளத்தல், கோடரியினுல் மரம் வெட்டுதல், மண் வெட்டியினுல் பறித்தல், ஏற்றம் இறைத்தல் முதலிய முரட்டு வேலைகள் செய்கிறவர்களுக்குச் சரீர முயற்சி அந்தந்த வேலைகளிலேயே அமைந்திருக்கின்றது.

மேற்சொல்லிய சரீர முயற்சி முறைகளுள் எதனையும் மேற்கொள்வதற்கு அனுகூலமில்லாதவர்கள் சுத்தமான காற்று வீசும் வெளி நிலத்தில், காலையிலும் மாலையிலும், விரைந்து நடக்கவேண்டும். நடையே இடனற்றவர்களுக்கு ஏற்ற முயற்சி.

உயிர் வாழ்வதற்கு மூச்சு விடுதல், உண்ணல், குடித்தல், உறங்கல் முதலியவை எவ்வளவு இன்றியமையாதனவாகுமோ, சரீர முயற்சியும் அவ்வளவு இன்றியமையாததாகும். நமது தேகத்தினின்று பலவிதமான மலங்கள் உண்டாகின்றன. அவை விஷக்குண முள்ளவை. அவைகளைத் தேகத்தினின்று அகற்றுவது அவசியமாகும். சரீர முயற்சி செய்யாவிடில், அவைகளை முற்றும் அப்புறப்படுத்த முடியாது.

சரீர முயற்சி செய்யாவிடின் — 1. வெள்ளீரலின் சக்தி (lung capacity) குறையும்; அதனுல், மூச்சு பலவீனப்படும். 2. தேகத்தில் இரத்த ஓட்டத்தின் வேகம் குறையும்: 3. வியர்வை குறைவுபடும்: 4. ஜீரணசக்தி பலவீனப்படும்: 5. தசை நரம்புகளும் இலை நரம்புகளும் (muscles and nerves) பலமுறுவதற்கு இடமில்லா-

மற் போம். 6. உயிர் நிலையங்கங்கள் (vital organs) ஒவ்வொன்றும் கிணத்துச் சீர்கெடும்; அப்படியே தேகமெல்லாம் கொழுப்பு மிகுந்து பாழ்படும். இவைகள் சீர் கெடுவதனால் ஆயுள் குன்றும்.

சரீர முயற்சி செய்யாததனால், உயிர் நிலையங்கங்கள் சீர்கெட்டுத் தன்பம் விளைக்கும் என்பதற்கு, வேலை ஒன்றுஞ் செய்யாமல் நெய்யும் பாலும் தின்று கொழுத்துக் கஷ்டப்படும் வீட்டுப் பூனையே திருஷ்டாந்தமாகும்.

தீர்க்கமாக மூச்சை உள்ளே இழுத்து வெள்ளீரலை நிரப்பிக்கொண்டு, அதனை மெதுவாக வெளியே விடுவதனால் வெள்ளீரலின் சக்தி பலப்படும். இந்த முயற்சி ஒரு நாளைக்கு எத்தனை தடவை செய்யக்கூடுமோ, அத்தனை தடவை செய்யவேண்டும் என்று டாக்டர் கெல்லாக் (Dr. Kellogg) என்பவர் சொல்லுகிறார். இது வெள்ளீரற் பயிற்சி (lung gymnastics) எனப்படும் என்று அவர் சொல்லுகிறார்.

சரீர முயற்சி என்பது ஸம்ஸ்கிருதத்தில் வியாயாமம் எனப்படுகின்றது என்று சொன்னேம். இப்பொழுது டாக்டர் கெல்லாக் சொல்லியது மூச்சுப் பயிற்சி ஆகும். மூச்சு என்பது பிராணம்; அதன் பயிற்சி பிராணயாமம் எனப்படும். பிராணயாமம் செய்யாமல் எந்தக் காரியமும் செய்யத் தொடங்கக்கூடாது என்னும் விதி ஆரோக்கிய சாஸ்திரத்தை அனுசரித்தே ஏற்பட்டதாகும். காள்தோறும் பிராணயாமம் செய்து வந்தால், கீல் வாயு, மலபந்தம் முதலிய நோய்கள் அணுகா; அந்த நோய்கள் இருந்தால், வை நிவர்த்தியாகும்.

காலையில் மலோபாதை தீர்த்துக்கொள்வதற்காகவேனும், டம்பு குளிப்பதற்காகவேனும், அல்லது அவ்விரண்டு காரியங்களையுங் கருதியேனும் வெளி நிலத்திற் சிறிது தூரம் விரைவாக டப்பது மிகவும் விரும்பத்தக்கது, நற்பயன் தரத்தக்கது. நடந்தம் தூரம் அவரவர்களுடைய சரீரக் கூறுக்கும், பழக்கத்திற்கும், வகாசத்திற்கும் ஏற்றவாறு ஒருமைல் முதல் ஐந்துமைல் வரைல் இருக்கலாம்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

LESSONS FROM SIMPLE NATURAL PHENOMENA

இயற்கைப் பொருட்பாடம்

THE SKY வானம்.

I. **ஆகாயம் இன்னதென்பது** — ஊடுருவிப் பார்க்கக் கூடியது நம்மைச் சுற்றிலுமுள்ள ஆகாயம் நம்முடைய தலைக்குமேலே மிகவும் உயரத்தில் போய் வானமாகிறது.

II. **ஆகாயத்தின் வடிவம்** — வானவில் மச்சு மண்டபம் போலிருக்கிறது. தலைக்கு உயரே இருக்கும் பாகம் வளைவில் உயரமானதாகத் தோன்றுகின்றது. வளைவு எல்லாப் பக்கங்களிலும் பூமியைத் தொடுகிறவரை கீழே வளைந்து போய் முடிகிறதாகத் தெரிகிறது. பூமியும் வானமும் தொடுகிறது போலத்தோன்றுகிற இடத்திற்கு, அதாவது வானக் கோட்டிற்கு, அடிவானம் என்று பெயர். நாம் உயரப் போகப் போக அடிவானம் பெரியதாகக் காணப்படும்.

III. **ஆகாயத்தின் நிறம்** — (1) பகலில் சாதாரணமாக நீல நிறமாகவும், மேகமிருந்தால் மங்கின வெண்மையாகவும் (grey colour), காலையில் சூரியன் உதிக்கிறதற்கு சற்று முன்பு சிவப்பாகவும், மாலையில் சூரியன் அஸ்தமித்த சற்று பின்பு சிவப்பாயுமிருக்கும். (2) இரவில் கறுப்பாயிருக்கும். பகலில் ஒரு நிறமும் இரவில் ஒரு நிறமுமாக இருப்பது சூரியன் மறைவதனாலும் தோன்றுவதனாலுமே.

IV. **ஆகாயத்தில் தோன்றுபவைகள்** — (1) பகலில் சூரியன், மேகம், நக்ஷத்திரங்கள், சந்திரன் முதலியன தோன்றுகின்றன. மேகம் சில தினங்களில் மாத்திரமே காணப்படும். மேகம் அதிகமாகக் காணப்பட்டால் சூரியன் மேகத்தில் மறைக்கப்பட்டுத் தெரியாது. சூரியனுடைய வெளிச்சம் அதிகமாக இருக்கிறபடியால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் தெரிகிறதில்லை. சுரங்கத்தினுள்ளிருந்தாவது கிணற்றினுள்ளிருந்தாவது நன்றாய்ப் பார்த்தால் தெரியும்.

V. **சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மேகம் முதலியன** — (1) சூரியன் பெரிய உருண்டை வடிவமானது. நன்றாய் வெயில்

அடிக்கும் போது வெள்ளையாயும் சாயங்காலம் நம்மை விட்டகலும் முன் சிவப்பாயுமிருக்கும். ஒரு பெரிய நெருப்பு உருண்டை போன்றது. வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் தருகின்றது.

(2) சந்திரன் — உருண்டை வடிவமுள்ளது உருவம் மாறிக்கொண்டே யிருக்கிறது வெண்மையானது. இரவில் வெளிச்சம் தருகின்றது. இது சூரியனிடமிருந்து வெளிச்சத்தைப் பெறுகிறது. சூரிய வெளிச்சத்தினும் குறைவான பிரகாசமுடையது. மாலை சூரியன் அஸ்தமித்த சற்று பின்பும் காலையில் சூரியன் புறப்படுவதற்கு சற்று முன்பும் தோன்றுகிற வெளிச்சம் சந்திர வெளிச்சம்.

(3) நக்ஷத்திரங்கள் — சிறு விளக்குகள் போன்றிருப்பிளிகளாயிருக்கின்றன. இரவில் சூரியனில்லாத காலத்தில் சந்திரனோடு கூட வெளிச்சம் தருகின்றன. இவைகள் உஷ்ணமான கோளங்கள் போன்றன. மினுமினுக்குகின்றன. இருப்பிடம் விட்டு நகருகிறதில்லை. நக்ஷத்திரக் கூட்டங்கள் பல இருக்கின்றன. எண்ண முடியாதபடி நக்ஷத்திரங்கள் மிகுதியாயிருக்கின்றன.

(4) மேகங்கள் — சாம்பல் நிறமானவை. வெள்ளையான இறகு போன்றவை. சில சமயங்களில் ஆகாயத்தில் சஞ்சரித்து வானத்தையும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களையும் மறைத்து மழை பெய்யச் செய்கின்றன.

VI. சுருக்கம் — (1) ஊடுருவிப் பார்க்கக் கூடிய ஆகாயமானது நமது தலைக்கு மேலே வெகு உயரம் போய் வானமாகின்றது. (2) வானம் பூமியைத் தொடுவதாகத் தோன்றுகிற இடத்துக்கு (கோட்டிற்கு) அடிவானம் என்று பெயர். (3) மேகங்கள் வானத்தில் மிதக்குகின்றன. மேலும் மழையை வருவிக்கும்படி செய்கின்றன. (4) சூரியன் நமக்கு உஷ்ணத்தைக் கொடுத்து பகலில் வெளிச்சத்தையும் தருகின்றது. (5) சந்திரனும் நக்ஷத்திரங்களும் இரவில் வெளிச்சம் தருகின்றன.

T. A. EGYAMIAR,
Headmaster, Board School and Secretary.
Central Class,
Ilayarasanendar.

OBJECT LESSONS IN GEOGRAPHY & EXPERIMENTAL SCIENCE

THE SKY

பொருட்பாடம் — ஆகாயம்

பொதுவாக ஆகாயம் நீல நிறமானது. காலையில் சூரியன் உதயமாகிற பொழுது ஆகாயம் சிவப்பு நிறமாயிருக்கிறது.

சில சமயத்தில் மத்தியானத்தில் மேகமாயிருக்கும் பொழுது, வெண்மை நிறமாயிருக்கும். சூரிய வெளிச்சம் இல்லாததால் இரவில் ஆகாயம் கறுப்பாயிருக்கிறது.

எந்த இடத்தில் பூமியும் வானமும் சந்திப்பதாக தோன்றுகிறதோ அந்த இடத்திற்கு அடிவான மென்று பெயர்.

ஆகாயத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், இவைகளின் கிரணங்கள் இருக்கின்றன.

சூரியன் உதயமாகிறதற்கு முன்னும் அஸ்தமித்ததற்கு பின்னும் தெரிகிற வெளிச்சத்திற்கு சந்திரவெளிச்ச மெனப்படும்.

சூரிய வெளிச்சத்திற்கும் சந்திர வெளிச்சத்திற்கு முள்ள வித்தியாசம் :—

1. சூரிய வெளிச்சம் மிக உஷ்ணமாயும் பிரகாசமாயு மிருக்கிறது. சந்திர வெளிச்சம் குளிர்ச்சியாயும் பிரகாசக் குறைவாயு மிருக்கிறது.

2. சூரியன் எப்பொழுதும் ஒரே விதமாய் பிரகாசிக்கிறது. சந்திர வெளிச்சம் குறையவும் அதிகரிக்கவும் கூடும்.

பாதிசந்திரன் அமாவாசையிலிருந்து ஒருவாரத்தில் தெரியும்.

ஆகாயத்தில் சில நக்ஷத்திரங்கள் அதிக பிரகாசமாயும் சில நக்ஷத்திரங்கள் பிரகாசக் குறைவாயு மிருக்கும். சில நக்ஷத்திரங்கள் கூட்டம் கூட்டமாயிருக்கும். சில தனித்தனியே யிருக்கும்.

சூரியனுடைய வெளிச்சம் பகலில் அதிகமாயிருப்பதால் நக்ஷத்திரங்கள் தோன்றுகிறதில்லை. பகலில் நட்சத்திரத்தை பார்க்க வேண்டுமானால் ஆழமான கிணறுகளிலாவது சுரங்கங்களிலாவது இருந்து பார்க்கலாம்.

சூரியன் பார்வைக்கு அக்கினி கோளம் போலிருக்கிறது.

சூரியனுடைய உபயோகம் — 1. உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறது. 2. பயிர் பச்சை முதலிய தாவரங்கள் செழித்து நன்றாய் வளரும். வெளிச்ச மில்லாவிட்டால் குன்றின வளர்ச்சியும் வெள்ளிய நிறமுமுடையதாகிறது. சூரியன் உதிக்கிற காலத்தில் அடிவானத்திற்கு கீழிருந்து புறப்படுகிறதாக தோன்றுகிறது.

சூரியன் எப்பொழுதும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் உதிக்கிறதில்லை.

ஜனவரிமீ முதல் ஜூன்மீ முடிய வடக்கே தள்ளி உதிக்கிறது. ஜூலைமீ முதல் டிசம்பர்மீ முடிய தெற்கே தள்ளி உதிக்கிறது. மார்ச்சுமீ 22உயும், செப்டம்பர் 22உயும் நேர் கிழக்கே உதித்து, மத்தியானத்தில் நம்முடைய தலைக்கு நேராய் வந்து, நேர் மேற்கே அஸ்தமிக்கிறது. மாரிகாலத்தைவிட கோடைகாலத்தில் அடிவானத்தின்மேலே கொஞ்சம் நின்று தான் மேலே கிளம்புகிறது மழை காலத்தில் சூரியன் சமீபத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. கோடை காலத்தில் தூரத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. சூரியன் சந்திரனைவிட அதிக தூரத்திலிருப்பதால் சூரியன் பெரிதாக இருந்த போதிலும் இவைகளின் உருவம் ஒன்று போல் காணப்படுகிறது.

சூரியன் நிழலும் சூரிய கடிகாரமும்

நிழல் உண்டாவதற்கு வெளிச்சம் அவசியமானது. வெளிச்சம் அதிகமாக அதிகமாக நிழல் நன்றாய் காணப்படுகிறது. நிழல் எப்பொழுதும் வெளிச்சத்திற்கு எதிர் புறத்தில் காணப்படுகிறது. காலையிலும் மாலையிலும் நிழல் நீளமாயிருக்கிறது. நடுப்பகல் (மத்தியானம்) நிழல் குட்டையாயிருக்கும். நடுப்பகலில் நிழல் முழுவதும் மறையாததினால் சூரியன் ஒரு பொழுதும் தலைக்கு நேராக வருகிறதேயில்லை. மழைகாலத்தில் சூரியன் சமீபத்தில் காணப்படுகிறது. ஆனால் வெயிற் காலத்தில் சூரியன் தூரத்தில் காணப்படுகிறது. ஆகையினால் மழைகாலத்து மத்தியான நிழல் குட்டை. ஏனென்றால் சூரியன் உயரசெல்லச் செல்ல நிழல் குறையும்.

நிழல் பகலின் நேரத்தை காட்டும் சூரிய கடிகாரம். சூரியனால் உண்டாக்கப் படுகிற நிழல் நேரத்தை காட்டுகிறது.

சூரிய உஷ்ணம்

பகலில் இரவைவிட உஷ்ணமதிகம். சூரிய உஷ்ணம் பிற்பகலில் அதிகம். மாரிகாலம் குளிர்ச்சியா யிருக்கும். மாரிகாலத்தைவிட கோடை காலத்தில் உஷ்ணம் அதிகம். ஏனென்றால் கோடை காலத்தில் சூரியன் அதிக உயரமும் அடிவானத்திற்கு மேல் அதிக நேரமும் காணப்படுகிறதால் தான்.

காலத்தின் வகைகள் — மாரிகாலம், வசந்தகாலம், கோடைகாலம், இலை உதிர்காலம்.

மாரிகாலம் — குளிர் அதிகம்; பனி பெய்கிறது; மரங்களில் இலைகள் காணப்படுகிற தில்லை.

வசந்தகாலம் — கொஞ்சம் உஷ்ணம். இலைகள் தளிர்க்க ஆரம்பிக்கின்றன. பக்ஷிகள் கூடுகட்டுகின்றன. நிலங்கள் விதைக்கப்படுகின்றன.

K. KRISHNA IYER,
Headmaster, Board School,
Thenthiruperai.

FIGHTS AT SCHOOL

பள்ளிக்கூடத்துச் சண்டை

பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளை ஒழுங்கு படுத்துவதற்காக அவர்களைப் பலவித சட்ட திட்டங்களுக்கு உட்படுத்துவது நல்லதன்று என்பதை கவுண்ட்டால்ஸ்ட்டாயின் அபிப்பிராயம். "நாம் ஒருவிதமான முறையையே ஒழுங்கென்று எண்ணி யிருப்பதால், அதற்கு மாறான எல்லாவற்றையும் ஒழுங்கின மென்று கொள்ளுகின்றோம். ஆனால் நாம் பிள்ளைகளிடம் எதை ஒழுங்கினமென்று எண்ணுகிறோமோ அதுவே சரியான ஒழுங்கு; அதுவே இயற்கையானது. அது முதல் முதலில் நமக்கு அருவருப்பையும் வேலைக்குத் தடையையும் உண்டாக்கினபோதிலும், தானாக சீக்கிரத்தில் நல்ல அமைதியை யடையும்" என்று சொல்லுகிறார். இதை நாம் 'இயற்கை யமைதி' என்று ஒருவாறு சொல்லலாம். பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் அடிக்கடி தமக்குள்

சண்டையிட்டுக் கொள்ளும்போது உபாத்தியாயர் அவர்களுக் கிடையில் புகுந்து சண்டையைக் விலக்குவதும் அவர்களுக்குள் ஒருவித சமாதானத்தை உண்டாக்க முயல்வதும் இயற்கை யமைதிக்கு விரோதமானவை யென்றும், அவை தீமையையே விளைவிக்கு மென்றுங் அவர் கருதுகிறார்.

"இரண்டு பிள்ளைகள் சண்டையிட ஆரம்பிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒருவன் மற்றவனைக் கண்ணால் சுட்டு விடுவது போல் பார்க்கிறான்; பல்லைக் கடித்துக் கொண்டு அவன் மேல் பாய்கிறான்; கீழே தள்ளிப் புரட்டிப் புரட்டிப் புடைக்கிறான்; அவனைக் கொன்றுவிடுவான்போல் காண்கிறது. விழுந்தவன் உடனே எழுந்து மற்றவனைத் தள்ளி உதைக்கிறான். இப்படி விரோதப் பட்டவர்கள் சிறிது நேரத்திற் கெல்லாம் ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்துகொண்டு சந்தோஷமாகச் சிரித்து விளையாடுகிறார்கள். விரோத மென்பது அவர்கள் மனத்தில் சிறிதுங் கிடையாது. கோபம் என்பது எங்கேயோ பறந்துவிட்டது. இதுதான் இயற்கை யமைதி என்பது. இதற்கு மாறாக உபாத்தியாயர் பிள்ளைகள் சண்டையில் நுழைந்து, அவர்களை விலக்கிச் சமாதானப்படுத்த முயல்வ தெல்லாம் கெடுதியாகவே முடியும்.

சில உபாத்தியாயர்கள் சண்டையிட்டுக் கொண்ட பிள்ளைகளை அழைத்து, "குற்றம் உங்கள் இருவரிடமும் இருக்கிறது. இனிச் சண்டை போடுவதில்லை என்று சொல்லி இரண்டு பேரும் தாடையில் போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்வது தவறு. இருவரில் ஒருவனிடந்தான் குற்றம் ஏற்படக்கூடியதா யிருக்கும். இருவருக்கும் ஒரே விதமாக தண்டனை விதிக்கும்போது குற்றம் செய்தவன் "நாம் கன்னத்தில் அறைந்து கொண்டாலும் பறவாயில்லை. அந்தப் பையன் நம்மிடத்திலும் உதை பட்டான், நம்மோடு கன்னத்திலும் போட்டுக் கொண்டான்" என்று பெருமிதம் அடைகிறான். குற்றம் செய்யாதவனை அடிபட்டது மன்றி, அநியாயமாகத் தண்டனைக்கும் உட்பட நேர்ந்ததே என்று எண்ணி எண்ணி வருந்துகிறான். அந்தப் பிள்ளைக்குத் தன் உபாத்தியாயரிடம் என்ன நம்பிக்கை இருக்கக் கூடும்?

வேறு சில உபாத்தியாயர்கள் சண்டையிட்டுக் கொண்டவர்களில் ஒருவனைப் பார்த்து "அடே, நீதான் துஷ்டன்

னிடந்தான் குற்றமிருக்கிறது" என்று சொல்லி அவனை தண்டிக்கக் கூடும். உபாத்தியாயருடைய தீர்மானம் வேறாகவும் இருக்கக் கூடும். அப்படியானால் மேலே சொன்னதைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகத் தீமை விளைகின்றது, அடிபட்ட பையன் தன் விரோதியினிடமும் தன் உபாத்தியாயரிடமும் ஆக இரண்டிடத்தும் ஜயம் பெற்றதற்காக அதிக கர்வங் கொண்டு முன்னிலும் அதிகமாகக் கெட்டுவிடுகிறான். இரண்டிடத்தும் அநியாயமாக அவமானம் அடைந்த மற்றவன் தன் விரோதியினிடம் அதிக விரோதமும் உபாத்தியாயரிடம் அவநம்பிக்கையும் அடைகிறான்.

உபாத்தியாயருடைய தீர்மானம் சரியென்றே வைத்துக் கொள்வோம். அவர் என்ன செய்வார்? முதலாவது, அவனை தண்டிக்கக் கூடும். தண்டனை அடைந்த பையன் தன் கோபத்தை உபாத்தியாயர்மேல் காட்ட முடியாது. அந்தக் கோபம் தன் விரோதியின் மேலேயே பாய்கிறது. "இன்று உபாத்தியாயர் என்னை அடித்துவிட்டார் என்று கர்வங் கொள்ளாதே. நாயந்திரம் நீ தனியே வீட்டுக்குப் போகும்போது உன்னைக் காலையில் புடைத்ததைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாகப் புடைத்துத் தள்ளுகிறேன் பார். அப்போது எந்த உபாத்தியாயர் வருகிறாரோ பார்ப்போம்" என்று மற்றவனை நோக்கித் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான். உபாத்தியாயர் குற்றம் செய்தவனை தண்டித்ததனால் வந்த நன்மை என்ன?

இரண்டாவது, "அப்பா, குழந்தாய், அவன் உன்னை அநியாயமாக அடித்து விட்டான். அவன் செய்தது தவறுதான். ஆனால் நீ அவன்மீது கோபம் பாராட்டாதே, அவனிடம் நீ நல்லவனா யிருக்க விரும்ப வேண்டும். அதுதான் கடவுளுக்கு இஷ்டமானது", என்று குற்றம் செய்யாதவனுக்குச் சில உபாத்தியாயர்கள் நற்புத்தி போதிக்கக் கூடும். இதனால் விளையும் நன்மை என்னவென்று பார்ப்போம். "அடிபட்டவனுக்குத் தெரியும் அடியும் அவமானமும். நான் ஏமாந்திருக்கும் சமயத்தில் அல்லவோ அந்தப் பையன் என் தலை மயிரை உறுதியாகப் பிடித்துக்கொண்டான். இல்லாவிட்டால் அவனைச் சும்மா விட்டிருப்பேனா, இருக்கட்டும். அதற்குள் உபாத்தியாயர் வந்து தடுத்து விட்டார். நாளைக்கு அந்தப் பையன் எங்கே

போகிறான். ஒரு கை பார்ப்போம்" என்று தனக்குள் வீரியம் பேசிக் கொள்ளுகிறானே யொழிய, நன்மை தீமைகளையும் கடவுள் இஷ்டத்தையும் உபாத்தியாயர் உபதேசத்தையும் அவன் கவனிப்பதில்லை. அவன் மற்றொரு பையனைக் காட்டிலும் நல்லவனாயிருக்க விரும்புவான் என்று எண்ணுவதைவிட பலசாலியாக இருக்க விரும்புவான் என்று எண்ணுவது பொருத்தமாயிருக்கும்.

மூன்றாவது, சில உபாத்தியாயர்கள், "அப்பா, பிள்ளைகளே உங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்வது சரியன்று. மனமொத்த நண்பர்களாக இருக்க வேண்டும். குற்றம் இரண்டு பேரிடமும் ஏற்படுகிறது. ஒருவரை யொருவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள், தழுவிக்கொள்ளுங்கள்" என்று சொல்லக் கூடும். இதுதான் மற்றெல்லாவற்றிலும் அதிக கேட்டை விளைவிக்கத் தகுந்தது. சண்டையிட்டுக்கொண்ட பிள்ளைகள் உபாத்தியாயர் பயத்தினால் அந்தச் சமயம் அவர் சொல்வது போல் செய்த போதிலும், அவர்களுக்குள் உண்மையாக நட்பும் சமாதானமும் ஏற்படுவதில்லை. விரோதமும் வெறுப்பும் நிர்ப்பந்தத்தால் அதிகப்படுமே யன்றி குறைவு படா. ஆகையால் அவர்களுக்குள் ஏற்பட்ட விரோதம் அதிகரிக்கின்றது."

ஆகையால் அவர்களுக்குள் இயற்கையாக ஏற்படும் சமாதானம் ஒன்றுதான் சரியானது என்று கௌன்ட் டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். இதற்கு உதாரணமாக அவர் ஒரு சண்டையை வர்ணித் திருக்கிறார்.

தம்முடைய பள்ளிக் கூடத்தில் இரண்டு பிள்ளைகள் ஏதோ ஒரு காரணத்தால் சண்டையிட ஆரம்பித்தார்கள். இருவரும் ஒரு மூலை சென்று நின்று சண்டையிட்டார்கள். அவர்களில் ஒருவன் இரண்டாம் வகுப்பில் படிக்கும் பிள்ளை. கணக்கில் நிபுணன். கூட்டலும் கழித்தலும் ஒரு நிமிஷத்தில் தப்பில்லாமல் போட்டு விடுவானும். மற்றொருவன் இவனைக் காட்டிலும் சிறியவன். அவன் பெயர் கிஸ்கா. அவனும் நல்ல புத்திசாலிதான். ஆனால் அதிக கோபக்காரன். பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும் என்று நினைப்பவன். இவன் தலையில் மயிர் இல்லை மற்றவன் தலை மயிர் நீண்டு வளர்ந்திருந்தது. ஆகையால் சிறியவன் நிபுணன் தலை மயிரை உறுதியாகப் பிடித்து அழுத்தி அடி

மேல் அடி அடித்தான். நிபுணர் மானத்தைக் கைவிடாமல் கூடியவரையில் தைரியமாக இருந்து பார்த்தார். "என்ன, என்னையா அடிக்கிறாய்? உன்னை என்ன செய்துவிடுகிறேன் பார்" என்று சிறிதுநேரம் அதட்டிப் பார்த்தார். எதிரியின் கையில் தலை மயிர் உறுதியாக அகப்பட்டுக் கொண்டது. அடிமேல் அடி விழுகிறது. ஐயோ பாவம் தாங்க முடியவில்லை.

இதற்குள் 'சண்டை, சண்டை', என்று கூச்சலிட்டுக்கொண்டே மற்றப் பிள்ளைகளெல்லாம் அங்கே வந்து கூடினார்கள். அவர்களில் கேவலம் சிறியவர்களாயிருந்த பிள்ளைகளுக்கு மாத்திரம் சண்டை வேடிக்கையாகத்தான் இருந்தது. பெரிய பிள்ளைகள் சண்டையை விலக்காமற் போனபோதிலும் வருத்தமடைந்திருந்தார்கள். அவர்கள் முகக்குறியைக் கண்டவுடன் கிஸ்கா என்பவன் வெட்கி மற்றவனுடைய தலைமயிரை விட்டுவிட்டான். உடனே கணக்கில் நிபுணர் கிஸ்காவின் தலையைப் பிடித்து எதிரேயிருந்த சுவரின் மேல் மோதி அறைந்துவிட்டு மிடுக்காகத் திரும்பினார். கிஸ்கா அழுது கொண்டே ஓடிவந்து நிபுணன் முதுகில் ஓங்கிக் குத்தினான். ஆனால் அந்தக் குத்து அவன்மேல் நன்றாகப் படவில்லை. நிபுணன் திரும்பி கிஸ்காவை அடிக்க ஆரம்பித்தான். அதற்குள் பிள்ளைகள் எல்லோரும் ஒரே கூச்சலாக "வேண்டாம், வேண்டாம், ஐயோ பாவம். இவ்வளவு பெரியவன் போய் அந்தச் சிறு பிள்ளையை அடிக்கிறானே. கிஸ்கா, ஓடிப் போய்விடு" என்று கூவினார்கள். அதைக் கேட்டவுடன், நிபுணர் வெட்கி மௌனமாகப் போய்விட்டார்.

"இந்தப் பிள்ளைகளின் விரோதம் அந்த நேரத்தோடு ஒழிந்தது அது மறுபடியும் ஒருவேளை அவர்கள் நினைவுக்கு வந்தபோதிலும் சண்டை செய்வது தகாத காரியம், அதனால் அடியும் அவமானமுந்தான் உண்டாகின்றன என்று எண்ணுவார்கள். இந்தச் சண்டையில் இருவரும் அங்கே கூடிய கூட்டத்தாரால் நியாய அநியாயங்களை உணர்ந்தார்கள். அதனால் இரண்டு பிள்ளைகளும் நன்மையடைய இடமுண்டாயிற்று. ஐயோ! உலகத்தில் யாருமறியாத சட்டங்கள் ஏற்பட்டு எத்தனை முறை சண்டையிட்டுக் கொள்ளும் இருநிறத்தாருக்கும் அநுரூபியை உண்டாக்குகின்றன.

கௌன்ட் டால்ஸ்ட்டாய் இந்தச் சண்டையை மகாகாவியங்களில், வர்ணிக்கப் பட்டிருக்கும் பெரும் வீரர்கள் செய்யும் சண்டைகளைப்போல் அதிக விஸ்தாரமாக வர்ணித் திருக்கிறார்.

ஸங்கீதப்பிரதம சிக்ஷாப்பிரகரணம்.

ஐம்புலன்களைக்கொண்டு விஷயங்களை யுணர்ந்து, விஷய உணர்ச்சி யால் ஆனந்தம் எய்தி, விஷயானந்தத்தைக் கொண்டு பேரானந்தத்தை அளாவி, அதனில் லயித்துப் பேரானந்தப் பொருளை அடைவது மானிட உடலமைப்பின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை எளிதில் சாதிப்பதற் குப் பெருஞ் சாதனமாக இருப்பது கானவித்தை இதற்குப் பிரமாணம்:

"ஜபகோடி குணம் தியானம் தியானகோடி குணைலய :
லயகோடி குணம் கானம் கானத் பரதரம் நஹி."

'கானம்' என்பது ஸாமவேதத்தினின்றே உற்பத்தியானது என்று ஸங்கீத தர்ப்பண டீகையிற் கூறப்பட்டிருக்கின்றது. கானம் 'வைதிகம்' எனவும் 'லௌகிகம்' எனவும் இருவகைப்படும். 'வைதிககானம்' முக்தி யைத் தரத்தக்கது; 'லௌகிக கானம்' லோகரஞ்சனம் செய்வது.

'கானம்' நாதாத்மகமானது, அதாவது நாதமே வடிவாகவுள்ளது. நாதமோ எனின், "எது தாலுகப் பிரகாசிக்கின்றதோ அது நாதம்" (யதா ஸ்வயம் ராஜதே). அதையே "ஸ்வரம்" எனப் பிரசித்தமாகச் சொல் வார்கள். அந்த "ஸ்வரம்" ஏழுவிதமானது. சப்தஸ்வரங்களை உபயோ கிக்கும் வகைகளை யுணர்த்துவது ஸங்கீத சாஸ்திரம். அவ்வளவு பெருமை வாய்ந்த சாஸ்திரத்தை இளைஞரும் எளிதில் உணரும்படி எழுது வது பெருங் காரியம். பெரிய பண்டிதர்கள் எனப் பெயர் வாய்ந்தவர்கள் அனேகர் பாலருக்குப் போதிக்கும் ஆற்றல் இல்லார் எனினும், அந்தத் திறமையை ஒருவாறு லகுவாகப் பேச வல்லார். பெரும் பண்டிதருக்குத் தம் மனப்பயிற்சி மாத்திரம் உண்டு; பாலபோதம் செய்யவல்ல பண்டித ருக்கு தம் மனப்பயிற்சியல்லாது, இளைஞர் மனக் கூறுகளை உய்த்துணரும் பயிற்சியும் உண்டு. ஆதலின், பாலபோதம் செய்யுந் திறமை வாய்ந்த பண்டிதரே சிறந்தவர்.

இதுவரையில், ஸங்கீத சாஸ்திரத்தை இளைஞருக்கு விளக்க முயன்ற வர்கள் அனேகர் உளர் எனினும், அவர்கள் செய்ததெல்லாம் முயற்சியே யாகும். இப்பொழுது எமது பார்வைக்குக் கிடைத்துள்ள "ஸங்கீதப் பிரதம சிக்ஷாப்பிரகரணம்" என்னும் அருமையான புத்தகத்தின் ஆசிரிய ராகிய வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயர் என்பவரே அந்த அருங் காரியத் தைச் சாதித்தவர் ஆவார். அவருடைய ஸங்கீதத்தையும் ஸாஹித்தியத் தையும் உள்ளபடி புகழ்வதற்கு எமக்கு ஆற்றல் இல்லை எனினும், அவரு க்கு அமைந்துள்ள போதன சக்தியை நாமும் மற்றெல்லாரும் கண்டு களித்துக் கொண்டாடக் கூடும். அவருடைய முறை எவர்க்கும் ஏற்கும். இப்புத்தகத்தை வாசித்து எவரும் பயன் பெறலாம். புத்தகத்தில் அடங் கிய விஷயங்களையும், அவைகளின் கிரமங்களையும், அவைகளை எவரும் எளிதில் கற்றுக்கொள்வதற்காக நமது ஐயர் அவர்கள் கற்பித்துள்ள சாத னங்களையும் விரித்துக் கூறுவதற்கு இங்கு இடங்காணாது ஆதலின், ஸங்கீ தம் பயில விரும்புவோர்க்கு ஏற்ற முதற் பாட புஸ்தகம் இதுவே என்று மாத்திரம் சொல்லி நிறுத்துவோம். இதன் விலை I ரூ. 4 அ. தபாற் கூலி வேறு. இது நல்ல காகிதத்தில் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றது; நல்ல கட்டடம் வாய்ந்திருக்கின்றது. இந்தப் புஸ்தகத்தின் உதவி பெற் றார்க்கு "ஸத்ய:பலம் ஸங்கீதம்" என்னும் முதுமொழியின் பயன் எளிதில் வாய்க்கும். சென்னையைச் சேர்ந்த திருவல்லிகேணியில் இருக்கும் ஸங் கீத வித்துவான் வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு எழுதிப் பெறலாம்.

1 MAR 1914
MADRAS.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1914ஹ பெப்ருவரிமீ | மாதம் 9.

THE TEACHING OF PROVERBS IN SCHOOLS

பாடசாலைகளிற் பழமொழிப் போதனை

பழமொழி என்பது நெடுங் காலமாக வழங்கிவரும் அநுபவ சித்தமான ஒரு வாக்கியம். இது பெரும்பாலும் உலக வழக்கில் வருகிறது. ஒருவன் தன் அநுபவத்திற் கண்டதோர் உண்மை உலகினர் பலருக்கும் உணர்ச்சியை உண்டாக்கும் உத்தம நீதியா- கிறது. ஒரு பழமொழியை உதாரணமாகச் சொன்னால், அதைப் பலரும் ஒப்புக்கொள்வர். அதனை மறுத்துக் கூறும் மனிதன் ஒருவனும் இரான். நூல் வழக்கில் இருக்கும் சில விஷயங்களை மறுத்துக் கூறுவதற்கு இடமிருப்பினும் இருக்கும்; பழமொழியை மறுத்துக் கூறுவதற்கு இடமிருத்தல் அரிது. பழமொழிக்கு இவ் வளவு சிறப்பு ஏற்பட்டதனாலன்றோ நமது தமிழ்ப் பாஷையில்

'பழமொழி' என்று ஒரு சிறந்த நூல் ஏற்பட்டு, கவிஞராற் கருந்தன மாகக் கருதப்படுகின்றது. இதுவுமன்றி, முற்காலத்து நூல்களிலும் பிற்காலத்து நூல்களிலும் ஆங்காங்கே பற்பல பழமொழிகள் பொன்னே போற்றி அமைக்கப்பட் டிருக்கின்றன. மற்றும் பிற்காலத்து ஆசிரியர் சிலர், 'பழமொழி விளக்கம்', 'கோவிந்த சதகம்' முதலிய நூல்கள் இயற்றுவ ராயினர். அறப்பளீச்சுர சதகம், குமரேச சதகம், கயிலாய நாதர் சதகம், திருவேங்கட நாராயண சதகம், இரத்தின சபாபதி மாலை முதலிய நூல்களும் இவ்வகுப்பிற் சார்ந்தனவே. இவையும் அன்றி, வித்வான் அருணாசலக் கவிராயர், வித்வான் முத்துராமக் கவிராயர் முதலியோர் தாம் செய்துள்ள இராமநாடகம், பாரதநாடகம் முதலிய நூல்களில் பல்லாயிரக் கணக்கான பழமொழிகளை பசுமரத் தாணிபோல் பதிய வைத்திருக்கின்றனர்.

பாட்டு.

அசாவேரி ஆதிதாளம்

பல்லவி

அடங்கி ஒரு வருஷம் மாத்ரம் இருக்கவேணும்
அப்பால் சொல்லுவோங் காணும் (அடங்கி)

அநுபல்லவி

தொடங்கும் பகைவர் வந்துங்
கலைக்காணத் தலைமேலே
சொட்டுப் போட்டாலும் நீங்கள்
பெட்டிப் பாம்புகள் போலே (அடங்கி)

சரணம் — 1

நஷ்டதசையால் பன்னிரண்டு வருஷம் நீங்கள்
காட்டில் திரிந்தீரே அதனாலே — ஒரு
நாசுக்கும் பலனில்லை இந்தநாளை மாத்ரம்
கழித்தால் பெறுவீர் செல்வம் ஒருகாலே
துஷ்டப்புலியும் கார்யத் தாலொடுங்கிப் பசுவின்
தோலைப் போர்த்துக்கொண்டு புவிமேலே — பரி
சுத்தமாகவேதன் செயலை மறந்து வெல்லும்
சூக்ஷ்மமென்ன நுந்திராக்ஷப் பூனையைப்போலே (அடங்)

சரணம் — 2

பட்டுக் கத்தரித்தாற்போல் வேலைசெய்தாலும் அண்ணம்
படைப்போ ரொருவேளை சுடாமல் — சுடும்
படிக்கொன்று சொல்லுவார் அதற்காநீங்கள் வீணர்ப்
பாடஞ் செய்யவா யெடாமல்
தட்டும் திருடரைத்தேள் கொட்டிடில் என்னசெய்வார்
தண்மை பூண்டு கைவிடாமல் — என்றும்
தலையால் உங்கள் குடியைத் தாங்கப்பிறந்தமா
தவன்தேடி வந்தாலும் அவன்கண்ணிலும் படாமல் (அ)

சரணம் — 3

பார்முழுமையும் கொள்ளத் துரியன்செய்ததை யெண்ணிப்
பார்க்கில் ஐயையோ என்கும்பி — மிகப்
பற்றி யெரியுதென்ன செய்குவேன் ஆனாலும்
பதறவேண்டாம் இந்தத் தம்பி
மார்களுக்குத் திரௌபதிக்கு முறுதிசொல்லி
வரவேண்டும் நீதானே வெம்பி — மனம்
வாடுவ தழகல்ல கூடிவருங் காலம்
வந்துவிட்ட திப்போ தென்றன் சொல்லுநம்பி (அடங்)

இந்த இசைப்பாட்டிலுள்ள பழமொழிகளையும் அவற்றின் அமைப்பையும் உற்றுநோக்கினால், பழமொழிகளின் பான்மை நன்கு விளங்கும்.

பாடசாலைகளில் இத்தகைய பழமொழிகளைப் போதிப்பதனால் பல நன்மைகள் உண்டாகும். அவற்றைப் பாகுபடுத்திப் பல வகையிலும் உபயோகிக்கலாம்.

(1) நீதி சம்பந்தமான பழமொழிகளைத் தொகுத்து, ஒவ்வொன்றாகச் சொல்லி, அதனை வற்புறுத்தும் கதையைச் சொல்லி விளக்கலாம். உதாரணமாக — 'சத்தியம் தலைகாக்கும்' என்னும் பழமொழியைச் சொல்லி, அதை அரிச்சந்திரன் கதையால் விளக்கிக் காட்டலாகும்.

(2) பழமொழிகளை வியாசம் எழுதுவதற்குச் சிறந்த கருவியாக்கலாம். உதாரணமாக, விவசாயத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதவேண்டுமானால், அதற்கான பழமொழிகளை யெல்லாம் திர-

ட்டி அவற்றைச் சந்தர்ப்பம் நோக்கி அமைத்து எழுதினால் அப்பியாசம் சிறப்பாக இருக்கும். விவசாயத்தின் சிறப்பைக் கூறும் போது:

1. சீரைத் தேடின் ஏரைத் தேடு
2. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
3. மேழிச் செல்வம் கோழைபடாது
4 ஓதுவோரெல்லாம் உழுவோன் தலைக்கடை

முதலிய பழமொழிகள் பயன்படும்.

பயிர்த் தொழிலின் அமைப்பைக் கூறும்போது,

1. பருவத்தே பயிர்செய்
2. ஆடிப்பட்டந் தேடிவிதை
3. அகல உழுவதை ஆழ உழு

முதலிய பழமொழிகள் பயனாகும்.

(3) பூர்வ காலத்திலிருந்த ஜனங்களின் ஆசாரங்களும் அநுபவங்களும் கொள்கைகளும் மற்றும் பலவித வழக்கங்களும் பழமொழிகளால் விளங்கும்.

(1) 'சுத்தம் சோறு போடும்' 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' 'கூழானாலும் குளித்துக் குடி' முதலிய பழமொழிகள் பண்டையோர் ஆசாரத்தைத் தெரிவிக்கின்றன.

(2) 'ஆனை அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும்' 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' முதலிய பழமொழிகள் நம் முன்னோர் கொண்ட அநுபவங்களைத் தெரிவிக்கின்றன.

(3) 'கோயிலில்லாத ஊரில் குடியிராதே' 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' 'பழங்காலைத் தூர்க்காதே' 'புதுக் காலை வெட்டாதே' முதலிய பழமொழிகள் நம் முன்னோர் கொண்ட கொள்கைகளை விளக்குகின்றன.

இவ்வாறு பழமொழிகளைப் பாகுபடுத்திப் பார்ப்பதனால் முற்காலத்திற்கும் இக் காலத்திற்கும் உள்ள வேற்றுமைகளும் விளங்குகின்றன. முற்காலத்தில் கொல்லர் ஊசி செய்து விற்று வந்தனர். இக்காலத்தில் அது வேறு நாட்டிலிருந்து வருகிறது; சொற்ப விலைக்கும் கிடைக்கிறது. அதனால் கொல்லர்கள் ஊசி

செய்யும் வழக்கத்தை விட்டுவிட்டனர். கொல்லரும் வேறொருவரிடத்திலிருந்தே ஊசி வாங்கவேண்டும். அப்படி இருந்தும் இந்தக் காலத்திலும் 'கொல்லத் தெருவில் ஊசி விற்க வந்தாயோ?' என்னும் பழமொழியும் வழங்காமற் போகவில்லை. முற்காலத்தில் அரசர்கள் தம் சேனைகளில் யானைப் படையைச் சிறந்த படையாகக் கொண்டிருந்தனர். இக்காலத்தில் யானை இருந்த இடமும் தெரியாமற் போயிற்று. போனாலும் என்ன? 'ஆனையுடைய படை காண்டல் மிக இனிதே' என்னும் வாக்கியம் அழிந்து போகுமா? நம் முன்னோர், குளவி ஒரு புழுவை எடுத்துக் கொண்டு போய், தன் கூட்டில் வைத்து, அதைச் சுற்றிச் சுற்றி இரைச்சலிட்டு, அப்புழுவைத் தன் இனமாக்கச் செய்கிறது என்னும் கருத்துக் கொண்டு, 'குளவி புழுவைத் தன் இனமாக்குவது போல' என்னும் பழமொழியை வழங்குவாராயினர். அக்கொள்கை தப்பானதென்று ஏற்பட்ட இக்காலத்தும் அப்பழமொழி வழங்காமற் போகவில்லை. இந்தப் பிரமாணம் சிறந்த நூல்களிலும் எறிவிட்டது. இவ்வாறெல்லாம் ஊகித்தறிந்தால் அக்காலத்து மாந்தர் கொண்டிருந்த ஆராய்ச்சியும் நன்கு விளங்கும்.

பழமொழிகளைப் போதிக்கையில் உபாத்தியாயர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பொதுமையாகச் சொன்னலொழிய அதன் பூர்ண அர்த்தம் நன்றாய் விளங்காது. ஒவ்வொரு பழமொழிக்கும் மேலாக ஓர் அர்த்தமும் உள்ளுறையாகப் பல அர்த்தங்களும் உண்டு. அப்படி யில்லாவிட்டால், ஒரு பழமொழி பல வகையில் பயன்பட இடமிராது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்னும் பழமொழியைக் கவனிப்போம். இது நெற்களத்தில் உண்டான ஒரு பழமொழி. குடியானவன் அரியை அடித்து, நெல்லைக் குவித்து, நெல் வேறாகவும் பதர் வேறாகவும் பிரியும்படி முறத்தில் வாரித் தூற்றுவான். அப்போது அவனுக்குக் காற்றின் உதவி வேண்டும். அந்தக் காலத்தில் உண்டான பழமொழி இது. இதனை அநேக சந்தர்ப்பங்களில் நாம் உபயோகப் படுத்துகின்றோம். அத்தகைய சந்தர்ப்பங்கள் நன்கு விளங்கும்படி பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். பிள்ளைகள் அந்தப் பழமொழிகளைச் சரியான சந்தர்ப்பங்களில் உபயோகிக்குமாறு முயலச் செய்ய வேண்டும்.

சில பழமொழிகளை ஒட்டி கதைகள் இருப்பதும் உண்டு. அக்கதைகளை உணராமல் பழமொழியை மட்டும் தெரிந்து கொள்வதனல் அவ்வளவு பயன் ஏற்படாது. 'தலைக்கு வந்தது முடியோடு போகும்' என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதை, சங்கடம் வருவது சித்தமாக ஏற்பட்டிருந்தாலும் நாம் முயற்சி செய்தால், அது ஒருவாறு குறைந்து போகும் என்று கூறும் சந்தர்ப்பத்தில் சொல்லுகிறோம். இதை ஒட்டி ஒரு சிறு கதை யுண்டு.

பாரத யுத்தம் நடந்த காலத்தில் கர்னன் அர்ச்சுனன் மேல் ஒரு முறைக்கு மேல் நாகாஸ்திரம் விடுவதில்லை என்று வாக்களித் திருந்தான். சண்டையில் கர்னன் அநேகவித அஸ்திரங்களை அர்ச்சுனன் மேல் விட்டும், ஒன்றும் முடியவில்லை. முடிவில் நாகாஸ்திரத்தை விட்டு அர்ச்சுனனைத் தொலைத்து விடுவது என்று தீர்மானித்தான்.

அர்ச்சுனனுக்கு கிருஷ்ணமூர்த்தி சாரதியாக இருந்தனர். கர்னன் அர்ச்சுனன்மேல் நாகாஸ்திரம்விடத் தீர்மானித்து இருப் பதையும், அது அர்ச்சுனனை தவறுமல் கொன்றுவிடும் என்பதை யும் கிருஷ்ணமூர்த்தி யுணர்ந்து ஒரு தந்திரஞ் செய்தார். கர்னன் அர்ச்சுனன் தலைக்குச் சரியாகக் குறிபார்த்தான். அவன் தன் அஸ்திரத்தை விடுத்தனையும் காத்திருந்து, விட்டதும், கிருஷ்ணர் இரதம் ஓரடி பூமியில் இறங்குமாறு அழுத்தினர். அதனல் நாகா ஸ்திரம் குறிதப்பி அர்ச்சுனனுடைய முடியைத் தட்டிக்கொண்டு போய்விட்டது. நாகாஸ்திரம் தவறுமல் அர்ச்சுனனைக் கொல்வ தாக இருந்தும் கிருஷ்ணர் செய்த முயற்சியால் அர்ச்சுனன் தலை தப்பிற்று. அன்றுமுதல் 'தலைக்கு வந்தது முடியோடு போகும்' என்னும் பழமொழி வழங்குவதாயிற்று.

இவ்வாறெல்லாம் பழமொழிகளைப் பாகுபாடு செய்து பாட சாலைகளில் போதிப்பதனல் அதிக பயன் உண்டாகும்.

பத்திராதிபர்.

A CONVERSATION ON CAT

பூனையைப் பற்றிய ஓர் சம்பாஷணைப் பாடம்

கிருஷ்ணன் — மாமா, அறைவீட்டில் ஏதோ மியா, மியா என்று சத்தம் கேட்கிறதே அது என்ன?

மாமன் — பூனைக்குட்டி அவ்வாறு கத்துகிறது.

கிருஷ்ணன் — மாமா, நான் பூனைக்குட்டியைப் பார்த்ததே யில்லையே.

மாமன் — குழந்தாய் நீ இவ்விடமே இரு. நான் வீட்டிற் குள்ளே சென்று அதைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்.

கிருஷ்ணன் — நான் இங்கேதா னிருக்கிறேன். பிடித்துக் கொண்டு வாருங்கள்?

மாமன் — பூனைக்குட்டியைப் பிடித்து வந்துவிட்டேன். இதோ பார். இதை விட்டுவிடாமல் ஜாக்கிரதையாய் வைத்துக் கொண்டிரு.

கிருஷ்ணன் — மாமா, இதைப் பார்க்க, எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. என்னிடம் வேண்டாம் நீரே வைத்துக் கொள்ளும்.

மாமன் — குழந்தாய் பயப்படவேண்டாம், அது உன்னை ஒன்றும் செய்யாது.

கிருஷ்ணன் — இது சாம்பல் நிறமாக இருப்பதோடு, தேக முழுவதும் கருமை நிறமான வரிகளையுடையதாகவும் இருக்கின் றதே! அந்த வரிகளே என்னை பயமுறுத்துகின்றன.

மாமன் — அப்பா! இது நல்ல பூனை, உன்னை ஒன்றும் செய்யாது.

கிருஷ்ணன் — சரி, அப்படியானல் அதை நானே வைத்துக் கொண்டிருக்கிறேன். (கையில் எடுத்துக்கொண்டு) மாமா, இந்தக் குட்டி என் கைக்கு இவ்வளவு மிருதுவாகவும், வழவழப்பாகவு மிருக்கிறதே, அது ஏன்?

மாமன் — பூனைக்குட்டியின் தேகமுழுவதும் இருப்பது என்ன?

கிருஷ்ணன் — இதன் தேகமுழுவதும் மயிர் மூடிக்கொண்டு இருக்கின்றது.

மாமன் — அந்த மயிர்களே உனது கைக்கு மிருதுவையும், வழவழப்பையும் தருகின்றன.

கிருஷ்ணன் — நீங்கள் பிடிக்கப் போகையில் இந்தக் குட்டி என்ன செய்துகொண்டிருந்தது.

மாமன் — கண்மணி! இது வெள்ளிக் கிண்ணம் ஒன்றில் உன் தம்பிக்கு வைத்திருந்த பாலைக் குடித்துக்கொண்டிருந்தது.

கிருஷ்ணன் — இந்தக் குட்டி பாலை மட்டுமா குடிக்கும்?

மாமன் — குழந்தாய்! இது பால், சோறு, வெண்ணெய், ரொட்டி, எலி, சிறு பறவைகள் முதலியவைகளைத் தின்னும்.

கிருஷ்ணன் — மாமா, எலிகள் பூனைகளுக்கு அகப்படாமல் ஓடிப்போய் விடுமே. எப்படிப் பூனை எலிகளைப் பிடிக்கும்?

மாமன் — இராக்காலங்களில் நாம் யாவரும் படுத்து உறங்கிய பின், வீடுகளில் வைத்துள்ள பண்டங்களைத் திருடித் தின்ன எலிகள் வருவதைப் பார்த்திருந்து, பூனை அவைகளைப் பிடித்துத் தின்னும்.

கிருஷ்ணன் — இருட்டில் பூனைக்குக் கண்கள் எப்படித் தெரியும்?

மாமன் — தம்பீ! நீ அப்படியா நினைக்கிறாய். இதன் இரண்டு கண்களையும் உற்றுப் பார், எவ்வாறிருக்கின்றன?

கிருஷ்ணன் — மாமா, இதன் கண்களிலுள்ள கருமணிகள் நம்முடைய கண்களைப்போல் அகன்று வட்டமாயிராமல் நீண்டு சுருங்கி யிருக்கின்றன.

மாமன் — ஏன் தெரியுமா?

கிருஷ்ணன் — எனக்குத் தெரியாது.

மாமன் — பூனைக்குச் சூரிய வெளிச்சத்தைக் கண்டால் அதன் கண்கள் கூசுவதுடன், பார்வை குறைந்து, கண்களின் கருவிழிகள் நீண்டு சுருங்கிவிடும்.

கிருஷ்ணன் — எப்பொழுது அவைகள் வட்டமாகத் தெரியும்?

மாமன் — இராக்காலங்களில் பூனையின் கண்கள் பிரகாசமாகத் தெரியும். அதனால்தான் பூனைகள் இராக்காலங்களில் எலிகளைப் பிடிக்கின்றன.

கிருஷ்ணன் — மாமா, எலிகள் பூனையின் கண்களுக்குத் தெரியாமலிருந்தால், அப்பொழுது அவைகளிருக்கு மிடத்தைப் பூனைகள் எப்படி அறிந்து கொள்ளும்?

மாமன் — கண்மணீ, நம்முடைய வீடுகளில் ஏதாவது ஓரிடத்தில் உனக்குத் தெரியாதபடி மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய புஷ்ப வகைகளை வைத்திருந்தால் உனக்குத் தெரியாமற் போகுமா?

கிருஷ்ணன் — எப்படித் தெரியாமற் போகும், நான் என்னுடைய மூக்கினால் வாசனையைக் கண்டறிந்து அவைகள் வைத்திருக்குமிடத்திற்குப் போய் எடுத்துக்கொள்வேன்.

மாமன் — கிருஷ்ணா! பூனைகளும் உன்னைப் போலவே தம்முடைய மூக்கினால் மோப்பம் பிடித்து எலிகளிருக்கு மிடம் தேடிச்செல்லும்.

கிருஷ்ணன் — அவைகள் அவ்வாறு செல்லுகையில் காலடி ஓசையினால் எலி ஓடிவிடாதோ?

மாமன் — இந்தப் பூனைக் குட்டியின் பாதங்களை நீ உன்னுடைய கை விரல்களால் தொட்டுப் பார், எவ்வாறிருக்கின்றன?

கிருஷ்ணன் — மாமா, இதன் பாதங்கள் மெத்தைபோல் இருக்கின்றன!

மாமன் — ஏன் அப்படி இருக்கின்றன?

கிருஷ்ணன் — தெரியாது.

மாமன் — குழந்தாய், பூனைகள் எலிகளைப் பிடிக்கப் போகையில், நடந்து வருகிற சத்தம் எலிகளின் காதுகளுக்குக் கேட்காதபடி பூனைகளின் பாதங்கள் மிருதுவாகவே இருக்க வேண்டிய தவசியம்.

கிருஷ்ணன் — மாமா, நீர் சொல்லும் விஷயங்கள் எல்லாம் இது வரையில் எனக்குத் தெரியாமலிருந்தது. இன்னும் சொல்லும் தெரிந்து கொள்ளுகிறேன்.

மாமன் — அப்படியே செய், அதுதான் நல்ல குணம்.

கிருஷ்ணன் — (சற்று நிதானித்து) திடீரென்று, மாமா! மாமா! எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. இதோ பாரும் இந்தக் குட்டி தன்னுடைய உடலையும் வாலையும் பருக்கச் செய்து கொண்டு இருப்பதோடு, தேகத்திலுள்ள மயிர்களை நீட்டிக்கொண்டும், தனது நான்கு கால்களின் விரல்களிலுள்ள நகங்களை வெளியில் காட்டிக்கொண்டும், தன்னிரு கண்களால் குரூரமான பார்வையுடன் அந்த மூலையை விடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறதே! ஏன் அப்படி விடாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது?

மாமன் — கண்மணீ, நீ வெகு கெட்டிக்காரன். ஒவ்வொரு விஷயத்தையும் விடாமல் உற்றுப் பார்த்துச் சொல்லும் திறமையுடையவன் நீ. நான் அதைப்பற்றிச் சந்தோஷப் படுகிறேன். அதோ பார், அங்கே என்ன குவிந்திருக்கின்றது.

கிருஷ்ணன் — ஆமாம் நெல் குவிந்திருக்கிறது?

மாமன் — சரி, அதன் சமீபத்தில் இருப்பது என்ன?

கிருஷ்ணன் — சிட்டுக்குருவி நெல்லைக் கொறித்துக் கொண்டிருக்கின்றது.

மாமன் — அதைத்தான் பூனை பார்த்துக்கொண்டிருக்கிறது.

கிருஷ்ணன் — எனக்குத் தெரியவில்லையே, இதற்குமட்டும் எப்படித் தெரிந்திருக்கலாம். மேலும், அது மறைவாகவன்றோ இருக்கிறது?

மாமன் — வீட்டிற்குள் ஏதாவது சந்தடி உண்டானால் நீ அதை எப்படி அறிவாய்?

கிருஷ்ணன் — சத்தம் காதில் விழுந்தவுடன் தெரிந்து கொள்வேன்.

மாமன் — அதுவும் அப்படித்தான் அறிந்தது.

கிருஷ்ணன் — எனக்கு மட்டும் ஏன் தெரியவில்லை?

மாமன் — இதன் காதுகள் எங்கே யிருக்கின்றன.

கிருஷ்ணன் — நம்முடைய காதுகளைப்போல் தலையின் இருபக்கங்களிலுமிராமல், தலையின்மேல் அமைந்திருப்பதோடு, மிருதுவாயும், சிறுத்து வட்டமாயு மிருக்கின்றன!

மாமன் — ஏன் அப்படி யிருக்கின்றன?

கிருஷ்ணன் — தெரியாது, தயவுசெய்து சொல்லவேண்டும்.

மாமன் — அப்பா குழந்தாய் அவ்வாறிருப்பதனால்தான் நாலாபக்கங்களிலுமிருந்து வரும் சத்தங்களைச் சீக்கிரம் அறிவதுடன், எந்தப் பக்கத்திலிருந்து வருகிற தென்பதை காதுகளைச் சுழற்றி அறிந்துகொள்ளும்.

கிருஷ்ணன் — மாமா! சரிதான், சரிதான். இதனுடைய நகங்கள் எவ்வாறிருக்கின்றனபார். கூர்மையாகவும், கொக்கிபோல் வளைந்தும் இருக்கின்றன அல்லவா? ஏன் அவ்வாறிருக்கின்றன?

மாமன் — கிருஷ்ணா! எலி, சிறு பறவைகள் இவைகளைப் பிடித்துத் தின்னும் என்று முன்னமே சொன்னேனல்லவா? அவ்வாறு பிடித்துத் தின்னும்போது இந்த நகங்களும் அதன் பற்களைப்போல பிராணிகளின் தேகத்தில் குத்திக் கிழிக்க உதவுகின்றன. மேலும், அந்த நகங்களை வேண்டியபோது வெளியில் நீட்டவும், உள்ளே இழுத்துக்கொள்ளவும் கூடும்.

கிருஷ்ணன் — சரிதான் மாமா! என்னிடம் கொஞ்சம் ரொட்டியும், வெண்ணெயும் இருக்கின்றன. அவற்றை நான் இந்தப் பூனைக் குட்டிக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

மாமன் — அவைகள் உனக்கேது?

கிருஷ்ணன் — சற்று நேரத்திற்கு முன்பு எனது கூட்டாளி கோபாலன் எனக்குக் கொடுத்தான்.

மாமன் — சரி, சரி உன் இஷ்டப்படியே கொடு.

கிருஷ்ணன் — (வெண்ணெயை ரொட்டிக்குத் தடவி பூனைக் குட்டிக்குக் கொடுத்து அது தின்றுகொண்டிருக்கையில்) மாமா, இது தன்னுடைய தலையை அடிக்கடி உதறிக்கொண்டும், ரொட்டியைப் பற்களால் கடித்துக் கடித்து இடை இடையே விட்டு விட்டும் தின்னுகிறதே! நம்மைப்போல தலையை ஆட்டாமல் கொஞ்சங் கொஞ்சமாய்க் கடித்துத் தின்னலாகாதா?

மாமன் — அதனுடைய பற்கள் எவ்வாறிருக்கின்றன என்பதைக் கவனித்துச் சொல்?

கிருஷ்ணன் — (பூனைக்குட்டி ரொட்டியைத் தின்னும்போது பார்த்துக்கொண்டிருந்து) மாமா, இதன் பற்கள் சிறுத்துக் கூர்மையாக இருப்பதோடு கடைவாய்களுக்கு முன்னால் கீழ் மேல்

உள்ள (4) நான்கு பற்களும் சற்று நீண்டும் வளைந்தும் இருக்கின்றன.

மாமன் — என் தெரியுமா ?

கிருஷ்ணன் — எனக்குத் தெரியாது.

மாமன் — இது விசேஷமாய் எலி, சிறு பக்ஷிகள் முதலியவற்றைப் பிடித்துத் தின்னுமென்று முன்னரே நான் சொல்லக் கேட்டிருக்கிறாய். அப்படித் தின்னும்போது அவற்றின் மாமிசங்களைக் கிழிக்கவும், சிறு சிறு துண்டுகளாக வெட்டவும் அவ்வாறு அமைந்திருக்கின்றன.

கிருஷ்ணன் — சரி தெரிந்துகொண்டேன். என்னுடைய கையில் வெண்ணெய் ஒட்டிக்கொண்டிருக்கின்றதே என்ன செய்வேன்.

மாமன் — உன்னுடைய கையை இதன் சமீபத்தில் நீட்டு, இது அதைத் தன்னுடைய நாவினால் சற்றும் விடாமல் நக்கி விடும்.

கிருஷ்ணன் — அதுதான் சரி. (என்று தனது கையை பூனைக்கு எதிரில் நீட்டி, அது கையை நக்கிக்கொண்டிருக்கையில்) மாமா என்னுடைய கை எரிச்சல் எடுக்கிறதே ஏன் ?

மாமன் — பூனையின் நாக்கு நம்முடைய நாக்கைப்போல் மிருதுவாய் இராமல் அரம்போல சொர சொரப்பாய் இருப்பதனால் எரிச்சல் உண்டாகும்.

கிருஷ்ணன் — ஏன் அவற்றின் நாக்கு சொர சொரப்பாக இருக்கவேண்டும் ?

மாமன் — கண்மணீ, எலும்புகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஊனைக் கொஞ்சங்கூட விடாமல் நக்கித் தின்ன சொர சொரப்பாகவே இருக்கவேண்டும்.

கிருஷ்ணன் — மாமா பூனைக்கு மட்டுமா நாக்கு இவ்வாறு இருக்கும் ?

மாமன் — பூனையினத்தைச் சார்ந்த ஜந்துக்களுக்கு இப்படி இருக்கும்.

கிருஷ்ணன் — அப்படியானால் பூனையின் இனத்தைச் சேர்ந்த பிராணிகள் எவை ?

மாமன் — சிங்கம், புலி, சிறுத்தை, சிவிங்கி முதலிய காட்டு மிருகங்கள்தாம்.

கிருஷ்ணன் — மாமா, இன்று உம்முடைய தயவினால் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். இன்னும் சொல்லும் கேட்கிறேன்.

மாமன் — அப்பா, கண்மணீ கிருஷ்ணா நேரமாயிற்று. நாளை சொல்லுகிறேன். சற்றுநேரம் வெளியில் உலாவி வருவோம் வா.

D. A. SREENIVASA AIYER,
Assistant, Boord Elementary School,
Ramayampatti,
Salem Dt.

ANSWERING CALLS OF NATURE

சரீரவாதை தீர்த்துக்கொள்ளல்

1. சரீரத்திற்கு உரிய வாதைகள் அநேகம் இருக்கின்றன. அவற்றுள், மலமும் ஜலமும் முக்கியமானவைகளாகும். இந்த வாதைகள் தோன்றியபோது மலத்தையும் ஜலத்தையும் கழிப்பதே வாதை தீர்த்துக்கொள்ளும் வழியாகும்.

2. காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடனே சரீரவாதை தீர்த்துக்கொள்ள வேண்டும். உடனே தீர்த்துக்கொள்ளா விட்டால், சிறிதுநேரம் பொறுத்தேனும் தீர்த்துக்கொள்ளவேண்டும். இது அவரவர்களுடைய உடற்கூறுக்குத் தக்கபடியாகும்.

3. வாதை தோன்றியவுடனே, கால்விநாடிகூடத் தாமதியாமல், வாதையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் அவசரமான காரியம் என்று நினைத்து, சிறிதும் காலவிடம்பம் செய்யாமல், இதைக் கவனிக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரமாக வாதையைத் தீர்த்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவு நல்லது.

4. தேகோபாதை தீர்த்துக்கொள்வதற்குச் சிறிது தாமதம் செய்தால், அதற்குத் தக்கபடி சிறிது தீமை விளையும்; அதிகத் தாமதம் செய்தால், அதிகத் தீமை விளையும். தாமதம் அதிகரிப்பதற்குத்தக்கபடி, தீமையின் கொடுமை அதிகரிக்கும்.

5. பறவைகளும் மிருகங்களும் ஜீலோபாதையேனும் மலோபாதையேனும் தோன்றிய வுடனே, அவைகளைத் தீர்த்துக்கொள்கின்றன. ஆனதினாலே அவை அடிக்கடி நோய்ப்படாதிருக்கின்றன; அவைகளின் கண்கள் தெளிவாக இருக்கின்றன; நெடுந்தூரத்தில் இருக்கும் நுண்ணிய பொருள்களையும் பார்க்கக்கூடிய கூர்மை வாய்ந்து இருக்கின்றன.

6. அவைகளைப்போல, நியமித்த இடத்தில் மனிதன் மலோபாதை தீர்த்துக்கொள்ள முடியாது. இவனுக்கு ஒழுக்கமுறை ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. மானம், அவமானம், மரியாதை, அவமரியாதை, சுசி, அசுசி, நாணம் முதலிய லோகாசாரக் கட்டுத்திட்டங்களும் வைதிகக் கட்டுத்திட்டங்களும் அநேகம் இருக்கின்றன. இவைகளை அநுசரித்து நடக்கவேண்டியிருப்பதனால், நாகரிகமுள்ளவன் எவ்விடத்திலேனும், எப்பொழுதேனும் தன் இஷ்டப்படி மலோபாதை தீர்த்துக்கொள்ள முடியாது.

7. ஒழுக்க முறைக்குக் கட்டுப்பட்டு மனிதன் நடக்க வேண்டியது அவசியமே யாகும். மலோபாதை தீர்த்துக்கொள்வதற்கு அதனால், ஏற்படுகிற காலதாமதத்தை விலக்க முடியாது. அதுவல்லாமல், வேறு காரணங்களினாலும் தாமதப்படுத்துவது கூடாது. தாமதம் அதிகமானால், நீமை அதிகமாகும்.

8. தாமதப் படுத்துவதற்குரிய வேறு காரணங்களாவன: அஜாக்கிரதை, சோம்பல், மடமை, அநுகூலம் இன்மை, சூதாட்டம் முதலியவைகளில் அமர்ந்திருந்து அவைகளை விட்டு எழுந்து போக மனம் இன்மை முதலியனவாம். இப்படிப்பட்ட காரணங்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது.

9. ஏனெனில், வெளிப்படுவதற்காக மலம் ஆனைத் துவாரத்தில் வந்து முட்டிப் பார்க்கின்றது. வெளிப்படுவதற்கு இடங் கொடாமையால், வேறு வகையில்லாமல், அது பின்னுக்குத் திரும்பிப் போகின்றது. அது வந்ததும் குடலின் வழியாகவே, திரும்பிப் போவதும் குடலின் வழியாகவே.

10. குடல்களின் ஒரு பாகத்தில் நுண்ணிய குழல்கள் இருக்கின்றன. அந்தக் குழல்கள் உறிஞ்சுந் தன்மை உள்ளன. கெட்டியான மலம் திரும்பிப் போகையில் குடலில் நெருக்கப் பட்டுப் போகின்றது. மேலே இருந்து கீழ் நோக்கியபோது

மலம் எளிதில் வந்துவிட்டது. கீழே வந்து சேர்ந்த மொத்தம் அவ்வளவும் திரும்பிப் போவதற்குக் குடல் எளிதில் இடங்கொடுப்பதில்லை. ஆதலால், குடலுக்குள் மலம் நெருங்கி ஒடுங்கிக் கஷ்டப்பட்டுப் பிதுங்கி மேலே ஏறவேண்டியதாகின்றது.

11. அப்படி நெருங்கிப் பிதுங்கும் பொழுது, மலம் அமுக்கிப் பிழியப்பட்டதுபோல் ஆகின்றது. அதில் உள்ள ஜல அம்சம் பிழியப்படுகின்றது. அந்த ஜல அம்சத்தைக் குடலின் நுண்ணிய குழல்கள் உறிஞ்சி, இரத்தத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. இதயம் என்னும் இரத்தாசயத்தினின்று இரத்தமானது சுவாஸாசயத்திற்குப் போகின்றது. சுவாஸாசயத்தினின்று மூச்சுக் குழலின் வழியாக துர்நாற்றம் வெளியே வீசுகின்றது. அந்தத் துர்நாற்றம் பொறுக்கமுடியாது. தேகத்தினின்று மலத்தைக் கழிப்பதற்கு ஏற்ற வழி இதுவாகுமோ? இப்படிக் கழிப்பதற்கு எவரேனும் விரும்புவாரோ?

12. பிறகு, கெட்டி மலத்தை ஆசனத்தின் வழியாக அப்புறப் படுத்துவது கஷ்டமாகின்றது. ஏனெனில், அதில் இருந்த ஈரம் பிழிந்து எடுக்கப்பட்டுப் போனதனால், அது கல்லைப்போலக் கெட்டியாகி விடுகின்றது. மூச்சை யடக்கிப் பலவந்தமாக அதை வெளியே தள்ளுவதற்குப் பிரயத்தனப்பட்டால், ஆசனத் துவாரம் கிழிகின்றது (fissure of the anus). அப்படியே வழக்கமாகப் பலவந்தம் செய்தால் குடற்சரிவு (hernia), அடிதள்ளுவது, இரத்த மூலம் (piles, hemorrhoids) முதலிய வியாதிகள் உண்டாகும்.

13. அவ்வளவு கெட்டுப்போன மலம் குடலின் அடிப்பாகத்தில் தங்கியிருக்கிறது என்பதை, வெளியில் விடும் மூச்சினின்று வீசும் துர்க்கந்தத்தினால் தெரிந்து கொள்ளலாம். இயற்கை விதிகளைக் கடந்து நடப்பவனுக்கு அப்படிப்பட்ட தெளர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படுகின்றது.

14. அப்படிக் கெட்டிப்பட்ட மலத்தை மெதுவாக்கி வெளிப்படுத்துவதற்குப் பிரயத்தனம் செய்யவேண்டும். அதனை இரண்டு வகையாகக் கழிக்கலாம்: — (1) இளஞ்சூடு உள்ள வெந்நீரை ஆனைத்தின் வழியாகப் பெருங்குடலில் நிரப்பவேண்டும். பெருங்குடல் என்பது ஆனைத் துவாரத்திற்கு மேலேயுள்ள குடற்பாகம். அதுவும் குடலேயாகும். ஆனால், குடலானது முதன் முதலில்

சிறிய குழலாகவும், முடிவில் பெருங் குழலாகவும் இருக்கும். ஆதலால், குடலின் கடைசிப்பாகம் பெருங்குடல் (colon) எனப்படும்.

15. வெந்நீரை ஆஸனத்தின் வழியாகப் பெருங் குடலில் ஏற்றுவதற்கு ஒரு கருவி உண்டு. அது அந்த்ர சோதனி (Irrigator enema) எனப்படும். சாக்கடையைத் தண்ணீர் விட்டு அலசிக் கழுவுவதுபோல, பெருங் குடலில் வெந்நீரை நிரப்பினால், அரை நாழிகையில் மலம் ஊறி மெதப்பட்டு அந்த நீருடன் வெளியே வந்துவிடும். (2) லகுபேதியாகும்படி மருந்து உண்ண வேண்டும்.

16. சாக்கடையில் அழுக்கும் சேறும் அடைத்துக் கொண்டால், உள்வாயி லிருந்து அதனைக் குத்தித் தள்ளவேண்டும்; இல்லாவிட்டால், வெளிவாயின் வழியாக வழித்து எறியவேண்டும். இந்த இரண்டு வகையைத் தவிர வேறு உபாயம் இல்லை. குடல் என்பது நமது தேகத்தின் சாக்கடையே யாகும். அதைச் சுத்தி செய்ய வேண்டுமாயினும், மேற் சொல்லிய இரண்டு உபாயங்களுள் ஓர் உபாயம் செய்யவேண்டும்.

17. வாயினுக்கும் ஆஸனத்திற்கும் இடையில் இருப்பது ஒரேகுழல். 'வாய்' என்பது இந்தக் குழலின் ஒரு நுனி, 'ஆஸனம்' என்பது மற்றோர் நுனி. இந்தக் குழலின் நீளம் முப்பது அடிக்கு அதிகம் இருக்கும். நாம் உட்கொள்ளும் அன்னம் இந்தக் குழலின் வழியாகவே வயிற்றுக்குப் போகின்றது. வயிற்றுக்குள் ஜீர்ணமாகி மிகுந்த சக்கை இந்தக் குழலின் வழியாகவே, மலம் என்னும் பெயருடன் வெளிப்படுகின்றது.

18. அன்னம் உள்ளே செல்கிற குழற்பாகத்திற்கு அன்னவாகினி (Alimentary canal) என்று பெயர். அன்னத்தின் சக்கை மலமாகி மாறி நிற்கிற குழற்பாகத்திற்குக் குடல் (bowels) என்று பெயர். குடலின் பரிமாணம் முதலில் சிறியதாகவும், முடிவில் பெரியதாகவும் இருக்கும் என்றும், குடலின் கடைப்பாகம் பெருங்குடல் எனப்படும் என்றும் முன்னமே சொல்லியிருக்கிறோம். பருங்குடலின் நீளம் மூன்று நான்கு அடி இருக்கும்.

19. வாயினுக்கும் ஆஸனத்திற்கும் இடையில் உள்ள தூரத்தை அளந்து பார்த்தால் ஏறக்குறைய இரண்டு சாண் இருக்கும். இரண்டு சாணுக்குள் முப்பது அடி நீளமுள்ள குழலை

அடைத்துவைக்க வேண்டுமானால், அந்தக் குழல் எவ்வளவு சுற்றுகள் வாய்ந்து அடங்கி யிருக்கவேண்டும் என்பதை ஊகித்துப் பாருங்கள்.

20. முப்பது அடி நீளமுள்ள குழலின் கடைசி மூன்று நான்கு அடிகளில் தங்கியிருக்கும் மலத்தைக் கழிப்பதற்குப் பேதி மருந்து சாப்பிட்டால், அது எத்தனை சுற்றுகளின் வழியாகப் போய், அந்த மலத்தைத் தள்ளவேண்டும்? ஆதலால், அது நிதானமாகவே வேலை செய்யும். ஆந்த்ரசோதனியை உபயோகித்தால் சீக்கிரத்தில், அதிகமானால் ஒருநாழிகைக்குள்ளாக, மலம் கழியும்.

21. பேதி மருந்து சாப்பிடுவதானால், கெட்டிப் பட்டிருக்கும் மலத்தை மெதுவாக்குவதற்கு நீர் வேண்டும். அந்த நீர் தேகத்திலுள்ள ஜீவாதாரமான திரவங்களிலிருந்தே வரவேண்டும். அப்படி நீரைப் பிரித்தெடுக்கும்பொருட்டு, தேகத்திலுள்ள யந்திரங்கள் வேலை செய்யும். அந்த வேலை செய்வதற்குச் செலவழியும் சக்தி அநாவசியமான அதிகச் செலவல்லவா?

22. ஆந்த்ரசோதனியை உபயோகிப்பது விபரீதமான மார்க்கம் என்று சொல்லக்கூடும். அப்படிப் பார்ப்பதானால், மேற்சொல்லிய வகைகள் இரண்டும் விபரீதமானவைகளே. எப்படியெனில், வெளியுதவி யில்லாமல் குடல் இளகி மலம் கழிவதே இயற்கையான வழியாகும்.

23. ஆகையால், மலத்தைக் கழிப்பதற்கு அவ்விரண்டு வகைகளுள் எதையும் அடிக்கடி உபயோகிக்கக்கூடாது. முக்கியமாக பேதிக்குச் சாப்பிடுவதனால் பலம் குறைகிறபடியால், அடிக்கடி பேதிக்குச் சாப்பிடக்கூடாது.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

TEACHERS' FRIEND

"உபாத்தியாயர் தோழன்"

மாதிரி பாடம் கொடுப்பதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

I. தயார் செய்தல்.

(a) முன் தெரிந்த விஷயத்தில் பரீட்சை — 1. தெளிவாய் இருக்கிறதா? 2. தகுதியாயும் குறித்தும் இருக்கிறதா? 3. போதுமானதா? 4. சுறுசுறுப்புள்ளதா? 5. இயற்கையாய் (சுவபாவீகமாய்) இருக்கிறதா? 6. முறையை அனுசரித்ததா?

(b) பாடத்தின் நோக்கம் போதுமான அளவு தெளிவாய் இருக்கிறதா?

(c) அந்த நோக்கம் பிள்ளைகளிடத்தில் பிரீதியை உண்டாக்கி உத்தேசித்திருக்கும் கவனத்தையும் ஆச்சரியத்தையும் அதிகப்படுத்துகிறதா?

II. புதிய பாடம் கற்பித்தல்.

(a) புதிய விஷயம் பழைய பாடத்துடன் எத்தனை வழிகளில் கூடுமோ அத்தனை வழிகளிலும் சம்பந்தப்பட்டிருக்கிறதா?

(b) பாடத்தைப் பல பாகங்களாகப் பிரித்து — 1. தொடர்ச்சியாயும் சரியாயு மிருக்கிறதா? 2. போதுமானதா? 3. சாக்ஷியமானதா?

(c) 1. பூர்த்தியாகவும் தெளிவாகவும் பார்வையைக் கிரகிக்கும்படிக்கும், 2. பாடத்தின் விஷயத்தைப் பூர்த்தியாகவும், தெளிவாகவும் விருத்தி செய்யும்படிக்கும், பாடத்தின் பல பாகங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனவா?

(d) அடுத்த பாகம் தொடக்கப்படும் முன்பு பிரதி பாகமும் நன்றாய்த் திருப்பி வரப்படுத்தப்படுகிறதா?

III. விஷயத்தை ஒழுங்குபடுத்தல்.

(a) பொதுவான சங்கதியைத் தெரியப்படுத்தத் தகுதியான உபமானம் உபயோகிக்கப்படுகிறதா?

(b) கெ பொதுச் சங்கதி — 1. பிள்ளைகளாலேயே கண்டு பிடிக்கப்பட்டதா? 2. பாடத்தின் சரியான சுருக்கம்தானு? 3. தெளிவானதா? 4. பொருத்தமானதா?

IV. விஷயத்தை உபயோகித்தல்.

புது விஷயத்தை உபயோகித்தது — 1. தகுதியானதா? 2. எண்ணிக்கையில் போதுமானதா? 3. யோசனை யுள்ளதா? 4. போதுமான அளவு பேதப்பட்டிருக்கிறதா?

V. சோதனைப் பரீட்சை. (கற்பித்ததைப் பிள்ளைகள் தெரிந்து கொண்டார்களா என்று பார்த்தல்.)

(a) முக்கியமான சங்கதிகளைத் தொடர்ச்சியாகச் சேர்க்கப்பட்டதா?

(b) விஸ்தரிப்பில்லாமல் சுருக்கப்பட்டதா?

(c) கடைசிப் பரீட்சை — புதிய பாடம் பழைய பாடம் ஆகிய இரண்டையும் முழுப் பாடமாகும்படி தெளிவாகச் சம்பந்தப்படுத்தியதா?

VI. (a) 1. பிள்ளைகள் } இவற்றிற்குத்தக கற்பிக்கும் ரீதியானது
2. பாடம் } ஏற்றதாயும் மாறுபட்டும் இருக்கிறதா?

(b) 1. சம்பாஷணை
2. கேள்வி விருத்தி
3. பிரத்தியக்ஷ உதாரணம்
4. விளக்கம்
5. திருஷ்டாந்தம் (படங்கள்)
6. சோதனைக் கேள்விகள்

} இவைகள் தகுந்த அளவில் உபயோகிக்கப்பட்டனவா?

(c) பாடமானது பூர்த்தியாக ஆசிரியரின் மனத்திற்கும் மாணவரின் மனங்களுக்கும் சம்பந்தாசம்பந்தமானதா?

(d) கற்பிக்கப்பட்ட பாடத்தின் பல பாகங்களைத் திருப்பும் பொழுது பிள்ளைகள் யோசிக்கிறார்களா வென்றும், தாங்களே ஒழுங்குபடுத்திப் பாடத்தைத் திருப்பிச் சொல்லுகிறார்களா வென்றும், பாகத்துக்குப் பாகமும், முழுமைக்குப் பாகமும், முன்னறிவிற்கு முழுமையும், சம்பந்தப்பட்டிருக்கிறதா வென்றும கவனிக்கப்படுகிறதா?

VII. கேள்விகள்.

(a) கேள்வியின் மாதிரி — 1. தெளிவானதா? 2. தகுதியானதா? 3. ஒன்றைக் குறிப்பிட்டதா? 4. சுருக்கமானதா? 5. சுலபமானதா? இலக்கண மமைந்ததா? 6. யோசனை யுள்ளதா? 7. விடை யடங்கியதா? 8. உண்டா இல்லையா என்பதா? 9. அதே வார்த்தைகளில் அல்லது வேறே வார்த்தைகளில் திருப்பிச் சொல்லப்பட்டதா? 10. இலகுவாயும் எல்லோருக்கும் தெரியும்படியாயும் கேட்கப்பட்டதா?

(b) கேள்விகளின் விருத்தி — 1. கேள்விகள் முன் பதில்களுக்குத் தொடர்ச்சியாயும் குறிப்பிட்டும் இருக்கின்றனவா? 2. வகுப்பிற்குத் தக்க மாதிரி கடினமானதாயிருகிறதா? 3. யோசனைக்கு இடம் கொடுக்கத் தூண்டும்படியாய் இருக்கிறதா? 4. விடைகள் முழுவாக்கியமாய் சங்கதி பூர்த்தியாகும்படியாய் இருக்கின்றனவா? 5. பிள்ளைகள் விடைகளை யோசிக்கத் தகுந்த நேரம் கொடுத்துக் கேட்கப்படுகிறதா? 6. தப்பு விடைகளைத் திருத்தவும் குறைவான விடைகளைப் பூர்த்தி செய்யவும் வேண்டிய சாமர்த்தியத்துடன் கேட்கப்படுகிறதா?

(c) சோதனைக் கேள்விகள் — 1. கற்பித்த விஷயத்தைப்பற்றியதா? 2. முக்கியமான சங்கதிகளைப் பொறுத்ததா? 3. விஷயத்தை மனத்தில் ஊன்ற வைக்கவும் ஒழுங்குபடுத்தவும் உள்ள ரீதியில் கேட்கப்படுகிறதா? 4. பூர்த்தியான விடைகளை அளிக்கும்படியாய் இருக்கிறதா? 5. தீவிரமாயும் சுறுசுறுப்பாயும் கேட்கப்படுகிறதா?

(d) விடைகள் — எல்லாப் பிள்ளைகளிடமிருந்தும் விடை விரும்பப்படுகிறதா? 2. விடைகளின் இலக்கணப் பத்ததியையும், தொனி, உச்சரிப்பு, இவைகளைப்பற்றியும் கவனிக்கப்படுகிறதா?

போதனையில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்.

1. மனம் மனதை எட்டவேண்டும்.

2. நடத்தல், தூங்குதல், ஜீர்ணித்தல் முதலியவைகளில் தவிர மாணக்கர்களுக்காக உபாத்தியாயர் நினைக்கவாவது யோசனை செய்யப்போகவாவது கூடாது.

3. அரிய விஷயம் என்னவென்றால், சுயமாய் தெரிந்து கொள்ளல்.

4. போதனையில் உபாத்தியாயர் வேலை, என்னவென்றால் பிள்ளை தனக்குத்தானே கற்பித்துக்கொள்ளும் மார்க்கங்களை காட்டுவதும் நடத்துவதும் மேற்பார்வை பார்ப்பதும்தான்.

5. வேலைக்கு வேண்டிய வளவு பிள்ளைக்கு யதேச்சை அதாவது சுவாதீனத்தை கொடுப்பதுதான் சிறந்த மார்க்கம்.

6. மற்றப்படி கற்பிப்போனும் கற்போரும் சுயேச்சையாய் இருக்கவேண்டும்.

(இன்னும் வரும்)

V. B. SANGAMESWARA AIYAR,
Supervisor of Schools,
Coimbatore.

KINDERGARTEN

குழந்தைகளின் தோட்டம்

இப்பேருலகத்திலுள்ள யானைமுதல் எறும்பு கடை ஜீவகோடிகளில் மானிடப்பிறப்பு மாண்புடைத்து. இதனாலன்றே "படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தது தன்னை வணங்க" என்னும் முதுமொழியும் வழங்குகின்றது.

ஆனதினால் அருமையான இம் மக்கட் பிறப்பில் நாமடைய வேண்டுவது நற்கதியே! அந் நற்கதியடையக் கற்கவேண்டியது நன்னூலே. இந்நன்னூலை "விளையும் பயிர் முளையில், செடியாய் வளையாதது மரமாய் வளையுமா? ஐந்தில் வராதது ஐம்பதில் வருமா? தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிகளைக் கருதி பாலர்களுக்குப் படிப்பை (கல்வியறிவை) ஊட்டுவது உபாத்தியாயர்களன்றே.

குழந்தைகளின் தோட்ட மென்பதை விளையாட்டாய் எண்ணி விடாமல் விசேஷமாய்க்கொண்டு தத்தமக்குரிய அறிவு அனுபோகத்துடன், விவசாய தீபிகை என்ற பத்திரிகையையும் அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டாரால் ஆண்டு தோறும் வெளியாகும் விவசாய சீர்திருத்த பஞ்சாங்கங்களையும் ஆராய்ச்சி செய்து பாடசாலைத்

தோட்டத்தில் பலவித எருக்களின் குணங்களையும் அடித்தடித்து பயிர் செய்யும் தானியவகைகளையும் அவ்வவற்றிற்கேற்படும் குண தோஷங்களையும் பிரத்தியக்ஷமாய்த் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவதுடன் அப்படி வாய்க்காத விஷயங்களை அன்பு கூர்ந்து உபதேசிக்கவும் வேண்டும்.

அவ்வாறு ஏற்படுத்தும் பாடசாலைத்தோட்ட விஷயமாய் ஒவ்வொரு பையனும் ஒவ்வொரு தோட்டக்குறிப்பு வைத்திருக்கச் செய்யவேண்டும். அவ்விதக் குறிப்பானது தற்கால நவீன முறையை அனுசரித்து தொடர்முறைப்பாடப் (correlative methods) பிரகாரம் அமைத்தல்வேண்டும். அதற்கு கடைசியாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைக் கவனிக்க.

உலகவிஷயத்தை உய்த்துணர்ந்து உன்னத பதவி யடைந்த வித்வசிரோமணிகள் திருவாய்மலர்ந்தருளிய வேளாண்மையைக் குறித்த விசேஷ செய்யுட்கள்,

1. சிலைத்தேடின் ஏரைத் தேடு.
2. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.
3. மேழிச் செல்வம் கோழைபடாது.
4. நிலத்தைக் கிண்டி நலத்தை நாட்டு.
5. பூமி திருத்தி யுண்.
6. பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்.
7. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்.
8. கார்நடக்கும் படிநடக்கும் காளைதம்முடைய
ஏர்நடக்குமெனில் இயலிசை நாடகம் நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பகைநடக்க மாட்டாதே.
9. வித்துமேரும் உளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கும் ஏழையும் பதரே.
10. செய்வன திருந்தச் செய்.

என்னும் செய்யுட்களை யுன்னி உபாத்தியாயர்களாளை நாமெல்லாரும் உத்தியோகத்திற்குத் தக்க ஊதியத்தைக் கருதாமல் உண்மையாய் உழைத்து வருவோமானால் இகபரம் இரண்டிலும் எண்ணரிய கண்ணியம் பெறுவோம் என்பது திண்ணம்.

GARDEN DIARY

தோட்டவேலை நோட்டு

rvation weekly two nes. / ய நோக்குதல் வாரத் / ற்கு 2 தடவை.

Student's Name. / பையன் பெயர்.

விதைத்த வித்து.....விதைத்த தேதி.....முளைத்த தி.....விதை யிலை யுதிர்ந்த தேதி.....

யும் தி.	செடியின் நிலைமை.	செடியின் உருவம்.	அபிவிர்த்தியின்பொ ருட்டு செய்த வேலை	ஷரா.
1	2	3	4	5

K. A. K. AHAMED SAHIB,
Teacher, H. E. School,
Kombay, Madura Dist.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1914வது மார்ச்சுமீ | மாதம்10

TAMIL ALPHABET AND SPELLING

தமிழ் நெடுங்கணக்கும் எழுத்துக் கூட்டலும்

தமிழ்மொழி நமது தாய்மொழி. இதன் எழுத்தியலைச் சிறிது ஆராய்வோம். தமிழ் மொழிக்கு எழுத்துக்களை வகுத்த ஆன்றோர் அவற்றை ஒரு பிராணிக்கு ஒப்பாக வகுத்திருக்கின்றனர். ஒரு பிராணிக்கு உயிர் முக்கியாதாரமாக இயல்வதுபோல பாஷைக்கும் உயிர் முக்கியமெனக் கொண்டு, உயிர் எழுத்துக்களை முன்பு வகுத்தனர். அவ் வுயிர்தானும் நிலைத்து வசிப்பதற்கு உடல் வேண்டியிருப்பதுபோல உயிர் எழுத்துக்கள் தங்குவதற்கென இரண்டாவதாக உடல் எழுத்துக்களை (மெய் எழுத்து; மெய்-உடல்) வகுத்தனர். பின்பு உயிரும் உடலும் கூடி இயங்குதல் போல் உயிர் மெய் எழுத்துக்கள் இயன்றிருக்கின்றன. ஆய்தம் என்னும் ஓர் எழுத்து தனித்து நின்று ஒரு பிரிவாக விளங்குகின்றது.

CORRESPONDING TERMS OF SEASONS

பருவ காலங்கள்

சம்ஸ்கிருதம்	தமிழ்ப் பருவங்கள்	தமிழ்மாதங்கள்	மீனமாதங்கள்	இங்கிலீஷ்
வசந்தருது ...	இளவேனில் ...	சித்திரை ...	மேஷம் ...	ஏப்ரல் I3உமு. மே I3உவ.
		வையாசி ...	ரிஷபம் ...	மே I4உமு ஜூன் I4உவ.
கிரீஷ்மருது ...	முதுவேனில் ...	ஆனி ...	மிதுனம்	ஜூன் I5உமு ஜூலை I5உவ.
		ஆடி ...	கடகம் ...	ஜூலை I6உமு. ஆகஸ்டு I6உ
வர்ஷருது ...	கார்ப்பருவம்	ஆவணி ...	சிங்கம் ...	ஆகஸ்ட்டு I7உமு. செப். I6உவ.
		புரட்டாசி ...	கன்னி ...	செப்டம். I7உமு. அக். I6உவ.
ஷரத்ருது ...	குளிர்ப்பருவம்	ஐப்பசி ...	துலை ...	அக்டோ. I7உமு. நவம். I5உவ.
		கார்த்திகை ...	விருச்சிகம் ...	நவம்பர். I6உமு. டிசம். I5உவ.
ஹேமந்தருது	முன்பனி ...	மார்கழி ...	தனுசு	டிசம்பர் I6உமு. ஜன. I3உவ.
		தை ...	மகரம் ...	ஜனவரி I4உமு. பிப்ர. I1உவ.
சிசிரருது ...	பின்பனி	மாசி ...	கும்பம் ...	பிப்ரவரி I3உமு. மார். I2உவ.
		பங்குனி ...	மீனம்	மார்சு I3உமு. ஏப். I2உவ.

உய்த்து உணருமிடத்து, உயிரும் மெய்யுமே முக்கிய எழுத்துக்கள் என்னலாம். இதனாலேயே, 'உயிரும் உடலுமாம் முப்பதும் முதலே' என்றார் இலக்கணக்காரர். உயிர்மெய் முதலிய எழுத்துக் கூட்டெழுத்துக்கள் ஆதலால், அவற்றையும் ஆய்தத்தையும் தம் ஒலியில் நீண்டும் குறுகியும் வரும் மற்றைய எழுத்துக்களையும் சார்பெழுத்து என்று வகுத்தனர்.

உயிர் எழுத்துக்கள் அ முதல் ஔ வரையிலான பன்னிரண்டுமாம். அகரம் முதலில் நின்றதற்கும் மற்றைய உயிர்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நின்றதற்கும் ஏற்ற காரணங்களை நன்னூல் முதலிய இலக்கணங்கள் நன்கு விளக்குகின்றன. அவற்றைப் படித்து உணர்வது உபாத்தியாயர்களுக்கு அவசியமானதாகும். மெய்யெழுத்துக்களும் அவ்வாறே அமைந்திருக்கின்றன. முதலெழுத்துக்களின் அமைப்பிற்குக் காரணம் உண்டெனவே அவற்றைச் சார்ந்துவரும் சார்பெழுத்துக்களுக்கும் காரணம் உண்டென்பது கூறுமலே யமையும்.

தமிழ்ப் பாஷையில் உள்ள முக்கியமான எழுத்துக்களைக் கணக்கிட்டால்,

உயிர்	12
மெய்	18
உயிர் மெய்	216
ஆய்தம்	1
ஆக	247

ஆக இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் ஏற்படுகின்றன. இவையே தமிழ் மொழிக்கு வேண்டிய எழுத்துக்களாம். தமிழ் மொழியில் வரும் சொற்களெல்லாம் இந்த எழுத்துக்களின் ஒலியில் அமைவனவே யாகும். தமிழ்ப் பாஷையில் சம்ஸ்கிருத பாஷைச் சொற்கள் கலக்க நேர்ந்தகாலத்தில் ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்னும் ஐந்து எழுத்துக்களைக் கூட்டி, அந்த எழுத்துக்கள் தமிழில் வரும்போது இன்னின்ன தமிழ் எழுத்துக்களைப் பெறும் என்று இலக்கணக்காரர் காட்டினர். அவை யாவும் செய்யுட்களுக்கே உரியவை யாயின. வசனம் எழுதும்போது அந்த சம்ஸ்கிருத எழுத்தையே மேற் கொள்வா ராயினர்.

தமிழ் மொழியின் மெய்யெழுத்துக்களில் க, ச, ட, த, ப முதலிய யெழுத்துக்களில் ஒவ்வொன்றும் இரண்டு ஒலிகளைப் பெறுவனவாயின. க என்பது கண்டான் என்பதில் க (ka) என்னும் ஒலியையும், அங்கு என்பதில் க (ga) என்னும் ஒலியையும் பெறும். ச என்பது சந்து என்பதில் ச (sa) என்னும் ஒலியையும் பஞ்சு என்பதில் ச (ja) என்னும் ஒலியையும் பெறும். ட என்பது கட்டடம் என்பதில் முறையே ட (ta) ட (da) என்னும் ஒலிகளைப் பெறும். த என்பது தந்தான் என்பதில் த (ta) என்னும் ஒலியையும் அந்த என்பதில் (da) என்னும் ஒலியையும் பெறும். ப என்பது பண்டு என்பதில் ப (pa) என்னும் ஒலியையும் அன்பு என்பதில் ப (ba) என்னும் ஒலியையும்பெறும். அதனால் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் ககரம் முதலிய எழுத்துக்கள் ஒன்றுக்கு நான்காகப் பெருகியதுபோல, தமிழில் பெருகுவதற்கு இடமில்லாமற் போயிற்று. (தொடரும்.)

பத்திராதிபர்.

PURGATION

விரேசனம்

1. "சரீர வாதை தீர்த்துக் கொள்ளல்" என்னும் தலைப்பின் கீழ் எழுதிய விடத்து 15-வது பகுதியில் அந்தர சோதனி (Irrigator enema) யை உபயோகித்து மலத்தைக் கழிப்பதும் உண்டு என்று சொல்லி யிருக்கிறோம். பேதிக்கு மருந்தாவது எண்ணெயாவது சாப்பிடாதவர்கள் இவ்விதமாகக் குடல்களைச் சுத்தப் படுத்திக் கொள்வது இந்தியா தேசத்தில் நெடுங் காலமாக வழக்கமே. இப்படிச் செய்வதற்கு வஸ்திகர்ம என்று பெயர். வஸ்தி என்பது அடிவயிறு, மூத்திரப்பை, பீர்ச்சாங்குழல் எனப் பொருள் படும். இந்தச் சொல்லி லிருந்தே வஸ்திரத்தின் நூனிகள் என்று பொருள்படும் வஸ்தயஃ என்னும் பதமும் உண்டா யிருக்கிறது.

2. அடிவயிற்றை ஆரியர்கள் இரண்டு விதமாகச் சுத்தி செய்து வந்தார்க ளென்பது மேற் சொல்லிய அர்த்தங்களினால் புலப்படக் கூடும். அந்த இரண்டு விதங்களாவன :— 1. வஸ்திரத்-

தைச் செலுத்தி, அதனால் தடைத்து வழித்து மலங்களை வெளிப் படுத்துவது; 2. ஜலத்தைப் பீச்சாங் குழலைக் கொண்டு ஆசனத்தின் வழியாகச் செலுத்திச் சுத்தி செய்வது.

3. இக் காலத்தில் ரப்பரினால் செய்த குழல்களை உபயோகிப்பது போல், அக் காலத்தில் ஆட்டுக் குடலைக் குழலாகக் கொண்டு அதன் நுனியில் வெள்ளிபினாலாவது மரத்தினாலாவது மூக்குச் செய்து பொதித்துவைப்பார்கள். இப்படி ஆட்டுக் குடலை உபயோகிப்பதற்கு அதனைப் பதன் படுத்த வேண்டியது அவசியமாகும். அந்த ஆட்டுக் குடலிலுள்ள புழுக்கைகளைப் பிதுக்கித் தள்ளிவிட்டு, அதனில் மணலை நிரப்பி, இரண்டு மூன்றுநாள் நல்லெண்ணெயில் ஊறவைத்து எடுத்துச் சுத்தப்படுத்தி வைத்துக் கொள்வதே பதனிடு முறையாகும்.

4. விரேசனம் என்றால் மலங் கழித்தல் என்று அர்த்தம்; அதற்கே பேதி என்றும் பெயர். பேதி மருந்துகளுள் உத்தமமானது சிற்றாமணக்கு எண்ணெய். அந்த எண்ணெயை 'பிள்ளை வளர்க்கும் எண்ணெய்' என்றும் சொல்வார்கள். ஏனெனில், அது மலங்களைப் போக்கிக் குழந்தைகளுக்கு ஆரோக்கியம் விளைவிக்கின்றது.

5. சிற்றாமணக் கெண்ணெயில் சிறு செருப்படி (Coldenia procumbens, with small leaves) என்னும் மூலிகையின் ரஸத்தைச் சேர்த்துக் காய்ச்சி வைத்துக்கொண்டு உபயோகிப்பது நன்றாகும். இது மருந்தெண்ணெய் எனப்படும். இந்த மருந்தெண்ணெயிற் கொஞ்சம் குடித்தால், நன்றாகப் பேதியாகும்; அடிவயிற்றில் சங்கடம் உண்டாகாது; ஆனால் துவாரத்தில் எரிச்சல் தோன்றுது.

6. ஜ்வரத்துடன் இருப்பவர்கள் பேதிக்கு மருந்து சாப்பிடவேண்டுமானால், தாது வர்க்கத்து மருந்துகளைச் சாப்பிடலாம். அப்படிச் சாமானியமாக வழங்கப் பெறுபவை எப்ஸம் உப்பு (Epsom salt), ஈனோஸ் புரூட் ஸால்ட் (Eno's Fruit salt), கார்ல்ஸ்பாட் உப்பு (Carlsbad salt) என்பவைகளாம். சிவதை வேர்ச் சூர்ணத்தில் (Jalap powder) ரஸபஸ்மத்தை (Calomel)க் கலந்தும் உபயோகிக்கிறார்கள். இது பாதரஸ

ஸம்பந்தமானதனாலும், ஈரற்குலையை (பித்தாசயத்தை)ப் பலமாகத் தாக்குவதனாலும் அவ்வளவு நன்றன்று.

7. ரோஜா மொட்டுகளை நெய்யில் வறுத்துத் தொகையல் (சட்னி, sandwich) செய்து, அன்னத்திற் கலந்து உண்பதனாலும், சூரத்தாவாரை இலையையும் (senna leaves) மிளகையும் (pepper) போட்டுக் கஷாயம் வைத்துக் குடிப்பதனாலும் நன்றாகப் பேதியாகும்.

8. உலர்ந்த ரோஜா மொட்டுக்களையும், சூரத்தாவாரை இலைகளையும் சூர்ணமாக்கிப் பனைவெல்லம் சேர்த்து லேகியம் (Electuary) செய்து உட்கொள்வதனாலும், அந்தச் சூர்ணத்தைக் குல்கந்துடன் (rose confection) கலந்து தின்பதனாலும் சுகமாகப் பேதியாகும். இது யுனானி முறைப்படி ஸுகவிரேசனகாரியாகும்.

9. இரவில், படுக்குமுன், மேற் சொல்லிய குல்கந்தில் கொட்டைப் பாக்களவு தின்று, ஒரு வாய் நீர் குடித்தால், மறுநாள் காலையில் இரண்டொருமுறை தாராளமாக மலங் கழியும். அவரவர் தினந்தோறும் செய்யவேண்டிய வேலைகளுக்கும், வியவகாரங்களுக்கும் தடை உண்டாகாது.

10. பேதி மாத்திரைகளென்றும், பேதி மருந்துகளென்றும் விற்கப்படும் 'பேடென்ட்' மருந்துகள் பெரும்பாலும் தீமை செய்யத்தக்க வஸ்துக்கள் சேர்ந்தவை யாகும். கோவாளம் போன்றவைகள் அதிவிரேசனகாரிகள் எனப்படும். அதாவது, அதிகமாகப் பேதியாகத் தக்கவைகள். அவைகளை எவ்வளவு சுத்தி செய்தாலும், ஈரற் குலையைத் தாக்குகின்றன, வாந்தியுண்டாக்குகின்றன, ஆசனத் துவாரத்தில் கடுப்பு உண்டாக்குகின்றன, நரம்புகளைத் தளர்த்திச் சோர்வு விளைவிக்கின்றன.

11. ஆமணக்கெண்ணெயின் மணம் பொறுதவர்கள், அந்த எண்ணெய் வார்த்த அடை, தோசை முதலியன சுட்டுத் தின்னலாம், வற்றல்கள் வறுத்துத் தின்னலாம். அவை சூடாக இருக்கும்பொழுதே தின்றால், ஆமணக்கெண்ணெயின் மணம் வீசாது அப்பொழுது நல்ல மணமும் சுவையும் இருக்கும். இப்படிச் செய்வதனாலும் சுகமாகப் பேதி யாகும்.

12. ஆமணக்கெண்ணெயில் இனிமையான சரபத்து (syrup), எலுமிச்சம்பழ ரஸம், பெப்பர்மின்டு தைலம், ஆவாரைக் கஷாயம் முதலியன சேர்த்துக் குலுக்கிக் குடிக்கலாம். அப்பொழுது ஆமணக்கெண்ணெயின் மணமும் சுவையும் நீங்கி, அது குடிப்பதற்கு இனிமையாகவும் சுலபமாகவும் இருக்கும்.

13. எண்ணெய் குடிக்கும்பொழுது மூக்கைப்பிடித்துக் கொள்வது நன்றன்று. ஏனெனில், எண்ணெயின் மணத்துடன் கூடிய வாயு மூக்கின் அடிப்புறத்தில் தங்கி யிருந்து, பிறகு மூச்சு விடும்பொழுது தலைகாட்டும். சாதாரணமாக எண்ணெயைக் குடித்துவிட்டு, இரண்டொரு லவங்கத்தை வாயிற்போட்டுக் கொண்டால், எச்சில் தாராளமாக ஊறும். அந்த எச்சிலை விழுங்கிவிட்டால், எண்ணெயின் மணம் சிறிதும் தங்கியிராது. பேதியாகி எண்ணெய் வெளியே போகிறவரையில், ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பது நன்றன்று; அந்த மணம் பொறுமல், சிலர் வாந்தி செய்வார்கள்.

14. மருந்துச் சரக்குகளை ஆமணக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வைத்துக்கொண்டு, தினந்தோறும் இரவில் ஒரு சிறு கரண்டியளவு குடிப்பதனால், மலச்சிக்கல்போம், தேகம் குளிர்ச்சி பொருந்தியிருக்கும். அவுரிவேரையும் புங்கங் கொழுந்தையும் நசுக்கி ஆமணக்கெண்ணெயிற் போட்டு, வெயிலிற் காயவைத்து எடுத்துக்கொண்டு, மேற்சொல்லியபடி இரவில் கொஞ்சம் குடித்து வருவது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நன்மை பயக்கும்; அதனல் கணச்சூடு தணியும்.

15. நூற்புழுச்சி (thread worm), நாக்குப்பூச்சி (round worm), நாடாப்பூச்சி (tape worm) என்னும் பூச்சிகள் குடல்களிற் புழுத்து, நம்முடைய ஆகாராதிகளைக் கொண்டு ஜீவிக்கும். இவை பராபேக்ஷிகள் (parasites) எனப்படும்; அதாவது, மற்றொரு ஜீவனை ஆதாரமாகக்கொண்டு வளர்பவை. இவைகளினல் நமக்குப் பலம் குறையும், உடல் மெலியும், பலவகை நோய்கள் உண்டாகும்.

16. புரசம்விதையைச் சாணிப்பாலில் ஒருநாள் ஊறவைத்து, மேலேயுள்ள பழுப்புத்தோலை உரித்தெறிந்துவிட்டுப் பருப்பை அரைத்து, வெல்லத்தில் வைத்து இரவில் விழுங்கி, மறுநாள் காலையில் ஆமணக்கெண்ணெய் குடித்தால், பூச்சிகள் செத்து வெளியே வந்துவிடும். அல்லாமல், ஸான்டோனீன் (Santonine) தூளையும் அப்படிச் சாப்பிடலாம். ஸான்டோனீன் சாப்பிட்டால், மூத்திரம் மஞ்சள்நிறமாக இருக்கும், கண்ணுக்கு எதுவும் மஞ்சளாகவும் தோற்றக்கூடும்.

17. குளிப்பதனலும், மோர், எலுமிச்சம்பழரஸம் முதலியன குடிப்பதனலும் பேதி கட்டும்; அதாவது, பேதியாகாமல் நிற்கும். போதுமானதடவை பேதியானபிறகு, அப்படிப்பட்ட பதார்த்தங்களை உபயோகிக்கவேண்டும். மோருஞ்சோறும் இரண்டாமுறை உண்ணவேண்டும்; முதல்முறை மிளகும் சீரகமும் அரைத்துவிட்ட ரஸமுஞ் சோறும், வறுத்த மணத்தக்காளி வற்றலும் உண்ணவேண்டும். உடம்பு குளித்தபிறகு உண்பது நன்று; அதனல், சுசியும் குளிர்ச்சியும் ஏற்படும்.

18. குடல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது எல்லாருக்கும் அவசியமாகும். பிணிகள் உண்டாவதற்குக் காரணம் குடலிலுள்ள அசுத்தமே. தினந்தோறும் சாப்பாட்டில் ஏதாவது ஒருவகைக் கீரையைச் சேர்த்துப் புசித்து வருவதனலும், காலையில் எழுந்தவுடன் ஒரு பஞ்சபாத்திரம் நிரம்ப நீர் (வெந்நீராவது புதிய தண்ணீராவது) குடிப்பதனலும் குடல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம். இது கைகண்டமுறை; எல்லாரும் எளிதிற் செய்யக்கூடியது.

தி. அ. சாமிநாத ஐயர்.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS

நன்செய் நிலச்சுவான்களுக்கு அறிவிப்பு

ஜூன்மீ முதல் தேதியில் ஏகர் ஒன்றுக்கு 2½ பட்டணம் படிவீதம் பசுந்தாள் உரத்துக்காக நெல்லிக் குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாய பண்ணையில் விதைக்கப்பட்ட வங்காளத் தக்கைச் செடிகளின் வளர்ச்சியை நன்செய் நிலச்சுவான்கள் இப்போது வந்து பார்க்கலாம். 2½ படி விதைக்கு விலை ரூ. 0-15-0 ஆகும். செடிகள் மூன்று அடி முதல் ஐந்து அடி வரையில் வளர்ந்து

மிகவும் செழிப்பாயிருக்கின்றன. இச்செடிகளை சீக்கிரத்தில் சம்பா நடவுக்கென்று பசுந்தாள் உரமாக மடக்கி உழுதுவிடப்படும். நன்செய் பூமிக்கு சுலபமாய் தழை உற்பத்தி செய்ய இது அல்லவோ நல்லவழி? தேவையானவர்கள் நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாய பண்ணை மானேஜருக்கு எழுதி விதை தருவித்துக் கொள்ளலாம்.

புன்செய் நிலச்சுவான்கள் (முக்கியமாய் மானவாரி புன்செய் உள்ளவர்கள்) பாலூர் விவசாயப்பண்ணையில் சாதாரண எருதுகள் உழக்கூடிய சிந்து கலப்பையால் உழப்பட்ட பூமியில் சாகுபடியாயிருக்கும் கம்பையும் அக்கம் பக்கத்தில் நாட்டுக் கலப்பையால் உழப்பட்ட பூமியில் சாகுபடியாயிருக்கும் கம்பின் வளர்ச்சியையும் இப்போது பார்வையிடுவதால் சிந்து கலப்பையின் குணாதிசயம் இன்னதெனத் தானே வெளிப்படும். சர்க்கார் பண்ணைக் கம்போ இவ்வளவு காய்ச்சலிலும் வளர்ச்சி குறைந்திருந்தபோதிலும் செடிகள் செழித்து கறுத்து தடித்த கதிர்களுடன் இருக்கின்றன. அக்கம் பக்கத்திலோ செடிகள் அனேக இடங்களில் மாய்ந்து போய்விட்டன. இறைக்கக் கூடிய இடங்களில் கம்புக்குத் தண்ணீர் இறைக்கிறார்கள். இவ்வளவு அனுகூலத்தைத் தரக்கூடிய ஆழமாய் உழும் ரூ 3-8 0 விலையுள்ள சிந்து கலப்பையை நெல்லிக்குப்பத்துக் கடுத்த பாலூர் சர்க்கார் விவசாயப் பண்ணை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

THE AIR

காற்று

வகுப்பு — III வது.

காலம் — 45 நிமிஷம்.

பாடம் — சயன்ஸ்.

பாகம் — காற்று இருக்கிறது என்பது.

முன்பே தெரிந்தது — சுய அறிவு.

நோக்கம் — பொது அறிவு, பாஷாஞானம், ஞாபக சக்தி இவைகளை விருத்தி செய்வதுடன் காற்றைப் பற்றி குறிப்பாய் கற்பித்தல்.

உபகரணங்கள் — கண்ணாடி, இரண்டு சீசாக்கள், புஸ்தகம், பலகை, சமைச் சுண்ணாம்பு, செம்பு, தண்ணீர், புனல் முதலியன. விசிறி அட்டை.

I. விஷயம்.

i. பீடிகை — ஆகாயம், காற்று, வாயு.

ii. புதுப்பாடம். 1. வாசனையில்லை. 2. ருசி கிடையாது. 3 கண்ணால் பார்க்க முடியாது. 4. பரிசத்தினால் உணருகிறோம். 5. காற்றின் வழியாக நாம் பார்க்கக்கூடும். 6. உருவம் கிடையாது. 7. அளவு கிடையாது.

II. முறை.

1. நான் எந்தப்பக்கத்தில் நிற்கிறேன்? நீ எந்தப்பக்கத்தில் நிற்கிறாய்? உனக்கும் எனக்கும் இடையில் என்ன இருக்கிறது?

விசிறியால் விசிறிக் காண்பித்து, காற்றடிப்பதைக் காட்டி, என்ன இது என்றால் காற்று என்பார்கள்.

என்னவோ இருக்கிறது; அது நம்மேல் படுகிறது; அதை நாம் காற்று அல்லது ஆகாயம் என்று சொல்லுகிறோம்.

கையாட்டுவதினால் கையினால் தடுக்கப்பட்டு முகத்தில் படுகிறது. அதை நாம் ஆகாயம் என்போம்.

இன்னும் எதனால் காற்று இருக்கிறதென்று அறியலாம்? சுவாசத்தை யிழுத்தால் ஏதோ உள்ளே போதல்போல் தோன்றுகிறது. அதாவது காற்று உள்ளே போகிறது. காற்றில்லாத இடம் கிடையவே கிடையாது. மேலே, கீழே, பக்கம் எல்லாவிடங்களிலும் காற்று இருக்கிறது.

ஒரு சீசாவைக்காட்டி இதில் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை என்றால் காற்று இருக்கிறது என்று சொல்லவேண்டும். திருஷ்டாந்தப்படுத்த ஜலம் ஊற்றி நேராய்க் கவிழ்த்து உண்டாகும் சப்தத்தைக் கொண்டும் ஜலம் ஊற்றும்போது கொப்புளங்கள் விழுவதைக் கொண்டும் வாயு இருக்கிறது என்றும் சாய்த்துக் கொட்டி சப்தமில்லாமலிருப்பதால் காற்று உள்ளேபோயும் ஜலம் வெளியே வந்துகொண்டிருக்கிற தென்றும் சிறிய சீசாவை எடுத்து ஜலத்தில் வாயைத் திறந்த பக்கத்தில் அமிழ்த்திவைத்தால் ஜலம் நிரம்பும்போது குமிழிகள் வருவதைக் கொண்டும் ஜலம்

நிரம்பினவுடன் அதைத் தலைகீழாய்க் கவிழ்த்து குமிழ் சப்தம் இரண்டையும் காண்பித்து காற்றின் சக்தியை விஸ்தரித்துப் பேச வேண்டும்.

2. அத்தர், புனுகு முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்தால் வாசனை வீசும்.

காற்றம் இருக்கும் இடத்தில் காற்றம் வீசும்.

சாதாரணமான காற்று இருக்கு மிடத்தில் வாசனையில்லை.

கரும்பலகையில் காற்றுக்கு வாசனையில்லை என்றெழுதுக.

3. மாம்பழம், உப்பு, மிளகாய், கற்கண்டு முதலிய பதார்த்தங்களைப்போல காற்றுக்குச் சுவை ஒன்றுமில்லை.

கரும்பலகையில் காற்றிற்கு ருசியும் கிடையாது என்றெழுதுக.

4. நீ காற்று இருக்கிறதென்று சொன்னால் நான் இல்லை என்று சொல்லுகிறேன். ஆதலால் நமது கண்ணுக்குத் தெரிகிறதில்லை. கரும்பலகையில் கண்ணால் பார்க்க முடியாது என்றெழுதுக

5. கண்ணால் பார்க்கிற தில்லையே, அதை எதனால் அறிகிறோம்? சரீரத்தில் தாக்குவதால் உணருகிறோம்.

6. சிலேட், புஸ்தகம் இரண்டையும் காண்பித்து புஸ்தகத்தை வாசிக்கச் சொல்லி, வாசித்தபிறகு, சிலேட்டினால் மறைத்து சிலேட் மறைத்துவிட்டது என்று ரூபித்து, இப்படிப் பல வஸ்துக்களினால் மறைத்துக் காட்டின பிறகு கண்ணாடியினால் மறைத்து வாசிக்கச் சொன்னால் வாசிப்பார்கள். வாசித்த பிறகு கண்ணாடிக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை விளக்கி, கண்ணாடி வழியாய் எந்த வஸ்துவும் தெரியும் என்பதை ரூபிக்கவும்.

கண்ணாடிக்குப் பின்னால் வஸ்துக்கள் தெரிவதுபோலவே காற்றின் வழியாய்த் தெரியும்.

கரும்பலகையில் காற்றின் வழியாய் நாம் பார்க்கக்கூடும் என்று எழுதுக.

சாக்கைக் காட்டி இது புனல் (அல்லது பன்னலில்) போட்டால் உள்ளேபோவதில்லை. ஜலத்தை ஊற்றிக் கீழ் இறங்குவதைக் காண்பித்து தண்ணீர்தானே அநேகபாகமாக மாறும் என்றும் சாக்கைக்காட்டி தானே வேறு உருவம் எடுத்துக் கொள்ளாதென்றும் காண்பித்து, அந்தப் புனலிலுள்ள தண்ணீரை புனலில் நிறுத்தினால் புனல் மாதிரி உருவத்தை அடைகிறதென்றும் வேறு பாத்திரத்தில் ஊற்றினால் அப்பாத்திரத்தின் உருவம்போல் இருக்கிறதென்றும் அதே அளவுள்ள ஜலம் மாத்திரம் அப்படியே இருக்கிற தென்றும் ஒரு சீசா ஜலம் வைத்து இன்னொரு சீசா காலியாய் வைத்து ஜலத்தை ஊற்றி ஒன்றில் இருக்கும் ஜலம் மற்றொன்றில் வரும்போது காற்று ஏறுவதைக் காண்பித்து ஜலத்திற்கு உருவம் உண்டு என்பதையும் ஜலம் எந்தப் பாத்திரத்தில் வைக்கிறோமோ அந்தப் பாத்திரத்தின் உருவம் ஏற்றுக்கொள்ளுகிறதென்றும் காற்றிற்கு ரூபம் இல்லை என்றும் சொல்லுக. ஒன்றில் அரை வரிசை ஜலம் ஊற்றி அரைச்சீசா ஜலம் உள்ள சீசாவின் மேல் முழு சீசா ஜலம் உள்ள சீசாவை மூடி, காற்றின் ரூபம் வித்தியாசப்படுவதைக் காண்பிக்க.

T. V. VENKATASESHA AIYAR,
Periathallppady,
Board Rural School,
Uttankarai Taluk.

NATURE STUDY

இயற்கைப் பாடம்

எலிமெண்ட்டெரிப் பாடப்பட்டியில் இஷ்டமான பாடங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ள இயற்கைப்பாடம் என்பதை கீழ்தரப் பாடசாலையி லுள்ளவர்களும் மற்றவரும் கவனிப்பவராகக் காணப்படவில்லை. அத் தலைப்பின் கீழ் சொல்லப்பட்ட விஷயமும் அவற்றின்கீழ் எழுதப்பட்டுள்ள குறிப்புகளும் வெளிப்படையாகவே யிருக்கின்றன.

இயற்கைப்பாட மென்றது இயற்கையில் அகப்படும் பொருளைப்பற்றிய பாடமென்று பொருள் கொள்ளும். அவை (1) செடியினுடைய வாழ்க்கையும் விலங்கின் வாழ்க்கையும் (2) நிலத்தின் தன்மையும் ஆகிய இவற்றைப்பற்றிய பாடமென்று குறிக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்கச் செயற்கைப் பொருள் என்று எப்படிப் பொருள் கொள்ளும். இதை மறந்து அநேகர் செயற்கைப் பொருளையும் உடன் சேர்த்தார். செயற்கைப் பொருள் எக் காரணம்பற்றியும் சேர்க்கப்படக் கூடாது. செயற்கைப் பொருள்-

களைப்பற்றிய விஷயங்களை வாசக பாடத்திலும் மற்றப் பாடங்களிலும் கற்பிக்கலாம். இவ் வியற்கை பாடத்தில் நேரில் பார்க்கக் கூடிய விஷயங்களையே கற்பிக்கவேண்டும். ஏனெனில் இயற்கைப் பாடத்தைக் கற்கும்போது இயற்கைப்பொருளை நேரில் ஆராய்ந்து பார்த்து அவற்றின் உண்மைகளை யறிதல்வேண்டும். அப்படி யல்லாமல் கண்ணால் பார்க்கமுடியாத பொருள்களை இயற்கைப் பாடத்தில் சேர்த்துக் கற்பித்தல் தவறு. ஆனால் அத்தகைய விஷயங்களை சிறுவர் ஏப்பொழுது அல்லது எப்படி யறிவது என்றால் அவைகளை இயற்கைப் பாடத்தில் சேர்க்காமல் வாசக பாடத்திலாவது மற்றப் பாடங்களிலாவது சேர்த்துக்கொள்ளவும்.

இயற்கைப் பாடத்தில் இயற்கைப் பொருள்களைப் பரிகூலிக்க வேண்டுமே யொழிய அவைபோல் செய்த (களிமண்) மாதிரிகளையும் சித்திரங்களையும் உபயோகித்தல் கூடாது. வாஸ்தவமான பொருளிருக்க மாதிரிகளும் சித்திரங்களும் எதற்கு? வாஸ்தவமான பொருள்களைப்போல் அவ்வளவு தெளிவாய் சித்திரங்களும் மாதிரிகளும் விஷயங்களைத் தெரிவிக்கமாட்டா என்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம்.

ஆயினும் சிற்சில பொருள்கள் கற்பிக்கும் காலத்திற்கு ஏற்க அகப்படாமல் போவதால் அவைகளைப்பற்றிக் கற்பிக்கும்போது மேற்கூறிய போலி யுருவங்களும் சித்திரங்களும் பயன்படுமே யென்பர் சிலர். அவர்க்குப் பின்வருமாறு பதிலளிப்போம். இயற்கைப் பாடமென்ற பெயரே யொழிய பொருட் பாடமென்ற பெயரில்லை. பொருட்பாடமென்றிருந்தால் நம்மிஷ்டப்படி மாமரத்தைப்பற்றி கார்த்திகை மாதத்திலும், மழையைப்பற்றிக் கோடை காலத்திலும் காற்றைப்பற்றி தை மாதத்திலும் கற்பிக்கலாம். இயற்கைப் பாடமென்றதினால் இயற்கை யனுசரித்துப் பாடம் கற்பிக்கவேண்டுமென்பது பெறப்பட்டது. ஆகையால் எவ் விஷயத்தைக் கற்பிக்கவேண்டுமென்று எண்ணினாலும் அவ் விஷயம் கற்பிக்கும் காலத்துக்கும் இடத்துக்கும் பொருந்தினதா என்று அறிந்து அதற்குத் தக்கவாறு கற்பிக்கவேண்டும். நாம் இயற்கைக்காக காத்திருக்கவேண்டும்.

இயற்கைப் பாடத்தின் நோக்கம் பிள்ளைகளின் உற்று நோக்கும் சக்தியை விருத்திசெய்து தாங்களே பொருளியல்பை அறிந்துகொள்ளத் தூண்டவேண்டியது. அப்படியின்றி உபாத்தியாயரே எல்லா விஷயங்களையும் சொல்லிவிடக் கூடாது. பொருட் பாடத்தில் அநேக விஷயங்கள் சொல்லப்படவேண்டும். ஆனால் இதில் அப்படியல்ல. இயற்கைப் பிரமாணங்களை நேரில் கண்டு ஆராய்ந்து அறியவேண்டும் என்பது இயற்கைப் பாடத்தின் முக்கிய கொள்கை. அவ்விதம் அநேகமாய்க் கற்பிக்க முடியாததான இதுகாறும் தனிப்பாடமாகத் தனி நேரங்களில் கற்பிக்கப்பட்டு வந்த பொருட்பாடம் என்பது வாசகபாடத்திலும் பூகோள பாடத்திலும் நன்றாய்க் கற்பிக்கப்படலாம் என்று வியக்தமாய் பாடப் பட்டியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

சம்பந்த போதனைமுறையைக் கையாளுபவர் இயற்கைப் பாடத்தை மற்றப் பாடங்களோடு சம்பந்தப்படுத்திக் காட்டலாமென்கிறார். ஆனால், அவர் ஒவ்வொரு பாடத்திலும் படிப்படியாக சம்மந்தப்பட்டாலன்றி அப் பாடத்தில் தேர்ச்சி உண்டாவதில்லை என்பதைக் கவனித்தவரல்லர்.

இவ் வியற்கைப் பாடத்தில் எந்தப் பாகத்தை வேண்டுமாயினும் கற்பிக்கலாம். பொதுவில் கூறுமிடத்து நமது தேசத்துக் கேற்றவை தாவர வர்க்கமும் பூமியின் தன்மையுமேயாம்.

பிராணி வர்க்கத்தில் சிறிதளவே கற்பிக்கலாம். பிராணி ஹிம்சை செய்வதும் பூச்சிப் புழுக்களைப் பிடிப்பதும் முட்டை தேடுவதும் முதலியவை யெல்லாம் நமது தேசத்துக்குச் சிறிதும் ஏற்றவை யல்ல. நமது தேசத்து ஜனங்கள் சிறிதும் சம்மதியார். தாவர வர்க்கத்தில் அந்தந்த இடத்துக் கேற்றவைகள், அவசியம் அறியவேண்டியவைகள் ஆகிய இவற்றினுடைய தன்மைகளை அறியலாம். அவைகளில் வேண்டியவற்றை கூடியவரையில் பள்ளிக்கூடத்துத் தோட்டத்தில் பயிரிடலாம். பூமியின் தன்மையில் ஒருபாகம் பூகோள சம்பந்தமானது. அதையும் இப்பாடமாகக் கற்பிக்கலாம். "அதனால் (இயற்கைப் பாடத்தின்) ஒவ்வொரு பாகத்திலு முள்ள பாடங்களில் ஒவ்வொன்றுக்கும் புத்தி பூர்வகமான சம்பந்தம் இருக்கவேண்டியது அவசியம்" எல்லாரும் அறியவேண்டியது. இதைப்பற்றி இன்னொருமுறை கூறுவோம்.

CIVICS

அரசியல்

ரெவினியு டிபார்ட்மென்ட்டும் அதற்கு ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளின் வேலையும்.

(சுந்தரம் தன் தகப்பனரை கேட்கிறான்)

சுந்தரம் — அப்பா யாரோ ஒருவன் தடியை வைத்துக்கொண்டு தெருவில் நின்று கூப்பிடுகிறான், யார் அவன்?

தகப்பன் — அவன் கிராமாதிகாரியிட மிருக்கும் தலையாரி.

சுந்தரம் — தலையாரியா! ஏன் கூப்பிடுகிறான்

தகப்பன் — நாம் சர்க்காருக்கு வரி செலுத்த வேண்டும் அதற்காகக் கூப்பிடுகிறான்.

சுந்தரம் — வரியா! நாம் வரி என் செலுத்தவேண்டும்? செலுத்தாவிட்டால் என்ன ?

தகப்பன் — நிலத்திற்குத் தீர்வை செலுத்தவேண்டும். செலுத்தாவிட்டால் சொத்தை ஜப்தி செய்வார்கள்; சொத்தில்லாதபட்சத்தில் நிலத்தை ஏலம்போட்டு விடுவார்கள்.

சுந்தரம் — நாம் தீர்வை கட்டவேண்டுமென்று எப்படித் தெரியும்?

தகப்பன் — கணக்கப் பிள்ளையிடம் ஒவ்வொரு பட்டாதாரரும் செலுத்த வேண்டிய தீர்வை ஏற்பட்டிருக்கும். அந்தக் கணக்கை மணியக்காரரிடமாவது, கிராமாதிகாரியிடமாவது கணக்கப்பிள்ளை கொடுப்பான். அதை வைத்து கிராமாதிகாரிகள் வாங்கிக்கொள்வார்கள்.

சுந்தரம் — எப்படிப்பட்ட சொத்தை ஜப்திசெய்யலாம்?

தகப்பன் — அசையும் பொருளையாவது அசையாப் பொருளையாவது ஜப்தி செய்யலாம். மாடு, மாகூல் அப்படிப்பட்டவைகளை ஜப்தி செய்வார்கள்.

சுந்தரம் — ஜப்தி செய்ய யாருக்கு அதிகாரமுண்டு? எப்படி?

தகப்பன் — தாசில்தாரரால் டிமாண்டு பிறக்கும்; அந்த டிமாண்டைக்கொண்டு கிராமாதிகாரி சொத்தை ஜப்தி செய்யலாம்.

சுந்தரம் — கிராமாதிகாரி வேலை என்ன ?

தகப்பன் — சர்க்கார் தீர்வைப் பணங்களை வசூல்செய்து கஜானாவுக்கு அனுப்புதல். நிலங்களுக்குத் தண்ணீர் சரிவர பாகித்து விடுதற்கு நீராணிக்காரனை ஏற்பாடு செய்தல். டிமார்கேஷன் கற்கள் சரியா யிருக்கின்றனவா என்று பார்த்தல். யாராவது கண்டெடுத்த பொக்கிஷத்தைக் குறித்து தெரிந்தால்ரிபோர்ட்டு செய்தல். லோகல்பண்டு, யூனியன் இவைகளி லிருக்கும் வீடுகளுக்கு வரிவசூல் செய்ய ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளுக்கு உதவிசெய்தல். லோகல்பண்டு விஷயமாய் நிலவரி வசூல் செய்தல். பவுண்டுப் பட்டிகளில் கால்நடைகள் ஏதாவது அடைப்பட்டிருந்தால் அவற்றிற்கு அபராதம் வசூல் செய்தல். இறந்தவர்கள் பிறந்தவர்கள் கணக்கு எழுதி வைத்தல். சர்க்கார் மரங்களை பார்த்துக்கொள்ளுதல். தபால்காரன் தபால் பெட்டி வைக்கப்பட்ட இடத்திற்கு சரியாய் வருகிறானா என்று கவனித்தல். இவை முதலியவைகள் கிராமாதிகாரியின் கடமை.

சுந்தரம் — கிராமாதிகாரியின் வேலை தெரிந்துகொண்டேன். அவருக்கு மேலதிகாரி யார்?

தகப்பன் — முன்சொன்ன கிராமாதிகாரி கணக்குப்பிள்ளை அவர்களுக்கு மேலதிகாரி ரெவினியு இனிஸ்பெக்டர். ரெவினியு விஷயமாய் ஒரு தாலுக்காவை சில பிர்க்கா (Firka) வாக பிரித்து இவரை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

இவருடைய வேலைகள்.

(1) தீர்வை, வரி சம்பந்தமான கணக்குகளைத் தணிக்கை செய்தல்.

(2) மாகூல், எல்லைக்கற்கள் இவைகளை கவனித்தல். எல்லைக் கற்கள் சரியான இடத்தில் இல்லாத பக்ஷத்தில் அதை சரியான இடத்தில் புதுப்பித்தல்.

(3) அஜ்மாஷ் செய்தல் அதாவது சாகுபடி நிலங்கள் பயிரின் தன்மைகள் பரிசிலனை செய்தல்.

(4) தர்காஸ்த்து, பட்டாமாற்றல், வஜா, நிலராஜிநாமா முதலிய சம்பந்தமானவை இவர் பார்வையிட்டு தாசில்தாருக்கு அனுப்பவேண்டும்.

சுந்தரம் — இவர் வேலைகளைத் தெரிந்துக்கொண்டேன்; அவருக்கு மேலதிகாரி யார்? அவர் என்ன செய்யவேண்டும்?

தகப்பன்—இவருக்கு மேலதிகாரி தாசில்தார், டெப்டி தாசில்தார்.

தாசில்தார் ரெவினியு சம்பந்தமாய் ஒரு தாலுக்காவிற்கு அதிகாரி.

பெரிய தாலுக்காவா யிருந்தால் இரண்டாகப் பிரித்து ஒரு சிறிய பாகத்திற்கு டெப்டி தாசில்தார் இருப்பார்.

இவர்களுடைய அலுவல்கள்.

தங்களுடைய தாலுக்காவில் சேர்ந்த கிராமங்களைப் பார்வையிட வேண்டும்.

இனம், ஜமீன் முதலிய கிராமங்களை பார்வை யிடுதல் கணக்கர் கிராமாதிகாரி இவர்கள் கணக்குகளை தணிக்கைசெய்தல்.

தகார் உள்ள நிலங்களின் விஷயங்களை பார்வையிட்டு தம்முடைய அபிப்பிராயத்தை மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்தல்.

கிராமத்திலுள்ள தனவந்தர்களுக்கு வ்ரும்படி வரி ஏற்படுத்தல். குளம், சாவடி முதலானவை இல்லாத கிராமங்களுக்கு ஏற்படுத்தி ஜனங்களுக்குச் சௌக்கியத்தை உண்டு பண்ணுதல்.

அவர் கஜானை உள்ள இடங்களை பரிசோதித்தல் தன்னுடைய தாலுக்காவில் வசூலாகும் பணங்கள் கஜானைவுக்கு சரிவர வருகிறதா என்று பார்வையிடவேண்டும். இதற்காக ஹெட் அக்கவுண்ட்டென்ட் என்ற உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். அவர் சரிவர வேலை செய்வதைப் பார்த்தல்.

சுந்தரம் — சொல்லச் சொல்ல ஒவ்வொருவர் வேலையும் தெரிகிறது. தயவுசெய்து இவருக்கு அடுத்த மேலதிகாரிகள் வேலையும் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தகப்பன் — சொல்லுகிறேன் கவனமாய்க் கேள். முன் சொன்னவர்களுக்கெல்லாம் அடுத்த மேலதிகாரிகள் டிவிஷனல் ஆபீசர்கள்.

டிப்டி கலெக்ட்டர்
அசிஸ்டென்ட் கலெக்ட்டர்
சப் கலெக்ட்டர் } இவர்கள் தாம் டிவிஷனல் ஆபீஸர்கள்.

இவர்களுக்குத் தங்கள் டிவிஷன்களில் கலெக்ட்டருக்குள்ள அதிகாரங்கள் உண்டு. இவர்களின் தொழில்களாவன —

தங்கள் டிவிஷன்களிலுள்ள கணக்குகளைப் பார்த்து வருஷாந்தக் கணக்கு முடித்தல்.

ஜலப்பாய்ச்சல், புலங்களின் எல்லைக்கற்கள், பட்டாகொடுத்தல் முதலிபவற்றில் சச்சரவு உண்டானால் அவைகளைப் பைசல் செய்தல்.

வெள்ளத்தினாலாவது மழையினாலாவது விளைவுக்கு நஷ்டம் உண்டான நிலங்களுக்கு வஜாகொடுத்தல் முதலியவை இவர்களுடைய வேலைகளாகும்.

இவர்களுக்கு அடுத்த மேலதிகாரி ஜில்லா கலெக்ட்டர். இவர் ஒரு ஜில்லா முழுவதும் தம் அதிகாரம் செலுத்தலாம். நில விஷயங்கள் அதாவது தீர்வை வசூலும் கவனிப்பார்.

இவைகள் தவிர ஒரு ஜில்லாவில் நடக்கும் வேலைகள் எல்லாம் கவனிக்கவேண்டியவர் இவரே ஆகையால் இவர் ஒரு ஜில்லாவின் கார்யநிர்வாகி யாவர்.

இவருக்கு அடுத்தது —

ரெவினியுபோர்ட் என்ற சபை. இந்தியா முழுதும் ராஜதானியாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ராஜதானிக்கும் கவர்னர் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த சபைக்கு ரெவினியு விஷயமாய் சர்வாதிகாரம் உண்டு. விசேஷமாய் ரெவினியு போர்டாரின் அபிப்பிராயத்தை அனுசரித்தே லோகல் கவர்ன்மெண்டார் முடிவு செய்வார்கள். இதில் 4 மெம்பர்கள் உண்டு. இதில் 2 பேர் நிலவரி விஷயங்களைக் கவனிப்பார். ஒரு மெம்பர் சர்வே செட்டில்மெண்டு கவனிப்பார்.

இன்னொருவர் சில்லரைவரி, உப்பு, சாராயம் முதலியவைகளின் வரிகளை கவனிப்பார். இதில் கலெக்ட்டர் வேலையைப் பார்த்துத் தேர்ந்த அனுபோக முள்ளவர்களைத் தான் ரெவினியுபோர்டு மெம்பராக நியமிப்பார்கள்.

சுந்தரம்! கவனித்தாயா? நமது காருண்ய சுவர்ன்மெண்டார் இம்மாதிரி இன்னும் எத்தனையோ டிபார்ட்டுமெண்டுகளை ஏற்படுத்தி அவற்றின் மூலமாய் ஜனங்களிடம் வரி என்றும், தீர்வை என்றும் வசூல்செய்து ஜனங்களுக்கு நன்மையுண்டுபண்ணுகிறார்கள்.

L. PADMANABHA AIYER.
Asst. Master, Board School,
Royakotta, Salem Dt.

SPACE WORK
கேஷத்திர கணிதம்

நீளம் அகலம் கனம் (அல்லது பருமன்) இம்மூன்று அளவுகள் உள்ளவற்றை கன வடிவமுள்ளவை யென்று சொல்லுவோம். பெட்டி, புஸ்தகம், செங்கல், கறுப்புப் பலகை முதலியவை கன வடிவமுள்ளவை. நீளம் அகலம் கனம் உள்ள உருவங்களை நாம் நமது கைகளினால் ஸ்பரிசிக்கலாம். கைகளினால் ஸ்பரிசிக்கும் பாகம் அவ் வுருவங்களின் மேற் பாகம். நாம் நமது கண்ணால் பார்ப்பதும் அவைகளின் மேற்பாகங்களே. சில உருவங்களுக்கு ஒரே பக்கமும் சிலவற்றிற்கு 2 அல்லது 3, 4, 5, 6 பக்கங்களும் உண்டு.

ஒரு பந்துக்கு ஒரே மேற்பக்கம் உண்டு. இப்பக்கம் வளைவானது. கடைகளில் கட்டும் சர்க்கரைப் பொட்டலம் 2 மேற்பக்கங்களை யுடையது. இதற்கு ஒருவளைவான பக்கமும் ஒரு தட்டையான பக்கமும் உண்டு. ஒரு செங்கட்டைக்கு 3 பக்கங்கள் உண்டு. இதில் ஒரு பக்கம் வளைவாயும் இரண்டு பக்கங்கள் தட்டையாயும் இருக்கின்றன. பெட்டி போன்ற வஸ்துவுக்கு 6 பக்கங்கள் உண்டு. இவைகள் யாவும் தட்டையாய் இருக்கின்றன. நாம் பார்வையிடும் பக்கத்துக்குத்தான் பரப்பு என்று பெயர்.

பரப்பு — சமப்பரப்பு என்றும் வளைவுப்பரப்பு என்றும் இருவகைப்படும்.

மேஜையின் மேற் பாகம் அல்லது சுவரின் மேற் புறம் சமமாயிருப்பதினால் இதைச் சமப்பரப்பு என்று சொல்லலாம். பூமி சமனாக இருந்தால் அதையும் சமப் பரப்பு என்று சொல்லலாம். ஒரு பெட்டிக்கு ஆறு சமப்பரப்புகள் உண்டு. ஒரு பெட்டியின் மேல்மூடி வளைவாயிருந்தால் அதற்கு 5 சமப்பரப்புகளும் ஒரு வளைவுப் பரப்பும் உண்டு.

பரப்பு என்பது கனமில்லாமல் நீளமும் அகலமும் மாத்திரம் உள்ளது.

எந்தப் பரப்பில் எந்த இரண்டு புள்ளிகளையாயினும் தீர்மானித்து அவற்றிற்கு இடையில் ஒரு நேர்கோட்டை இழுக்கிறபோது அந்த நேர்கோடு முழுவதும் அதே பரப்பில் பொருந்தியிருக்குமானால் அந்தப் பரப்புக்குச் சமப்பரப்பு என்று பெயர்.

எந்தப் பரப்பில் இரண்டு புள்ளிகளைத் தீர்மானித்து அவற்றை ஒரு நேர்கோட்டால் கூட்டும்போது அந்த நேர்கோடு அப்பரப்பில் பொருந்தாமல் அவ் வுருவத்தை ஊடுருவச் செல்லுகிறதோ அப்படிப்பட்ட பரப்பு வளைவுப் பரப்பு என்னப்படும்.

இரண்டு பரப்புகள் ஒன்றோடொன்று ஓரத்தில் சேர்ந்திருக்கின்றன. ஒரு சதுரக் கட்டையில் உள்ள பரப்புகளும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன. இப்படிச் சேர்ந்திருக்கும் இடம் கோடு. இந்தக் கோடுகள் ஒன்றோடொன்று புள்ளிகளில் சந்திக்கின்றன.

ஒரு கூரான ஊசியின் முனையினால் ஒரு குத்தை யுண்டாக்குவது புள்ளி என்று சொல்லக்கூடும். புள்ளியாவது குத்து. அதற்குப் பருமனும் இல்லை பரிமாணமும் இல்லை. நிலை உண்டு. புள்ளிக்குப் பருமனும் பரிமாணமும் இல்லாமையால் அதைப் பாகிக்க முடியாது. ஆனாலும் ஒரு வரி வடிவத்தில் புள்ளி குறிக்கும்போது நமது கண்களுக்கு புலப்படத் தக்கின உருவமாகவே குறிக்கவேண்டியிருக்கிறது.

ஒரு காகிதத்தின்மேல் ஒரு கூர்மையான பென்ஸிலைக் கொண்டு ஒரு புள்ளிசெய்து சிறிது தூரத்தில் அதேமாதிரியான இன்னொரு புள்ளியைச் செய்து அந்த இரண்டு புள்ளிகளுக்கும் நடுவில்

அதிக நெருக்கமாய் புள்ளிகளைச் செய்து விடுவோமானால் அதுவே ஒரு கோடாக அமையும்.

கோடு என்பது பல புள்ளிகளால் ஆனது. கோடு கனமும் அகலமும் இல்லாத நீளம் மாத்திரம் உடையது.

ஒரு கூர்மையான பென்ஸிலைக்கொண்டு ஒரு காகிதத்தின் மேல் கூடியமட்டில் மெல்லியதாய் கண்ணுக்குப் புலப்படும்படியாக இழுப்பதே கோடாகும்.

இரண்டு கோடுகள் ஒன்றுகக் கூடும் இடம் புள்ளியாகும். புள்ளிகளை ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுத்தும்பொருட்டு ஒவ்வொரு புள்ளிக்கும் ஓரோர் எழுத்தால் பெயர் அமைக்கலாம். கோடுகளுக்கும் எழுத்துக்களைக் கொண்டு பெயர் இடலாம்.

ஒரு கோட்டின் முனையைப் புள்ளி என்று சொல்லலாம்.

ஓர் உறுதியான நூல் துண்டை இழுத்துப் பிடித்தால் அந்நூல் நேர் கோடாயிருக்கிறது. அந்நூலைக் கொஞ்சம் தளர்த்தி விட்டால் அது வளைவுக் கோட்டிற்கு உதாரணமாகிறது.

ஒரு பலகையின்மேலாவது காகிதத்தின்மேலாவது ஒரு கோடு வரைவோம். இந்தக் கோடு நேர்க் கோடா அல்லது வளைவுக்கோடா என்று பரீக்ஷித்தறியவேண்டுமானால் ஒரு மெல்லிய உறுதியான நூலைக்கொண்டு அக் கோட்டின்மேல் இழுத்துப் பிடித்தால் அந்நூல் முழுமையும் அக் கோட்டின்மேல் படிந்திருந்தால் அதை நேர் கோடென்றும், படியாமல் இருந்தால் அதை வளை கோடென்றும் சொல்லவேண்டும்.

உனக்கு எதிராக சிறிது தூரத்தில் ஒரு பொருளைப்பார். அந்தப் பொருளினிடத்துக்கு மிகக் குறைந்த தூரத்தில் நீ போய் சேர வேண்டுமானால் நீ எவ்வழியாய்ப் போகிறாயோ அவ்வழியே நேர்வழி அல்லது நேர்கோட்டின்மேல் போகும் வழியாகும்.

ஒரு நேர் கோட்டின் குறைந்த நீளம் இரண்டு புள்ளிகளை ஒன்று சேர்ப்பதே.

இரண்டு நேர்கோடுகள் ஓர் இடத்தை அதாவது ஓர் உருவத்தை உண்டாக்கமாட்டா.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர் கோடுகளினால் ஓர் உருவத்தை யுண்டாக்கலாம்.

ஒரு வளைவுக் கோட்டினால் ஓர் இடத்தை அல்லது ஓர் உருவத்தை உண்டாக்க முடியும்.

இரண்டு சமதூர நேர் கோடுகள் எவ்வளவு தூரம் இழுக்கப் பட்டாலும் ஒன்றோடொன்று சேரா.

ஒருவளைவுக் கோட்டின் இரண்டு முனைகளையும் ஒன்றோடொன்று சேர்க்க முடியும்.

இரண்டு வளை கோடுகளையும் ஒன்றோடொன்று சேர்க்க முடியும்.

நேர் கோடாவது அதன் முனைகளாகிய இரண்டு புள்ளிகளுக்கும் இடையில் வாய்ந்திருக்கும் குறுகிய நேர்வழியாகும்.

வளை கோடாவது அதன் முனைகளாகிய இரண்டு புள்ளிகளுக்கும் இடையில் உள்ள நேரற்ற வழியாகும்.

வட்டம்

ஒரு செக்கில் கட்டி யிருக்கும் இரண்டு எருதுகள் போகும் பாதை ஒரே மைய நிலயத்தையுடைய இரண்டு வட்டங்களின் சுற்றளவுக் கோடாய் இருக்கிறது.

ஓர் இடத்தில் ஓர் ஆணியை அடித்து அதில் ஒரு கயிறு கட்டி அக் கயிற்றை ஒருவன் இழுத்துப் பிடித்துக் கொண்டே செல்வானானால் அவன் போகும் பாதை சுற்றளவுக் கோட்டிற்குச் சமானமாகிறது. சுற்றளவுக் கோட்டிற்குள் இருக்கும் பாகம் வட்டமாகத் தெரிகிறது. ஆணியடித்த இடம் வட்ட மைய நிலமாகிறது.

வட்டமாவது என்ன ?

சுற்றளவுக் கோட்டின் ஒவ்வொரு குத்துக்கும் அந்த உருவத்துக் குள்ளிருக்கும் ஒரே ஒரு குத்திலிருந்து இழுக்கப்படும் நேர் கோடுகளெல்லாம் ஒன்றுக் கொன்று சரியாய் இருக்கும்படி வரைந்த ஒரு வளைவு கோட்டினால் சூழப்பட்டிருக்கும் சமப்பரப்பு வட்டம் என்னப்படும்.

வட்ட மைய நிலையாவது என்ன ?

சுற்றளவுக் கோட்டினுள் எந்த ஒரே புள்ளியிலிருந்து சுற்றளவுக் கோட்டிற்கு இழுக்கப்படும் நேர் கோடுக ளெல்லாம்

ஒன்றுக்கொன்று அளவில் சரியா யிருக்கிறதோ அந்தப் புள்ளிக்கு வட்ட மையநிலை என்று பெயர்.

விட்டம் அல்லது குறுக்களவாவது என்ன ?

மைய நிலையின் வழியாக இரு புறத்திலும் சுற்றளவு கோட்டில் முடிவுபெறுகிறஒரு நேர்கோட்டிற்கு விட்டம் என்று பெயர்.

அரை விட்டமாவது என்ன ?

ஒரு வட்டத்தின் மைய நிலையிலிருந்து சுற்றளவுக் கோடு வரையிலும் உள்ள தூரத்தை அளவிடும் நேர் கோட்டிற்கு அரை விட்டம் என்று பெயர்.

அரை வட்டமாவது என்ன ?

சுற்றளவுக் கோட்டின் அரைப் பங்காலும் அதன் முனைகளைக் கூட்டுகிற விட்டத்தாலும் அமைந்த பாதி வட்டம் அரை வட்டம் என்னப்படும்.

கால் வட்டமாவது என்ன ?

சுற்றளவுக் கோட்டின் நான்கின் ஒரு பங்கினாலும் மைய நிலையோடு அந்தக் காற் சுற்றளவுக் கோட்டின் முனைகளைச் சேர்க்கும் இரண்டு அரை விட்டங்களினாலும் சூழப்பட்டிருக்கும் உருவம் கால் வட்டம் என்னப் படும்.

வட்டம் என்பது சுற்றளவுக் கோட்டினால் சூழப்பட்ட உட்பரப்பு முழுவதையும் குறிக்கும்.

வட்டநாண் என்பது எது ?

சுற்றளவுக் கோட்டினுடன் சுற்றளவின் எதாவது இரண்டு புள்ளிகளைச் சேர்க்கும் நேர் கோட்டிற்கு வட்டநாண் என்று பெயர்.

வட்ட வில் என்பது எது ?

ஒரு சுற்றளவுக் கோட்டின் எந்தப் பாகத்துக்காவது வட்ட வில் என்று பெயர்.

K. V. SUBRAMHANYA IYAR,
Headmaster, Mission School,
Pereyankuppam.

SCHOOL DISCIPLINE

பாடசாலைகளின் ஒழுங்கைப் பற்றிய சில விதிகள்.

1. நல்லொழுக்கம் —தற்காலத்துப் படிப்பினால் நல்லொழுக்கம் பிடிபடுகிறதில்லை யென்று சிலர் கூறுவதாகும். ஏனெனில் பிள்ளைகள் பெரியோரிடத்தும் உபாத்தியாய ரிடத்தும் மரியாதை காட்டுகிறதில்லை என்பதாம். நன்றாய் ஆராயுங்கால் நமது பாடசாலைகளிலும் நல்லொழுக்க மென்பது குறைந்து கொண்டே வருகிறது (உ-ம்) 1. ஒரு பையன் அடுத்த பையனிட மிருந்து புஸ்தகம், பென்சல் வாங்கவேண்டி யிருந்தால் மரியாதையாய்க் கேட்டு வாங்கிக் கொள்ளாமல் அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொள்ளுகிறான். 2. இடம் மாற்றிக் கொள்ளும் பொழுதும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து இடித்துக் கொள்ளுகிறார்கள். 3. பேசும் போதும் கெட்ட வார்த்தைகளையும் அவமானமான சொற்களையும் பேசிக் கொள்ளுகிறார்கள். 4. யாராவது பாடசாலையைப் பார்க்க வந்தால் அவர்களைக் கண்டதும் பல்லைக் காட்டிப் பரிகாசம் செய்கிறார்கள். இவற்றை யெல்லாம் உபாத்தியாயராய் இருக்கப்பட்டவர்கள் அப்போதைக்கப்போது கவனித்துத் திருத்தாவிட்டால் பிள்ளைகளுக்கு கெட்ட வழக்கம் பிடிபட்டு பெரியோரை மணிக்க வேண்டுமென்பதை மறந்து விடுகிறார்கள்.

அவர்களை நன்னெறியில் நடக்கும்படி செய்வது வருத்த மெனினும் தம்மாலியன்ற அளவு கஷ்டப்பட்டு நற்போதனைகளைச் செய்து திருத்த வேண்டும். சன்மார்க்கம் புஸ்தகப் படிப்பினால் பிடிபடாது. வழக்கத்தினால் சிறுகச் சிறுக அனுசரிக்கும்படி செய்ய வேண்டும். 'நெறியால் நல்லவனென்றறி' என்று பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதை எல்லாம் உபாத்தியாயர்களும் ஞாபகத்தில் வைத்து அதன்படி நடத்துவார்களாக —

2. பரிசுத்தம் — இது நல்லொழுக்கத்தின் அம்சம். ஆதல் பற்றி அதனைச் சிறிது இவ்விடத்தில் எடுத்துச் சொல்வோம். உடலும் உடையும் சுத்தமாய் இருத்தல் வேண்டும். நமது இந்தியா தேச முழுவதும் உஷ்ணப் பிரதேசமாதலால் அசுத்தமாயிருந்தால் அநேக வியாதிகளுக்குக் காரணமாகும். அவற்றுள் சில தொடரக் கூடியதாயும் வெறுக்கக் கூடியதாயு மிருக்கும். ஆனது பற்றி

பிள்ளைகளைத் தினந்தோறும் அழுக்கு வஸ்திரங்களை துவைத்துக் கட்டிக் கொள்ளும்படி செய்ய வேண்டும். 'கந்தை யானாலும் கசக்கிக் கட்டுக் கூழானாலும் குளித்துக் குடி' என்பார்கள் பெரியோர். எவ்வளவு ஏழையாயினும் கந்தைத் துணிகளையும் ஒவ்வாத வஸ்திரங்களையும் உபயோகிக்க விடக்கூடாது. 'ஆடை ஆடவரை அறிவிக்கும்' என்றிருத்தலால் உபாத்தியாயர் தான் முதலில் சுத்தமா யிருந்து காட்டி பிறகு தம் மாணக்கருக்கு அவ்வாறிருக்க கற்பிக்க வேண்டும்.

3. ஒழுங்காய் வருந் தன்மை — ஒரு உபாத்தியாயர் பாடசாலையைத் துவக்குவதும் முடிப்பதும் குறிப்பிட்ட காலத்திலேயே செய்து விடுவதுந் தவிற ஆஜர்ப் பட்டியை தினந்தோறும் சரி பார்க்க வேண்டும். இவற்றைச் செய்யப் பிசகினால் பிள்ளைகள் கிரமந்தப்பி நடக்க இடமுண்டாகும். உபாத்தியாயர் தாம் சரியானபடி பள்ளிக்கூடம் வந்து போய்க் கொண்டிருப்பதுடன் வராத பையன்களையும் நேரந் தப்பி வருபவர்களையும் தகுந்தபடி நற்போதனைகளைச் செய்து சீர்திருத்த வேண்டும்.

4. வேலையில் அபிமானம் — பிள்ளைகள் என்றும் யோக்கியமும் சரியான காரியங்களையே செய்யச் சொல்லித் தூண்ட வேண்டும். இவ்வாறு செய்யின் அவர்களே அவற்றின் நன்மைகளைத் தெரிந்து நடப்பார்கள். ஒரு வேலையைச் செய்வதில் பல துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைப் பாராமலும் தன் சுகத்தைப் பார்க்காமலும் அதைச் செய்து முடிக்க ஆவலாய் இருக்க வேண்டும். இக் கருத்திற் கிசைய —

"மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினர்" என்று குமரகுருபர ஸ்வாமிகள் சொல்லியுளார். வேலையைப் பிரதானமாகக் கொண்டு முடித்து பேர் பெற்றவர்களின் சரித்திரத்தை பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டி அவ்வாறு வேலையைச் சரியாய் செய்யப் பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்.

K. SUBRAHMANIAM,
Assistant, Board School,
Fort Namakal, Trichy Dt.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1914ஆம் ஏப்ரல்மீ | மாதம் 11

TAMIL ALPHABET AND SPELLING

தமிழ் நெடுங் கணக்கும் எழுத்துக் கூட்டலும்

தமிழ்ப் பாஷையின் உச்சரிப்புக்கு வேண்டிய அளவு எழுத்துக்கள் 247 என்பதை முன்பு கூறினேம். பின்னர் தமிழ்ச் சொற்களோடு சம்ஸ்கிருதச் சொற்களும் கலந்து உறவாடலாயின. இந்த உறவு இந்தக் காலத்தில்தான் முதன் முதலாக ஏற்பட்டதென்று திட்டமாகச் சொல்ல இயலாது. சம்ஸ்கிருத மொழிக் கலப்பு தமிழுக்கு உண்டான பிறகு, தமிழ்ப் புலவர்களில் சம்ஸ்கிருதமும் பயில்வாராயினர். அப் புலவர்கள் புதிதாகக் கற்ற அப் பாஷையில் ஈடுபட்டு, அந்தப் பாஷையில் உணர்ச்சி யுண்டாவதே சிறப்பு என்று எண்ணுவா ராயினர். அப்போது புராண காலமும் புகுவதாயிற்று. தல புராணங்கள் புற்றீசல் போல் புறப்படுவன வாயின. எதுவும் சம்ஸ்கிருதத்திலிருந்து வெளிவந்தது என்று சொல்லுவதே சிறப்பென்று தமிழ்ப் புலவர்கள்

எண்ணினார்கள். புதுவதாக ஏதேனும் ஒரு கதை புனைந்தாலும் அதற்கு சம்ஸ்கிருதத்தில் ஆதாரந்தேடுவா ராயினர். அதுவுமன்றி மத சம்பந்தமான நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டன அதனால் நன்னூலார் முதலிய இலக்கணிகள் ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்னும் ஐந்து வடமொழி எழுத்துக்களின் சேர்க்கையை வற்புறுத்தி, அவை தமிழில் வரும்போது இவ்வாறு திரிந்து வரும் என்று விதி கூறினார்கள். பின்பு தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்கும் மத்தியஸ்தமாக 'கிரந்தம்' என்னும் ஒருவகை எழுத்து ஏற்படுவதாயிற்று. இது பெரும்பாலும் தமிழ் எழுத்தின் உருவத்தை ஒட்டியும் சம்ஸ்கிருத எழுத்தின் ஒலியை மேற்கொண்டும் இயல்வதாயிற்று. நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களுக்கு வியாக்கியானம் வகுத்த உரை யாசிரியர்கள் போக்கிற்கு கிரந்த எழுத்துக்கள் அனுகூலமாயின. தமிழும் சம்ஸ்கிருதமும் பயின்றவர்களுக்கே கிரந்தம் உபயோகமாகும். அத்தகைய புலமை ஏற்படுவது க்ஷ்டமாகலின் கிரந்த எழுத்தின் உபயோகம் குறைவதாயிற்று. இக்காலத்தில் சம்ஸ்கிருதம் பயில்வோர் இதனைச் சிறிது அனுசரிக்கின்றனர். சில சம்ஸ்கிருத நூல்களும் கிரந்த அக்ஷரத்தில் அச்சிடுகின்றனர். தமிழ் மட்டும் உணர்ந்த புலவர்களுக்கு கிரந்தாக்ஷரம் உபயோகப்படாது.

இது இவ்வாறிருக்க, இக்காலத்தே சிலர் சம்ஸ்கிருதம் முதலிய வேறு பாஷைச் சொற்களை எழுதும்போது, உச்சரிப்புக் கெடாமலிருக்க வேண்டுமென்று கருதி, தமிழ் முறைக்கு மாறுக எழுதத் தொடங்குகின்றனர். ஒரு பாஷையின் சொல் மற்றொரு பாஷைக்கு வரும்போது உச்சரிப்பில் மாறுபடுவது சாதாரணம். திருநெல்வேலி என்பது இங்கிலீஷில் வரும்போது டின்னவெல்லி என்று வருகிறது. இங்கிலீஷ்காரரேயன்றித் தமிழரும் இங்கிலீஷ் பேசும்போது டின்ன வெல்லி என்றே உச்சரிக்கின்றனர். தஞ்சாவூரை 'டாஞ்சூர்' என்றும், திருவண்ணாமலையை டின்னாமலி என்றும், திருக்கோணமலையை டிரிங்கோணமலி என்றும், கட்டுமரம் என்பதைக் கட்மரான் என்றும், பிளகு தண்ணீர் என்பதை மெல்குடன்னி என்றும் இன்னும் சொற்களின் சொரூபமே தெரியாமலும் வழங்குகின்றனர். இந்த ஒசை அந்தப் பாஷைக்கு உரியவரது ஒலியியல்பு பற்றி வந்ததேயன்றி எழுதுதற்கு வேண்டிய எழுத்துக்கள் இல்லாமையினால் அன்று. அது

போலவே ஆங்கிலத்தினின்றும் தமிழில் பல பதங்கள் வந்து மருவி வழங்குகின்றன. பட்டன் என்பது பத்தான் என்றும், பாட்டில் ஒடு என்பது வாட்டிலோடு என்றும், ஹாலண்டு கமலம் என்பது உலாந்த கமலம் என்றும் வழங்குகின்றன. இவையாவும் அந்தந்த பாஷைக்கு உரியவாறு ஒலியியல்பு பற்றி வருவன வன்றி பெரும்பாலும் வேண்டிய எழுத்துக்கள் இன்மையா லன்று. எழுத்துக்கள் இன்மையாலும் சிறுபான்மை இடர்ப்படும். பழனி என்பது அங்கிலத்தில் பலனி என்று வரும், கெஜட் (Gazette) கெஜட் என்று வரும். இந்த மாறுபாடுகளுக் கெல்லாம் நாம் புதிதாக எழுத்துக்களை ஏற்படுத்திக் கொள்வதா? இருக்கும் எழுத்துக்களைக் கொண்டே ஒருவாறு சரிப்படுத்திக் கொள்வதா? என்னும் விஷயத்தை இனி ஆராய்வோம். (தொடரும்)

பத்திராதிபர்.

MEN AND MANNERS

நாலு ஜனங்களின் நடவடிக்கை

1. அளவன்

திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் 'அளவன்' என்று ஒரு ஜாதி இருக்கின்றது. அந்த ஜாதியார் 'அளவர்கள்' அல்லது 'உப்பளவர்கள்' எனப்படுவார்கள். உப்பளங்களில் வேலைசெய்வதனால் அவர்களுக்கு அந்தப் பெயர் வந்தது. அவர்களுக்கு 'சித்திரவலியர்கள்' என்று மற்றொரு பெயரும் உண்டு. அவர்களுடைய தொழில் 'சித்திர'மாக (விசித்திரமாக) இருப்பதனால், அந்தப் பெயர் உண்டாயிற்று. உப்பளத்து வேலை திருவாங்கூராருக்குப் புதுமையாக இருந்ததென்பது இதனால் விளங்குகின்றது.

மூன்றூறு நானூறு வருஷங்களுக்கு முன்னே பாண்டிநாட்டிலிருந்து ஏழு குடும்பத்தார் உப்பளங்களில் வேலை செய்வதற்காகத் திருவாங்கூருக்குக் குடியேற்றப் பெற்றார்கள். அவர்களுடைய குடியேற்றத்தைப்பற்றித் திருவாங்கூரின் தென்பாகத்திலுள்ள தாமரைக்குளம், புத்தளம் முதலிய ஊர்களில் கல்வெட்டுக்கள் (சிலாசாஸனங்கள்) இருக்கின்றனவாம். அவைகளைப் பெயர்த்து எழுதிப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அளவர்கள் பேசுவது தமிழ் பாஷையே. பெண்கள் ருதுவாவதற்கு முன்னும், ருதுவான பின்னும் கலியாணம் செய்கிறார்கள். அவர்களுடைய கலியாணம் மூன்று நாள் கொண்டாடப் படுகின்றது. கலியாணப் பெண்ணுக்குப் பதினெரு பணம் முதல் நாறு பணம் வரையில் (1½ ரூ முதல் 14 ரூ. வரையில்) சீதனம் கொடுக்கிறார்கள். கலியாணம் கன்னிகையின் வீட்டிலாவது, மணவாளனது வீட்டிலாவது நடக்கலாம். ஒருவன் இரண்டு மூன்று மனைவிகளோடு வாழலாம். பல மனைவிகளுடைமை அவர்களுக்கு வழக்கமாக இருக்கின்றது. தக்க காரணங்களைக் காட்டி ஒருவன் தன் மனைவியை நீக்கிவிடலாம். அப்படி விவாகக்கட்டை விலக்கிக் கொள்வது அவர்களுக்கு வழக்கமே. கைம் பெண்கள் இஷ்டப் பட்டால் மறுபடியும் கலியாணம் செய்துகொள்ளலாம். தகுந்த காரணமில்லாமல் ஒருவன் மனைவியை விலக்கிவைப்பதானால், அவளுக்கு அவன் ஜீவனம்சம் கொடுக்கவேண்டும்.

அளவர்கள் மாம்ஸம் தின்பார்கள். கள் குடித்தல் அவர்களுள் அருமை. முற்காலத்தில் அவர்கள் சவங்களைப் புதைத்து வந்தார்கள்; இப்பொழுது சில வேளை எரிக்கிறார்கள். அவர்கள் உடம்பில் பச்சை குத்திக்கொள்வது வழக்கம். அவர்களுடைய குலதெய்வங்கள் சாஸ்தாவும், பத்திரகாளியுமாகும். அளவர் ஜாதியாரெல்லாரும் சிறந்த உழைப்பாளிகள். உப்பளவேலையில் அவர்களைவிடத் தேர்ந்தவர்கள் தென் இந்தியாவில் இல்லை. இந்த ஜாதியார் இப்பொழுது ஏறக்குறைய 600 பேர் இருக்கிறார்கள்; அவர்களுள் பெரும்பாலார் அகஸ்தீசுவரம் தாலுக்காவில் இருக்கிறார்கள்; மற்றவர்கள் எரணியல், கல்குளம், விலவன்கோடு, திருவாங்கூர் ஆகிய இந்தத் தாலுக்காக்களில் இருக்கிறார்கள்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

COUNT TOLSTOY AS A SCHOOL MASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

தண்டனை — PUNISHMENT

பள்ளிக்கூடங்களில் குற்றம் செய்யும் சிறுவர்களைத் தண்டிக்கும் முறை முற்றிலும் தவறென்று கௌன்ட் டால்ஸ்ட்டாய் எண்ணுகிறார். ஆயினும் குற்றம் செய்தவர்களைக் கண்டபோது உடனே அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று எண்ணும் வழக்கம் தொன்றுதொட்டு நம் மனத்தில் குடிகொண்டிருக்கிறதென்றும், ஆகையால் தாமும் தம்முடன் ஒத்துழைக்கும் உபாத்தியாயர்களும் அவ்வழக்கத்தினின்றும் தப்பினவர்கள் அல்ல வென்றும் ஒப்புக்கொள்ளுகிறார். அதனால், அவர்கள் தம் கொள்கையை மறந்து, இரண்டொரு முறை தண்டனையைப் பிரயோகித்ததாகவும், அதன் பயனைத் தம் கொள்கையே சரி யென்னும் தீர்மானத்துக்கு வரசேர்ந்ததென்றும் சொல்லுகிறார்.

அவர் அதற்கு ஓர் உதாரணம் கொடுக்கிறார். ஒரு நாள் அருமையான பொருள் ஒன்று தம் பள்ளிக்கூடத்தில் காணுமற் போய்விட்டது. அதன் பின் ஒவ்வொன்றாகப் பென்சில்களும் புஸ்தகங்களும் பிரதிதினமும் போக ஆரம்பித்தன. பிள்ளைகளைத் தனித்தனியே அழைத்து விசாரித்தார். ஒவ்வொரு பிள்ளையும் குற்றவாளியைப்போல் தட்டித் தடுமாறி விழித்தான். அப்படி ஒவ்வொருவனும் உளறி விழித்ததைக் காணும்போது அவன்தான் குற்றவாளி என்று எண்ணும்படி இருந்தது. மிகவும் சிறந்த குணமுள்ள சிறுவர்களும் இவ்வாறே விழித்தார்கள். அதனால் தம்மைத் தம் உபாத்தியாயர் சந்தேகிக்கிறார் என்ற எண்ணமே அவர்களை இவ்வாறு தடுமாறச் செய்தது என்று எண்ண வேண்டியிருந்தது. கடைசியாகக் குற்றவாளிகள் இன்னாரென்பது வெளிவந்தது. அடுத்த கிராமத்திலிருந்து வந்து படிக்கும் இரண்டு பிள்ளைகள் குற்றம் செய்தவர்களாக ஏற்பட்டார்கள். திருடின வஸ்துவை அவர்கள் ஒரு சிறு பெட்டியில் ஒளித்து வைத்திருந்தார்கள். உண்மை வெளிவந்ததும் பிள்ளைகள் எல்லோரும் அதிக சந்தோஷம் அடைந்தார்கள். தம்மீது ஏற்பட்ட சந்தேகம் நீங்கினதே அதற்குக் காரணம்.

குற்றவாளிகளை எவ்வாறு தண்டிப்பது என்னும் விஷயமாக உபாத்தியாயர்களும் டால்ஸ்ட்டாயும் கூடி யோசித்தார்கள். கடைசியாக அதியாயமான சந்தேகத்துக்கு உட்பட்டு வருந்தின பிள்ளைகளையே கேட்போம் என்னும் முடிவுக்கு வந்தார்கள். சில பிள்ளைகள் குற்றம் செய்தவர்களை ஜாட்டியினல் அடிக்கவேண்டும் என்று விரும்பினர்கள். தாமே அடிக்கவும் முன் வந்தார்கள். வேறு சில பிள்ளைகள் 'திருடன்' என்று இரண்டு அட்டைகளில் பெரிய எழுத்தால் எழுதி, ஒவ்வொன்றை ஒவ்வொரு குற்றவாளியின் முதுகின் புறத்தில் தொங்கவிடவேண்டுமென்று சொன்னர்கள். பின் சொன்னவாறே செய்யத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு சிறிய பெண்ணை அழைத்து அந்த அட்டைகளைக் குற்றவாளிகளின் சட்டைகளில் தைக்கச் சொன்னர்கள். தைக்கும்போது மற்ற பிள்ளைகள் எல்லோரும் அதிக சந்தோஷத்துடன் பார்த்துக் களித்தார்கள். குற்றவாளிகளை ஈவு இரக்கமின்றி ஏசிப் பேசினர்கள். தாம் எல்லோரும் குற்றவாளிகளை அழைத்துக்கொண்டு ஊர் கோலம் வர உத்தரவு கேட்டார்கள்.

இந்த இரண்டு பிள்ளைகளோ ஒவென்று கதறி யழுதார்கள். அவர்களில் ஒருவன் அடக்க முடியாத கோபாவேசத்துடன் மற்றவர்களை முறைத்துப் பார்த்தான். அவன் முகக் குறியானது, 'என் அவமானத்தைக் கண்டு களிக்கும் உங்களை என்ன செய்து விடுகிறேன், பாருங்கள்' என்று பயமுறுத்துவதுபோல் இருந்தது. 'அவன் தலை வணக்கித் தரை நோக்கிய வண்ணமாக வீட்டுக்குப் போகும்போது கொலை முதலிய பெருந் தீங்கிழைத்த குற்றவாளிகள் நடந்து செல்வதுபோல் இருந்தது. 'பிள்ளைகள் எல்லோரும் சூழ்ந்துகொண்டு அச் சிறு பிள்ளையைப் படுத்தின பாட்டைக் காணும்போது, இவர்களைப் பேய்தான் பிடித்துக்கொண்டு இருக்க வேண்டும்; இல்லாவிடில் இச் சிறுவர்கள் இயற்கைக்கு மாறுக இவ்வளவு கொடுமையாக நடந்து கொள்வார்களோ, என்று எண்ணும்படி யிருக்கிறது' என்று எழுதுகிறார் டால்ஸ்ட்டாய்.

அது முதல் அச் சிறுவன் படிப்பில் கவனம் குறைந்தது மன்றி, மற்றப் பிள்ளைகளுடன்கூடி விளையாடுவதையும் ஒழித்தான். சில நாட்களுக்குப் பிறகு அவன் மறுபடியும் திருடத்தொடங்கினான். ஒரு தடவை உபாத்தியாயர் ஒருவருடைய சட்டைப்பையிலிருந்து கொஞ்சம் பணம் அவரறியாமல் எடுத்துக் கொண்

டான். முன்போலவே 'திருடன்' என்று எழுதிய அட்டை அவன் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டது. மறுபடியும் மற்றப் பிள்ளைகள் அவனைப் படாதபாடு படுத்தினர்கள். கௌன்ட் டால்ஸ்ட்டாய் அப் பிள்ளையை அழைத்து நற்புத்தி புகட்டினர். மற்ற உபாத்தியாயர்களைப்போலவே அவர் அவன் செய்த குற்றத்தை எடுத்துக்காட்டி, அதனல் அவனுக்கு நேர்ந்த அவமானத்தையும் தண்டனையையும் விளக்கமாகச் சொல்லி, அத்தீய ஒழுக்கத்தை ஒழிக்காததால் உண்டாகும் கெடுதிகளை யெல்லாம் பிரசங்கித்தாராம். பிறகு, வயதுமுதிர்ந்த ஒரு மாணக்கன் அவ்வாறே பிரசங்கித்தானும். அவன் ஒரு பிரசங்கியாருடைய புத்திரன். தன் தகப்பனுடைய பிரசங்கங்களைப் பலமுறை கேட்டுப் பழகினவனுகையால் பெரிய பெரிய வார்த்தைகளைப் பிரயோகித்தானும். 'அப்பா, நீ ஒரு முறை திருடி, அதனல் தண்டனையும் அவமானமும் அடைந்திருந்தபோதிலும், மற்றொரு முறை திருடத் துணிந்தாய். இப்படியே செய்து வருவாயாகில், கடைசியில் திருடுவது உனக்கு ஒரு கொடிய பழக்கமாக முடியும். அப்பொழுது நீ எவ்வளவு முயன்றலும், உன்னல் அதை ஒழிக்க முடியாது. இப்பொழுதே அதை நீ ஒழிக்க முயலுவது மிகவும் அவசியம். துராசையே திருட்டுக்கெல்லாம் காரணம். துராசைக்கு இடங்கொடுத்தவன் படாத பாடு இல்லை;' என்று அந்த மாணக்கன் பேசத் தெரிந்த பிரசங்கிகளைப் போல் பேசினன். அவன் பேசக் கேட்டபோது டால்ஸ்ட்டாய்க்கு அதிக அருவருப்பு உண்டாயிற்றும்.

'முற்றுந் துறந்த முனிவரைப்போல் அச் சிறுவன் பேசும்போது எனக்குக் கோபம் உண்டாயிற்று. குற்றஞ் செய்த பிள்ளையின் முகத்தை உற்று நோக்கினேன். அவள் முகமானது வெளுத்து, துக்ககரமாக இருந்தது. ஆயினும் அவன் தனக்கு உரைத்த புத்தி மதிகளால் குற்றத்தைக் களைந்து சீர்மை யடைய வேண்டுமென்று தெளிந்து கொண்டவனுகத் தோன்றவில்லை. அப்பொழுது எனக்கு எக்காரணத்தாலோ, சிறைச்சாலைகளிலுள்ள குற்றவாளிகளின் ஞாபகம் வந்தது. உடனே அச் சிறுவன் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த அட்டையைக் கிழித் தெறிந்து விட்டு, அவனைத் தனக்கு இஷ்டமான இடத்துக்குப் போகும்படி விட்டுவிட்டேன். எனென்றல் அவன் சீர்மைப்பட வேண்டும்

என்று எண்ணி நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் முற்றிலும் தவறு என்று என் இருதயத்தில் பட்டது. அச்சிறுவனை இவ்வாறெல்லாம் துன்பப்படுத்த எனக்காவது அந்த மாணுக்கப் பிரசங்கிக்காவது என்ன அதிகாரம் உண்டு? மற்றவர் நினைத்தபடியெல்லாம் ஒருவனை ஆட்டிவைப்பது சாத்தியமாகுமோ? அவர்கள் விரும்பியபடியே அவன் நடந்துகொள்வான் என்று எதிர்பார்ப்பது எப்படி முடியும்? இதெல்லாம் நான் என் புத்தி சூக்ஷமத்தினால் அறிந்துகொள்ளவில்லை. அப்படி அறிந்து கொள்ளவும் முடியாது. சில விஷயங்கள் மனிதனுடைய புத்திக்கு எட்டாதபோதிலும் அவை அவன் இருதயத்தில் தோன்றும். அவை அவன் புத்திக்கு எட்டிய நியாயங்களுக்கு விரோதமாக இருந்தாலும்கூடும். ஆயினும் அவைதாம் உண்மை. புத்தி பிசகினாலும் இருதயம் ஒருகாலும் ஏமாறுவதில்லை. அச் சிறுவனைத் தண்புறுத்துவது சரியன்று என்னும் தீர்மானம் என்னையும் அறியாமலே என் உள்ளத்தில் தோன்றிற்று.

'சில விஷயங்கள் கேவலம் ஆன்மாவையே பற்றியவை. அவை மனிதனுடைய அற்ப புத்திக்கு எட்டக் கூடாத ரகசியங்கள், நம்மால் அவைகளை அறியவும் முடியாது; எள்ளளவாகிலும் மாற்றவும் முடியாது. அவை தாமாகவே காலக் கிரமத்தில் மாறினாலன்றி, எவ்விதமான தண்டனைகளாலும் உபதேசங்களாலும் மாறுபடவல்ல.

'ஆஹா! என்ன புத்தி ஈனம்! அச் சிறுவன் ஒரு புஸ்தகத்தைத் திருடினான்! அவன் ஏன் அவ்வாறு செய்தான்? என்ன என்ன எண்ணங்களும் தப்பான நியாயங்களும் அவன் மனத்தில் தோன்றி அப் புஸ்தகத்தை எடுக்கும்படிச் செய்தனவோ, யாருக்குத் தெரியும். அவன் அதை ஏன் தன் பெட்டியில் வைத்துப் பூட்டினான் என்பது அவனுக்கே தெரியாது. உடனே நான் 'திருடன்' என்று எழுதிய அட்டை யொன்றை எடுத்து அவன் கழுத்தில் தொங்கவிட்டேன். ஆஹா! ஒன்றுக்கொன்று என்ன சம்பந்தம்! அதனால் என்ன நன்மை விளையக் கூடும்? அவனை அவமானப் படுத்த வேண்டுமென்ப தல்லவோ நமது நோக்கம். எதற்காக அவமானப் படுத்தவேண்டும்? அவமானம் திருட்டில் விருப்பத்தை ஒழிக்கும் என்று நமக்கு உறுதியாகத் தெரியுமோ? ஒருவேளை அதுவல்ல விருப்பத்தை அதிகரிக்கவும் செய்யுமே! அச் சிறுவன் முகக் குறியினால் அவன் ஒரு சிறிதும் அவமானத்தை மேற்கொண்டதாக ஏற்படவில்லை.

அவன் மனத்தில் உதிக்கக் கூடாத கொடிய எண்ணங்களே உதித்தன. அவையே அவன் முகத்திலும் தோன்றின. அவை உதிப்பதற்குக் காரணம் நாங்கள் அவனுக்கு ஏற்படுத்திய தண்டனைகளும் புத்திமதிகளுமே.

உலகத்தில் அனுகூலமானவை எவையோ அவையே நியாயமானவை யென்னும் கொள்கை யுடையவர்களே தண்டனை என்னும் கொடிய விதியைத் தம் கடமையெனக் கொண்டொழுகட்டும். தண்டனை ஒரு முக்கியமான கடமை என்றும், அதுபோலவே பழிக்குப் பழி வாங்குவது தண்டனை என்ற பெயரை வகித்துக் கொண்ட அளவிலே குற்றமற்றுப் போகிற தென்றும் இப்படிப்பட்ட பொய்யான கொள்கைகளி னின்றும், கபட மறியாத சிறுவர்களைக் காப்பதுதான் எனது கடமை.' என்று முடிக்கிறார் டால்ஸ்ட்டாய்.

இவ் விஷயத்தை உபாத்தியாயர்கள் தத்தம் அனுபவத்தினால் கண்டறியவேண்டும். தாம் மேலே காட்டிய உதாரணத்தால் தண்டனை விதித்தால் குற்றவாளி மேலும் மேலும் கேட்டையே அடையக் காரணமா யிருந்ததென்றும், மற்றப் பிள்ளைகளின் மனத்தில் குரூரமான எண்ணங்களை எழுப்பி அற்பத் தனத்தைத் தூண்டிற்றென்றும் டால்ஸ்ட்டாய் எடுத்துக் காட்டுகிறார்.

பத்திராதிபர்.

IMPROVEMENTS OF PLANTS

செடிகளின் சீர்திருத்தம்

"எங்கேயாவது ஒரு இடத்தில் வளர்ந்திருக்கும் புற் பூண்டுகளைப் பார்க்கும்போது, அது வெவ்வேறு ஜாதிச் செடிகள் சேர்ந்து வளர்வது தெற்றென விளங்கும். சிறிது தூரம் நடந்து சென்றாலே சிரமப்பட்டுத் தேடாமல் பத்து அல்லது இருபது இனச் செடிகள் நமக்குப் புலப்படும். இப் பலவிதச் செடி-

கள் எவ்விதமாக உண்டாயினவோ, அக்காரணத்தை யறிய நமக்கு ஆவலுண்டாகு மன்றே? இனங்களின் உற்பத்தியைப் பற்றிச் சிந்திக்க முயல்வதும் சகஜமே.

"உதாரணமாகச் செங்கீரைச் செடி யொன்றைக் கொள்வோம். சில காலுக்கு முன் இவ்வினத்திய செடி யொன்றின் விதைகளைக் கணக்கிட்டுப் பார்த்ததில் 2, 40, 000 இருந்தன. இத்தனையும் என்ன கதியடைகின்றனவோ? ஒரு வருஷத்துக்குப் பிறகு இச் செடி முளைத்திருந்த இடத்தைப் பார்த்தால் அங்கே பல செடிகளிருந்தாலு மிருக்கலாம். ஒன்று கூட இல்லாமற் போவது முண்டு. அநேகமாய், செடி முதலுக்குப் பதிலாகப் புதுச் செடி யொன்றிருக்கும். முதலில் செடிக் கிளையில் பல முளைகள் முளைத்து வளரும். ஆனல், நாட்செல்ல நாட்செல்ல இவை ஒவ்வொன்றாய் அழிந்து கொண்டு வந்து கடைசியில் செடிகளே இல்லாமற் போனலும் போம். செடிகளிலுண்டாகிற இத்தனை விதைகளுக்கும் இடமிராது. உலகத்திலுள்ள செடிகளில் ஒரு வருஷத்திலுண்டாம் விதைகளெல்லாம் முளைத்து வளர்ந்தால் நமக்கு மூச்சு விடக்கூட இடமிருக்காது. இத்தனை விதைகளுண்டாய் அவை வீணாய் அழிவதேன்?

"கவனித்துப் பார்த்தால் உலகத்தில் வித்தியாச மின்றி ஒத்து ஒன்றுபோல இரண்டு நாற்றுகள் கூட இருப்பதில்லை என்பது நமக்கு நன்கு விளங்கும். சில செடிகளில் தண்டு உரத்தும், வேறு சிலவற்றில் வேர்கள் பூமியில் ஆழத்திற் சென்று வளர்வனவாகவும், மற்றும் சிலவற்றில் இலைகள் மிகுதியாயுண்டாயு மிருக்கலாம். செடிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வளர்வதில் தகுந்தனவே தங்கும், செடிகளில் இப்பெரும் போரானது எப்போது மிருந்து கொண்டே யிருக்கும். திடமுள்ளனவே தப்பி வாழ்வனவாம். இது தான் 'தகுவன தங்கி நிற்றல்' என்பது. செடிகள் பல வற்றினும் மேம்பட்டனவே பொறுக்கப் பெற்றுப் பாதுகாக்கப் படுகின்றன. 'இப்படிப் பொறுக்கப் படுவதையே பிரகிருதியில் பொறுக்குதல்' என்கிறார்கள். ஏதாவது ஒரு இடத்தில் வளரும் ஒரே இனத்திய செடிகளைக் கவனிப்போமே யாயின் எப்போதும் கணக்கில் ஏற்றக்

குறைச்சல் அதிகமாக இல்லாமலே இருப்பதனல் நாம் இயற்கையில் பொறுக்குதல் உண்டென்று நம்ப வேண்டியதே யன்றே? மரமானலுஞ் சரி, பூண்டானலுஞ் சரி, அது தானிருந்த விடத்தில் தனக்குப் பதிலாக ஒரு செடியை உண்டாக்கினதும் அதன் பொறுப்பு நீங்கி விட்டதாகவே எண்ண வேண்டும்.

"பிரகிருதியில் பொறுக்குதலுக்குச் சகாயமாகிற காரியங்கள் இரண்டு. செடி ஒவ்வொன்றும் வித்துண்டான செடியையே ஒத்திருக்கும். இராகி விதைத்தால் இராகியும், செங்கீரை விதைத்தால் செங்கீரையும் தானே யுண்டாகும். ஆயினும் கொஞ்சமும் வித்தியாச மில்லாமல் எல்லா விஷயங்களிலும் ஒத்து ஒன்று போலவே இரண்டு செடிகள் கூட இருப்பதில்லை. இப்படிக் காணப்படும் வித்தியாசங்களில் தம் உயிர் நிலைமைக்கு அனுகூலமான வித்தியாசங்களைப் பெற்ற செடிகள் மாத்திரமே தங்கி நிற்கும். இவ்விதமாக செடிகளில் சிறிது சிறிதாக வித்தியாசங்கள் எக்காலத்தும் உண்டாகிக் கொண்டே யிருக்கும். இப்படியுண்டாகும் வித்தியாசங்கள் பெரும்பாலும் செடிகளுக்கு அனுகூலமானவை யாகவே இருத்தலியல்பு. செடிகளில் மாறுபாடுகள் ஒரே காலத்தில் பல இடங்களிலு முண்டானல், புது இனத்திய செடிகளுண்டாவதற்கு இது காரணமாகு மன்றே? முதலில் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கும் செடிகள் காலஞ் செல்லச் செல்ல தம் நிலைகளுக்குத் தகுந்தவாறு வெவ்வேறாக மாறுபடுதலால் அவை பல இனத்தியன வாகின்றன.

"இவ்விதமாக இனங்களுண்டாதல் வெகு சாவகாசம், நமக்கோ ஆத்திரமதிகம். இனங்கள் இப்படி யுண்டாகின்றன வென்பதை பிரத்தியகூ அனுபவத்தினல் அறிந்து கொள்ளப் போதுமான காலம் வரையிலும் ஆயுள் யாருக்குண்டு? ஆனல் பயிர்களின் அனுபோகத்தினல் புது இனங்கள் சீக்கிரமாகவே உண்டாகின்றன வென்பது நமக்குத் தெரிகின்றது. கரும்பைப் பயிர் செய்து அதன் தாள்கள் ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்தால் அவற்றுள் வித்தியாசங்கள் காணப்படும், அவற்றைப் பொறுக்கி எடுக்கலாம். இவற்றை "ஸ்போர்ட்ஸ்" என்று சொல்லுவார்கள். காட்டுச் செடிகளிலும் இவ்விதமாகவே வித்தியாசங்களுள்ள

செடிகள் உண்டாகின்றன. கரும்பைப் பிடுங்கி அதை நாம் விருத்தி செய்யலாம். காட்டுச் செடிகளிலோ, இவை மற்றவையைவிட மேற்பட்டதாகாவிடில் எல்லாம் மாய்ந்து விடும். இப்படி வளரும் செடிகளை நாம் காடுகளில் பார்த்தால் ஆச்சரிய மடைகிறோம். இது புதிய செடி என்று சொல்வோம். இது கொஞ்ச காலத்துக்குப் பின்பு அழிந்து விடும். புது இனச் செடியுண்டாதற்கு வழி இதொன்றல்லவா ?

"புது இனங்களின் உற்பத்தியைப் பற்றி இரண்டு அபிப்பிராய்ங்கள் உண்டு. புது இன முண்டாதலென்பது, செடிகளின் மாறுதலே யன்றோ ? பயிரிடும் வயல்களில் இம் மாறுபாடானது பயிரின் தரத்தை மேம்படுத்துவதற்கு முகாந்தர மாகும். முதல் கொள்கைப்படி, பிரகிருதிக்குப் பதிலாக, எப்போதும் நாம் நல்ல விதையையே பொறுக்கி அதை விருத்தி செய்தால், பயிரில் சீர்திருத்த முண்டாம். இரண்டாவது அபிப்பிராயப்படி வயல்களில் உண்டாம் நூதனமான செடிகளைப் பொறுக்குவதால் லோகோபகாரமான புதிய செடிகள் கிடைத்தாலும் கிடைக்கும்.

"செண்ட்கிட்ஸ்" என்னும் தீவில் விவசாயத்தில் தேர்ந்த ஒரு மானேஜர் கரும்பு நட்டிருந்த தன் வயலில் தான் எப்போதும் பார்க்காத ஒரு புதிய கரும்பு உண்டாகவே அதைக் கண்டு வேடிக்கைக்காக அதைத் தம் தோட்டத்தில் நட்டார். இதனல் கரும்பு நல்ல தரத்தியதென்று கண்டு கொண்டு அதைத் தம் வயலில் கொஞ்சம் பயிர் செய்தார். வேறு விவசாயிகள் இதைப் பார்த்தவுடன் அவர்களும் இக் கரும்பை பயிர் செய்ய ஆரம்பித்தார்கள் ..... இந்த "செண்ட்கிட்ஸ்" தீவில் கரும்பு தவிர வேறு பயிர் கிடையாது.....அகஸ்மாத்தாக உண்டான இக் கரும்பை மானேஜர் கண்டெடுத்து விருத்தி பண்ணினதினல்தான் தீவிலிருக்கும் பாதி ஜனங்கள் நாசத்தினின்றும் மீண்டார்கள்.

"இவ்விஷயம் முக்கியமான தல்லவா? பயிர்களைச் சீர்திருத்துவதற்கு இரண்டு விதிகள் உண்டு. நல்ல யலிவுள்ள செடிகளினின்றும் விதையைச் சேகரித்து அதிலிருந்து நல்ல தேறின விதைகளைப் பொறுக்கிப் பயிரை விருத்தி செய்தல் ஒருவழி. பயிராகும் செடிகளைப் பார்த்துக்கொண்டிருந்து, அவற்றில் நூதனமாகத் தென்படுவனவற்றைக் கண்டெடுத்து அதை விருத்தி செய்வதனல் காலதாமதமின்றி சீக்கிரத்திலேயே சீர்திருத்தத்தை உண்டாக்குவது மற்றொரு வழி. பயிர்களை யுற்றுப்பார்க்கத் தொடங்கினதுவே அநேக செடிகள் விதையுண்டான செடியினின்றும் வித்தியாசமாக இருப்பது தெற்றென விளங்கும், ஆச்சரியத்தையுண்டாக்கும்.

'உபாத்தியாயர் தோழன்.

A CONVERSATION

ஒரு சம்பாஷணை

சங்கரன் — ஓய், சடையப்பா, ஏதோ ஜோலியாய்ப் போனற்போ லிருக்கிறதே. வேலை யொழிந்து சும்மாவாகவே இருக்கிறேன் நான். நீ எகுமிடம் விளம்புவா யாகில் சந்தோஷமாய் உன்னைப் பின் தொடருவேன்.

சடையப்பன் — ஆற்றில் தண்ணீர் பெருக்கதிக மென்று கேள்வி. இதற்குக் காரணம் நேற்று சொரிந்த பெரு மழை போலும், அதைப் பார்வை யிடலாமென உத்தேசித்துப் புறப்பட்டேன் நான்.

சங்கரன் — ஓகோ! அப்படியா. கேவலம் ஒரு சிற்றாறுயினும் முக்காலத்தும் வராத வெள்ளம் வந்தாற்போல்தான் பேசிக் கொள்ளுகிறார்கள். (மெல்லிய தொனியுடன்) பாவம் என் தம்பி நடக்க ஏலாதவன், ஜுரமோ வெனில் கொடிது.

(வழிநெடுக சம்பாஷித்துப்போக பின் கரை சேருகிறார்கள்)

சடையப்பன்—ஹா, ஹா, இதென்னமா யிருக்கிறது. இங்கே ரோட்டம் எவ்வளவு அழகா யிருக்கிறது. இயற்கை அழகே அழகு.

சங்கரன் — மெய்தான். இம் மாலை மயக்கத்தில், இவ்வாற்றின் வனப்பும், வெளி வாங்கின இவ்வாகாய வனப்பும், இம் மீன்கள் துள்ளி துள்ளி விளையாடுவதும், எவ்வளவு மனோகரம். சிருஷ்டி இவ்வாறுனல் சிருஷ்டிகர் எவ்வாறு!

(இதைச் சொன்ன சிறிது நேரத்துக் கெல்லாம், உடல் சிலிர்த்து மௌனம் சாதிக்கிறான்.)

சடையப்பன் — என்ன, என்ன! திகைத்தாற் போல் தெரிகிறது. விஷஜெந்து ஏதாவது கண்டீனையோ?

சங்கரன் — (துயரத் தொனியோடு) அதோ பார். அந்த ஆலமரத்தண்டை கண்ணற்றவனொருவன் தடவித்தடவிவருகிறன். அவனது வருத்தம் எவ்வாறே! நாம் இங்கு சுகம் அநுபவிக்க.

சடையப்பன் — ஆ ஆ,! இதுதான், (கோபத்தோடு) நேரமாகுது, ஆற்றை விட்டகலலாம் வா. (கையைப் பிடித்திழுக்கிறன்.)

சங்கரன் — பொறு, பொறு. அக்கபோதிக்கு யாம் செய்யத் தக்க உதவியைச் செய்து திரும்புவோம்.

சடையப்பன் — உதவியாவது, திரும்புவதாவது. அங்ஙனம் புரிவாயாகில் மணி பத்தாகும் திரும்புவதற்கு. இதோ நான் போகிறேன் பார்.

சங்கரன் — விசனப்படாதே. சற்று முன்பின் யோசித்துப் பேசு. அவனுக்குத் துணையாகக் கடவுள் நம்மை இங்கு விட்டார் போலும். ஆக, நாமும் கண்ணற்றவர்போல் திரும்ப லழகன்று. இயன்ற உதவியை இனிது முடிப்போம்.

சடையப்பன் — தாங்கொணு சங்கடமல்லோ இது, யார் செய்த பாவமோ அவன் இவ்வாறு தடமாடுவது. நமக்கென்ன, அங்கு என்றால் இங்கு என்கிறாய். எங்கு போவது?

சங்கரன்—வார்த்தையாடி காலம் போக்காது சிக்கிரம் போய் திரும்புவோம் வா. (போகிறார்கள்)

குருடன் — யாரயா இல்ல போறது, எம்பாட்ட எங்க சொல்ல, யாரு கேப்பதுக்கு, கண்ணத்தபாவி எங்க போய்ச் சாவ, ஆத்தில்தான் போய் விளுவோ?

சங்கரன் — என்ன பரிதாபம்! இருக்கட்டும். படைத்தவன் போக்கிடுவார் என்று சும்மாவா சொல்லுகிறார்கள்! (சத்தமிட்டு) இதோ நாங்கள் உம்மைப் பத்திரமாய் கூட்டிக்கொண்டு போக வந்திருக்கிறோம்.

குருடன் — நெய்தாணு, பொய்யா! என்னிய கேலி பண்ணியாவந்திய, படுறபாடுகொணு இன்னியா என்னிய இந்த ஆட்டு பாக்கிரிய.

சடையப்பன் (துரிதமாய்) அவனிடம் வார்த்தையாடுகிறயோ? வீண்தானே இது ஆகிறதைப் பார்.

சங்கரன் — (குருடன் கரத்தைப் பற்றிக் கொண்டு) மெல்ல மெல்ல வா, பயப்படாது வா.

குருடன் — கடவுள்தான் உங்களை நல்லாருக்க வைக்கணு. இதை எண்ணைக்கும் நினைச்சிக்கிடுவன்.

சடையப்பன் — (குருடனைப் பார்த்து) ஒய் எந்த ஊர் போக வேண்டும்?

குருடன் — எதுக்க இருக்கதுக்கு போணுமையா. இந்த ஒரு புண்ணியமும் செய்யுங்க சாமி.

சடையப்பன் — (குருடனைப் பிடித்து) எங்கள் ஊர்தான், சமீபம். அங்கு உன்னைச் சேர்ப்போம்.

சங்கரன் — (ஆச்சர்யத்தோடு) ஓகோ, உன் மனம் திரும்பிவிட்டதோ! நிரம்ப சந்தோஷம். எட்டிக்காய் போலிருந்த பரோபகாரம் சர்க்கரையாய் மாறிவிட்டதுபோல் தெரிகிறதே.

சடையப்பன் — (புன்னகை கொண்டு) ஆம், ஆம், அது எவ்வாறு மாறினதோ அறியேன்.

சங்கரன் — நன்று, நன்று. புண்ணியமே புகழைச் சம்பாதிக்கும். தாழ்மையே உயர்வுக்கு ஏணி. இஃதறிந் தொழுகல் தகுதி. இவ்வழியில்தான் சந்தோஷமும் நன்மையும் சுரந்து வரும்.

சடையப்பன் — நான் நேற்று பரோபகாரத்தின் பேரில் ஒரு புஸ்தகம் படித்தேன். இடைக்கிடையே செய்யுட்கள் விரவி வந்தமையால் எனக்கு கருத்து புலப்படவில்லை. தயவு செய்து, அதை எனக்கு விவரித்துச் சொல்ல வேண்டுகிறேன். நீ தகுந்த புத்தி கூர்மையுள்ளவனாயிருக்கிறாயே.

சங்கரன் — மெத்த சந்தோஷம். எல்லாம் இரவு பேசிக்கொள்வோம். ஒரு காரியம். இக்கபோதி நம் ஊரிலிருக்குமளவும் நாம் இவனுக்கு ஏற்ற உதவி செய்தல் நன்று.

சடையப்பன் — சரி, சரி. நானும் ஆமோதிக்கிறேன்.

(இருவரும் போகிறார்கள்)

JAMES. G. SUNDRAM,.
Teacher, C. M. S. Elementary School, Higher grade,
Satankulam, South Tinnevelly.

GENERAL KNOWLEDGE
பொது அறிவு

யுகாதி பண்டிகை.

"யுகாதி" யுகம்+ஆதி என இரு பதத்தால் ஆன ஓர் கூட்டுச் சொல். அதாவது யுகம் என்பது ஒரு பெரிய காலப் பெயர். ஆதி=முதல். அதாவது ஒரு பெரிய காலத்தின் முதல் அல்லது பிறந்த நாள் என்பதாகும். காலங்கள் நான்கு; கிருதம், திரேதா, துவாபரம், கலி. இவற்றில் 4-வது கலியுகம் 4,32,000 வருஷம் கொண்டது. இந்த யுகத்தின் முன் இருந்த காலம் துவாபரயுகம். இக்காலத்தில்தான் பாரதத்தில் சொல்லப்படுகிற பாண்டவர்கள் இருந்தார்கள். கலியுக ஆரம்பத்தில் அவ்வம்சத்தானும் பாண்டவர்கள் பேரனுமான பரிக்ஷித்து மகாராசன் ஹஸ்தினபுரியில் அரசாண்டிருந்தான். ஆகவே சந்திரவம்ச ராஜர்கள் காலங்களில் சந்திரன் என்னும் கிரகத்தை ஆதாரமாக வைத்து கணக்கிட்ட ஜோதிஷ கணக்கிற்கு சாந்திரமானம் என வழங்கலாயிற்று. அவ்வழக்கம் இன்னும் இருக்கிறது. இக்கணக்கை அனுசரித்து வைதிக கருமங்களே மாத்துவர், தெலுங்கர் முதலியவர்கள் அனுசரிக்கிறார்கள். பண்டிகையும் இதன்படிக்கே எல்லாரும் கொண்டாடுகிறார்கள். சாந்திரமான ரீதியாய் காலங்களே கணக்கிட்டு வந்தபடி கலியுகம் பிறந்த நாள் பங்குனி மாதத்து அமாவாசைக்கு அடுத்த மறுநாள் பிரதமை ஆகிறது. பண்டிகை நாள் அனுசரிக்கும் வழக்கம் வைதிக லௌகிக காரியங்களுக்கு சாதகமானவை. மற்றப் பண்டிகைகளைப் போலல்லாமல் இந்தப் பண்டிகைத்தினத்தில் வேப்பம் கொழுந்தும் வெல்லமும் சேர்த்து மர்த்தித்து கடவுளுக்கு சமர்ப்பித்து தின்றபின்பே போஜனம் செய்வார்கள். காரணம் அடுத்த தடவை தெரிவிக்கிறேன்.

முன் சொன்னவண்ணம் "யுகாதி" என்னும் பண்டிகையை பலர் அனுசரிப்பதோடு அன்று இரவு "புதுப் பஞ்சாங்கம்" வாசிப்பதும் வழக்கமாயிருக்கிறது.

சிலர் சௌரமான ரீதியாய் பிறக்கும் புது வருஷம் அதாவது சித்திரைமீ 1ம் தேதி "வாக்கிய பஞ்சாங்கம்" வாசிப்பார்கள்.

யுக்தியாலும், அநுபோகத்தாலும் பார்க்குமிடத்து நாம் அறியும் விஷயங்களாவன —

"கலியுகம்" என்பது பிறந்த நாளே அநேகவித அனர்த்தங்கள் உண்டாகிப் பின்பு பரிக்ஷித்து ராஜனால் அந்த அனர்த்தங்கள் ஒருவாறு நீங்கின என்று பாகவதத்தில் சொல்லியிருக்கிறது.

அதை அனுசரித்தே மறை பொருளாய் "கலியுகத்தில்" பாபகாரியங்கள் அதிகமாய் நடக்கக் கூடியது. ஆனாலும் கொஞ்சம் தர்மமும் சேர்ந்து இருப்பதால், "பாவம்" அதிகம் என்பதைக் காட்ட "வேப்பம் துளிரும்" "புண்ணியம்" என்பதைக் காட்ட "வெல்லமும்" முதலில் உட்கொள்வது "யுகாதி" நாளில் நடத்தும் விசேஷம்.

இரண்டாவது பஞ்சாங்க ஸ்ரவணத்தால் மனிதர் தமது ஜனனகால ரீதியை அடுத்து பலன்கள் தெரிந்து எந்தெந்த சமயங்களில் எவ்விதம் இருக்கவேண்டுமென்பதை அறியச் சாத்தியமாகும். இதுவே வைதிக அபிப்பிராயம்.

இனி லௌகீகக் கொள்கையாவது :—

1. வேப்ப மரத்தின் ஒவ்வொரு பாகத்தாலும் ஜீவன்களுக்கு சுகம் உண்டு.

குச்சி பல் தேய்க்கவும், இலை அரைத்துப் பூச தொத்து வியாதிகள் நீங்கவும், காற்று சுத்தியைச் செய்யவும் அநுகூலப்படுகின்றன.

S. HIRANIACHAR,
Teacher, Board School,
Sennimalai.

SCHOOL MUSEUM
பாடசாலைகளில் உபாத்தியாயர்களால் சேகரித்து வைக்கக்கூடிய கண்காட்சிப் பொருள்கள்

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பாடங்களில் வரும் விஷயங்களே விளக்கிக் காட்ட எளிதில் கிடைக்கக் கூடிய சில பொருள்களைச் சேகரித்து ஒரு கண்காட்சிப் பெட்டி தயாரித்துக்கொள்வது உத்தமம். பொருள்கள் நாளுக்கு நாள் உபாத்தியாயர்களின் சிரத்தையாலும் பிள்ளைகளின் உற்சாகத்தினாலும்

விருத்தி செய்யப் பெறவேண்டும். சேகரிக்கக் கூடிய பொருள்களில் சில அடியிற் குறிக்கப்பட் டிருக்கின்றன —

(i) சிறு தராசும் படிக்கல்லும், அளவைகள், வட்டஊசி, பூதக்கண்ணாடி, ஊசிக்காந்தம், திசைகாட்டும் கருவி, அடிக்கோல், அளப்பதற்கு நாடா, சீதோஷ்ணக் கருவி.

(ii) பலவித நாணயங்கள் — அட்டை நாணயங்கள், தபால் சீட்டுகள் சேகரித்து ஒரு அட்டையில் ஒட்டி வைத்தல்.

(iii) தபால் பாரங்கள், சட்டங்கள், தந்தி பாரம், சட்டங்கள், இருப்புப்பாதைப் படங்கள்.

(iv) ரெவின்யூ பாரங்கள்.

(v) பலவித உபகரணங்கள் — தகடுகள், கூழாங்கற்கள், அபிரேக், சலவைக்கல், பவழம், உறைக் கற்கள், கிளிஞ்சல், வர்ண வஸியல்கள்.

(vi) தாவரங்கள் — (1) உணவுக்கு உபயோகமுள்ள கோதுமை, நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, அவரை, துவரை, புஷ்பங்கள், பழங்கள் முதலியன.

(2) உடைக்கு உபயோகமுள்ளன—பருத்தி, ரோமம், பட்டு, நார் முதலியன.

(3) கட்டடச் சாமான்கள் — தேக்கு, புரசு, கருங்காலி முதலிய பலவித மரங்களின் துண்டுகள்.

(4) எண்ணெய் வித்துக்கள் — விதைகள், எள்ளு, முத்துக் கொட்டை முதலியன.

(5) மருந்து பதார்த்தங்கள் — சுக்கு, திப்பிலி, சித்தரத்தை முதலியன.

(vii) பிராணிகளின் உருவங்கள், படங்கள், முட்டைகள் கூடுகள், பஞ்சடைத்த பக்ஷிகள், மிருகங்கள், தராவகத்தில் வைக்கப் பெற்ற சிறிய ஜந்துக்கள், அந்துப் பூச்சி, விட்டில் பூச்சி, பட்டாம் பூச்சி, பக்ஷியின் இறகுகள், எலும்புகள், மிருகங்களின் பற்கள், அலகுகள், நகங்கள், கடற்கரை கிளிஞ்சல்கள், முத்துச் சிப்பிகள், பஞ்சு தினுசுகள் முதலியன.

(viii) கலப்பை, ஏற்றம், செக்கு, குயவன் சக்கரம், ஆலை, குழாய், புள்ளி சக்கரம், நூல்சக்கரம், காற்றடி, தண்ணீர் இயந்திரம் ஆகிய இவை முதலானவைகளைச் சிறு மாதிரி கடதாசி, மண், குச்சிகளைக் கொண்டு செய்து வைத்தல்.

(ix) பலவித வர்ணக் கடதாசிகள், குச்சிகள், கொட்டைகள், மண் சாமான்கள், படங்கள் முதலிபன எழுதப்பட்ட சித்திரப் படங்கள், முடைந்த பாய்கள், விசிறிகள், ஓலை வேலை, நெட்டி வேலை முதலிய பாலர் தொழில்களுக்கு வேண்டியன.

(x) சித்திரப் படங்கள், பிள்ளைகள் வரைந்த மாதிரிப் படங்கள், குரங்கும் பூனையும், நரியும் கொக்கும், வானம்பாடியும் குஞ்சுகளும் ஆகிய கதாசித்திரங்கள் முதலியன ஏற்படுத்தி அலங்கரிக்கலாம்.

C. S. NATARAJA IYAR,
Headmaster,
Pasupathipalayam, Municipal Elementary School,
and Treasurer of the Book Ordering Department
of the Elementary Teachers' Association,
Karur.

KUMARA GURU

குமாரகுரு

'இல்லறமே நல்லறம், இல்லறத்தானே நல்லறத்தான்' என்பது எனது கருத்து. தனியே யிருந்து ஜன சமூகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு காலங் கழிப்பவனைவிட, மணம் செய்து கொண்டு, மக்களைப் பெற்று, குடும்ப விருத்தி செய்பவனே நாட்டிற்கு நன்மை நாடுவோன் என்பது என் சித்தாந்தம். அதனால், யான் ஆலயத்தில் அர்ச்சகத்தொழிலை மேற்கொண்டு ஓர் ஆண்டு நிறைவதற்குள் என் விவாகத்தைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானேன். எனக்கு மனைவியாக வாய்ப்பவள் —

ஆசார முள்ளவளாய் பெரியோர்களுக்கன்பு செய்பவளாய்
காசாசை சற்றும் இலாதவளாய் கல்வி கற்றவளாய்

இருக்க வேண்டும் என்பது எனது விருப்பம். சில நாட்களுக்குள் ஒரு கன்னிகையை வரித்தேன். அவளது நற்குணம் விவாகத்-

திற்கு முன்பே எனக்கு நன்கு விளங்கிற்று. கூறைப்புடவை வாங்கப் போனபொழுது, அவள், 'புடவை கண்ணுக்குப் பகட்டாக இருப்பதில் காரியமில்லை; உடை காளத் தக்கதாக இருப்பதே உத்தமம்' என்று குறிப்பிட்டாள். அதனால் இவள் இல்லறத்திற்கு ஏற்றவளே என்று எண்ணினேன். உண்மையாகவே அவள் நற்குண நற்செய்கை வாய்ந்தவள். பெற்றோர் அவளை நல்ல வழியில் வளர்த்து வந்தார்கள். நன்னடக்கை நற்சகவாசத்தினால் உண்டாகுமல்லவா. இவள் எடுத்த புஸ்தகத்தை எழுத்துக் கூட்டாமலே வாசிக்கக் கூடியவள். ஆயினும் பாகஞ் செய்வதில் இணையில்லாதவள். இவள் கை பட்டால் வேம்பும் இனிக்கும். வரவுக்கேற்பச் செலவு செய்து, குடும்ப காரியங்களை நிர்வகிக்கும் சக்தி இவளுக்கு அதிகம். குடும்பத்தை வெகு தந்திரமாக நடத்துவாள். எவ்வளவு தந்திரம் செய்தும் நாங்கள் செல்வம் சேர்த்து சிறக்க வாழ்ந்தோம் என்று சொல்வதற்கில்லை.

ஆயினும், யாங்கள் இருவரும் அன்புற்று இன்புற்று வாழ்ந்திருந்தோம். நாள் செல்லச் செல்ல எங்கள் அன்பும் வளர்பிறைச் சந்திரனேபோல் விருத்தி யடைந்தது. நாங்கள் ஒருவர்க்கொருவர் மாறுபட்டுப் பிணங்கியதும் இல்லை; உலக வாழ்க்கையில் வெறுப்புற்றதும் இல்லை. நாங்கள் இருந்தது ஒரு சிறு நாட்டுப்புறமாயினும் கண்டவிட மெல்லாம் பச்சைப் பசேரென்று அழகாயிருக்கும். அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் நல்லவர்கள். எங்கள் வீடு சுத்தமாகவும் மனோகரமாகவும் இருக்கும். அதனால், நாங்கள் இருந்த இடத்தைப்பற்றி ஏதும் குறைகூற இடமில்லை. இவ்வாறு சத் காலக்ஷேபத்திலும், விநோத வேடிக்கைகளிலும் இரண்டு வருடங்கள் கழிந்தன. சில சமயங்களில் நாங்கள் அயலிலுள்ள செல்வவான்கள் வீடுகளுக்குச் சென்று சன்மார்க்கமான விஷயங்கள் பேசி வருவோம்; சில சமயங்களில் வறியோர் வீடுகளுக்குச் சென்று, எம்மாலான உதவி செய்து இன்சொற்கூறித் திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். யாங்கள் இருந்த ஊரில் ராஜ கலகம், ராஜாங்கம் மாறுதல் முதலிய சச்சரவுகள் இன்மையால் நிர்ப்பயமாக வாழ்ந்து வந்தோம்.

நாங்கள் எங்கும் பிரயாணம் போனதுமில்லை; பெருமுயற்சி செய்தது மில்லை. எங்கள் ஆண்மை எல்லாம் அடுப்பங்கரையில் தான். பிரயாணமெல்லாம் பேச்சில்தான்.

எங்கள் வீடு பலரும் வழிநடக்கும் பாட்டைக் கருகில் இருந்தது. வருவோர் போவோருக்கு நாங்கள் நீர் மோர் கொடுப்பது வழக்கம். அந்த நீர் மோரை உண்டு ஆனந்த மடையாதவர்கள் இல்லை. உண்டவுடன் களைதீர்ந்து உற்சாகம் அடைவார்கள். நீர் மோருக்காக எங்கள் வீடு சுற்றுப்புறங்களில் எங்கெங்கும் பிரசித்தி பெற்றிருந்தது. அதனால் அவ்வழியே செல்லுவோர் எவரும் எங்கள் வீட்டில் தங்குவது வழக்கம். அப்படித் தங்குவோருக்கு இரண்டொருவேளை அன்னமிடுவதும் உண்டு. ரசஞ்சாதமாயினும் வெகு ரசமாக இருக்கும். தொட்ட கையும் மணக்கும். உண்ட வாயும் மணக்கும். உணவின் பொருட்டும் அநேகர் வருவதுண்டு. முன்பு அறிந்தமையாற் குறித்து வருவோர் பலர், முன்பு அறியாமையாற் குறியாமல் வருவோர் பலர். எங்கள் உறவினரில் இருபத்தொரு தலைமுறை எடுத்துரைத்துக்கொண்டுவருபவர் சிலர். இவர்களுக்குப் பஞ்சாங்கமாவது பட்டியாவது வேண்டியதில்லை. பந்தித்துவமெல்லாம் பாராமல் பாடம் ஒப்பிப்பார்கள். உண்டானபோது உறவினர்க்குக் குறைவா?

"ஆலிலே பூவுங் காயும் அளிதரு பழமும் உண்டேல்
சாலவே பட்சிஜாலம் தன்குடி யென்றே வாழும்."

என்பது பிரத்தியக்ஷ பிரமாணமல்லவா! கூன் குருடு மொண்டி முடமான சிலரும் உறவினர் என்று உரிமை பாராட்டிக் கொண்டு வருவர். எப்படி யிருந்தாலும் உறவினர் என்றால் உபேக்ஷை செய்ய முடியுமா! நான் ஒருவாறு அப்படி இருந்தாலும், என் மனைவி என்னை அப்படி இருக்கவிடாள். "இதென்ன இப்படி கண்டும் காணுமலும் இருப்பது; எப்படி யிருந்தாலும் அவர்கள் பந்துக்கள் அல்லவா — உருவிற்குறைவென்று உற்றாரை விடலாமோ, உதிரச் சம்பந்த முள்ள பந்துக்களை உதாசினம் செய்யலாமோ — என்று நியாயங் காட்டி சம பந்தியில் உட்கார்ந்து சாப்பிடச் சொல்லுவாள். நாங்கள் நல்ல செல்வவந்தர்களாக இருந்திராவிட்டால் சாதாரணமாக நல்ல நேசர்களை எங்களுக்கு வாய்த்திருப்பார்கள். விருந்தாளி வறியனு யிருந்தால் இட்டதை யுண்டு திருப்தி யடைவான்; பணக்காரனுனல் பத்தவைப் பண்டஞ் செய்தாலும் அவனுக்கு அற்பமாகவே தோற்றும். சிலருக்குச் சிவப்பு நிறம் இஷ்டம்; சிலருக்குக் கறுப்பு நிறம் இஷ்டம்; சிலருக்குப் புளிப்பு இஷ்டம், சிலருக்கு இனிப்பு இஷ்டம்; எல்லோரை-

யும் ஒரு மனப்படுத்த எவராலாகும். எனக்கோ எளியோர் முகம் இன்பமடைந்திருக்கக் காண்பதே இஷ்டம். இது நிற்க, சிலர் பந்துத்துவம் பாராட்டிக்கொண்டு, வீட்டில் நுழைந்ததும் வீண் டம்பம் எல்லாம் காட்டுவார்கள். அவர்களுடைய் நடையுடை பாவனைகள் எனக்குப் பிடிப்பதில்லை. அவர்களை ஒழிப்பது எப்படி.. அவர்கள் விழிக்கும்வரையில் ஒருவாறு பொறுத்துக் கொண்டிருப்பேன். பயணம் சொல்லிக்கொண்டுபோகும்போதும் சும்மா போகமாட்டார்கள். ஏதாவது ஒன்று கேட்பார்கள். அதற்குப் பின்னிடைந்தால் அவர்கள் வருந்தோறும் நமக்கு அல்லல்தான். அதனல் அவர்கள் கேட்பதற் கேற்க ஏதேனும் தினையோ மணியோ இரவல் கொடுக்கப் பின்னிடைவதில்லை.

இரவல் வாங்கிக் கொண்டு போன இனத்தார் மறுபடியும் திரும்பிவரக் கண்டதே யில்லை. அது முதல் சனிவிட்ட தென்று சந்தோஷமாக இருப்பேன். இந்த விதத்தினல் வீணர்கள் எல்லாம் எங்கள் வீட்டை விட்டொழிவார்கள். ஆனல் ஆதரவின்றி அடைந்தவர்களை நாங்கள் ஒரு போதும் அதட்டித் துரத்தியதில்லை.

இவ்வாறு யாங்கள் வெகு சௌக்கியமாக நெடுங்காலம் வாழ்ந்திருந்தோம். சில சமயங்களில் சிற்சில சங்கடங்கள் நேரிடுவதுமுண்டு. துன்பம் தோன்றுவிட்டால் இன்பத்தின் விசேஷம் தோன்றுமா. அதனல் துன்பமும் நமது நன்மைக்கே தெய்வகதியால் உண்டாகின்றது என்று எண்ணி திருப்தியடைவது வழக்கம். யோசித்தால் அவற்றைத் துன்பமென்று சொல்லவும் இடமிராது.

பாடசாலைப் பிள்ளைகள் எங்களுடைய மாந்தோப்பில் புகுந்து பழங்களைத் திருடிவிடுவார்கள். அதைக் கண்டு வருத்தப்பட்டுக்கொண்டே வீட்டுக்கு வந்தால், வீட்டு வேலைக்காரர்கள் பூனை வந்து பாலை உருட்டிவிட்டது, அது பாழாகப் போயிற்று, இது கெட்டுப் போயிற்று என்று முறையிடுவார்கள். சில சமயங்களில் சற் காலக்ஷேபம் செய்து கொண்டிருப்பேன். கிராமாதிகாரி எதிரில் உட்கார்ந்து தலையசைத்துக்கொண்டிருந்து நல்ல சந்தர்ப்பத்தில் உடல் தெரியாமல் உறங்கி விழுவார். அதைப் பார்க்கப் பார்க்க என் நெஞ்சம் பற்றி யெரியும். என்னசெய்வது? விதியை நொந்துகொண்டு வீட்டுக்கு வருவேன். வாசற்படி நுழைவதற்குள் என் மனைவி எதிரில்வந்து, 'அதென்ன அந்தம்-

மாள் அப்படி இருந்தாளே. கிராமாதிகாரியின் மனைவியென்று கிட்டிப்போனேன்; அந்தம்மாள் அலக்ஷியமாக அப்படிப் போய்விட்டாளே. நாலுபேர் நடுவில் எனக்கு உடல் குன்றிவிட்டதே" என்று முறைபிடுவாள். இவற்றில் ஒவ்வொன்றும் நேரும்போது பெருஞ் சங்கடமாகத் தோன்றும். இரண்டு மூன்று தினங்களில் சித்தசமாதானம் ஏற்பட்டுவிடும். அப்போது இந்த அற்ப விஷயங்களுக்காக நாம் இவ்வளவு வருந்த வேண்டுமோ என்று எண்ணி நானே வியப்படைவது முண்டு.

என் மக்கள் எல்லாம் எதிலும் மிதமாகவே பழகி வந்தார்கள். அவர்கள் நல்ல வழியில் கல்வி கற்று வந்தார்கள். எவ்வகையான கஷ்டங்களையும் சகிக்கக் கூடிய தேக பலமும் பெற்றிருந்தார்கள். அதனல் அவர்கள் கடினமான தொழில்களையும் சுறுசுறுப்புடன் செய்வார்கள். என் புத்திரிகளோ பேரழகும் முகமலர்ச்சியும் வாய்ந்தவர்கள். யான் என் மக்கள் என்னைச் சூழ நிற்கும்போது சகலசெல்வமும் பெற்ற குசேலரை நினைத்துக் குதூகலம் அடைவேன். எனக்கு ஆறு குழந்தைகளே ஆண்டவன் அருள் செய்திருந்தாலும், அவர்களைக்கொண்டு என் நாட்டிற்கு நான் அளவிறந்த நன்மைகள் செய்ததாக எண்ணி இன்பமடைவேன். எனது மாமனர் எனக்குப் பதினுயிரம் ரூபாய் ஆஸ்தி எழுதி வைத்தார். அதனல் மெய் கண்டான் என்னும் அவர் பெயரையே என் மூத்த குமாரனுக்கு இட்டேன். எங்களுக்கு இரண்டாவதாக ஒரு பெண் பிறந்தது. அதை திலகவதி என்று என் தங்கை பெயரால் அழைக்க எண்ணங்கொண்டேன். என் மனைவி, "அதென்ன அந்த கிழப் பெயர்; அவளை மோஹனங்கி என்று அழைக்கவேண்டும்" என்றாள். அவள் கட்டுக்கதைகள் வாசிப்பவள். கதைப் புஸ்தகத்தில் கவனமுள்ளவர்களுக்கு விதவிதமான பெயர் தோன்றுவது வியப்பாகுமா! இரண்டு வருஷத்திற்குள் மற்றொரு குழந்தை பிறந்தது. அதுவும் பெண்தான். அதற்கு என் தங்கை பெயரை இடலாமென்று எண்ணினேன். அதற்குள் மைத்துனர் வந்து அதை ஸ்வீகாரம் செய்துகொண்டு 'லலிதாங்கி' என்று பெயரிட்டார். அதனல் எங்கள் குடும்பத்தில் இரண்டு விசித்திரமான பெயர்கள் விளங்கலாயின. பெண்களுக்குப் பெயரிடுவதில் மாத்திரம் எனக்கு சுவாதீனம் ஏற்படாவிட்டாலும் நான்காவது பிறந்த பிள்ளைக்கு என் மனம்போலவே மகா

தேவன் என்று பெயரிட்டேன். மற்றும் நான்கு வருஷங்களுக்குப் பிறகு பின்னும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள்.

என் குழந்தைகள் என்னைச் சூழ இருக்கும் போது எனக்கு அளவிறந்த ஆனந்தம் உண்டாகும். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்' என்றல், இல்லறத்திலிருப்பவர்க்கு காதல் இல்லாதிருக்குமா. அதிலும் ஜனபி விருத்தியை விரும்பிய எனக்கு அது இல்லாமற் போகாது. என் மனைவி தன் மக்களைப் பற்றி அதிகமும் பெருமை பாராட்டி மகிழ்ச்சியடைவாள். எங்கள் வீட்டுக்கு வருவோர் போவோர் என் மனைவியை நோக்கி, 'அம்மா! இந்த ஊருக்குள் உன் பிள்ளைகளைப் போல் அழகுள்ள குழந்தை ஒன்று மில்லை' என்று சொல்வார்கள். அதற்கு அவள், "அதற்கென்ன தடை" என்று பெருமிதமாகச் சொல்லுவாள்.

மோகனவல்லிக்குப் பதினேந்து வயதாயிற்று. பெண்களுக்கு உருவ அமைதிக்குத் தக்கவாறு உத்தம குணங்கள் தோன்றும், மற்றப் பெண்களிடத்து இவ்விஷயம் மாறுபட்டாலும், என் குமாரத்திகளிடத்து மட்டும் இது இயற்கையாக அமைந்திருந்தது என்று உறுதியாகச் சொல்லலாம். மோகனு தன் அழகைக் கண்டு பலரும் தன்னை விரும்பவேண்டும் என்று எண்ணுவாள். லலிதாங்கியோ உத்தமனை ஒருவன் தன்னை விரும்பினால் போதும் என்று நினைப்பாள்.

லலிதாங்கி பிறர்கண்டு குற்றங்கூறுவார்கள் என்று அஞ்சி தன் நற்குணங்களையும் நாணத்தால் மறைக்க முயலுவாள். மூத்தவள் நான் சந்தோஷமாக இருக்கும்போது தந்திரமாகப் பேசி உற்சாகப்படுத்துவாள்; இளையவளோ யான் எதையேனும் எண்ணி ஏக்கங்கொண்டிருக்கும்போது அருகில் வந்து அன்புடனிருந்து, யுக்திகள் சொல்லி ஊக்கந் தருவாள். ஆனால் இவர்கள் இருவரும் எப்போதும் இப்படியே இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. சில சமயங்களில் மாறுபட்டு இருந்தார்கள். ஒவ்வொரு தினத்தில் மூத்தவளைப்போல் இளையவளும் இருப்பதுண்டு; இளையவளைப் போல் மூத்தவளும் இருப்பதுண்டு.

என் மூத்த குமாரன் கண்ணப்பன் சென்னைச் சர்வகலாசாலையில் கல்வி கற்று வந்தான். அவனை நன்றாகப் படிக்கவைத்து உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தவேண்டும் என்பது எனது கருத்து. இரண்டாவது குமாரனை எழுதப் படிக்கக் கற்ற பிறகு ஏதேனும் கைத்தொழில் பழகச் செய்யவேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதனால் அவன் வீட்டிலேயே பற்பல பாடங்களையும் பயின்று வந்தான்.

(தொடரும்)

பத்திராதிபர்.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-9. | 1914வது மேமீ | மாதம் 12

TAMIL ALPHABET AND SPELLING

தமிழ் நெடுங் கணக்கும் எழுத்துக் கூட்டலும்

உலகத்தில் உள்ள பாஷைகளில் பல வளருந் தன்மையுடைவை. சில தோன்றிய காலந் தொட்டு வளர்ச்சியின்றி ஒரே லையில் இருப்பவை. பாஷைக்கு வளர்ச்சி யாவது யாது? ஒரு பாஷைக்கு உரியவர் மற்றொரு பாஷைக்கு உரியவரோடு கலந்து ர்வாடுவதனாலும், அந்நிய தேசங்களுக்கு யாத்திரை செய்வதனாலும், பிற நாடுகளோடு வியாபாரஞ் செய்வதனாலும், பிற மதங்களை அனுசரிப்பதனாலும், மற்றும் பலவாற்றாலும் அந்நிய பாஷையிலுள்ள சொற்கள் ஒரு பாஷையிற் புகுவது உண்டாகும். அப்போது சொற்களினாலும் அபிப்பிராயங்களினாலும் பாஷைக்கு வளர்ச்சியுண்டாகும். மேற்கண்டவாறு எவ்வித மாறுதல் உண்டானாலும் சில பாஷைகள் தம்மில் வேறு பாஷைச் சொற்கள் புகாவண்ணம் தனியே நின்று விடுகின்றன. அத்தகைய பாஷை-

களுக்கு வளர்ச்சி ஏற்படாது. பல பாஷைகளோடும் உறவாடித் தன்னிடத்தில் இல்லாத சொற்களையும் அபிப்பிராயங்களையும் மேற் கொள்ளும் பாஷையே சிறப்படையும். அவ்வாறு மேற்கொள்ளாத பாஷை நாளடைவில் இறந்துபடும்.

இவ்வகையில் நாம் இப்போது நமது தமிழ்ப் பாஷையின் வளர்ச்சியைப்பற்றி ஆராய்வோம். ஒரு காலத்தில் நந்தம் தமிழ்ப் பாஷை, கலவை யில்லாத தனிமொழியாக விளங்கி யிருந்தது. பின்பு தமிழருக்கு வடமொழியாளரோடு உறவும் வடமொழியோடு கலப்பும் உண்டானபோது வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் புகுவனவாயின என்று முன்பே கூறினேம். அதுவுமன்றி, அக் காலத்தில் தமிழ்ப் பாஷையே பலதிறப்பட்டு வழங்குவதாயிற்று. அவைதாம் செந்தமிழ் நிலத்தைச்சார்ந்த பன்னிரண்டு கொடுந் தமிழ் நாடு என்பன. இவற்றை,

'தென்பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு — நன்றுய
சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.'

என்னும் வெண்பாவினால் அறியலாகும். இந்த நாடுகளில் எல்லாம் வழங்கியது தமிழேயாயினும், அவை செந்தமிழ் நாட்டு வழக்கிற்கு சிறிதும் பெரிதும் மாறுபாடடைந்தே இருந்தது. இவற்றை நன்னூல் முதலிய இலக்கணங்களிற் கூறிய உதாரணங்களால் தெரிந்து கொள்ளலாகும். இதுவும் அன்றி தமிழ் நாட்டைச் சூழ்ந்து வேறு பாஷைக்குரிய பதினேழு நிலங்கள் நிலவின. அவற்றை,

'சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகம்
கொங்கணங் கன்னடம் கொல்லந் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கமகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த் தமிழ்சூழ் பதினேழ் புனிதாபிவையே'

என்னும் கலித்துறையா லறியலாகும்.

இதுவும் அன்றி தமிழ் பாஷையினின்றும் பிறந்தனவர்கிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய பாஷைகளும் உள்ளன. தமிழ் மொழியுள் மேற்கூறிய பாஷைச் சொற்கள் எல்லாம் கலந்துள்ளன. மற்றும் வர்த்தகஞ் செய்ய விரும்பி இங்கு வந்தவர்களாகிய ரோமர், கிரேக்கர், போர்த்துக்கேசியர், டச்சுக்காரர், பிராஞ்சியர், இங்கிலீஷ்காரர், அரப்பியர் முதலானோரது பாஷைகளும் தமிழிற் கலந்தன. இத்தனை பாஷைச் சொற்கள் தமிழிற் கலப்படைந்தும், இதுவரையில் தமிழ் எழுத்துக்கள் மாறுபடாமலே, காலங் கழித்து வந்தமை அறிஞர் அனைவரும் உணர்வர். அந்தப் பாஷைச் சொற்கள் எல்லாம் தமிழ்ப் பாஷையிற் புகுந்தபோது தமிழின் போர்வையை அடைந்தனவே யன்றி அவற்றின் இயற்கை உருவத்தோடு புகுந்தனவல்ல. (தொடரும்)

பத்திராதிபர்.

MEN AND MANNERS

நாலு ஜனங்களின் நடவடிக்கை

(244 - ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

OFFICE OF THE REGISTRAR MADRAS

2. அம்பலவாசி

'அம்பலவாசி' என்னுஞ் சொல்லுக்கு 'கோயிலில் வசிப்பவன்' என்பது பொருள். திருப்பணி செய்யும் ஜாதியார்களுக் கெல்லாம் இது தொகுதிப் பெயர். கோயில்களுக்குரிய வேலைகளைச் செய்வதே தொழிலாக உடையவர்கள் திருப்பணி செய்பவர்கள் என்றும், திருத்தொண்டு செய்பவர்கள் என்றும் சொல்லப்படுவார்கள்.

'கேரளமாகாத்மியம்' என்னுங் கிரந்தத்தில் இவர்களுக்குப் பெயர் 'க்ஷேத்ரவாசினः' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பதத்திற்கு 'கோயிலில் வசிப்பவர்கள்' என்று அர்த்தமாம். இவர்களுக்கு, 'அந்தராளர்கள்' என்று மற்றொரு பெயரும் உண்டு. இந்தச் சொல்லுக்கு (அந்தரம்=இடை) 'இடையில் இருப்பவர்கள்' என்று அர்த்தமாகும்.

மலையாளத்தில் பிராம்மணர்கள் அல்லாமல், பிராமண - க்ஷத்திரியர் என்னும் ஒரு ஜாதியார் உண்டு. பிராமணர்களும், பிராமண-க்ஷத்திரியர்களும் உயர்ந்த ஜாதியார்கள். சூத்திரர்கள் தாழ்ந்த ஜாதியார்கள். உயர்ந்த ஜாதியார்களான பிராமணர், பிராமண-க்ஷத்திரியர் என்பவர்களுக்கும், தாழ்ந்த ஜாதியார்களான சூத்திரர்களுக்கும் நடுத்தரமாக அம்பலவாசிகள் இருப்பதனால், இவர்-

களுக்கு 'அந்தராளர்' (=இடைநிலையாளர்) என்னும் பெயர் வந்தது.

இவர்கள் ஆதியில் பிராமணர்களாக இருந்து, பிறகு அந்தப் பதவியினின்றும் இழிந்தவர்கள் என்று சொல்லுவார் சிலர். ஆதியில் சூத்திரர்களாக இருந்து பிறகு வரவர உயர்ந்த பதவியை நாடி வந்தவர்கள் என்று சொல்லுவார் வேறு சிலர். 'கேரளோற்பத்தி'யின் கிரந்தகர்த்தர் இவ் விரண்டாங் கொள்கையே உடையார்.

'அம்பலவாசி' என்னும் இனப்பெயரில் அடங்கிய ஜாதிகள் 1. நம்பியச்சன், 2. புஷ்பகன், 3. பூப்பள்ளி, 4 சாக்கியார், 5. பிராம்மணி அல்லது தெய்வம்பாடி, 6. அடிகள், 7. நம்பிடி, 8. பிலாம்பள்ளி, 9. நம்பியார், 10. பிஷாரடி, 11. வாரியர், 12. நாட்டுப்பட்டன், 13. தீயாட்டுண்ணி, 14. குருக்கள், 15. பொதுவாள் என்பனவாம்.

இந்தச் சாதியார்கள் எல்லாரும் கோயில்களுக்குச் சம்பந்தப் பட்டவர்களல்ல; பெரும்பாலும் கோயில் ஊழியமே தொழிலாக உடைய 'மூத்தது' என்னும் ஜாதியார் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களுமல்ல. கோயில்களில் வேலை மேற்கொண்டு, திருத்தொண்டு செய்தே ஆயுள் கழிப்பதனால், தங்கள் தந்தைவழியில் வந்த பாவங்கள் பரிகாரமாகுமென்று எண்ணி இவர்கள் திருப்பணியே தொழிலாக மேற்கொள்கிறார்களென்று தோன்றுகிறது.

இவர்கள் தாழ்ந்த சாதிகளினின்று உயர்ந்தார்களென்னும் பக்ஷத்தில், அதிகப் புண்ணியம் சம்பாதிக்க வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டு இவர்கள் திருத்தொண்டு பூண்டவர்கள் ஆக வேண்டும்.

மேற்சொல்லிய பதினைந்து சாதியார்களின் உற்பத்தியைப் பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கும் விஷயங்கள் சிலவற்றை இதனடியிற் குறித்திருக்கிறோம். ஆனால், இவைகளெல்லாம் உண்மையேயென்று உறுதியாகச் சொல்லமுடியாது.

ஆதிகாலத்தில் ஆரியமதத்தை யாசரித்துவந்த மலையாளிகள் சிறிதுங் கள்ளங்கவடு அற்று விவகரித்து வந்தார்கள்; பாவபுண்ணியங்களுக்கு மிகவும் பயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் தன்னயத்தையும் மானுவமான உணர்ச்சியையும்

MADRAS

பாராட்டாமல் அவர்கள் பாவத்தைப் போக்கிக் கொள்வதற்குத் தாமாகவே சித்தமாயிருந்தார்கள்.

தமது சாதியைப் பரிசுத்தமாக வைக்கவேண்டுமென்னும் பெருநினைவு கொண்டு, அவர்கள் கடவுள் ஒருவருக்குத் தவிர மற்றெவருக்குந் தெரியாமல் இரகசியமாகச் செய்த குற்றங்களையும் தாமே முன்வந்து ஒப்புக்கொண்டு, ஆசாரமுறைப்படி அதற்காக விதிக்கப்படும் தண்டனையை மனப்பூர்த்தியாக ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருந்தார்கள். பரோபகாரச் சிந்தையினால் மனமொப்பித் தாராளமாகத் தண்டனை மேற்கொண்டு கஷ்ட மனுபவிக்க இவர்களைப்போல முன்வந்த மானிடர்கள் எத்தேசத்திலும் எக்காலத்திலும் அரியர் ஆவார்கள்.

பல வகையாகப் பதிதர்களானவர்களை ஒன்றுகூட்டி ஓர் இனமாக அமைத்து வைக்கும் பொருட்டும், அவர்களினால் மற்றவர்களுக்கு எவ்விதமான சுத்தக் குறைவும் நேரிடாமல் காக்கும் பொருட்டும் வேறுவேறு சில்லறைச் சாதிகளும், இடைச்சாதிகளும் ஏற்பட்டன. இவை இயற்கையில் ஏற்பட்ட விவகார முறைகளினால் அமைந்தனவாகும். இவர்கள் நீதியிலும் ஒழுக்கத்திலும் தாழ்ந்திருப்பதற்குத் தக்கபடி, அந்தந்த இனத்திற்கு வேறு வேறு விதிகளும் ஆசாரங்களும் ஏற்படுத்தப் பட்டன. இவர்கள் வரவரத் தேறி உயர்தர நீதிகளையும் ஒழுக்கங்களையும் கைக்கொள்வதற்கு ஏற்றவாறு ஒவ்வோர் அம்சமும் அமைக்கப்பட்டது.

இந்தச் சாதிகளை மற்றச் சாதியார் இழிவாக நினைக்கவில்லை. தன்னுடைய உற்பத்தியை நோக்கி எவனும் விசனப்பட மாட்டான். ஒன்றன்மீது ஒன்றாக அமைந்துள்ள படிகளுள், ஒரு படி மற்றொன்றைப் பார்த்துத் தன்னுடைய நிலைமை தாழ்ந்திருக்கிறதென்று விசனப்படாதது போல, இந்தச் சாதியார்களும் ஜீவயாத்திரையில் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையைக் குறித்து விசனப்படாமல், இனிக் காலக்கிரமத்தில் தமக்கும் உயர்பதவி வருமென்று உண்மையாகவே நம்பி, ஊக்கத்துடனும் பொறுமையுடனும் உழைத்து விவகரித்து வருவார்கள்; தம் பிறப்பு இழிவுற்றதென்று எண்ணிச் சிறிதும் சிந்தைப்பட மாட்டார்கள். இயற்கையமைப்பில் ஏற்பட்ட குறைக்கு எவரேனும் சிந்திப்பார்களோ?

தமக்கு ஏற்பட்டுள்ள ஜனசார விதிகளின்படி தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றிவரின், தமது முத்தாதையர் இழந்த

உயர்பதவி மற்றொரு ஜன்மத்தில் தமக்குச் சித்திக்கும் என்று அவர்கள் திடமாக நம்பி இருப்பார்கள். இப்படித் தன்னயக் கருத்தை ஒழித்துப் பெரு நோக்குக்குக் காட்டாக விளங்கும் ஜனங்கள் உண்டானால், ஜனசமூகம் மிகவும் மேன்மையுற்றுப் பிரகாசிக்கும் என்பது சொல்லாமலே அமையும்.

இந்த அந்தரஜாதிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தொழில்களைக் கவனிக்குமிடத்து, அவை சமுதாயக் கட்டுப்பாட்டை உறுதிப் படுத்துவதற்கு ஏற்றவாறே அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பது புலப்படும். ஒரு குடும்பம் க்ஷேமப்படுவதற்கு அதனில் உள்ளவர்கள் ஒவ்வொரு காரியத்தை மேற்கொண்டு செய்வதே தகுதியென்னும் உண்மையை அநுசரித்து, இவர்களுக்குத் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வேலைப் பாகுபாட்டு விதிக்கும், பற்பல தொழிலாளிகளின் ஒற்றுமைக்கும், திருப்திக்கும், சிறிதுங் குற்றங்குறைகள் தோன்றுவண்ணம் இந்தச் சாதியார்களுக்கு வேலைகள் அமைந்திருப்பது வியக்கத் தக்கதே யாகும்.

இந்தியாவில் பற்பல ஜாதிகள் ஏற்பட்டிருப்பதன் கருத்தையும் நோக்கத்தையும் ஆராய்ந்து பார்த்தால், எல்லாருக்கும் நன்மையும், மேன்மையும், சௌக்கியமும் அளிப்பதற்கு இன்றியமையாத பற்பல தொழில்களில் தகுதி, திறமை, தேர்ச்சி ஆகிய இவைகளை படிப்படியாக வளர்க்கும் பொருட்டு அந்தத் தொழில்களை வம்சபரம்பரையாகத் திட்டமாக்கியுள்ளார்கள் என்று புத்திசாலிகளெல்லாரும் தேர்ந்து தெளிந்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மற்றும், ஒரு தொழிலாளர் மற்றொரு தொழிலை மேற்கொள்வதனால் போட்டியும் பகையுங் குழப்பமும் உலகத்தில் மேலிடும் என்று எண்ணி அப்படிப்பட்ட குழப்ப முண்டாகாமல் தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு ஜாதிக்கு ஒவ்வொரு தொழில் உரியதெனவும், அந்தத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலைக் கைக்கொள்ள லாகாதெனவும் விதித்திருக்கிறார்க ளென்று தோன்றுகின்றது.

உழைப்பாளியாகிய சூத்திரன் ஜனசமூகத்திற்கு ஆதாரமாகிய அடிப்படை யாவான். ஆதலால், வேறு ஜனங்கள் வந்து கலந்து அவனுடைய நிலைமையைக் குலைக்கக்கூடாது; வாளரிபஞ் செய்து பொருளீட்டும் வைசியனுக்குப் போட்டியாக மற்றவர்கள்

தோன்றி அவனுடைய நெறிமுறையைக் கெடுக்கக்கூடாது; நாட்டின் அகத்தில் ஒழுங்கும், புறத்தில் சமாதானமும் குடிகொண்டிருக்கும்படி பரம்பரையாகக் காத்துவருகிறவன் ஒருவன் இருக்க, மற்றவர்கள் வரவர வலி மிகுந்து அவனுடைய அந்தஸ்தைக் கைக்கொண்டு அவன் செய்யுங் காரியங்களைத் தடைப்படுத்தக் கூடாது.

குற்றஞ் செய்த பிராமணனை அவனுடைய சாதிக்குரிய பதவியினின்றும் இழிவு படுத்தாமல், பிராமணத் தொழிலிலேயே வைத்திருக்கக் கூடாது. ஆகையால், அவனுக்கு வேறு வேலைகள் இட வேண்டிய தாயிற்று. பலவகையான கோயில் ஊழியங்கள் அவர்களுக்குத் தகுதியானவை யெனக் கொள்ளப்பட்டன. புஷ்பகன், வாரியர் முதலானவர்களுக்குப் பூமாலைகள் தொடுக்குந் தொழிலும், சாக்கியார்களுக்குக் கடவுளின் திருவிளையாடல்கள் முதலிய வைகளை எடுத்துக் கூறும் பாடல்களை ஓதுவதும் தொழில்களாக ஏற்பட்டன.

இப்படிப்பட்ட தொழில்கள் கோயிலுக்குள் பிராமணர்கள் செய்யவேண்டிய வைதிக காரியங்களுக்கும், கோயிலுக்கு வெளியில் மற்றச் சாதியார்கள் செய்யத்தக்க லௌகிக காரியங்களுக்கும் இடைப்பட்டவைக ளாகும். கோயில்கள், அவைகளுக்கு உள்ளுறையாகப் பொதிந்து நிற்கும் வைதிகக் கொள்கைகளை உணர்த்தும் வெளிப்படையான குறிகளே யன்றே? விரித்துக் கூறின், அவை இயற்கையில் குப்தமாக அமைந்துள்ள இரகசியங்களைத் தெரிவிப்பதற்கான வெளித் தோற்றங்களின் அமைப்புகளே யாகும்.

இந்தக் காரணத்தினாலே, வைதிகத்திற்கும் லௌகிகத்திற்கும் நடுத்தரமாக உள்ள தொழில்களைச் செய்வதற்கு நடுத்தரமான அந்தஸ்துள்ள அந்தராளர்கள் என்னும் சாதி ஏற்பட்டதுபோலும். அந்தராளர்கள் எனப்படுவோர் இந்து ஜன சமூகத்தில், நடுத்தரமான அந்தஸ்து உடையவர்கள்.

பிராமணர்களுடன் ஒரே பந்தியில் போசனம் செய்யும் உரிமை க்ஷத்திரியர்களுக்கு உண்டு ஆதலால், அவர்கள் ஜாதிக் கிரமத்தில் பிராமணர்களுக்கு அடுத்த படியில் இருக்கிறார்கள். நீட்டுக் காக்கும் விஷயம் சாதியின் அந்தஸ்துக்குத் தகுந்தபடி விலோம விகிதமாக (inverse ratio) ஏற்பட்டிருக்கின்றது. எப்படியெனில்,

பிராமணர்கள் 10 நாள் தீட்டுக் காக்கிறார்கள், க்ஷத்திரியர்கள் 11 நாள், (மலையாளத்து) சூத்திரர்கள் 16 நாள். அம்பலவாசிகள் பெரும்பாலும் 12 நாள் தீட்டுக் காக்கிறார்கள்; சில விஷயங்களில் 10 நாளே தீட்டுக் காக்கிறதும் உண்டு; வேறு சில விஷயங்களில் 13, 14 நாட்கள் காப்பதும் உண்டு. ஆனால், ஒரு பொழுதும் 16 நாள் தீட்டுக் காப்பதில்லை.

இனி, அம்பலவாசி என்னும் இனத்திற் சேர்ந்த சாதிகளை ஒவ்வொன்றாக எடுத்து விசாரிப்போம். (இன்னும் வரும்)

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

KUMARA GURU

குமரகுரு

இரண்டாம் அதிகாரம்

குடும்ப சம்பந்தமான விஷயங்களை என் மனைவி கண்காணித்து வந்தாள். ஆன்மார்த்தமான விஷயங்கள் அனைத்தையும் நானே நடத்தி வந்தேன். எனக்கு மாதச் சம்பளம் ஐம்பது ரூபாய். நாங்கள் சுகமாக ஜீவிக்க வேண்டிய செல்வத்தை கடவுளருளால் அடைந்திருந்தோ மாதலால், என் சம்பளத்தை ஏழைப் பிள்ளைகளுக்கும் அனாதையான கைம்பெண்களுக்கும் எழுதி வைத்து விட்டேன். லௌகிக விஷயத்தில் எனக்கு அவ்வளவாகப் பற்று கிடையாது. ஆன்மார்த்தமான விஷயங்களில் அணுவளவும் குறைவின்றி இலவசமாக உழைக்க வேண்டும் என்பது எனது அந்தரங்கமான அபிப்பிராயம். இந்தக் கருத்தினாலேயே எனக்கு உதவியாகப் பரிசாரகன் ஒருவனையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆலயத்திற்கு வருவோரில் ஒவ்வொரு வருடனும் அன்போடு அளவளாவ வேண்டும் என்பது எனது கருத்து. கலியாணம் செய்துகொண்டு குடும்ப விருத்தியில் இருப்பவர்களைக் கண்டால், நீங்கள் எதையும் அவசரமாகச் செய்யலாகாது. சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும். துரப்பியாசங்களைத் தொலைக்க வேண்டும் என்று சொல்லுவேன். வாலிபர்களைக் கண்டால் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தை அவர்களுக்கு உண்டாக்க முயல்வேன். இரண்டு மூன்று வருஷத்திற்குள், நாங்கள் வசித்திருந்த வேகாமங்கலத்தில் விசித்திரமான சில குறைவுகள் ஏற்பட்டன. அவ்வூரில் —

மணங் கொள்ளாத மைந்தர்கள் இல்லை
பிணங்கும் அகந்தை பெற்றவ ரில்லை
மதபானங்கொள் மாந்தரு மில்லை
இதுவே குறையவ் வெழில் நகருக்கே.

எப்போதும் விவாகத்தைப் பற்றிப் பேசுவதும், கன்னியருக்குக் கணவரைத் தேடுவதும், வாலிபருக்கு மனைவியைத் தேடுவதும் எனக்கு இன்பகரமான வேலையாக இருந்தன. கலியாணமாகாத கன்னிகையைக் கண்டாலும் மண முடியாத மைந்தரைக் கண்டாலும் எனக்கு மனம் சகிக்காது. சதிபதிகளாகச் சார்ந்து வரக்கண்டால்தான் நான் சந்தோஷ மடைவேன். பிள்ளைகளோடு வரக்கண்டால் பேராநந்தம். இல்வாழ்க்கையினால் உண்டாகும் இன்பங்களை விளக்கி எண்ணிறந்த வியாசங்கள் எழுதி வெளியிட்டேன். அதிலும் ஓர் அபூர்வமான அபிப்பிராயத்தை என் சித்தாந்தமாகக் கொண்டிருந்தேன். ஒவ்வொருவனும் ஏகபத்னீ விரதமுடையவனாக இருக்க வேண்டும். மனைவி இறந்துவிட்டாலும் மறுவிவாகம் செய்து கொள்ளக்கூடாது என்பது எனது துணிபு.

இந்த விவாதத்தைச் சிக்கறுத்துச் சீர்படுத்த யானை முதல்வனாக முன் நின்றேன். அது விஷயமாக நன்கு உழைத்து அநேக நூல்கள் வெளியிட்டேன். புஸ்தகங்களே யன்றி பத்திரிகைகளும் பிரசுரம் செய்தேன். ஆனால் ஒன்றுமேலும் விற்பனை யானதில்லை. உலகத்தில் உண்மையை உணர்ந்தோர் சிலரே; உத்தமரும் சிலரே. அதனால் நமது நூலை சிலரே கையாடுவார்கள் என்று எண்ணித் திருப்தியடைவது வழக்கம். சில நண்பர்கள் இது என்னிடத்தில் ஏற்பட்டுள்ள குறை என்று இகழ்ந்து கூறுவார்கள். ஐயோ அவர்களுக்கு என்ன தெரியும்! இதன் உண்மையை அவர்கள் உணர்ந்தவர்களா. அவர்கள் இவ் விஷயத்தில் ஊக்கங்கொண்டு உழைத்தவர்களா. ஒன்றுமில்லை என்று உள்ள மகிழ்ந்திருப்பேன். யார் என்ன சொன்னாலும், நான் என் சித்தாந்தத்தைப்பற்றி நினைக்க நினைக்க எனக்கு அதன் விசேஷமே வெளியாவதாயிற்று.

ஒரு நாள் சமாதியறைக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு சமாதிக்கல்லில் 'மங்களாம்பிகை — விசுவேசத்து ஏகபத்னி'

என்று செதுக்கி எழுதி யிருந்தது. அதைக் கண்டதும் எனக்-கோர் ஆநந்தம் உண்டாயிற்று. மனைவி இறந்தபின் மண்ணின் மேல் புதைத்து வைப்பதைவிட அவள் இருக்கும்போதே அவள் இருதயத்தில் பதிய வைப்பது உத்தமம் என்று எனக்குத் தோன்றிற்று. உடனே ஒரு பலகையில் என் மனைவி சமயோசித புத்தி, சிக்கெனம், அடக்கம் முதலிய நற்குணங்களே தன் வாழ் நாள் முற்றிலும் அணியாகக் கொண்டிருந்தாள் என்று சுத்தமாக எழுதி, சமையல் வீட்டின் சுவரில் மாட்டி வைத்-தேன். அதனால் அநேக அநுகூலங்கள் உண்டாயின. என் மனைவி அப்பலகையில் எழுதிய வாக்கியத்தைக் காணுந்தோறும், அதிற் கண்டபடியே நடந்து, அழியாப் புகழை அடைய வேண்டும் என்று ஆர்வங் கொண்டாள். அவள் அவ்வாறு நடந்து கொள்ளவே எனக்கும் அவளிடத்து இடையறாத அன்பு உண்டென்பதும் அவளுக்கு உறுதியாயிற்று. மற்றும் தனக்குப் பின்னால் தன் புகழ் நிலவ வேண்டும் என்னும் எண்ணம் அவளுக்கு உதிக்கும் போதெல்லாம், மரணம் என்பது தலைமேல் நிற்கிறது என்பதையும் அவள் தன் மனத்துட் கொள்ள இடமுண்டாயிற்று.

இது நிற்க, என் மூத்த குமாரன் பாடசாலையை விட்டு நின்றதும், ஆலயத்தைச் சார்ந்த ஓர் அதிகாரியின் குமாரத்தியை வரித்துக்கொள்ளக் கருத்துக் கொண்டான். யான் வாலிபரைக் காணுந்தோறும் விவாகத்தைப் பற்றி வற்புறுத்திக் கூறுவதை அவன் பல முறையும் கேட்டிருப்பவனுதலால், தானும் விரைவில் விவாகம் செய்துகொள்ள நிச்சயித்தான் போலும். பெண்ணைத் தேடினதிலும் பெரிய இடத்தில்தான் தேடினன். அவருக்கு வேண்டிய மட்டும் சொத்து உண்டு. தன் பெண்ணுக்குச் சிறப்பாகவே சீதனங் கொடுக்கக் கூடியவர்; என் குமாரனோ இவற்றை யெல்லாம் பெரிதாக எண்ணினவனல்லன். அவளது உருவத்தைக் கண்டே உள்ளங் கொண்டான். என் இரண்டு குமாரத்திகள் தவிர மற்றையோர் அனைவரும் அவளை அழகி யென்றே ஒப்புக் கொள்வார்கள். உண்மையில் அவள் கபடமற்றவள். பெண்களுக்குரிய உத்தம குணங்கள் வாய்க்கப் பெற்றவள்; அவளது கண்ணுடிபோன்ற கன்னமும் களங்கமற்ற முகமும் தெளிந்த பார்வையும் அவளுக்கிருந்த எழிலை எடுத்துக் காட்டின. பலவிதமாக வர்ணித்துப் பயனென்ன, அப்பெண்ணின் உருவத்தைக் கண்டால், வயது

சென்றவர்களும் சற்று நின்று உற்று நோக்காமல் அப்புறம் போகமாட்டார்கள். நான் என் புத்திரனுக்குத் தக்க ஏற்பாடுகள் செய்வேனென்பது பெண்ணின் தகப்பனுருக்குத் தெரியும், அதனால் இந்த சம்பந்தம் செய்து கொள்வதில் அவருக்கு அபிப்பிராய பேதம் கிடையாது. ஆகையால், நாங்கள் இரு குடும்பத்தாரும் கொள்வன கொடுப்பன செய்து கொள்ள விரும்பினோர் இருக்க வேண்டியவாறே அன்புற்று வசித்திருந்தோம். பையனும் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போவது வழக்கம். அப்படிப் போவதும் வருவதுமே அவனுக்கு ஆநந்தமாக இருந்தது.

நாங்கள் பாட்டுக் கேட்டுக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்திருப்போம். உல்லாசமான காலங்களில் உலவிவர வெளியே போவதுண்டு. காலையில் சாப்பிட்டானதும் வீட்டிலுள்ள சீமாட்டிகள் சிங்காரித்துக் கொள்ளத் தொடங்குவார்கள். பிறகு புஸ்தகத்தை யெடுத்துப் படிக்க ஆரம்பிப்பார்கள். ஒரு நாள் எல்லாம் சிரமப்பட்டு ஒரு பக்கமாவது படித்து முடிப்பார்கள். பிறகு என்ன வேலை, கண்ணுடியும் கையுமாக இருந்துகொண்டு, தம் அழகைப் பார்த்துப் பார்த்து ஆநந்தம் அடைவதுதான் வேலை. உச்சி வேளையானதும் சாப்பாட்டுக்கு உட்காருவோம். என் மனைவி எதிரில் வந்து நின்று பரிமாறுவாள். என் தாயார் பரிமாறமாத்திரம் ஒருவரையும் விடமாட்டாள் என்று பெருமையாகப் பேசுவாள். பதார்த்தவகைகளைப் படைத்துக் கொண்டே, அவற்றைச் சமைத்த வரலாறுகள் அனைத்தையும் வரிசையாகப் பிரசங்கிப்பாள். அவற்றை யெல்லாம் காதாரக் கேட்டுக்கொண்டே கையார எடுத்து வயிறாரச் சாப்பிடுவோம். நாங்கள் சாப்பிட்டு முடிந்ததும், சங்கீத வாத்தியார் வருவார். அவருடைய சகாயத்தினால், என் புத்திரிகள் இன்னிசையாகப் பாடுவார்கள். அதைக்கேட்டுக்கொண்டே நாங்கள் ஆநந்தமடைந்திருப்போம். பிறகு கொஞ்ச நேரம் வீடுமுழுதும் பாட்டுங் கூத்துமாக இருக்கும். வேறு ஆட்டத்தில் எங்களுக்கு மனஞ் செல்வதில்லை. தாயம் முதலிய, எந்த ஆட்டத்திலும் எனக்கு விருப்பம் கிடையாது. சொக்கட்டான் முதலிய சூதாட்டத்தைச் சொப்பனத்திலும் நினைப்பதில்லை. சதுரங்கம் ஆடுவதில் மட்டும் சற்று ஆவலுண்டு.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன. மணமக்கள் இருவரும் மணத்தின் மேல் மிக்க விருப்பங் கொண்டதை யறிந்து, முகூர்த்த

நாள் நிச்சயிக்கத் தீர்மானித்தோம். கலியாண மென்றால் சாமானியமா. திடீரென்று வைத்துக் கொண்டால் தீர்ந்து விடுவதா. அதிலும் என் பெண்சாதிக்குச் சொல்ல வேண்டியதில்லை. எதையும் சிறப்பாகச் செய்ய வேண்டு மென்பது அவளுக்கு விருப்பம். அதனால் அவள் தலைகால் தெரியாமல் அல்லாடிக் கொண்டிருக்கப் புத்திரிகள் மட்டும் புற்றுபோல் ஒரு புறத்தில் இருப்பார்கள். நானே, வேறொரு விஷயத்தில் கருத்தைச் செலுத்தி யிருந்தேன். ஏகபத்னீ விரதத்தைப்பற்றி யான் எழுதின வியாசத்தை விரைவில் வெளியிடத் தீர்மானித் திருந்தேன். அது விஷயத்திலும் நடையிலும் சிறந்த தென்று தோன்றினமையால், எனது அரிய நண்பருக்குக் காட்டி சந்தோஷமடைய வேண்டுமென்று எண்ணங் கொண்டேன். அவரும் என் அபிப்பிராயங்களை ஆமோதித்து, ஊக்குவிப்பார் என்னும் நம்பிக்கையுடன் அதை அவருக்கு வாசித்துக் காட்டினேன். வாசித்து முடிந்த பிறகுதான் என் கொள்கைக்கு முற்றும் மாறான எண்ண முடையவ ரென்பது புலப்பட்டது. அதற்குத் தக்க காரணமும் ஏற்பட்டது. அவர் அப்போது நாலாவது விவாகம் செய்து கொண்டிருந்தார். இவருக்கு ஏகபத்னீ விரதமென்றால் எரிச்சலுண்டாவது சகஜந்தானே. அதன் மேல் எனக்கும் அவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அது வர வரத் தென்றல் முற்றிப் பெருங் காற்றாயிற்று. அதனால் என் குமாரனுக்குக் குறித்த விவாகத்திலும் விவாத முண்டாகும் போல் தோன்றிற்று. முடிவில் இந்த விஷயத்தைப் பற்றி விவரமாகப் பேசி முடிக்கக் கலியாணத்திற்கு முன்னாளைக் குறித்துக் கொண்டோம். அன்று பலரும் வந்திருப்பார்கள் என்பது என் எண்ணம். வாதிக்கும்போது ஒருவர்க் கொருவர் சற்றும் பின் வாங்காமல் சாமர்த்தியமாகவே பேசினோம். அவர் என்னை வேத பாகியன் என்று நிந்தித்தார். நானும் அவரை அவ்வாறே திருப்பிச் சொன்னேன். பிறகு அவர் ஒன்று சொல்ல, நான் ஒன்று சொல்ல வாது முற்றுவதாயிற்று. வாக்குவாதம் அதிக மும்முரத்திலிருக்கும் போது, பந்துக்களில் ஒருவர் என்னை அழைத்துக் கொண்டு வெளியே வந்து, இந்த விவாகம் நடக்குந்நியுமாவது இந்த வாதத்தை நிறுத்தி வையுங்கள் என்றார். என்ன சொன்னீர், சத்தியமான கொள்கையை நாட்டுவதை விட்டா ஒரு காரியத்தைப் பார்ப்பது என்றேன்.

பத்திராதிபர்.

CLEANSING

சௌசம்

1. அழுக்கு, துர்நாற்றம் முதலியவைகளைப் போக்கடிப்பதற்கு சவர்க்காரம் முதலியவைகளைத் தேய்த்துக் கழுவுவது வழக்கம். ஒவ்வொரு பண்டத்தையும் சுத்தி செய்வதற்கு ஒவ்வொரு வஸ்துவை உபயோகிக்க வேண்டி யிருக்கிறது. அந்த வஸ்துக்கள் புளி, சீக்காய், சாம்பல், பிண்ணாக்கு, கடலைமா முதலியனவாம். ஆனால், துர்நாற்றத்தை போக்கடிப்பதற்கு மண்ணுக்கு உள்ள யோக்கியதை மற்றொரு வஸ்துவுக்கு மில்லை. இது எல்லா வைத்திய சாஸ்திரங்களினாலும் ஒப்புக் கொள்ளப் பட்ட விஷயம்; எல்லா தேசத்தவர்களும் அநுபவத்தினால் தெரிந்த விஷயம்.

2. காய்ந்த மண்ணின் தன்மை இப்படிப்பட்ட தென்று தெரிந்த பிறகு, துர்நாற்றத்தைப் போக்குவதற்கு அதைத் தவிர வேறு எதை உபயோகித்தாலும் மனத்திற்கு சமாதானம் ஏற்படாது. தினந்தோறும் மலங் கழித்த பிறகு, ஆசனத்தை நீர் விட்டுக் கழுவுவது சுத்தியின் பொருட்டு ஏற்பட்ட காரியமாகும். மலத்தின் நாற்றம் முற்றும் அற்றுப் போகக் கழுவ வேண்டியது அவசியமாதலால், காய்ந்த மண்ணினால் தேய்த்துக் கழுவ வேண்டும் என்பது நமது சாஸ்திரங்களின் கட்டளை ஆகும்.

3. அப்படி உபயோகிக்கும் மண், கல், கரடு முதலியவை இல்லாமல் மிருதுவாகவும் காய்ந்ததாகவும் இருக்க வேண்டும். இவ்விதமாகச் சுத்தி செய்தா லல்லாமல், அழுக்கும் நாற்றமும் ஒழிந்தன என்னும் திருப்தி உண்டாகாது. அகத்திலும் புறத்திலும் உள்ள மலத்தைப் போக்குவதே சுசி எனப்படும். மனத்திற்கும் தேகத்திற்கும் சுத்தம் ஏற்படத்தக்க காரியத்தைச் செய்வதே சௌசம் எனப்படும்.

4. சௌசத்திற்கு மண்ணை முக்கிய சாதனமாகக் கொண்ட ஆரியர்களின் புத்தியையும், சாஸ்திர ஞானத்தையும் மிகக் கொண்டாட வேண்டி யிருக்கிறது. ஆனால், கல்வியும் விவேகமும் மிகுந்தன வெனப் பெருமை பாராட்டும் இக் காலில் இந்த

ஆசாரம் கைவிடப்பட்டிருப்பதைப்பற்றி மிகவும் விசனிக்கவேண்டியிருக்கிறது. இதுவே இக் காலத்தவரது நாகரிகம் போலும்.

5. மண்ணை உபயோகிக்காமல் எவ்வளவு நேரம் கழுவினாலும், எவ்வளவு நன்றாகக் கழுவினாலும், மண்ணிட்டுத் தேய்த்துக் கழுவுவதில் பாதி சுத்தங்கூட ஏற்படாது. வேறு எந்த வகையாகக் கழுவினாலும், கழுவுவதற்குச் சற்றுத் தாமதித்தாலும் சுசி உண்டாகாது; நம்முடைய மனத்தில் அருவருப்பே மிகுந்திருக்கும்.

6. கக்குசில் மலங் கழிப்பதற்கு முன் காய்ந்த மண்ணைப் போட்டு, மலங் கழித்த பிறகு அதன் மீது காய்ந்த மண்ணைப் போட வேண்டியது அவசியமாகும். கல்லினாலும் காரையினாலுங் கட்டியிருக்கும் கக்குசுகளில் மூத்திரம் பெய்யுமுன் நீரை விட்டுக் கழுவ வேண்டியதும், மூத்திரம் பெய்த பிறகு அந்த இடத்தில் நீரை விட்டு மறுபடி கழுவ வேண்டியதும் அவசியமாகும். இப்படிச் செய்வதனால், ஒருவன் இரண்டாம் முறை அந்தக் கக்குசுக்குள் போகும்பொழுது அவனுடைய கண்ணுக்கும் மூக்குக்கும் மனத்திற்கும் அருவருப்பு உண்டாகாது; மற்றவர்கள் அந்தக் கக்குசுக்குள் போகவேண்டியிருந்தால் அவர்களுக்கும் ஒருவாறு அருவருப்புக் குறையும். ஆகையால், தன் னுணர்ச்சியையும் மற்றவர்களுடைய உணர்ச்சியையுங் கருதி ஒருவன் மேற் சொல்லிய இரண்டு காரியங்களையும் செய்ய வேண்டும்.

7. ஜனங்கள் கடமாடும் சாலையோரங்களிலும், நதிக் கரைகளிலும், குளக் கரைகளிலும், மரத்தடிகளிலும், மலர்ச் செடிகளின் மறைவுகளிலும், மற்றுமுள்ள பொது இடங்களிலும், மலங்கழிப்பதற் கென ஒதுக்கி வையாத வேறு எந்த இடங்களிலும், கக்குசுக்குப் போகும் வழிகளிலும் மலங் கழித்து அசுசிப்படுத்துவது பெரும் பாவமாகும். இதற்கு ராஜ தண்டனையும் உண்டு.

8. ஒரு நாளைக்கு ஒரு முறையேனும், அதிகமானால் இரண்டு முறையேனும் ஒருவன் மலங்கழிக்க வேண்டும்; நான்கு முதல் ஆறுதடவை மூத்திரங் கழித்தல் வேண்டும். அப்படி யில்லாவிட்டால், தேகத்திற்கு அசௌக்கியம் ஏற்பட்ட தென்று நினைக்க வேண்டியதாகும். மதக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் கவனியாவிட்டாலும், ஆரோக்கியத்தின் பொருட்டு மூத்திரம்

பெய்த பிறகு மூத்திரதுவாரத்தை நன்றாகக் கழுவ வேண்டியது மிகவும் அவசியமாகும்; மலங்கழித்த பிறகு கழுவுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு, மூத்திரம் பெய்தபிறகு கழுவவேண்டியதும் அவசியமே. அப்படிச் செய்யாவிட்டால், பெரிய அபராதம் கொடுக்கவேண்டியதாகும். இந்த அபராதம் ராஜ தண்டனையன்று; பலவகையான வியாதிகளினால் உண்டாகும் துன்பமே அபராதமாகும். மூத்திரதுவாரத்தைக் கழுவாததனால் பற்பல வியாதிகள் நேரிடும்; இது பெருந் தண்டனையன்றோ?

9. மூத்திரத்தில் ஒருவகையான க்ஷாரம் இருக்கின்றது. அது Uric acid எனப்படும். எக்கப் பண்டத்திலும் தாபத்தை எழுப்பி, அதனை அரித்துத் தின்னும் தன்மை அந்த க்ஷாரத்திற்கு உண்டு. மூத்திரத்தை வெளியிடும் துவாரமோ மிகவும் மிருதுவானது. மூத்திரக்ஷாரத்தின் வேகத்தினால் அந்த மிருதுவான துவாரத்திலுள்ள சதை உறுதிப்பட்டு பலவிதமான நோய்கள் உண்டாகும். ஆதலால், மூத்திரம் கழித்தவுடனே சிறிதும் தாமதியாமல் மூத்திரதுவாரத்தை நன்றாகக் கழுவ வேண்டும் என்பது எவருக்கும் புலப்படும்.

10. மலங்கழித்த பிறகு, குளங்களிலாவது நதிகளிலாவது குண்டியைக் கழுவுவது பெரிய பாதகமாகும். குளிக்கும் நீர்நிலைகளையும், குடிக்கும் நீர்நிலைகளையும் அவ்வாறு அசுத்தப்படுத்தலாகாது. ஜனசாரத்தின்படியும், மதாசாரத்தின்படியும், ஆரோக்கியாசாரத்தின்படியும் நீர்நிலைகளை அப்படி அசுத்தப்படுத்துவது தவறாகும். இது மற்றெல்லாப் பாவங்களினும் பெரிது. ஏனெனில், மற்றப் பாவங்களில் அநேகம் மற்றவர்களை வாதிக்காமலிருக்கக் கூடும். அப்படி வாதிப்பதா யிருந்தாலும், இரண்டொருவரை வாதிக்கும், அல்லது சில பேரை வாதிக்கும். ஆனால், நீர்நிலைகளை அசுத்தப் படுத்தும் பாவமோ அந்த நீரை உபயோகிக்கும் மனிதர்கள் எல்லாரையும், மிருகங்கள் எல்லாவற்றையும், பிராணிகள் எல்லாவற்றையும் வாதித்து, எல்லாருடைய ஆரோக்கியத்தையுங் கெடுத்துப் பெருந் துன்பம் விளைவிக்கும்.

11. ஒரு சொம்பில் ஜலத்தை மொண்டு சிறிது தூரத்திற்கப்பால் போய்ச் சௌசம் செய்துகொள்வது கடமையாகும். ஆனால், இந்த நல்லாசாரம் தமிழ் ஜில்லாக்களில் மிகவும் குறைவா

யிருப்பதைப்பற்றி வியசனிக்க வேண்டி யிருக்கிறது. இதனால் உண்டாகும் தீமைகளை ஆலோசித்துத் தமிழ் ஜில்லாக்களி லுள்ளவர்கள் தம் ஒழுக்கத்தைத் திருத்திக் கொள்வார்களாக.

12. சில ஜாதியார் சிலர் நீர்நிலையங்களில் அமிழ்ந்து மல ஜலங்களைக் கழித்துக் கழுவிக் கொள்கிறார்கள். நீரைக் கெடுப்பதற்கு இதனினுங் கோரமான வகை வேறொன்று உளதோ! நீராடும் துறைகளிலும், ஜனங்கள் உபயோகிக்கும் நீர்த்தூமுகளிலும் இப்படிச் செய்வது மிகவும் நீசமான காரியம். மற்றவர்களுடைய சௌக்கியத்தைக் கவனியாமல் தன்னுடையகாரியத்தை மாத்திரமே கவனித்து இப்படிக் கெடுப்பது எவருக்கும் தகாது.

13. எண்ணெய்க் கறைபட்ட துணிகளையும், துர்நாற்றம் வீசும் துணிகளையும், அறைகுறையாகச் சாயந் தீர்ந்த சீலைகளையும் மேற்சொல்லிய நீர்நிலைகளில் கழுவக் கூடாது. அழுக்கு வஸ்துக்களையும், அழுகிய பண்டங்களையும் அவைகளில் எறியக் கூடாது; அவைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது; உடம்புக்கேனும் வஸ்திரங்களுக்கேனும் சவர்க்காரம் போட்டு அவைகளில் கழுவக்கூடாது; மற்றவர்கள் துறையில் இருக்கும் பொழுது நனைந்த தலைமயிரைத்தட்டி நீரைத் தெளிப்பதும், துணிகளைத் துவைத்து நீரைத் தெறிப்பதும் கூடாத காரியங்களாம்.

14. அபானவாயுவை வெளியிட்டு ஓர் அறையிலுள்ள சுத்தமான வாயுமண்டலத்தைக் கெடுப்பதும் மேற்சொல்லியவைகளைப் போலக் கொடுமையான பாவமே. சிறிது முன்யோசனையும் ஜாக்கிரதையும் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே போய் அபானவாயுவைக் கழிப்பதனால், அந்த அறையிலுள்ள வாயுமண்டலத்தைக்கெடுத்து மற்றவர்களுக்கு அருவருப்பு உண்டாக்காமலிருக்கலாம். அப்படிப்பட்ட துர்நாற்றமுள்ள வாயு தேகத்தில் இருப்பதாகத் தெரிந்தால், குடலிலுள்ள மலம் அவ்வளவு அழுகிப் போயிருக்கிறதென்று தெரிந்துகொண்டு, அந்தமலத்தை 'விரேசனம்' என்னும் தலைப்பின்கீழ் குறித்துள்ள வகைகளுள் எதனாலேனுங் கழிப்பதற்குப் பிரயத்தனப்பட வேண்டும்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

CHENNAPATTANAM, MADRAS

1. சென்னபட்டணம், மதராஸ்

'தாதா! இன்று எங்களுக்கு வெய்யிற்கால விடுமுறை விட்டார்கள். இன்றுமுதல் ஒரு மாத காலம் பாடசாலை இல்லை. உபாத்தியாயர் எங்களுக்கு விடுமுறை கொடுக்கும்போது ஓர் உபந்நியாசம் செய்தார். அதில் நாங்கள் விடுமுறை நாட்களைக் கழிக்கும் விதத்தை யெல்லாம் விவரமாகச் சொன்னர். "விடுமுறை நாட்களில் முக்கியமாகப் பல இடங்களுக்குப் போகவேண்டும். அப்படிப் போகும் இடங்களைப் பற்றிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அந்த இடங்களைப்பற்றி ஏதேனும் சரித்திரம் இருந்தால் அதைச் சரிவரத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துகொண்ட விஷயங்களைப் புஸ்தகத்தில் தெளிவாக எழுதி வைக்கவேண்டும். உங்களில் யார் யார் சிறந்த இடங்களைப் பார்த்து, அவற்றின் சரித்திரங்களை எழுதிக்கொண்டு வருகிறீர்களோ, அவர்களுக்கெல்லாம், சிறந்த பரிசு கொடுக்கிறேன்" என்று சொன்னர். பின்னும் "உங்கள் வீட்டில் வயது முதிர்ந்த பெரியோர்கள் இருந்தால், அவர்களுக்கு இப்படிப்பட்ட சரித்திரங்கள் நன்றாய்த் தெரியும்" என்றும் கூறினர் என்றன் முத்து.

'நல்லது அப்படியா, அப்படிப்பட்ட சிறந்த இடங்கள் உனக்குத் தெரிவது நல்லதுதான். அந்த இடங்களின் சரித்திரங்களை நீ தெரிந்து கொள்ளவேண்டுவதும் அவசியந்தான்' என்று சொன்னர் பாட்டனர்.

'ஆம், தாதா! எங்கள் உபாத்தியாயர் முதலில் சொல்லும் போதே நான் உங்களை நினைத்துக் கொண்டேன். அதற்கு ஏற்றது போலவே, உபாத்தியாயரும், "உங்கள் வீட்டிலுள்ள பெரியோர்களைக் கேளுங்கள்" என்றர். அதைக்கேட்டு வெகு சந்தோஷமாக ஓடி வந்தேன். இப்போது எந்த ஊருக்குப் போகலாம் தாதா' என்றன் முத்து.

'எந்த ஊருக்குப்போவதா, முன்பு நமது சொந்தவூரைப் பார்க்கலாம்; தன் ஊரைப்பற்றித் தெரிந்துகொண்ட பிறகல்லவா பிற ஊரைப்பற்றிப் பேசவேண்டும். உட்சுவரைவிட்டுப் புறச்சுவரைப் பூசலாமா. முன்பு நாம் வசிக்கும் இந்தச் சென்னபட்டணத்தைச் சுற்றிப்பார்த்து, இங்கேயுள்ள விசேஷங்களைத் தெரிந்து

கொள்வோம். நமது ராஜதானியில் உள்ள எந்த நகரத்திலும் இந்தச் சென்னை நகரமே சிறந்தது. சென்னை ராஜதானிக்குத் தலைவராகிய கவர்னர் நமது சென்னையில்தான் வசிக்கிறார். அரைத்தன காரியங்களை நடத்தும் தலைமையான உத்தியோக சாலைகள் எல்லாம் சென்னையில்தான் இருக்கின்றன. இங்கிலிஷ்காரர் வந்தது முதல் சென்னை நகரம் சிறந்து விளங்குகிறது. இந்தச் சென்னபட்டணம் இங்கிலிஷ்காரரால்தான் ஏற்பட்டதென்று சொல்லலாம்' என்றார் பாட்டனார்.

'தாதா, ஆனால் முன்பு சென்னையைப்பற்றித் தெரிந்து கொள்ளுகிறேன். இந்தப் பட்டணம் இங்கிலிஷ்காரரால்தான் ஏற்பட்டது என்று சொன்னீர்களே, அதென்ன? அதற்கு முன் இந்தப் பட்டணம் இருந்ததில்லையோ? அப்படிப்பட்ட இடத்திற்கு இங்கிலிஷ்காரர் என் வந்தார்கள்? எப்படி இவ்வளவு பெரிய பட்டணம் இங்கே ஏற்பட்டது? அதையெல்லாம் சொல்லவேண்டும்' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்பு இங்கிலிஷ்காரர் இந்தியாவுக்கு வந்தார்கள். இந்தியாவில் வர்த்தகம் செய்வதே அவர்களுக்கு முக்கிய நோக்கமாக இருந்தது. இங்கிலிஷ்காரருக்கு முன்பே போர்த்துக்கேசியரும் டச்சுக்காரரும் பிரெஞ்சுக்காரரும் இங்கே வந்து வர்த்தகம் செய்துகொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்தே இங்கிலிஷ்காரரும் இங்கே வந்தார்கள்.

'இங்கிலிஷ்காரர் முதல் முதல் சென்னை ராஜதானியின் வடக்கில் வந்து இறங்கினார்கள். அங்கே வர்த்தகம் நடத்த அவர்களுக்கு அநுகூலம் ஏற்படவில்லை. அதனால் இங்கிலிஷ்காரர் தெற்கில் வந்து வர்த்தகத்திற்கு இடம் ஏற்படுத்திக்கொள்ள எண்ணினார்கள். அதனால் கடற்கரையை யடுத்துத் தெற்குப் புறமாக வந்தார்கள். அப்போது மயிலாப்பூர் சிறந்த நகரமாக இருந்தது. அங்கே போர்த்துக்கேசியர் நிலைத்து நல்ல வியாபாரம் செய்து கொண்டு இருந்தார்கள். அவர்களுடைய அநுசரணை இங்கிலிஷ்காரருக்கு அதிகம் ஏற்பட்டது. அதனால், மயிலாப்பூருக்கு வடக்கில் ஒரு வர்த்தக சாலை ஏற்படுத்த முயன்றார்கள்.

'இந்த இடம் அப்போது செங்கற்பட்டை ஆண்டுகொண்டிருந்த தர்மால வேங்கடாத்திரி நாயுடு என்பவருடைய அரசாட்சிக்கு உட்பட்டு இருந்தது. அதனால் இங்கிலிஷ்காரர் அந்த அரசருடைய அநுமதியைக் கேட்டார்கள். அவர் இங்கே ஒரு வர்த்தக சாலை கட்டிக்கொள்ள இங்கிலிஷ்காரருக்கு அநுமதி கொடுத்து, அதனால் ஏற்படும் பட்டணத்தைத் தன் தகப்பனார் பெயரால் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினார். அவர் தகப்பனாருக்குச் சென்னப்ப நாயுடு என்று பெயர். அதனால் இந்தப் பட்டணத்திற்குச் சென்ன பட்டணம் என்று பெயரிடவேண்டும் என்று சொன்னார். இங்கிலிஷ்காரர் சென்னையில் இப்போது கோட்டையுள்ள இடத்தில் ஒரு வர்த்தக சாலை கட்டி வியாபாரம் நடத்தினார்கள். அப்போது இந்த இடம் கரையார் என்னும் ஒருவகை ஜாதியார் வசிக்கும் ஒரு சிறு ஊராக இருந்தது. இங்கிலிஷ்காரர் இங்கே வர்த்தகம் தொடங்கின பிறகு, வர்த்தக சாலையை அடுத்து ஒரு பெரிய பட்டணம் உண்டாயிற்று. அதற்குச் சென்னபட்டணம் என்று இங்கிலிஷ்காரர் பெயரிட்டார்கள்' என்றார் பாட்டனார்.

'அப்படியா, சரிதான். சென்னபட்டணம் என்பதற்குக் காரணம் தெரிந்தது. இப்பட்டணத்தை இங்கிலீஷில் மதராஸ் என்று சொல்லுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டான் முத்து.

'அதுவா, அதற்கும் காரணம் உண்டு. அது இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அதற்குப் பலர் பல விதமான காரணங்கள் கூறுகிறார்கள்.

'மத்ரிஸா என்றால் மகம்மதிய பாஷையில் பள்ளிக்கூடம் என்று பெயர். மத்ரிஸா என்பது மதராஸ் என்று மாறி வழங்குகிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். இங்கிலிஷ்காரர் வந்தபோது இங்கே மகம்மதிய பாடசாலை ஏதும் இருந்ததில்லை. அதனால் அது சரியான காரணம் என்று நம்ப இடமில்லை.

'சிலர் மதில் என்னும் தமிழ்ப் பெயரினால் இதற்கு மதில் சூழ்ந்த பட்டணம் என்று பெயர்; மதில்சூழ் பட்டணம் என்பது மதில் பட்டணம் என்று மாறி, கடைசியில் மதராஸ் என்று இங்கிலீஷில் வந்துவிட்டது என்கிறார்கள். இதையும் உண்மை என்று நம்பக்கூடவில்லை. அந்தக் காலத்தில் இங்கே கோட்டையாவது அதைச் சூழ்ந்த மதிலாவது ஏதும் இருந்ததில்லை.

மூன்றுவதாக வேறு சிலர் ஒரு காரணம் கூறுகின்றனர். சூரியவம்சத்து அரசர்களே தெலுங்குப் பாஷையில் மந்த ராஜர் என்று சொல்வது வழக்கம். மந்த ராஜ□ என்னும் பெயரால் ஒரு தெலுங்கு அரசர் இருந்ததாகவும் தெரிகிறது. இவர் விஜயநகர பரம்பரையைச் சேர்ந்தவர். அதனால் இந்த இடத்திற்கு மந்த ராஜ பட்டணம் என்னும் பெயர் வழங்கியிருந்தது. அது மதராஸ் பட்டணம் என்று மாறி வழங்குவதாயிற்று. அதை இங்கிலிஷ்காரர் மதராஸ் என்று சொல்ல ஆரம்பித்தார்கள்; அதுமுதல் மதராஸ் என்று வழங்கி வருகிறது' என்றார் பாட்டனார். அது கேட்டு முத்து அதிக சந்தோஷம் அடைந்தான். பத்திராதிபர்.

OCEAN BEDS

சமுத்திர அடித்தல அமைப்பு

சிறுவர்காள்!

முன்பொருமுறை கண்டத்தட்டு (Continental shelf) என்னும் விஷயத்தைப்பற்றிப் படித்த ஞாபகம் உங்களுக்கிருக்கும். இது 600 அடி ஆழத்துக் கதிக ஆழமில்லாமல் பெரு நிலக் கண்டங்களே ஒட்டியுள்ள கடற் கீழ்த்தரையாம். ஒரு சிறு ரோவி ஓடத்தில் ஏறிக்கொண்டு ஒரு நீளமான சங்கிலியையும் ஆழம்பார்க்கும் குண்டையும் எடுத்துக்கொண்டு போய் நடுக்கடலில் போட்டுப் பார்த்தால், சங்கிலி வெகு நீளம் ஆழத்தில் போகக் காண்போம். அநேக ஆயிரம் அடி நீளம் செல்லுகிறதைப் பார்ப்போம். மேல் குறிக்கப்பட்ட கண்டத் தட்டைக் காட்டிலும் இது ஆழமானதல்லவா? கண்டத் தட்டின் எல்லையைப் பின் எப்படிக் கண்டு பிடிப்பது? சரிவரக் கண்டுபிடிக்காவிடில் அதன் படத்தை எப்படிக் காட்ட முடியும்? அதைக் கண்டுபிடிக்கும் வழியைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அதிக சவிஸ்தாரமாக இவ் விஷயத்தை யறிய விரும்பினால் மரீன் சர்வே (Marine survey) இலாகாக்காரர் உங்களுக்கு நன்கு விரித்துரைப்பர். உங்களுக்கு அவர்களோடு சம்பாஷணை நேருவது துர்லபம். சுருக்கமாக நான் சொல்லுகிறேன். அந்த வகைக்கு முக்கோணப்படுத்தல் (Triangulation) என்று பெயர். கடற்கரை ஒரு பாறையாகவாவது காட்டாகவாவது மணல் வெளியாகவாவதுதானே யிருக்கும். சிற்சில இடங்களில் பெருங் கட்டடங்கள் அமைந்திருக்கவும் கூடும். ஒவ்வொரு இடத்துக்கும் தக்கபடி மலையுச்சி, பெரு மரம், உயர்ந்த மாடம் இம் மூன்று வகைகளில் ஏதாவது ஒன்றை நடுநிலையாக வைத்துக் கொள்வோம். மணல் வெளியாகவுள்ள இடங்களில் உன்னதமான துவஜஸ்தம்பத்தை ஒரு மைய இடத்தில் நாட்டுவோம். அதற்கு நேரே நாம் கொண்டுவந்துள்ள ரோவி யோடத்தை நடு சமுத்திரத்திற்குத் தள்ளிக்கொண்டு போவோம். போகப்போக ஒருவன் சங்கிலியையும் குண்டையும் எறிந்து அடிக்கடி ஆழம் பார்த்துக் கொண்டே வரட்டும். எந்த இடத்தில் சமுத்திரம் அடிமட்டம் வெகு ஆழமாகப் போகிறதோ அவ்விடத்திலிருந்து ஒரு குறித்த கோணத்தில் இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் காணக் கூடிய இரண்டு பெரிய மரமோ, குன்றோ, மாளிகையோ அடையாளமாகக் கொள்வோம். அப்படி யில்லாவிடில் ஓரிடத்தை இரு பக்கத்திலும் குறித்துக்கொண்டு அவ் விடங்களிலும் முன்பு நாம் நட்டதுபோலவே துவஜஸ்தம்பங்களே நட்டு வைப்போம். இப்போது இம் மூன்று அடையாளங்களும் நமக்கு மிக முக்கியமானவை. இம் மூன்று புள்ளிகளும் நமது கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும்படி அவ் விடங்களில் பாய்ச் சீரை கட்டுவது வாடிக்கை. நமக்கு ஸெக்ஸ்டான்ட் (Sextant) என்னும் ஓர் கருவியும் ஒரு அகலமான பலகையில் குண்டுசி குத்திப் படம் வரையும் காகிதமும் அவசியம். தவிர நாம் பார்க்கும் அளவுகளைக் குறிப்பிடவேண்டிய ரூலிட்ட புத்தகமும் இருக்கவேண்டும்.

இவ் வேலை ஒருவராலேயே செய்து முடிக்கக் கூடியதன்று. சங்கிலிக் குண்டை ஒருவன் சதா போட்டெடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். மற்றொருவன் அதன் நீளத்தையும் சமுத்திர அடியில் குண்டு பட்டபோது ஓட்டித் தூக்கிக் கொண்டு வந்த சாமான்களையும் குறிப்பிட வேண்டும். மற்றொருவன் (Sextant) முக்கோண அளவுக் கருவியை உபயோகித்து கோண அளவு கண்டு சொல்லும்போது வேறொருவன் அதைக் குறிக்க வேண்டும். சில சமுத்திரங்களில் ரோட்டமிருப்பதால் நேர் தவறிப் போனதையறிந்து சொன்ன லொழிய மாலுமி ஓடத்தைச் சரிவர நடத்த முடியாது. இவ் வகைப் பலபேரு மிருந்து ஓடத்தை மையப் புள்ளிக்கு நேராக ஒருதரம் ஆழமான சமுத்திரம் வரையில் கொண்டுபோய் மீட்டும் திருப்பிக் கொண்டு வருவதற்குள் சங்கி-

லிக் குண்டுக்காரன் பலமுறையும் தண்ணீரில் போட்டு எடுக்க, ஆழத்தையும் அடியிலுள்ள பொருளையும் கண்டு பிடித்து வருவார்கள். ஒரு நேர் கோடு இம்மாதிரி கண்ட பிறகு ஆறு அடி தூரத்தில் முன்னெடுத்த நேருக்குச் சமதூர அளவாக வேறொரு நேர் கோட்டில் ஓடத்தை மாலுமி செலுத்த, சங்கிலிக் குண்டுக்காரன் தண்ணீரில் போட்டுத் தூக்க முன் மாதிரியே ஆழ சமுத்திரம் போகிற வரையிலுள்ள இடங்களை அளந்து கணக்கெடுப்பார்கள். தரையில் ஏற்படுத்திக் கொண்ட புள்ளி வலது பக்கத்தையோ இடது பக்கத்தையோ மறைத்து போனால் முன்னிருந்த மையப் புள்ளியை வலது பக்கத்தையோ இடது பக்கத்தையோ ஆக்கிக் கொண்டு முன்னிருந்து மிகுந்த கோடிப் புள்ளியை மையப் புள்ளியாக்கி வேறு புள்ளி குறித்த கோணத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். இவ் வகையாக அமைத்துக் கொண்டால்தான் செக்ஸ்டான்ட் (Sextant) என்னும் கருவியால் முக்கோணப்படுத்த (Triangulation) இயலும். இப்படியே கண்டத்தட்டு முழுவதையும் அளந்து ஓரிடத்தில் சிறிதுகால மிருந்து படம் எழுதி முடிப்பார்கள். சமுத்திர ஆழத்தைப் பற்றிப் பின்னர்ச் சொல்லுவோம்.

(இன்னும் வரும்)

சிவத்தியாகராஜன்,
ஆரம்தாச்சிரமம்.

COUNT TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் பிரபு — ஓர் உபாத்தியாயர்

கதை சொல்லுதல் — Story Telling.

கதை சொல்லுதல் கௌன்ட் டால்ஸ்ட்டாய் வைத்த பள்ளிக்கூடத்தில் ஒரு முக்கியமான பாடமாக ஏற்பட்டு இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மற்ற விஷயங்களைப்போல இதிலும் சில விசித்திரமான விஷயங்கள் உண்டு. கதைகள் தெய்வ சம்பந்தமாகவாவது சரித்திர சம்பந்தமாகவாவது இருக்கும். இந்தப் பாடம் எப்பொழுதும் அஸ்தமன வேளையில் நடந்து வந்தது. ஐரோப்பிய தேசங்களில் சூரியன் அஸ்தமித்த பிறகு நம்முடைய தேசத்தைப் போல உடனே இருள் மூடிக்கொள்வதில்லை. நெடுநேரம் வெளிச்சம் இருக்கும். இந்தச் சமயத்தில்தான் பிள்ளைகள் தினந்தோறும் இரண்டாவது முறை பள்ளிக்கூடம் வந்து கூடுவது வழக்கம்.

இந்தப் பாடம் நடக்கும்போது வகுப்பில் அதிக வெளிச்சம் இல்லாமலிருந்த போதிலும், விளக்கு ஏற்றுவதில்லை. பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்து கூடுவார்கள். எல்லோரும் வந்து கூடினதும் பெரிய பிள்ளைகளையும் அதிக புத்திசாலிகளான சிறிய பிள்ளைகளையும் மற்றச் சிறிய பிள்ளைகள் உபாத்தியாயருடைய மேஜைக்கு அருகே நெட்டித் தள்ளி அவர்களுக்கு பின்னல் அமருவார்கள்.

உபாத்தியாயர் கதை சொல்ல ஆரம்பித்ததும் வகுப்பு முழுதும் நிச்சப்தமாக இருக்கும். சிறிய பிள்ளைகள் முதலாகப் பெரிய பிள்ளைகள் ஈறாக எல்லோரும் கதையை அதிக கவனமாகக் கேட்பார்கள். அந்தச் சிறுவர்கள் மெய்மறந்து உபாத்தியாயர் வாயையே உற்றுப் பார்த்த வண்ணமாக, அவர் கதை சொல்வதை கண்ணாலும், காதாலும், மனத்தாலும் கண்டு கேட்டு உணர்ந்து ஆநந்த மடைவார்கள்.

சாதாரணமாக பின்னலிருக்கும் சிறு பிள்ளைகளும் மந்த புத்தியுள்ள பிள்ளைகளும் உபாத்தியாயர் சொல்லும் கதையை முற்றிலும் உணரக் கூடாதவர்களாக இருந்தபோதிலும் அவர்களும் அதிக ஆவலுடன் கேட்பார்கள். அங்குமிங்கும் சில விஷயங்கள் அவர்களுக்கும் தெரியக் கூடியவையாகவே இருக்கும். அப்படிப்பட்ட விஷயங்கள் வரும்போது அச் சிறு பிள்ளைகள் கழுத்தை நீட்டிப் புருவத்தை நெறித்துக்கொண்டு ஒரு வார்த்தையும் நழுவவிடாமல் அதிக ஆவலுடன் சேட்பார்கள். யாராவது ஒரு பிள்ளை மற்றொருவன் தோளின்மீது கை போட்டாலும் சாய்ந்தாலும், கொசு முதலியவைகளை ஓட்டுவதுபோலத் தள்ளி விடுவான். மெதவாகக் கிள்ளினாலும் அவர்களுக்கு உணர்ச்சி அதிகமாக இருப்பதில்லை என்கிறார் கௌன்ட் டால்ஸ்ட்டாய்.

சில சமயங்களில் பிள்ளைகள் மனத்தில் பாடம் செவ்வையாகப் படியும் பொருட்டு உபாத்தியாயர் ஒரே கதையை மற்றொரு முறை சொல்வதுண்டு. அப்போது பிள்ளைகள் எல்லோரும் ஆங்காங்கு உபாத்தியாயருடன் கலந்துகொண்டு விஷயங்களை எடுத்துச் சொல்வார்கள். சொல்வது பழைய கதையாக இருந்தால் கேட்க வேண்டியதே யில்லை. மறந்தும் உபாத்தியாயர் ஒரு வார்த்தைகூட விடக்கூடாது. உடனுக்குடனே பிள்ளைகள் எல்லோரும் ஒரு கூச்சலாக விட்டதை எடுத்துச் சொல்லுவார்கள். விஷயக் கிரமம் மாறிவிட்டாலும் அப்படியே கூச்சலிட்டுக் கூறுவார்கள்.

கதை முடிந்ததும் பிள்ளைகள் எல்லோரும் குதித்தெழுந்து ஆவாரத்துடன் உபாத்தியாயரைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்.

சூழ்ந்து கொண்டு, தாம் அன்று புதிதாகக் கேட்ட கதையைச் சொல்ல ஆரம்பிப்பார்கள். வகுப்பு முழுதும் ஒரே கூச்சலாக ஆரவாரிக்கும். உபாத்தியாயர் தம்மால் கூடியவரையில் அவர்களை அடக்க முயலுவார். 'கதை உங்களுக்கெல்லாம் நன்றாக ஞாபக மிருக்கிறது. கொஞ்சமும் நீங்கள் மறக்கவில்லை. நன்றாக உணர்ந்திருக்கிறீர்கள்' என்று பலமுறையும் சொல்லுவார். என்ன சொன்ன போதிலும் அவர்கள் சந்தோஷம் கொஞ்சத்தில் அடங்காது. பலர் வகுப்புக்கு வெளியிலும் வந்தும் மற்றப் பிள்ளைகளுக்காவது, தம்முள் ஒருவருக் கொருவராவது கதையைச் சொல்லி முடித்து கேள்விகள் கேட்டு, தப்புகளை திருத்திக்கொண்ட பிறகுதான் மறுபடியும் வகுப்பில் வந்து அமருவார்கள். அதற்குள் மெழுக்கு வர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். பிறகு வேறு பாடம் தொடங்குவார்கள்.

சாதாரணமாக சாயங்காலப் பாடங்கள் காலை வேளைப் பாடங்களைவிட அதிக அமரிக்கையோடு உற்சாகத்துடன் நடக்கும். அப்போது கணக்கு முதலிய கடின பாடங்களில் பிள்ளைகளுக்கு மனஞ் செல்வதில்லை. எட்டு மணிக்கெல்லாம் சிறிய பிள்ளைகள் தூங்கிவிழ ஆரம்பிப்பார்கள். பெரிய பிள்ளைகள் மாத்திரம் இன்னும் சிறிதுநேரம் விழித்திருப்பார்கள். பத்திராதிபர்.

REVIEW OF BOOK

புத்தக ஆராய்ச்சி

சீகாளத்திப் புராணம் உரை — இப்புராணம் சிவப்பிரகாச சுவாமிகளும் அவரது சகோதரர் இருவரும் இயற்றியது. இது ஒரு தலபுராணமே யாயினும் சிறு காப்பியங்களுள் ஒன்றாக வைத்தெண்ணக் கூடிய சிறப்பினை யுடையது. கற்பனைக் களஞ்சியமாகிய இந்நூலைக் கற்றோர் கருந்தனமாகக் கருதுகின்றனர். இதற்கு காஞ்சி மகாவித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள் உரை யிடுகின்றனர். இவர் உரையின் திறம் தமிழ்நாடு முழுதும் நன்கு உணர்ந்ததே. இது சஞ்சிகை ரூபமாக வெளி வருகின்றது. எமது பார்வைக்கு ஐந்து சஞ்சிகைகள் அனுப்பப்பட்டன. இந்நூல் தமிழ் பயில்வார்க்கு அதிக அவசியமானது. வேண்டுவோர், பு. சண்முக முதலியார், நெ-5, ஆறுமுகம் தெருவு, ஜார்ஜ்டவுன், சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்க.

OUR TENTH YEAR

பத்தாம் வருஷம்

நமது நல்லாசிரியனுக்கு ஒன்பதுவருஷங்கள்நிறைந்து பத்தாம் வருஷம் பிறந்தது. இந்தப் பத்து வருஷமும் இடையிடன்றி, கிடைபெற்று வந்த விஷயம் நண்பர் பலர் நன்கு அறிவர்.

நமது நல்லாசிரியன் ஒருவனே தமிழ் நாட்டில் உள்ள உபாத்தியாயர்களுக் கெல்லாம் உற்ற தோழனை இருக்கிறான்பதை ஒருவரும் மறுக்க வொண்ணாது. ஆயினும் இவனைப் பரிந்து காப்போர் மிகச் சிலரே யாகின்றனர்.

நமது நல்லாசிரியன் வருஷந்தோறும் தன்னை அழைப்பார் அகத்திற்கும் சென்று நுழைந்து நுழைந்து வருகின்றான். அப்போதும் அவன் விஷயத்தில் நண்பர் பலர்க்கு அன்பு பிறக்கவில்லை. இது என்னே!

நமது நல்லாசிரியனை ஆதரிக்கத்தக்க எலிமென்ட்டரிப் பாடசாலைகள் சுமார் முப்பதினாயிரம் இருந்தும் முப்பதில் ஒரு பாகத்தவரே இவனை ஆதரிக்கின்றனர். ஒருகால் இவனில் ஏதேனும் குறைகண்டு, கவனியா திருக்கின்றனர் போலும். அங்ஙனம் குறை காணுவோர், அதைத் தெரிவிப்பா ராயின் அவன் தன்னைத் திருத்திக்கொள்ள சித்தனாக இருக்கின்றான்.

நல்லாசிரியன் வரவரப் புதியமுறைகளை அனுசரித்து அரிய விஷயங்களைத் தன் அகத்திற்கொண்டு வெளிவருகின்றான். இனியும் அவ்வாறே வருவான். ஆசிரிய நண்பர்கள் அவனை அன்புடன் ஏற்று ஆதரிப்பாராக.

நல்லாசிரியன் தனக்குச் சென்ற ஆண்டில் விஷயதானம் செய்த நண்பர்களுக்கும், மாற்றுப் பத்திரிகை அனுப்பி உபகரித்த சகோதர பத்திராதிபர்களுக்கும் மனமுவந்த வந்தனம் புரிகின்றான். அதனை அன்புடன் ஏற்றுமுன்போலவே ஆதரிப்பாராக.

பத்திராதிபர்.

ODE ON THE TRAINED TEACHER

நல்லாசிரியன் வாழ்த்து

அகவல்

சீருற் றெங்கும் சிறப்புடன் விளங்கி
பாருல கத்தவர் பண்புடன் புகழும்
சென்னைமா நகரினில் தீதில்வேப் பேரி
என்னுமிடந்தனில் எஸ். பி. ஜி. ஹைஸ்கூல்
தன்னிலே தலைமைத் தமிழ்ப்பண் டிதரெனும்
உன்னிதப் பதவி உத்தியோ கத்தினில்
அமர்ந்துமே யகிலத் தவர்கள் போற்றும்
அமரர் தங்களும் ஆசீர் வதிக்கும்
நமது நண்பராம் நானிலத் தோர்புகழ்
நமச்சி வாய நண்பரும் ஒன்பது
ஆண்டுக ளாக ஆசிரியர் தமக்கு
மாண்புறு தோழமை யாகவே யிருக்க
அணிபெருந் தமிழினில் அன்புடன் நடத்தும்

மணிநெடுங் கடல்சூழ் மானிலந் தனிலே
அரும்விஷ யங்களை அமிர்தம்போ லடைந்து
நறுமலர் போன்று நனியுட னுலவும்
நலந்தரு நண்பனும் நல்லா சிரியனும்
கலங்க மற்ற கா. நமசி வாயரும்
எழில்சேர் புவியினில் இனிதுட னென்றும்
செழித்துமே ஓங்க சிறியனும் போற்றினேன்.

MUSEUM

மியூசியம்

நாளது ஜூன்மீ 12உ சுமார் மூன்று மாத கர்ப்பமுள்ள ஒரு பன்றியின் வயிற்றிலிருந்து ஒரு தலை, இரண்டு உடல், எட்டுக்கால், ஒரு கொப்பூழ், இரண்டு வால் ஆகிய இவ்வவயவங்களுடன் ஒரு குட்டி எடுக்கப்பட்டது. அதை யான் தாய்ப் பாடசாலையாகிய, திருச்சி கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூலின் மீதுள்ள அவாவினால் அங்கு கொண்டுபோய் ஹெட்மாஸ்டர் அவர்களின் அனுமதியின் பேரில் திராவகத்தில் போட்டு வைத்தேன். அதை அன்புடன் ஏற்றுக் கொண்ட மேற்படி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களுக்கும், மேற்படி ஸ்கூலின் ஆசிரியரும் எமக்கு மியூசியத்தில் விருப்பத்தை ஊட்டியவருமாகிய P. C. கிருஷ்ணய்யர் B. A; L. T; அவர்களுக்கும் வந்தனம் செலுத்துகிறேன். நம்மிடம் கிடைத்து நம்மால் பாதுகாத்து வைக்க முடியாத அரிய பெரிய பொருள்களை நமது தாய்ப் பாடசாலைகளுக்கு அனுப்பியும், நம்மால் பாதுகாக்கக் கூடிய பொருள்களை நமது பாடசாலைகளில் சேர்த்து வைத்தும் மியூசியத்தை விருத்தி செய்யவேண்டுமென்று ஆசிரிய நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

P. பரிமணப் பல்லவராயர்,
தாழக்குடி, திருச்சி தாலுக்கா.

DIFFERENT KINDS OF DOGS

நாயின் வகைகள் — I

நாய் மிகவும் நன்றியுள்ள ஜந்து. நாய்கள் அவற்றின் தன்மைகளினால் பலவகைப் படுகின்றன. நாய்களை முக்கியமாக இரண்டு பிரிவில் அடக்கலாம். அவை குறுமயிர் நாய்கள், குச்சுமயிர் நாய்கள் என்பனவாம். முதலில் குறுமயிர் நாய்களின் வகையைக் கூறுவோம்.

2. இதற்குப் பாளயக்கார நாய் என்று பெயர். இதன் உடல் நன்றாய் ஓடுவதற்கு அநுகூலமாக அமைந்திருக்கிறது. இதன் மார்பு அகன்று, வயிறு ஒடுங்கி இருப்பதோடு, கால்களும் மிகச் சிறுத்து நீண்டு இருக்கின்றன. அதனால், இது வெகு விரைவாக ஓடும், இதனோடு வேறு எதுவும் ஓட முடியாது. மார்புக்கூடு அகன்று இருப்பதனால், இந்த நாய் வெகுதூரம் ஓடினாலும் இளைப்பு உண்டாவதில்லை. இது முயல் வேட்டையாட அதிக உபயோகமானது. பாளயக்கார நாய்க்கு மூக்கு மிகவும் குறுகியிருப்பதால் மோப்பம் பிடிக்க உதவியான நரம்புகள் ஏற்பட இடமில்லை. ஆகையால், இந்த நாய் பிராணிகளைத் தன் மோப்பத்தினால் தெரிந்து கொள்ளாமல், கண்களால் உற்றுப் பார்த்தே தெரிந்து கொள்ளுகிறது. இதன் பின் கால்கள் முன் கால்களை விட அகன்று இருக்கின்றன. அவைகள் அகன்று இராவிட்டால் ஓடும்போது முன் கால்களோடு முட்டுப்படும். இதன் வால் எலியின் வால் போல் சிறுத்து நீண்டிருக்கிறது.



3. இது நரி வேட்டை நாய் எனப்படும். இது சிறுவர்களோடு விளையாடுவதில் சிறந்த தன்மையுள்ளது. சிறுவர்கள் பந்து ஆடும்போது இதுவும் அவர்களோடு குதித்துக் குதித்து

ஓடியாடி விளையாடும். இந்த நாய் நன்றாய் மோப்பம் பிடிக்கும்; உற்றுப் பார்க்குந் தன்மையும் உண்டு. முன் கால்கள் குட்டையாக இருக்கின்றன. இதன் மார்பின் நீளமும் முன் காலின் நீளமும் ஏறக்குறைய சமமாகவே இருக்கும். வயிற்றுப்புறத்தில் உடல் ஒடுங்கியிருக்கிறது. அதனால் முன் காலிலிடப் பின் கால் நீண்டு இருக்கிறது. உடலின் மயிர் சிறுத்து வழுவழுப்பாக இருக்கும். உடலில் அங்கங்கே பட்டைகள் விழுந்து இருக்கும். நரி, மான், காட்டுப் பன்றி முதலியவற்றை வேட்டையாடுவதற்கு இந்த நாய் அதிக உபயோகமானது. ஆனால், இது பாளயக்கார நாயைப்போல் அவ்வளவு வேகமாக ஓடாது. இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகமாக இருப்பதனால், மான் முதலிய மிருகங்களின் காலடிகளை மோந்துகொண்டே போய் அவைகளைக் கண்டு பிடிக்கும்.



4. இரத்த மோப்ப நாய் என்று இதற்குப் பெயர். இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம். கொலை நடந்த இடத்தில் இந்த நாயைக் கொண்டுபோய் விட்டால், கொலை செய்தவனை இந்த நாய் கண்டுபிடித்துவிடும். இது எப்படி அவனைக் கண்டு பிடிக்கிறது தெரியுமா? கொலை நடந்த இடத்தை இந்த நாய்க்குக் காட்டிவிட்டால், அங்கிருந்து கொலை செய்தவன் போன காலடியை மோந்து கொண்டே போய், அவனைக் கண்டுபிடித்துவிடுகிறது. இந்த நாய் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக உபயோகமானது.

5. மிருகங்களை வேட்டையாட நாய்கள் உபயோகப் படுவதுபோலவே, பறவைகளை வேட்டையாடவும் ஒருவகை நாய் உபயோகப்படுகிறது. இங்கே இருக்கும் நாய்க்குப் பறவை

வேட்டை நாய் என்று பெயர். காடை, கவுதாரி, காட்டுக்-கோழி முதலிய பக்ஷிகள் காட்டில் செடியடர்ந்த புதல்களில் மறைந்து வசிக்-கும். அவைகளை வெளியில் துரத்தி வேட்டையாடி-னல், சில பக்ஷி-கள் புதல்களின் நடுவிலேயே விழு-ந்து விடும். அங்-கே போக மனித-



ரால் முடியாது. அப்போது, இந்த நாயை ஏவினால், இது புதல்களில் புகுந்து அந்தப் பக்ஷிகளைக் கௌவி எடுத்துக்-கொண்டு வந்துவிடும். சில சமயங்களில் இந்த நாய் தானுகவே புதல்களில் புகுந்து, பறவைகளை வேட்டையாடிப் பிடித்துக்-கொண்டு வருவதும் உண்டு.

6. இவை அனைத்தும் வேட்டை நாய்கள். இனி வீட்டு நாய்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம். நாம் நாய்களை வீட்டில் வளர்க்கிறோம். நாம் அவைகளைப் பக்ஷமாக வளர்த்தால், அவைகளும் நம்மிடத்தில் பக்ஷமாக இருக்கின்றன. இங்கே இரண்டு நாய்களைப்பற்றிக் கூறுகிறேன்.

7. இந்த நாயைப் பார், இதன் முகமும் உடலும் வெகு விகாரமாக இருக்கின்றன. தலை சதுர அளவாக இருக்கிறது. முகத்தில் மடிப்புகளும் விழுந்திருக்கின்றன; வாய் அகன்று இருக்கிறது. இதைப் பார்க்கும் போதே பயங்கரமாக இருக்கிறது. இந்த நாய் இருக்கும் வீட்டில் திருடன் தலைகாட்ட முடியாது. திருடன் வந்தால் அவனைக் கடித்-துப் பிடித்துக் கொள்ளும். தன்னைத் திருடன் வெட்டி-னலும் அது அவனை விடாது. யஜமானன் வந்து சொன்னல்-தான் விடும். இவ்வளவு உண்மையாக எந்த வேலைக்காரன் இருப்பான்!

8. மாஸ்டிப் (Mastiff) என்று ஒரு நாய் உண்டு. மாஸ்டிப் என்னும் பதத்திற்கு 'திருடனுக்குப்பயம் உண்டாக்குகிறவன்'

என்று அர்த்தம். அதனல் அதைச் சோர பயங்கரன் என்று சொல்லலாம். யஜமானன் வீட்டைப் பாதுகாப்பதில் இது



அதிக சாமர்த்தியமுள்ளது. இந்த நாய் ஒன்று இருந்தால் வீட்டைப் பூட்ட வேண்டிய அவசியமே இல்லை.

நாயின் வகைகள் — II

இதுவரையில் குறுமயிர் நாய்களைப்பற்றிக் கூறினேம். இனி, குச்சுமயிர் நாய்களைப்பற்றிக் கூறுவோம். குச்சுமயிர் நாய்களுக்குச் சடைமயிர் நாய்கள் என்றும் பெயர்.

2. இதற்குப் பட்டிநாய் என்று பெயர். பட்டிநாயின் முகம் பாளயக்கார நாயின் முகத்தை ஒத்திருக்கிறது. மயிர் மாத்திரம் நீண்டு தொங்குகிறது. இந்த நாய் இடையனுக்கு உபயோகமானது. ஆட்டு மந்தைகளை மடக்கும். பனியிலும் மழையிலும் வெய்யிலிலும் அவனோடு திரியும். குளிர் எடுத்தால்

இடையன் கம்பளியைப் போர்த்துக்-கொள்வான். நாய் என்ன செய்யும்? அதற்கு இயற்கையாகவே போர்வை அமைந்து இருக்கிறது. இந்த நாய் இரவில் விழித்திருந்து, நரி முதலிய துஷ்ட ஜந்துக்கள் வந்தால் தன் எஜ-மானுக்குக் குரைத்துத் தெரிவிக்கும். சில சமயங்களில் அந்த ஜந்துக்களோடு சண்டை செய்து கொன்று விடும். தன் எஜமானுடைய மந்-தையிலுள்ள ஆடு வேறு மந்தையில் போகாமலும் வேறு

மந்தையிலுள்ள ஆடு தம் மந்தையில் வராமலும் பார்த்துக்கொள்ளும். இடையன் இல்லாவிட்டாலும் பட்டி நாய் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்து பட்டியில் அடைக்கும்.

3. இது ஒரு மலை நாய்; இதற்கு சென்ட் பெர்னார்ட் நாய் என்று பெயர். மலை நாடுகளில் மழை அதிகம்; பனியும் அதிகம். பனிபெய்து வீடுகளையும் மரங்களையும் மூடிக்கொள்வது உண்டு. மலை நாட்டில் வசிக்கும் மனிதர்கள் நடந்து போகும்போது பனிக்கட்டிகளால் சறுக்கி விழுந்து விடுவார்கள்; எழுந்திருக்க முடியாமல் விறைத்துக் கிடப்பார்கள்.



அவர்களைத் தேடிக்கொண்டு வெளியே போக மனிதருக்கு முடியாது. அப்போது இந்த நாயை அனுப்புவார்கள். அதன் முதுகில் ஒருபுறம் கொஞ்சம் உணவும் மறுபுறம் கொஞ்சம் சாராயமும் கட்டி மேலே ஒரு கம்பளியைப்போட்டு அனுப்புவார்கள். இந்த நாய் மோப்பம் பிடித்து, மனிதர் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டு அந்த இடத்திற்குச் செல்லும். விழுந்து கிடப்பவன், சாராயத்தைக் குடித்து உணவை யுண்டு கம்பளியைப் போர்த்துக்கொண்டு எழுந்து வருவான். அவன் எழுந்துவர அசக்தனாக இருந்தால், அவன் உடையைக் கௌவிப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டுக்கு வரும். சிறுவர்களாக இருந்தால் தன் மேல் தூக்கிக்கொண்டு வரும். இதற்கு அதிக தேக பலம் உண்டு. ஆல்ப்ஸ் என்னும் மலையை அடுத்த நாடுகளில் இந்த நாயை அதிகமாக வளர்க்கிறார்கள். இந்த நாய் சற்றேறக் குறைய ஒரு கன்றுக்குட்டி யளவு இருக்கும்.

4. இது நியூபவுண்ட்லண்ட் நாய். அமெரிக்கா கண்டத்தில் 'நியூபவுண்ட்லண்ட்' என்னும் தீவு ஒன்று உண்டு. அங்கே இந்த நாய்கள் அபரிமிதமாக இருக்கின்றன. சென்ட் பெர்னார்ட் நாய் நிலத்தில் விழுந்து மரிப்பவர்களைக் காப்பாற்றுகிறது; நியூபவுண்ட்லண்ட் நாய் நீரில் விழுந்து மரிப்பவர்களைக் காப்பாற்றுகிறது. இதன் உடலில் ஒருவகைநெய்ப்பசை இருக்கிறது. அதனால் இந்த நாய் நீரில் குதித்து நீந்தும்போது இதன்



மயிரில் தண்ணீர் அதிகமாக ஒட்டுவதில்லை. நியூபவுண்ட்லண்ட் தீவுக்கருகில் கடலில் அநேக பாறைகள் உண்டு. கப்பல்கள் அடிக்கடி அப் பாறைகளில் மோதுண்டு உடைந்துபோவது வழக்கம். அப்போது அதிலுள்ள ஜனங்கள் கடலில் விழுந்து முழுகிப் போவார்கள். அந்தச் சமயத்தில் இந்த நாயை விட்டால், இது நீந்திச் சென்று, விழுந்தவனுடைய உடையையாவது கையையாவது பிடித்து இழுத்துக்கொண்டு வரும். கடல் எவ்வளவு கொந்தளிப்பாக இருந்தாலும் அஞ்சாது. இந்த நாய் அநேக உயிர்களைக் காப்பாற்றியதாகப் பல சரித்திரங்கள் வழங்குகின்றன.

5. ஸ்பானியல் என்று ஒரு வகை நாய் உண்டு. அது நன்றாய் நீந்த வல்லது. இதை நியூபவுண்ட்லண்ட் நாயின் இனத்தில் சேர்க்கலாம். இது நீர்நிலைகளுக்கு அருகில் கூடு கட்டிக் கொண்டு வசிக்கும் நீர்க் கோழி, உள்ளான், நாரை முதலிய பக்ஷிகளைப் பிடித்துக்கொண்டு வரும். நீரில் மேயும் பக்ஷிகளைத்

துப்பாக்கியால் சுட்டு விட்டால், இந்த நாய் தண்ணீரில் நீந்திச் சென்று, விழுந்த பறவைகளை எடுத்துக்கொண்டு வரும்.



6. இன்னும் இந்த நாய்களைப்போல் எத்தனையோ வகை உண்டு. ஒவ்வொன்றுக்கும் நுட்பபுத்தியும் நன்றியறிவும் ஏற்பட்டிருக்கின்றன.

பத்திராதிபர்.

OCEAN BEDS

சமுத்திர அடித்தல அமைப்பு

சிறுவர்காள்!

கண்டத்தட்டைப்பற்றிச் சவிஸ்தாரமாய் முன்பு படித்தீர்கள். உங்களுக்குக் கண்டத்தட்டை அளந்து கட்டும் வழியையும் காட்டினேன். இனி (Transitional area) பரிணமத் தட்டு 6000 அடிக்குட்பட்ட ஆழமுள்ளதாம். ஆறாயிரம் அடிக்கு மேற்பட்ட தலத்துக்கு பாதலம் (Abysmal area) என்று பெயர்.

இது வரையில் கண்ட ஆழமான இடம் அட்லான்டிக் மகாசமுத்திரத்தில் (St. Thomas) ஸெண்ட் தாமஸ் என்னும் தீவுக்கு 80 மைல் வடக்கேயுள்ள (The International deep) இன்டர் நாஷனல்டீப் என்னும் இடமாம். பஸிபிக் மகாசமுத்திரத்தில் (Nerodeep) நீரோடீப் என்னும் பாகமாம். இந்து மகாசமுத்திரத்தில் ஜாவாவுக்குத் தென் கீழ்ப்பக்கத்திலுள்ள (Recorder deep) ரிகார்டர்டீப் என்னும் பள்ளமாம்.

உத்தரமகாசமுத்திரத்தில் தருவப் பள்ளமே ஆழமானது இம்மகா சமுத்திரங்களில் பஸிபிக் சமுத்திரமே அதிக ஆழமான கடல். அதன் ஆழம் ஐந்து மைலுக்கு மிஞ்சியிருக்கும். இமயமலை 5 மைலுக்கு மேற்பட்ட உயரமுள்ள மலையென்று உங்களுக்குத் தெரியலாம். அந்த மலையை ஒரு அறுமார் போர்த்து பஸிபிக் மகாசமுத்திரத்தில் போடுவாராஞல் அச்சமுத்திரம் தரையாகக் காணப்படலாம்.

இனி இச்சமுத்திர நீரில் என்னென்ன அடங்கியிருக்கின்றன வென்று பார்ப்போம். ஒரு துளி சமுத்திர நீரை வாயிலிட்டுப் பார்த்தால் அது அதிக உப்பாக இருப்பதுடன் ஒருவிதக் குமட்டும்தன்மை யுள்ளதாகவும் இருப்பது தெரியவரும். இக்குமட்டும் தன்மை சமுத்திர நீருக்கு எங்கிருந்து வந்தது? சமுத்திர நீரைக் காய்ச்சி நீர் வேறு கனபதார்த்தம் வேறுகப் பிரித்துப் பார்த்தால் அந்நீர் 100-க்கு $3\frac{1}{2}$ பங்கு கனபதார்த்த முள்ளதாகத் தெரியும். அக்கன பதார்த்தத்தில் சாதாரண உப்போடு பேதியாகும் (Epsom salt) இப்ஸம் ஸால்ட் என்னும் உப்பும் இருக்கக் காணலாம். இவ்வுப்பே சமுத்திர நீருக்கு ஒருவிதக் குமட்டுங் கசப்பை யளிப்பது.

இச்சமுத்திர நீர் எல்லாவிடத்திலும் ஒரே மாதிரியான உப்போடு கூடியிராது. சூரிய உஷ்ணத்தால் அதிகமாக நீர் பரிணமிக்கும் (Tropics) உஷ்ணமண்டலத்திலுள்ள கடல்களின் நீர் அதிக உப்பாக இருக்கும். செங்கடல் அதிக உப்பாக இருக்கக் காரணம் இதுவே. ஆனல் அதிக சுத்த ஜலம் விழுந்து நீராவியாக மாறுத (Baltic-sea) பால்டிக் கடல் அவ்வளவு உப்போடு கூடினதல்ல. துருவங்களுக்குப் பக்கத்திலுள்ள கடல்கள் அவ்வளவு உப்பான வையல்ல. ஆமேஜான் (Amazon) நதியின் முகத்துவாரத்தில் கடலின் ஒட்டத்தால் (Gulf steam) அந்நதியின் சுத்தஜலமே சமுத்திரத்தில் இருநூறுமைல் தூரம் போகிறதென்பர்.

சமுத்திர ஜலத்தின் உஷ்ணமும் இடத்துக்குத் தக்கது போலாம். துருவங்களுக்குப் பக்கத்தில் 28° ஆக இருக்கிறது. ஆனல் உஷ்ணமண்டலத்திலோ 95° F உண்டு. ஆனல் சமுத்திரத்தின் மேற்பரப்புமட்டும் அதிக சூடானதே யொழிய அடிப்பாகம் எப்போதும் எல்லாவிடத்திலும் ஒரு மாதிரியாகவே இருக்கும்.

அடி. மட்டத்துக்குப் பக்கத்தில் சமுத்திர நீர் உறையும் அளவுக்கு உஷ்ணமண்டலத்திலும் கூட இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மேலும் சமுத்திர ஜலத்தின் உஷ்ணத்தில் நடுமத்தியானத்துக்கும் நடுநிசிக்கும் உள்ள பேதம் 1°-யேயாம்.

இனி அடித்தலத்திலுள்ள சாமான்களைக் கவனிப்போம். சாதாரணமாகக் கண்டத்தட்டில் கறுப்பு, சிவப்பு, பச்சை நிற மான மண்ணேயுள்ளது. எரிமலைப் பக்கத்துள்ள கடற்கரையில் எரிமலை சம்பந்தமான கந்தகமண்ணிருக்கப் பார்க்கலாம். பவளத் தீவுகளுக்குப் பக்கங்களில் பவளப்பூச்சியாலானமண் உண்டு.

இரண்டாவதான பரிணமத்தட்டில் (Transitional Area) செத்துப் போன பிராணிகளின் எலும்பும் மற்றும் மட்கிப்போன தாவர பாதார்த்தங்களும் ஒரு படையாகப் படிந்திருக்கின்றன. இவற்றிற்கு (Oozes) உளையென்று சொல்லலாம். இவ்வுளை சுண்ணும்பு, எலும்பு, என்று இருவகைப் பதார்த்தத்தின் சத்தாலானது.

மூன்றாவதான பாதலத்தட்டில் சுண்ணும்பே காண்பது அரிது. இருக்கும் கொஞ்சம் சுண்ணும்பும் தண்ணீரில் கரைந்து போவதால் அடியில் தங்குவதில்லை. எலும்பு சம்பந்தமான வஸ்துக்கள் தண்ணீரில் கரையாவாதலால் அவையே தங்குகின்றன. பாதலத்தில் அடிப்பாகம் செங்களியால் ஆனதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அவ்விடத்து இப்பொழுது இறந்துபோன ஒருவகைத் திமிங்கில ஜாதியின் காதெலும்புகள் மிதப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

சிறுவர்காள்! நீங்கள் சமுத்திர அடித்தலத்தைப் பற்றியும் சமுத்திர நீரின் தன்மையைப் பற்றியும், சமுத்திரத்தில் கிடைக்கும் சாமான்களைப் பற்றியும் இதுவரையில் படித்தீர்கள். இவ்விஷயங்களை நன்றாய் மனத்தில் தாரணை செய்த பின்னர் உங்களுக்கு பூமியின் தோற்றத்தைப் பற்றியும் பூமிதோன்றின காலவரையறையைப்பற்றியும் சொல்லுவேன்.

சிவத்தியாகாநந்தன்,
ஆனந்தாச்சிரமம்.

GEOGRAPHY

பூகோளம்

a. பூகோளம் என்பது பூமி அதன்மேலுள்ள வஸ்துக்களின் இயற்கை அமைப்புகள் முதலானவைகளைப் பற்றி போதிக்கும் நூல்.

b. அவை நான்கு வகைப்படும்.

(1) Physical—பூமியின் இயற்கையால் என்னென்ன நேரிடும் என்பதை விளக்கும் நூல்.

(2) Political — நாடு நகரங்கள் இன்னின்னரால் ஆளப்படுகிறது என்பதை விளக்கும் நூல்.

(3) Commercial — இன்ன ஊரில் இன்னது விளைகிறது அதனால் எப்படி மற்ற ஊர்களுடன் வியாபாரம் செய்யப்படும் என்பதை விளக்கும் நூல்.

(4) Mathematical — கணித சம்பந்தமாய் பூமி சாஸ்திரத்தைப்பற்றிச் சொல்லும் நூல். ஆகாயத்தில் கிரகங்கள் இருப்பிடம். அவைகள் மாறுதல். அவைகள் மாறினால் என்ன நேரிடுகிறது என்பதையும் காழிகைகளைப் பற்றியும் விளக்கும் நூல்.

c. பூமியின் பாகங்கள் இருவகையாகப் பிரிக்கப்படும். அதாவது. (1) நில பாகம், (2) நீர் பாகம் (Land and water) இதில் நிலப் பாகம் இருவகைப்படும். அவையாவன. (1) சமவெளியான பூமி, (2) மலையடர்ந்த பூமி.

d. பூமி உண்டான விதம் — சதா எரிந்து கொண்டிருக்கும் கோளத்தி லிருந்து நாளாவட்டத்தில் குளிர்ந்து மேற்பாகம் கெட்டிபட அந்த பாகத்திற்கு பூமி என்று பெயர் ஆயிற்று.

e. மலை உண்டான காரணம் — அப்படி விழுந்து குளிர்ந்த நெருப்புக் கோளமானது சில இடங்களில் திடீரென்று குளிர்ந்ததனால் அவ்விடம் பள்ளமாயும் நாளடைவில் குளிர்ந்த பாகம் சமவெளியாயும் அப்படி சீக்கிரத்தில் குளிராது நின்றபாகம் உயரமான மேடுகளாக நின்றுவிட்டன. இவைகள்தான் மலைகள் எனப்படும்.

CLEANING THE TEETH

6. தந்த சுத்தி

1. இது ஆரியர்களுடைய முக்கியமான ஆசாரங்களுள் ஒன்றாகும். இந்த ஆசாரத்தைக் கொண்டாடுவதில் ஆரியர்கள் சிரத்தைமிகுந்தவர்கள்; இதனை நியமமாகவும் நன்றாகவும் அனுஷ்டித்து அவர்கள் தேர்ச்சியடைந் திருக்கிறார்கள்.

2. தந்த சுத்தி செய்வது ஆரியர்களுக்கு முதன்மையான வைதிகக் கடமையாக ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுடைய கொள்கையின்படி, பல்லை விளக்காமல் ஒருவன் எந்தக் காரியமும் செய்யக் கூடாது; பல் விளக்காதவன் வைதிகக் கர்மத்திற்கும் (Religious Duties) லௌகிக கர்மத்திற்கும் (Social Duties) ஏற்றவனாகான். ஆதலால், காலையிற் படுக்கையை விட்டு எழுந்த உடனே ஒருவன் செய்ய வேண்டிய முதற் காரியம் தந்த சோதனம். தந்த சோதனமாவது, பற்களிற் படிந்திருக்கும் அழுக்குகளை நீக்கி அவைகளைச் சுத்தப் படுத்துவதாம்.

3. இந்த ஆசாரம் இந்த நாட்டில் வற்புறுத்தப் படுவதுபோல ஐரோப்பிய தேசங்களில் வற்புறுத்தப் படுவதில்லையே யென்று பௌதிக சாஸ்திரிகள் (Scientists) அநேகர் துக்கிக்கின்றார்கள். இந்த ஆசாரத்தைக் கைக் கொள்ளாததனால், ஐரோப்பியர்களுக்குத் தந்த வியாதிகள் அதிகமாக உண்டாகின்றன. அதனால், சாதாரண வைத்தியர்களைவிடத் தந்த வைத்தியர்கள் ஐரோப்பிய நாடுகளிற் அதிகமாக ஏற்பட வேண்டியதாயிற்று.

4. பற்களை விளக்கிச் சுத்தி செய்வது மிகவும் அற்பமான காரியம்; மிகச் சுலபமாகச் செய்யக் கூடியது. இதைத் தினந்தோறும் தவறாமல் செய்யாத குற்றத்தினால், பலவகையான வியாதிகள் உண்டாகின்றன வென்பது மேல் நாட்டாருடைய அநுபவத்தினால் நமக்குத் தெரிகின்றது. காரியம் அற்பமானதாயினும், அதனைச் செய்யாது ஒழிவதனால் விளையுந் தீமை பெரிதாக இருக்கின்றது. பல் நோவினால் வருந்தாத ஐரோப்பியர் ஆரியர் எனவே சொல்லலாம். நோவில்லை யெனினும், வாயில் நீர் நாற்றம் மிகுந்த வெறுப்புந் துன்பமும் விளைக்கின்றது.

5. மாம்சாகாரம் புசிப்பவர்களும், வெற்றிலையும் பாக்கும் மெல்லுகிறவர்களும் இந்த ஆசாரத்தை ஒரு பொழுதும் மறக்கலாகாது. பற்களில் அழுக்குச் சேருவதனால் விளையும் வியாதிகள் பல. மனிதன் உட்கொள்ளும் உணவுப்பொருள்களை யெல்லாம் பற்களினூலேயே மெல்ல வேண்டி இருக்கின்றதாதலின், அந்த உணவுப் பொருள்களின் சிற்சில பாகங்கள் பற்களின் இடையில் சிக்கிக் கொள்வதுண்டு.

6. அன்றியும், உட்கொள்ளும் உணவின் தன்மைக்குத் தக்கபடி, வாயில் வேறு வேறு தன்மையுள்ள நீர்கள் ஊறுகின்றன. நீரிலுள்ள சுற்களின் மீது பாசிபடர்வதுபோலப் பற்களின் மீது ஊத்தை மேலும் மேலும் படிந்து கொண்டே இருக்கின்றது. இரவில் தூங்கும் பொழுது அநேகர் வாயினால் மூச்சு விடுவதனால் வாயில் நீர் அதிகமாக ஊறி உறைகின்றது.

7. இங்ஙனம் மலியும் ஊத்தையை நாள்தோறும் அகற்றிவிட்டால், அவை பெருகிக்கெட்டிப் பட்டு நாற்றமெடுத்து நோவுண்டாக்குகின்றன. மற்றும், புசிக்கும் சுத்தமான உணவுப்பொருள்களோடு பற்களிலுள்ள ஊத்தை மலம் சேர்ந்து வயிற்றுக்குட் சென்று, இரத்தத்தைக் கெடுத்து வியாதிகளை உண்டாக்குகின்றது.

8. தந்த சோதனம் செய்வதன் ஆவசியகத்தை இப்போது உணர்ந்து மேல் நாட்டு வைத்தியாதிகாரிகள் ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளி ஒவ்வொருவனும் தினந்தோறும் பல்தேய்க்க வேண்டு மென்று வற்புறுத்தி, ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு பற்குச்சி (Tooth brush) கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

9. இந் நாட்டிற் சர்வசாதாரணமாக வுள்ள இந்த ஆசாரத்தைக் கடைப்பிடிப்பதற்கு மேல் நாட்டார் பெரும் பிரயத்தனமும் பெருஞ் செலவும் செய்ய வேண்டி இருக்கிறது. தூங்கி எழுந்தவுடனே ஒருவன் பல்லை விளக்காமல் காலதாமதஞ் செய்தால், பல் தேய்க்காதவனுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்று மற்றவர்கள் வெறுப்பது இத்தேசத்தில் வழக்கமாக இருக்கின்றது.

10. இது மிகவும் சிறிய காரியமாயினும், இதைக் கிரமமாகச் செய்வதனால் ஆரோக்கியம் அதிகரிக்கின்றது. தினந்தோறும்

பல் தேய்ப்பதனால் விளையும் நற் பயன்கள் பலவாகவும் பெரியனவாகவும் இருக்கின்றன. இந்தக் காரியம் செய்யத் தவறினால் விளையும் தீப் பயன்கள் பலவாகவும் பெரியனவாகவும் இருக்கின்றன.

11. பல்லை விளக்குவதற்கு உத்தமமான சாதனம் கருவேலங் குச்சி, வேப்பங் குச்சி, பூலாங் குச்சி, காட்டாமணக்குக் குச்சி, ஆலம் விழுது முதலியனவாம். இவற்றுள், கருவேலங் குச்சியும் ஆலம் விழுதும் உத்தமமானவைகளாகும். "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்பது வழக்கச் சொல். புளியங் குச்சியினால் பல் தேய்ப்பது நன்றன்று. அதிலுள்ள புளிப்பு (அமிலம்) படுவதனால் ஈறுகள் மிருதுவாகின்றன; பல் கூசுகின்றது.

12. மேற் சொல்லியக் குச்சிகளைக் கொண்டு பல் தேய்க்குமுன், அவைகளின் நுனியைப் பற்களினால் நன்றாகக் கடித்து நசுக்கி மிருதுவான கூர்ச்சமாகச் (Tooth Brush) செய்து கொள்ள வேண்டும். இப்படித் தினந்தோறும் செய்யும் புதியக் கூர்ச்சத்தைக் கொண்டு பல்லை விளக்கவேண்டும். பனையின் நார், மிருகங்களின் மயிர் முதலியவைகளைக்கொண்டு செய்த கூர்ச்சத்தை வாங்கி வைத்துக்கொண்டு தினந்தோறும் அதையே உபயோகித்துக் கழுவி எடுத்து வைத்துக்கொள்வதைவிட, மேற் சொல்லியபடி பற்குச்சிகளை உபயோகிப்பது சிறந்த முறையாகும். ஒரே தட்டில் தினந்தோறும் அன்னம் புசிப்பதைவிட, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு புதிய இலையில் அன்னம் புசிப்பது நன்றென்பதுபோலவே, புதிது புதிதாகப் பற்குச்சியைக் கொள்வதும் சிறந்ததாகும்.

13. பற் குச்சி இல்லாவிட்டால், புதிதாக உதிர்ந்த மாம்பழுப்பையாவது, முதிர்ந்த பச்சை மாவிலையையாவது கையாந்தரை என்னும் கரிசலாங்கண்ணித் தழையையாவது கொண்டு பல்லை விளக்கலாம். புளியங் குச்சியைத் தவிர, மேற்சொல்லிய் மற்றைக் குச்சிகளிலும், இலைகளிலும் ஒருவிதமான துவர்ப்புள்ள ரசம் இருக்கின்றது. அந்தத் துவர்ப்பு வாய்க்கு இனிமையாக இருக்கும்; வாயிலுள்ள புண்களை ஆற்றும்; பற்களையும், ஈறு என்னும் தந்த மூலத்தையும் கெட்டிப்படுத்தும். இவ்விதமாக, அவை பற்களைச் சுத்தப் படுத்துவதற்குச் சாதனமா யிருப்பதல்லாமல், மருந்தாகவும் உபயோகப் படுகின்றன.

14. பற்பொடிகளைக் கொண்டும் பல்லை விளக்கலாம். சாதாரணமாக உபயோகிக்கத் தகுந்த பற்பொடிகளாவன—கார்பாலிக் பற்பொடி (Carbolic Tooth Powder), பாதங் கொட்டை ஒட்டின் கரி, கொட்டைப் பாக்குக் கரி, நெல்லுமிக் கரி ஆகிய இவைகளோடு கொஞ்சம் விளை சுண்ணாம்பு (Chalk), உப்பு, கற்பூரம், லவங்கம் ஆகிய இவைகளைச் சேர்த்துப் பொடிசெய்து வைத்துக் கொள்ளலாம். இந்தப் பொடிகளெல்லாம் அநுகூலமானவைகளே.

15. ஆனால், நுண்ணிய பொடிகளைக் கொண்டு பல் தேய்த்தால், அவை பற்களின் இடுக்குக்களில் ஒட்டிக்கொள்ளும்; அடைந்திருக்கும் ஊத்தையோடு சேர்ந்து அழுக்கை அதிகப்படுத்தும்; காலக் கிரமத்தில் பற்களின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். அப்படிப்பட்ட மழ மழப்பான பொடிகளை உபயோகித்தால், உடனே தந்த கூர்ச்சத்தை (Tooth-brush)க் கொண்டு அங்கு மிங்கும் ஒட்டிக்கொண்டிருக்கிற அழுக்குக்களைப் போக்குவதற்காக மறுபடி நன்றாகத் தேய்க்கவேண்டியதாகும்.

16. பற் பொடியோடு கூடவாவது, பற் பொடி யில்லாமலாவது தந்த கூர்ச்சத்தை (Tooth-brush) உபயோகிக்கும் வழக்கத்தைத் தவிர்ப்பது நன்று. ஏனெனில், தந்த கூர்ச்சத்தை உபயோகித்த பிறகு, அதைச் சோடா நீரில் (Soda-solution) ஊறவைத்து நன்றாகக் கழுவியெடுத்துக்கொள்ளவேண்டும். தினந்தோறும் அப்படிச் செய்வது இயலாத காரியம். அப்படிச் செய்யாமல் தந்த கூர்ச்சத்தை உபயோகிப்பதனால், பற்களின் ஆரோக்கியம் மிகக் கெடும். அன்றியும், ஒரே கூர்ச்சத்தை (Brush) நெடு நாள் உபயோகிப்பது அசுத்தமான வழக்கமெனத் தோன்றும்.

17. மணல், செங்கற் பொடி, கரகரப்பான சாம்பல், கட்டைக் கரி முதலிய சரவை வஸ்துக்களை உபயோகிக்க லாகாது. அவைகளைக் கொண்டு பல் விளக்குவது நிந்திக்கத்தக்க காரியம். ஏனெனில், அவைகளை உபயோகிப்பதனால், காலடைவில் பல் தேய்ந்து மெலிக்துபோம்; மிகவும் கெட்டியான பதார்த்தமாகிய தந்த கவசம் (Enamel) என்பதும் தேய்ந்துபோம்.

18. மரம் எரித்த சாம்பல்களை மறதியினாலாவது, அறியாமையினாலாவது, அஜாக்கிரதையினாலாவது உபயோகிக்கக்கூடாது. மரம் எரித்த சாம்பல் என்பது விறகுச் சாம்பல். அதைக் கொண்டு பல்லை விளக்கினால், வாயும் நாக்குகளும் வீங்கிப் புண்பட்டு வாதனை செய்யும். ஏனெனில், அந்தச் சாம்பலில் சோடாவும் பொட்டாஷும் (Soda & Potash) அடங்கி யிருக்கின்றன. அவைகளின் காரம் வாயின் மிருதுவான பாகங்களில் தாக்கிய வுடனே புண்ணாகின்றது.

19. சிறு குச்சியைக்கொண்டு பற்களின் இடையில் குத்துவது சரியன்று. ஏனெனில், பற் குத்தியானது (Tooth-pick) சந்தில் இருக்கும் அழுக்கை இன்னும் சற்று ஆழமாகத் தள்ளுகின்றது; பற்களின் இடையில் அதிகமான சந்து உண்டாக்குகின்றது.

20. பற்கள் ஒழுங்காக இல்லாமல் துத்திப்பல் வாய்ந்தவர்களின் வாயினின்று துர் நாற்றம் வீசும். ஏனெனில், அவர்கள் ஒழுங்குத் தவறுக இருக்கும் பற்களை நன்றாகச் சுத்திசெய்ய முடியாததனால், அழுக்குச் சேர்ந்து, ஊத்தை மிகுந்து நாற்றம் எழுகின்றது.

21. வாயினின்றும் துர் நாற்றம் வீசுவது வயிற்றில் பதார்த்தங்கள் ஜீர்ணமாகாமல் அழுகிக் கிடக்கின்றன வென்பதையும், சரியாக மலம் கழியவில்லையென்பதையும் உணர்த்தும்.

22. பல் விளக்கா திருப்பதனாலும், மேற்சொல்லியபடி சுத்தி செய்வதற்குப் பதிலாகத் தூணியினால் தேய்த்துத் துடைப்பதனாலும் பற்கள் அசுத்தமாகவே இருக்கும், துர் நாற்றம் வீசும்.

23. பல் விடுக்குகளில் அழுகிக்கொண்டிருக்கும், அழுக்கு வஸ்துக்கள் உண்டவுடன் வயிற்றுக்குள் செல்வதனால் இரத்தம் கெட்டு விஷமிக்கும். சுருக்கிச் சொல்லின், பல்லை விளக்கா திருப்பது எண்ணிறந்த வியாதிகளுக்கு ஆதிகாரணமாகும்.

24. பல்லை விளக்குவதல்லாமல், நாக்கையும் விளக்கவேண்டும் நாவின்மீதும் அழுக்கும் ஊத்தையும் படிந்திருக்கும், அசுத்தமான நீர் ஊறி உறைந்திருக்கும்; முக்கியமாக, நாவின் அடியில் (நெஞ்சினண்டை) அப்படிப்பட்ட நீர் படிந்து உறைந்திருக்கும் இப்படிப்பட்ட அழுக்குகளை யெல்லாம் தினந்தோறும் காலையில் வழித்து எறியவேண்டும்.

25. நாவை வழிப்பதற்குச் சிலர் ஓலைத் தூண்டி, பச்சையான மானின் தோல், தென்னம் நார்க்கு முதலியவைகளை உபயோகிக்கிறார்கள்; சிலர் தம் கை விரல்களினாலேயே வழிக்கிறார்கள். இப்படிச் செய்வதில் சிலர் விரல்களைத் தொண்டைக் குழி வரையிற் கொண்டுபோய், இருமல் உண்டாக்கிக்கொண்டு, பெருஞ் சத்தஞ் செய்து, வாந்தி யெடுக்கப் பிரயத்தனப்பட்டு, அங்கே உறைந்துள்ள கோழைக்கட்டைக் கக்குகிறார்கள்.

26. இவ்வாறு கோழை அகற்றும்பொழுது, அவர்களுடைய கண்களினின்றும் மூக்குத் துவாரங்களினின்றும் நீர் பெருகி வழியும்; கண்கள் சிவந்து, விழிகள் பிதுங்கி நிற்கும். மிகப் பலவந்தமாகக் கோழை அகற்றுவதனால், கண் காது மூக்கு முதலிய அவயவங்களிலுள்ள நரம்புகளெல்லாம் வீணில் எழுப்பப்படுகின்றன. இது நன்றன்று.

27. கோழை வழிப்பது அவசியமே. ஆனால் ஆயாசமில்லாமலும் பெருஞ்சத்தஞ் செய்யாமலும், முகத்து நரம்புகளைத் தூண்டி எழுப்பாமலும் கோழை வழிக்கவேண்டும். ஒருவன் மிகச் சத்தஞ் செய்து வாந்திசெய்வதுபோலக் காறிக் கோழை துப்பும் பொழுது, அருகி லிருப்பவர்களுக்கு மிகுந்த வெறுப்பு உண்டாகும்.

28. தன்னுடைய நரம்புகளின் நன்மையின் பொருட்டும், பிறருக்கு வெறுப்பு உண்டாக்காதிருக்கும் பொருட்டும், ஒருவன் ஏதுப்புறமாகப் போயிருந்து, நிதானமாகவும், சத்தஞ் செய்யாமலும், தன்னைச் சங்கடப் படுத்திக்கொள்ளாமலும் நாவை வழித்துக் கோழை துப்பவேண்டும்.

29. பலர் நடமாடும் இடங்களிலும், குடி நீர் நிலையங்களிலும், குளிநீர் நிலையங்களிலும் பல் தேய்த்து வாயைக் கொப்புளிக்கக் கூடாது; எச்சில் உமிழக் கூடாது; தொண்டையைக் குத்திக் கோழை துப்பக்கூடாது. இந்த விதியானது ஆரோக்கிய சாஸ்திரத்தையும் மதாசாரத்தையும் அநுசரித்து ஏற்பட்டிருப்பதன்றி மரியாதையான ஒழுக்க முறையாகவும் இருக்கின்றது.

30. தென் இந்திய ஸ்த்ரீகள் சிலர் தர்சினப் பொடி முதலிய பல் மினுக்குத் தூள்களைத் தேய்த்துப் பற்களுக்குக் கறுப்புச்

சாயம் தீட்டுகிறார்கள்; கீழ் ஜாதியார் சிலர் தம் பற்களுக்குச் சிவப்புச் சாயம் தீட்டுகிறார்கள். இந்த வழக்கம் சீரானதன்று, அழகு செய்துகொள்ளும் வகையறியாதவருக்குரியது, இழிவை உணர்த்துவது, முகத்தின் அழகையும் வாயின் அழகையும் போக்கி விகார முண்டாக்குவது.

T. A. SWAMINATHA AIYER,
Retired Editor of the 'Arya'.

LIFE SKETCH OF KING EDWARD VII

காலஞ்சென்ற ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தியைப்பற்றிய சிறு சரிதை

I. அவரது பிறப்பும் பெற்றோரும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

எனும் வள்ளுவரது குறளுக் கேற்ப, மூர்தீரகத்து மன்னி விளங்கும் இக்கிலவுலகின் கண்ணே, எவ்விதத்திலும் சிறப்புற்று விளங்கும் பிரஜைகளும், இராஜ விசுவாஸ முள்ளோர்களும் ஆனந்தக் கடலில் மூழ்கி பாவினலும், இசையினலும் கடவுளே தியானஞ் செய்துகொண் டிருக்கும் காலத்தில், விக்டோரியா மகா ராணிக்கும், ஆல்பர்ட் இளவரசருக்கும், 1841-ஆம் வருடம் நவம்பர்மாதம் 9உ யன்று மூத்த குமாரராக நமதரசர் புகழோடே யவதரித்தார். இவரது பிறந்தநாட் கொண்டாட்ட மானது 'Windsor' யென்னு மிடத்தில் ஸெயின்ட் ஜார்ஜ் சேப்ப (St. George's Chapel) லில் 1842-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 25உ யில் வெகு விமரிசையாய் நடந்தேறியது. அவ்விடத்திலே தான் இளவரசருக்கு ஞான ஸ்நானம் செய்வித்து 'Albert Edward' என நாமகரணம் சூட்டினர்கள். இப்படிப் பெயர் வைத்ததின் காரணம் யாதெனின் 'Albert' என்பது அவருடைய தகப்பனரையும் 'Edward' என்னும் பாட்டனரையும் நினைவு கூறும்பொருட்டேயாம். இவர் முதல்முதல் இளவரச பட்டத்தை யடைந்த பொழுது, 'சிரித்த முகமும் திடசரீரமும் பெற்றிருந்தார்.

II. சேர்க்கையும் கல்வியும்

இவருடைய பெற்றோர்கள் 'கல்வி நலனே கலனல்லால் மற்றோ ரணிகலம் வேண்டாவாம்,' என்பதையும் 'கண்ணிற் சிறந்த யுறுப்பில்லை கல்வியின் நுண்ணிய வாயபொருளில்லை,' என்னும் நீதி மொழிகளையும் முற்று முணர்ந்தவ ராதலின், இளவரசருக்குக் கல்வி கற்பிக்க அவர் இளம் பிராயத்திலேயே குடும்ப ஆசிரிய ராகிய (Mr. Henry Burch) ஹென்ரிபர்ச் என்பவரை ஏற்படுத்தி-னர்கள். இவ்வாசிரியரோ இளவரசரது கல்விக்குமட்டும் பாத்-திரனேயல்லாது, அவரது நன்னடக்கைக்கும் காரணமாக விருந்-தார். கொஞ்ச காலம் (Edinburgh) எடின்பரோவில் யிருந்த பின்னர் 'ஆக்ஸ்வர்ட்,' (Oxford) என்னுமிடத்தில் க்ரைஸ்ட்சர்ச் (Christ church) என்னும் பள்ளியில் மாணக்கனனர். தான் கல்வி கற்கும் காலத்தில் ஊக்கத்தையும் விடாமுயற்சியையும் கைக்கொண்டவராய் தமது பாடங்களைச் சரிவரப் படித்துவந்தார். அப்படி யிருக்கையில், இவர் (Natural Science) நாச்சுரல் ஸயன்ஸ் என்னும் பாடத்திற்குத் தனது கவன முழுதும் செலுத்தி அதில் தனக்கு ஒருவரும் நிகரில்லாத வண்ணமாய்ச் செய்துகொண்டார். இன்னும் இவரிடம் ஆராயத் தக்கது யாதெனில், இவர் ஒருநா ளாவது பள்ளிக்குச் செல்லத்தவராதவராய் இன்னும் தன்னோடு கற்கும், சிறுவர்களுக்கு நன்னடக்கைக்கும், காலந் தவறுமற் காரியங்களை முட்டின்றி முடிப்பதற்கும், ஓர் திருஷ்டாந்தமாய் விளங்கினர்.

ஆகையால் நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில், இப்புவி யெல்லாவற்றிற்கும் சக்ரவர்த்தியாய் விளங்கினவரே, கல்விக் கருங்கலனையும், கற்றோர்க்கு உறவினனையும், நன்னடக் கைக் கரசனன காதலனையு மிருந்திருக்க சாதாரண நாம் எப்படி யிருத்தல் வேண்டு மென்பதை, நமது நேயர்களே அறிந்து கொள்ளலாம்.

III. அவரது வாழ்நாளி னாரம்பம்

இளவரசருக்கு வயது 18 பூர்ணமாயிற்று. ராஜ்ய பரிபா லனம் செய்யும் ஓர் பருவம் வந்துவிட்ட தென்பது 'வெள் ளிடை மலைபோல்,' விளக்க முற்றது. ஆகையால், இவரை 'ரிச் மாண்டு,' என்னுமிடத்தில், 'வொயிட் லாட்ச்,' (White lodge)

என்னும் அரண்மனைக்குக் கொண்டமர்த்திஞர்கள். இக்காலத் திலேதான் அவருடைய தாயார் விக்டோரிய சீமாட்டியார் அன்பும் சொற்சுவை பொருட்சுவையும் பொருந்திய கடிதமொன்று வரைந்து தனுப்பியதாய்த் தெரிகிறது. அதில் எழுதியிருந்த முக்கிய விஷயம் யாதெனின் :—

'என தருமைச் செல்வப் புதல்வ! நின தரசாட்சியில் நான் ஒன்றுந் தலையிடக் கூடா திருப்பினும், ஒன்றுமட்டும் தீர்மானமாய் வைப்பாய் என நம்புகிறேன். எப்போது எனது ஆழ்ந்த ஆலோசனைகளும் உதவியும் நினக்குத் தேவையோ அப்போழ்தே ஈயடைவா யென்பதில் ஐயம் வேண்டுவதில்லை' என்பது.

IV. அவரது இந்தியப் பிரயாணம்

1875-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 8உ இவர் இந்தியாவில் பம்பாயின் கடற்கரைபிற் வந்திறங்கினர். எவ்வளவோ வெளி நாட்டரசர்கள் இந்தியாவிற் வந்தபோதிலும் இவ்வளவு விமரிசையாகவும் அன்பாகவும், வரவேற்கப்படவில்லை என்பது திண்ணம். இவர் பம்பாய் நகரைவிட்டு இலங்கைத் தீவுக்குச் சென்று அங்கு ஒரு மதயானையைக் கொன்று, தமது ஆச்சரியமான வேட்டைத் திறமையைக் காட்டினர். கொஞ்சநாளுக் கெல்லாம் சென்னையை யடைந்து, உபசார பத்திரிகைகளையும், வாழ்த்துக்களையும் சம்மானங்களையும் பெற்ற பின்னர், வாரணசி சென்று கங்கையின் காட்சியையும் விஸ்வநாத ஸ்வாமியின் தேவாலயத்தினது காட்சியையும் கண்டு, உளமும் மெய்யும் பூரித்து, ஆக்ராவை நோக்கிப் பிரயாணமானர். அங்கு மிகப் பேர்பெற்ற (Queen of Sorrow) என்னும் சிலவைக் கற்களால் செய்யப்பட்ட சஹாதியின் அற்புத சக்தியான 'கண்களே மங்கச் செய்வ தென்பதை' கண்ணுரக் கண்டு களித்த பின்னர் தமது இருப்பிடமாகிய 'லண்டன்மா நகரை நோக்கி 1876-ஆம் வருஷம் மேமாதம் 11உ பிரயாணமானர்.

V. அவரது விசேட குணாதிசயங்கள்

இவர் மிகவும் வேலைத் திறம்வாய்ந்தவரும் சுறுசுறுப்புள்ளவருமாக விருந்தார். முன்சொன்ன குணாதிசயத்தை விளக்கிக் காட்ட பின்வருபவைகள் திருஷ்டாந்தமாகும் :—

அவர் தமது வாழ்நாட்களுள் எண்பத்தொன்று அஸ்தி வாரக் கற்களே தமது கையினலேயே நாட்டி யிருக்கிறார். மேலும், அவர் தனது குடிகளது சுகத்தையே நாடி நிற்பவராகையால் பொதுஜனக் கூட்டங்களிலும், சங்கங்களிலும் ஒரு வித்தியாசமுமின்றி எல்லாரோடும் கலந்து பேசியும் தாமே பல கடலைகளில் அக்கிராசனம் வகித்தும் ஜனங்களுக் குண்டான தின்பத்தைக் கால தாமதமின்றியில் நீக்கி வந்தார்.. சண்டைக் களத்திலோ வென்றல் ஒரு போர்வீரனுக்குள்ள திறமை வாய்ந்தவராய் கூடணப்பொழுதில் வெற்றி யடையும் சாமர்த்தியமுள்ளவர். இன்னும் இவருக்குப் பஞ்ச பாஷையிலும் பாண்டித்திய முண்டெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. (German, French, Italian, Russian in addition to his mother tongue). கண் காட்சி சாலைகளில் (Exhibitions) மிகவும் ஸ்ரத்தை யெடுத்துக்கொண்டு அது விருத்தியடைவதையே மேலாக வெண்ணிவந்தார். அவருடைய வாழ்நாட்களின் முக்கிய விசேஷமென்னவெனில் 'Freemason' "ப்ரீமேஸன்" என்ற ஓர் இனத்தாரை பலப்படுத்தினதேயாம். அப்படிச் செய்வதற்கு இவர், தானே சர்வாதிகாரங்களையும் வகித்து கஷ்டப்பட்டு அதின் அபிவிர்த்திக்குப் பாடுபட்டார். இவர் தன் வேலையைச் சரிவர முடிப்பவராகையால், இவருக்கு கடிதங்களும், மனுக்களும் எண்ணிறந்தனவாய் வந்திருந்தபோதிலும், ஓர் இலட்சினின்றி விடை கொடுத்துப் பைஸல் செய்து விடுவார். தேகப் பயிற்சியிலோவென்றல் சாதாரணமான யோக்கியதை யுடையவரன்று. இவைக ளெல்லாவற்றையும்விட பெருந்தன்மை யென்பது அவரிடம் குடிகொண்டிருந்தது. திருஷ்டாந்தமாக:—

இவர் 1900-ஆம் வருஷம் டென்மார்க்கை நோக்கிப் பிரயாணமாகையில், 'லிபிடோ' என்னுமோர் வஞ்சகச் சிறுவன், இளவரசர்மீது அம்பை யெய்தான். இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசர் அமைதியாய் வீற்றிருக்க அவ் வம்பு தெய்வச்செயலாய் வேறிடத்திற் சென்றது. உடனே அரசனது காவற்காரர்கள் அச் சிறுவனே முன்கொண்டு நிறுத்த, அம் மன்னன் கம்பீர முகத்தோடு அச் சிறுவனது பிழையை தெளிவாய் எடுத்துக் காட்டி பின்னர் அவனே ஒன்றுஞ் செய்யாமலிருக்கும்படி கண்டித்து, மன்னித்துவிட்டனரென்பர்.

மத விஷயங்களிலோவென்றால் தமது அண்ணியாகிய விக்டோரிய ராணியைப்போல 'எந்தெந்த ஜாதியாருக்கு எந்தெந்த மதம் வழக்கமாய்க் கொள்ளத்தக்கதோ அதையே அவரவர்கள் தடையின்றி அனுஷ்டிக்கலாம் என விட்டுவிட்டார். இதுவே குடிகளுக்கு அரசனிடத்தில் உள்ளன்பு உண்டாவதற்குக் காரணமாகிறது.

VI. இவர் சிங்காதன மேறல்

இத்தருணத்தில் 1901 வருஷம் ஜனவரி மாதம் 20உ யன்று அன்பாயும் ஆதரவாயு மிருந்த விக்டோரியா மகாராணியார் தமது புத்திரபௌத்திரர்கள் சூழ்ந்துநிற்க, கடிகாரம் மணி எழடிக்கவே, கண்கள் இரண்டும் மங்கினவராய் விண்ணுலகஞ் சென்றார். அன்று மறுநாள் இதுவரையில் இளவரசரா யிருந்த 'ஆல்பர்ட் எட்வர்ட்' 1901 வருடம் ஜனவரி மாதம் 24உ ங்கிலாந்துக் கரசராயும், இந்தியாவிற்குச் சக்ரவர்த்தியாகவு சிங்காதன மேறினார். அவர் அச்சமயம் குடிகள் யாவருக்கும் அறிவித்தது யாதெனில், தான் தனது தாயைப்போல நாடுகும் நித்தோங்கும்படி யாண்டு வருவதாயும், குடிகளது சௌகரி செய்தையே நாடி நிற்பதாயும் வெளிபிட்டார். அதற்கேற்ப அவரும் தமது வாக்குக் கரிச்சந்திரனுய் விளங்கினர் என்பதற்கையமுண்டோ! இப்படி யெல்லாம் ராஜநீதி தவறாது அரசாண்ட பிறகு 1910 ஆம் வருஷம் காலஞ் சென்றார்.

உடனே அவரது மூத்த குமாரரான ஜார்ஜ் மன்னர் ஜெய பேரிகள் அடிக்கவும், நாட்டார் சந்தோஷிக்கவும் சிங்காதன மேறி, தமது தந்தையைப்போல, ஆண்டு வருகின்றார். ஆகையால், நாம் அவர் 'தீர்க்க ஆயுளும், செங்கோன் முறைமையும் பெற்று வாழ்க,' எனக் கடவுளைத் துதிப்போமாக.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது-10. | 1914வது ஜூலைமீ | மாதம் 2

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் ஒரு உபாத்தியாயர்

LIBERTY - EQUALITY - FRATERNITY

மாணக்கர்கள் சுயேச்சையும் சமத்துவமும் நட்பும்

டால்ஸ்ட்டாய் பிரபுவின் கிராம பள்ளிக்கூடத்தில் மற்றொரு விநோதமான விஷயம் உண்டு. மாணக்கர்கள் எப்பொழுது நினைத்தாலும் வகுப்பைவிட்டெழுந்து வீட்டுக்கு ஓடிப்போய் விடுவார்கள். உபாத்தியாயர்கள் அவர்களைத் தடுப்பதில்லை. அதிலும் அப் பிள்ளைகள் ஒருமனப்பட்டு ஒற்றுமையுடன் எழுந்து போவது விசித்திரமாக இருக்கும். ஒருமுறை பிள்ளைகள் இவ்வாறு எழுந்து போனதைத் தானே விவரமாக எழுதி யிருக்கிறார்.

சிற்சில சமயங்களில் இரண்டாவது மூன்றாவது பாடம் நடக்கும்போதே சில பிள்ளைகள் அலுத்துப் போய்விடுவ துண்டு. அப்போது அவர்களில் இரண்டுபேர் எழுந்துபோய்த் தொப்பியை மாட்டிக்கொண்டு வெளியே போகப் புறப்படுவார்கள்.

உபாத்தியாயர் — எங்கே போகிறீர்கள் ?

பிள்ளைகள் — வீட்டுக்குப் போகிறோம்.

உபாத்தியாயர் — மற்றப் பாடங்கள் படிக்க வேண்டாமா ?

பிள்ளைகள் — வீட்டுக்குப் போகலாம் என்று பிள்ளைகள் எல்லோரும் சொன்னார்களே !

என்றுசொல்லிக் கொண்டே இரண்டு பிள்ளைகளும் வகுப்பை விட்டு வெளியே போய்விடுவார்கள். உபாத்தியாயர், பாவம், என்ன செய்வார். வேண்டா, பொறுங்கள், இருங்கள் என்று தம்மால் கூடியவரையில் சொல்லிப் பார்ப்பார்.

அதற்குள் வேறொரு வகுப்பிலிருந்து மற்றொரு பிள்ளை வகுப்பில் நுழைவான். அப்பொழுதுதான் வேறு இரண்டு பிள்ளைகள் மெதுவாக எழுந்து வெளியே வரப் புறப்படுவார்கள். அவர்களைப் பார்த்து உள்ளே நுழைந்தவன் 'ஏன் தாமதிக்கிறீர்கள் ? வெளியே வாருங்கள், போகலாம்' என்று அழைப்பான். அதற்குள் மற்றொரு பையன் வேறு வகுப்பிலிருந்து ஓடிவந்து, 'அதோ பாருங்கள், பிள்ளைகள் எல்லாம் சந்து முனை திரும்பினார்கள், புறப்படுங்கள், புறப்படுங்கள்' என்று கூச்சலிடுவான். உடனே ஏழு எட்டு பிள்ளைகள் கூச்சலிட்டுக் கொண்டே வகுப்பை விட்டு ஓடிவிடுவார்கள். கூச்சல் வெகு சீக்கிரம் பள்ளிக்கூடம் முழுவதும் பரவிவிடும். ஐந்து நிமிஷத்துக்குள்ளாம் பள்ளிக் கூடத்தில் ஒரு பிள்ளையாவது தங்கியிருக்க மாட்டான். உபாத்தியாயர்களோடு பெஞ்சு, மேஜை, நாற்காலிகள்தாம் இருக்கும்.

யார் இவர்களுக்கு விடுமுறை கொடுத்தது ? விடுமுறை கொண்டாட வேண்டுமென்ற அபிப்பிராயம் அவர்களுக்கு எப்படி உண்டாயிற்று ? பிள்ளைகள் எல்லோரும் முன்னரே ஒன்றுகூடித் தீர்மானிக்கவு மில்லையே. அப்படி யிருந்தும் ஒரே கூட்டமாக எல்லோரும் ஓடிவிட்டது வியப்பாகத் தோன்றும். ஆயினும் அப்படிப்பட்ட எண்ணம் தனித்தனியே எல்லாருக்குமே தோன்றியதனால் விடுமுறை அவசியம் வேண்டும் என்பதற்கு அதைவிட அத்தாக்ஷி வேறொன்றும் வேண்டியதில்லை.

இரண்டொரு வாரத்திற்கு ஒருநாள் இவ்வாறு நடப்பது வழக்கம். தற்சமயத்தில் உபாத்தியாயர்களுக்கு வருத்தமும் கோபமும் உண்டானாலும் அவர்கள் அதற்கு உடன்படுவதுமன்றி அதனால் நன்மையுண்டு என்று எண்ணுகிறார்கள். ஏனெனில், பிள்ளைகள் யதேச்சையாக வீட்டுக்குப் போவதுபோல் பள்ளிக் கூடத்துக்கு வரும்போதும் யதேச்சையாக வருவார்கள். ஆகையால், மாதத்தில் இரண்டு மூன்றுநாள் பாடங் கெட்டபோதிலும் மற்ற நாட்களில் பாடங்கள் செவ்வையாக நடை பெறுகின்றன. பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும், போய்ப் படிக்க வேண்டும் என்னும் எண்ணம் பிள்ளைகளுக்கே தோன்றுவதனால் அனேக நன்மைகள் உண்டு. தாமாக எண்ணும்பொழுது அதன்பொருட்டு சிரமம் தெரியாமல் வகுப்பில் அமைதியுடன் உட்கார்ந்து உபாத்தியாயர் போதனையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

மனம்போன வழியெல்லாம் பிள்ளைகளைப் போகவிடுவது தவறு என்னும் விஷயத்தை டால்ஸ்ட்டாய்ப் பிரபுதம் பள்ளிக்கூட விஷயத்தில் பாராட்டினதில்லை. பள்ளிகூடம் வருவதும் போவதும் ஒரு கடமையாக இராமல், சந்தோஷத்தைக் கொடுக்கத் தகுந்த உரிமையாகப் பிள்ளைகள் எண்ணும்படி செய்வதுதான் நலம் என்பது அவருடைய அபிப்பிராயம். தமக்கு இஷ்டமான போது வந்து விடலாம், உபாத்தியாயர் அதற்காகத் தம்மைக் கோபிக்க மாட்டார் என்ற எண்ணம் பிள்ளைகள் மனத்தில் தோன்றுவதனால், தாமாகவே திருப்தியுடன் வகுப்பில் தங்குகிறார்கள். நிர்ப்பந்தமே ஒரு வருத்தமாகையால் அந்த வருத்தமும் அவர்களுக்கு இல்லை. அன்றியும் உபாத்தியாயரது அதிகாரமும் பிள்ளைகளது பயமும் நீங்கி, பிள்ளைகளுக்கு உபாத்தியாயரிடத்தில் ஒருவித அபிமானமும் அன்பும் உண்டாகின்றன.

பள்ளிக்கூடத்துக்கு வெளியே டால்ஸ்ட்டாய் பிள்ளைகளிடம் அதிகமாக நெருங்கிப் பழகி வந்தார். சாதாரணமாகப் பள்ளிக் கூடம் இரவு 8½ மணிவரையில் நடைபெறும். வாசகம், பாட்டு, கதை, ரஸாயன சாஸ்திர நிதர்சனங்கள் முதலிய பாடங்களே கடைசிப் பாடங்களாக நடைபெறும். அந்த வேளையில் இந்தப்

பாடங்களே பிள்ளைகளுக்கு மிகவும் விருப்பமானவை. பள்ளிக்கூடம் விட்டதும் டால்ஸ்ட்டாய் அடிக்கடிப் பிள்ளைகளுடன் உலாவப்போவதுண்டு. சில நாட்களில் தொலைதூரத்தில் வன மிருகங்கள் வசிக்கும் காடு வரையில்கூடப் போயிருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர் பிள்ளைகளுக்கு இன்பகரமான கதைகளைச் சொல்லுவார். இடையிடையே அனேக நுட்பமான விஷயங்களைப் பற்றி அவர்களிடம் தற்கிப்பார். அவர்கள் அதிக ஆர்வத்துடன் அவர் சொல்லும் விஷயங்களை உணர்ந்து நல்ல கேள்விகள் கேட்பார்கள். அக் கேள்விகளைப் பார்த்தால் அவர்கள் சிறந்த கல்வி மான்கள் என்றே எண்ணும்படியிருக்கும்.

ஒருநாள் ஒரு சிறுபையன், 'சித்திரப் பாடத்தினால் என்னப் பிரயோஜனம்?' என்று கேட்டான். உடனே, 'சித்திரத்தினால்தான் என்ன உபயோகம்?' என்று கேட்டான். டால்ஸ்ட்டாய் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். அதற்குள் மற்றொரு சிறுவன்,

'தடியினால் என்ன உபயோகம்? அது உண்டாகும் மரத்தினால் என்ன உபயோகம்?' என்று கேட்டான். இக் கேள்விபால் முதல் கேள்விக்கு விடை தந்தான். பக்கத்திலிருந்த ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டி, 'இதோ மரம் ஒன்று இருக்கிறது. அதை நாம் வெட்டுவதற்குமுன் அதனால் என்ன உபயோகம்? நிழல் தருவதற்கும் அறவே லாயகாக இல்லையே. அழகாகமட்டும் இருக்கிறது, ஆயினும் அதை நாம் வெட்டிக் கழிகள் எடுத்து உபயோகப் படுத்தலாமே' என்றான்.

இவ்வாறு பேசிக்கொண்டே அழகுக்கும் உபயோகத்துக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராயத் தொடங்கிவிட்டார்கள். முடிவாக சில வஸ்துக்கள் அழகு தருவதற்கே ஏற்பட்டுள்ளன வென்றும் சில வேறு வகை உபயோகத்துக்காக ஏற்பட்டுள்ளன வென்றும் முதற் கூறியவைகளில் அடங்கியது அம்மரம் என்றும் தீர்மானித்தார்கள். ஒரு பிள்ளை, 'ஐயோ, எவ்வளவு அழகான இப்படிப்பட்ட மரங்களை வெட்டி விடுகிறார்கள். அவைகளுக்கும் உயிர் உண்டல்லவா. அவைகளை வெட்டும்போது அவற்றினின்றும் வெளிப்படும் பால் உதிரம்போல்தானே வடிகிறது' என்று மிகவும் பரிதபித்தான்.

இவ்வாறு பேசிக்கொண்டே வெகு தூரம் வரையில் நடந்து செல்வார்கள். யாராவது ஒரு பிள்ளை டால்ஸ்ட்டாயின் கையைப் பிடித்துக்கொண்டே போவான்.

இந்த ஏழைப் பிள்ளைகள் தம் அந்தஸ்துக்கு மேலான விஷயங்களைப் பற்றிப் பேசவும் ஆராயவும் பழக்குவது தகுதியன்றென்று சிலர் எண்ணுவதுண்டு. டால்ஸ்ட்டாய் அந்த அபிப்பிராயம் கொள்கிறவர்கள்மீது கோபம் கொள்வார். 'எல்லோரும் பல்லக்கு ஏறினால் தூக்குவது யார்?' என்று கேட்பது உலகத்தில் உண்டல்லவா. ஆயினும் அவர் தனவானுக்கும் தரித்திரனுக்கும் புத்தியில் யாதொரு பேதமும் இல்லை. கடவுள் எல்லோருக்கும் ஒரேவிதமான புத்தியைத்தான் கொடுத்திருக்கிறார். உலகத்தை எல்லோருக்கும் பொதுவாகத்தான் படைத்திருக்கிறார். விஷய ஆராய்ச்சி செய்யும் இயற்கை அமைப்பிலும் கடவுளின் உண்மைகள் அறிந்து அநுபவிப்பதிலும் எளியோனுக்கும் தனவானுக்கும் ஒரேவிதமான உரிமை யுண்டு என்பதை வற்புறுத்தினார்.

பத்திராதிபர்.

MORAL TRAINING

சன்மார்க்கம்

I. சன்மார்க்கம் என்பது பொய், களவு, கள், காமம் முதலிய தர்வழக்கங்களை நீக்கி, மெய்ம்மை, இன்சொல் கூறல், பொறுமை, சாந்தம் முதலிய நற்குணங்களை அனுசரித்தலாம்.

ஸ்த்ரீ புருஷர் இரு வகுப்பினருள்ளும் அழகு, புத்தி கூர்மை இவைகளைக் காட்டிலும் நற்குண மூடையோரையே யாவரும் விரும்பி அவர்களிடம் அன்பு பாராட்டுகிறார்கள். நற்குணத்தோடு மூற்கூறியவைகளும் சேர்ந்தமைந்தால் பொன்மலர் நறுமணத்தையும் அடைந்தது போலாகும் என்பதில் ஐயமில்லை.

II. 'இன்சொல் வினை நிலனு நதலே வித்தாக வன்சொற்களை [illegible]கட்டே வாய்மை வெரு [illegible]வடி அன்பு ரீர் பாய்ச்சி யறக்கதிரின

வோர் 'பைங்கூழ் சிறுகாலை செய்' என்று மூனைப்பாடியார் கூறியிருக்கின்றார்.

(1) பிடிக்கை, (2) போட்டி, (3) பயிர்.

"ஒதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

என்னும் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவநாயனரின் வாக்கியத்தின் கருத்தை யாராய்ந்து நற்குண ஆபரணங்களை, நல்லாசிரியனைக் காதலிக்கும் உபாத்தியாயராகிய நாமெல்லோரும் முதலில் அணிந்துகொண்டு, நம்மை யடைந்த மாணவர்க்கும் அணிவிப்பது நமது முக்கியமான கடமையாகும். இதனை அசட்டை செய்து இதர பாடங்களைமட்டும் செவ்வனே கடத்த முயலுவது நன்றன்று.

சிறுவரிடம் அப்போதைக்கப்போது எழும் தீய ஒழுக்கங்களாகிய முளைகளை, இளம்பருவத்திலேயே கிள்ளி எறியாவிட்டால் பிற்காலத்தில் அவை வேரூன்றி, அநேகங் கிளைகளுடன் ஒரு பெரிய மரமாக வளர்ந்து, கோடாலிகொண்டு வெட்டி வீழ்த்தவும் அரிதாகும்.

III. நற்குணங்களைச் சிறுவர்களுக்குப் புகட்டும் விதம்.

1. கதை சொல்லல் என்னும் பாடத்தில், நற்குணங்களாகிய கற்பனையையுடைய கதைகளை உபாத்தியாயர் தேர்ந்தெடுத்து அவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருக்கும்படி செய்து, பிறகு அவர்கள் அக்கதைகளைத் திரும்பச் சொல்லவும் நாடகமாய் நடத்தவுங் கற்பித்தல்.

2. நமது பத்திராதிபர் மகா-ரா-ரா-ஸ்ரீ நமச்சிவாய முதலியாரவர்களால் இயற்றப்பட்ட வாசக புத்தகங்களில் நல்லொழுக்கங்களை விருத்தி செய்யத்தக்க பல இனிய சம்பாஷணைப் பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும், அவசியமானால் இன்னும் சில சம்பாஷணைகளை உபாத்தியாய்ரே தயார்செய்தும் பிள்ளைகளை மனப்பாடம் செய்யச் சொல்லி, வாரத்திற்கொருமுறையேனும் இரண்டு முறையேனும் காலையில் கடவுள் வணக்கப்பாடல் சொல்லுவதற்காகக் கூடும் பொதுக்கூட்டத்தில், பிள்ளைகளைச் சம்பாஷிக்கச் செய்து, முடிந்தவுடன் சந்தோஷத்தை வெளியிட்டு, பிள்ளைகளனைவரும் கைகொட்டி நிறுத்தும்படி செய்தல்.

முற்கூறிய இரண்டு வழிகளைக் கிரமமாக நடத்திவந்தால் அந்தந்த ஊர்களில் ராஜாங்க விஷயமாய் ஏற்படும் பொதுக் கூட்டங்களில் பிள்ளைகள் மூலமாய், சம்பாஷணைகளையும், கதா நாடகங்களையும் வெளிக்காட்டினால், ஜனங்களுக்கும் பள்ளிக்கூடத்தில் அபிமானம் உண்டாகி அதன் அபிவிருத்திக்கு ஒரு காரணமாகும்.

3. துஷ்டதனஞ் செய்த பிள்ளைகளைப் பொதுக் கூட்டத்தில் இதரப் பிள்ளைகளுக்கு மத்தியில் நிறுத்தி, யாவரும் அறியும்படி விசாரித்து, குற்றமுடையவர்களை அவமானப் படுத்தித் தண்டிக்கவும் வேண்டும். அதே விதமாக நற்குணமுடையவர்களை சிலாகித்துப் பேசிப் புகழவும் வேண்டும்.

அந்தந்த ஊர்களில் பொது ஜனங்களுக்குள்ளே நடக்குங் குற்றங்களையும், நன்மையான விஷயங்களையும் கவனித்துப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் அவர்களிடம் முதல் 5, 6 நிமிஷம் இனிமையாகப் பேசி அவ் விஷயங்களை சன்மார்க்கத்துக்கு உதாரணங்களாக எடுத்துக் காட்டல் வேண்டும்.

உபாத்தியாயர் கற்பிக்கும் நிறமை வாய்ந்திருப்பதோடு, விசாரணைக் கர்த்தராகவும், நியாயாதிபதியாகவும் இருக்கவேண்டும்.

4. கடவுளை வணங்கு, இன்சொல் கூறு, பொறுமையாயிரு, இவைபோன்ற சன்மார்க்க வாக்கியங்களை பெரிய எழுத்துக்களாக அட்டைக் காகிதங்களில் எழுதிப் பள்ளிக்கூடத்துச் சுவர்களில் மாட்டி வைக்கவேண்டும். அவ் வாக்கியங்கள் பிள்ளைகளுக்கு அர்த்தமாகக்கூடிய இலேசான வார்த்தைகளாக இருக்க வேண்டும். மேற்படி வாக்கியங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு விளக்கிக் காட்டி வரவேண்டும்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் பொது ஜனங்களும் மேற்படி வாக்கியங்களில் தங்கள் கண்களைச் செலுத்தும்போதெல்லாம் அவை சலிக்காமல் நற்புத்தி கூறும் ஓர் ஆசிரியன்போல் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இக் கருத்தைக்கொண்டே வித்தியாதிகாரிகளும் சில மாதங்களுக்குமுன் பல சன்மார்க்க மொழிகளை அச்சிட்டு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பி யிருந்தார்கள்.

IV. சன்மார்க்க மொழிகளை எழுதும் விதம்.

1. அழுக்கமான கடிதாசிகளில் தூரிகையால் அச்சுப்போன்ற பெரிய எழுத்துக்களாக எழுதல்.

2. அட்டைக் காகிதங்களில் நமக்கு வேண்டிய எழுத்துக்களைப் பெரிதாக எழுதிக் கத்தரித்து எடுத்துக்கொண்டு, அவ்வெழுத்துக்களை மற்றொரு அழுத்தமான கடிதத்தில் ஒழுங்காகப் பாப்பி, கறுப்பு மையில் தூரிகையை தோய்த்துப் பிழிந்துவிட்டு மேற்படி காகிதத்தின் மேல் மைத்துளிகள் தெரிவிழும்படி விரல்களினால் நெருடினால் கொஞ்ச நேரத்தில் கடிதம் முழுமையும் கரும்பலகைபோலாகும். பிறகு நாம் பரப்பிய எழுத்துக்களை எடுத்துவிட்டால் அவை இருந்த இடத்தில் மை படாதாகையால், வெண்மையான எழுத்துக்கள் காணப்படும். இந்த மாதிரி அற்ப சிரமத்தை மேற்கொண்டு செய்தோமானால் பார்ப்போர் மனத்தைக் கவரும்படியான அழகிய எழுத்துக்களாலாகிய வாக்கியங்கள் பிரகாசிக்கும்.

ஒரு காகிதத்தில் ஒரு வாக்கியமேனும், இரண்டு மூன்று வாக்கியங்களேனும் சேர்த்து எழுதலாம்.

ஒரு தடவை உபயோகித்த அட்டை எழுத்துக்களைப் பல முறையும் உபயோகிக்கலாமாதலால், அதிக எழுத்துக்கள் தயாரிக்கவேண்டிய சிரமமும் ஏற்படாது.

பயன்

V. உடம்பின் மேற்புறத்தை நீரினால் சுத்தம் செய்து கொள்ளுவதுபோல நம் மனத்தில் எழும் தீக்குணங்களை ஒட்டி நற்குணங்களை அனுசரித்தால் மனம் பரிசுத்தமாகும்.

S. KRISHNAN,
Board Elementary School,
Karungalakudi.

JAMABANDI

ஜமாபந்தி

பிள்ளைகளே, ஜமாபந்தி என்பது உங்களுக்கு இன்னதென்று தெரியுமா? ஒவ்வொரு கிராமத்திலும் இன்று ஜமாபந்தி நடக்கிறது என்று சிலசமயங்களில் சொல்லிக்கொள்வார்கள். அப்படிச் சொன்னாலும் ஜமாபந்தி இன்னதுதான் என்றும், அது கூடுமிடத்தில் இன்னதுதான் செய்கிறார்களென்றும் அநேகருக்குத் தெரியாது. அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஜமாபந்தி என்பது வருஷத்திற்கொருமுறை கலெக்ட்டர் அல்லது டெபுடி கலெக்ட்டர் கிராமத்துக் கணக்குகளைச் சரி பார்த்து முடிவு கட்டும் நடவடிக்கையாம்.

நமது துரைத்தனத்திற்குக் கிராமமே அடிப்படை. கட்டடத்திற்கு அஸ்திவாரம் அழுத்தமாக இருக்கவேண்டியதைப் போலவே துரைத்தனத்திற்கும் கிராம விவகாரங்கள் திருத்தமாக இருக்கவேண்டும். இதை ஒழுங்காக வைத்திருக்கவே தாசில்தார், டெபுடி கலெக்ட்டர், கலெக்ட்டர் ஆகிய மேலுத்தியோகஸ்தர்கள் அடிக்கடி கணக்குகளைத் தணிக்கைசெய்து வருகிறார்கள்.

கிராமத்தில் கணக்கு வேலைகளெல்லாம் கர்ணம் என்னும் கிராம உத்தியோகஸ்தர் பார்த்து வருகிறார். இவர் வேலைகளை அடிக்கடி ரெவினியு இன்ஸ்பெக்ட்டர் என்னும் ஒரு உத்தியோகஸ்தர் சரிபார்த்து கணக்குப் பதிவுப் புத்தகத்தில் கையொப்பஞ் செய்து வருவார். கர்ணம் இக் கணக்குகளை மாதத்துக்கொருமுறையோ, மூன்றுமாசத்திற் கொருமுறையோ, ஆறுமாசத்திற் கொருமுறையோ தாலுக் காபீசுக்குப் பதிவுக்காகவும் பார்வைக்காகவும் அனுப்புவார். ரெவினியு இன்ஸ்பெக்ட்டர் மூப்பது நாற்பது கிராமத்திற்கு ஒருவராக நியமிக்கப்படுவார். இவர்கள் ஏழெட்டோ கிராமங்களில் சுற்றித்திரிந்து கிராம சம்பந்தமான காரியங்களை விசாரித்தும், மனுக்களை ஏற்று விசாரித்தும், தாமா முடிவிடவேண்டியவைகளை முடிவிட்டும், மேலதிகாரிகளுக்கு அனுப்பவேண்டியவைகளை அனுப்பியும் வருவார். இவரும் இன்னின்ன காரியங்கள் இன்னின்ன மாசத்தில் செய்யப்பட்டனவென்று பதிந்து தாலுக்காபீசுக்கு விவரம் அனுப்பி வருவார்.

ஜமாபந்தி இன்ன தினத்தில் இன்ன கிராமத்திற்காக இன்ன விடத்தில் இன்ன உத்தியோகஸ்தரால் நடத்தப்படுமென்று இரண்டொரு மாசத்திற்கு முன்னமே ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ் செய்வது வழக்கம். கலெக்ட்டர், சப் கலெக்ட்டர், எட் அசிஸ்டன்ட் கலெக்ட்டர், டிபுடி கலெக்ட்டர்கள் ஜமாபந்தி நடத்தும் உத்தியோகஸ்தர்கள் ஆவார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் இரண்டு தாலுக்காவுக்குக் குறையாமலும் மூன்று தாலுக்காவுக்கு அதிகப்படாமலும் ஜமாபந்தி நடத்துவார். டிபுடி கலெக்ட்டர்கள் தங்கள் பார்வையின் கீழிருக்கும் இரண்டு தாலுக்காவுக்குத் தான் ஜமாபந்தி நடத்துவர். சில வருஷங்களில் கலெக்ட்டரே நேரில் நடத்துவர்.

ஜமாபந்தியில் முடிவு கட்டவேண்டிய கணக்குகள் எல்லாம் கிராம கர்னம் பல நாட்களுக்கு முன்னரே எடுத்துக்கொண்டு தாலுக்காபீசுக்கு வந்து சேர்ந்துவிடுவான். அங்கே தாலுக் குமஸ்தாக்கள் ஒவ்வொரு கிராமத்திற்காகவும் பதிந்திருக்கும் சகல விவரங்களுக்கும், கர்னமும் தன் கிராமம் சம்பந்தப்பட்டமட்டில் தானும் தன் கணக்கில் பதிந்திருப்பதை எடுத்துக் காட்டி ஒத்திட்டுச் சரிகட்டிக்கொள்ளவேண்டும். இம்மாதிரியே, கிராமத்திற்காக ஏற்பட்ட சகல கணக்கையும், அந்தந்த குமஸ்தாக்களிடம் ஒத்திட்டு நடுவில் நிகழும் சகல பேதங்களையும் திருத்தி தாலுக்சிரஸ்தாவின் தணிக்கைக்குக் கொண்டுபோவார். இவர் கஜானா கணக்கோடு வரவு செலவுக்கும் சரி பார்த்துத் தமது கையொப்பம் வைத்துக்கொடுப்பார். இதோடு தாலுக் உத்தியோகஸ்தர் தணிக்கை முடிந்தது. கிராம கர்னத்துக்கும் அரைப்பாக கஷ்டம் நிவர்த்தியாயிற்று.

இதற்குமேல் ஹுஜூர் உத்தியோகஸ்தர் தணிக்கை நிகழும். இதில் முக்கியமாய் கிராமத்தில் வசூலாகவேண்டிய பணங்களெல்லாம் ஒழுங்காய் வசூலாயிற்று வென்றும், ஒன்றும் விடுபடவில்லையாவென்றும், அதிக தீர்வை விதிக்கவேண்டிய பாகங்கள் கவனிக்கப்பட்டனவா வென்றும், தர்க்காஸ்து மனுக்கள் சரிவரப் பைசல் செய்யப்பட்படனவா வென்றும் ஜலாதாரங்கள் சரியாய்க் கவனிக்கப்பட்டனவா வென்றும், மற்றும் பொருள் சம்பந்தமான விஷயங்களெல்லாம் கவனிக்கப்படும். இவற்றிற்கெல்லாம் ரெவினியு இன்ஸ்பெக்ட்டர் கர்னத்துக்குச் சகாயமாக

உடனிருந்து கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லி வருவார். இங்கே பதிவிடும் கணக்கு ஜாபிதாவே முடிவானது. இந்த ஜாபிதா பல பத்திகளைக்கொண்டது. இவ்வொரு ஜாபிதாவினால் கிராமத்தின் பலவகை விவகாரங்களையும் முற்றும் அறிந்துகொள்ளலாம். கிராமத்தில் சாகுபடிக்கு வாய்க்கால் அயன்பட்டாவிலிருக்கும் நன்செய், புன்செய், மேய்கால், புறம்போக்கு, தரிசுநிலம், ஏரி, குளம், குட்டை, ஜலாசன நிலை, மாசூல்வாரி சாகுபடி குறிப்பு, தரிசு குறிப்பு, மழையளவு, ஜனனமரணக் குறிப்பு, அக்கிரமப் பிரவேசம் (என்குரோச்மென்ட்), சர்க்கார் ஜலாசயத்திலிருந்து ஜலமெடுக்கக் கூடாத காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொண்ட தர்வினியோகக் குறிப்பு, தண்டத் தீர்வைக் குறிப்பு, ஜப்தி, ஏலம், தகாரார் வகையரா குறிப்பு, இன்னும் இவைபோன்ற அநேக குறிப்புகள் அந்த ஜாபிதாவில் கண்டிருக்கும். இவைகளெல்லாம் வருஷத்திற் கொருமுறையாகிலும் சுவனிக்கப்பட்டு வருவதால் கிராம கணக்கு எந்தக் காலத்தில் திருத்தமாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட ஜாபிதாவை ஹுஜூர் உத்தியோகஸ்தர் தயார்செய்து சிரஸ்த்தா கையொப்பஞ் செய்து ஜமாபந்தி உத்தியோகஸ்தர் பார்வைக்கும் விசாரணைக்கும் கொண்டுபோவார்.

ஜில்லா கெஜட்டில் ஜமாபந்தி காலத்தில் கிராமக் குடிகளில் இஷ்டமானவர்கள் வந்திருந்து தங்களுக்கு ஆகவேண்டியவைகளை நேரிலும் மனுக்கள் மூலமாயும் தெரிவித்துக்கொள்ளலாமென்றும் பிரசுரஞ் செய்வதுண்டு. இந்தப் பிரசுரம் ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பப்படும். அதனைக் கிராம முனிசீபு கிராமத்திலுள்ள முக்கியக் குடிகளுக்குக் காட்டி கையெழுத்து வாங்கித் தாலுக்காவுக்கு அனுப்புவார். இதனால் கிராமத்திலிருப்பவர்களுக்கு ஜமாபந்திதினம் நன்றாய்த் தெரியும். அந்தத் தினத்தில் விவகாரமுள்ளவர்கள் யாவரும் ஆஜராயிருப்பர். ஜமாபந்தி உத்தியோகஸ்தர் காலையிலோ, மாலையிலோ ஒவ்வொரு கிராமமாய் அழைப்பார். அவர் பக்கத்தில் தாசில்தார் இருப்பார். சிரஸ்த்தா ஜாபிதாவிற் கண்ட விஷயங்களைப்பற்றிச் சொல்லி வருவார். ரெவினியு இன்ஸ்பெக்ட்டர் ஒரு புறமிருப்பார். கிராம கர்னமும் முனிசீபு மணியக்காரரும் அவசியம் எதிரில் பணிவாய் நின்றிருப்பர். கிராமப் பெயரைச்சொல்லி அழைத்து மனுதாரர்களிருந்தால்

வரலாம் என்று சேவகன் உரத்துக் கூவி யழைப்பான். அப்போது கிராமக் குடிகளுட் சிலர் தங்கள் குறைகளை முறையிட முன் வருவார்கள். சிலர் மனு எழுதிக்கொண்டு போவார்கள். மனுக்களை யெல்லாம் ஜமாபந்தி ஆபீசர் பெற்றுக்கொண்டு பார்வையிட்டு, தக்க சமாதானஞ் சொல்லுவர். மனுக்களின் தன்மைக் கேற்ப அவைகளைப் பைசல் செய்ய உத்தரவு செய்வார். சுகாதாரம், போலீஸ், ஜலாதாரம் முதலியவைகளைக் கவனிக்க அந்தந்த இலாகாதாரர்களுக்கு உத்தரவு செய்வார். நேரில் சொல்லிக்கொள்ளும் குறைகளுக்கு ஏற்ற சமாதானஞ் சொல்லுவார். ஊரிலுள்ள சில்லரைக் கலகங்களை முடிவு கட்டுவார். கிராம உத்தியோகஸ்தர்களில் அக்கிரமச் செய்கைகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டால் உடனே விசாரணை செய்வார். அக் காலத்தில் செய்வது இன்னதுதான் என்று முற்றுஞ் சொல்ல முடியாது. குடிகளுக்கு உண்டான குறை முழுதும் தெரிவித்துக்கொள்ளலாம். அவற்றிற்குச் சமாதானம் அப்போதேயாகிலும் சொல்லிவிடுவார்; அல்லது பின்னுலாகிலும் சொல்லுவார்.

இவையே யல்லாமல் கிராமத்திலுள்ள முக்கிய குடிகளோடு நெருங்கிப் பேசி கிராமவிஷயம் முற்றும் தெரிந்து கொள்வதற்கு முயல்வார். தாசில்தார் முக்கியமான குடிகளை அறிமுகம் செய்து வைப்பார். அவர்கள் யோக க்ஷேமங்களை விசாரித்து வருவார். இதனல் குடிகளுக்கும் பெரிய உத்தியோகஸ்தருக்கும் சிநேகம் உண்டாகிறது. சுற்றங் குறைகளை நேரில் சொல்லி நிவர்த்தித்துக்கொள்ள இட முண்டாகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் குடிகள் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வழி செய்கிறது. முடிவாய் கிராம அமைதிக்கு ஜமாபந்தியே முதற் காரணமாக இருக்கிறது.

பு. வே. சபாபதி முதலியார்.

MEN AND MANNERS

நான்கு ஜனங்களின் நடவடிக்கை

(9-ஆம் சம்புடம், 272-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

(1) நம்பியச்சன், (2) புஷ்பகன், (3) பூப்பள்ளி, (4) பிராம்மணி:— இந்த நான்கு ஜாதிகளும் அம்பலவாசி என்னும் இனத்தின் ஓர் உட்பிரிவாகும். இந்த உட்பிரிவு சாதாரணமாக உன்னி என்று சொல்லப்படும்; பொதுவாகச் சொல்லுமிடத்து, இது 'புஷ்பக உட்பிரிவு' என்றும் விலகரிக்கப்படும். இந்தப் பெயர் இந்த வகுப்பினர்க்குப் பரம்பரையாக ஏற்பட்டுள்ள தொழில்களை யனுசரித்து வந்ததாகும். கோவில்களுக்குப் பூமாலைகள் (புஷ்பம்) தொடுப்பது அவர்களுடைய தொழில்.

புஷ்பக ஜாதியின் உற்பத்தியைப்பற்றி மூன்று விதமாகச் சொல்லுகிறார்கள். அவைகளுள், இரண்டுவிதங்கள் அந்தக் குலத்திற்கு ஆதியாக இருந்த ஸ்திரீயின் தேக தத்துவ நிலைமையைக் குறிக்கின்றன; மூன்றுவது அவர்களுடைய தொழிலைக் குறிக்கின்றது.

ஆதி ஜனனியின் தேக தத்துவ நிலைமையைக் குறிக்கும் வரலாறுகளாவன:— 1. புஷ்பக ஜாதியார் ஒரு பிராம்மண ஸ்திரீயின் சந்ததியார்கள்; அந்த ஸ்திரீயின் தாய் மாதவிடாய்க் காலத்தில் அவளைக் கருத்தரித்தனள் என்பதாம்.

2. புஷ்பக ஜாதியார் ஒரு பிராம்மண ஸ்திரீயின் வம்சத்தவர்கள். அவள் அக்காலத்தில் நிர்ப்பந்தமாக இருந்த பால்ய விவாகச் சட்டத்திற்கு விரோதமாக, ருதுவான பிறகு கலியாணஞ் செய்துகொண்டவள் என்பதாம்.

இந்த இரண்டு வரலாறுகளுள், இரண்டாவதாகச் சொல்லியதே சரியான வரலாரென்று புஷ்பகர்கள் கொள்கிறார்கள். இதுவே உண்மையாயின், முற்காலத்து மலையாளப் பிராம்மணர்களின் ஒழுக்கத்தைக் கொண்டு தீர்மானிக்குமிடத்துப் புஷ்பகர்களும் நல்ல நம்பூதிரிகளே என்று சொல்லவேண்டும்.

ஆனல், எந்தக் காலத்திலாவது நம்பூதிரிகள் மாத்திரம் தங்கள் பெண்களை, ருதுவாவதற்கு முன், கலியாணஞ் செய்து

கொடுத்திருக்கிறார்களா வென்பது சந்தேகமா யிருக்கின்றது. ஒரு வேளை நம்பூதிரிகளுக்குள் பால்ய விவாகம் ஒருகாலத்தில் வழங்கி வந்ததெனக் கொள்வோ மெனினும், மற்றச் சாதியார்கள் யௌவன விவாகம் செய்வதை விட்டுப் பால்யவிவாகம் செய்ய மேற் கொண்டிருப்பது வழக்கமாக இருக்க, நம்பூதிரிகள் பழைய ஆரியர்களின் வழக்கத்தைக் கைப்பற்றிப் பின்னுக்குப் போவார்க ளென்று நினைப்பதற்கு இடமில்லை.

அவர்கள் செய்யும் தொழிலை அநுசரித்து அவர்களுக்குப் பெயரும் பாங்கும் அமைந்தன என்பது ஆக்ஷேபமில்லாத வார்த்தையாகத் தோன்றுகின்றது. இவர்களும், வாரியர்கள், பிஷாரடிகள் எனப்படுபவர்களும் மாத்திரமே இப்பொழுது கோவில்களுக்கு மாலைகள் தொடுத்துக் கொடுக்கும் உரிமைவாய்ந் திருக்கிறார்கள். பூப்பண்டாரம், குருக்கள் என்னும் இரண்டு சாதியார்களுக்கும் அந்த உரிமை உளதென்று கூறினும், அவர்கள் தமிழ் நாட்டினின்று மலையாளத்திற்குப் போய்க் குடியேறினவர்கள் ஆவார்கள்.

கார்த்திகைப் பள்ளித் தாலூக்காவில் ஏவூருக்குத் (Evur) தெற்கே இருக்கிற புஷ்பகர்களை பூப்பள்ளிகள் என்கிறார்கள். இந்தப் பெயரும் அவர்களுக்குப் பரம்பரையாக வுள்ள தொழிலையே குறிக்கின்றது. புஷ்பகனுடைய வீடு பூமடம் (மலர்வீடு) எனப்படும்.

நம்பியச்சன்களை நம்பியார்கள் எனவும் நம்பிகள் எனவும் சொல்லுவார்கள். இவர்களுக்கு இந்நாளில் எவ்விதமான கோவில் ஊழியமும் இல்லை. இவர்கள் மற்களரிகள் (மல்லகசாலைகள்) வைத்துக்கொண்டு, இந்திய முறைப்படிப் போர்த்தொழில் பயிற்று விக்கிறார்கள். போர்செய்யும் நாயர்களுக்கு இவர்கள் ஆசான்களாக இருந்தார்கள். ஆயினும், ஒருகாலத்தில் இவர்கள் கோவில்களில் பூமாலை தொடுக்குந் தொழில் மேற்கொண் டிருந்ததாகவும் தெரிகின்றது. கொச்சியிலும், அங்கில ஆட்சியில் இருக்கும் மலையாளத்திலும் நம்பியச்சர்கள் அநேகர் பூமாலை தொடுக்குந் தொழிலை இன்றைக்கும் மேற்கொண் டிருக்கிறார்கள். நாயர்களின் விவாகங்களிற் பாட்டுப் பாடுவதும், சில புரோகித காரியங்கள் செய்வதும் பிராம்மணிகளின் தொழிலாகும்.

இந்த இனத்தைச் சேர்ந்த நான்கு ஜாதியார்களும் பிராம்மணர்களுக்குரிய சடங்குகளையே பெரும்பாலும் ஆசரிக்கிறார்கள். இவர்களுடைய வைதிக லௌகிக ஆசாரங்களெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

எட்டு வயதுமுதல் பதினாறு வயதுக்குள்ளாக உபநயன ஸம்ஸ்காரம் செய்துகொள்கிறார்கள். காலை, கடும்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் இவர்கள் காயத்ரி மந்திரத்தைப் பத்து முறை ஜபிக்க வேண்டும். நம்பூதிரிகளைப் போல, இவர்களில் ஜ்யேஷ்ட குமாரனுக்கு மாத்திரமே விவாகம் உண்டு. புஷ்பகர்க ளெல்லாரும் ஒரே கோத்திரக்காரர்களே யானபோதிலும், தங்களுக்குள் தாராளமாக விவாகங்கள் செய்து கொள்கிறார்கள்.

விவாக விலக்கு இவர்களுக்குச் சாஸ்திரீயமே. அதாவது, கலியாணஞ் செய்துகொண்ட மனைவியைத் தகுந்த காரணத்தினால் நீக்கிவிடலாம். அப்படி நீக்கப் பெற்றவள் நம்பூதிரிப் பிராமணனை கலியாணஞ் செய்து கொள்ளலாம். இப்படி நேர்வது அபூர்வம். இரண்டாங் கணவனுக்குக் குழந்தைகள் பிறந்தால், முதற் கணவனுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு அவனுடைய ஆஸ்தியில் என்ன உரிமைகள் உண்டோ அதே உரிமைகள் இரண்டாங் கணவனுக்குப் பிறந்தவர்களுக்கும் உண்டு. புஷ்பகர்களின் கலியாணங்களில் விசேஷமாக நடக்கும் வேடிக்கைகள் அம்மானை யாட்டமும் கைகொட்டிக்களியும் ஆகும். அம்மானையாட்டம் என்பது நன்றாக மெருகிடப் பெற்ற லோஹப் பந்துகளை மேலே விட்டெறிந்து பிடிப்பதாகும்; கை கொட்டிக் களி என்பது கைகளைக் கொட்டிக் கொண்டு நர்த்தனம் செய்வதாகும்; இதை கொம்மி யடிப்பது என்னலாம்.

இவர்களுடைய குலாசார விவகாரங்களை தீர்ப்பவர்கள் நம்பூதிரி வைதிகர்கள். அந்த வைதிகர்களே இந்த ஜாதிக்குத் தலைவர்கள் ஆவார்கள். சாதாரணமான சடங்குகளை யெல்லாம் இவர்கள் தங்களுடைய ஜாதியார்களையே புரோகிதர்களாக வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். ஆயினும், பிராம்மணிகள் மாத்திரம் இளையதுகளையும் புரோகிதர்களாகக் கொள்கிறார்கள், மறுமக்கட்டாய முறையைப் பின்பற்றுகிறார்கள். சாவுக்குத் தீட்டுக் காப்பது இளையதுகளையும் மூத்ததுகளையும் போல 10 நாள் ஆகும்.

(இன்னும் வரும்)

தி. அ. சாமிநாத ஐயர்.
ரிடையர்ட் எடிட்டர் ஆவ் 'ஆர்யா'.

CHOLERA

வாந்திபேதி

What is it? How it spreads? How could it be stopped?

அது என்ன? அது எப்படிப் பரவுகிறது? அ[illegible] தடுப்பதெப்படி?

[Translated for the 'Trained Te[illegible] Shunmuga Mudaliar, Sessional Sch[illegible]er' by Mr. C. V. Chingleput District.] [illegible] Master of the

வாந்திபேதி என்றால் பயப்படாதலா[illegible] பயங்கரமான வியாதி ஊரில் அல்லது சுற்[illegible]களில்லை. இந்தப் டும்போது தமக்கு நேரிடாதபடி ஒவ்வெ[illegible]ப்பக்கங்களில் நடமா கள். ஆகையால், அதைக் குறித்து ஆணு[illegible]ருவரும் கோருவார்- வரும் நன்றாய் அறிந்திருப்பது அவசியம். [illegible]ம் பெண்ணும் அனை

வாந்திபேதி இப்போது எங்கும் பரவியி[illegible] லுள்ள ஜனங்களும் இதைப்பற்றி அறிந்திரு[illegible]ருக்கிறது. கிராமத்தி மங்கள்தோறும் கல்விக்குப் பிரதிநிதியாய் [illegible]பது நல்லது. கிரா- உபாத்தியாயர்கள் பலரும் இதை யறிந்திருக்[illegible]ளங்காநிற்கும் கிராம வாசிக்கும் உபாத்தியாயர்கள் பலருடைய உ[illegible]வேண்டும். இதை பரோபகாரிகளாக விளங்குவார்கள்.

I. வாந்திபேதி — இது என்ன?

வாந்திபேதி சிலர் எண்ணுவதுபோல் தேவதையின் கோபத்- தால் நேரிடக்கூடிய சிக்ஷையன்று. இது ஒருவகை வியாதியே யாகும். இது வியாதியடைந்தவனிடத்திருந்து மற்றவருக்கு வெகு சீக்கிரத்தில் கண்ணுக்குத் தெரியாச் சிறு பூச்சிகளினால் பரவு- கிறது. இவ்வியாதியின் முக்கிய அடையாளங்களாவன —

கஞ்சியைப்போல் காணப்படுகிற அமிதமான பேதியாதல். வாந்தியாதல். கைகால் இழுத்துக்கொள்ளல். மூத்திரம்வராமல் தடைப்படுதல். உடம்பு சில்லிட்டுப்போதல், கண்டவர்களில் அநேகர் சாதல் — இவை இவ்வியாதியின் முக்கிய லட்சணங்க ளாகும்.

கலராவுக்குக் காரணமான சிறு பூச்சிகள் முக்கியமாய்த் தண்ணீரில் உற்பத்தியாகின்றன. அவை வெறுங்கண்ணுக்குத்

தோற்றா. இந்தப் பூச்சிகள் வெகு சீக்கிரமாக விருத்தியாகும். ஒரு மணிநேரத்தில் ஒரு கோடியே அறுபதுலட்சமாக அதிகரிக்கு மென்று பரீட்சித்து அறியப்பட்டிருக்கிறது.

II. வாந்திபேதி — எப்படிப் பரவுகிறது?

முக்கியமாய் வாந்திபேதி தண்ணீரால் பரவுகிறது. ஜலத்தின் சுத்தாசுத்தமே கலராவின் விருத்திக்ஷயங்களுக்குக் காரணமாகும். குடிக்கிற தண்ணீரால் முக்கியமாய் கலரா பரவுகிறது சுத்தஜலத்- தில் அப்பூச்சிகளுக்குத் தேவையான ஆகாரம் கிடைக்காது. ஆகையால் அவை அங்கு விருத்தியாகாமல் நசிக்கும். கிராமாந்த- ரங்களிலுள்ள அழுக்குக் குட்டைகளில் அப்பூச்சிகளுக்கு வேண்டிய உணவு குவியல் குவியலாகக் கிடைக்கிறது. அவ்வுணவை அவை பண்டிகை நாட்களில் நாம் உண்டுகளிப்பதுபோல் உட்கொண்டு வெகுசீக்கிரத்தில் வளர்ந்து நிமிஷத்திற்கு நிமிஷம் ஆயிரக்கணக்- கான பூச்சிகளாக விருத்தியாகின்றன.

கலராப்பூச்சிகள் தண்ணீரால் மாத்திரமல்ல ஈக்கள் கொசுக்க- ளாலும் அவற்றைப் பற்றிக்கொண்டு எங்கும் பரவுகின்றன. கலரா கண்டவர்களின் மலத்தில் மொய்த்த ஈக்களின்மேல் அம் மலத்தில் குப்பல் குப்பலாய் கிடக்கிற பூச்சிகள் ஒட்டிக்கொண்டு, ஈக்கள், பறந்து சென்று உட்காரும் பல பண்டங்களின்மீதும் பரவுகின்- றன. அசுத்தவாயு கலராவுக்குக் காரணமென்று இதுவரையில் நினைத்திருந்தது சரியல்ல வென்று இப்போது நிச்சயிக்கப்பட்டு இருக்கின்றது.

கலரா உண்டாவதற்குப் பயமும் சிறிது காரணமாக விருக்கும்; என்றாலும் ஒருவன் எவ்வளவு பயங்காளியாயிருப்பினும் பூச்சிகள் அவன் வயிற்றிற் பிரவேசித்திராத பட்சத்தில் அவனுக்குக் கலரா ஒருபோதும் உண்டாக மாட்டாதென்பது நிச்சயம். ஆகையால் கலரா கண்ட இடத்தில் ஒருவன் சென்ற அளவிலேயே அவ் வியாதி பற்றிக்கொள்ளு மென்கிற அச்சம் அவன் அடையவேண்- வே காரணமில்லை.

III. வாந்திபேதி — எப்படித் தடுப்பது?

ஜல[illegible] குடி நீர் மிகப் பரிசுத்தமாக இருக்கவேண்டும். தண்ணீரைப் [illegible]ங்கக் காய்ச்சி வடிகட்டி மூடிவைத்துக் குடிக்கவேண்டும். மறு[illegible]-டிக்ரீ வெப்பம் உண்டாகும்படி தண்ணீரைக் காய்ச்சின மாத்-

திரத்திலேயே காலரா பூச்சிகள் நசித்துப்போம். நாம் சாதாரண மாய்க் குடிக்கும் வெந்நீர் 100-டிக்ரீ உஷ்ணமுள்ளதாக இருக்கும். கலரா கண்டபோது அடியிற்குறித்த எண் வகையான உபாயங்களைக் கையாளவேண்டும்.

1. பேதியைக் கட்டுதல். 2. வாந்தியைத் தடுத்தல். 3. உடலில் உஷ்ணம் இருக்கும்படி காத்தல். 4. இரத்த ஓட்டம் தடைபடா திருக்கச் செய்தல் (பேதியால் உடலிலுள்ள நீரெல்லாம் செலவழிந்து போகும். அப்போது உடலில் இரத்த ஓட்டம் தடைப்படும். இரத்தம் கட்டிப் போகாதபடிக்கும், அது அதிகமாய் சரீரத்தில் உண்டாகும்படிக்கும் செய்தல்) 5. நாடி விழுந்து போகாதபடி அதற்குப் பலத்தைக் கொடுத்தல். 6 கைகால் கொருக்கு வலியால் இழுத்துக் கொள்ளாதபடி பார்த்தல். 7. மூத்திரம் தாராளமாய் வரும்படி செய்தல். 8. பத்தியமாய் இருக்கப் பார்த்தல்.

கலரா கண்டபோதே அதற்கேற்ற மருந்தை உட்கொள்ள வேண்டும். அது ஊரில் உண்டானவுடனே மருந்து கையிருப்பில் இருக்கவேண்டும். அக் காலங்களில் சுகபேதிக்கென்று மருந்தை உட்கொள்வதும் சரியன்று. கொண்டால் பேதியதிகம் ஆகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாந்தியை நிறுத்த ஐஸ் மிகவும் உபயோகமானது. ஐஸை உட்கொள்வது மன்றி வாயில் ஒரு துண்டைப் போட்டுச் சப்பிக் கொண்டிருப்பதும் நன்றாகும். சீரகக் கஷாயம் கொடுக்கலாம். முழு ஏலக்காய் கஷாயமும் உதவும். எலுமிச்சம் பழச் சாற்றை வெள்ளைச் சர்க்கரைப் பானகத்தில் கலந்து ஒரு மிடறு கொடுக்கலாம். அரிசிநொய்யைக் கருக்கிக் கஷாயம் இறக்கியும் கொடுக்கலாம்.

உடலில் உஷ்ணம் உண்டாயிருப்பதற்குக் கற்பூரத் தைலத்தையாவது உடிகலோன் என்னும் திராவகத்தையாவது உள்ளங்கால் முழுவதும் பூசலாம். உடலைக் கம்பளத்தால் மூடி வெந்நீர் பாட்டிலில் ஊற்றி ஒற்றடம் கொடுக்கலாம். தவிட்டை அல்லது பாஷாணத்தை வறுத்து அடிவயிற்றிலும் பக்கங்களிலும் ஒற்றலாம்.

கலரா கண்டபோது வயிற்றில் ஆகாரத்தைத் தங்குவெ[illegible]டாது. தங்கினாலும் அது ஜீரணமாகாது. ஆகையால் வி[illegible]

யின் உக்கிரம் தணிகிறவரையில் ஆற்றின வெந்நீர், சோடா, புனல் பாகக் கொதிசாதத் தண்ணீர் முதலானவைகளை மிதமாகக் கொடுக்கலாம். வியாதி கொஞ்சம் தணியுமாயின் அரிசிநொய், கோதுமை நொய், சப்பரிசி நொய் இவைகளைச் சிலுக்கக் காய்ச்சிக் கஞ்சியாக்கி கொஞ்சம் பாலோடாயினும் இரசத்தோடாயினும் கொடுக்கலாம். மெல்லின்ஸ் ஆகாரத்தை வெந்நீரில் கலந்து கொடுக்கலாம்.

கலராவின் கழிவு வீட்டில் பரவாதபடி இதனடியிற் குறித்த விஷயங்களைக் கவனிக்கவேண்டும் —

1. அனுவசியமான சாமான்கள் அப்புறப்படுத்தின தனி வீட்டில் வியாதியஸ்தனை வைத்து சிகிச்சை செய்யவேண்டும்.

2. கார்பாலிக்கு மருந்தில் நனைத்த ஒரு துப்பட்டியை வாசற்படிக்குக் குறுக்கே கட்டிவைக்கவேண்டும். (இதனால் அந்த அறையின் கழிவு வெளியேறி மற்ற இடங்களுக்குப் பரவாதிருக்கும்.)

3. வீட்டின் கதவுகள் ஜன்னல்கள் திறந்து வைக்கவேண்டும். தாராளமாய் சுத்தமான காற்று உள்ளே புகவேண்டும்.

4. வியாதியஸ்தனை உபசரிப்பவர்கள் மற்றவர்களோடு கலந்துகொள்ளாமல் தனியே இருக்கவேண்டும். அவர்கள் கட்டிக் கொண்ட துணிகள் துவைத்துக்கொள்ளத் தக்கவையாயிருக்க வேண்டும். அவர்கள் சாப்பிடச் செல்லுமுன் 5-நிமிஷம் வரையில் கார்பாலிக்கு மருந்தில் கைகளைக் கழுவவேண்டும்.

5. நோயாளியைப் பார்க்க உள்ளே ஒருவரையும் விடலாகாது. அவசியமானால் திரைக்கு அப்புறத்திலிருந்து பேசவேண்டும். வீட்டுப்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாகாது.

6. ரோகியின் கழிவு பதார்த்தங்களை (மலம், ஜலம், வாந்தி) கார்பாலிக்கு மருந்து ஜலத்தில் கலந்து குழியில் புதைக்க வேண்டும்.

7. நோயாளி கட்டியிருக்கும் துணிகளை கார்பாலிக்கு மருந்து ஜலத்தில் ஊறவைத்துத் துவைக்க வேண்டும்.

8. உடம்பு சொஸ்தமானால் வியாதியஸ்தனை கார்பாலிக்கு மருந்து ஜலத்தில் ஸ்நானம் செய்விக்க வேண்டும்.

9. நோயாளி அறையை விட்டபிறகு அவ்வறையின் சுவர்களையும், தரையையும் மருந்து ஜலத்தால் கழுவி அறைக்குக் கந்தகப் புகையூட்டி, சுவருக்குச் சுண்ணும்பு அடிக்க வேண்டும்.

10. வியாதியஸ்தன் இறக்க நேரிடுமாயின் அவனது உடலை மருந்து ஜலத்தில் நனைத்த துணியில் சுருட்டிவைத்து உடனே தகனம் செய்யவேண்டும்.

11. சாதாரணமாய் கலரா கண்டவுடனே ஜனங்கள் பயப்பட்டு அந்தந்தத் தேவதைகளுக்குக் கப்பணங் கட்டுவதும், பிரார்த்தனை செய்வதுமாய் காலம் கழித்து நோயாளிக்குச் சிகிச்சைசெய்வதில் அசிரத்தையாய் இருப்பார்கள். அப்படியிராமல் காலரா கண்ட க்ஷணம் அச்சமின்றி தக்க வைத்தியரைக் கொண்டு சரியான மருந்தைக் கொடுப்பிப்பதால் கலரா கண்டவர்களில் அநேகர் சௌக்கியமடைகிறார்கள்.

சைதாபேட்டை
15—7—1914

சி. வே. சண்முக முதலியார்,
செகண்டல் ஸ்கூல் மாஸ்டர்,
செங்கற்பட்டு ஜில்லா.

NATURE STUDY, ITS AIM AND METHODS

இயற்கைப் படிப்பு அதன் நோக்கமும், முறைகளும்

1. இயற்கைப் படிப்பு என்பது — இயற்கையாக நம்மைச் சுற்றிலும் உள்ள பொருள்களையும், மாறுதல்களையும் பற்றிப் படித்தலேயாம். இயற்கையில் நடக்கும் மாறுதல்களை உற்று நோக்கி, அவைகளை யறிந்து அவ் விஷயங்களை கூர்மையாகப் பரிசீலனம் செய்வது இயற்கைப் படிப்பாகும். ஹாட்ஜ் (Hodge) என்பவர், நமது வாழ்நாளை சரியானபடி நடத்த இது ஒரு முக்கிய ஸாதனம் என்று இதைப்பற்றி யபிப்பிராயப்படுகிறார். கெட்டிஸ் (Geddes) என்பவரும், ஒருவன் தானே புத்தகங்களின் ஒத்தாசையின்றி யியற்கையிலுள்ள வஸ்துக்களையே ஆராய்ந்து யோசித்து அதை நாளும் விருத்தி செய்வதுதான் இயற்கைப் படிப்பு என்று சொல்லுகிறார்.

2. நோக்கம் — வஸ்துக்களைப் பார்த்து, அறிந்து, ஆனந்தித்து நாமே அவ்வரிய விஷயங்களை இயற்கையில் கண்டறிவது இதன் நோக்கம். விளையாட்டிலும் வேடிக்கை பார்ப்பதிலும் பிள்ளைகளுக்குப் பிரியம் அதிகம். அவைகளின் மூலமாகப் பிள்ளைகளுக்கு இயற்கைப் பொருள்களில் பிரியம் உண்டாகும்படி செய்ய வேண்டும். நமது வாழ்நாளைச் சரியானபடி கழிக்க அவசியமான விஷயங்கள் இயற்கையிலிருந்து தெரிந்து கொள்வது இயற்கைப் பாடத்தின் நோக்கங்களில் ஒன்று. அறிதல், உணர்தல், செய்தல் இந்த மூன்றையும் இயற்கைப் பாடத்தின் மூலமாக பிள்ளைகளிடத்தில் உண்டுபண்ண வேண்டும்.

3. ஸ்தான பேதம் — இயற்கைப் பாடம் நடத்த அனுசரிக்க வேண்டிய முறைகளில் முக்கியமானது ஸ்தான பேதம். இயற்கை யமைப்பு ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறபடியால் இயற்கைப் படிப்பும் அந்தந்த இடத்திற் கேற்ற வாறு அமைக்கப்படவேண்டும். கிராமத்திற்கும், பட்டணத்திற்கும் இந்த வித்தியாசம் நன்றாகக் காட்டப்பட வேண்டும். சகல சௌகர்யங்களும் கிடைக்காத பட்டண வாசங்களில், சில பிராணிகளையும், தொட்டிகளில் வைத்த சில செடிகளையும், சில மேகக் கூட்டங்களையும் பற்றிப் படிப்பது இலகுவாகும். கிராமாந்தரங்களில் தோட்டம் வைக்க வேண்டிய இடம் கிடைக்குமாகையால், செடிகள், புஷ்பங்கள், விதைகள், முதலியவைகளையும், கல், பாறை, மலை முதலியவைகளையும் பற்றிப் படிக்கலாம்.

இன்னின்ன ஊரில் இன்னின்ன விஷயங்கள்தாம் படிக்க வேண்டு மென்ற கட்டாயமான விதிகள் ஏற்படுத்த முடியாது. இயற்கை யென்ற விஷயத்தில் அடங்கிய பிராணி வர்க்கம் தாவரவர்க்கம், தாதுவர்க்கம், வானம், பூமி, சூரியன், சந்திரன், வான மாறுதல் முதலிய விஷயங்களிலிருந்து, அந்தந்த ஊருக்கு ஏற்ற விஷயங்களை உபாத்தியாயர் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. உபாத்தியாயர் — உபாத்தியாயருக்கு எந்த இயற்கைப் பொருளில் அதிக சந்தோஷமும் பிரியமும் இருக்கிறதோ, அந்த விஷயங்களை அவர் அதிகமாகக் கையாள வேண்டும். ஒருவருக்குப் பிராணிகளிடத்தில் அதிகப் பிரியம் இருக்கலாம். அவர் அதை விட்டுத் தாவரங்களை ஏன் கற்பிக்கத் தொடங்கவேண்டும்.

சிலருக்குப் பூக்களிடத்தும் செடிகளிடத்தும் அதிகப் பிரியம் இருக்கும். அவர்கள் அதைமட்டும் கவனித்தால் போதும்.

இயற்கைப் பாடம் போதிக்கும் உபாத்தியாயர் விஷயங்களை நன்றாகப் படித்து, சமாசாரங்களை ஒருங்கு சேர்த்து, பிள்ளைகளுக்கு உண்டாகும் சந்தேகங்களைத் தீர்க்க சக்தியுள்ளவராக இருக்க வேண்டும். பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற விடையளிக்க வேண்டும். ஏற்கனவே பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களையும் அவர்கள் கிரஹிக்கும் விஷயங்களையும் சேர்த்தால் அதிக சங்கதி தெரியவரும்.

5. பருவகாலங்கள் — இயற்கை யமைப்பு மாறுகிறதுபோல் காலமும் எப்போதும் மாறிக்கொண்டே யிருக்கிறது. அவ்வித மாறுபாடுகளை யநுசரித்து இயற்கைப் பாடங்கள் தயார் செய்ய வேண்டும். வெளிமாறுதல்கள் நம்மை அவைகளுக்கிணங்குமாறு மாறுபாடடையும்படி செய்கின்றன. அவைகளை கவனிக்க கவனிக்க, நமக்குச் சந்தோஷம் உண்டாகிறது. இயற்கைப் படிப்பில் பருவகாலங்களை யநுசரித்து அவைகளுக்கு ஏற்றபடி பாடம் நடத்துவது சௌகர்யமா யிருக்கிறது.

6. உபயோகங்கள் — பிரகிருதிக்கு (Nature) சம்பந்தமான பாடங்கள் சரியாகக் கற்பிக்கப்பட்டால் புலன்களின் கூர்மையும் நிதானமும் பிள்ளைகளிடத்தில் உண்டாகும். விஷயங்களைப் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டு மென்ற உற்சாகத்தையும் புத்தி நுட்பத்தையும் பிள்ளைகளிடத்தில் நாம் உண்டு பண்ணலாம்.

ஒவ்வொரு விஷயத்தையும் பிள்ளைகள் தாமே புதிதாகக் கண்டு பிடித்துக் கொள்வது நலம். இதில் அதிக காலம் வீணாகச் செலவழிந்துபோகிறது. ஆதலால் விஷயங்களின் சில பாகங்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிய பிறகு அவர்களை அவ் விஷயங்களின் உண்மையை சோதித்தறியும்படி செய்வது மிகவும் நலம். பிள்ளைகளின் மனோ சக்தியை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகையால் எந்த விஷயத்தையும் பிள்ளைகளை மெதுவாக கவனிக்கச் செய்ய வேண்டும்.

இயற்கைப் பாடம் தப்பிதமாக நடத்தினால் ஆயுள் முழுவதும் தப்பிதமான அபிப்பிராயங்கள் பிள்ளைகள் மனத்தில் நிற்கும்.

7. வழிகள் — இயற்கைப் பாடம் படிக்க அநுசரிக்கவேண்டிய வழிகள். எந்தப் பொருளையும் பிள்ளைகள் நேரிலேயே கையாள வேண்டும். பிள்ளைகள் தாமே புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களும் உயிருள்ளவைபோல் பாராட்டப்பட வேண்டும். கடினங்களும் உயிருள்ளவைபோல் பாராட்டப்பட வேண்டும். கடின பதங்களை அதிகமாக உபயோகப் படுத்தக்கூடாது. இந்தப் பாட விஷயங்களை மற்றப் பாடங்களோடு சம்பந்தப்படுத்தி நடத்த வேண்டும். அதாவது இயற்கைப் பாட விஷயங்களை, வாசக பாடம், சித்திரம், பூகோளம், கணிதம் முதலிய பாடங்களோடு சம்பந்தப் படுத்தி நடத்தலாம்.

8. படிக்க ஏற்படுத்த வேண்டிய நேரம் — ஒரு வாரத்தில் 25 நிமிஷங்களடங்கிய இரண்டு (பிரியட்) தடவை எடுத்துக் கொள்ள வேண்டும். இது காலையில் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்த வுடனாவது, பிள்ளைகள் சாயங்காலம் பாடசாலையை விட்டு வெளியே போகு முன்னாவது எடுத்துக் கொள்ள வேண்டும். மேல் வகுப்புகளில் 25 நிமிஷத்திற்கு மேல் முக்கால் மணிவரையில் ஒரு பாடம் நடத்தலாம்.

9. வேண்டிய உபகரணங்கள் — இயற்கைப்பாடம் போதிக்கப் பெரிய வேலை செய்யுமிடமும் (Laboratory), காட்சி சாலையும் (Museum or Workshop), அநேக உபகரணங்களும் வேண்டியதில்லை. இயற்கைப் பாடம் படிக்க, வானமும், பூமியும், வேண்டிய பொருள்களும் விஷயங்களும் கொடுக்கின்றன. பிள்ளைகளை நேரில் வெளியே யழைத்துக் கொண்டு போய் வஸ்துக்கள் சேகரம் செய்யலாம். பாடசாலையில் ஒரு தோட்டம் போட்டு அதிலிருந்து வேண்டிய பொருள்கள் எடுத்துக் கொள்ளலாம். பிராணிகளைத் தகுந்த கூடுகளில் வைத்து வளர்த்து அவைகளின் சுபாவங்களைக் கண்டறியலாம். தண்ணீரில் வசிக்கும் பிராணிகளை நீர்த்தொட்டிகளில் வளர்த்து அவைகளைப்பற்றியும் படிக்கலாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு வஸ்து சோதிப்பதற்கு கொடுக்கப்பட வேண்டும். வஸ்துக்கள் அதிகம் கிடைக்காத பட்சத்தில் வர்ணச் சித்திரங்கள் கொடுக்கலாம்.

P. C. KRISHNA AIYENGAR, B. A., L. T.
Head Master, Model School,
Attached to the Govt Training School,
Saidapet

A SONG — THE MONKEY & THE BIRD

குரங்குங், குருவியும்

வானர மொன்று வெளியினி லே
தானுங் கடுகி மழைதனி லே
நடுங்கல் கண்ட குருவியு மே
விடும்பென் றெண்ணு விளம்பிடு மே
ஐயா குரங்காரே கேளு ம்
பொய்யா வாழ்ந்தி ரிந்தாளு ம்
மனிதர்போல கை யிருந்து ம்
தனிவலி யான மெய்யிருந்து ம்
கூடொன் றமைக்கா விட்டீ ரே
சாடு மழையிற் பட்டீ ரே
நாங்கள் பிகவுஞ் சிறுஜங் து
ஏங்கி டாமலே யலைந் து
ஆனபிர யாசை யோ டே
தானே யமைத்தோ மிக்கூ டே
அணுப்போற் துளியும் ஒழுகா து
நனையா திருக்க வெகுதோ து
என்றே பகுதி தான்கூ று
நவ்று நீயோ மதிகூ று
கூண்டுஞ் செய்ய வறியேண் டா
தாண்டிப் பிய்த்து மெறிவேண் டா
எனவே சொல்லி மரமே றி
அனலாய்க் கோப மதுமீ றி
குருவிக் கூட்டை பியத்தெறி ய
கர்வ மடங்கா தேதிரிய க்
கண்ட தூக்க ணன்குரு வி
அண்டா தோடிற் றேவெரு வி
நல்ல துரைத்த தற்கா க
இல்ல மிழந்த தை மனம்நோ க
கோடார் ஐந்துக் கைந்துமுழ ம்
ஓடு பரிக்குப் பத்துமுழ ம்
நீடும் யானைக் காயிர ம்
மூடர் தமக்கு வெகுதூர ம்
நீங்கல் கலமென மூன்றேர்க ள்
ஓங்கும் நீதி சொன்னர்க ள்

N. NALLAKANNU PULAVAR,
Teacher, State School, Varpet
Pudukotah State.

வயது 10 | 1914வது ஆகஸ்ட்டுமீ | மாதம் 3

FORT ST. GEORGE — I

வெண்ட் ஜார்ஜ் கோட்டை — I

'தாதா! இங்கிலிஷ்காரர் முதலில் இங்கே வர்த்தகஸ்தானம் கட்டினர்கள் என்று சொன்னீர்களே, அது எங்கே இருக்கிறது? அது இப்போது எப்படி இருக்கிறது?' என்று கேட்டான் முத்து.

'முத்து! அந்த இடத்தை நேரில் பார்க்கவேண்டும். வீட்டில் இருந்துகொண்டு பேசினால் நன்றாய் விளங்காது. நீ என்னோடு வா; அங்கே அழைத்துக்கொண்டு போகிறேன். ஒவ்வொன்றையும் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்' என்று சொல்லி, முத்தைத் தம்மோடு அழைத்துக்கொண்டு கோட்டைக்குப் போனர் பாட்டனர்.



பழைய கோட்டை

'குழந்தாய்! இதுதான் ஆங்கிலேயர் இங்கே கட்டிய வர்த்தக ஸ்தானம். இதற்கு ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயர். ஆங்கிலேயர் இதைக் கட்ட நேர்ந்த காரணமும், இதற்கு இந்தப் பெயரிட்ட காரணமும் விளக்கமாகச் சொல்லுகிறேன் கேள்:

'காப்பட்டன் ஹிப்பன் என்பவர் முதல் முதல் 1611ஆம் ஆகஸ்ட்டுமீ 20உ கிருஷ்ணை ஜில்லாவில் நிஜாம் பட்டணத்தில் வந்து இறங்கினர். அப்போது அந்த நகருக்குப் பேட்டைப்பள்ளி என்று பெயர். ஹிப்பன் என்பவர் சிலரை நிஜாம் பட்டணத்தில் இறக்கிவிட்டு, வர்த்தகம் நடத்திக்கொண்டே மசூலிப் பட்டணம் போனர். அங்கே வர்த்தகம் நன்முக நடை பெற்றது. அதனால் அங்கே ஒரு வர்த்தக ஸ்தானம் ஏற்படுத்தினர். அதுவே இங்கிலிஷ்காரருக்குத் தென் இந்தியாவில் பலத்த வர்த்தகஸ்தானமாக ஏற்பட்டது. பிறகும் அங்கே நல்ல வர்த்தகம் நடைபெற்றது. அதனால் ஆங்கிலேயர் கீழ்க்கரை நாடுகளில் இன்னும் பல வர்த்தக ஸ்தானங்கள் கட்ட ஆரம்பித்தார்கள்.

'அப்போது டச்சுக்காரர் பழவேற்காட்டில் ஒருவர்த்தகசாலை கட்டி, வர்த்தகம் நடத்திவந்தார்கள். அதற்கு 40 மைல் தூரத்திலுள்ள ஆர்மகான் என்னுமிடத்தில் ஆங்கிலேயர் ஒரு வர்த்தக ஸ்தானம் ஏற்படுத்தினர்கள். ஆங்கிலேயருக்கு அங்கே வர்த்தகம் சரிவர நடைபெறவில்லை. அந்த வர்த்தக ஸ்தானத்திற்கு பிரான்ஸிஸ் டே என்பவர் தலைவராக இருந்தார். ஆர்மகானில் வர்த்தகம் சரியாக நடைபெறுமையால் டே என்பவர், பழவேற்காட்டுக்குத் தெற்கில் ஒரு வர்த்தக ஸ்தானம் கட்டவேண்டும் என்று முயற்சி செய்தார். அதற்கு ஏற்ற இடம் ஏதாவது இருக்கிறதா என்று கடற்கரை ஓரமாகப் பார்த்து வந்தார். அப்போது மயிலாப்பூருக்குக் கிழக்கில் ஸாந்தோம் என்னுமிடத்தில் போர்த்துக்கேசியர் நிலத்து வர்த்தகம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அதற்குக் கொஞ்சம் வடக்கில் ஒரு வெளியிருந்தது. அதையடுத்து கரையார் பாளையம் என்னும் ஒரு சிறு கிராமமும் இருந்தது. அந்த இடத்தில் வர்த்தகசாலை கட்ட டே என்பவர் நிச்சயித்தார். போர்த்துக்கேசியர் டச்சுக்காரரோடு விரோதப்பட்டிருந்தபடியால் அவர்கள் இங்கிலிஷ்காரருக்கு அனுகூலமாக இருந்தார்கள்.

ஆங்கிலேயருக்குச் சென்னையில் வேண்டிய இடம் அப்போது செங்கற்பட்டில் ஆண்டுகொண்டிருந்த தர்மால வேங்கடாத்திரிநாயுடு என்பவருக்குச் சொந்தமானதாக இருந்தது. அதனால் 1639ஆம் வருஷம் ஆங்கிலேயர் செங்கற்பட்டு அரசரிடம் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆனாலும் செங்கற்பட்டு அரசர் சந்திரகிரி அரசருக்கு அடங்கினவராக இருந்தமையால், ஆங்கிலேயர் சந்திரகிரி அரசனைய ஸ்ரீரங்கராயலு என்பவரிடமும் அனுமதி பெறவேண்டியதாக ஏற்பட்டது. ஸ்ரீரங்கராயலு ஆங்கிலேயர் விண்ணப்பத்திற்கு இணங்கி, வர்த்தகசாலை கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்து, அங்கு ஏற்படும் பட்டணத்திற்கு ஸ்ரீரங்கராய பட்டணம் என்று பெயரிடவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இதற்குள் மசம்மதியர்கள் சந்திரகிரியின்மேல் படையெடுத்து வந்தார்கள். ஸ்ரீரங்கராயலு சண்டையில் தப்பினால் போதும் என்று ஓடி, மைசூர் ராஜ்யத்தில் மறைந்துகொண்டார். பிறகு, ஆங்கிலேயர் சென்னையில் ஒரு சிறு கோட்டை கட்டிக்கொண்டு வர்த்தகம் நடத்தினர்கள். அப்போது இங்கே சுற்றிலும் ஜனங்கள் வந்து குடியேறினதனால் ஒரு பட்டணம் ஏற்பட்டது. அதற்கு செங்கற்பட்டு அரசர் விரும்பியபடியே அவர் தகப்பனர் பெயரால் சென்னபட்டணம் என்று ஆங்கிலேயர் பெயரிட்டார்கள்.

ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை — II

'தாதா! அங்கிலேயர் முதலில் இங்கே கோட்டை கட்டிக்கொண்ட விதம் சொன்னீர்கள். அதுமுதல் அந்தக் கோட்டை அப்போது இருப்பது போலவே இருக்கிறதோ?' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! காலமும் இடமும் மாறிக்கொண்டே இருக்கும். நம்முடைய காலத்தில் எவ்வளவு மாறுதல்கள் உண்டாகின்றன? உனக்குத் தெரியாதா? ஆங்கிலேயர் செங்கற்பட்டு அரசனிடம் பெற்ற பூமி கொஞ்சந்தான். அவர்கள் வர்த்தக ஸ்தானத்திற்கு வேண்டிய அளவு பெற்றுக் கொண்டார்கள். மயிலாப்பூருக்கு வடக்கில் கடற்கரை யோரமாக நான்கு மைல் நீளமும், கிழக்கு மேற்கில் ஒரு மைல் அகலமும் உள்ள பூமியைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு, இப்போது கோட்டையுள்ள இடத்தில் ஒரு சிறு கோட்டை கட்டினார்கள். அப்போது இந்தப் பாகம் ஒரு தீவு போல் இருந்தது. கோட்டைக்குத் தெற்குப் புறத்தில் கூவம் ஆறும், வடக்கில் வடவாறும் சூழ்ந்திருந்தன. இதற்கு மத்தியில் கடற்கரையை அடுத்து, வடக்குத் தெற்கில் 400 அடி நீளமும், கிழக்கு மேற்கில் 200 அடி அகலமும் கொண்ட கோட்டை கட்டினார்கள். அதற்குள் வெள்ளைக்காரர் மாத்திரம் வசித்திருந்தார்கள். அதனால் அதற்கு வொயிட் டவுன் (வெள்ளைக்காரர் பட்டணம்) என்று பெயரிட்டனர். கோட்டைக்கு வடக்கில் ஏற்பட்ட பட்டணத்தில் சுதேசிகள் வசித்திருந்தார்கள். அதை வெள்ளைக்காரர் பிளாக்ட் டவுன் (கறுப்பு மனிதர் வசிக்கும் பட்டணம்) என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

'வர்த்தகம் செய்ய வந்த ஆங்கிலேயர் நாளடைவில் சில ராஜ்யங்களையும் அடைந்தார்கள். அதற்காகத் தங்கள் கோட்டைக்குள் ராணுவங்கள் சேர்க்க ஆரம்பித்தார்கள். அதனால் இந்தக் கோட்டை வரவர பெரிதாயிற்று. இப்போது இந்தக் கோட்டையைச் சுற்றிப்பார். வெளியில் இருந்து பார்த்தால் கோட்டை யிருப்பதே தெரியாது. முதலில் மண்மேடு மூடிக்கொண்டு இருந்கிறது. அதைச் சுற்றிலும் இருக்கும் வெளிகளுக்கு கோட்டை மைதானம் என்று பெயர். கோட்டைக்குள் நுழைந்தால் மங்கலச்

சுற்றித் தண்ணீர் சூழ்ந்திருக்கிறது. இதற்கு அகழி என்று பெயர். பகைவர் யாராவது வந்தால் மதிலின்மேல் ஏறி வாராதபடி இந்த அகழியை ஏற்படுத்துவது வழக்கம். இந்த அகழியில் முதலை முதலிய ஜந்துக்களையும் விட்டு வளர்ப்பது உண்டு. கோட்டைக் கதவைப் பார். அது பகலில் அகழியைக் கடக்கக் கட்டிய ஒரு சிறு பாலத்தைப் போல் இருக்கிறது. இரவில் அதைத் தூக்கி கட்டி, கோட்டை வாயிலை அடைத்து விடுவார்கள். அப்போது கோட்டை வாயிலண்டையும் அகழி தோன்றும்.

'இனி, கோட்டைக்கு உள்ளே சென்று பார்ப்போம். இதற்குள் அநேக வீதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீதிக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. இந்த வீதிகளில் கிளைவ் வீதி என்பதை நாம் அவசியமாகக் கவனிக்க வேண்டும். இது கோட்டை என்று குறிப்பதற்கு முக்கியமான அடையாளம் ஒன்று இருக்கிறது. அதென்ன தெரியுமா? இதோ பார், எவ்வளவு உயரமாகக் காண்கிறது கோட்டைக் கொடி. இதன்மேல் கொடிச் சீலை பறக்கிறது. கொடி மரத்திற்கு ஆதாரமாகவும், கொடிச் சீலையை உயர ஏற்றுவதற்கு அனுகூலமாகவும் பல கம்பிகளும் கயிறுகளும்கட்டி, பூமியில் வலிவாய் நாட்டியிருக்கிறார்கள். கொடி மரத்திற்குச் சமீபத்தில் ஒரு கோயில் இருக்கிறது. இதற்கு மேரி ஆலயம் என்று பெயர். இதற்கு அருகில் அநேக ஆபீஸுகள் இருக்கின்றன. நமது ராஜதானியின் காரியங்களைச் சரிவர நடத்தும் ஸெக்ரிடேரியேட் ஆபீஸுகளும், அக்கவுண்டென்ட் ஆபீஸும், ராணுவ சம்பந்தமான ஆபீஸுகளும் இருக்கின்றன. இவைகளேயன்றி, மற்றொரு முக்கியமான இடம் இதோ இருக்கிறது. இதற்குச் சட்ட நிர்மாண சபை ஆபீஸ் என்று பெயர். இங்கே நமது சென்னைக் கவர்னரும் சட்ட நிர்மாண சபையைச் சார்ந்த மெம்பர்களும் கூடி நாட்டுக்கு நன்மையான விஷயங்களை ஆலோசித்து, அவ்வப்போது சட்டங்களை ஏற்படுத்துவார்கள்.

'கோட்டையின் மற்றப் பாகங்களில் ராணுவவீரரும், ராணுவ உத்தியோகஸ்தர்களும் வசிக்கிறார்கள். இந்தக் கோட்டைக்கு ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயர் என்பதை முன்பே சொல்லி இருக்கிறேன் அல்லவா? இந்தக் கோட்டைக்கு நான்கு வழிகள் உண்டு. ஒன்று மேற்குப் புறமாக இருக்கிறது; அதற்கு ஸெண்ட் ஜார்ஜ் கேட் என்று பெயர். ஒன்று வடக்குப் புறமாக

இருக்கிறது; அதற்கு நார்த் கேட் என்று பெயர். ஒன்று தெற்குப் புறமாக இருக்கிறது; அதற்கு வாலாஜா கேட் என்று பெயர். ஒன்று தென்கிழக்குப் புறமாக இருக்கிறது; அதற்கு ஸவுத் ஸீ கேட் என்று பெயர்' என்று சொன்னர் பாட்டனர். 'தாதா! நான் இதற்குள் வந்ததே இல்லை. இது இவ்வளவு பெரிய பட்டணம் என்றும் எனக்குத் தெரியாது. நல்லகாலம் இன்று உங்களோடு வந்தேன்; எல்லாம் நன்றாய்த் தெரிந்து கொண்டேன்' என்றான் முத்து.

பத்திராதிபர்.

SHAVING

கௌரம்

1. 'க்ஷௌரம் என்பது கத்தி; க்ஷௌரத்தினால் செய்யப்படும் காரியம் 'கௌரம்.' 'சூடா' என்பது 'நெற்றி மயிர்' அல்லது 'உச்சி மயிர்' என்று அர்த்தம்; சூடாவின் சம்பந்தமான கர்மம் சௌடம். சௌடம் என்னுஞ் சொல் 'சௌளம்' எனத் திரிந்து, 'மயிர்வினை' எனப் பொருள் படுகின்றது.

2. 'கௌரம்' என்பதும் 'சௌளம்' என்பதும் ஒரே காரியத்தைக் குறிக்கும் சொற்கள். கௌரம் என்பது குடுமி, மீசை, நகம் முதலியவைகளைத் திருத்தி ஒழுங்குபடுத்தும் காரியமாம். இயற்கையில் ஒழுங்கில்லாமல் வளர்ந்திருக்கும் கேசம், நகம் முதலியவைகளை ஒழுங்குபடுத்திக்கொள்வதே கௌர கர்மம்.

3. முதல் முதலில் இப்படி ஒழுங்குபடுத்திக்கொள்ள எண்ணங்கொண்டது அழகு செய்துகொள்ளும் பொருட்டாகவே இருக்கவேண்டும். அழகு செய்துகொள்வதன் கருத்து மற்றவர்கள், முக்கியமாகப் பெண்பாலர், தன்னைப் பார்த்து அருவருக்காமல் இருக்கவேண்டும் என்பதேயாகும்.

4. கௌரத்தினால் அழகு செய்துகொள்வது ஒருவாறு இருக்க, அதன் பயன்களைச் சற்று விசாரிப்போம். கௌரம் செய்யுங் கத்தி இரும்பினால் செய்யப்பட்டது. இரும்போ நல்ல பிரவேசிகங்களுள் (good conductors) ஒன்று. பிரவேசிகம் என்பது

ஜீவ உஷ்ணத்தையும், மின்சார சக்தியையும் தன் ஊடே எளிதில் பிரவேசிக்கச் செய்யும் வஸ்து (conductor of heat and electricity).

5. நீப்படிப்பட்ட சக்தியுள்ள இரும்பு தேகத்திற் படுவதனால், அது நமது தேகத்திலுள்ள ஜீவ உஷ்ணத்தையும் மின்சார சக்தியையும், காந்த சக்தியையும் இழுத்துக் கொள்ளுகின்றது.

6. அந்தச் சக்திகள் நமது தேகத்தில் குறைவுபடுகின்றன. இந்த உண்மையை உணர்ந்தே, இரும்பு மோதிரங்களை அணியக் கூடாதென்றும், இருப்புக் கோல்களை ஊன்றுகோல்களாகக் கொள்ளக் கூடாதென்றும், இருப்பு வளையங்கள் முதலியன போட்டுக் கொள்ளக் கூடாதென்றும் ஆரியர்கள் விதித்திருக்கின்றார்கள்.

7. அப்படித் தேகத்தினின்று குறைவுபடும் மின்சார சக்திக்கு ஈடு செய்யும் பொருட்டே, சூரிய கிரணங்கள் நன்றாகப் படிக்கும் மின்சார சக்தி நிரம்பி யிருக்கும் வண்டல் மண்ணைத் தேய்த்து முழுக வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

8. கௌரம் செய்து கொள்ளுவதனால் தோலின் மீதுள்ள செதில்கள் (Epidermal scales) வழித்து எறியப்படுகின்றன; அதனால் தோல் மழமழப்பாகவும், பிரகாசமாகவும், அப்போதைக்கு அழகாகவும் காணப்படுகின்றது. ஒரு செடியின் கிளைகளைக் கத்தரித்தால், அதன் தண்டு உரத்துக் கனமாகிச் செழித்துத் தழைத்து வளர்வதுபோல, கௌரம் செய்யச் செய்ய மயிர் கட்டையாகிச் செறிந்து வளர்கின்றது. மயிர் செறிந்து வளர்வதற்குத் தேகத்திலுள்ள இரத்தம் அந்தக் காரியத்திற்காக அதிகமாகச் செலவிடவேண்டும்.

9. இதனால் ஏற்பட்டது என்னவெனில், அடிக்கடி கௌரம் செய்துகொள்ளுகிறவர்கள் உணவு முதலியவைகளினால் தேகத்தில் உற்பத்தி செய்துகொள்ளும் இரத்தத்தைத் தேகத்திற்கும் மூளைக்கும் உரிய பற்பல உபயோகமான காரியங்களுக்குச் செலவிடாமல், பெரும்பாலும் மயிரை வளர்ப்பதிலேயே செலவிடுகிறவர்களாவார்கள்.

10. கௌரம் செய்து கொள்வதனால் இளைப்பும் களைப்பும் உண்டாகின்றன. தேகமெங்கும் சமமாக ஓடிக்கொண்டிருக்க

வேண்டிய இரத்தம் க்ஷௌரம் செய்துகொண்ட பாகங்களுக்கு அதிகமாகச் செல்வதனால், மூளையில் இரத்த ஓட்டம் குறைகின்றது. அதனால், க்ஷௌரம் செய்துகொண்ட தினத்தில் அசதியும் உறக்கமும் ஏறிடுகின்றன.

11. க்ஷௌரம் செய்துகொள்ளுவதனால் ரோமங்கள் அதிர்கின்றன. மனவெழுச்சி உண்டாகின்றது, சோகமோகங்கள் அதிகரிக்கின்றன. இந்த வேகத்தைத் தணிக்கும்பொருட்டே, ஒரு முறை க்ஷௌரஞ்செய்வது போதாதென்றெண்ணி இரண்டுமுறை முழுகவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள்.

12. பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடம் இருக்கும் தினங்களில் க்ஷௌரம் செய்துகொள்ளக் கூடாதென்றும், அப்படிச் செய்துகொள்ளும்படி நேர்ந்தால் அந்தத் தினத்தில் பிள்ளைகளிடத்து மிக ஜாக்கிரதையாக விவகரிக்க வேண்டுமென்றும், பிரம்பை உபயோகிக்கக் கூடாதென்றும் உபாத்தியாயர்களுடைய ஒழுக்கமுறைகளை விவரிக்கும் புத்தகங்கள் கூறுகின்றன. அன்றையதினம் மனவெழுச்சி அதிகமாக இருக்குமென்று உணர்ந்தே இக்காலத்தவர்கள் அந்த விதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

13. மனவெழுச்சி என்பது பொதுவானது. அது நன்மைக்குமாகும், தீமைக்குமாகும்; சோகத்திற்கும் ஆகும், மோகத்திற்கும் ஆகும். ஆதலினாலே, கலியாணகாலத்தில் அழுகு செய்யும் பொருட்டும், காமத்தை எழுப்பும் பொருட்டும் க்ஷௌரம் விதிக்கப்பட்டிருக்கின்றது; சவச்சடங்கு செய்யுமுன் சோகத்தை (துக்கத்தை) அதிகரிக்கும் பொருட்டு க்ஷௌரம் விதிக்கப்பட்டு இருக்கின்றது.

14. க்ஷௌரம் செய்துகொள்ளுவதனால் காமவெழுச்சி அதிகப்படுகிற தென்பது சாஸ்திரங்களினாலும் அநுபவத்தினாலும் ஏற்படும் விஷயம். அந்த எழுச்சியைத் தணித்து, ரோமங்களைத் தளர்விக்கும் பொருட்டே க்ஷௌரம் செய்துகொண்ட மறுநாள் எண்ணெய் தேய்த்து முழுகவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

15. மனைவி கர்ப்பந்தரித்து நான்கு ஐந்து மாதங்கள் ஆனது முதல் அவள் பிரசவிக்கும்வரையில் கணவன் க்ஷௌரம் செய்துகொள்ளக் கூடாதென்று விதித்திருப்பது அவனுக்குக் காம

வெழுச்சியுண்டாகாதிருக்கும் பொருட்டே. முடிவளர்க்கும் தீக்ஷை மேற்கொள்வதன் கருத்தும் இதுவேயாகும்.

16. அழகைக் கருதி அடிக்கடி க்ஷௌரம் செய்துகொள்வதனால், மயிர்க்கால் கனமாகின்றதென்று முன்னமே சொன்னோம். அதுவன்றி, அடிக்கடி சுரண்டப் பெறுவதனால், தோலுக்கு இயற்கையிலுள்ள மென்மை ஒழிந்து அது உரத்துச் சரசரப்புற்று விகாரம் எய்துகின்றது. இது பிள்ளையார் பிடிக்கப்போகக் குரங்காக முடிந்ததுபோலாகும்.

17. தேசத்தில் இயற்கையாக வளரும் மயிரை எந்த விதத்திற் கழிப்பதானாலும், அது இயற்கைக்கு விரோதமான காரியமே. ஏனெனில், உடம்பைக் குளிர் வெப்பம் முதலியவைகளினின்று காப்பதற்கும், உடலுக்குள்ளிருந்து வெளிப்படுத்த வேண்டிய நீர்களை வெளிப்படுத்துவதற்கும் சாதனமாக மயிர், அங்கத்திற்குத் தக்கபடி, குறைவாகவும் நிறைவாகவும், மெல்லியதாகவும் கனத்ததாகவும் இயற்கையில் அமைகின்றது. அதை எவ்விதத்திலேனும் கழிப்பதனால், இயற்கையின் உத்தேசம் நிறைவேறாமல் போகும்

18. ஆனால், அநாகூலத்தின் பொருட்டும், நாகரிக நடையின் பொருட்டும், ஆசாரத்தின் பொருட்டும், வழக்கத்தின் பொருட்டும் சௌளம் அவசியமான காரியமாக வழங்குகின்றது; அன்றியும், க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆரிய தர்ம சாஸ்திரமும் விதிக்கின்றது.

19. மயிர்கழிக்கும் விதமானது வைதிக விதியையும் லௌகிக விதியையும் அநுசரித்து இருக்கவேண்டும். எக்தெந்தப் பாகங்களிலுள்ள மயிரைக் கழிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தந்தப் பாகங்களிலுள்ள மயிரைமாத்திரமே கழிக்கவேண்டும்.

20. பிறநாட்டாருடைய ஆசாரங்களைக் கைக்கொள்வதில் மிகுந்த உற்சாகங் கொண்டாவது, தனக்கு அநாகூலம் என்று தவறாகக் கொண்டிருக்கும் எண்ணத்தினாலாவது, மரியாதையென்றும் ஒழுங்கென்றும் கொள்ளும் போலி நியாயங்களினாலாவது மேற் சொல்லிய சாஸ்திரவிதிக்கு மாறுபாடாக மயிர்கழிக்கும் முறைகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

21. விதிக்கு விரோதமாக மாறுபாடுகள் அமைத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அவனுடைய சுற்றத்தாருக்கும் சிலமுடை

நண்பர்களுக்கும் மதிப்புக் குறையும்; யோக்கியர்களாயுள்ள பிற நாட்டாரும் அவனை நன்கு மதியார்கள். பிறநாட்டாருடைய நடையுடை பாவனைகளையும் ஆசாரங்களையும் அநுசரிப்பவன் மானத்தையும் (self - respect), ஜாதிய கற்பனையையும் (national sentiments) கைவிட்டவனுவான்; நேருங் கூறுமாக நினைப்பவர்களெல்லாரும் அவனைக் கேலிக் கூத்துக்காரனென வெறுப்பார்கள்.

22. க்ஷௌரம் செய்துகொள்வதில், அலுவலியமாகத் தோலைச் சுரண்டக் கூடாது. தோலின்மீது உள்ள செதில்கள், க்ஷௌரம் செய்துகொள்கையில் வழிக்கப்பெற்று அழுக்கைப்போலத் திரண்டு உதிர்ந்து போகின்றன. ஆனதனுலே, புதிதாக க்ஷௌரம் செய்துகொண்ட இடம் சுத்தமாகவும் அழகாகவும் காணப்படுகிறது. அடிக்கடி க்ஷௌரம் செய்துகொள்வதனல் மயிர் முளையாமல் தலை மொட்டையாகும்.

23. சாதாரணமாக 15 நாளைக்கு ஒரு தடவை க்ஷௌரம் செய்து கொள்ளலாம்; தாமதித்துச் செய்துகொள்வதானல், ஒரு மாதத்திற்கு ஒருமுறை செய்துகொள்ளலாம். நெற்றி, தாடி, கன்னமீசை, மீசை முதலியவைகளிலுள்ள மயிரை ஒழுங்கு படுத்தும் பொருட்டு ஒவ்வொன்றுகப் பிடுங்குவது மிகவும் இழிவான காரியம். அதனல் நரம்புகள் சுரணையற்றுப் போகின்றன; முகம் குரங்கின் முகத்தைப்போல் விகாரமாகத் தோற்றுகின்றது. தாடி, கன்னமீசை, மீசை ஆகிய இவைகளை வளர்ப்பது அவரவருடைய இஷ்டத்தையும் அநுகூலத்தையும் பொறுத்தது. ஆனல், அவைகளை வைத்துக்கொண்டிருப்பது மிகவும் அனுகூலமென்றும், அவைகளை ஒழிப்பதே நன்றென்றும் தடையின்றிச் சொல்லலாம்.

24. மூக்குத் துவாரங்களின் வழியாகத் தூசி, சிறிய பூச்சிகள் முதலியன உள்ளே புகாமல் காக்கும்பொருட்டு நாசித்துவாரங்களில் இயற்கையாக மயிர் முளைத்திருக்கின்றது. அதைச் சிறிதும் எண்ணுமல் சிலர் க்ஷௌரம் செய்து கொள்ளுகிறார்கள். அப்படி நாசித்துவாரத்து மயிரைக் களிப்பது சரியன்று. அது அதிகமாக வளர்ந்துவிட்டால், அப்பொழுது அதை ஜாக்கிரதையாகக் கத்தரிக்கலாம்.

25. நானுவிதமான ஜனங்களுக்கு உபயோகித்த கத்தியினலேயே வியவஸ்தை யில்லாமல் நாமும் க்ஷௌரம் செய்துகொள்வதனல் பிரமாதமான அனுகூலங்கள் அநேகம் ஏற்படும்

யால் ஒவ்வொருவரும், அல்லது ஒவ்வொரு குடும்பத்தவரும் க்ஷௌரக் கத்தி முதலிய சாமான்களில் ஒவ்வொரு முஸ்தீப்பு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். அசுத்தமான கத்திகளினல் க்ஷௌரம் செய்துகொள்பவர்களுக்கு ஒருவிதமான கொறி சிரங்குகள் உண்டாகின்றன. இதைத் தடுக்கக் கருதியும், க்ஷௌரம் செய்துகொண்ட பிறகு நன்றுக ஸ்நானம் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

T. A. SWAMINATHA AIYER,
Retired Editor of the 'Arya.'

WHAT IS MEANT BY KINDERGARTEN?

கிண்டர்கார்ட்டன் என்பது என்ன?

பாடசாலையில் சிறுவர்களுக்காக அநேக விநோத விளையாட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன; இவ் விளையாட்டுகளைப் பாடங்களாக நடத்துவது கிண்டர்கார்டனன்று; கிண்டர்கார்ட்டன் என்பது கல்வி கற்பிக்கும் முறையாகும். பிரோபல் என்பவர் குழந்தைகளுக்காக தொழில்களும் விளையாட்டுகளும் நூதனமாக ஏற்படுத்தினவர். விளையாட்டுக் கருவிகளாவது, பந்தாவது, அவர் நாம் கண்டுபிடித்ததாக எண்ணுவது தவறு. அவர் கண்டு பிடித்தது என்னவென்றால், சிறுவர்களுக்கு விளையாட்டாகக் கல்வி போதிக்கும் முறையாகும்; முதல் இவ்விதமான பள்ளிக்கூடம் ஏற்படுத்தினவர் இவரே. இவர் அநேக கொடைகள் ஏற்படுத்தியிருக்கிறார்; கிண்டர்கார்ட்டன் போதனைமுறைக்கு இயல்பாய் ஏற்பட்டவைகள் இவைகளல்ல என்று நாம் நினைக்கவேண்டும்; கொடைகளும் தொழில்களும் போதனையின் பிரதம நோக்கமாகா. கல்விக்குத் துணையாக இவைகள் கருதப்பட்டிருந்தன. கல்வியில் அநேக அம்சங்கள் அடங்கியிருக்கின்றன; போதனையான இவ் வம்சங்களில் ஒன்று. இப் போதனைக்கு அறிவுதான் ஆதாரம்; குணமோ கல்விக்கு ஆதாரம்; ஆனல், ஒவ்வொன்றும் தனித்தனி அம்சமாக பாவிக்கப்படாது; இரண்டும் ஒன்றே. சாதாரண வழக்கத்தால் அறிவு மூளை என்றும் குணம் சுபாவம் என்றும் வழங்குகிறோம். ஆதலால் விளையாட்டாக நற்பழக்கமும் பயிற்றுவதோடு கல்வியும் போதிக்க வேண்டும்.

பள்ளியில் குழந்தைகளை இஷ்டப்படி சுயேச்சையாய் விளையாட விடவேண்டும். அவர்களோடு கூட இருந்து சுபாவ உணர்ச்சியைக் கவனித்து அதற்கு அநுசரணையாகவே கவனித்து நாம் நடக்கவேண்டும்; அவர்களுக்கு எவ்விதமான கஷ்ட்டமும், கட்டுப்பாடும் இருக்கக் கூடாது; இவ்விதமான சுயேச்சையோடு குழந்தைகளை வளரவிடவேண்டும். பிள்ளை படிப்பில் தேறவேண்டுமானால், வீட்டில் விளையாடுவதுபோல், பள்ளிக்கூடத்திலும் விளையாடவிடவேண்டும்; இவ்விஷயத்தில் முரண்பட்டால், குழந்தைகளுக்கான பள்ளிக்கூடம் என்று சொல்ல முடியாது.

ஒரு சிறுவன் தன் வீட்டைவிட்டு பள்ளிக்குப்போனால், அவனுடைய சுபாவம் மாறாது; ஆனால் வீட்டைச் சுற்றி இருப்பதுபோலிருக்காது; அவன் எவ்விடத்திலிருப்பினும் சுபாவ உணர்ச்சி மாறாது; மனோபிஷ்டமும் மாறாது; அவன் மனோபாவங்களும் மாறா. நம்மிடத்தில் வருவதற்குமுன், அவனுடைய விருப்பத்தையும் உரிமையையும், மனச்சாய்வுகளையும் கவனிக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு ஏற்பட்ட பாடசாலையில் வீட்டில் எப்படிப் பிள்ளைகளை நடத்துவார்களோ அவ்விதமாகவே பாடசாலையிலும் நடத்த வேண்டும். பிள்ளைகளின் சுபாவத்தை அறிந்து, தொடர்ச்சியாகவே விருத்தி செய்வதுதான் உபாத்தியாயரின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். பிள்ளைகள் வீட்டில் விளையாட்டயர்வதிலே காலத்தைப் போக்கினால், பள்ளியில் வந்து அசையாமல் ஆடாமல் உபாத்தியாயரையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்பது சரியன்று. சிறுவர்கள் வஸ்துக்களை தாங்களே தொட்டுக் கையாடுவதால், விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அவ்வஸ்துக்கள், பிள்ளைகளைத் தொடவிடாமல், உபாத்தியாயர் கையிலிருந்தால், பார்ப்பதிலேலே விஷயங்களை எப்படி அறிந்துகொள்ளுவார்கள். வீட்டில் தங்கள் மனோபிஷ்டப்படி மனத்தை செலுத்துகிற சிறுவர்கள், பள்ளியில் உபாத்தியாயருடைய கட்டளையின்படி நடக்கச்செய்து, ஆடல்பாடல்களை அடக்கிவைத்திருப்பது எவ்விதத்திற்கும் ஒத்ததன்று. வீட்டில் அரைநிமிஷம் உட்கார்ந்திருக்கறியாதவன் எப்படி அரைமணிநேரம் பள்ளியில் உட்கார்ந்திருப்பான். வீட்டில் வேடிக்கையாக ஓயாமல் பிதற்றிக்கொண்டு திரிபவன் பள்ளியில் வாயசையாமல் எப்படி யிருக்கக்கூடும். பள்ளியில் சிறுவன்

வரும்போது, மனத்திற்கு ஒவ்வாத விஷயங்களை கவனிக்கும்படி கட்டாயப்படுத்துவது மடத்தனமே; இப்படிச் செய்வது கல்வி கற்பிப்பதற்குப் பெரிய இடஞ்சலாகும். பிள்ளைகளுக்கு ஏற்பட்ட சுபாவ உணர்ச்சியையாவது மனக் கிளர்ச்சியையாவது அடக்காமல் பிரயோசனப்படுத்துவதே உபாத்தியாயரின் சிறந்த வேலையாகும்; பிள்ளைகளுக்கேற்பட்ட சுபாவங்களை மாற்றி, தங்கள் இஷ்டப்படி நடக்கச்செய்வது தவறான காரியம். கல்வியென்பது, பிள்ளைகளின் சுபாவத்தை அடியோடு தெடுத்து யெடுத்துவிடுவதன்று; அவைகளை பண்படுத்தி, ஒழுங்குபடுத்தி வளரச்செய்து பலனடையச் செய்வதே கல்வி கற்பிப்பதாகும்.

M. S. SABAPATHI MUDALIAR,
Headmaster, Govt. Panchama Training School,
Madras.

THE EXTIRPATION OF DESIRE

அவாவறுத்தல்

அவா என்ற சொல்லுக்கு ஆசை யென்பது பொருள். ஆசையாவது ஒரு வஸ்து நமக்குக் கிடைக்கவேண்டும் என்ற கதிப்பான எண்ணம். அவ்வாசை முதலில் எண்ண (Thought) மாய்ப், பலமுறையு முற்று நினைப்பா (Remembrance)ய், பின்னும் தடித்த விருப்ப (Desire)மாகும். ஆகவே எண்ணம், நினைப்பு, விருப்பம், ஆசையென்பன நான்கு பருவங்களாம். அவ்வாசை (Longing) யும், வரம்பு கடந்து நின்றபோது அதற்கு மோகம் (Craving) என்று பெயராகும்.

இவ்வைந்தையும் பற்றிச் சற்று விசாரிப்போம். ஒரு பொருளைப்பற்றி இந்திரியாதீனவாரா எண்ணந் தோன்றுவது சகஜம். அவ்வெண்ணந் தோன்றினதும் அவ்வெண்ணத்தின் தகுந் தகாமையை ஒருவன் பரிசீலிக்கவேண்டும். அது தகாத எண்ணமாயின் விட்டொழிக்கவேண்டும். தகுந்த எண்ணமாயின் அதனை நினைப்பின்கண் வைக்கலாம். நினைப்பில் வைத்த பிறகு அதைப்பற்றிப் பலமுறையும் யோசிப்பதால் அதனிடத்து விருப்பமோ அல்லது

வெறுப்போ உண்டாகக் கூடும். சிலருக்குக் கண்ட பொருள்களி லெல்லாம் விருப்பமேற்பட்டு அவரைத் துன்புறுத்தும். ஆனால் சாமர்த்தியவான்கள் தாம் விரும்பிய பொருள்களை முற்றவும் பெறுகிறார்கள். எதனால், அவர்கள் தங்கள் பகுத்தறிவாற் கிடைக்காதனவற்றை யொழித்துக் கைவரக்கூடிய பொருள்களையே யடையக் கருதுகிறார்கள். 'கிட்டாதாயின் வெட்டனமற' என்பது அவரது கட்டுரை (Motto). தமது கைக்கு வரக்கூடிய விஷயங்களிலேயே இச்சை வைத்து, அவை வருவதற்குமுன் அவற்றால் அடையக்கூடிய பலன்களில் களிகொள்ளாமல், அவை வருவதற்கான முறைகளையே கையாடி, தாம் விரும்பிய பொருளைத் திண்ணமாய் அடைவர். அத்திறமை அவர்களுக் கிருப்பதனால்தான் அவர்களைச் சாமர்த்தியவான்கள் என்றேன்.

இதுவரையிலுள்ள எண்ணம் நினைப்புக் காதாரம்; நினைப்பு விருப்பத்துக்கு ஆகாரம்; அவ்விருப்புத்தான் மனிதனைத் தொழின் முயற்சிகளில் ஊக்கி, அவனைத் திறமைவாய்ந்தவனாகச் செய்கிறது. ஒரு விஷயத்தை யடையவேண்டுமென்கிற விருப்பமுள்ளவனுக்குத்தான் அவ்விருப்பத்தை யடையவேண்டிய வழி தானாகவே ஏற்படும். ஆனால், ஒரு பொருளிடத்து அதிக விருப்பமாகிய ஆசை ஏற்பட்டால் அப்பொருளை யடையவேண்டிய நெறிகளை யோசிக்க மனஞ் செல்லாது. அதனால், தான் அடைய விரும்பிய பொருளை அவன் அடையாமலும் போகக்கூடும். மனத்தை எப்போதும் அடக்கிப் பல தானைகளிலும் செலுத்தும் வண்மை வாய்ந்தவனுக்கே எக்காரியத்தையும் செய்து முடித்தலியலும். அம்மனம் அப்படியில்லாமல் ஆசை யொன்றிலேயே முழுகிவிட்டால் இதர நெறிகளில் அது செல்லாது. (More haste worse speed) 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்று அறிவீர்கள்.

அதனாலேயே விருப்பத்துக்கு மேற்போன ஆசை கெட்டதென்று பெரியோர் சொல்லுவர். இவ்வாசை கடிப்பான குணமுள்ளது. அது தானடைந்த மனிதனை நெருப்பு தானும்பைப் பற்றி யெரிப்பதுபோல எரிக்கும். ஒரு விறகில் தீப்பிடித்தால் அது என்னவாகிறது? அத்தியினால் அவ்விறகு முழுவதும் எரிந்து கெட்டுப்போவதைப் பார்ப்பீர்கள். அதுபோலவே ஆசையும் ஒருவனைப்பற்றி அவன் மனத்தை யுருக்கிக் கெடுத்து, அவனைச் சொற்பநாளில் தன் மயமாக்கி, அவனையும்

அழித்து, தீ விறகின்றி யழிவதுபோல, தானுமழிகிறது. ஓர் ஆசை ஒருவனைப் பற்றினால் அது அவனை இலகுவில் விடுவதில்லை. ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக் கொள்ளுவோம்.

ஒருவனுக்குக் கள் குடிக்கவேண்டுமென்கிற எண்ணமுண்டானதாக வைத்துக்கொள்ளுவோம். அவன் நியாய அநியாய பரிசீலனையில்லாதவனாயிருந்தால் அவனுக்கு அந்த எண்ணம் நினைப்பாகமாறிப் பின் விருப்பமாகும். அவ்விருப்பத்துக்கு அவன் இடங் கொடுத்தால் அவன் அதன்படி நடக்கவேண்டி வரும். அதாவது அவன் கள் குடிக்கத் தலைப்படுவான். கள் விஷங்கலந்த ஓர் வெறியைத்தரும் வஸ்துவென்று நீங்கள் படித்திருக்கிறீர்கள். அதனால் அவனுக்குப் பின்னும் அதனிடத்து ஆசையுண்டாகும். அவ்வாசையை முதல் முதல் அம்மனிதன் வளராது தடுக்கலாம். வேண்டிய மனத்திடமட்டும் இருந்தால் அக் குடியின் தீமையை யறிந்து அவன் நிறுத்திவிடவும் செய்யலாம். ஆனால், அநேகருக்கு அம்மனத்திட மிருப்பதில்லை. அதனால் குடிக்கத் தொடங்கினவர்கள், நாழியில் தொடங்கிப் படிப்படியாய் மரக்காலளவுக்கு வந்து கலங் கலமாகவும் குடிக்கத் தலைப்பட்டு விடுகிறார்கள். நாளடைவில் பழக்க மதிகமாகிறது. பழக்கமிகுதியால் அவர்களுக்குச் சொந்த ஆசை (Longing) போய்விட மோகம் (Craving) என்ற நிலைக்கவர்கள் வந்துவிடுகிறார்கள். அதற்குப் பிறகு குடியில்லாவிடில் தூக்கம் வராது; தலைவலிக்கும், பயித்தியம் பிடித்தது போலத் தோன்றும். குடிக்காகப் பொய் சொல்லுவார்கள், திருடுவார்கள், சொத்துக்களை யழித்தபிறகு பிச்சை யெடுத்தாவது குடிக்கப் பொருள் தேடுவார்கள். இப்படியெல்லாம் செய்யக் காரணமென்? தாங்கள் செய்துகொண்ட வழக்கத்துக்குத் தாங்களே யடிமைகளாய், அவற்றை விலக்கமுடியாமற் தளர்ந்து, மோகங் கொண்டு கெட்டு அழிகிறார்கள். ஆதலால் உங்களுக்கு ஒருஎண்ணம் தோன்றினபோதே அதைப்பற்றிப் பரிசீலனைசெய்து அதனை விலக்குங்கள். ஆசை, மோகம் என்ற பருவம்வரையில் அவ்வெண்ணத்தைக் கொண்டுவந்து விடுவீர்களானால் தன்பப்பட்டு வருந்துவீர்கள்.

சிவத்தியாநாநந்தன்,
ஆநந்தாச்சிரமம்.

CORRELATION OF LESSONS

தொடர்முறைப் போதனை

இக்காலத்தே பாடசாலைகளில் வழங்கும் நூதன போதனை முறைகளுள் தொடர்முறைப் போதனை என்பது ஒன்று. இது சிறந்ததோர் போதனை முறை என்பதும் கீழ் வகுப்புகளில் இதனைக் கைக்கொண்டு போதிப்பது அத்தியாவசியகம் என்பதும் ஒருவரும் மறுக்க வொண்ணுது. எவ்விஷயத்தையும் ஐயந்திரிபற உணர்ந்தாலன்றி அதனை செவ்விய முறையில் நடத்த இயலாதாம். ஒன்றை வேறொன்றாக எண்ணி, அதனை நன்றாக உணர்ந்தோம் என்று எண்ணுவதனால் அவ்விஷயம் நாளுக்குநாள் மாறுபட்டு ஈற்றில் மற்றொன்றாக முடியும். இத் தொடர்முறைப் போதனை நம் பாடசாலைகளில் நடத்தப்படும் தன்மை உற்று நோக்கினால் இவ்விஷயம் நன்கு புலனாகும்.

சாதாரணமாக எலிமென்ட்டரிப் பாடசாலை உபாத்தியாயர்கள் தொடர்முறைப் போதனையின் நோக்கத்தையும் நன்கு உணராராய்த் தம் மனம்போனவாறு அதனை அமைத்து நடத்துகின்றனர். பாடசாலையில் நடத்தவேண்டிய பாடங்கள் ஒன்றையொன்று பற்றியிருந்தால்மட்டுமே போதும் என்னும் கருத்துடையராய் இத் தொடர்முறைப் போதனையை நடத்துகின்றனர். அதாவது, மரத்தின் வேர்களைப்பற்றி ஒரு பாடம் நடத்தவேண்டியிருந்தால் உபாத்தியாயர் தம் மனம் போனவாறு ஒரு கதையை சிருஷ்டித்து, அதில் ஏகதேசமாக வரும் ஒரு மரத்தைக் குறிப்பிட்டு அதன் மூலமாக வேரைப்பற்றிக் கவனிப்போம் என்று ஆரம்பித்து விடுகின்றனர். மற்றும் அக் கதையுள் ஆங்காங்கு வரும் சொற்களையோ பொருள்களையோ தொடர்பாகப் பற்றி வேறு பாடங்களுக்குத் தொடர்பு தேடுகின்றனர். உற்று நோக்கின் தொடர்முறைப் போதனையின் நோக்கம் இவ்வளவினதே யன்று.

தொடர்முறைப் போதனை யென்றால் என்ன? மேல் கூறியது போலவே வகுப்பில் நடத்தும் பல பாடங்களுள் ஒன்றையொன்று பற்றி நிற்குமாறு போதித்தலே தொடர்முறைப் போதனை யெனப்படுதாம். ஆயினும், இதை ஏகதேச சம்பந்தங்கொண்டு பொருத்தல் மட்டும் போதாது. உபாத்தியாயர், தாம் சம்பந்தப்படுத்தும் வேறுபாடம் முன் பாடத்துடன் அதிகமும் ஒற்றுமைப் பட்டுப் பிள்ளைகளின் மனத்தை முற்றும் கவரத்தக்கதாக இருத்தல் வேண்டும். 'ஒருவன் ஒரு காட்டின் வழியே சென்றான்; அவன் அங்கு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்' எனக் கதையைத் தொடர்ந்து சொல்லி, 'மரத்தின்வேர் நீரை எப்படிக் கிரகிக்கிறது' என்று தாவரநூல் பாடத்தைப் பொருத்திப் போதிப்பது சிறந்த போதனைமுறை யாகாது. இதனினும் 'நின்று தளரா வளர்தெங்கு தானுண்ட நீரைக் தலையாலே தான் தருதலால்' என்னும் செய்யுளைப் போதிக்கும் பொழுது 'வேர் நீரைக் கிரகிக்கும்விதம்' என்னும் விஷயத்தைப் பொருத்துதல் சால அமைவுடைய தாகுமன்றே?

தொடர்முறைப் போதனைக்குக் கதை, செய்யுள், பாட்டு முதலிய பாடங்களை ஆதாரமாகக் கொண்டு இயற்கைப்பாடம், வாசகம், செய்யுள், சித்திரம் முதலிய மற்றப் பாடங்களைப் பொருத்திப் போதிப்பது சிறந்த மார்க்கமாகும்.

கதைகள் சிறுவர்களுக்கு இன்பத்தை யூட்டி, அவர்கள் மனத்தை கிரகிக்கத் தக்கனவாக இருத்தல் வேண்டும். அன்றியும் ஒவ்வொரு கதையிலும், பிள்ளைகளுக்கு வற்புறுத்திப் போதிக்கத் தக்க கருத்து ஒன்று பரவி இருத்தல் வேண்டும். இவ்வாறின்றி, உபாத்தியாயர்கள் தம் மனம் போன்றவாறு இனிமையற்ற கதைகளைக் கற்பித்துக் கூறுவதனால் பிள்ளைகளுக்கு உற்சாகக் குறைவும் வெறுப்பும் உண்டாகும். மற்றும், அக் கதைகள் சிறு பிள்ளைகளின் செய்கைகளைப் பற்றியவைகளாக இருப்பின் பிள்ளைகளுக்கு அந்தக் கதைகளில் அதிக உரிமையும் சந்தோஷமும் ஏற்படும்.

செய்யுளாவது பாட்டாவது போதிக்கும் பொழுது கூடிய வரையில் பிள்ளைகளுக்கு விளங்கக் கூடியவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதந்தோறும் அர்த்தமாகா விட்டாலும் பொதுவில் அதில் அமைந்துள்ள விஷயமாவது அவர்களுக்கு விளங்கக் கூடியாக இருக்க வேண்டும். சில உபாத்தியாயர்கள் இசைப் பாட்டுகளைப் பிள்ளைகளுக்கு கற்பிக்க முயன்று, தாமே அத்தகைய பாடல்களை இயற்றுகின்றனர். இவர்களுக்குப் பாஷாஞானமும்

செய்யுள் இயற்றும் இலக்கண ஞானமும் இல்லாமையால் விரோயுத் தீங்குகள் பலவாம்.

எவ்வகைப் பாடல்களுக்கும் எதுகை, மோனை நயங்களேனும் அமைந்திருத்தல் அவசியம். நம் நாட்டில் எதுகை, மோனை நயங்கள் நீங்கிய செய்யுளே இல்லை யென்று சொல்லலாம். சாமான்ய ஜனங்கள் வழங்கும் அநாகரிகமான பாட்டுகளிலும் இந்த அமைதி குறைந்திருப்பதில்லை. கூலி வேலை செய்யும் ஏழைகள் தாங்கள் உழைக்கும்பொழுது தமக்குக் கஷ்டம் தோன்றுதபடி பாடும் எளிய பாடல்களிலும் கிருஷ்கர் பாடும் ஏற்றப்பாட்டு முதலிய எளிய பாடல்களிலும் பெண்கள் தம் அழுகைக்கென்று பாடும் ஒப்பாரிக் கண்ணிகளிலும் இன்னும் இவைபோன்ற சாமானிய பாடல்களிலுங்கூட எதுகை, மோனை நயங்கள் குறைபடுவதில்லை. அந்தோ! எலிமெண்ட்டரிப் பாடசாலை உபாத்தியாயர்கள் எதுகை, மோனைகள் இன்னவென் றுணராது செய்யுள்கள் என்றும் பாடல்கள் என்றும் இயற்றி, அவற்றைத் தம்மிடம் கல்வி பயிலும் சிறுவர்களுக்குக் கற்பித்து, சிறு வயதிலேயே சீர்கெடச் செய்கின்றனர். சொல்லமைதியும், பொருளாழமும் அமைந்து இருப்பின் எதுகை மோனை நயங்கள் எய்தாதொழியினும் ஒருவாறு அமைவுடையதாகும். இவ் வுபாத்தியாயர்கள் இயற்றும் பாடல்களில் சொற்பொருத்தமுமில்லை; பொருளாழமுமில்லை. ஆகையால் இப்பாடல்களைக் கற்பதனால் சிறுவர்களது பாஷாஞானம் ஆரம்பத்திலேயே அழிவடைந்து, பிறகு எவராலும் திருத்த முடியாத நிலைமையை யடைகின்றது. ஆதலின் உபாத்தியாயர்கள் இவ் விஷயத்தில் தேர்ச்சியடைய வேண்டுவது அவசியமாகும்.

ஒரு விஷயத்தைக் குறித்து நல்லதோர் பாடல் இருந்தாலும் சில உபாத்தியாயர்கள் அப் பாடலைத் தமது பாடசாலையில் கற்பிக்க இஷ்டமின்றி, அதே விஷயத்தைக் குறித்துத் தாமே வேறொரு பாடசாலை இயற்றிப் போதிக்க ஆரம்பிக்கின்றனர். இதனால் அவ் வுபாத்தியாயர் அடையும் பயன் யாதோ அறியோம். 'ஆபத்தில் உதவாத நேசன்', 'குருவியும் குரங்கும்', 'இடையனும் புலியும்' முதலிய சாதாரணக் கதைகளைப் பற்றிய பாடல்கள் எத்தனையோ ஆயிரமாகப் பாடியிருக்கின்றனர். இன்னமும் பாடுகின்றனர். நமது நல்லாசிரியனை வரிசையாகப்

பார்த்தால் இவ் விஷயம் தெரியவரும். வந்த வற்றில் நூற்றுக்கணக்கானவற்றைத் தள்ளிவிட்டும் இத்தனை பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றைக் கவனித்து நமது நண்பர்கள் நல்வழிப்படுவாராக.

இனிச் செய்யுட் பாடத்தைப்பற்றிக் கவனிப்போம். செய்யுள் சிறுவர்களுக்கு விளங்கக் கூடிய தெள்ளிய நடையில் இருத்தல் வேண்டும். விஷயமும் அவர்கள் உணரக் கூடியதாக இருத்தல் அவசியம். ஔவையார் முதலிய ஆசிரியர்கள் இயற்றியுள்ள நீதி நூல்கள், இப்போது நடக்கிறவகையில் பாடசாலைகளின் உபயோகத்திற்கென இயற்றப்பட்டவைகள் அல்ல. அவை சொற் செறிவும் பொருளாழமும் நவின்றோர்க் கினிமை முதலியவுங் கொண்டு விளங்குதலின் அவற்றைப் பாடமாக அமைக்க நேர்ந்து இருக்கின்றது. இத்தகைய செய்யுள்களைச் சிறுவர்களுக்குப் போதிக்கும்போது நன்றாய் விளங்கக் கூடிய தெள்ளிய பாகங்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இதுவுமன்றி, கடின பதங்களும் கடின சந்திகளும் கடின விஷயங்களும் அமைந்த செய்யுள்களை அறவே நீக்கிவிட வேண்டும். செய்யுளிலும் கூடிய மட்டும் பதங்களைப் பிரித்துப் போதிப்பதே உத்தமம். சந்தேகமான விஷயங்கள் அமைந்த பாடல்களையும் நீக்கிவிட வேண்டும்.

'நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கரு அழிக்கும்'

என்னும் செய்யுளில் உள்ள விஷயம் சரிதானா? இதைச் சிறுவகுப்பில் போதிக்கலாகுமா? முதலிய விஷயங்களை உபாத்தியாயரே முன்னர் நன்கு உணரவேண்டும். இவ்வாறு சந்தேகிக்கக் கூடிய விஷயங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கலாகாது.

இனி, இவ்வாறெல்லாம் ஆராய்ந்தெடுத்த கதை, பாடல், செய்யுள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு, அவற்றில் வரும் விஷயங்களினால் வேறு பாடங்களைச் சந்தர்ப்பம் நோக்கிச் சம்பந்தப்படுத்திப் போதிக்க வேண்டும். சம்பந்தம் நன்கு ஏற்பட்டுப் பிள்ளைகளின் மனத்தை முற்றும் கவரத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது தொடர்முறைப் போதனையின் நோக்கமாகும்.

*பத்திராதிபர்.

COUNT TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் பிரபு — ஓர் உபாத்தியாயர்

METHODS OF INSTRUCTION

போதனை முறை

டால்ஸ்ட்டாய் பிரபு யஸ்னயா பாலியானு என்னும் கிராமத்தில் நடத்தி வந்த பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் இலவசமாகவே படித்து வந்தார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் 40 பிள்ளைகளுக்கு மேல் எப்பொழுதும் படித்ததில்லை. சராசரி 30 பிள்ளைகள் பிரதி தினமும் பள்ளிக்கூடத்துக்கு வருவார்கள். நாலைந்து பேர் பெண்பிள்ளைகள். சாதாரணமாக எல்லாப் பிள்ளைகளும் ஏழு வயதுக்குக் குறையாமலும் பதின்மூன்று வயதுக்கு அதிகப்படாமலும் இருந்தார்கள். அதிக வயதானவர்களும் இரண்டொருவர் எப்போதாவது தாம் இளவயதில் படியாத குறைவை நினைத்து அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேருவதுண்டு. ஆகமொத்தம் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு நான்கு உபாத்தியாயர்கள் இருந்தார்கள். ஒரு தினத்துக்கு ஆறு அல்லது ஏழு பாடங்கள் நடக்கும்.

வாழ்க்கைக்கு அநுகூலங்கள் என்று ஏற்பட்டிருக்கும் எல்லாச் சட்ட திட்டங்களையும் கோட்பாடுகளையும் அவை உண்மையாகவே அநுகூலங்களோ அல்லவோ என்று தாமே விசாரித்தறிய முயல்வது டால்ஸ்டாய் பிரபுவின் வழக்கம். அப்பெருமுயற்சியில் ஒவ்வொரு விஷயத்தையும் நிதர்சனமாகக் கண்டறிய விரும்புவார்: அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடுவார்; சோம்பாமல் உழைப்பார். இவ்வாறு எல்லா விஷயங்களையும் நிதர்சனமாகக் கண்டறிய வேண்டுமென்றும், தமக்குத் தாமே ஆராய்ந்தறிய வேண்டுமென்றும், விரும்பியவர், கல்வி விஷயத்திலும் தம் முயற்சியைச் செலுத்தினார். போதனை முறைகளைப் பற்றிய உண்மையை அறியும்பொருட்டு அந்தப் பள்ளிக்கூடத்தையும் ஏற்படுத்திக் கொண்டார். தம்முடைய விசித்திரமான கொள்கைகளின் அநுகூலப் பிரதிகூலங்களை நிதர்சனமாகக் கண்டறிய அந்தப் பள்ளிக்கூடமே இடந்தந்தது.

இப்படி எதையும் தாமே பரிசோதித்து உண்மை யறிய வேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புவது இயலாத காரியமாம். ஆயினும் இரண்டொருவர் அங்கிலேயில் நின்று தொன்று தொட்டு வழங்கிவரும் மிகப் பழமையான கொள்கைகளையும் கட்டுப் பாடுகளையும் தவிர்க்காமல் எதையும் தம் பரிசீலனத்துக்குக் கொண்டுவந்த உண்மையை யறிய முயல்வது நன்மை பயக்கத் தக்கதென்றே சொல்லவேண்டும். போதனை சம்பந்தமாக பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் ராணுவ வீரர்களைப்போல் கடினமான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஒரேவிதமாகப் பயின்று ஒழுகுவது தகுதியன்று என்பது டால்ஸ்டாயின் அபிப்பிராயம். இதை நாம் இதற்கு முன் சொல்லிவந்த விஷயங்களினால் உணரலாம். ஒவ்வொரு மாணாக்கனுக்குமுள்ள தனித்தனி குணங்கள் வெளிப்படுவதற்குச் சுயேச்சையோடு சிறிது ஒழுங்கினையும் அவசிய மென்பது அவருடைய அபிப்பிராயம். போதனை விஷயமாக இவர் மூன்று சட்டங்கள் வரையறுத்தார். (1) போதனை விஷயத்தில் எந்த முறை உபாத்தியாயருக்கு குறைந்த கஷ்டத்தைக் கொடுக்கிறதோ அந்த முறையையே கைக் கொள்வது அவர்களுக்கு இயற்கையாகும். (2) போதனைமுறை எவ்வளவுக்கெவ்வளவு உபாத்தியாயருக்குக் குறைந்த கஷ்டத்தைக் கொடுக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு மாணாக்கருக்கு அதிர்ப்தியை உண்டாக்கும் (3) எந்த முறை மாணாக்கருக்கு அதிக திருப்திகரமாக இருக்கிறதோ அவ்வொன்றே அவர்களுக்கு அதிக நன்மையைப் பயக்கும். அவ்வாறு மாணாக்கர்களுக்குத் திருப்திகரமாயுள்ள முறையைத் தேடிப் போதிக்கும் உபாத்தியாயர் அவர்களுடைய வாலிபத் தன்மைக்கும் அதனால் மறைந்து கிடக்கும் ஒவ்வொருவனுடைய திறமைக்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்டுணர வேண்டும். இவ்வித அபிப்பிராயங்களைக் கொண்ட டால்ஸ்டாய் பிரபு பள்ளிக்கூடங்களில் இலக்கணத்தை யாதார மாகக் கொண்டு பாடங்களை நடத்தும் வழக்கமானது உபயோகமற்றதென்று கண்டிக்கிறார். ஒரு பாஷையைப் பிழையின்றி பேசத் தெரியும் பொருட்டே அதன் இலக்கண விதிகளை ஒதி யுணருகிறார்கள். ஆனால் அந்த விதிகளைப் படிக்காமலே பிழையின்றி அப் பாஷையைப் பேசக் கூடும். இது எல்லோரும் தம் அனுபவத்தில் கண்டறிந்த விஷயம். இலக்கண விதிகளைப் படிப்பது மாணாக்கர்கள் புத்தி கூர்மையடைவதற்கு அனுகூலமா யிருப்பது உண்-

மையே ஆயினும் இதைவிட அதிக அனுகூலமான பாடங்கள் பல இருக்கின்றன.

ஒரு பாஷையைக் கற்பதற்கு வியாசம் எழுதப் பழகுவதே சிறந்த முறை யென்று அவர் எண்ணுகிறார். முதல் இரண்டு வகுப்புக்களில் பிள்ளைகள் தாங்களே விஷயத்தைத் தேடிக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறார். சாதாரணமாக அவர்கள் தாங்கள் இரண்டொரு மாதத்துக்கு முன்னே கேட்ட கதைகளையே எழுத விரும்புவார்களாம். இரண்டாவது வகுப்பில் இரண்டொரு முறை 'கோதுமை' 'வீடு' 'மரம்' என்னும் விஷயங்களைக் குறித்து எழுதச் சொன்னபோது பிள்ளைகள் அவைகளை எழுதத் தோன்றாமல் அழத் தொடங்கினார்களாம். உபாத்தியாயர் அதற்கு மேலும் வற்புறுத்தி, கோதுமை விளையும்விதம், அதை உபயோகிக்கும் விதம் முதலிய விஷயங்களை விளக்கி, கோதுமையைப்பற்றி ஒருவியாசம் எழுதச் சொன்னாராம். அப்பொழுதும் அவர்கள் அரை மனத்துடனே எழுதினார்களாம். அதனால் அவர்கள் எழுதின வியாசம் இலக்கணப் பிழையோடு எல்லா விதமான பிழைகளும் கூடியிருந்ததாம். உடனே டால்ஸ்டாய் ஒரு கதையைச் சொல்லி 'அதை எழுதும்படி பிள்ளைகளுக்குச் சொன்னார். உடனே அவர்கள் அதிக ஆவலுடன் எழுதத் தொடங்கினார்கள். 'பன்றி, 'பானை, 'மேஜை', என்பவற்றைப் பற்றி எழுதுவதைப் பார்க்கிலும், தாங்கள் கேட்ட கதைகளை எழுதுவது அச் சிறுவர்களுக்குச் சுலபமாக இருந்தது. உபாத்தியாயருக்கும் 'பன்றி', பானை முதலிய அற்ப விஷயங்கள் சுலபமானவைகளாகத் தோன்றின. பிள்ளைகளுக்கோ அவை ருசிக்கவில்லை. அவற்றிற்கு நேர் விரோதமான விஷயங்களிலேயே அவர்கள் மனம் சென்றது. எந்த விஷயம் விசித்திரமாகவும் வினோதமாகவும் தம்மைப்போல் உயிருள்ள மனிதர் மிருகங்களின் தன்மைகளையும் செயல்களையும் குறிப்பதாகவும் இருக்கின்றதோ அதுவே அவர்களுக்கு இன்புகரமாக இருந்தது.

பாட புஸ்தகங்கள் பொது விஷயங்களையும் இலக்கணங்கள் அடைமொழிகளையும் சரித்திரங்கள் கால நிர்மாணங்களையும் கணிதங்கள் கோணங்களையும் பூமியின் அளவையும் பற்றி முறையிடுகின்றன. இப்போது விஷயங்கள் எல்லாம் மாணாக்கர்களின் புத்திக்கும் எளிதில் எட்டக்கூடியவையல்ல. தாமே அறிந்து தம் அநுபவத்தில் கண்ட விஷயங்களுடன் சம்பந்தப்பட்ட வேறு விஷயங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றையே சிறுவர்களுக்கு முதல் முதல் கற்பிக்க முயல வேண்டும். ஒரு மேஜையின் உருவத்தை உள்ளபடி எழுதவேண்டுமென்றால் அதற்கு அதிக ஆற்றல் வேண்டும். அது சிறுவர்களுக்கே யன்றி பெரியவர்களுக்கும் அரிதான விஷயமாகும். அதை எடுத்துச் சொல்லும்போது அழுகிற சிறுவன் ஒருவன் மனிதர் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அன்பைப்பற்றியாவது விரோதத்தைப் பற்றியாவது எழுதுவது எளிதென்று எண்ணுவதுமன்றி, நன்றாக எழுதவும் கூடும். ஏனெனில் அன்பும் விரோதமும் தன் அநுபவத்தில் வந்த விஷயங்களே. அதுபோலவே தன் அநுபவத்தில் கண்டறிந்த மற்ற விஷயங்களிலும் அவனது ஊக்கமும் திறமையும் நன்கு வெளியாகும்.

சாதாரணமாக டால்ஸ்ட்டாய் பள்ளிடத்து முதல் இரண்டு வகுப்புகளில் படிக்கும் சிறுவர்கள் தாமாகவே குறித்துக் கொண்டும் வியாசம் எழுதின விஷயங்கள் மூன்று விஷயங்களைப் பற்றியவையாக இருந்தன — (1) அவர்கள் நேரிற்கண்ட சம்பவங்களில் ஒன்று (2) அவனவன் மற்றொருவனோடு சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒன்று (3) நேரில் கேட்ட கதைகளில் ஒன்று. வேறு விதவேலைகளைக் காட்டிலும் வியாசம் எழுதுவதில் அச்சிறுவர்களுக்கு அதிக விருப்பம் இருந்ததாக டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். பள்ளிக்கூடம் விட்டு வெளியே வந்ததும் காகிதம் பென்ஸில் அகப்பட்டால் போதும். உடனே அவர்கள் தாம் கேட்ட கதைகளில் ஏதாவது ஒன்றை எழுத ஆரம்பித்துவிடுவார்கள். அதுவுமன்றி அவர்களே ஒருவருக்கொருவர் தத்தம் வியாசங்களைத் திருத்திக் கொள்வார்கள். 'அந்தக் கதை சுருக்கமாக இல்லை' 'இந்தக் கதைத் தெளிவாக இல்லை' 'அதில் பொருத்தம் குறைவாக இருக்கிறது' 'இதில் சொன்னதே திருப்பித் திருப்பிச் சொல்லி யிருக்கிறது' என்று குறைகண்டு திருத்த மடைவார்கள். அவர்களுக்கும் இவ் விஷயங்களைப்பற்றித் தீர்மானமான அபிப்பிராயங்கள் உண்டு. சில சமயங்களில் ஒரு பையன் உபாத்தியாயர் கேட்கும்போது தன்னுடைய வியாசத்தைப் படிக்கமாட்டேன் ,என்று பிடிவாதம் பிடிப்பான். காரணம் கேட்டால் 'என் வியாசத்தைவிட அந்தப் பையன் எழுதிய வியாசம் நன்றாக இருக்கிறது' என்று சொல்லு-

வான். சில சமயங்களில் எழுதினவன் பேரைச் சொல்லாமல் ஒரு வியாசத்தை உபாத்தியாயர் எடுத்துப் படித்தால் அதை எழுதின பையனுடைய பேரை மற்றவர்கள் சொல்லி விடுவார்கள்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

MADRAS COLLEGE FOR WOMEN

சென்னை மாதர் கலாசாலை

நமது நாட்டிற்கு நற்காலம் பிறந்தது என்று கூறலாம்படி, சென்ற ஜூலை மீ 14உ யன்று துரைத்தனத்தார் இந்திய மாதர்களுக்காக ஒரு கலாசாலை ஏற்படுத்தினார்கள். அதில் இப்போது ஜூனியர் இன்ட்டர்மீடியேட் வகுப்பு மட்டும் இருக்கிறது. இனி பி-ஏ, வகுப்பு வரையில் உண்டாகும். அந்த நிலைமைக்கு வர நான்கு வருஷங்கள் செல்லும்.

இப்போது சுமார் 40 மாதர்கள் வாசிக்கிறார்கள். இந்தக் கட்டடம் பீச் ரோட்டில் மயிலாப்பூருக்கு அருகில் அமைந்திருக்கிறது. சில மாணாக்கர்கள் கலாசாலைக் கட்டடத்திலேயே தங்கியிருக்கின்றனர். போஜனம் முதலியவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகள் தக்கவாறு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கலாசாலை நாளும் ஓங்கி நாட்டிற்கு நன்மை புரியும் என்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

---

30 SEP 1914

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1914வது செப்டெம்பர்மீ | மாதம் 4

HOME AND SCHOOL

வீடும் பாடசாலையும்

நாம் நமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்குச் சிறு வயதிலேயே அனுப்புகிறோம். 'இளமையிற் கல்' என்னும் மூதுரைக் கேற்பச் சிறுகாலையிலே அவர்களுக்குக் கல்விகற்பிக்க ஆரம்பிக்க வேண்டுமென்பது நமது நோக்கம். குழந்தைகள் வீட்டை விட்டுப் பள்ளிக்கூடத்தில் நுழைந்தவுடனே அவர்களுக்கு எல்லாம் விசித்திரமாக இருக்கிறது. பிள்ளைகளின் கூட்டங்களும், வகுப்புகளும் உபாத்தியாயர்களும் மணியடிப்பதும் பிள்ளைகள் ஒழுங்குபட எழுந்து நிற்பதும் உட்காருவதும் பாடங்களைச் சொல்வதும் அடிபடுவதும் முதலிய எல்லாம் புதிதாக இருப்பதுடன், தாம்

பிறந்து வளர்ந்த உலகத்தை விட்டு வேறொரு புதிய உலகத்துக்கு வந்துவிட்டதுபோல் அவர்களுக்குத் தோன்றுகின்றது. ஏனெனில் குழந்தைகள் தம் வீட்டில் விளையாடுவதற்குள்ள பொருள்களும் இடங்களும், அவர்கள் இஷ்டம்போல் நடந்து அழவொட்டாமல் வைத்துக்கொள்ளும் பெற்றோரும் தம்மோடு பள்ளிக்கூடம் வருவதில்லையே. வருவதும் இயலாத காரியமேயன்றோ ?

ஆனல் சிறிது காலத்தில் இவை யெல்லாம் ஒருவாறு மாறி, குழந்தைகளுக்குச் சகஜமாகத் தோன்றக்கூடும். ஆயினும் குழந்தைக்கு ஏற்பட்டுள்ள சுபாவம் மாத்திரம் அவ்வளவு எளிதில் மாறக் கூடியதன்று. இயற்கையாக ஏற்பட்டிருக்கும் குணங்களும் செய்கைகளும் அவர்கள் தேக வளர்ச்சியோடு புத்தி வளர்ச்சியும் அடைவதற்கு அநுகூலமாக இருப்பவை. பயங்காட்டி அடக்கி வைக்கக் கூடுமாயினும், அதனல் உண்டாகும் தீமைகள் பல. தீமைகள் ஒருபுற மிருக்க, புத்தி வளர்ச்சிக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கிற அநுகூலங்களை உபயோகப்படுத்தாதிருப்பது உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் எவ்வளவு நஷ்டம்? இயற்கைக்கு மாறுக நடப்பதெல்லாம் வளர்ச்சி கெடுவதற்கே காரணமாகும். இயற்கையை ஒட்டி நடப்பதே வளர்ச்சியை ஜலம் வார்த்து வளர்ப்பதாகும்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குப் போனவுடனே அவர்களுடைய அபிஷ்டங்களும், சேஷ்டைகளும் விளையாட்டுகளும், குணங்களும் மாறிவிடும் என்பதில்லை. வீட்டில் எந்தவிஷயங்கள் அவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணினவோ அந்த விஷயங்களை அவர்கள் பள்ளிக்கூடத்திலும் விரும்பாமல் போகமாட்டார்கள். வீட்டில் தாய்தந்தையர் தம் குழந்தைகளுக்கு எது எது ஏற்றதென்று செய்தார்களோ அதெல்லாம் பள்ளிக்கூடத்திலும் ஏற்றவையாகத்தான் இருக்கும். இடம் மாறின காரணத்தாலேயே எல்லாம் வேறுபாடு அடைவதில்லை. உபாத்தியாயர்கள் இவ்விஷயத்தை மறந்து காலைமுதல் மாலைவரையில் குழந்தைகளை மௌனமாக அசையாமல் உட்காரச் செய்து பாடத்துக்குமேல் பாடமாக போதிக்கக்கூடாது. 'இது வீடு அல்ல, இங்கே நாம் நம்முடைய இஷ்டங்களை அடக்கிக்கொள்ள வேண்டும்' என்ற உணர்ச்சி குழந்தைகள் மனத்தில் சிறிதும்

தோன்றக் கூடாது. அவர்களுக்கு இயற்கையான குணங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கும் விடாமல் தொடருகின்றன என்னும் விஷயத்தை உணர்ந்து, அதை ஒட்டியே பள்ளிக்கூடத்தில் பாடங்களையும் போதனை முறைகளையும் ஏற்படுத்தவேண்டும். அதிலும் சிறு குழந்தைகள் விஷயத்தில் இந்த உணர்ச்சியில்லாத உபாத்தியாயர் யாதொரு நன்மையும் அக் குழந்தைகளுக்குச் செய்ய முடியாது.

உதாரணமாக, குழந்தைகள் வீட்டில் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கின்றார்கள். கையும் காலும் ஒரு நிமிஷமாவது சும்மா இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்களைப் பள்ளிக்கூடத்தில் காலைமுதல் மாலைவரையில் மௌனமாகக் கைகால் அசையாமல் இருக்கச் செய்வது தவறுகும். ஏனெனில் அப்படி யிருப்பது அவர்கள் இயற்கைக்கு மாறுனது. அதுபோலவே அவர்கள் தங்கள் வீட்டில் எந்த வஸ்துவையும் கையில் எடுத்துப் பார்த்து, 'இது என்ன,' 'அது என்ன,' 'இது எப்படி,' 'அது எப்படி' என்று கேள்விமேல் கேள்வி கேட்டு விஷயங்களை உணரும் தன்மையுள்ள குழந்தைகளை, 'நீங்கள் இங்கே அப்படிக் கேட்கக் கூடாது. சும்மா அசையாமல் இருந்த இடத்திலேயே இருந்து நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள், நான் செய்வதை உற்றுப் பாருங்கள்,' என்று சொல்லிப் பாடங்களைப் போதிப்பது பொருந்துமா? வீட்டில் குழந்தைகள் எதையும் தம் இஷ்டம்போல் செய்ய வழக்கப்பட்டிருக்கும்போது, பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் அதிகாரத்தினல் அடக்கியாள்வது அநுகூலப்படாது. வீட்டில் இஷ்டம்போல் ஓடி யாடும் குழந்தைகளை ஓர் இடத்தில் வெகுநேரம் உட்கார வைக்க லாகாது. வீட்டில் சளசளவென்று பேசியும் பாடியும் ஓயாமல் சந்தடி செய்துகொண்டும் இருக்கும் குழந்தைகளை வகுப்பில் புளிமூட்டைகள்போல் மௌனமாய் இருக்கச் செய்தலும் தருமமா !

இப்படிப்பட்ட விரோதமான மாறுதல்கள் நமது பள்ளிக்கூடங்களில் சகஜமாக ஏற்பட்டிருக்கின்றன. இவை இயற்கைக்கு முற்றிலும் விரோதமானவை ; ஆகையால் குழந்தைகளின் வளர்ச்சிக்கு விரோதத்தையே செய்யும். அதனல் பள்ளிக் கூடத்தை முற்றிலும் வீடாகவே செய்துவிட வேண்டும்

என்று சொல்வதாக எண்ணலாகாது. குழந்தைகளின் இயற்கையான குணங்களை ஆதாரமாகக்கொண்டு அவைகளின் மூலமாகவே அவர்கள் கற்கும்படிச் செய்ய வேண்டும். இயற்கையாக ஏற்பட்டு வளர்ந்து வருகிற அறிவை நீக்கிப் புதிதாக சில விஷயங்களை அவர்கள் மண்டையில் நுழைக்க முயல்வது கல்வி கற்பிக்கும் முறையாகாது.

இதனால் குழந்தைகள் வீட்டிலிருப்பதுபோல் முற்றிலும் சுயேச்சையாகப் பள்ளிக்கூடத்திலும் இருக்கவேண்டும் என்று கருதவொண்ணாது. எப்போது அவர்கள் பல குழந்தைகளுடன் கலந்து இருக்க ஏற்படுகிறதோ அப்போதே அவர்களது சுயேச்சையும் தானாகக் குறைவடைகிறது. ஆனால் அக்குறைவு அவர்களுக்குத் தோன்றுதபடிச் செய்யவேண்டும். ஒருபோதும் குழந்தைகள் 'ஐயோ, வீட்டை விட்டு வந்துவிட்டோமே' என்று எண்ணக்கூடாது. பள்ளிக்கூடத்தில் இருப்பது ஒரு கஷ்டமாக ஏற்படாதபடி அவர்களை உற்சாகப்படுத்திக் கூடிய வரையில் அவர்களுக்கு இஷ்டமான வழிகளிலேயே விட்டு, அவைமூலமாகவே பாடங்களைப் போதிக்கவேண்டும். படிப்பின் பொருட்டு யாதொரு முயற்சியும் தாங்கள் எடுத்துக்கொள்வதாக அவர்களுக்குத் தோன்றக்கூடாது. 'பாடம் படிக்கிறோம்' என்ற உணர்ச்சியே அவர்களுக்கு உண்டாகாமல் இருக்கச் செய்ய வேண்டும்.

ஆகையால் அவர்கள் சுறுசுறுப்பா யிருப்பதற்கு இடந்தர வேண்டும். கையிலெடுத்து விளையாடுவதற்கு வேண்டிய பொருள் ஏராளமாகக் கொடுக்கவேண்டும். அதிலும் 'அதை எடுக்காதே', 'அப்படிப் பிடியாதே' 'அங்கே வைக்கவேண்டாம்' 'அப்படிச் செய்யவேண்டாம்' என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தலாகாது. அவர்கள் இஷ்டம்போல் அவைகளைக் கையாட விடவேண்டும். நாம் சொல்லுகிறபடி செய்ய மனமிசைகிறார்களா என்று பார்க்கவேண்டும். இசைந்தால் அப்பொழுது அவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயத்தை வேடிக்கையாக அவர்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கும் வஸ்துக்களைக் கொண்டே போதிக்க முயலவேண்டும்.

மேலும் பள்ளிக்கூடத்தில் மற்றப் பிள்ளைகளுடன் விளையாட விடுவதனால்தம் தாய்தந்தையர்களைப் பிரிந்துவந்த நினைவை மறந்

திருக்கச் செய்யவேண்டும். வீட்டு விளையாட்டுகளுக்குப் பதிலாக வேறு விளையாட்டுகள் பள்ளிக்கூடங்களில் ஏற்பட வேண்டும். வீட்டில் கதை சொல்லும் அத்தை பாட்டிகளுக்குப் பதிலாக இன்பகரமான கதைகளைச் சொல்ல உபாத்தியாயர் ஏற்பட வேண்டும். பொதுவாக எல்லாவிதத்திலும் வீட்டைக்காட்டிலும் பள்ளிக்கூடமே அதிக சந்தோஷகரமானதாக இருக்கவேண்டும். ஆனால் இந்த விளையாட்டுகளெல்லாம் தம்முடைய படிப்புக்கு அநுகூலமாக ஏற்படுத்தி யிருக்கின்றன என்ற விஷயம் அவர்களுக்குச் சிறிதும் தோன்றக் கூடாது.

சில பிள்ளைகளுக்குத் தங்கள் வீடுகளில் இவ்விதமான விளையாட்டுகளும் சந்தோஷங்களும் இல்லாதிருக்கலாம். அவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடம் மாறுபாடுடையதாக ஏற்படுமாயினும், அந்த மாறுபாடு நன்மையைச் செய்யத்தக்கதேயன்றி ஒருபோதும் தீமையைச் செய்யத்தக்கதன்று.ஏனெனில் அது அவர்கள் இயற்கையை ஒட்டியே இருக்கிறது. ஆகையால் அக்குழந்தைகள் அந்த மாறுபாட்டை மாறுபாடென்று உணரமாட்டார்கள். ஏதோ தங்களுக்கு அதுவரையில் இல்லாத நன்மை அப்போது ஏற்பட்டிருப்பதாக மாத்திரம் அவர்கள் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி உண்டாகக்கூடும். அதனால் உபாத்தியாயர் எடுத்துக் கொள்ளும் முயற்சியை அவர்கள் ஆவலுடன் மேற்கொள்வார்கள். (தொடரும்)

பத்திராதிபர்.

HOME LESSONS

வீட்டுப் பாடங்கள்

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இப்போது வாசிக்கவேண்டிய நூதன பாடங்களும் அதிகம், எழுதவேண்டிய அப்பியாசங்களும் அதிகம். பள்ளிக்கூடத்திலும் வேலை செய்கிறார்கள்; வீட்டிலும் வேலை செய்கிறார்கள். படசாலையில் உபாத்தியாயருடைய நேர் பார்வையும் பராமரிப்பும் உண்டு; வீட்டில் அப்படியில்லை. வீட்டில் வாசித்துக்கொண்டு வரவேண்டிய பாடங்களோ அதிகம்; எழுத வேண்டிய கணக்கு முதலான அப்பியாசங்கள் இன்னும்

அதிகம். பிள்ளைகள் வீட்டில் செய்யவேண்டிய வேலைகளின் நோக்கம் உபாத்தியாயர்களுக்குத் தெரிவதில்லை. பிள்ளைகள் தங்களுக்கு விதித்திருக்கும் வேலைகளை உபாத்தியாயருடைய உதவியின்றிச் சுலபமாகத் தாமே செய்யும்படி பாடங்களை முறைப்படுத்துவதே உபாத்தியாயருடைய முக்கிய நோக்கம். நம் உபாத்திமார்கள் இக்கருத்தைக் கவனியாமல் தம் மனம்போனவாறு பிரயாசமான வேலைகளைப் பிள்ளைகள் வீட்டில் செய்யும்படி அடிக்கடி கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். பிள்ளைகளோ அவற்றைச் சரிவரச் செய்ய முடியாமல் தத்தளிக்கிறார்கள்; அன்னியர் உதவியை நாடுகிறார்கள்; அன்னியரைக்கொண்டு வேலையை முடித்துக் கொள்ளுகிறார்கள்; அர்த்தம் தெரியாமல் பாடங்களை மனப்பாடம் செய்கிறார்கள்; கணக்குகளைச் செய்யும் வழிதெரியாமையால் பிறர் செய்வதைப் பார்த்து எழுதும் கெட்டவழக்கம் படிந்து விடுகிறது; தாங்கள் செய்ய வேண்டிய நித்திய கர்மானுஷ்டானங்களையும் செய்யத் தவறிவிடுகிறார்கள்; பிள்ளைகள் செய்யும் வீட்டுவேலைகளில் சுயமான கருத்தும் மனோபாவமும் காண்பதரிது; பிறருடைய கருத்தும் சார்புமே மலிந்து கிடக்கும். ஆதலால் வீட்டில் செய்ய வேண்டிய வேலைகளை உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு விதிக்கும் போது, பிள்ளைகள் தாமே எளிதில் அன்னியர் உதவியின்றிச் செய்யக் கூடுமா என்பதைக் கவனிக்க வேண்டும்; வேலைகளும் அவர்களுடைய சக்திக்குத் தக்கவாறிருக்கவேண்டும்; அவர்களுடைய மனத்திற்கு ஒத்ததாயிருக்க வேண்டும்; அவர்களுடைய யுக்தி புத்திக்கு ஏற்றவாறிருக்கவேண்டும்; அடுத்தநாள் பாடசாலையில் நடத்தப் போகும் வேலைக்குச் சார்பாயும் தொடர்பாயும் இருக்க வேண்டும்; மனத்தைக் கவரும்படி இன்பகரமாக இருக்க வேண்டும்; பாடசாலையில் உழைத்த உழைப்பிற்கு ஆறுதலாகவும் இருக்கவேண்டும்.

வாரத்திற்கு ஒருமுறை வீட்டு அப்பியாசம் கொடுத்தால் போதும். பெரும்பாலும் வெள்ளிக்கிழமைதான் அதற்கு ஒத்த நாள். வீட்டிற்கு விடும்போது, "பிள்ளைகளே, இந்தவாரம் எதைப் பற்றி எழுதலாம்" என்று கேட்டுத் தெரிந்து கொள்வது நலம். ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி வியாசமாக எழுதும்படி செய்வது உசிதமாகும். எழுதப்போகும் விஷயத்தைப் பிள்ளைகளின் விருப்பத்தின்படி தெரிந்தெடுக்க விடவேண்டும். எடுத்துக் கொண்ட விஷயம் இதற்குமுன் தெரிந்ததாயும் சம்பாஷித்ததாயும் பெரும்பான்மையோருக்கு ஒத்ததாயும் இருப்பதே நலம்.

சில உபாத்தியாயர்களுக்குச் சில பாடங்களில் அதிக பிரீதியுண்டு; சித்திரம் வரைதல், கணக்குப் போடுதல் முதலிய பாடங்களில் அதிக நாட்டம் வைத்து, இப் பாடங்களையே வீட்டு அப்பியாசமாகக் கொடுக்கிறார்கள்; எந்தப் பாடத்தில் உபாத்தியாயருக்கு அதிக இஷ்டமோ, அதையே அப்பியாசமாகக் கொடுக்கிறார்கள்; இப்படிச் செய்வது ஏற்றதன்று. சில உபாத்தியாயர்கள் மேலாகப் பார்த்துச் சரி, தப்பு என்று சொல்லக் கூடிய பாடங்களை வீட்டப்பியாசமாகக் கொடுக்கின்றனர். எப்போதும் இப்படியே செய்வதால் பிள்ளைகளுக்குள்ள ஊக்கம் குறையும். வீட்டு வேலை பள்ளிக்கூடத்து வேலைக்குச் சாதகமா இருக்க ஆராய்ந்து கொடுப்பது நலம். பள்ளிக்கூடத்தில் பாடம் ஆரம்பிக்கும்போது பிள்ளைகள் செய்த வீட்டுவேலையைப்பற்றி ஆழ்ந்த கருத்துள்ள கேள்விகளைக் கேட்டு, நடத்தவேண்டிய பாடத்தோடு பொருந்தும்படி விஷயங்களை வரவழைக்கவேண்டும்; இக்காரியம் சித்தி பெறுவதற்கு பிள்ளைகள் அதிக வேலை தனியாகச் செய்யவேண்டியது அவசியமாகும். வீட்டில் பிள்ளைகள் தனியாக வேலை செய்ய வேண்டியிருப்பதால், உபாத்தியாயரே பள்ளிக்கூட நேரங்களில் அவர்களுடைய கால அட்டவணைகளை வரையறுக்க வேண்டும்.

சரியானபடி வீட்டுப் பாடங்கள் விதிப்பதற்கு அசாத்தியமாயிருக்குமாயின், பள்ளிக்கூட நேரங்களில் மௌனமாய் பாடங்களை ஆயத்தம்செய்யும்படி விடவேண்டும்; அதேகமாய் உயர்ந்த வகுப்பில், ஒவ்வொரு வாரத்தில் இதற்காகச் சிறிது காலத்தை நியமிக்கலாம். உபாத்தியாயர் நடத்தப்போகிற விஷயத்தை முன்னரே பிள்ளைகளுக்குத் தெரிவிக்கலாம்; அப்பாடத்தை ஆயத்தம் பண்ணுவதற்கு வேண்டிய வழியையும் சொல்லலாம், அல்லது அப்பாடத்தை அவர்களிஷ்டப்படித் தயார் செய்யும்படி விடலாம். இவ்விதமாய் ஏற்பாடு செய்தால், உடனே காரிய சித்தி உண்டாகாமலிருக்கலாம். காலத்தில் ஆரம்பித்து, உறுதியாய் கடைப் பிடித்து நடக்கவேண்டும். உபாத்தியாயர் இவ் விஷயத்தில் ஊக்கங் கொண்டிருப்பதாக பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டும்; இவ்விதமான வேலைகளைச் செய்வதால் பிள்ளைகள் தாங்கள் நன்மை அடைவதாக நினைக்கவேண்டும்.

M. S. SABAPATI MUDALIAR,
Headmaster, Govt. Panchama Training School,
Madras.

OBSTACLES
இடையூறுகள்

உருக்க உருக்கப் பொன்னின் ஒளி அதிகரிக்கின்றது; அரைக்க அரைக்கச் சந்தனத்தின் மணம் மேலிடுகின்றது; அங்ஙனமே ஒருவனுக்கு உழைக்க உழைக்க உரம் ஓங்குகின்றது. இதுபற்றியே கற்றறிந்த பெரியோர்கள் இடையூறுகளையும் தங்களுக்கு இதம் செய்யும் சிநேகிதர்களெனக் கூறுவர். நமக்குப் பல விதத்தும் தோள்வலியை விருத்தியாக்குதற் பொருட்டே அவைகள் சிருஷ்டிக்கப்பட்டவை யெனச் சொல்வாருமுண்டு. ஒரு வேலையைத் தொடங்கிய பின்னர் இடையில் வரும் கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டு பயந்து அதனைப் பூர்த்தி செய்யாது விட்டு விட்டுப் பறந்தோடுபவன் இவ்வுலகில் ஒன்றிற்கும் உதவவேமாட்டான் என்பது தெற்றெனப் புலப்படுவதாம். வேலை செய்யச் செய்ய அவ்வேலையை இனிது முடிக்கும் பலம் அதிகரிக்கும். சற்றேனும் பயமின்றி முதலில் ஒரு கஷ்டத்தைத் தாக்கி முன்நிற்போமாகில் பிற்பட்டு வருவன அவ்வளவு மனவருத்தத்தை விளைவிக்கா. ''இடையூறுகள்'' என்ற பதத்தினை நாம் சற்று பிரித்து, அதனுள் பதிந்து கிடக்கும் சாராம்சத்தை யுற்று நோக்குவோமாயின், ஒரு வேலையைச்செய்யும்போது அதனை முடிப்பதற்குள் இடையில் உறுவனவாகிய கஷ்டங்களை அப்பதம் எடுத்துக் குறிக்கின்றது. இடையில் வந்துநேருங் கஷ்டங்களாகிய தலின், ஒல்லையில் அவை மறைந்துபோம் என்பது காதலாமலகம்போல் விளங்குகின்றதன்றே.

பல்வளஞ் செறிந்த ஸ்காட்லந்து தேசத்தில் செங்கோலோச்சிய ''ராபர்ட் புரூஸ்'' என்னும் மன்னவன் காலவேறுபாட்டால் தனது இராஜ்யத்தை யிழந்து, பின்னும் அதனைத் தன் வசம் மீட்கப் பன்முறை முயன்றும் கூடாமை கண்டு, அஞ்சாநெஞ்சு படைத்தோனாய்த் தைரியத்தைக் கைவிடாது முயன்றதனாலன்றே அவன் தான் இழந்த ராஜ்யத்தை மீண்டும் மீட்கலாயினன்!

ஆகாயத்தினின்றும் வருஷிக்கும் சரமாரியைப் போன்று ஓயாமல், கேட்டவர் உளங் களிக்க இனிய நடையில் பிரசங்கம் செய்வதில் அவதாரப் புருஷரான ''டிமாஸ்தனிஸ்'' என்றமேனுட்டுப் பெருமான் தமது இடைவிடா முயற்சியினாலன்றே தம் திக்கு வாயைத் தீர்த்துக்கொண்டனர்! 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்னும் மூதுரை இவர்பால் நிதரிசனமாக இருப்பது மனத்தில் குறிக்கத் தக்கதே.

''நிக்கோலாஸ் பெண்டர்சன்'' என்பவர், தாம் பிறந்த மறுவயதில், அம்மையால் தம்மிரு கண்களையும் இழந்தாரேனும், தம்முடைய தைரியத்தாலும், இடைவிடா முயற்சியாலும், ஊக்கத்தாலும், க்ரீக், லத்தீன் முதலிய பாஷைகளில் வல்லுநராயினர். அங்ஙனமே, ''கலிலியோ'' என்றோர் மற்றைய மேனாட்டுப் பெருமான், தாம் இம்மண்ணுலகை நீத்துப் பொன்னுலகையடைவதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னர், ஓர் இரவில், கடினகற்களையும் உறைந்து போம்படி செய்யும் ஜில்லென்ற குளிர்காற்றில் அதிக நேரம் ஆகாயத்திலுண்டாகும் விசுங்களை நோக்கியதால் தம்முடைய கண்பார்வையை யிழந்தாரேனும் தாம் எடுத்துக்கொண்ட தொழிலைக் கைவிடாது, அதனை இனிது முடித்தே உயிர் துறந்தார். பலஹீனமான தேகத்தோடு பிறந்து தமது மனோதைரியத்தாலும் விடாமுயற்சியாலும் மிக்க பலசாலிகள் புரியும் வேலைகளைச் செய்து என்றுமழியாக் கீர்த்தியைப் பெற்று இவ்வுலகில் ஜீவித்திருந்தவர்கள் இன்னும் பலர்.

அரிய இராகங்களால் நம் காதுகளை இக்காலத்தில் இனிப்பாக்கும் ''கிராமோபோன்'' என்னும் வாத்தியக் கருவியை நிருமித்த ''எடிசன்'' என்பவர் பிறவிச் செவிடரும் பலஹீனருமாயினபோதிலும், அவர் பெரிய மனோபலமுள்ளவர் என்னலாம். நூறு வருஷங்களில் செய்யவேண்டிய வேலைகளைத் தம் வாழ்நாளில் பாதியிலேயே செய்திருக்கின்றார். ஆகவே, அவர் இருநூறு வருஷங்கள் இந்நில வுலகில் ஜீவித்திருந்தாரென்று ஏன் சொல்லக் கூடாது! தமது 47-ஆம் வயதில் அவர் தமது வயதைப் பற்றிப் பின் வருமாறு கூறியிருக்கின்றார் —

''ஒரு கூலியாள் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்கின்றான். யான் இருபத்தைாரு வருடங்களாக நாளொன்றுக்குப் பத்தொன்பது மணி வீதம் வேலை செய்து வருகின்றேன். ஆதலின் தற்போது எனக்கு 82 வயது ஆகின்றது; தலை நரைத்து விட்டது. சீக்கிரத்தில் எனக்கு 100 வயதாகும்.''

இவ்விதமே, நாம் செய்திருக்கும் வேலையை நோக்கி நம் முடைய ஆயுளை அளவிடுவதே சரியான ஆயுள் பிரமாணம். பல இடையூறுகளையும் பொறுத்துத் தம்முடைய செய்கைகளால் 100 வயது ஜீவித்தோர்களே பூர்ணயுள் அடைந்தோராவர். மற்று, இந்நில வுலகில் தங்கி யிருப்பதை மாத்திரங்கொண்டு நம் ஆயுளை அளவிடுவோமாயின் நம்மைவிட கேவலமான அசேதன பொருள்களாய குட்டிச் சுவர்களும் பெரிய மரங்களுமே நீண்ட வயதை அடைந்தவை.

ஆதலால், இவற்றை யெல்லாம் அறிந்தொழுக நமக்கு அவகாசமில்லை யெனினும், இடையூறுகளைச் சற்றேனும் கவனியாது, தொடுத்த காரியத்தை முடித்து நின்று என்றுமழியா நற் பெயரை யடைய முயல்வோமாக.

S. V. VIVEKANANDA.

ELEMENTARY SCIENCE

தண்ணீர்

Porosity of water — தண்ணீரில் துவாரம் பிருத்தல்

வேண்டிய உபகரணங்கள் — சர்க்கரை, உப்பு, கல், சாக்பீஸ், ஒரே அளவுள்ள வாயகலமுள்ள சீசாக்கள் நான்கு, ஒரு தொட்டியில் தண்ணீர்.

உபாத்தியாயர் — (பிள்ளைகளைப் பார்த்து) இதோ இம் மேஜையின்மேல் வைத்திருப்பவை என்ன?

பிள்ளைகள் — நான்கு சீசாக்கள், உப்பு, சர்க்கரை, கல், சாக்பீஸ் இவைகள் இருக்கின்றன.

உபாத்தியாயர் — (சீசாக்களில் நிரம்பத் தண்ணீரை ஊற்றி) நான் இப்பொழுது என்ன செய்தேன்?

பிள்ளைகள் — சீசாக்களில் முழுதும் தண்ணீரை ஊற்றினீர்கள்.

உபாத்தியாயர் — பிள்ளைகளே! கவனமாய்ப் பாருங்கள் (என்று சொல்லி ஒரு சீசாவில் கல்லையும் மற்றொன்றில் சாக்

பீஸையும் மெதுவாய்ப் போட்டார்.) பிள்ளைகளே! இப்பொழுது என்ன பார்த்தீர்கள்?

பிள்ளைகள் — கல்லும் சாக்பீஸும் சீசாக்களின் அடியில் போனதையும் தண்ணீர் மேலெழும்பி வழிந்ததையும் பார்த்தோம்.

உபாத்தியாயர் — (மற்றைய இரண்டு சீசாக்களிலும் ஒன்றில் சர்க்கரையும் மற்றொன்றில் உப்பையும் போட்டு) இப்பொழுது என்ன கவனித்தீர்கள்?

பிள்ளைகள் — சர்க்கரையும் உப்பும் அடியில் போவதுபோலிருந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் கண்ணுக்குத் தெரியாமல் கரைந்துவிட்டன. ஆனால் ஜலம் முன்பு சீசாவிலிருந்த அளவேயிருக்கிறது.

உபாத்தியாயர் — முன்னிரண்டு சீசாக்களிலுள்ள தண்ணீர் வழிந்ததற்கும் இவ்விரண்டிலு முள்ள தண்ணீர் வழியாததற்கும் காரணமென்ன?

பிள்ளைகள் — சர்க்கரையும், உப்பும், தண்ணீரில் கரைந்து போய்விட்டன. ஆகையால்தான் தண்ணீர் வழியவில்லை. ஆனால் கல்லோ தண்ணீரில் கரையவில்லை; ஆகையால் கல்லும் சாக்பீஸும் அடியில் போனவுடன் தண்ணீர் வழிந்துவிட்டது.

உபாத்தியாயர் — இன்னும் கொஞ்சம் கொஞ்சமாய் சர்க்கரை போட்டுக் கொண்டே வந்தால் சர்க்கரை கரைந்து தண்ணீர் வழியாமலிருக்குமா?

பிள்ளைகள் — ஆம், அப்படியே கரைந்து வழியாமலே யிருக்கும்.

உபாத்தியாயர் — சரி, இப்பொழுது பார்ப்போம் (என்று சொல்லிக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சர்க்கரையை சேர்த்துக் கொண்டே வந்தார்.) பின்பு சற்றுநேரம் சென்று சர்க்கரையை சேர்த்துக்கொண்டே வந்ததினால் தண்ணீர் சீசாவிலிருந்து வழிந்தது. சர்க்கரையும் கொஞ்சம் சீசாவின் அடியில் தங்கிவிட்டது. இதைப் பார்த்தவுடன் பிள்ளைகள் அதிசயம் மேலிட்டு உபாத்தியாயரைப் பார்த்து, "ஸார் (Sir) ஏன்! சர்க்கரை கரையாமல் இருக்கிறது? தண்ணீர் வழிகிறது?

உபாத்தியாயர் — சர்க்கரையினுடையவும் உப்பினுடையவும் அணுக்களின் சேர்க்கை (Cohesion of Molecules) மிகவும் தளர்.

ச்சி (Loose) யாயும் இலேசாயும் (Light) இருப்பதினால் தண்ணீரிலுள்ள சிறிய துவாரங்களில் தண்ணீர் அவைகளை அடக்கி வைத்துக்கொள்ளும் சக்தியை உடைத்தாக இருக்கிறது. முதலில் போட்ட சர்க்கரை தண்ணீரில் உள்ள துவாரங்களில் ஆங்காங்கு போய் சேர்ந்துவிட்டதினாலும் பின்பு போட்ட சர்க்கரைக்கு தங்குவதற்கு இடமில்லாததினாலும் சர்க்கரை அடியில் தங்கித் தண்ணீரை மேலெழும்பி வழியச் செய்தது. சர்க்கரையைப் போலவே உப்பையும் செய்து காண்பித்து அதற்கும் இதே காரணம் என்று விளக்கிக் காண்பித்தார். ஆனால் சுல்லிலும், சாக்பீஸிலும் உள்ள அணுக்களின் சேர்க்கை (Cohesion of Molecules) மிகவும் இருக்கமாயும் (Tight or close) பளுவாயும் (Heavy) இருப்பதினால் தண்ணீரிலுள்ள துவாரங்களுக்கு அவைகளை அடக்கி வைத்துக் கொள்ளும் தன்மை இல்லாததினால், கல்லும் சாக்பீஸும் சீசாவின் அடியில் போய் தண்ணீரை வழியச் செய்தன. மேலே செய்த நிரூபணத்தினால் தண்ணீரில் துவார மிருக்கிற தென்பது நிதர்சனமாக உங்களுக்குத் தெரியவரும்.

பிள்ளைகள் செய்யவேண்டிய அப்பியாசம்

Experiment — பரீக்ஷை

ஒரு சீசாவை எடுத்து அதில் நிறையத் தண்ணீரை ஊற்று. பின்பு கொஞ்சம் சர்க்கரையைப் போடு.

இன்னும் கொஞ்சம் கொஞ்சமாய் சர்க்கரையைப் போட்டுக் கொண்டேயிரு.

Observation — கவனிப்பு

சர்க்கரை சீசாவின் அடியில் போவது போலிருந்து பிறகு கண்ணுக்குத் தெரியாமல் போய்விட்டது.

சற்றுநேரம் கழித்துச் சர்க்கரையானது கரையாமல் அடியில் தங்கித் தண்ணீரை வழியச் செய்தது.

Inference — முடிவு

சர்க்கரை தண்ணீரில் கரைந்து விட்டது. அதாவது, சர்க்கரையினுடைய அணுக்களை தண்ணிடத்தில் உள்ள சிறிய துவாரங்களில் தண்ணீர் அடக்கிக் கொண்டது.

ஜலத்தில் உள்ள சிறிய துவாரங்களில் முன்னமே சர்க்கரை போய் அடைந்து விட்டதினால் பின்பு போட்ட சர்க்கரைக்கு தங்க இடமில்லாமல் தண்ணீரை வழியச் செய்து இடத்தை அடைந்தது.

•

LIFE STORY OF A PET BIRD

அருமையாய் வளர்ந்த அன்பன் சரித்திரம்

1914வது ஜனவரிமீ 18உ எக்ஸ்கர்ஷனுக்காக (வெளியே உள்ள விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டியதற்காக) திருவிடைமருதூர் போகும் 3 - நம்பர் சாலையில் போய்க்கொண்டிருந்தோம். சுமார் $\frac{1}{2}$ பர்லாங்தூரம் எங்கள் கண்ணில்தென்பட்டவைகளை எங்கள் புத்தகத்தில் பதிவு செய்து அதன் உபயோகத்தை எங்களுடன் வந்த எங்கள் உபாத்தியாயரின் மூலமாய் கேட்டுப் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு போகும்பொழுது சாலையின் ஓரத்தில் இருந்த ஒரு பாழடைந்த கிணற்றிலிருந்து ஒரு பறவை அநேக வர்ணங்களுடன் வெகு வேகமாய் கீச் கீச் என்று கத்திக்கொண்டே பறந்து வெளியே சென்றது. பலவித வர்ணங்கள் எங்கள் கண்ணில் பட்டதும் எங்களுக்கு அதை உற்றுப் பார்க்க முடியாமல் போனதைப்பற்றி விசனமடைந்து அதைப் பார்க்க வேண்டும் என்னும் ஆவலுடன் அக்கிணற்றண்டைசென்று பார்த்தோம். அக்கிணற்றில் சுமார் 3, $3\frac{1}{2}$ அடி ஆழத்தில் ஒரு பொந்தும் அப்பொந்தின் மேல்புறமெல்லாம் எச்சமிட்டும் இருந்தன. அதனால் அந்தப் பொந்திலிருந்துதான் அந்தப் பறவை பறந்து போய் இருக்கவேண்டும் என்று எண்ணி இரண்டு ஏணிகளை ஒன்றன்மேல் ஒன்றாய் சேர்த்துக் கட்டி அக்கிணற்றில் விட்டு அதன் வழியாய் இறங்கினோம். இறங்கும்பொழுது எங்கள் உபாத்தியாயரவர்களால் போதிக்கப் பட்டதும், மகா-ா-ாஸ்ரீ, நமச்சிவாய முதலியாரவர்களால் இயற்றப்பட்ட நான்காம் பாட புத்தகத்தி லுள்ளதுமான "பறவை பிடித்தவர்கள் பட்டபாடு" என்னும் பாடம் ஞாபகத்தில் வர, நமக்கும் அக்கதிவாய்க்குமோ என்னும் ஒருவித பயம் எங்களுக்கு உண்-

டாயிற்று. இருந்தபோதிலும் எங்கள் உபாத்தியாயர் பறவையின் இயற்கை குணங்களைப்பற்றியும் அதன் தேக அமைப்பைக் கடவுள் சிருஷ்டித்திருக்கும் மாதிரியைப்பற்றியும் போதித்து இருந்ததனால் அதை நேரில் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்னும் பேரவா வானது அதை நாடவொட்டாமல் தடுத்தது. பிறகு இறங்கி அப் பொந்தில் கையைவிட்டுப் பார்த்தோம். அது அதிக உஷ்ணமா-யும் கொஞ்சம் வைக்கோல், மயிர், மட்டை, நார் முதலியவை கொஞ்சம் அமைந்ததாயும் இருந்தது. அதில் மூன்று குஞ்சுகள் இருந்தன. அதை வெளியில் எடுத்துப் பார்த்தோம். அவைகளின் அலகு கொஞ்சம் மங்கின சிவப்பு நிறம்; அதன் தேகமெல்லாம் நீல நிறம்; அவையன்றி வேறு பல நிறங்களும் கலந்திருந்தன. ஆனால் அவைகள் அவ்வளவு நன்றாய் தெரியவில்லை. அவைகளில் இரண்டு குஞ்சுகளுக்கு மாத்திரமே கொஞ்சம் இறகு முளைத்து இருந்தது. மற்றொன்றுக்கு இறகு முளைக்கவில்லை. ஆகையால் அது எல்லாவற்றிற்கும் சிறியதாய் இருக்கவேண்டும். அதன் தேகமெல்லாம் முன்போல நீல நிறமாய் இருந்தது. அப்பொழுது அவைகள் தாமாகவே இரை தின்ன சக்தியற்றிருந்ததனால் அவை களை நான்குநாள் கழித்துப் பார்க்கலாம் என நினைத்து அப் பொந்திலேயே விட்டு வந்தோம். பிறகு நான்கு நாள் கழித்து நாங்களும் எங்கள் உபாத்தியாயருமாகச் சென்று பார்க்கையில் ஒன்று அக்கிணற்றில்விழுந்து இறந்து கிடந்தது. எங்களுக்கு வெகு பரிதாபமாய் இருந்தது. அக்கிணற்றில் அந்தப் பொந்தில் ஒன்று மாத்திரமே இருந்தது. அதாவது (அன்று இறகு முளைக்காமல் எல்லா வற்றிற்கும் சிறியதாய் இருந்த குஞ்சு) அது இப்-பொழுது கொஞ்சம் இறகு முளைத்து கொஞ்ச தூரம் தத்தித் தத்திப் பறந்து செல்லக்கூடியதாயும் தானுகவே இரை தின்னச் சக்தி யுடையதாயும் இருந்தது. மற்றொன்று பறந்துதான் சென்-றிருக்கவேண்டும். இதை விட்டுவர மனமில்லாமல் எங்கள் பாட-சாலைக்கு எடுத்து வந்து, ஒரு சிறிய கூடு கட்டி, அதில் அதை வைத்து அதற்கு தினம் தினம் சிறிய மச்சங்களும் வேறு பல ஆகாரங்களும் கொடுத்து வந்தோம். வர வர அநேக வர்-ணங்களுடையதாய் இறக்கைகள் பெருத்துப் பெரிய பறவையின் அளவிற்கு வளர்ந்து வந்தது. அது நாங்கள் பாடசாலைக்குள் வந்தவுடன் தன் தலையை ஆட்டி இரக்கைகளை அடித்துக் கொள்வதை நோக்கின் எங்களுக்கு வந்தனம் சொல்லுவது

போலும்; 'நீ கெட்டிக்காரப் பையன், தினம் தினம் பாடசாலைக்கு வருகிறாய்' என்று சொல்வது போலும் தோன்றும். நாங்களும் காலை ஆகாரத்திற்குக் கொண்டுவந்த பழங்களைக் கொடுப்போம். அது அதை அருந்தித் தன் இறக்கைகளை அடித்துக்கொண்டு எங்கள் உபாத்தியாயர்களின் மேஜைகள் மேலும் எங்கள் தோள்களின் மேலும் உட்கார்ந்து தன் தலையை ஆட்டும். அது எங்களுக்குச் சோம்பலில்லாமலும் காலத்தை வீண்போக்காமலும் படியுங்கள் படியுங்கள் என்று சொல்வதாகத் தோன்றும். அது எங்களிடத்தில் நன்றாய்ப் பழகிப் பாடசாலையை விட்டு வெளியே போகாமல் இருந்ததனால் நாங்கள் அதை வெளியே விட்டு வைப்பது வழக்கம்.

எங்கள் அருமையான இந்தப் பறவை 1914வது ஏப்பிரல்மீ 14உ சாயங்காலம் சந்தோஷமாய் சிறகடித்துத் தினம் போல் இருந்தது. திடீரென்று எங்கள் தலைமை உபாத்தியாயரின் மேஜை மேல் போய் உட்கார்ந்து, தலையை அசைத்துச் சிறகடித்து, வெகு வேகமாய் கூட்டில் வந்து படித்துத் தன் உயிரை இழந்தது. அது எங்கள் தலைமை உபாத்தியாயரிடம் போய் வந்ததாவது 'எனக்கு இறக்கும் தருணம் சமீபித்து விட்டது, போய் வருகிறேன், இனி என்னைக் காண்பதரிது, இவ்வளவு காலம் இரை போட்டுக் காப்-பாற்றிய தங்களுக்கு அநேக வந்தனம் புரிகிறேன்' என்று சொன் னதுபோல் தோன்றியது. அந்தப் பறவை திடீரென்று இறந்ததின் காரணம் யாதோ புலப்படவில்லை. அதன் ஞாபகார்த்தம் அதன் உடலைப் பல பாகமாய் பிரித்துப் பதம்செய்து எங்கள் மியூசியத்தில் வைத்து இருக்கிறோம். நாங்கள் அதை உயிருடன் பார்த்தது கொஞ்ச காலமானாலும் இனி அதை நாங்களும் எங்களுக்குப் பின் வரும் மாணவர்களும் பார்த்துக்கொண் டிருக்கக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. எங்கள் அருமையான பாடசாலைத்தோழன் இறந்-ததைப்பற்றி மிக விசனித்தோம்.

கும்பகோணம் ரேஞ்சு மகா-ரா-ரா-ஸ்ரீ சப் அசிஸ்டென்ட்டு இன்ஸ்பெக்ட்டர் அவர்களின் உத்திரவுப்படி இதை இப் பத்திரி-கையில் வெளியிடலானேம்.

மாணவர்கள்,
எலிமென்ட்டெரி ஸ்கூல், ஆடுதுறை.

அப் பறவையின் பெயர் இன்னதென்று குறித்திருந்தால் நலம். — பத்திராதிபர்.

BATHING

நீராடல்

ஸ்நானம் அவசியமானது

1. நீராடல் என்பது நீரில் விளையாடுதல் என்றும், ஸ்நானஞ் செய்தல் என்றும் அர்த்தமாகும். ஸ்நானம் என்பது 'சுசி' என்று பொருள்படும் ஸம்ஸ்கிருத பதுதியிலிருந்து பிறந்த சொல். தலை உள்பட தேகம் முழுவதையும் நீரினால் கழுவிச் சுத்தப்படுத்துவது நீராடல் அல்லது ஸ்நானம் ஆகும். தலையை நனைக்காமல் உடம்பை மாத்திரம் கழுவுவது குளித்தல் ஆகும். குளித்தல் என்னும் பதத்திற்கு மூழ்கல் என்னும் அர்த்தமும் உண்டு. ஆனால், சாதாரண வழக்கில் குளித்தல் என்பது (தலையைத் தவிர) உடம்பு குளித்தல் என்றே உபயோகப்படுகிறது.

2. நீராடுவது தேகத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளும் பொருட்டு ஆகும். நீரினால் நன்றாய்க் கழுவினாலல்லாமல் சுத்தம் ஏற்படாது. ஒவ்வொருவரும் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியம். உலகத்திலுள்ள ஜனங்களுள் சுத்தத்தின் பொருட்டு தேகத்தை அதிகமாய்க் கழுவிக்கொள்ளுகிறவர்கள் இந்தியாவிலுள்ள ஆரியர்களே. மற்றவர்களும் உடம்பைக் கழுவிக்கொள்ளுகிறார்கள் என்றாலும், அவர்கள் ஆரியர்களைப் போல அடிக்கடி கழுவிக் கொள்ளுவதில்லை; அப்படிக் கழுவிக் கொள்வதற்கான அனுகூலங்களும் அவர்களுக்கு இல்லை. ஒரு நாளைக்கு ஒரு தரமாவது உடம்பைக் கழுவிக்கொள்ள வேண்டுமென்னும் அக்கரையும் கட்டாயமும் ஆரியர்களுக்கு இருப்பது போல மற்றவர்களுக்கு இல்லையென்று சொல்லலாம்.

3. உடம்பைக் கழுவிச் சுசியாக வைத்துக்கொள்ளுவது ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது நீராட வேண்டியது எல்லாருக்கும் அவசியமாகும்; ஒரு நாளையில், அதிகமாய் ஸ்நானஞ் செய்தால், மூன்று முறை செய்யலாம்; அதற்கதிமாகச் செய்யக் கூடாது. மூன்று முறை ஸ்நானஞ் செய்வது என்றால் காலையில் ஒரு முறை, கடும்பகலில் ஒரு முறை, மாலையில் ஒரு முறை என்று அர்த்தம்.

4. முற்காலத்து ஆரிய ரிஷிகளுடைய அறிவுப் பெருக்கமும், ஆரோக்கியமும், ஆயுட்பெருக்கமும், ஆள்வலியும் தினந்தோறும் மூன்றுமுறை தவறாமல் ஸ்நானஞ் செய்து வந்ததினாலே அவர்களுக்கு ஏற்பட்டன வென்று திடமாகச் சொல்லலாம். ஸ்நானத்தினால் சுத்தம் உண்டாயிற்று; சுத்தத்தினால் சுசி உண்டாயிற்று; சுசியினால் ஆரோக்கியம் உண்டாயிற்று; ஆரோக்கியத்தினால் மனவமைதியும் சரீர அமைதியும் உண்டாயின; அமைதியினால் புத்தி தெளிவாய் விளங்கியது; புத்தித் தெளிவினால் தெய்விகம் விளங்கியது.

5. நாட்டுப்புறங்களில் உள்ள வைதிகர்கள் இன்றைக்கும் சிறந்த ஆரோக்கியமும் பலமும் பொருந்தியிருப்பதைக் காண்கிறோம். சாதாரணமாய் அவர்கள் நோயுற்று வருந்துவதில்லை; ஆசுபத்திரிகளைத் தேடி அலைவதில்லை; நடப்பதற்குச் சோம்புவதில்லை; கால் கூசாமல் நெடுந்தூரம் அலுப்பும் களைப்பும் இன்றி நடக்கிறார்கள்; கை கூசாமல் வேஷ்டிகளைத் துவைக்கிறார்கள், மரக்கிளை முதலியவைகளை வெட்டுகிறார்கள். கையுங்காலும் அவர்களுக்கு வசமாயிருக்கின்றன; தேகம் அவர்கள் சொல்லுகிறபடி கேட்கின்றது. இவைகளுக்கெல்லாம் காரணம் அவர்கள் அதிகாலையில் தினந்தோறும் தவறாமல் தண்ணீரில் ஸ்நானஞ் செய்து வருவதேயாம்.

6. மலையாளத்தார் நாள்தோறும் இரண்டு முறையாவது (காலையிலும் மாலையிலும்) ஸ்நானஞ் செய்கிறார்கள். அதுவல்லாமல், விவகாரத்தின் நிமித்தமாய் வெளியேபோய்ப் பற்பல மனிதர்களையும் மிருகங்களையும் வஸ்துக்களையும் அணுகுவதனாலும் தொடுவதனாலும் தங்களுடைய சுசி குறைவுபடும் பொழுதெல்லாம் ஸ்நானஞ் செய்கிறார்கள். ஜப்பானியர் கோடைக் காலத்தில் ஒவ்வொரு நாளும் மூன்று முறையும், மாரிக்காலத்தில் இரண்டு முறையும் ஸ்நானஞ் செய்கிறார்கள்.

7 நமது வீட்டிலுள்ள அழுக்கு முதலியவைகளை அடித்துக் கொண்டு போவதற்கு ஒரே நீரோடி. (சாக்கடை, ஜலதாரை) இருக்கின்றது. வீட்டைச்சுத்தமாயும் ஆரோக்கியமாயும் வைத்துக் கொள்ள வேண்டுமானால், வீட்டிலுள்ள குப்பைகளையும் அழுக்குகளையும் துடைப்பத்தினால் ஒருநாளுக்குப் பலதடவை பெருக்கித் தள்ளி, நீரோடியை அடிக்கடி நன்றாய்க் கழுவிவைத்துக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா? நாள்தோறும் பலதடவை கழுவாவிட்டாலும், அன்றன்றைக்குச் சேரும் அழுக்குகளை ஒரு தடவையாவது அகற்றி நீரோடியைக் கழுவாவிட்டால், சுத்தம் ஏற்படுமா? வீட்டிலுள்ள அழுக்குகளையும் அசுத்தங்களையும் ஒரே நீரோடியின் வாயிலாகக் கழுவித் தள்ளுவது சாத்தியமாகும்.

8 ஆனால், நம்முடைய தேகத்திலுள்ள அழுக்குக்களையும் அசுத்தங்களையும் வெளிப்படுத்துவதற்கு ஒரு நீரோடி போதாதாதலால், லக்ஷக்கணக்கான ரோமத் துவாரங்கள் நமது தோலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துவாரங்களின் வழியாய் தேகத்திலுள்ள மலங்கள் வெளிப்படுகின்றன. வீட்டிலுள்ள நீரோடியை ஒரு நாளுக்கு ஒரு தடவையாவது கழுவிச் சுத்தப்படுத்தினால்லாமல், அந்த வீட்டில் சௌக்கியம் ஊராது என்று கண்டோம். தேகத்திலுள்ள மலங்களை வெளிப்படுத்துவதற்கு லக்ஷக்கணக்கான நீரோடிகள் இருக்கின்றன வென்று தெரிந்த பிறகு, அவைகளைத் தினந்தோறும் ஒரு தடவை யாவது நன்றாய்க் கழுவவேண்டியது அவசிய மென்று தோன்றவில்லையா ?

9. ரோமத் துவாரங்களின் வழியாய் வேர்வை வெளிப்படுகின்றது. அந்த வேர்வை வெளியிலுள்ள வாயுவுடன் சம்பந்தப்படும்போது ஆவியாய்ப்பறந்துபோகின்றது. தேகத்திற்குள்ளிருந்து வெளிப்பட்ட வேர்வையில் நீர்த்தன்மையுள்ள பாகம் ஆவியாய்ப் பறந்துபோக, கெட்டியாய் உள்ள மலங்கள் அந்த வேர்வையில் கரைந்து தோலின்மீது ஒட்டிக்கொண்டிருக்கும். இந்த ரோமத் துவாரங்கள் அல்லாமல், தேகத்திற்குள் லக்ஷக்கணக்கான ஊற்றுப்பைகள் (Glands) இருக்கின்றன. அவைகளிலிருந்து எண்ணெய் வெளிப்படுகின்றது. அந்த எண்ணெயினால் நமது தோல் மிருதுப்பட்டுக்கொண்டிருக்கிறது.

10. நமது கண்ணுக்குத் தெரியாமல், நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆகாயமண்டலத்தில் பிரிந்து கொண்டிருக்கிற தும்புகளும் தூசிகளும் நமது தோலின்மீது படியும்போது, அவை தொட்டால் ஒட்டிக்கொள்ளுந் தன்மையுள்ள அழுக்குப்படை ஆகின்றன. மண்ணைக் கரைத்து மெழுகியதுபோல், அவை நமக்கு ஓர் அழுக்கு அங்கியாகி, மயிர்க் கண்களை (ரோமத் துவாரங்களை) அடைத்து விடுகின்றன.

11. மேற் சொல்லிய இரண்டு விதமான மலத்தொகுதிகளையும் அகற்றி, மயிர்க் கண்களைத் திறந்து விடவேண்டியது அவசியமாகும். அப்படிச் செய்யாவிட்டால் வேர்வை தாராளமாக வெளிப்படாது. வேர்வை வெளிப்படாவிட்டால், ரத்தத்திலுள்ள கழிகடை வஸ்துக்களை எளிதில் அகற்ற முடியாது. அந்தக் கழிகடை வஸ்துக்கள் நஞ்சுத் தன்மை உள்ளவை.

12. அழுக்கு, ரத்தமலம் முதலிய நஞ்சுகளை நீக்கி ஆரோக்கியம் பெறும் பொருட்டு, தோலை நன்றாய்த் தேய்த்துக் கழுவிச் சுத்தமாக ஸ்நானஞ் செய்யவேண்டும். ஆதலால், தினந்தோறும் ஸ்நானஞ் செய்யவேண்டியது முக்கியமான கடமையாகும்.

நீராடு முறை

13. மற்றக் காரியங்களுக் கெல்லாம் முறை ஒன்று ஏற்பட்டிருப்பதுபோல, ஸ்நானத்திற்கும் முறை உண்டு. எல்லாரும் ஸ்நானஞ் செய்தோம் என்று சொல்லுவார்கள். ஆனாலும், உண்மையாக ஸ்நானஞ் செய்தவர்கள் அவர்களில் சிலரே இருப்பார்கள். பொதுவாகச் சொல்லுமிடத்து, ஸ்நானம் என்பது ஆரோக்கிய ஸ்நானம் என்றும், ஆசாரஸ்நானம் என்றும் இருவகைப்படும்.

14. ஆரோக்கிய ஸ்நான மென்பது உடம்பை நன்றாய்த் தேய்த்து மலங்கள் நீங்கக் கழுவி ஸ்நானஞ் செய்தலாம். அதுவே உண்மையான ஸ்நானம். ஆசார ஸ்நானமென்பது நீரில் மூழ்கி எழுந்திருப்பது, அல்லது அவசரமாக இரண்டு சொம்பு நீரை உடம்பின் மீது வார்த்துக் கொள்வது இது ஸ்நானம் ஆகாது.

15. நன்றாய்த் தேய்த்துக் கொள்வதெனின், தாராளமாய்க் கையாடுவதற்கு அனுகூலமாயிருக்கும் இடங்களை மாத்திரம் தேய்த்துக் கொள்வது போதாது; தேகத்தில் ஒவ்வொரு மூலையையும், முடிச்சையும், சந்தையும், பொந்தையும், கீலையும், சதைமடிப்பையும், மூக்குத்துவாரங்களையும், காதுகளையும், கைக்குழிகளையும், கால்களையும், கைவிரல்களையும், கால்விரல்களையும், நகக் கண்களையும், மற்றுமுள்ள இடுக்குகளையும் சுத்தமாய்த் தேய்த்துக் கழுவவேண்டும்.

16. உடம்பை நன்றாய்த் தேய்த்துக் கொள்ளாமலும் அசுத்தங்களை நீக்கவேண்டு மென்னும் எண்ணமில்லாமலும், தலைமயிர் முடிச்சும் இடுப்பிலுள்ள வேஷ்டியின் மடிப்புகளுங்கூட நனையாமலும் ஸ்நானஞ் செய்வது காகஸ்நானம் எனப்படும். இதனால் நன்மையில்லை, தீமையுண்டு.

17. சுத்தத்தின் பொருட்டு ஸ்நானஞ் செய்யத் தலைப்பட்டு அழுக்குகளை நீக்கிக்கொண்ட பிறகு, சுத்தத்தைக் கவனிக்காமல் விவகரிப்பது கஜஸ்நானம் எனப்படும். ஸ்நானஞ் செய்த பிறகு சுகியான வஸ்திரங்களை உடுத்து, அழுக்கும் அசுத்தமும் அணுகுவதற்கு இடங்கொடாமல் 'மடி'யாய் இருக்கவேண்டும். இதுவே நல்ல 'ஆசாரம்.' ஸ்நானத்திற்குப் பிறகு அழுக்கு ஆடைகளைத் தரிப்பதனாலும், அசுத்தமான காரியங்களைச் செய்வதனாலும், ஸ்நானஞ் செய்ததின் பிரயோசனம் இல்லாமற் போகின்றது.

18. நெடுநேரம் நீரோடுவது கூடாது. அதிக நேரம் நீரில் அமிழ்ந்திருந்தால், ஜலதோஷமும் தலைவலியும் உண்டாகும். ஸ்நானஞ் செய்கையில், முதன் முதலில் தலையை நனைத்துக் கொள்ளவேண்டும். நதிகளிலும் குளங்களிலும் ஸ்நானஞ் செய்வதானால்,

நீரில் இறங்கினவுடனே தலை மூழ்கிவிட்டுப் பிறகு உடம்பு தேய்த்துக்கொள்ளவேண்டும்.

19. அந்திநேரத்தில் இருள் மூடிய பிறகு ஸ்நானஞ் செய்வது நன்றன்று. எப்படிப்பட்ட அவசரமான சந்தர்ப்பம் நேரிட்டாலும், இரவில் ஐந்து நாழிகைக்குப் பிறகு (8 மணிக்குப் பிறகு) ஸ்நானஞ் செய்யக்கூடாது. சாப்பாட்டுக்கு முன்னர் இரண்டு மணிக்குள்ளாகவும், பின்னர் இரண்டு மணி (ஐந்து நாழிகை)க் குள்ளாகவும் ஸ்நானஞ் செய்யக் கூடாது.

20. திறந்த வெளியில் ஸ்நானஞ் செய்வதைவிட, காற்றடக்கமான இடத்தில் ஸ்நானஞ் செய்வது நல்லது. அப்படி ஸ்நானஞ் செய்வதற்காக ஒவ்வொரு தேசத்தாரும் ஓர் இடத்தைத் தனியாகக் குறிப்பிட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்க ளென்பது அவரவர்களுடைய பாஷையில் ஸ்நானஞ்செய்யு மிடத்திற்கு ஒவ்வொரு பெயர் கொடுத்திருப்பதனாலே விளங்குகின்றது. தமிழர்கள் நீராட்டுத் தானம் என்றும், குளியறை என்றும், வெந்நீர் அறை என்றும் சொல்லுவார்கள்; மலையாளிகள் குளிப்புரை என்று சொல்லுவார்கள்.

21. ஸ்நானஞ் செய்வதனால் தேகம் குளிர்ச்சி யடைகின்றது. அந்தக் குளிர்ச்சி நீங்கித் தேகம் ஒருநிலைப்படுவதற்கு முன் அன்னம் அருந்தினால், அந்த அன்னம் சரியாகச் சீர்ணமாகாது. அது போலவே ஊண் உண்ட பிறகு ஸ்நானஞ் செய்தால், அதன் பயனாகிய குளிர்ச்சியினால் ஜீர்ணம் தடைபடும். ஸ்நானஞ் செய்த பிறகு ஐந்து நாழிகைக்குள் புசிப்பது தீமைபயக்கும்; சாப்பாட்டுக்குப் பிறகு ஐந்து நாழிகைக்குள் ஸ்நானஞ் செய்வது அபாயம் விளைக்கும். சாப்பாட்டுக்குப் பிறகு ஸ்நானஞ் செய்வது மிகக் கெட்டது என்பதாம்.

வெந்நீர் வேண்டாம்

22. வழக்கமாக வெந்நீரில் ஸ்நானஞ் செய்வது நன்றன்று; அது தீமைவிளைக்கும்; ரோமகூபங்களைத் தளர்த்தும்; சதையை மெதுவாக்கும்; சரீரவன்மையைக் குறைக்கும். வெந்நீரில் ஸ்நானஞ் செய்யும் பொழுதும், சூடான வெந்நீரை தலைக்கு வார்த்துக் கொள்ளக் கூடாது; தலைக்கு வார்க்கும் நீர் வெது வெதுப்பாய் இருந்தாற் போதும். உடம்புக்குச் சூடான வெந்நீரை வார்த்துக் கொள்ளலாம்.

23. வெந்நீரில் ஸ்நானஞ் செய்தபிறகு சிறிது நேரத்தில் குளிர்ச்சி யுண்டாகும்; தண்ணீரில் ஸ்நானஞ் செய்தபிறகு தேகத்தில் சூடு உண்டாகும். தண்ணீரின் குளிர்ச்சியினால்

தேகம் இறுகும்; தேகத்தின் தோல் குளிர் வெப்பம் முதலிய வைகளை எதிர்த்துத் தாங்கும்படியான ஸஹனசக்தி பெறும்.

24. தண்ணீரில் ஸ்நானஞ் செய்வதனால், சரீரத்திற்குள் இருக்கும் அவயவங்களும் கருவிகளும் உரம்பெற்றுத் தத்தம் வேலைகளை நன்றாய்ச் செய்யும்; ஜீர்ணசக்தி அதிகரிக்கும்.

எண்ணெய்க் குளி

25. தென்னிந்தியாவில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவது வழக்கமாயிருக்கின்றது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதனால் உடம்புக்குக் கொழுப்புப் பூசுகிறோம். இருபிறப்பாளர் செய்தயந்திரங்கள் முதலியவைகளுக்கு கொழுப்பு, எண்ணெய் முதலியவைகளை அப்போதைக்கப்போது பூசாவிட்டால், அவை எளிதில் வேலை செய்யா. தேகத்திலுள்ள யந்திரங்களும் யந்திரங்களின் கீல்களும் சுலபமாய் அசைந்து ஆடி வேலை செய்வதற்கு அனுகூலமாய் இருக்கும்பொருட்டு எண்ணெய் தேய்த்துக்கொள்ளுகிறோம்.

26. எண்ணெய் தேய்த்தக் கொண்டு தலை மூழ்குவது மங்கள ஸ்நானம் எனப்படும். எண்ணெய் தேய்த்துக் கொண்டால், வெந்நீரிலே ஸ்நானஞ் செய்வது உத்தமம். எண்ணெய் தேய்த்துக் கொண்ட உடம்பில் நல்ல சூடுள்ள வெந்நீரை வார்த்துக் கொள்வதனால் மிகுந்த ஆரோக்கியம் உண்டாகும். தேகத்திலுள்ள மலங்களெல்லாம் தாராளமாக வெளிப்படும். சீக்காயைப் போட்டு நன்றாகத் தேய்ப்பதனால், அந்த மலங்களும் எண்ணெய்ப் பசையும் முற்றும் அகன்றுபோம்; உடம்பு நன்றாய் வியர்க்கும்.

27. மேற்சொல்லிய மங்களஸ்நானம் மேற்றிசையார் செய்யும் ஆவிக்குளி (Steam-bath) என்பதற்குச் சமானமாகும்; இது ஆவிக்குளியைவிட எளிதாயும், ஆவிக்குளியினால் உண்டாகும் பயன்களைக் கொடுக்கத் தக்கதாயும் இருக்கின்றது. அவ்வளவு குணங்களுள்ள தாதலால், 'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்னும் பழமொழி ஏற்பட்டது.

28. கொழுப்பு இல்லாவிட்டால் தேகத்திலுள்ள யந்திரங்கள் சரியாய் வேலை செய்யாவென்று சொன்னோம். ஆனால், எல்லாத் தேசத்தாரும் நம்மைபோல எண்ணெய் தேய்த்துக் கொள்வதில்லை யென்பது உண்மையே. ஆயினும், அவரவரும் ஒவ்வொரு விதமாக தேகத்திற்குக் கொழுப்புத் தடவுகிறார்கள். உணவு முதலியவைகளில் கொழுப்பு மிகுந்த பதார்த்தங்களைச் சிலர் உட்கொள்ளுகிறார்கள்; சிலர் பாலை அதிகமாக உபயோகிக்கிறார்கள்; சிலர் வெண்ணெயை அதிகமாக உபயோகிக்கிறார்கள்; சிலர் நெய்யை அதிகமாக உபயோகிக்கிறார்கள்; நாம் உட்கொள்ளும் பதார்த்-

தங்களில் கொழுப்பு குறைவா யிருக்கிறதினால், உடம்பின் மேற்புறத்திலும் கொழுப்பை (எண்ணெயை)ப் பூசிக் கொள்ளுகிறோம். மலையாளத்தார் கொழுப்புள்ள பதார்த்தங்களை நம்மைவிடக் குறைவாக உட்கொள்வதனால் உடம்பின் மேற்புறத்தில் எண்ணெயை அதிகமாய் உபயோகிக்கிறார்கள். உட்புறமாகவாவது, மேற்புறமாகவாவது, எந்த விதத்திலும் தேகத்திற்குக் கொழுப்புப் பூசவேண்டியது அவசியமா யிருக்கின்றது.

29. மேற்சொல்லிய காரணத்தைத் தவிர, சில நாளைக்கு ஒரு முறை எண்ணெயைத் தேய்த்து ஸ்நானஞ் செய்வதனால் ஆரோக்கியம் அதிகப்படு மென்று (மேலே 26 ஆம் பகுதியில்) கூறியிருப்பதை மறக்கலாகாது.

30. எண்ணெய் தேய்த்துக் கொள்கையில் தலையைத் தட்டுவதும் கொட்டுவதும் அவசியமென்று சொல்லலாம். தானாகவே எண்ணெய் தேகத்துக்குள் வியாபித்து, அது செய்யவேண்டிய காரியங்களைச் செய்யும். எண்ணெய் அதிசீக்கிரமாக தேகத்தில் வியாபிக்கும். பரீக்ஷை பார்க்க வேண்டுமானால், தலையில் எண்ணெயை வைத்துக் கொண்டவுடனே, கால் கட்டைவிரலை ஒரு தாம்பாளத்துத் தண்ணீரில் வைத்தால், அதன் வழியாக எண்ணெய் நீரில் பாய்ந்து மிதப்பதைக் காணலாம். உடம்பின் மீது (தலையின் மீதனறு) சூடுமிகுந்த வெந்நீரை வார்த்துக் கொள்வதனாலும், வீட்டில் எண்ணெயை நன்றாய்த் தேய்ப்பதனாலும், நமக்கு வேண்டிய நன்மை உண்டாகும்.

31. ஆசாரக் குறைவான வேலைக்காரர்களைக் கொண்டும், ஆரோக்கிய குறைவானவர்களைக் கொண்டும், இழிஞர்களைக் கொண்டும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அதனால் நம்முடைய தேகத்துக்குத் தீமை உண்டு. அவர்களுக்குள்ள அனுரோக்கியம் நம்முடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கும்: அவர்களுக்குள்ள வியாதிகள் நம்மை எய்தும். அவர்களுக்குள்ள மனவெறுப்பும் சலிப்பும் நமது தேகத்துக்கு வாதை செய்யும். பிறரைக் கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டுமானால், உற்றாரைக் கொண்டும் அன்பு மிகுந்தவர்களைக் கொண்டும் தேய்த்துக் கொள்ளலாம். அன்பில்லாதவர்கள் நம்முடைய தேகத்தைத் தொடுவதற்குச் சிறிதும் இடங் கொடுக்கக்கூடாது. பிறரைக் கொண்டு தேய்த்துக் கொள்வதை விட, தானே தேய்த்துக் கொள்வது சிறந்தது. தன் கையே தனக்கு நல்லது.

32. பிராணிவர்க்கத்து எண்ணெய் என்றும், மூலவர்க்கத்து எண்ணெய் என்றும், தாதுவர்க்கத்து எண்ணெய் என்றும்

ண்ணெய் மூன்று வகைப்படும். இவைகளுள் பிராணிவர்க்கத்து ண்ணெயும் மூலவர்க்கத்து எண்ணெயும் கனமாகவும் கெட்டியாகவும் இருக்கும். ஆகையால், அவைகளை உபயோகிக்குமுன் காய்ச்சி இலேசாக்க வேண்டும். நல்லெண்ணெயைக் காய்ச்சித் தேய்த்துக் கொள்வதனால், அது மயிர்க் கண்களின் வழியாய் எளிதில் இறங்கும். அப்படிக் காய்ச்சுகையில், மருந்து மூலிகைகளையாவது அவற்றின் ரசத்தையாவது சேர்த்துக் காய்ச்சலாம்.

33. எண்ணெய் தேய்த்துத் தலை மூழ்கினவுடனே, அன்னம் புசிக்கவேண்டு மென்று சொல்லுவார்கள். சிலர் உடம்பைத் துணியால் துடைத்துக் கொள்கிற அளவு கூட அவகாசங் கொடாமல், உடம்பில் ஈரம் இருக்கையிலே, அன்னம் உண்ண அவசரப்படுகிறார்கள். இது தவறான கொள்கை யென்று தோன்றுகிறது. ஏனெனில், உடம்பில் எண்ணெயாவது ஈரமாவது இருக்கையிலும், உடம்பு குளிர்ந்து இருக்கையிலும் எதையும் புசிக்கக் கூடாது. எண்ணெய் தேய்த்துத் தலை மூழ்கியதனால் உண்டாகிய சோர்வும் குளிர்ச்சியும் நீங்கி, உடம்பு வழக்கம் போலச் சாமானிய உஷ்ணம் கொள்ளுகிறவரையில் எதையும் உண்ணுவது உசிதமாகாது.

34. ஆனால், மேற் சொல்லியபடி உடம்பு தளர்ந்து குளிர்ந்திருக்கும் சமயத்தில் உடம்புக்கு இயல்பான உஷ்ணத்தை உண்டாக்கும் பொருட்டுக் கொஞ்சம் மிளகும் உப்பும் சேர்த்து மெல்லுவது அந்த நிலைமைக்கு உற்ற காயம் (Tonic) என்று சொல்லலாம்.

நீராட்டுப் பயன்கள்

35 ஸ்நானஞ் செய்வதனால் பவித்திரமாகிறோம் (சுத்தமாகிறோம), ஆயுள் வளர்கின்றது, சிரமம் நீங்குகின்றது, மனக்கிலேசம் தொலைகின்றது, சரீரமலம் கழிகின்றது, தேகத்திற்கு பலமுண்டாகின்றது, மயிர் சுத்தமாய் வளர்கின்றது, தேகத்திற்குக் காந்தி அதிகரிக்கின்றது, முகத்தில் தேஜஸ் விளங்குகின்றது. ஆதலால், ஸ்நானம் மனிதருக்குப் பெரிய சாதனமாம்.

36. தலை மூழ்குவதனால் (சிரஸ்நானம் செய்வதனால்) கண் தெளிவாகின்றது. தாகம் தணிகின்றது, மதுபானத்தினால் உண்டாகும் வறட்சி நீங்குகின்றது; சரீரமலங்கள் களையப் பெறுகின்றன; உஷ்ணத்தினால் உண்டாகிய பீடைகளும், அரிப்பு முதலிய நோய்களும், சிரோரோகங்களும் (மண்டையிலுண்டாகும் ரோகங்களும்), பித்த சம்பந்தமான நோய்களும் தொலைகின்றன.

37. நெல்லிக்காய்ச்சாறு, பொன்னாங் கண்ணிச்சாறு முதலிய மூலிகை ரசங்களைச் சேர்த்துத் தலைக்காய்ச்சித் தேய்த்து

கொண்டு தலை மூழ்குவதனால் பித்தம், மேகச்சூடு முதலியன நீங்குவதல்லாமல், கண் குளிர்ந்து மந்தம் நீங்கித் தெளிவான பார்வை யுடையதாகும். கறுப்புஎள்ளினின்று எடுத்த எண்ணெயைத் தேய்த்து முழுகுவதனால், கண்ணுக்கு நன்மை யுண்டாகும், தேகத்திலுள்ள அதிகச் சூடு தணியும். ஸ்நானஞ் செய்யாதவனுடைய உடம்புமுழுதும் அதிகச் சூட்டினால் கொதித்துக்கொண் டிருக்கும்.

38. தலை மூழ்குவதனால் அப்படிப்பட்ட அதிகச் சூடு தணிந்து, தேகம் முழுதும் ஒருநிலையான சாமானிய உஷ்ணம் பொருந்திச் சுகமாய் இருக்கும். கண்நோய்களும், காதுநோய்களும், அதிசாரமும் ஸ்நானத்தினால் குணப்படும்; மகோதரம் (பெருவயிறு), பீனசங்கள், ஜீர்ணசக்திக் குறைவு என்னும் நோய்களும் தீரும்.

39. ஸ்நானத்தினால் தர்நாற்றம்போம், வாயுவுபத்திரவத்தினாலாவது, அயர்வினாலாவது அங்கங்கள் தோன்றும்கனம்குறையும், சொறி சிரங்கு முதலியன போம், அரிப்பு நீங்கும், மலம் எளிதில் கழியும், அரோசகமும் (உணவு ருசிக்காமை) மனத்திலுள்ள விசனமும்போம், மனத்திலும் தேகத்திலுமுள்ள அலுப்பு போம்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the 'Arya.'

3 OCT 1914
MADRAS.

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10. | 1914வது அக்டோபர்மீ | மாதம் 5

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் பிரபு — ஓர் உபாத்தியாயர்

Methods of Instruction (*contd.*)

போதனை முறை

(தொடர்ச்சி)

சிறு பிள்ளைகள் வியாசம் எழுதப் பழகுவதற்கு, மேஜை, நாற்காலி, கோதுமை, வெள்ளாடு, குதிரை முதலிய சாதாரணமான விஷயங்களே ஏற்றவை என்று உபாத்தியாயர்கள் எண்ணுகிறார்கள்; அது தவறு; இவைதாம் அவர்களுக்குக் கஷ்டம் தருகின்றன; அவர்கள் சந்தோஷமாகவும் சுலபமாகவும் எழுதக்கூடியவை தம்மைப்போல் உயிருள்ள மனிதர் மிருகங்கள் முதலியவற்றின் தன்மைகளையும் செயல்களையும் குறிக்கும் விஷயங்களே என்று டால்ஸ்ட்டாய் எண்ணுகிறார் என்பதைச் சென்ற

பத்திரிகையில் விளக்கினேம். அவர் அந்த அபிப்பிராயத்தை உதாரண பூர்வகமாக விளக்கிக்காட்டுகிறார். டால்ஸ்ட்டாய் நடத்திவந்த எஸ்நயா பாலியானே என்னும் கிராமபள்ளிக்கூடத்தில் பெட்கா (Fedka) என்னும் பத்துவயதுள்ள சிறுவன் ஒரு வேன் படித்து வந்தானும். அச் சிறுவன் கோதுமை என்னும் விஷயத்தைப் பற்றி எழுதிய வியாசம் ஒன்றையும், அவனே லோ (Toula) என்னும் இடத்துக்குப் போய்வந்த விஷயத்தைப்பற்றி எழுதிய வியாசம் ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

முதலாவது அச் சிறுவன் கோதுமையைப்பற்றி எழுதிய வியாசம் வருமாறு :

'விதை பூமிக்குள் இருந்து வெளியே (செடியாக) முளைக்கிறது. அது முதலில் பசுமை நிறமாக இருக்கிறது. ஆனல் அது சிறிது வளர்ச்சியடைந்ததும் கதிர் வாங்குகிறது. பின்பு பெண்கள் அதை அறுக்கிறார்கள். வேறொரு விதமான கோதுமைப் பயிரும் உண்டு. அது புல்லைப்போல் இருக்கும். அதை ஆடுமாடுகள் தின்கின்றன' என்பதாம்.

'கோதுமை' என்னும் விஷயத்தைப்பற்றி அவனுக்கு இவ்வளவுதான் எழுதத் தெரிந்தது. தான் எழுதியது குறைவென்றும் நன்றாக இல்லை என்றும் அவனே உணர்ந்து வருத்தமடைந்தானும், ஆனல் அதைத் திருத்தி இன்னம் அதிக விளக்கமாக எழுத அவனல் முடியவில்லை. 'லோ' என்பதைப்பற்றி அச் சிறுவனே பின்வருமாறு எழுதியிருந்தான்.

'நான் வெகு சிறு பையனாக இருந்தபோது, (அதாவது எனக்கு ஐந்துவயதில்), எல்லோரும் 'லோ'வுக்குப் போய்வந்ததைப்பற்றி அடிக்கடிப் பேசிக்கொள்வார்கள். ஆனல் அது இன்னதென்றே எனக்குத் தெரியாமலிருந்தது. ஆகையால் ஒருநாள் நான் அப்பாவைப் பார்த்து, 'அப்பா, நீங்கள் எந்த லோவுக்குப் போகிறீர்கள்? அது அழகாக இருக்குமோ?' என்று கேட்டேன். அப்பா, 'ஆமாம்' என்று சொன்னர். 'ஆனல் என்னை அங்கே அழைத்துக்கொண்டு போங்கள்; நான் அதைப் பார்க்க வேண்டும்' என்றேன். 'நல்லது, ஞாயிற்றுக்கிழமை வா, அழைத்துக்கொண்டு போகிறேன்' என்று சொன்னர். அதற்குமேல் எனக்கு அதிக சந்தோஷம் உண்டாய்விட்டது, பெஞ்சியின்மேல்

ஏறிக் குதித்தேன். அங்குமிங்கும் தூலை தெரியாமல் ஓடினேன். ஒவ்வொருநாளாகக் கழிந்தது. ஞாயிற்றுக்கிழமை வந்தது. நான் அதிகாலையில் எழுந்தேன். அப்பா வெளியே குதிரைக்குச் சேணம் போட்டுக் கொண்டிருந்தார். அதிவிரைவாக என் உடுப்பைப் போட்டுக்கொண்டு வெளியே வந்தேன். குதிரை வண்டியில் பூட்டி சித்தமாக இருந்தது. நான் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். உடனே வண்டியும் புறப்பட்டு விட்டது. வண்டி வெகு தூரம் போயிற்று. போகிறோம், போகிறோம், இன்னும் போகிறோம். வழி மாள்வதாக இல்லை. சுமார் பதினைந்து மைல் கடந்தோமென்று எண்ணுகிறேன். அப்போது ஒரு பெரிய கோயில் எதிரே தெரிந்தது. 'அப்பா எவ்வளவு பெரிய கோயில்' என்று கூவினேன். அதற்கு அப்பா, 'இன்னும் ஒரு கோயிலிருக்கிறது. அது இதைவிட சிறியது. ஆனல் இதைவிட அது அழகாக இருக்கும்' என்றார். 'ஆனல் அங்கே போவோம் வாருங்கள் அப்பா' என்று வேண்டினேன். அப்பா என்னை அழைத்துக் கொண்டுபோக, இருவரும் அங்கே போய்ச் சேர்ந்தோம். மணியும் அடிக்க ஆரம்பித்தது. எனக்கோ பயமாக இருந்தது. நான் அப்பாவைப்பார்த்து, 'அது என்ன தப்பட்டையோ தாரையோ, அவ்வளவு ஓசை கேட்கிறதே' என்றேன். 'கோயிலில் தீபாராதனம் செய்கிறார்கள்' என்றார். பிறகு நாங்கள் கோவிலுக்குள் போய் ஸ்தோத்திரம் செய்தோம். பின்பு சந்தைக்குப் போனேம். நடந்து நடந்து என் காலெல்லாம் நொந்தது. வழியெல்லாம் நாற்புறமும் சுற்றிப் பார்த்தேன். வெகு வேடிக்கையாக இருந்தது மெதுவாக சுந்தைக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே சுருள் சுருளாக ரொட்டி விற்றுக்கொண்டிருந்தார்கள். அவற்றில் ஒன்றை நான் எடுக்கப் பார்த்தேன். அப்போது அப்பா, 'அதை எடுக்காதே அதை நீ எடுத்தால் அவர்கள் உன் தொப்பியை எடுத்துக்கொள்வார்கள்' என்றார். 'ஏன் அப்படிச் செய்வார்கள்?' என்று கேட்டேன். 'பணம் கொடாமல் எதையும் எடுத்துக் கொள்ளக் கூடாது' என்று சொன்னர். 'அப்படியானல் எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள். நான் ரொட்டி வாங்கிக் கொள்ளுகிறேன்' என்றேன். அவர் கொடுத்தார். நான் மூன்று ரொட்டி வாங்கிச் சாப்பிட்டேன். வெகு ருசியாக இருந்தது. அதை நான் அப்பாவுக்குச் சொன்னேன். பிறகு அப்பா வீட்டுக்கு வேண்டிய

வைகளை யெல்லாம் வாங்கிக் கொண்டார். அப்புறம் நாங்கள் எங்கள் வண்டி விட்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்பா குதிரைக்குத் தண்ணீர்காட்டி உலர்ந்த புல் கொஞ்சம் போட்டார். குதிரை அதைத் தின்றதும், வண்டினயக் கட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டோம்; வீடுவந்து சேர்ந்ததும். ஆடைகளைக் கழற்றி வைத்துவிட்டு வெளியே வந்தேன். நான் மேலாவுக்குப் போயிருந்ததும், அப்பாவும் நானும் கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்ததும் எல்லோரிடமும் சொன்னேன். அப்புறம் நான் உள்ளே போய் படுத்துத் தூங்கிவிட்டேன். தூங்கும்போது சொப்பனத்தில் அப்பா மறுபடியும் மேலாவுக்குப் புறப்படுவதுபோல் கண்டேன். உடனே கண் விழித்து எழுந்தேன்; எல்லோரும் அசையாமல் தூங்கிக்கொண்டிருந்தார்கள். நானும் படுத்துத் தூங்கிவிட்டேன்'

இதுதான் பத்து வயதுள்ள பெட்கா என்னும் சிறுவன் ஐந்து வருஷங்களுக்கு முன் தான் அனுபவித்த ஒரு சம்பவத்தை எடுத்து எழுதிய வியாசம். இதற்கும் அதே சிறுவன் கோதுமை என்பதைப் பற்றி எழுதிய வியாஸத்திற்கும் உள்ள வித்தியாசம் பார்த்த மாத்திரத்தில் நன்கு விளங்கும்.

சிறு பிள்ளைகள் வியாசம் எழுதும் திறமையைப் பற்றி டால்ஸ்ட்டாய் வியந்து கூறுவது ஒருவாறு பிரீதி காரணமாகவும் இருக்கக் கூடுமென்று எண்ணி இடமுண்டு ஆனால் அவர் தம்முடைய பிரத்தியக்ஷ அனுபவங்களைக் கொண்ட தம்முடைய அபிப்பிராயத்தை வற்புறுத்துகிறார். ஆகையினால் நாம் நம்ப வேண்டியதாக இருக்கிறது. அவர் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் எழுதிய கதைகளில் சிலவற்றை அவர் பிரசுரித்து வந்த கல்வி சம்பந்தமான பத்திரிகையில் அச்சிட்டு வெளியாக்கி இருக்கிறார். அவற்றோடு தம் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஒருவருடைய வியாசம் ஒன்றையும் வெளிப்பட்டிருக்கிறார். இது மற்றவைகளைக் காட்டிலும் தாழ்ந்தது என்று வற்புறுத்துகிறார். 'முதல் முதல் அவர்களைப் பத்திரிகைகளுக்குக் கதை எழுதச் சொல்லும் போது சிறுவர்கள் உடனே எழுத இசையவில்லையாம். சங்கோசப்பட்டார்கள் போலும். ஆனால் அவர் உட்கார்ந்து பிள்ளைகளைத் தம்மைச் சுற்றி உட்காரச் செய்துகொண்டு, ஏதோ ஒரு சிறிய விஷயத்தை எடுத்துச் சுருக்கமாகச் சொல்லி, அதைப் பற்றித் தானே எழுத ஆரம்பித்தாராம். சிறிது நேரத்திற் கெல்லாம் பிள்ளைகள் ஒவ்வொருவராக அவர் பின்னால் வந்து நின்று கொண்டு அவர் எழுதுவதை எட்டிப் பார்த்தார்களாம். பார்த்துக் கொண்டு வந்தவர்கள் அப்படியல்ல இப்படி எழுதுங்கள் என்று அவர்கள் அவர் எழுதுவதைத் திருத்த ஆரம்பித்தார்களாம். உடனே அவர் அவர்கள் சொல்லுகிறபடி எழுதத் தொடங்கி விட்டார்.

162439

ஆகவே அந்தக் கதையில் முதற் பக்கம் மாத்திரம் தான் எழுதிய தென்றும் மற்றப் பக்கங்களெல்லாம் பிள்ளைகள் தாமாகவே எழுதிய தென்றும் உறுதியாகச் சொல்லுகின்றார். அதுவே யன்றி, படிப்போர் தாம் எழுதிய முதல் பக்கத்திற்கும் பிள்ளைகள் எழுதிய மற்றப் பக்கங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை எளிதில் உணர்வார்க ளென்றும் தாம் எழுதியது வெண்மையான பாலில் செத்து மிதக்கும் ஈயைப்போல இருந்து அவர்கள் எழுதியதைக் கெடுக்கிறதென்றும் சொல்லுகிறார். இத்தச் சந்தர்ப்பத்தால்தான் அவர் பத்து வயதுள்ள பெட்கா என்னும் சிறுவனுடைய புத்தி வன்மையை உண்மையாக உணர்ந்தாராம். முக்கியமாக அந்தச் சிறுவனிடம் காணும் விஷயப் பொருத்தத்திற்காகப் மிகவும் வியந்தார். ஏனெனில் விஷயப் பொருத்தமின்றி எந்த வேலையும் சிறக்காது. இவ்வாறு நான்கு மணி நேரம் டால்ஸ்ட்டாயும் அந்தப் பிள்ளைகளும் சேர்ந்து அந்த வியாஸத்தை எழுதி முடித்தார்கள். இரவு 7 மணி முதல் 11 மணி வரைக்கும் அதை எழுதினார்களாம். நாழிகை ஏற ஏற பிள்ளைகள் ஒவ்வொருவராக எழுந்து போய்விட்டார்கள். கடைசிவரையில் இருந்தவர்கள் பெட்காவும் அவன் நண்பனை செம்கா என்னும் மற்றொருவனுமே. வியாஸம் எழுதி முடிந்ததும் டால்ஸ்ட்டாயைப் பார்த்து, 'நிஜமாக இதை அச்சிடப்போகிறீர்களா?' என்று கேட்டனர். 'ஆமாம்' என்றார். 'ஆனால் அது நாம் மூன்றுபேரும் சேர்ந்து எழுதியது என்று குறிக்கவேண்டும்' என்று கேட்டனும். அதற்கு அவர் உவப்புடன் ஒப்புக்கொண்டனர்.

டால்ஸ்ட்டாய் பெட்கா என்னும் சிறுவனுடைய புத்திகூர்மையை வியப்பது பலருக்கு அதிக ஆச்சரியமாகத் தோன்றும். அவனை அவர் கீதை என்னும் சிறந்த ஜர்மன் ஆசிரியரைக் காட்டிலும் அறிவில் சிறந்தவன் என்று எண்ணினார். தன்னை அவர்க

ஞுடன் ஒப்பிட்டுப் பேசுவது இன்னும் விநோதமாக இருக்கும். 'பதினெரு வயதுள்ள செம்கா என்னும் சிறுவனுக்காவது பத்து வயதுள்ள பெட்கா என்னும் சிறுவனுக்காவது நான் வழிகாட்டி எழுதச் சொல்வது முற்றிலும் இயலாத காரியம்; அவர்கள் சொல்வதை உணர்ந்து அதுபோல் நான் எழுதத் தெரிந்து கொள்ளக் கூடுமாயின் நான் எவ்வளவோ சந்தோஷம் அடைவேன். அதுவே எனக்கு எப்போதோ உற்சாகமான சில சமயங்களில் தான் சாத்தியமாகிறது' என்று சொல்லுகிறார்.

இந்தக் கதை இங்கிலீஷிலாவது, பிரெஞ்சிலாவது ஜெர்மெனியிலாவது மொழிபெயர்க்கப்படவில்லை. ஏனெனில் அதை அவர் மேற்சொன்ன விஷயங்களை எழுதிய புஸ்தகத்தில் முற்றிலும் கொடுக்கவில்லை. அதைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லி நிறுத்திவிட்டார். ஆனால் பெட்கா என்னும் சிறுவன் எழுதிய வேறொரு கதையைப்பற்றிக் கொஞ்சம் விரிவாக எழுதியிருக்கிறார். அதில் ஒரு போர்வீரன் தன்வீட்டுக்குத் திரும்பி வந்து தன் குடும்பத்தார் எதிர்பாராத ஆடம்பரத்தை விளக்கும் விஷயத்தைப் பற்றிச் சொல்லுகிறது. அந்தக்காலத்தில் ருஷியா தேசத்தில் ஒருவன் போர்வீரனாகச் சேர்ந்துவிட்டால் திரும்பவும் வீடு வந்து சேர்வானென்பது கிடையாது. ஆகையால் மேற்சொன்ன போர்வீரன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்து எல்லோரையும் ஆனந்தப்படுத்தும் விஷயம் இன்பமானதாக இருக்கு மென்பதற்கு தடை ஒன்றுமில்லை. இந்த விஷயம் மாத்திரம் டால்ஸ்ட்டாய்தான் பெட்காவுக்குச் சொன்னது.

இந்தக் கதையின் முதல் அத்தியாயம் அவ்வளவு நன்றாக இல்லையென்றும் தமது யுக்தியும் அதிற் கலந்திருப்பதனால்தான் அது அவ்வளவு சுகமாக இல்லையென்றும் டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். அந்தக் கதையின் கடைசி அத்தியாயம் அப்போர்வீரன் தன் வீட்டுக்குள் நுழைந்து மனைவி மக்களைக் கூடி ஆனந்திக்கும் விஷயத்தைச் சொல்லுகிறது. அவ்வளவு சிறந்த இலக்கியம் ருஷியா தேசத்து இலக்கியங்கள் முழுதும் தேடிப் பார்த்தாலும் கிடைக்கமாட்டாதென்று டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். அதில் பிள்ளை ஒருவன் திரும்பிவந்த தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து அவர் வருகையினால் பரவசமடைந்து கிடக்கும் மனோபாவத்தைத் தெரிவிக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் சாப்பாடாயிற்று. 'தந்தை

எழுந்து சற்று வெளியே போய்வரப் புறப்படுகிறார். வாசற்படியை தாண்டிவிட்டார். சிறுவன் கூடப்போக வேண்டுமென்கிறான். தாய் வேண்டாமென்கிறாள். பையன் பிடிவாதம் செய்கிறான். அதற்காக அவள் அவனைப் புடைக்கிறாள். உடனே அவன் அடுப்பின்மேல் ஏறி நின்றுகொண்டு அழத்தொடங்குகிறான். தகப்பனார் திரும்பிவருகிறார்.

போர்வீரன் — 'குழந்தாய்! ஏனப்பா அழுகிறாய்?'

சிறுவன் — அம்மா என்னை அடித்தார்கள்.

போர்வீரன் — 'அப்படியா இதோ போய் நான் அம்மாவை அடிக்கிறேன், நீ அழாதே.

(தன் மனைவியிடம் போய்) என் குழந்தையை அடித்தாய்? இனி நீ அவனை அடிக்காதே. இதோ நான் உன்னை அடிக்கிறேன் பார்' என்று சொல்லி அடிப்பதுபோல் நடிக்கிறான். தாய் அழுவதுபோல் பாவிக்கிறாள். இதைச் சிறுவன் எழுதியிருக்கும் மாதிரியைக்கண்டு டால்ஸ்ட்டாய் அளவில்லாத ஆனந்தம் அடைகிறார்.

பெட்காவும் செம்காவும் டால்ஸ்ட்டாயின் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்த பிள்ளைகளில் சிறந்தவர்கள். அதிக புத்திகூர்மை யுடையவர்கள். ஆனால் மற்றவர்கள் இவ்வளவு புத்திகூர்மை யுள்ளவர்களாக இல்லாமற் போனபோதிலும் வியாசம் எழுதும் விஷயத்தில் அந்த அருமையான சக்தி மற்றவர்களிடத்திலும் ஏறக்குறைய இருந்ததாகவே எழுதுகிறார். அதற்கு அவர் காரணமும் கூறுகின்றார்.

'ஆரோக்கிய ஸ்திதியில் பிறக்கும் குழந்தைகளின் தன்மையானது இயற்கையில் எது எது நாம் உண்மை என்றும் அழகு என்றும் நன்மை என்றும் கொள்கிறோமோ அவற்றுடன் சுபாவமாகவே இயைந்திருக்கிறது. உயிருள்ளன வென்றும் உயிரில்லன வென்றும் ஏற்பட்டுள்ள சிருஷ்டிப் பொருள்களுடனும் மானிடர் தேடித்திரியும் உண்மை, அழகு, குணம் என்னும் அரிய அவாக்களை உருவகப்படுத்திக் காட்டும் இயற்கை அமைபுடன் குழந்தைகளே சார்புடையவர்களாய் விளங்குகிறார்கள். ஆனால் வயது ஏற ஏற அந்தச் சார்பானது தமக்கு உண்டாகும் ஒவ்வொரு சம்பவத்தாலும் அழிவுற்றுக் கடைசியில் அடியோடு அற்றுப் போய்விடுகிறது.

'படிப்பு குழந்தைகளின் புத்தியை அயுக்தமான வழிகளில் பிரவேசிக்கச் செய்கிறது. ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு அவர்களுடைய புத்தியானது அவ்வாறு கெடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாம் அவர்கள் படிப்பை நிறுத்தி அவர்களுக்குச் சுயேச்சையைத் தரவேண்டும். "பிள்ளைகளை வளர்க்கிறோம்; கற்பிக்கிறோம்" என்று சொல்லி, நாம் அவர்கள் நன்மைக்கென்று தேடும்முயற்சிகளெல்லாம் வீணே. ஏனெனில் நாம் எந்தநிலை உண்மையும் அழகும் குணமும் கூடியதென்று நினைத்து நமது குழந்தைகளுக்குத் தேடிவைக்க முயலுகிறோமோ அந்த நிலை ஒங்கி வளர்ந்த நம்மெல்லோரைக் காட்டிலும் அவர்களுக்கு அதிக சமீபத்திலேயே இருக்கின்றது. அந்த நிலையே விரும்பத்தகுந்த நல்ல நிலை என்ற உறுதியும் நமது குழந்தைகள் மனத்தில் நம்மைக் காட்டிலும் அதிகமாக இயற்கையிலேயே பதிந்திருக்கிறது. அவர்களுக்கு நம்மால் ஆகவேண்டிய உதவியெல்லாம் வெகு சொற்பமே. அந்நிலையை அடைவதற்கான முயற்சிகளில் அவர்களுக்கு வேண்டிய விஷய உணர்ச்சிகளை மாத்திரமே நாம் கொடுக்கக் கடைமைப்பட்டிருக்கிறோம்' என்று முடிக்கிறார்.

பத்திராதிபர்

NUMBER & SPACE WORK

எண், இட வேலைகள்

கீழ் வகுப்புக்கு இடத்து வேலையையும் எண் வேலையையும் சம்பந்தப்படுத்திக் காட்டுதல் என்னும் விஷயத்தைப்பற்றி நாம் ஆராயவேண்டியவைகள் :

பொதுவாய் இடத்துவேலையைப்பற்றிய சங்கதிகள் மூன்று அம்சங்களில் அடங்கும்.

I. நீட்டலளவு. II. பரப்பளவு. III. கனஅளவு.

இவைகளில் ஆரம்ப வகுப்புக்கு கற்பிக்கவேண்டிய விஷயங்களையும் முறைகளையும் இங்குக் குறிப்பிடுகின்றேன்.

I. நீட்டலளவு —

1. கஜக்கோலை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பிள்ளையும் ஒன்று இரண்டு மூன்று என்பதாக அவரவர்களுக்குத் தெர்

ந்த வரையில் எண்ணி அளக்கச் செய்து, கோலைப் பிடித்து நிலத்தில் சரியாய் அளக்கும் விதத்தைக் கற்பித்தல்.

2. இம் மாதிரியே அடிக்கோலைக் கொடுத்து, சரியாய்ப் பிடித்து அளக்கும் விதத்தைத் தெரிவித்தல்.

3. கஜக்கோலை அடிக்கோலால் அளக்கச் செய்தல்.

4. கஜக்கோலுக்கும் அடிக்கோலுக்கும் உள்ள ஒற்றுமைகளை வித்தியாசங்களிலை பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் கற்பித்தல்.

(உதாரணம்) பெரிய கோலாகிய கஜக்கோலினால் 1 தடவை அளந்த தூரத்தை, சிறிய கோலாகிய அடிக் கோலினால் 3 தடவை அளவிடவேண்டி வருகிறது என்றும், அடிக்கோலால் 3 தடவை அளந்த தூரம் கஜக் கோலால் 1 தடவையில் அளந்து முடிவடைகிறது என்றும் அறிவித்தல். இதற்குள் பாஷாஞானம் ஏற்பட்டிருந்தால் கஜக்கோலின் பெயரையும் அடிக்கோலின் பெயரையும் கற்பித்துக்கொடுத்து 3 அடி = 1 கஜம். 1 கஜம் = 3 அடி என்பதை மேற்கண்ட உதாரண மூலமாகக் கற்பித்துக் கொடுத்து கரும்பலகையில் எழுதிவைத்து, பிள்ளைகளையும் எழுதிவைத்துக் கொள்ளும்படி செய்யலாம்.

5. அடிக்கோலின் பிரிவுகளைப் பற்றிக் கற்பித்தல்.

6. அடிக்கோலின் பிரிவுகளாகிய அங்குலங்கள் என்பது கவனத்திலிருக்கும் பொருட்டுப் பலப்பம், பென்சல், புஸ்தகம் அல்லது கற்பலகையின் ஓரங்கள் முதலிய பலவஸ்துக்களை அளந்து சொல்லச் செய்தல்.

II. பரப்பளவு —

1. ஒரே அளவு கனமுள்ள காகிதம் அல்லது அட்டைகள் முதலியவற்றைக் கண்ணால் பார்த்தவுடன் நிதானித்து அதிக இடத்தை அடைத்துக்கொண்டிருப்பதைப் பெரியது என்றும் சுவல்ப இடத்தை அடைத்துக்கொண்டிருப்பதைச் சிறியது என்று சொல்லும்படி சிஷித்துக்காட்டல்.

2. ஒரே மாதிரி கனம் உள்ள காகிதம் அட்டை முதலிய பொருள்களை முன்போல் பார்த்தவுடன் சொல்லச் சாத்தியமில்லாதபடி சிஷித்துக்காட்டி தராசில் நிறுத்திக் காண்-

பித்து எடை அதிகமாய் இருக்கும் பொருள் அதிக இடத்தை அடைத்துக்கொண் டிருக்கிறது பெரியது என்று கற்பித்தல்.

3. ஷே ஒரேமாதிரி கனமுள்ள பரப்பளவுள்ள வஸ்துக்களை ஒன்றன்மேல் ஒன்றை வைத்துக்காட்டி அதிக் இடத்தை அடைத்துக் கொண்டிருப்பது இன்னது என்று அறிவித்தல்.

4. ஓரங்குலச் சதுரத் தண்டுகளை அடிக்கோலினால் அளக்கச்செய்து நான்கு ஓரங்களில் எந்தப் பக்கத்தை அளந்தாலும் ஒவ்வொரு அங்குலமே இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொடுத்தல்.

III. கன அளவு :—

1. முகத்தலளவுக் கருவிகளில் (1) ஆழாக்கு (கால்மானம்) (2) உழக்கு (கால்படி அல்லது அரை மானம்) (3) சேர் (அரைப்படி அல்லது மானம்) இவைகளைச் செய்து வைத்துக்கொண்டிருந்து மணலையாவது தானியத்தையாவது பிள்ளைகளைக்கொண்டு அளக்கச்செய்தல்.

2. மணல் அல்லது தானியக்குவியலை உத்தேசமாய்ச் சொல்லச் செய்து பிறகு அளந்து காட்டுதல்.

3. மேற்கண்ட முகத்தலளவுக் கருவிகளின் சம்பந்தங்களைத் தானியம் அல்லது மணல அளந்து காட்டி விளங்கும்படி செய்தல்.

4. மேற்கண்ட முகத்தலளவுக் கருவிகளின் பெயரை அவ்வவ்விடத்தில் வழங்கும் மாதிரி கற்பித்துக் கொடுத்தல்.

5. ஒரு கன அங்குல அளவு முகத்தலளவு கருவியொன்றைச் செய்து வைத்துக்கொண்டிருந்து அக்கன அங்குல அளவுக் கருவியால் மணலையாவது தானியத்தையாவது அளக்கச் செய்தல்.

6. கன அங்குல அளவுக்கும் முற்கூறிய முகத்தலளவுக் கருவிகளுக்கும் அளந்து பார்த்து சம்பந்தங்கள் அல்லது ஒற்றுமைகளைக் கவனித்தல்.

இதுவரையில் கீழ் வகுப்புக்கு இடத்து வேலையைப்பற்றிக் கற்றுக்கொடுப்பதைப் பேசி வந்தோம். இனி இந்த இடத்து வேலையுடன் எண்வேலைகளை எவ்வாறு சம்பந்தப் படுத்தலாம் என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

1. மேட்டலளவை கற்பிக்கையில் அடிக்கோல் அல்லது கஜக்கோலை எடுத்துக்கொண்டு ஒன்று, இரண்டு, மூன்று என்று சொல்லி எண்ணுவதால் அளக்கும் ஒழுங்கு கற்பிப்பது, இடத்து வேலை சம்பந்தமாயும் வாயால் சொல்லும் ஒன்று இரண்டு, மூன்று என்னும் எண்களின் பெயரை உச்சரிப்பது ஒன்று என்பது ஒருதடவை அளந்தாயிற்று இரண்டு என்பது இரண்டு தடவை அளந்தாயிற்று என்று பொருள் ஏற்படுத்துவதால் எண்மான ஞானமும் உண்டாகும்.

2. இதில் அப்பியாசக் கணக்குகள் கொடுக்கும்போது (1) அளந்து நிதர்சனமாய்க் காண்பிப்பது. (2) மனோபாவமாய்ச் சொல்லச் செய்வது என்னும் இரண்டு அம்சங்கள் ஏற்படுகின்றன.

3. முகத்தலளவுக் கருவிகளில் அளந்து நிதானிக்கும் வழக்கத்தால் கன அளவைப்பற்றிப் பின்னிட்டு கற்பிக்கும் கணக்குகளுக்குச் சாதகமாக இருக்கிறது.

T. V. VENKATASESHA AIYAR,
Teacher, Periathanappady,
Uttankarai Taluk.

THE INFANT SCHOOL

பாலர் பாடசாலை

(77-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒத்து நடத்தல்

எல்லாம் சொல்லியும் நம்மவரிற் சிலர் 'இதெல்லாம் எண்ணவீண் ஆர்ப்பாடங்கள். நாம் எல்லாம் அப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தில்தான் படித்தோமா? நமக்கு நல்ல படிப்பு வராமலா போய்விட்டதா? கம்பர், திருவள்ளுவர் முதலாயினோர் எந்த 'இன்பென்ட் ஸ்கூலில்' (Infant School) படித்தார்கள் நம்முடைய குழந்தைகளுக்கு அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் வேண்டா. அவை பேச்சளவில் ஆகக்கூடியவையே யன்றி காரியத்தில் ஆவனவல்ல' என்று ஆக்ஷேபிப்பார்கள். ஏதோ இல்லாத கஷ்டங்களை யெல்லாம் நாம் உண்டாக்கிக் கொண்டு அவைகளைப் போக்க வழிதேடுகிறோம் என்பது அவர்களுடைய

அபிப்பிராயம். 'பள்ளிக்கூடத்திற்குப் போனால் எல்லாம் சரியாகப் போய்விடுகிறது. இரண்டொருவாரம் வரையில் குழந்தைகளுக்கு எல்லாம் புதிதாகத்தான் இருக்கும். பழகப்பழக எல்லாம் சகஜமாய்ப் போய்விடும். இப்பொழுது படிக்கும் குழந்தைகளெல்லாம் வீட்டை நினைத்துக்கொண்டு அழுகிறார்களா என்ன? பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டேன் என்றும் சொல்வதில்லையே; சந்தோஷமாகப் போகிறார்களே' என்று வாதிக்கிறார்கள்.

விஷயம் என்னவென்றால், தாம் படிக்கும் பள்ளிக்கூடத்தில் போதனை முறைகள் எவ்வளவு கடினமாக இருந்தபோதிலும் குழந்தைகள் படிப்படியாக அவற்றை யெல்லாம் சகித்துக் கொள்ளும் சக்தி யுடையவர்களாக இருக்கிறார்கள். வகுப்பில் அவர்கள் நடந்து கொள்வதற்காக விதிக்கப்பட்டிருக்கும் நியமங்களையும், மரியாதைகளையும் சீக்கிரம் கற்றுக்கொண்டு நடக்கிறார்கள். வகுப்பில் பல பிள்ளைகள் செய்வதைப் பார்த்தும் சொல்வதைக் கேட்டும் உபாத்தியாயரது பிரம்புக்குப் பயந்தும் பழகும் குழந்தைகள் பாடசாலையில் ஏற்பட்டுள்ள சட்டதிட்டங்களை எப்படி கற்றுக்கொள்ளாதிருக்க முடியும். தண்பம் அடுக்கி வந்தால் துயரத்தின் உணர்ச்சி குன்றுவது இயல்புதானே.

குழந்தைகளுக்கு இந்தச் சக்தி இருப்பதனால்தான் இப்போது உள்ள 'இன்பெண்ட் ஸ்கூல்'களில் காணும் பெரும்பாலான தண்பங்கள் விளைகின்றன. இள மூங்கில்போலக் குழந்தைகள் மனமானது எப்படி வளைத்தாலும் வளையக்கூடியதாக இருக்கிறது; ஆகையினால்தான் அவர்கள் ஆறுமணிநேரம் வகுப்பில் அசையாமல் உட்கார்ந்து, சத்தம் செய்யாமலும் கொட்டாவி விடாமலும் கைகால்களால் சேஷ்டைகள் செய்யாமலும் நிலைத்திருப்பது சாத்திய மாகிறது. வகுப்பில் நடக்கும் பாடங்களில் முழு மனமும் வைத்து கவனிப்பவர்போல் பார்ப்பவர் கண்ணுக்குத் தோன்றும், அச்சிறுவர்கள் ஏதோ சிறிது சந்தோஷமாக இருப்பதாகவும் எண்ண இடங் கொடுக்கும். ஆனால், உண்மை என்னவென்று பார்ப்போம். அக்குழந்தைகள் தங்கள் மனவருத்தத்தை மறைத்து வைக்கிறார்களே யொழிய, உண்மையாகவே அவர்களுக்கு வருத்தம் இல்லையென்றுவது, சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றுவது எண்ணுவது சரியன்று. இந்தக் குணம் குழந்தைகளிடம் இருப்பதனால்தான் இன்பெண்ட் ஸ்கூல் சிக்கிரத்த மடையாமல் இவ்வளவு காலம் தள்ளிக்கொண்டு வருகிறது.

இதனால் விளையும் தண்பங்களில் சிலவற்றைக் கூறுவோம். குழந்தைகளின் இயற்கையான குணங்களும் சாதாரணமான வீட்டுப் பழக்கங்களும் இன்னவையென்று உணர்ந்து, அவற்றிற்கு ஏற்பப் பள்ளிக்கூடத்தில் போதனை முறைகளை சரிப்படுத்திக் கொண்டு, குழந்தைகள் அவ்வழிகளிலேயே வளர்ந்து பெரியவர்களாவதற்கு வேண்டிய அநுகூலங்களைத் தேடாதிருத்தலே முதல் தண்பமாகும். இரண்டாவது, இயற்கையில் குழந்தைகளிடம் காணப்படும் அருமையான குணங்கள் அவர்கள் பள்ளிக்கூடத்தில் அடி வைத்தவுடனே அற்றுப் போவதாகும். அந்தக் குணங்களுக்குப் பதிலாக அநாவசியமான நீதிகளும் கிரமங்களும் மரியாதைகளும் கற்றுக் கொடுக்கிறோம். அதனால் குழந்தைகளுக்கு இயற்கை வளர்ச்சி முற்றிலும் குன்றிப்போகிறது. குழந்தைகளை குழந்தைகள் என்றே மதிப்பதில்லை; ஏதோ வயது முதிர்ந்தோர் உலகத்தில் உழன்று உலவி வருவதுபோலன்றோ இருக்கிறது இக்குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் படும்பாடு!

குழந்தைகளின் இரண்டேட்ட வாழ்க்கை

மேற்கூறிய விதம் பள்ளிக்கூடத்தில் பலவகைத் தண்பங்களை அனுபவித்துக்கொண்டு காலங்கழிக்கும் குழந்தைகள் சாயங்காலம் வீடு வந்து சேர்ந்ததும், மறுநாட் காலை பள்ளிக்கூடம் போகும் வரையில், பழையபடி வீட்டு வழக்கங்களிலேயே பழகி வருகிறார்கள். வீட்டில் ஒரு வித வாழ்க்கையும், பள்ளிக்கூடத்தில் வேறொருவித வாழ்க்கையுமாக குழந்தைகளின் வாழ்க்கை முரண்பட்டு இரட்டை வாழ்க்கையாய் முடிகிறது. ஒரே குழந்தை இங்கே சிறிது நேரம் ஒரு மாதிரி வளருகிறான்; மிகுதி நேரம் அங்கே ஒரு மாதிரி வளருகிறான். இவ்விருவித வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று யாதொரு பொருத்தமும் உடையதன்று. இரண்டிடத்திலும் குழந்தைகளுக்கு இயற்கையாக அமைந்துள்ள அருமையான குணங்களும் திறமைகளும் சரியான வழியில் விருத்தியடைவதற்கு அநுகூலம் ஏற்படுவதில்லை. வீடு, பாடசாலை ஆகிய இரண்டிடங்களில் ஒரிடத்திலாவது அவர்களுடைய தண்மைகளையும் மனதத்துவங்களையும் பூர்ணமாக உணர்ந்து, அவை எல்லாவற்றையும் ஒன்றுபட மனத்தில் அமைத்து, அவையனைத்தும் ஒருங்கே வளர்ச்சி யடைவதற்கான அநுகூலங்களைத் தேடுவதில்லை.

பள்ளிக்கூடங்களில் கவனிக்கப்படும் அம்சங்கள் சிலவே. அவை குழந்தைகளின் தன்மைகளையும் வீட்டுப் பழக்கங்களையும் ஒரு சிறிதும் பாராட்டுவதில்லை. இவைகளை அநுசரித்துப் பாடங்களை ஏற்படுத்துவதென்பது கிடையாது. குழந்தைகளுக்கு இயற்கையான சுறுசுறுப்பும், சூக்ஷமபுத்தியும் மழுங்கிப்போகவே வழி தேடுவதுபோலிருக்கிறது. அர்த்தமில்லாத பயிற்சிகளும் பாடங்களும் குழந்தைகளைப் பீடிக்கின்றன. இப்படிப்பட்ட பயிற்சிகளிலும் பாடங்களிலும் அவர்கள் மனம் புகுவதென்றால், அவர்கள் சுபாவமே முழுதும் மாறவேண்டுமன்றோ? பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் வேறு, வீட்டில் ஓடியாடும் குழந்தைகள் வேறு என்று சொல்லத் தகுந்த பேதம் ஏற்பட்டு விடுகிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளைக் குழந்தைகள் என்றே சொல்வதற்கில்லை. அவர்களைக் 'குழந்தை-மனிதர்' என்று சொல்வது ஒருவாறு பொருந்தும்.

இந்தப் பரிதாபமான நிலைமைக்குக் காரணம் என்னவென்று பார்ப்போம். விளையாட்டு என்பதும் வேலை யென்பதும் வெவ்வேறு விஷயங்கள் என்ற தீர்மானமான எண்ணம் உபாத்தியாயர்களை விட்டொழிவதில்லை குழந்தைகள் அளவில் விளையாட்டு என்பதும் வேலை என்பதும் இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட முக்கிய அம்சங்கள் என்பதும் உணருவதில்லை. இவ் விரண்டும் சேர்ந்தே குழந்தைகளின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று பொருந்தா விடில் குழந்தைகள் எல்லா விஷயத்திலும் பூர்ணமாக வளர்ச்சியடைவது அசாத்தியமாகும். இந்த உண்மையை அநுசரித்து நடவாதபடியால், இக் காலத்து ஏற்பட்டிருக்கும் பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் பயன் பெறுதொழிகின்றன. இதனால் அவை குழந்தைகளுக்கு யாதொரு நன்மையும் செய்வதில்லை என்று எண்ணக் கூடாது; ஏதோ ஒருவிதமான வளர்ச்சியை உண்டாக்காமற் போகாது. ஆனால் ஏக தேசமாகச் சில அம்சங்களை மாத்திரமே எடுத்துக் கொண்டு, அவை வளருவதற்கான அநுகூலங்களை மாத்திரமே தேடுகிறார்கள். அதனால் எல்லா அம்சங்களும் ஒருங்கே முதிர்வது இயலாமற் போகிறது.

பத்திராதிபர்.

KINDERGARTEN

கிண்டர்கார்ட்டன்

'கிண்டர் கார்ட்டன்' என்பது 'கிண்டர்=குழந்தை, கார்ட்டன்=தோட்டம்,' என இநபதத்தாலான ஜர்மனி தேசத்து ப்ரஷிய பாஷையின் வார்த்தை. இப் பெயரமைத்து வழங்கும் பாடசாலைக்கு 'கிண்டர் கார்ட்டன் ஸ்கூல்' என வழங்கும். இம்மாதிரிப் பாடசாலைகள் ஜர்மனி தேசத்தில் அதிகம். இப்பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆரம்பத்தில் கற்பிப்பது வர்ண பேதங்கள். பாடசாலையில் பல வர்ணங்கள் உள்ள இயற்கை, செயற்கைப் பொருள்கள் சேகரிக்கப்பட்டிருக்கும். நம் தேசத்திலும் ஐந்து வயதுக்கு உட்பட்ட பாலர் பாலிகைகளுக்கு வீட்டிலேயே விளையாட்டாக நிற பேதங்களையும், அப் பொருள்களின் பெயர்களையும் கற்பிக்கிற பாவனையாக இந் நாளிலும் வீடுகளில் இருக்கும் சாமான்களாலும் பாடும் பாட்டுகளாலும் நன்கு அறியலாம்.

I. பச்சைக் குழந்தைகள் விளையாடுவதற்காகத் தொட்டில்களுக்கு மேல் தூசி விழாதபடி தொங்கவிட்டுக் கட்டுகிற சதுரத் தட்டின் அடிப்புறத்துள்ள வர்ணத்துணிகளால் செய்த பந்துகள் கிளிகள் அல்லது ரசகுண்டுகளைப் பார்க்க விநோதமாய் இருப்பதுடன் அக் குழந்தையுடன் ஆடும் மற்றக் குழந்தைகள் பொருள்களின் உருவம், நிறம் முதலியவற்றை ஒருவாறு தெரிந்து கொள்ளுகிறார்கள். சிலர் தேன் மெழுகைப் பந்துபோல் உருண்டை செய்து அதில் குன்றுமணிகளை பதிய வைப்பார்கள். நவராத்திரி உற்சவத்தின்போதும், விநாயக சதுர்த்தியின்போதும் பிள்ளைகள் பலவர்ணமுள்ள செயற்கைப் பொருள்களை, தாவரப் பொருள்களைப் பார்ப்பதால் அவர்களின் மனம் அப் பொருள்களில் செல்லும். அப்போது அதன் உருவம், நிறம், பெயர் முதலியவற்றை அறிய ஆவலாய் அச் சமயத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களைக் கேட்டு அறிகிறார்கள். வீடுவீடாய்போய் நவராத்திரி கொலு பார்ப்பதால், ஒரு வீட்டில் உள்ள வஸ்துக்கும் மற்ற வீட்டில் உள்ள வஸ்துக்கும் வித்தியாசம் அறிகிறார்கள். ஆதியில் ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் தாங்கள் படிக்கும் பாடசாலையிலேயே இருந்து பயில்வார்கள். அவ்விடத்திற்குக் 'குரு குலவாசம்' எனப்பெயர்.

2. 'விநாயக சதுர்த்தி' தினத்தில் பூஜைசெய்யப் பல தினுசு தழைகள், பூக்கள், புற்கள் கொண்டுவந்து அவற்றைப் பார்ப்பதால் அவைகளின் பெயர், உருவம், நிறம், உபயோகம் முதலியவற்றை அறிகிறார்கள். இந்தச் சமயங்களில் முதலாவது பாலிகைகளுக்கும் இரண்டாவது பாலர்களுக்கும் பொதுவாகப் பேசுமிடத்து எல்லோருக்கும் விசேஷமான புத்தி கூர்மை உண்டாக்க எண்ணியே நம் பெரியவர்கள் இவைகளை ஏற்படுத்தினார்கள் போலும்.

3. தொட்டியில் மல்லாந்து படுத்து விளையாடும் குழந்தை தன் உறுப்புகளை அசைக்க, ரசகுண்டுகளில் அதன் செய்கை தெரிவதால், அக் குழந்தை அழாமல் விளையாடும். பக்கத்திலுள்ளவர்கள் இதன் கருத்தை அறியலாம். ஆனதால் நாம் அறிய வேண்டிய விஷயங்கள் பல இருந்தாலும் தற்சமயம் வர்ண ரசகுண்டுகளின் நடுவில் உள்ளது சிவப்பு. பக்கத்தில் வெள்ளை பச்சை நீலம் மஞ்சள் குண்டுகள் இருக்கும். சூரியன், சந்திரன் இரண்டும் தங்களுடைய உதய அஸ்தமன காலங்களில் செந்நிறமாய் இருந்து மறைகின்றன. பிரகாசம் அதிகப்பட வெண்ணிறம் ஆகின்றன. கருப்பும் அப்படியே. இந்தப் பிரத்தியட்ச தத்துவத்தை வைத்தே 'ப்ரோபல்' என்ற ஜர்மனிதேசத்து கிண்டர் கார்ட்டன் ஆசிரியர் முதலில் சிவப்புவர்ணம் போதிக்கும்படி ஏற்படுத்தி இருக்கவேண்டும். ஆகாயம் நீல நிறம். சூரியன் அஸ்தமிக்கும் காலத்திற்குமுன் உண்டாகும் இளவெய்யில் ஒருவாறான மஞ்சள் நிறம். ஆனதால் நம் தேசத்திலும் தொட்டில்களுக்கு நடுவில் சிவப்புப்பந்து, ரசகுண்டு முதலிய கட்டுவது பெருவழக்கம்.

தாலாட்டுப் பாட்டில் முதல் அடியில் சிவப்பு வர்ணம் உள்ளது என்பதைக் காட்ட ஒரு வஸ்துவின் பெயர் குறிப்பிடுகிறேன்.

"செந்தாமரை மலரே, ஜகதலத்தை ஆள
வந்த சிந்தாமணியே செல்வமே கண்வளராய்—

இதில் தாமரைமலர், சிவப்பு நிறம்

2 ஜகதலத்தை ஆளுகிறவர் சூரியன் = (முதலில் சிவப்பு)

3 சிந்தாமணி = மாணிக்கம் = சிவப்பு நிறம்

4 கண் = தாமரைக்கு ஒப்பிடுவது வழக்கம்.

S. HIRANIAOHAR

SCHOOL EXCURSION

உல்லாச சஞ்சாரம்

1. உல்லாச சஞ்சாரம் என்பது என்ன—வகுப்பின் நிபந்தனைவிட்டு வெளியே யுள்ள விஷயங்களை உற்றுநோக்கி, ஆராய்ந்து அவைகளின் சங்கதிகளை அறிந்துகொள்ள வெளியே போய்வருதல். வகுப்புக்கு வெளியே போவதால் இதை வெளியே சுற்றப் போதல் என்கிறோம். வகுப்பில் பாடம் நடத்தும்போது பிள்ளைகள் பலவித கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டியது அவசியம். பிள்ளைகள் தங்கள் மனத்துக்கேற்றபடி எந்த விஷயத்தில் தங்களுக்குப் பிரியம் இருக்கிறதோ அவைகளை நாடிச் சென்று படிப்பதால் இதை உல்லாச சஞ்சாரம் என்றும் சொல்லுகிறோம்.

2. இதன் அவசியம் —பிரகிருதி சாஸ்திரம் (Nature Study), இயற்கைப் பொருட்பாடம் சரியானபடி கற்பிக்கப்பட வேண்டுமானால் எல்லாவஸ்துக்களையும் பிள்ளைகள் நேரில் கையாடவேண்டியது அவசியம். நேரில் பார்த்தும், சோதனை செய்தும், கற்றுக்கொள்ளும் விஷயங்கள் மனத்தில் நன்றாகப் பதிந்துவிடுகிறதென்பதற்கு ஆட்சேபமில்லை. வேண்டிய வஸ்துக்களெல்லாம் பாடசாலையிலேயே யிருக்கவேண்டுமென்று நினைப்பது சரியன்று; இயற்கையிலுள்ள பொருள்களை அவை இருக்குமிடங்களில் போய்ப் பார்ப்பது அவசியமாகிறது. உலகத்திலுள்ள ஜீவராசிகளின் தன்மையும், அவைகளின் வம்சாவளியும், அவைகள் அமைப்பும் அவைகள் இருக்குமிடங்களுக்கு ஏற்றனவாயிருக்குமென்ற சங்கதியும் அவைகளை நேரில் பார்த்தால் தானே விளக்கும். உல்லாச சஞ்சாரங்கள் சரியானபடி அடிக்கடி நடத்தினால்தான் இவ்விதச் சம்பந்தங்கள் தெளிவாகும். இவ்விதமாகத் தயாரான பிள்ளைகள் எந்தச் சங்கதியையும் நன்றாகக் கவனிப்பார்கள். சாஸ்திர பாடங்களை பிற்காலத்தில் படிக்க நேரிட்டால் அதிக கவனமாகப் படிப்பார்கள். உல்லாச சஞ்சாரம் என்பது ஆரம்பத்தில் ஏதோ விளையாட்டுப்போல் தோன்றினாலும் பிள்ளைகள் அந்தந்த இடங்களுக்குப் போய்விட்டால் அதிகமான வேலைசெய்து உண்மையான அறிவை யடைவதில் சந்தேகமே யில்லை.

3. இதில் உண்டாகும் கஷ்டங்கள் —கிராமாந்தர பாடசாலைகளில் வெளியே சுற்றப்போதல் சுலபமாகச் செய்யலாம். ஆனால்

பெற்றோர்கள் அப்படிச் செய்வதைப்பற்றி மெச்சிக்கொள்ளுகிறதில்லை. இருந்தாலும் உபாத்தியாயர், பிள்ளைகளின் அறிவை விருத்தி செய்வதால் பெற்றோர்களைத் திருப்தி செய்யாலாம். மேலும் பெற்றோர்களுக்கு இதன் அவசியத்தை எடுத்துக் காட்டவேண்டும்.

பட்டணவாசங்களிலுள்ள பாடசாலைகளில் உல்லாச சஞ்சாரம் செய்வது கஷ்டம். ரஸ்தாக்களில் வண்டிகளும், ஜனக்கூட்டமும் அதிகமாக இருக்கும். மேலும் சில இடங்களுக்குப்போக ரெயில் சத்தம் வேண்டியிருக்கும். இவ்விதப் பணச் செலவு இருந்தாலும் வருஷத்திற் கொருமுறையாவது அவ்விதச் செலவு செய்து பிள்ளைகளை அவசியம் வெளியே யழைத்துப் போகவேண்டும்.

4. உல்லாச சஞ்சாரம் போகவேண்டிய இடங்கள் — உபாத்தியாயர் முதல் முதல் இன்னின்ன இடங்களுக்குத்தான் உல்லாச சஞ்சாரம் போகவேண்டுமென்று முன்னால் தீர்மானஞ் செய்து கொள்ளவேண்டும். அந்த இடங்களை அவர் தாமே முன் போய்ப் பார்த்து, இன்னின்ன விஷயங்கள் அங்கே கவனிக்கத் தக்கவை யென்று குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். உல்லாச சஞ்சாரம் போகும் இடங்கள் பலவகைப்பட்ட இயற்கை யமைப்புள்ளதாக இருக்க வேண்டும். பாடசாலைக்குச் சமீபமான இடங்களுக்குப் போவது நலம். அதிகதூரம் ரெயிலில் போவதாயிருந்தால் செலவு அதிகமாகும். அதிகதூரம் நடக்க நேர்ந்தால் அதுவும் கஷ்டம். அதிகதூரம் போகக்கூடாத சமயங்களில் பக்கத்திலுள்ள தோட்டங்களுக்கு உல்லாச சஞ்சாரம் போகலாம்.

5. உல்லாச சஞ்சாரம் போகுமுன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் — உல்லாச சஞ்சாரம் புறப்படுமுன் இன்னின்ன விஷயங்களைப்பற்றிப் படிக்கப் போகிறோமென்றும், இன்னின்ன வஸ்துக்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்றும் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் பிள்ளைகள் விளையாட்டில் மனத்தைச் செலுத்த மாட்டார்கள். பெரிய பிள்ளைகளுக்குப் படங்களும் ஏற்றத் தாழ்வுப் படங்களும் கொடுத்து இயற்கை யமைப்பைக் கவனிக்கச் செய்யலாம். பிள்ளைகள் போகும்போதே காலடியாலும் கம்பாஸாலும் படம் தயார் செய்ய வேண்டிய வழிகள் சொல்லப்பட வேண்டும். சில தினங்களுக்கு முன் வஸ்துக்கள் சேகரம் செய்யும் விதமும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னவென்றும் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும்.

6. நோக்கம் — ஒவ்வொரு உல்லாச சஞ்சாரத்திற்கும் ஒரு நோக்கம் முக்கியமாக மனத்தில் இருக்கவேண்டும். உதாரணமாக மரப்பட்டைகளின் தன்மையைகவனித்தல் அவைசொரசொரப்பா? வழுவழுப்பா? சில குருத்துக்களின் தன்மை. தென்னை நீண்டு கூராயிருக்கிறது. மா, சிவந்த கொழுந்துள்ளதா யிருக்கிறது. வேம்பு இலைகளின் ஒழுங்குகள் கவனிக்கத் தக்கவை. சில பிராணிகளும் அபூர்வமான பட்சிகளும் போகும் இடங்களில் தெம்பட்டால் அவைகளையும் அவைகள் பிரியமாக இருக்குமிடங்களையும் கவனிக்க வேண்டும். எந்த நோக்கத்தோடு உல்லாச சஞ்சாரம் போகிறோமென்று பிள்ளைகளுக்குச் சொல்லாவிட்டால் அவர்கள் விளையாட்டில் மனத்தைச் செலுத்திவிடுவார்கள். காலமும் வீணாகச் செலவழிக்கப்படும். ஒவ்வொரு பிள்ளையும் சரியான வேலை செய்கிறதா என்று உபாத்தியாயர் கவனமாகப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு உல்லாச சஞ்சாரமும் ஒரே மாதிரியாக இருக்கக்கூடாது. பிள்ளைகளை அதிக நிர்ப்பந்தமான விதிகளால் கட்டுப்படுத்தவும் கூடாது. ஓர் உத்தேசமும் இல்லாமல் உல்லாச சஞ்சாரம் புறப்படுவதும் பிரயோசனமில்லை. லகுவான விதிகளை அநுசரித்து நடத்துவதே நல்லது.

7. உபாத்தியாயரும் பிள்ளைகளும் — உல்லாச சஞ்சாரம் செய்யும் உபாத்தியாயர் தாமே பல தடவைகளில் வெளிச்சுற்றினவராயும் விஷயங்களைக் கண்டறிவதில் உற்சாக முள்ளவராயும் இருக்க வேண்டும். முன்னமே தாம் போய் இன்னின்ன விஷயங்கள்தாம் கவனிக்கத் தக்கவை என்று குறித்துவைத்துக் கொள்ளவேண்டும். சிறுபிள்ளைகளை அவர்கள் தாமே விஷயங்களைக் கண்டுபிடிக்கும்படி விட்டுவிடவேண்டும். அவர்கள் கண்டு பிடித்த விஷயங்களைக் கண்டுகளிக்கும்போது தாமும் சந்தோஷப் படவேண்டும். பிள்ளைகளுக்கு வஸ்துக்களில் பிரியமுண்டாகும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு தடவையிலும் அதிகப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போகக்கூடாது. ஓர் உபாத்தியாயர் 20 பிள்ளைகளுக்கு அதிகம் கொண்டுபோகக் கூடாது. இதற்கு அதிகப் பட்டால் வஸ்துக்களை எல்லாரும் கவனிக்கும்படி செய்வது கஷ்டம். உபாத்தியாயர் எப்போதும் சந்தோஷமுள்ளவராயும் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற விடை யளிப்பவராயும் இருக்க வேண்டும்.

8. எடுத்துக்கொள்ள வேண்டிய வஸ்துக்கள் — ஒவ்வொரு வருக்கும் ஒரு நோட்புஸ்தகம். இதில் மேற் கூறியவண்ணம் இன்னின்ன விஷயங்கள் கவனிக்கவேண்டுமென்ற சங்கதி எழுதப்பட்டிருக்கவேண்டும். படங்கள், பென்சில், ஒரு பேஜுக்கத்தி, ஒரு பூதக்கண்ணாடி இவைகள் ஒவ்வொருவருக்கும் அவசியம். பொதுவாகச் சில தகரப்பெட்டிகள், குப்பிகள் இவைகள் சேகரம் செய்யும் வஸ்துக்களைப் போட்டு எடுத்துக்கொண்டுவர அவசியமாகும். ஒரு ஜில்லாபடம் அவசியம். ஏற்றத்தாழ்வு காட்டும் படம் இருந்தால் அதிக விசேஷம்.

9. மற்றப் பாடங்களோடு சம்பந்தப்படுத்தல் — உல்லாச சஞ்சாரம் நடத்தும்போது கவனித்த விஷயங்களை அப்போதைக்கப்போது நோட் புஸ்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டு வகுப்புக்கு வந்ததும் அதைப் பார்த்து ஒரு வியாஸமாக எழுதவேண்டும். கொண்டுவந்த வஸ்துக்களை சாவகாசமாக உற்றுப்பார்த்து அவைகளைப்பற்றிய விஷயங்கள் அதிகம் கற்றுக்கொள்ளலாம். உல்லாசசஞ்சாரத்திற்குப் பிறகு இலைகள், பூக்கள், காய்கள், பட்டைகள் முதலியவைகளைப்பற்றிப் பாடம் நடத்துவதும், பூச்சிகள், பிராணிகள் இவைகளைப்பற்றி வியாசம் எழுதுவதும் இலகுவாகும். கவனித்த விஷயங்களுக்கு ஏற்ற சித்திரம் வரைவதால் சித்திரப்பாடம் நடத்த வேண்டியதற்கும் வழிகள் ஏற்படுகின்றன. கணிதம், வாசகம் முதலிய பாடங்களோடும் உல்லாச சஞ்சார விஷயங்களைச் சம்பந்தப் படுத்தவேண்டும். சித்திரங்களை (கலர்) வர்ணச் சாக்பீஸ் உபயோகித்து பெரிய காகிதத்தில் பெரிய உருவங்களாக அப்படியே எழுதவேண்டும்.

10. வஸ்துக்கள் சேகரம் — உல்லாச சஞ்சாரத்தில் அநேக வஸ்துக்கள் சேகரம் செய்யலாம். இலைகள், பட்டைகள், செடிகள், பூக்கள், பிராணிகள் இவைகளெல்லாம் கொண்டுவரலாம். சேகரம் செய்வதில் மரங்களையும் செடிகளையும் அவைகளுக்குக் கெடுதி வரும்படி வெட்டக் கூடாது. சிற்சில பிராணிகளைப் பிடிக்க நேர்ந்தால் அவைகளைப் பாடசாலைக்குக் கொண்டுவந்து தீனி போட்டு வளர்த்து, விஷயங்கள் தெரிந்ததும் அவைகளை விட்டுவிட வேண்டும்.

11. ஒரு வருஷத்தில் நடத்தக்கூடிய உல்லாச சஞ்சாரம் — வாரத்திற்கு ஒரு முறையோ இரண்டு வாரத்திற்கு ஒரு முறையோ அவசியம் உல்லாச சஞ்சாரம் போய் வர வேண்டும். சுமார் ஒரு வருஷத்தில் 25 தடவை கஷ்டமில்லாமல் வெளியில் போய் வரலாம். இது வாரக் கடைசி நாளாகிய சனிக்கிழமைக் காலைப் பள்ளிக்கூடத்தை நிறுத்தி, காலையில் புறப்பட்டு சாயங்காலத்திற்குள் திரும்பிவந்து விடும்படி இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஞாயிற்றுக்கிழமை இளைப்பாற இலகுவாயிருக்கும். பிள்ளைகளைச் சந்தோஷப்படுத்தவும் வழியில் நடக்கும் போது உற்சாகப் படுத்தவும் வேண்டிய கதைகள் சொல்ல வேண்டும். கொஞ்சம் பணச் செலவுசெய்து சிற்றுண்டிகள் வாங்கி உல்லாச சஞ்சாரம் முடிந்ததும் தின்றுவிட்டுத் திரும்பி வரலாம்.

12. உல்லாச சஞ்சாரத்தினால் விளையும் நன்மைகள் — வஸ்துக்களை நேரில் பார்த்துக் கையாடுவதால் விஷயங்கள் மனத்தில் தெளிவாகப் பதிந்து விடுகின்றன. இயற்கைப் பொருள்களில் ஒரு பிரியமும் அவைகளுக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தமும் நன்றாக விளங்குகின்றன. பொருள்கள் சேகரம் செய்யும்விதமும் அவைகளைக் காப்பாற்றுவதால் காட்சிசாலை விருத்தியும் உண்டாகும். வெளியில்போய்ப் பழகுவதால் பிள்ளைகளின் அறிவு விசாலப்படுகிறது. உலகத்தில் நடந்துகொள்ள வேண்டிய வழிகள் நன்றாகப் பிடிபடுகின்றன. பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உள்ள ஒற்றுமையும் பிரியமும் அதிகப்படுகின்றன.

இதையெல்லாம் ஒருவாறு அறிந்திருந்த நம்மவர்கள் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் இதை அதிகமாக அநுசரித்து வந்தார்கள். வருஷத்தில் இரண்டு மூன்று தடவை முக்கியமாக உல்லாச சஞ்சாரம் கொஞ்ச வரும்படியோடு ஏற்படுவதுண்டு. அதாவது பதினெட்டாம் பெருக்கு; இது ஆடிமீ 18ஐ பழைய சுவடிகளைக் கட்டி ஆற்றில் போடுவது, நவராத்திரி காலத்தில் கோலாட்டம் போடுதல்.

இயற்கைப்பாட (Nature Study) சம்பந்தமாகமட்டும் உல்லாச சஞ்சாரம் நடத்துவதென்று நினைக்கக் கூடாது. எந்த விஷயமும் பிள்ளைகள் மனத்தில் பதியவேண்டுமானால் அவைகளைக்குறிக்கும் வஸ்துக்களைப் பிள்ளைகள் நன்றாகப் பார்த்திருக்க வேண்டும். ஒருமைல்தூரம் என்பதுளப்போது பிள்ளைகளுக்கு விளங்குமென்றால் ஒருதடவையாவது பிள்ளைகள் ஒருமைல்தூரம் நடந்திருக்க வேண்டும். ஒரு மணு புளி யென்பது மணு அளவு பிள்ளைகளுக்குத்

தெரிந்திருந்தால்தான் விளங்கும். ஆகவே சரித்திர சம்பந்தமான விஷயங்கள், பூகோள சம்பந்தமான விஷயங்கள் எல்லாவற்றையும் தெளிவாகக் கற்பிக்க உல்லாசஞ் சஞ்சாரம் மிகவும் உபயோகமானது.

P. C. KRISHNA AIYAR, B. A., L. T.,
Assistant Master,
Government Higher Elementary
Training School, Saidapet.

PRAYER IN SCHOOLS

பள்ளிக்கூடத்தில் தெய்வ வணக்கம்

நாம் எத்தொழிலைச் செய்தாலும் முதல் கடவுளை வணங்கிப் பிறகு அதனைச் செய்யத் தொடங்குதல் நமது கடமை. இவ்வழக்கம் நமது தேசத்தில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. சுபா சுபகாரியங்களைச் செய்யத் தொடங்கும் பொழுதெல்லாம் பிராமணர் 'நான் செய்யப்புகுங் காரியம் யாதொரு விக்கினமுமின்றி முடிவுபெறப் பிரார்த்திக்கிறேன்' என்ற பொருளையுடைய ஒரு சம்ஸ்கிருத சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே தொடங்குகின்றனர். ஜனங்கள் புதுமனை கட்ட இடம் அளவு செய்தல், புதுநிலைவைத்தல், கிருஹப்பிரவேசம் முதலான ஒவ்வொரு காரியத்திலும் தெய்வபூசை செய்து வருகின்றனர். நாகரிகமற்ற குடியானவர்களும், முதல் முதல் விதைக்குங்காலத்திலும் அறுவடைக் காலங்களிலும் கொஞ்சத் தானியத்தைத் தண்டாய் எடுத்துவைத்திருந்து, அதை அரிசியாக்கிச் சமைத்து, கருப்பணசுவாமி, ஐயனார், சோணைத் தெய்வம், காளியம்மன் முதலான அவரவர்களுக்குரிய வழிபடி கடவுளுக்கு நிவேதனம் செய்து வருகின்றனர். கிறிஸ்தவர்கள் புதியகாரியங்களைச் செய்ய ஆரம்பிக்கும்பொழுது ஓர் இடத்தில் அனைவருங்கூடி கடவுள்மீது ஸ்தோத்திரப்பாக்கள் சொல்கிறார்கள். மகம்மதியரும் ஒருகாரியத்தைச் செய்யப் புகும்பொழுது கடவுளை நினைத்து, 'பாத்தியா ஓதல்' என்னும் வழக்கத்தை யனுசரித்து வருகின்றனர்.

'கற்றதினு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்' என்றார் திருவள்ளுவர்.

(ஒருவன் அநேக நூல்களைக் கற்றறிந்த சிறந்த பண்டிதனாயிருந்தாலும் தெய்வபக்தி யென்னும் ஒரு குணம் அவனிடத்தில் இல்லையாயின், அவனது கல்வியால் யாதொரு பயனுமில்லை;) ஆகையால் அக் கல்வி கற்பிக்குந் தொழிலையே கைக்கொண்ட உபாத்தியாயர்களாகிய நாம் சிறுவர்களுக்கு இளம்பிராய முதற் கொண்டே கல்வியோடு தெய்வ பக்தியையும் புகட்டி வரவேண்டுவது அவசிய மன்றோ?

I. மாணவர்க்குத் தெய்வ பக்தியைப் புகட்டும் விதம் — 1. தினந்தோறும் காலையில் பள்ளிக்கூடத்தில் வேலை ஆரம்பிக்கக் குறிப்பிட்ட நேரத்திற்கு 10, 15 நிமிஷங்களுக்கு முன்னமே, உபாத்தியாயரும் பிள்ளைகளும் ஒருமித்துக் கூடி நின்று கடவுள் மீது ஸ்தோத்திரப் பாடல்களைச் சொல்லவேண்டும்

2. தெய்வச் செயலுக்கு உதாரணமான 'வேடனும் புறாவும்' போன்ற கதைகளைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து நாடகமாக நடத்தவும் பழக்குதல்.

மேற்கண்ட முறைகளை அனுசரித்தால் பிள்ளைகளின் சுபாவ குணங்களிலொன்றாகிய 'ரஸஞானம்' விருத்தியடையும்.

3. உள்ளூரில் ஜனங்களுடைய எண்ணத்துக்கு அநுகூலமாயும் விரோதமாயும் உண்டாகும் சம்பவங்களை அப்போதைக்கப்போது பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து தெய்வச் செயலை ரூபித்தல்.

4. இயற்கைப் பாடம் போதிக்கையில், ஒவ்வொரு பொருளின் தன்மை, அவற்றை ஒன்றோடொன்று சம்பந்தப் படித்துவதால் உண்டாகும் அரிய குணங்கள், பிராணிகளுக்கு அவற்றின் வழக்கங்கள் அவை வசிக்கும் இடத்தின் சீதோஷ்ண ஸ்திதி ஆகாரங்களுக்குத் தகுந்தபடி உறுப்புக ளமைந்திருக்கும் விதம், தாவரங்களின் உற்பத்தி, பிராணிகளில் ஆண் பெண் சம்பந்தத்தால் இனவிருத்தியடைவதுபோல் புஷ்பங்களின் முகரந்தம் அண்டாசயத்தில் கலப்பதால் விதை பிடித்தல், முதலான விஷயங்களை எடுத்துச் சொல்லும்பொழுது இவற்றிற் கெல்லாம் காரணராகிய கடவுளின் பெருமையை ஞாபகப்படுத்துதல்.

II. ஸ்தோத்திரப் பாடல்கள் அமைக்கும் விதம் — பிள்ளைகள் இலகுவாய்ச் சொல்லக்கூடிய ராகத்தில் அமைந்திருக்க வேண்டும்.

வாலறிவன் = மெய்யறிவை யுடைய கடவுள்.

ஒரு பள்ளிக்கூடத்தில் பல மதஸ்தர்கள் படிப்பார்களாதலால் ஒவ்வொரு மதஸ்தர்களுக்குரிய சுப்பிரமணியர், ராமர், நடேசர், முதலான நாமங்களைச் சேர்க்காமல் ஈசன், கடவுள், சர்வேசுவரன், பரமபிதா, அகிலநாதன் முதலான பொது நாமங்களை உடையதாயிருக்கவேண்டும்.

III. பிரார்த்தனை — 1. ஒவ்வொரு மனிதரும் அடைய வேண்டிய முதலாவது பாக்கியம் அரோக திடகாத்திரம். அஃதின்றேல் மற்றைச் செல்வங்களால் யாதொரு பயனுமில்லை. தேகபலத்தையும், மன ஊக்கத்தையும் உத்ஸாஹத்தையும் கெடுத்து, தனக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் உறவின்முறையாருக்கும் கவலையையும் வெறுப்பையும் உண்டுபண்ணுவது நோயல்லவா? நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம். வியாதியால் பீடிக்கப்பட்ட சீமானைக் காட்டிலும் அன்றன்று கூலிவேலை செய்து ஜீவனம் செய்யும் சரீர சௌக்கியமுடைய எளியவனே மேலானவன்.

2. ஆதலால் இகஜன்மத்திலே அரோக திடகாத்திரமாயிருக்கும்படி சகல சம்பத்தையுங் கொடுத்து உமது திருவருளுக்கு ஆளாக்கிக்கொள்ளவேண்டும் என்ற பிரார்த்தனை யடங்கியிருக்க வேண்டும்.

IV. பயன் — லோகபந்தங்களினின்று நீக்கி நித்தியானந்தத்தை யடையச் செய்வது தெய்வ பக்தியேயாம். திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், கிறிஸ்துநாதர், மகம்மது முதலான மஹான்கள் கடவுளின் திருவருளுக்குப் பாத்திரர்களாய் அவரருளால்,

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார். (திருவள்ளுவர்.)

என்றபடி அரிய செயல்களைச் செய்தும் இனிய நூல்களியற்றியும் என்றும் அழியாத கீர்த்தியை யடைந்து விளங்கிக் கொண்டிருப்பதே சாட்சியாம்.

S. KRISHNAN,
Headmaster, Board Elementary School,
Karunyalakudi.

DEPOSIT 1914 MADRAS.

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1914வது நொவெம்பர்மீ | மாதம் 6

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் பிரபு — ஓர் உபாத்தியாயர்

Recitaion and Examinations

யஸ்னயா பாடசாலையில் இறுத்தவ வேத புஸ்தகத்தில் அடங்கிய சரித்திரமும் ருஷியா தேசத்துச் சரித்திரமும் போதிக்கப்பட்டு வந்தன. உபாத்தியாயர் சரித்திர புஸ்தகத்திலிருந்து ஒரு கதையை எடுத்து வாசிப்பார்; அல்லது தம் ஞாபகத்திலிருந்து ஏதாவது ஒரு கதையைச் சொல்லுவார். கதை முடிந்ததும் பிள்ளைகளைக் கேள்விகள் கேட்பார். ஒரு கேள்வி கேட்ட உடனே பிள்ளைகள் எல்லோரும் ஒரே கூச்சலாகப் பதில் சொல்ல ஆரம்பிப்பார்கள். இதனல் அதிக கலவரம் ஏற்படும் பக்ஷத்தில் ஒரு பிள்ளையைச் சுட்டிக் காட்டி அவனைக் கேட்பார். அவனல்

உத்தரம் அளிக்க முடியாவிட்டால், மற்றவர்கள் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். இந்த வழக்கம் தானாகக் காலக்கிரமத்தில் ஏற்பட்டது; வகுப்பில் ஐந்து பிள்ளைகளே இருந்தாலும் சரி, முப்பது பிள்ளைகள் இருந்தாலும் சரி, யாதொரு முட்டுப்பாடும் நேரிட்டதில்லை. கூச்சல் அளவுக்கு மிஞ்சிப் போகமாத்திரம் விடுவதில்லை; ஆனால் பிள்ளைகள் மனத்தில் பொங்கி எழுகின்ற சந்தோஷகரமான உற்சாகத்தையும் ஒவ்வொருவனும் தானே சிறக்க வேண்டும் என்னும் அவாவையும் அடக்காமல், அவசியமாக வேண்டிய அளவு வழிப்படுத்திக் கொண்டு போவார்.

ஒரு புதிய உபாத்தியாயர் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது அப் பிள்ளைகள் ஒரே கும்பலாகக் கூடி, கூக்குரலிட்டு அவர் முதுகின்மீதும் மடியின் மீதும் ஏறித் தவக்குவதைச் சிறிதும் சகிக்க மாட்டாமல், உடனே அவர்களை அடக்கி விட்டார்.

அவ்வாறு அடக்குவதனால் வகுப்புக்கு நேரும் தீமையைப் பற்றி டால்ஸ்ட்டாய் மிகவும் வருந்துகிறார். உபாத்தியாயர் போதிப்பதை மாணாக்கர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் அவரை அணுகி, அவரது முகக் குறிப்பையும் அவயவக் குறிப்பையும் உன்னிப் பார்க்க வேண்டியது, அத்தியாவசியகம் என்று டால்ஸ்ட்டாய் அபிப்பிராயப் படுகிறார். புதிதாக அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்த உபாத்தியாயர் பிள்ளைகளைத் தத்தம் இடங்களில் அமரச் செய்து, ஒவ்வொரு வரையும் ஒரு கேள்வி கேட்டு, அப்போதைக் கப்போது அவனவனே உத்தரம் அளிக்கச் சொன்னார். அதனால் ஒவ்வொரு சிறுவனும் ஒழுங்காக எழுந்து நின்று உத்தரம் அளிக்க முயன்று, நாக்குத் தழுதழுத்துத் தடுமாறி, வெட்கத்தாலும் கலவரத்தாலும் துன்பப் பட்டானும். அதைக் கண்ட உபாத்தியாயர் 'நல்லது, அப்புறம்.....அதற்கப்புறம் என்ன? சொல், பயப்படாதே,' என்று பக்ஷமாகப் புன்சிரிப்புடன் பிள்ளைக்குத் தைரியம் சொல்லிப்பார்த்தார். இது தான் இப்போது சமுதாயமாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நடந்து வரும் வழக்கம்.

இம்மாதிரி பிள்ளைகளில் ஒவ்வொருவனுகத் தனியே எழுந்து நின்று கேள்விகளுக்குப் பதில் சொல்லும் வழக்கத்தைப் பார்க்கிலும் அவர்களுக்குத் தீமை விளைவிப்பது வேறொன்று மில்லை

யென்று டால்ஸ்ட்டாய் உறுதியாக நம்புகிறார். அதுவேயன்றி யப்படிச் செய்வதனால் பிள்ளைகள் மனத்தில் 'இவர் நமது -பாத்தியாயர்; நமக்கு மேலானவர்; நாம் அவருக்கு அடங்கி டக்க வேண்டும்" என்கிற பயமும், உபாத்தியாயர் மனத்தில், இவர்கள் சிறு பிள்ளைகள், ஒன்று மறியாதவர்கள், இவர்களை நாம் அடக்கி ஆளவேண்டும்; பயங்காட்டி நல்வழிப்படுத்தவேண்டும்' என்கிற எண்ணமும், ஆகிய இரண்டும் தீமையே செய்பவை என்று வற்புறுத்திகிறார். "உபாத்தியாயர் என்று பெயர் வகித்த ஒருவன் யாதொரு உரிமையும் இல்லாமல் சிறு குழந்தைகளை இவ்வாறு உபத்திரவத்துக்கு உட்படுத்துவதைப் பார்க்க என் மனம் சிறிதும் சகிக்கவில்லை' என்று டால்ஸ்ட்டாய் எழுதுகிறார். பிள்ளைகள் தனிமையாக எழுந்து நின்று, வெட்கத்தாலும் பயத்தாலும் உடம்பெல்லாம் வியர்த்து, கேள்விக்குப் பதில் சொல்ல பயப்படுகிறார்கள் என்கிற விஷயம் உபாத்தியாயர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கே அது இஷ்டமாக இருக்கிறதில்லை. அப்படி யிருக்க அவர்கள் ஏன் அதை அநுசரிக்க வேண்டும் பிள்ளைகள் தனிமையாக எழுந்து நின்று பேசக் கற்க வேண்டும் என்று ஒரு நியதி ஏற்படுத்திக்கொண்டு அதன்பொருட்டன்றோ இவ்வளவு பாடும் தேடிக்கொள்ளுகிறார்கள்.

பிள்ளைகள் ஏன் தனியே எழுந்துநின்று மனப்பாடம்சொல்ல வேண்டும் என்பதன் காரணம் ஒருவருக்குந்தெரியாது. வெளியார் வந்து பார்க்கும்போது 'பேஷ்! வெகு நன்றாயிருக்கிறது' என்று மெச்சவேண்டும் என்ற விருப்பம் ஒன்றைத்தான் காரணமாகக் கூறலாம். ஆனால் வெளியார் வந்து பார்ப்பதை டால்ஸ்ட்டாய் அறவே வெறுக்கிறார். அது அனாவசியமான உபத்திரவம் என்பது அவருடைய சித்தாந்தம். அதனால் அவருக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்னவென்றால், மாணாக்கர்களுக்கு வீட்டு வேலைகள் இருப்பதும் கேள்விகள் கேட்டுத் தனியே எழுந்து பதில் சொல்லப் பழக்குவதும் பரீக்ஷைகள் நடத்துவதும், தொன்றுதொட்டுத் தொடர்ந்துவரும் மூட நம்பிக்கைகளின் சின்னங்களாம். இவற்றால் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வருபவர்கள் பிள்ளைகளுக்கு உண்மையாகத் தெரியாத விஷயங்களை அவர்கள் உணர்ந்ததாக எண்ணி ஏமாறுகிறார்கள்; அதாவது உபாத்தியார்கள் வந்தவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி, அவர்கள் மூடத்தனத்தைக் கண்டு களிக்

ரூர்கள். அல்லது மாணக்கர்கள் உண்மையாக உணர்ந்த விஷயத்தைக்கூட உணரவில்லை என்று வந்தவர்கள் எண்ணுகிறீர்கள். நாற்பது வயதுள்ள ஒருவனை பூகோள சாஸ்திரத்தில் அவனுக்கு எவ்வளவு தேர்ச்சி இருக்கிறதென்று பரீக்ஷிப்பது எவ்வளவு மூடத்தனமோ அவ்வளவு மூடத்தனமேயாகும் பத்து வயது பாலகனைப் பரீக்ஷிப்பதும் என்கிறார் டால்ஸ்ட்டாய். ஒருவனுடைய தேர்ச்சி எவ்வளவு என்று நாம் அறியவேண்டுமானால் அவனுடன் நாம் பல மாதங்கள் கெருங்கிப் பழகவேண்டும். போதனைமுறையில் பரீக்ஷைகள் என்ற நியதி ஒன்று ஏற்படுவதால், மாணக்கர்கள் அவற்றை முக்கியமாகக் கருதும் வழக்கம் ஏற்பட்டு வருகிறது. அதனால் அவர்கள் சரித்திரம் என்றும் பூகோளம் என்றும் தாம் கற்க முயலும் விஷயங்களில் மனத்தை நாட்டாமல், பரீக்ஷையில் எந்தவிதமாக எழுதினால் அதிக மதிப்பு உண்டாகும் என்னும் நோக்கத்திலேயே நின்றுவிடுகிறார்கள்.

டால்ஸ்ட்டாய் தம் வகுப்பில் சரித்திரபாடம் நடத்தும் போது ஒருமுறை மாணக்கர்களைக் கேள்விகள் கேட்டு அவர்களைத் தனியே எழுந்து நின்று பதில் சொல்லச் செய்து, அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளைப் பரிசோதித்துப் பார்த்தாராம். தைரியசாலிகளா யிருந்த சிலர் மாத்திரமே பதில் சொல்லி வந்தார்கள். மற்றவரிற் சிலர் மௌனம் சாதிப்பதும், மற்றும் சிலர் துக்கம் பொறுக்கமாட்டாமல் அழத்தொடங்குவது மானார்கள். இவ்விருவகை மாணக்கர்களுக்கும் விஷய உணர்ச்சி உண்டாகவில்லை என்றுதானே எண்ணவேண்டி யிருந்தது. ஆனால் அந்த அபிப்பிராயம் தவறு என்று அவருக்கு உண்மையாகத் தெரியும். அதுபோலவே புதிய உபாத்தியாயரும் 'அந்தப்பிள்ளை அரை மூடன்; இந்தப் பிள்ளை முழுமூடன். சானவன் என்னும் சிறுவன் வாயில் ஒரு வார்த்தை வரவழைக்க முடியவில்லையே' என்று வருந்தினார். (இன்னும் வரும்)

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS 7 DEC 1914 MADRAS.

CLOTHING

ஆடை

1. 'ஆடை' என்பது 'அடு' என்னும் பகுதியினின்று பிறந்த சொல். தேகத்தை 'அடு'த்திருக்கத்தக்கது 'ஆடை' எனப்பட்டது இதற்கு நேரான ஸம்ஸ்கிருத பதம் 'வஸ்திரம்.' இதற்குப் 'போர்த்துவது,' 'மூடுவது' என்று பொருள். 'வஸ' என்னும் பகுதியினின்று 'வஸ்திரம்' என்னுஞ் சொல் உண்டாயிற்று.

2. தேகத்தைக் காத்துக்கொள்வதற்கு அறிவும் கரணங்களும் வேண்டும். இவை இரண்டும் மனிதருக்கு இருக்கின்றனவேயல்லாமல், மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இல்லை. ஆதலால், அவை தம் உடலைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் திறமையில்லாதிருக்கின்றன.

3. குளிர், ஈரம், சூரிய வெப்பம், மழை, காற்று, பனி முதலியவைகளினின்று எல்லாப் பிராணிகளும் தம் தேகத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமல்லவா? அப்படிக் காத்துக் கொள்வதற்கு அறிவும் அனுகூலமான சாதனங்களு மில்லாத மிருகம், பறவை முதலிய பிராணிகளுக்கு இயற்கையிலே ஆடை அமைந்திருக்கின்றது.

4. அந்த ஆடை ரோமவடிவாக வேனும், சிறகு வடிவாக வேனும் இருக்கின்றது. அது பருவத்திற்குத் தக்கவாறு மாறுகின்றது. எப்படியெனில், மாரிக்காலத்தில் குளிர்தாங்கும்பொருட்டுச் செறிந்து வளர்கின்றது; கோடைக் காலத்தில் மெலிவுறுகின்றது.

5 இயற்கையில் ஆடை அமையாத மனித ஜாதிக்கு அறிவும் கரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மனிதர் தம் அறிவினாலும் கைகளினாலும் ஆடை அமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

6. சரீர அமைப்பில் மனிதனுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் மேற் சொல்லியபடி வித்தியாசம் இருக்கின்றது. மனிதனுக்கு இயற்கையில் ஆடை ஏற்படவில்லை; மற்றப் பிராணிகளுக்கு ஏற்

பட்டிருக்கின்றது. அதுவல்லாமல், மனிதனுக்கு மனப்பயிற்சிக் கேற்ற அனுகூலம் உண்டு; மற்றப் பிராணிகளுக்கு அந்த அனுகூலம் இல்லை.

7. மனப் பயிற்சியில்லாததனால் மற்றப் பிராணிகளுக்கு வெட்கம், மானம் முதலிய உணர்ச்சிகள் இல்லை; மனிதனுக்கு மனப் பயிற்சியிருப்பதனால் அவ்வுணர்ச்சிகள் உண்டு. அவ்வுணர்ச்சிகள் முதிர்ந்து மரியாதை, விநயம், சபைக்குரிய தன்மை, மட்டு, அடக்கம், ஏற்பு முதலிய கொள்கைகளும், இவை பொருந்தியிருத்தலே அழகு என்னும் கொள்கையும் ஏற்பட்டன.

8 இவ்வாறு, உடம்பைக் காத்துக்கொள்ளும் பொருட்டும், மரியாதையுடன் கூடிய அழகு பொருந்தி விளங்கும் பொருட்டும் முதன் முதலில் ஆடை என்பது கற்பிக்கப்பட்டது. ஆடையணியாதிருத்தல் அவமானமென்றும், அசுத்த மென்றும், ஒழுக்க வழுவென்றும் ஏற்பட்டது.

9. மனிதருடைய லௌகிக வைதிக காரியங்களுக் கெல்லாம் ஆடை இன்றியமையாத அங்கமாயிற்று. அதனால், அதற்கு ஒரு விதமான யோக்கியதையும் சக்தியும் உண்டாயின. எப்படியெனில், காரியத்திற்கும், காலத்திற்கும், சமயத்திற்கும் ஏற்றபடி ஆடை மாறுவதனால், ஒவ்வொரு விதமான ஆடைக்கு ஒவ்வொரு யோக்கியதை ஏற்பட்டது.

10 மனத்திலுள்ள எண்ணங்களையும், கொள்கைகளையும், உத்தேசித்த காரியங்களையும் பிறருக்குத் தெரிவிப்பதற்கு ஆடை என்பது அறிகுறியானதனால், பிறருடைய மனத்தை இயக்கும் சக்தி அதற்கு ஏற்பட்டது. இதுவன்றி, மானுவமானக் கொள்கைகளும், சுத்தாசுத்த ஒழுக்கங்களும், சாமானிய நோக்கங்களும் ஆடையினால் விளக்கப்படுகின்றன வென்று மேலே 8-ஆம் பகுதியில் கூறினோம்.

11. மனப் பாங்கும், கொள்கைகளும், நீதி முறைகளும் தேசத்திற்கும் ஜாதிக்கும் தக்கபடி மாறுபடுகின்றன வாதலால் அவைகளுக்கு இணங்க அந்தந்தத் தேசத்தாரின் ஆடைகளும், அந்தந்த ஜாதியாரின் ஆடைகளும் வேறுபட்டுக் காண்கின்றன.

12. தேகத்தை அழகு படுத்துவதும் (7-ஆம் பகுதியைப் பார்க்க), மனத்தை இயக்குவதும் (10-ஆம் பகுதியைப் பார்க்க) ஆடையின் தன்மைகளென்று சொன்னோம். நாகரிக முதிர்ச்சியில் இவ்விரண்டு தன்மைகளும் சிறப்பிக்கப் பெற்றன. சிறப்பித்தலாவது அதிகப் படுத்துதல். இதனால், ஆடை என்பது வசீகரணக் கருவியாயிற்று.

13. அழகை அதிகப் படுத்திக்கொள்ளும் எண்ணத்தினாலும், வசீகரண சக்தியை வளர்க்கும் நோக்கத்தினாலும் ஆடைகளில் பலவகை மாறுபாடுகளும், அவைகளை உடுக்கும் வகைகளில் புதிய மாதிரிகளும் ஏற்பட்டன. நாகரிக முதிர்ச்சியினால் ஏற்பட்ட இந்த மாறுபாடுகளையும் மாதிரிகளையும் 'கோலம்' (Fashion) என்னும் சொல்லினால் குறிப்போம். அப்போதைக் கப்போது புதிது புதிதாய்த்தோன்றுவது 'இன்றைக் கோலம்' (Fashion of the day) என்போம்.

14. 'கோலம்' என்னும் பேய் ஜனங்களின் மனத்தில் குடி கொண்ட பிறகு, சரீரத்தைக் காக்கவேண்டும், மானத்தையும் மரியாதையையும் காக்கவேண்டும்என்னும் முதற்கருத்துகள் அகன்று ஒழிந்தன. 'கோலம்' என்பது 'பேய்க் கோலம்' ஆயிற்று. எல்லாரும் பேய்க் கோலத்தை மேற்கொண்டு நடப்பவர்களானார்களேயல்லாமல், ஆரோக்கியத்தையும் மரியாதையையும் கவனிப்பவர்கள் அரியவர்களானார்கள்.

15. கோலம் என்னும் பேய் பிடித்ததனால் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டவர்கள் பெரும்பாலும் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசத்தவர்களே. அவர்களிலும் ஸ்திரீகளே அந்தப் பேய்ப் பிடித்துத் திரிபவர்கள். பேய்க் கோலத்தை ஓட்டி, ஆரோக்கியத்தையும் மரியாதையையும் நிலை நிறுத்துவதற்கு அத்தேசங்களில் அனேக சங்கங்கள் ஏற்பட்டுப் பாடு பட்டு வருகின்றன.

16. அந்தச் சங்கத்தவர்கள் தம்மால் இயன்றமட்டும் ஜனங்களுக்கு நற்போதனை செய்து வருகிறார்கள். கோலமென்னும் பேய்க்கு அடிமைகளாகி ஜனங்கள் ஆடைகளில் உண்டாக்கிக் கொண்டிருக்கும் தீமையான வழக்கங்களை அவர்கள் திருத்தி வருகிறார்கள். பேய்க் கோலத்தினால் விளையும் ஆபத்துக்களை

யெல்லாம் தெளிவாய் எடுத்துக் காட்டி ஆடை என்பது ஆரோக்கியத்தின் பொருட்டு தரிக்கத் தக்கது, அது ஆடம்பரமில்லாமல் சாமானியமாய் இருக்க வேண்டும், மரியாதையாயும் நாணத்தைக் காக்கத் தக்கதாயும் இருக்க வேண்டும் என்று ஜனங்களுக்கு வற்புறுத்துகிறார்கள்.

17. மேற்றிசை நாடுகளில் நேர்ந்திருக்கிற தீய திருத்தங்கள் நமது தேசத்தில் உண்டாகவில்லை. ஆயினும், மேற்றிசையாரைப் பார்ப்பதனலும், அவர்களுடன் பழகுவதனலும் நம்மவர்களிற் சிலர் தம்முடைய ஆடைகளில் புதிய பாங்குகளை அமைத்துக் கொள்ளப் பிரயத்தனப் படுகிறார்கள். கோலம் எப்படி மாறினலும் ஆடை அணிவதன் முதற் கருத்தாகிய ஆரோக்கியத்தையும் மானத்தையும் காக்கும் எண்ணம் மாறுமல் இருக்க வேண்டும். காலத்திற்கும், வேலைக்கும், பருவத்திற்கும், சீதோஷ்ண ஸ்திதிக்கும், மற்றுமுள்ள சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி ஆடைகளை மாற்றிக் கொள்வது நியாயமே.

18. அந்தந்தத் தேசத்திற்கும் அங்குள்ள சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி அந்தந்தத் தேசத்தாருக்கு ஆடைகள் அமைந்திருக்கின்றன என்றும், அவரவர்களுடைய மனப் பாங்குகளை ஆடைகள் தெரிவிக்கின்றன என்றும் மேலே 11 ஆம் பகுதியில் சொன்னேம். ஆதலால், ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருடைய கோலத்தை மேற்கொள்வது எவ்வளவு மட்டும் பொருத்தமென்பதை இதைப் படிப்பவர்களே ஆலோசித்துக் கொள்ளலாம்.

19. யுகங்கள் மாறினலும், மானிடத் தன்மை மாத்திரம் முற்றும் மாறுவதாகத் தோன்றவில்லை. தேகத்தை அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென்று பெண்பாலார்க்கு இயற்கையாய் உள்ள எண்ணம் அநேகாலமாக ஒரே மாதிரியாய் இருக்கின்றது. இக்காலத்தில் அவர்களுக்கு அலங்காரப் பிரியம் எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவு முற்காலத்திலும் இருந்ததாகவே தெரிகிறது.

20. தேகத்தை அலங்கரித்துக் கொள்வதற்கு எவ்விதத்திலும் பிரயத்தனப் படாதவர்களை நாகரிகச் சாதியார்கள் லேனும், நாகரிகமில்லாத காட்டுமிராண்டிச் சாதியார்களி லேனும் காண்பதரிது. அந்த இரண்டு வகை ஜனங்களும் தேகத்தை அலங்கரித்துக் கொள்வதற்குச் செய்யும் பிரயத்தனங்கள் பெரும்பாலும

மானிட வடிவத்தைச் சிறப்பிப்பதற்கும் பதிலாக அதன் இயற்கை யழகை மாற்றி விகாரப்படுத்தி விடுகின்றன.

21. அப்போதைக்கப்போது மாறும் நாகரிகக் கோலங்களும் நம்பத் தக்கவையல்ல. ஏனெனில், புதிய கோலமொன்று தோன்றும்போது, அது பொருத்தமில்லாததைக் கண்டு முதன் முதலில் ஜனங்கள் திடுக்கிட்டுப் பின் வாங்குவார்கள். அது சிறிதுகாலம் நடை பெற்ற பிறகு அந்தப் புதிய கோலத்தைக் கண்டு மனம் அதிராமல் அதனைப் பார்த்துப் பொறுத்துக் கொள்ளுவார்கள். இன்னும் சிறிதுகாலம் செல்லச் செல்ல அந்தப் புதிய கோலத்தையே வியந்து கொண்டாடுவார்கள். முடிவில், அந்தக் கோலம் வழக்கொழிந்து, அதற்குப் பதிலாக வேறு கோலம் ஏற்படுமானல் அப்பொழுது அதுவரையிற் கொண்டாடி வந்த கோலத்தைக் கொடியதென்று ஒதுக்கித் தள்ளுவார்கள்.

22. ஆனல், ஓர் அம்சத்தில் மாத்திரம் பெண்பாலார் சிறிதும் மாறுவதில்லை. தேகத்தை அலங்கரித்துக் கொள்வதில் அவர்களுக்குப் பிரியம் எந்தக் காலத்திலும் மாறாதிருக்கின்றது. தங்களை * மனோஹரமாகச் செய்து கொள்வதற்கு அவர்கள் எப்பொழுதும் தம்மால் இயன்றமட்டும் பிரயத்தனப் படுவார்களென்றே நினைக்க வேண்டியிருக்கின்றது.

23. அவர்களுடைய பிரயத்தனம் பலிக்கவில்லை யென்றல் போதுமான திரவியமும் மற்ற அநுகூலங்களும் இல்லாதது காரணமாயிருக்கலாம்; அல்லது, சிறப்பித்துக் கொள்ளும் வழி வகைகள் அவர்களுக்கு நன்றாய்த் தெரியாதது காரணமாயிருக்கலாம். அதாவது, பணக் குறைவினலாவது, அறிவுக் குறைவினலாவது பெண்பாலார் தம்மை அழகு படுத்திக் கொள்ளாமலிருக்கலாமே யொழிய, அழகு படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில் ஆசைக் குறைவினல் அப்படி இருக்க மாட்டார்கள். ஏழைகளுக்குப் பொருளின்மை முக்கிய காரணம்; பணக்காரருக்கு அறிவின்மை அல்லது அவிவேகம் (bad taste) முக்கிய காரணமாகும்.

24. உண்மையை உற்று நோக்கில், அழகு என்பது மிகச் சாமான்யமான ஆடை அணிவதிலே தோன்றுகின்றது; படா-

* மனத்தைக் கவரத் தக்கதாக.

டோபத்தினால் அழகு அதிகப் படுவதில்லை, விகாரம் அதிகப் படுகின்றது. இவ் வுண்மையை அனுசரித்தே ஆரியர்களின் ஆடைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

25. கிறிஸ்தவர்களுடைய மத நூலாகிய பைபிலும் இவ் வுண்மையையே வற்புறுத்துகின்றது. "நாணத்தையும் அமைதியான புத்தியையும் காத்துக் கொள்ளும் பொருட்டு ஸ்திரீகள் மருங்குள்ள ஆடைகளினால் தங்களை அலங்கரித்துக் கொள்வார்களாக" என்று I திமோதி ii, 9 கூறுகின்றது. இதனால், ஆடைகளில் படாடோபம் கூடாதென்றும், பகட்டான வர்ணங்கள் கூடாவென்றும், அதிகமான சிங்காரம் கூடாதென்றும் பைபில் விதிக்கின்றது. பிறருடைய மனத்தைக் கவருவதற்காவது புகழ்ச்சி பெறுவதற்காவது எண்ணங் கொண்டு எவ்விதமான யுக்தியும் செய்யக் கூடாதென்பது 'ஆசாரமான ஆடை' அணிய வேண்டுமென்று இயேசுகிறிஸ்து சொல்லுவதனால் தெளிவாகின்றது.

26. மேற் சொல்லிய கட்டளையிலே (I திமோதி ii 9) நம்முடைய ஆடை அதிகப் பணச் செலவு கொண்டதாய் இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்தும் பொருட்டு, "பொன், முத்து, மற்றுமுள்ள விலை உயர்ந்த உடைகள் கூடாவாகும்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

27. பணம் என்பது கடவுள் நம் வசத்தில் பொதுப்புக் கட்டியிருக்கிற நிதி. அப்படிப் பொதுநன்மைக்கு உபயோகிப்பதற்காகப் பொறுப்புக் கட்டியிருக்கிற சொத்தை இறுமாப்பினால் நம்மைப் பெருமை படுத்திக் கொள்வதற்கும், நம்முடைய பேராசையைத் திருப்திப் படுத்திக் கொள்வதற்கும் செலவிடுவது தகுமோ? கடவுள் ஒப்புவித்த பொறுப்பை வகித்து நடக்கும் புண்ணியர்களுடைய கையில் அந்தப் பணம் பலித்தவர்களுக்கு அன்னம் அளிக்கவும், அநாதைகளுக்கு ஆடை அளிக்கவும், நொந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும், நோய்ப் பட்டவர்களுக்கு ஆரோக்கியமளிக்கவும் கருவியாகும்.

28. இப்பொழுது படாடோபத்திற்காகச் செலவிடும் திரவியத்தைப் புத்தியுடன் நல்ல வழியில் செலவிட்டால் எண்ணிறந்த ஜீவகோடிகளுக்குச் சுக மளிக்கலாம். கிறிஸ்து முதலான பெரி-

யோர்களுடைய வாழ்க்கை நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தால், அவரவரும் தம்முடைய அகங்காரத்தையும் அதிக ஆசையையும் அடக்கிக் கொள்வதனால் அநேகருக்குப் பேருபகாரம் செய்யலாம் என்பது விளங்கும்.

29. கோலத்தையும் பகட்டையுங் கருதி இப்பொழுது ஆடையாபரணங்களில் வீணே செலவாகிற பணத்தைக் கொண்டு எத்தனை பிராணிகள் உண்டு உடுத்துச் சுகமாய் வாழுவதற்காகும்? அத்தனை ஜனங்களுக்கு உண்டாகக் கூடிய நன்மையை யெல்லாம் கொடும்பாவியாகிய கோலமென்னும் பேயும், பாழென்னும் பகட்டும் கொள்ளை யிட்டுப் போகின்றனவே!

30. ஆடை ஒழுங்கானதாயும், நாணத்தைக் காக்கத்தக்கதாயும், சாமானியமானதாயும் இருக்கவேண்டுமென்று சொன்னேம். அது நாணயமானதாயும், தகுதியான நிறங்களமைந்ததாயும், உழைக்கத்தக்கதாயும் (நீடித்து உபயோகிக்கத்தக்கதாயும்) இருத்தல்வேண்டும். பகட்டாயிருக்கும் ஆடைகளை யொழித்து, பலகாலம் நீடித்து உழைக்கத் தக்கவைகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

31. தேகத்திற்குப் போதுமான உஷ்ணத்தை ஊட்டி ஆடையானது காற்று, குளிர் முதலியவைகளினின்று அதைக் காக்கவேண்டும். விவிலியத்தில் "பழமொழி"க் காண்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் அறிவுடைய மாது "பனியினால் தன் குடும்பத்திற்குப் பயமில்லை யென்று கவலை யற்றிருந்தாள். ஏனெனில், குடும்பத்தவர்க ளெல்லாருக்கும் கெட்டியான ஆடைகள் இருந்தன." —பழமொழி (Proverbs), XXXI, 21.

32. ஆடை சுத்தமானதாய் இருக்க வேண்டும். ஆடை அசுத்தமா யிருந்தால் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். அசுத்தமான ஆடையினால் தேகமும் மனமும் அசுத்தமாகும். "தேகமே தேவாலயம்" என்று மைத்திரேயோபநிஷத்து கூறுகின்றது. அதுபோலவே, விவிலிய நூலும் "உன்தேகம் கடவுளின் வீடு..... கடவுளின் வீட்டை அசுத்தப் படுத்துகிறவனைக் கடவுள் அழிப்பார்" என்று (I கொரிந்தியன்ஸ், iii 16, 17) வற்புறுத்துகின்றது.

33. எல்லாவிதத்திலும் ஆடை ஆரோக்கியமளிக்கத்தக்கதாயிருக்க வேண்டும். விவிலியத்தின்படி, "மற்றெல்லா விஷயங்களை-

யும் விட முக்கியமாக ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்'' என்று கடவுள் நமக்குக் கட்டளை யிட்டிருக்கின்றார். இங்கே, ஆரோக்கியம் என்பதனால், தேகத்தில் ஆரோக்கியமும் மனத்தில் ஆரோக்கியமும் குறிக்கப்பட்டன. இவ் விருவகை ஆரோக்கியமும் நமக்கு ஆரோக்கியமான ஆடையினால் அமைகின்றன.

34. ஆடையானது இயற்கையி லமைந்த நேர்மைக் குரிய அழகு, சிறப்பு, ஏற்புமுதலிய லக்ஷணங்கள் பொருந்தியிருத்தல் வேண்டும். நாம் இறுமாப்புக் கொண்டு அகங்காரமாய் விவகரிக்கக் கூடாதென்று கிறிஸ்துநாதர் நம்மைக் கண்டித்தாரேயல்லாமல், வாழ்க்கைக்குரிய அழகும் இயற்கைச் சிறப்பும் வேண்டாமென்று சொல்லவில்லை. வேலியோரத்தில் வளர்ந்து விளங்கும் மலர்களையும், பொய்கையில் பூத்து நிற்கும் தாமரையையும் சுட்டிக் காட்டி அவர், ''ஸாலமனும் தன்னுடைய பெருவாழ்வுக் குரிய சிங்காரச் சிறப்புக்களில் இவைகளில் ஒன்றுக்கேனும் சமானாய் இருக்கவில்லை'' (மாத்யூ, vi 29) என்று கூறினர். இயற்கையழகும், சிறப்பும், மரியாதையான அடக்கமும், சுத்தமும், பொருத்தமுமே ஆடைக்குரிய லக்ஷணங்களாகும்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

DUTIES OF A VILLAGE SCHOOLMASTER

கிராம உபாத்தியாயரின் கடமை

Excursion — வெளிப்பாடம்

கலிவெண்பா

1. எக்ஸ்கர்ஷன் போவதனால் என்னபயன் அப்பாடம்
முக்கியமென் றேமுன் மொழிந்தீர்கள் — அஃதெனக்கு

2. நன்றுய்வி ளக்குமையா நானதையென் வீட்டுக்குச்
சென்றுங்கென் தந்தைக்குச் செப்பிபணம் — இன்றைக்கே

3. வாங்கிக்கொண் டாலல்லோ வாவென் றழைத்தபொழு
தேங்கிக் கிடக்காம லேவருவேன் — தாங்கள்தலைய

4. செய்யுங்க ளென்றுன் திருவேங்க டக்கோனின்
மெய்யதுதா னெற்கும்வி ளங்கவிலை — அய்யாவென்

5. மாமா பணந்தரவே மாட்டேன் வெளியேறிப்
போமாறேன் வந்ததிது பொய்யென்றுர் — ஏமாந்து

6. பள்ளிக்கூ டம்வந்தேன் பார்க்கவர வில்லையெனைத்
தள்ளிப்பே சுங்களெனத் தாசரதிப் — பிள்ளைசொனின்

7. அப்படியா ஆனால் அதன்பயனை யிப்பொழுதே
செப்பிடுவேன் கேட்டதனைச் சென்றுரைமின் — அப்பாவும்

8. மாமாவும் மற்றவரும் வாதிக்க மாட்டார்கள்
ஆமாம் சரியென் றநுமதியைப் — போமாறு

9. தந்ததுணை வந்துபணந் தந்ததவி தாம்புரிவர்
விந்தையலக் கேட்பீர் வெளிப்பயணம் — வந்தால்

10. அதுவே படிப்புக்கா தாரம் பலநூற்
கதுவே முகவுரைபா டங்காண் — அதுவே

11. இயற்கைப் பொருண்மே லின்பரசங் காட்டும்
செயற்கரிய யோசனையுஞ் செய்யப் — பயக்கும்

12. உற்றறியும் ஆராயும் உண்மையிது வென்றுணர்த்தும்
கற்றதனை நேராகக் காண்பிக்கும் — மற்றும்

13. எதையுஞ்சோ தித்தறியு மெண்ணம் பழக்கும்
விதவிதமா யொன்றை விளக்கும் — அதுபொதுவாய்க்

14. கற்கப்போம் பன்னூல் களுக்கஸ்தி வாரமென
நிற்கச்செய் மேலாம் நிலையாகும் — சொற்பமல

15. ஐம்புலனுக் கெந்நாளு மாதாரம் கேட்டதனை
நம்புமனச் சத்திக்கோர் நாட்டமிதற் — கம்புவியில்

16. ஒப்பான பாடமிலை யோதுமதைக் கீழ்வரிகள்
அப்பாநீ வாசித் தறி.

1. பாடசாலையில் நன்கு விளக்க முடியாத விஷயங்களை வெளியேறிப் போதிக்கும் முறைக்கு 'வெளிப்பாடம்' அல்லது 'வெளிப் பிரயாணப் பாடம்' என்று பெயர் வழங்கி வருகிறது. விஷயங்கள் வித்தியார்த்திகளின் மனத்தில் நன்றுய்ப் பதியும் பொருட்டு இம்முறை இக்காலத்தில் கையாளப் படுகிறது. திருட்-

டாக்தங்கள் பல சொல்லுவதாலும், சித்திரம் வரைந்து காட்டுவதாலும் விளங்காத விஷயம் நேரிற் கொண்டுபோய் ருஜுமார்க்கமாய் விவரிப்பதினால் அது வித்தியார்த்திகளுக்குத் தெற்றென விளங்குவதாகும்.

2. வெளிப்பிரயாணப் பாடம் முக்கியமாய் உலகச் சிருட்டிப் பொருள்களையும், கைத்தொழிற் காரியங்களையும், கரதலாமலகம் (கர + தல + ஆமலகம் = உள்ளங்கை நெல்லிக்கனி) போல் காட்ட வல்லதோர் நல்ல முறையாயிருக்கிறது. வேறு எவ்வகையாலும் சரிவர விளங்காத விஷயம் இவ்வகையான நிதரிசனரூப உபாயத்தால் விளங்கிவிடும். ஆனதுபற்றியே இக்காலத்தில் இத்தகைய சிறந்த போதனசாதனத்தை உபாத்தியாயர்கள் கல்விச் சாலைகளில் கையாளத் தொடங்கினர்கள். இம் முறையை நாட்டிலுள்ள உபாத்தியாயர்களும் கைப்பற்றி யொழுகுதல் நலம்.

3. மேல்நாட்டுக் கல்விச் சாலைகளில் இம்முறை முன்னரே ஏராளமான உபயோகத்தில் இருக்கிறது. ஆங்கு இம்முறையால் சிறுவர் சிறுமியர் அளவற்ற பயனை அடையா நின்றனர். மேல்நாட்டுப் பிள்ளைகள் கல்விபயில யாதொரு பாடசாலைக்கும் அனுப்பப்படா முன்னரே ஐந்தாறு வயதிற்குள் அநேக விஷயங்களை யறிந்தவர்களாகின்றனர். உற்று நோக்கி ஆராயும் சக்தி அச் சிறுவர்களுக்குச் சிறுபோதே பெற்றோரின் நற்றுணையால் பற்றியிருக்கும். ஆனதுபற்றியே அன்னோருக்குக் கல்விச்சாலைகளில் உபாத்தியாயர்கள் பயிற்றும் விஷயம் ஆராய்ச்சி என்னும் குண விசேஷத்தால் அறிவில் அமைகின்றது.

4. நமது நாட்டில் சிறுவர் தம் பெற்றோரை ஏதாவது ஒரு பொருளைப்பற்றி யறிய வினவுங்கால் அன்னோர் தம்மக்கள் ஆவலோடு கேட்கும் விஷயங்களை அநுமையாய்ப் பாராட்டி அவர்களுக்குத் தக்க விடை பகராமல் பெரும்பாலும் அவர்களைக் கடிந்துகொள்ளுகிறார்கள். இதனால் குழந்தைகளின் மனமுயற்சி குன்றிப் போகின்றது. கேட்கப்படும் விஷயங்களுக்குப் பெற்றோர் அப்போதைக் கப்போது தக்க விடை பகர்ந்து அவர்களது ஊக்கத்தை விருத்தி செய்ய முயல்வாராயின் அது அவர்களுக்கு விஷய உணர்ச்சிக்குரிய உற்சாகம் மென்மேலும் விசேஷித்து வரும்.

5. குழந்தைகள் எதையும் ஆராயும் ஆவலையுடையவர்கள். இவ்விஷயம் தவழ்ந்து செல்லவும் தெரியாத சிறு குழந்தைகள் கண் கவரும் வஸ்து வொன்றைக் கண்டால் அதைக் கைகீட்டிப் பற்றிக் கொள்ளப் பார்க்கும் தன்மையால் விளங்குகிறது. இதனை கிண்டர்கார்ட்டன் நூல்களை வாசித்த உபாத்தியாயர்கள் அறிவார்கள். வீட்டில் விருத்திக்கிடம் பெறுத அம்முயற்சியைக் கல்விச் சாலையில் பயிற்றுவது உபாத்தியாயருக்குச் சிறிது சிரமமாகவே தோன்றும். ஆயினும் சிறுவரின் சிற்றறிவைப் பேரறிவாக்கி அவர்களை அறிஞரென மதிக்கச் செய்யும் கடமை அவருடையதே யாகும். இதன் பொருட்டே இப்போது வெளிப் பிரயாணப் பாடமும் வெளி வந்தது.

6. சிறுவர் பள்ளிக்கூடத்தில் நாள்தோறும் அநேக விஷயங்களைக் கற்று வருவார்கள்; ஆயினும் அவர்கள் பெரும்பாலும் தமது சுற்றுப் புறங்களிலுள்ள சாதாரண விஷயங்களை கவனிப்பதில்லை. திருட்டாந்தமாக — வெய்யில் எந்நேரமும் காய்வதும், காற்று எப்போதும் வீசுவதும், மேகங்கள் ஆகாயத்தில் திரள்வதும், அவை வெளுத்தும் கறுத்தும் காண்பதும், மழை தளிதளியாகப் பெய்வதும், எந்தச் செடியும் பச் சென்றிருப்பதும் ஆகிய இவ்வகைச் சாதாரண இயற்கைச் சம்பவங்களைப் பற்றி ஏனென்று வினவினால் மோனம் சாதிக்கின்றனர். ஒருவரும் காரணம் விசாரிப்பதில்லை. இத்தகைய சாமானிய விஷயங்களை உபாத்தியாயர் பிள்ளைகளிடம் பிரஸ்தாபித்து அறிவைப் பரவச் செய்ய வேண்டும்.

7. இதுவே யன்றி, காலபேத நியல்பையும், அதற்குக் காரணமும், அவ்வக்காலங்களில் உண்டாகும் இயற்கை மாறுபாடுகளையும், விருக்ஷவர்க்கங்களிற் காணும் வேறுபாடுகளையும், மிருகங்கள் பக்ஷிகள் முதலிய ஜீவஜந்துக்களின் கால வித்தியாச வேலைப் பாடுகளையும் பிள்ளைகள் கவனிக்கச் செய்து, அவற்றைக் காரிய காரணங்களோடு விளக்கிக் காட்டி, அவர்கள் கண்டறிந்த விஷயங்களைக் குறிப்பேடுகளில் சித்திரத்துடன் குறிக்கச் செய்து அவற்றைத் திருத்திப் பொருத்துவதும் உபாத்தியாயரது கடமையேயாகும். பள்ளிக்கூடத் தோட்டம் இதற்காகவே அமைக்கப் படுவதாகும்.

8. பூகோள சாஸ்திர சம்பந்தமாக, சூரியோதய, சூரியாஸ்தமன, மத்தியான்ன காலங்களில் உஷ்ணம் முறையே குறைந்தும், அதிகரித்தும், தாழ்ந்தும் இருப்பதற்குக் காரணமும், இரவில் சந்திரன் குளிர்ந்தும், சிலசமயங்களில் பிறை தேய்ந்தும், வளர்ந்து காணப்படுவதற்குக் காரணமும், பௌர்ணமி, அமாவாசை, கிரகணங்கள், கிரகங்கள், சந்திர மண்டலம், செவ்வானம், வானவில், தூமகேது முதலியவை உண்டாவதற்கும், மற்றும் வானகத்தில் காலா காலத்தில் தோற்றும் விநோதங்களுக்கும் காரணங்களைக் கற்பித்தலும் உபாத்தியாயரது கடமையே யாகும்.

9. கைத்தொழிற் காட்சிகளில் — குச்வேலை, நெசவுவேலை, கண்ணாடிவேலை, கருமாரவேலை, கொல்லத்துவேலை, கல்தச்சுவேலை, தச்சவேலை, தட்டாரவேலை, வண்ணாரவேலை, அம்பட்டவேலை, தந்தவேலை, கிளிட்டுவேலை, தையல்வேலை, சமையல்வேலை, சரிகைவேலை, சாயவேலை, அச்சுவேலை, பயிண்டுவேலை, சோடா செய்தல், சாராயங்காய்ச்சுதல், ஓலை முடைதல், பாய்பின்னல், நார் உரித்தல், கயிறு திரித்தல், தோல் பதனிடுதல், செருப்புத் தைத்தல், ஓடுறுத்தல், கல் அறுத்தல், சாணை பிடித்தல், கலாய் பூசல் முதலான பல்வேறு தொழில்கள் நடந்தேறும் இடங்களைக் காட்டலும், கூடுமானவற்றை பிள்ளைகள் செய்யக் கற்பித்தலும் உபாத்தியாயரது கடமையேயாகும்.

10. தொழிற் சாலைக் காட்சிகளில் — தபாலாபீசு, பஞ்சாலை, ஞாயஸ்தலங்கள் (கோர்ட்டு, கச்சேரி, முனிசிப் சாவடி, பஞ்சாயத்து செய்யும் இடம் முதலியன), கட்டடங்கள் (கோயில், குளம், கோட்டை, ஹை கோர்ட்டு, பங்களா, மஹால், சத்திரம், சாவடி, வாராவதி, அணைக்கட்டு முதலியன), ரேவுத்துறை (ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடம்) முத்திராகூர சாலை (அச்சாபீசில் நடந்தேறும் அநேக வேலைகள்), ரொட்டிக் கிடங்கு, இரும்புப் பட்டரை வியாபாரச் சாலை நாணயச் சாலை, அலுமினம் சாலை, உலோகங்களை உருக்கி வார்க்கும் இடங்கள் இவறறையும் சிறுவர் நேரிற் சென்று காணவும், கற்கவும், செய்வது உபாத்தியாயரின் கடமையே யாகும். (இன்னும் வரும்.)

சி. வே. ஷண்முக முதலியார்.
செகண்டல் ஸ்கூல் மாஸ்டர்.

BOYHOOD OF GREAT MEN
பெரியோர்களின் பால்ய சரிதம்

1. Benjamin Franklin

பெஞ்சமின் பிராங்கிலின் என்பவர் வட அமெரிக்காவில் போஸ்டன் (Boston) என்னும் நகரில் 1706-ஆம் வருஷத்தில் பிறந்தார். இவர் தகப்பன் மிக ஏழை. அவர் தினந்தோறும் சோப், மெழுக்குவர்த்தி முதலியவைகளைச் செய்து அப் பணத்தால் தன் வாழ்நாளைக் கழித்துவந்தார். எட்டு வயதில் பிராங்கிலின் பள்ளிக்கூடம் போனார். அங்கேயும் இரண்டு வருஷகாலமும் தங்க வாய்க்கவில்லை. அதிசிக்கிரத்தில் அவர் கெட்டிக்காரரானார். இரண்டு வருஷம் சென்ற பிறகு தகப்பனார் தமக்கு உதவியாக இருக்கும்படி இவரை நிறுத்தி விட்டார். படிப்பிலேயே ஆர்வம் கொண்ட நமது சிறுவர் மெழுக்குவர்த்தி செய்வதை எள்ளளவும் விரும்பவே யில்லை. இரண்டு வருஷங்களுக் குள்ளாக அச்சாபீஸையுடைய தமது சகோதரன் ஆபீஸில் ஒரு வேலையில் அமர்ந்தார். அங்கே சும்மா இராமல் தன் சுறுசுறுப்பாலும், சாமர்த்தியத்தாலும் வேலையின் நுட்பத்தை யறிந்துகொண்டு அவ்வேலையில் சகோதரனுக்கு மிகவும் பிரயோஜனகாரியாய் இருந்தார். ஆயினும் படிக்க அவகாசம் கிடைக்கும்படி செய்துகொண்டார். இவர் சாப்பிடும் நேரத்தைக் குறைத்து அந்த அவகாசத்தில் நற்புத்தகங்களைப் படித்தறிந்து ஆராய்ச்சி செய்வார். அவர் பல விதமான புஸ்தகங்களை வாங்கியும் புஸ்தகக் கடைக்காரரிட மிருந்து சிநேகத்தால் இரவல் வாங்கியும் கல்வியறிவை விருத்திசெய்துவந்தார். சிறிதுகாலம் சென்ற பிறகு தம் மனத்தில் உதித்த எண்ணங்களை வாசகரூபத்திலும் செய்யுள் நடையிலும் எழுத ஆரம்பித்தார். 1720-ஆம் ஆண்டில் அவரது சகோதரர் ஒரு வர்த்தமான பத்திரிகையைப் பிரசுரஞ் செய்யலானார். அதுதான் அமெரிக்காவில் வெளிப்பட்ட பத்திரிகைகளில் இரண்டாவது பத்திரிகையாகும். தம்பெயரைக் குறிக்காமலே இவர் அப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்துவந்தார். இவர் எழுதிய விஷயங்கள் யாவும் பிரசித்தியடைந்தன. பதினேழாவது வயதில் இவர் தம் தொழிலுக்கு வேலை (Job work) சம்பாதித்து வர, பிலெடெல்பியா

(Philadelphia) வுக்குச் சென்றார். இவரது உடுப்போ மிகவும் சாதாரணமானது. சுமார் ஆறு ஷில்லிங் வெள்ளி நாணயந்தான் இவரது ஆஸ்தி. 1724 ஆம் வருஷத்தில் லண்டனே (London) அடைந்து அங்கே பற்பல அச்சாபீஸ் உத்தியோகஸ்தர்களோடு கலந்து சம்பாஷித்து அச்சடித்தல் (Printing) சம்பந்தமாய் பல அரிய பெரிய விஷயங்களே யெல்லாம் தெளிவாய்க் கற்றுக் கொண்டார். காலமாகிய கருந்தனத்தை வாழ்நாளில் வீழ்நாளாக் காமல் சிக்கெனமாய் காலத்தைச் சரியாய் உபயோகப் படுத்திச் சொற்ப பணத்தையும் சேகரித்து வைத்தார். சுமார் இருபது வயதில் முன்னிருந்ததைக் காட்டிலும் கெட்டிக்காரனாய் பிலெடெல்பியாவில் திரும்பி வந்து சேர்ந்து, அங்கே சொந்தமாக ஓர் அச்சாபீஸை ஏற்பாடு செய்துகொண்டார்.

அவரது சுறுசுறுப்பும், வேலையின் திறமும் அவரது நற்குணமும் அண்டையி லுள்ளவர்களைத் தூண்டவே, அவர்கள் தங்களால் கூடிய வேலைகளே யெல்லாம் இவரிடத்திலேயே ஒப்பித்தார்கள். இவர் ஒரு சிறு பத்திரிகையைப் பிரசுரிக்க லானார். அமெரிக்கா முழுவதும் அப்பத்திரிகை பரவ, இவருக்கு ஊதியத்தைத் தரலாயிற்று. அப்பத்திரிகை நல்ல காகிதத்தில் பார்வைக்கு அழகாகவும் நல்விஷயங்கள் சுருக்கமாகவும் யாவரும் படிக்கும் படியான எளிய நடையில் சொற்பசந்தாவில் நடத்தப்பட்டு வந்தது. இவர் அச்சாபீஸுக்கு வேண்டிய காகித முதலியவற்றை இவரே கர்வம் இன்றி கைவண்டியில் போட்டுக்கொண்டு அச்சாபீஸுக்குச் செல்வார். இவரே அச்சு அடிக்குவதும் விஷயம் எழுதுவதும் அச்சடிப்பதும் பிரசுரஞ்செய்து விற்பதும் முதலிய இவ்வளவு வேலையையும் தாமாகவே செய்து வந்தார். பிரான்கிலின் தினந்தோறும் காலை ஐந்து மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்து இரவு பத்துமணி வரையில் விடாமல் வேலைசெயவார். ஒரு நாளைப் பல பாகங்களாகப் பிரித்து ஒரு கால நிர்ணயப்பட்டிடிய வேலையைச் சரிவர செய்துவந்தார். இப்படியாகச் செய்ததால் படிக்கநேரமும் எழுத அவகாசமும் பேச ஒழிவும் கிடைத்ததுமன்றி இங்கிலீஷ் பாஷையைக் கற்றதுடன் பிரெஞ்சு (French), இத்தாலியன் (Italian), ஸ்பானிஷ் (Spanish) முதலிய அந்நிய பாஷைகளேயும் அறிந்து கொண்டார். மனத்தைச்

சீர்திருத்துவதுடன் நன்னடக்கை நற்சகவாஸம் முதலியவைகளில் தாம் விருத்தியடைவதில் மிக்க ஆவல் கொண்டிருந்தார். அவர் ஒரு காகிதத்தில் கோடிட்டு அதில் நீதி, மிதம், சுறுசுறுப்பு, சிக்கெனம் என்று பல நீதிவார்த்தைகளே வரைந்து, ஒவ்வொரு வார்த்தை சம்பந்தமாய் ஒரு நீதி வாக்கியத்தையும் எழுதி, அதின் பிரகாரம் ஒரு வாரம் ஒவ்வொரு நீதிப் பிரகாரம் நடக்க பிரயத்தனஞ் செய்வார். இப்படி நீதிவாக்கியத்தின் பிரகாரம் அவர் நடக்க அதுவே பழக்க வழக்கமாயிற்று.

இச் சிறுவயதில் அனேகம்பேர் கண்ணியமும் பெருமையும் பாராட்டலானார்கள். இப்படியிருக்க முப்பது வயதில் தேசத்தின் சட்ட சபையில் (House of Assembly) ஒருவேலையில் அமர்ந்தார். இப்பெருமை பொருந்திய வேலை இவரிடத்தில் சிலரை பொறுமையும் பொச்சரிப்பையும் பாராட்டும்படி செய்வதாயிற்று.

இவர் தமது விரோதிகளுடனும் சிநேகிப்பர். தைரியமாய் தம் ஆண்மைக் குணத்தை நழுவ விடுவதில்லை. இவ் வுன்னத நிலைமையில் அடைந்ததும் பலபேர் கர்வம் படைப்பதுபோல் கர்வத்தை யடையாமல் மற்ற ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை இவர் மறக்கவே யில்லை. ஜனசமூகத்திற்கு வேண்டிய அனேக சௌகரியங்களேச் செய்யலானார். நகர போலீஸைச் சீர்திருத்துவதிலும், வியாதியஸ்தருக்கு ஆஸ்பத்திரி கட்டுவிப்பதிலும், சிறுவர்கள் கல்வி பயில பாடசாலைகளும், சாஸ்திரக் கல்வி விருத்தியாக ஒரு பெரிய சங்கமும் இன்னும் அனேக நற்காரியங்கள் செய்வதிலும் முயன்றார். அவர் நுழையாத ஜனசமூக விஷயம் ஒன்றுமே யில்லை. இங்கிலாந்தும் ஐக்கிய மாகாணமும் பிரிந்து போன பிறகு அனேக வருஷங்களாக பிரான்சு தேசத்துத் தூதராக நியமிக்கப் பட்டிருந்தார். சிறு வயதிலிருந்தே இவரது தகப்பனர் இவருக்கு நல்ல நீதி வாக்கியங்களைக் கற்பித்திருந்தார். இவரே இங்கிலாந்தில், அப்போது பிரசுரமான ஸ்பெக்டேட்டர் (Spectator) என்ற (சிறந்த அடிஸன் (Addison) என்ற வித்துவானால் இயற்றப்பட்ட) பத்திரிகைக்கு விஷயதானம் செய்தார். இவரே தம் சரித்திரத்தை (Autobiography) எழுதி வைத்தார். அதில் அனேக அருமையான விஷயங்கள் உள. அவைகளே எல்லாம் இங்கு எழுதுவோமானால் விஸ்தரம் விரியும் என்றும்

காகிதம் இடம் தராதென்றும் கருதி வியாஸத்தைச் சுருக்கமாய் எழுதலானோம்.

அவர் பூர் ரிச்சர்ட் (Poor Richard) என்று மறுபெயர் தரித்து, பத்திரிகைகளில் பிரசுரித்த அனேக விஷயங்களில் சிலவற்றை இங்கே கூறுவோம்.

"பிறரால் நீ எவ்விதம் நடத்தப்பட வேண்டுமென்று உத்தேசிக்கிறாயோ அதுபோல நீ பிறருக்கு நட."

"சுறுசுறுப்பு வேலையைச் சுலபமாய்ச் செய்கிறது, சோம்பேறித் தனமோ அதைக் கஷ்டமாய்ச் செய்கிறது."

"நீ வாழ்நாளை அதிகமாய் விரும்பினால் காலத்தை வீணாக்காதே."

"காலமோ இளமையின் விரோதி. அதுவே பெரிய திருடன்."

"உனக்கும் உன் குடும்பத்திற்கும் உன் தேசத்திற்கும் உன் ராஜாவிற்கும் உரிமைப்பட்டிருக்கிற கடமை அதிகமாயிருப்பதால் சோம்பேறியா இராதே."

"குறை கூறாமல் உனது வேலையைச் சந்தோஷமாய் செய்."

"இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலையை நாளைக்குச் செய்யலாம் என்று தயங்கி ஏமாந்து போகாதே."

"பல துளி பெரு வெள்ளம் என்பதுபோல், சிறுகச் சிறுக உன் வேலையைச் செய்து முடி."

"சுறுசுறுப்புடன் இருந்தால் தரித்திரம் உன்னை அணுக அஞ்சும்."

"உன் வேலையை நீயே சீக்கிரமாய் அவசரமின்றி செய், வேலை முடிகிறபோது முடியட்டும் என்றிராதே."

"சுறுசுறுப் புள்ளவருக்கு கடவுள் கருணை புரிவார்."

"செல்வத்தை அடைய விரும்பினால் காலத்தை வீணாக்காமலும், பணத்தை வீண்செலவு செய்யாமலும் அதைச் சரியான வழியில் உபயோகித்தால் செல்வம் உன்னை வந்து அடையும்."

"நீ பெருமையை யடைய ஆசைப்பட்டால், உன் காரியங்களில் சரியாயும், வாக்குறுதியாயும், நீதியாயும் இரு. பின் உலகம் வாழ்த்தும்."

"உன் சுறு சுறுப்பு, சிக்கெனம், சாமர்த்தியம் முதலியவைகள் மேலானபோதிலும் அவைகளை நம்பியிராதே, ஏனெனில் கடவுள் கடாக்ஷமின்றி ஒன்றும் சரியாய் நடவாது. ஆகையால் கடவுளைத் தியானி."

SCHEME OF WORK

	மணி	
Forenoon.	5, 6, 7	எழுந்து, காலைக் கடன்களைமுடி, கடவுளைத் தொழு, தினந்தினம் செய்யவேண்டிய வேலை என்னவென்று யோசி. படித்தல், காலைச் சாப்பாடு.
	8, 9, 10, 11	பகல் வேலை செய்.
Noon.	12, 1	வாசி, கணக்குப் பரிசோதனை செய், பகற் போசனம் சாப்பிடுதல்.
Afternoon.	2, 3, 4, 5	வேலை செய்.
P. M.	6, 7, 8, 9	ஒவ்வொரு பொருளையும் அதனதன் இடத்தில் வை, இராத்திரி சாப்பிடு, பாட்டு, சம்பாஷணை, காலக்ஷேபம், பகலில் செய்த வேலையைச் சிந்தித்தல்.
Night.	10, 11, 12, 1, 2, 3, 4	தூங்குதல்.

காலையில் இன்றைக்கு எந்த நற்காரியம் செய்யலாம் என்று நினைத்து, மாலையில் எந்த நற்காரியம் பகலில் செய்தோம் என்று பிரதி தினம் தமக்குத்தாமே யோசித்துக் கொள்வார்.

ஹிதவார்த்தைகள்.

மிதம் (Temperance) — அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு ஆவது போல சோம்பேறி யாகும்படியாய் அமிதமாய்ச் சாப்பிடாதே; மயக்கம் உண்டாகக் குடியாதே.

மௌனம் (Silence) — "மௌனம் கலகம் நாஸ்தி." உனக்கும் பிறருக்கும் உபகாரார்த்தமான வார்த்தைகளையே பேசு; வீண் வம்பு வளர்க்காதே.

கிரமம் (Order) — ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு ஸ்திரமான இடத்தில் வை. உன் வேலையைச் சரிவரக் காலத்தில் செய்து முடி. கால தாமதம் செய்யாதே.

தீர்மானம் (Resolution) — "எண்ணித் துணிக கருமம்" என்பதுபோல செய்ய வேண்டியவற்றைக் கட்டாயம் யோசித்துச் செய்து முடி.

சிக்கனம் (Frugality) — அனுவசியமான செலவு செய்யாதே, அவசியமான செலவைக் குறைக்காதே.

சுறுசுறுப்பு (Industry) — காலத்தை வீணுக்காதே. சுறுசுறுப்பாயிரு; ஆயினும் அவசரப் படாதே.

உண்மை (Sincerity) — பிறரை மோசஞ் செய்யாதே. பேசும்போது கபடமின்றிப் பேசு.

நீதி (Justice) — ஒருவருக்கும் கெடுதி செய்யாதே. நீ செய்யக் கூடிய உதவியைச் செய்.

சுத்தம்(Cleanliness)—சுத்தம் சோறிடும் என்பதை யெண்ணி வாக்கு, காயம், மனம், உடை முதலியவைகளில் பரிசுத்தமாயிரு.

அமைதி (Tranquillity) — அல்ப விஷயத்திலும் பெரிய காரியத்திலும் திகிலடையாமல் தைரியமாயிரு.

வணக்கம் (Humility) — பெரியோரை வணங்கு. பெரியோர்களின் சரித்திரத்தைப் படி.

கற்பு (Chastity) — பிறர் மனைவிமேல் காதல் கொள்ளாதே. "மைவிழியார் மனை யகல்", உன் பெண்சாதியிடத்தில் அன்பாயிரு.

N. B.—நாம் இச்சரித்திரத்தினால் அறிந்து கொள்வது யாதெனில் மிகவும் தாழ்ந்த கஷ்டதசையிலிருந்து கொண்டே கல்வியாகிய செல்வத்தை விருத்தி செய்தல், பரோபகாரம், தர்மம், கருணை, தயை, விடாமுயற்சி முதலிய நற்குணங்களை பூலோகத்திலுள்ள ஒவ்வொருவரும் மேற்சொன்னவகையில் விருத்தி செய்ய

முடியுமென்று தெரிகிறது. காலத்தைக் குறை கூறுமலும் ஜனங்கள் ராஜாங்கத்தாருடன் நகமும் சதையும்போல் ஒத்து வாழ்வதே சிறப்பு. இக்காலம் போல் அனேக சௌகரியங்கள் இல்லாத காலத்தில் கூட கல்வியறிவை பென்சமின் பிராங்கிளின் விருத்தி செய்ததை நாம் மிகவும் புகழ வேண்டுமன்றோ?

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதுபோல் சிறு வயதில் ஒவ்வொருவனும் நற் பழக்கங்களை விருத்தி செய்தால் முதுமையில் நற் பெயரடைந்து இம்மையிலும் மறுமையிலும் சுகத்தை அடையலாம் என்றும் தெரிகிறது.

S. BHASHYAM AIYENGAR,
Saidapet

WISDOM

ஞானம்

(நிலையற்ற வாழ்வு)

கண்ணிகள்.

தனதந்த - தனதந்த - நாநா

1. உலகத்தின் வாழ்வெல்லாம் பொய்யே - இங்கே
ஒன்று மில்லாமல் மரிப்பது மெய்யே.

2. எத்தனைபேர் உலகாண்டார் - முன்னம்
அத்தனைபேர்களும் ஐயையோ மாண்டார்

3. உலகமோ நாடகசாலை - இதில்
நாதன் தந்தாரே எல்லோருக்கும் வேலை

4. வாவென்று சிவனின் வாரண்டு - வந்தால்
கூவென்ற முதாலும் கூடுமோ ஈண்டு

5. மூச்சல்லோ உன்றனின் ஆவி - இது
மேவி யொடுங்கிட்டால் வேறென்ன பேச்சு

6. தூரப்போ போ என்னும் வீடு - கையைக்
கொட்டி வா வா என்று அழைக்குமே காடு

7. பாழுடல் மாமிசமூட்டை - இது
விழுந்திட நரிக்குமே மிக்கவும் தேட்டை

8. சவரனும் வெள்ளியும் மண்ணே - என்றும்
மூடியாத மோட்சத்தின் வாழ்வை நீ எண்ணே

9. ஆலிலே வயிறொரு ஜாணே - பொருள்
மலிவாகச் சேர்த்து நீ வைப்பது வீணே

10. சொத்து உன்கூட வாராதே - கட்டிக்
காத்திருந்தாலுமுன் கையில் நில்லாதே

11. உண்பது கால்படி சாதம் - பூதம்
உண்பதுபோல் வேலியேன்பல காதம்

12. தங்குமிட முழந்தானே - நாலு
தெருக்களிலும் பலவீடுக ளேனே

13. நகையில்லாக் காது செவிடோ - பல
உடைக ளில்லாவுடல் வளர்ந்து விடாதோ

14. கூரை வீடின்பம் காட்டாதோ - பெரு
மெத்தைவீட் டிலேதுன்பம் வரவே மாட்டாதோ

15. பணங் கண்டால் மனஞ்சு வானே - நல்ல
குணமாகப் பணக்கா ருடன்கொஞ்சு வானே

16. தோலு மெலும்பும் சரீரம் — இதை
மேலே மினுக்குவ தாலென்ன சாரம்.

தனதந்த தனதந்த தானா.

M. SAVARIMUTHU PILLAY,
Correspondent, E. M. S.,
Pannapathy (Trichy Dt.)

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10. | 1914வது டிசெம்பர்மீ | மாதம் 7

INFANT SCHOOLS

பாலர் பாடசாலைகள்

பாடசாலை சம்பந்தமாக இக்காலத்தே நாம் வாசிக்கும் பல பத்திரிகைகளிலும் புஸ்தகங்களிலும் அடிக்கடி பாலர் பாடசாலைகளைப் பற்றி அநேக விஷயங்கள் வரக் காண்கின்றோம். பாலர் பாடசாலைகள் என்றால் என்ன? அவை எவ்வாறு நடை பெறுகின்றன? என்னும் விஷயங்களை இங்கே கவனிப்போம்.

நமது நாட்டில், எலிமென்டரிப் பாடசாலைகளிலும் செகெண்டரிப் பாடசாலைகளில் ஆரம்பத்தில் பாலர் வகுப்பு என்னும் ஆரம்பதரதி ஒன்று இருக்கிறது. அதில் அக்ஷராப்பியாசம் செய்யும் சிறு பிள்ளைகள் சேருகிறார்கள். அவ்வகுப்பில் ஒரு வருஷம் வாசித்து, பரீக்ஷையில் தேறி, முதல் வகுப்புக்குப் போகிறார்கள். சில குழந்தைகள் ஆரம்பதரதியில் இரண்டு வருஷமும்

இருந்து விடுகிறார்கள். பாலர் வகுப்பிலும் மேல் வகுப்பில் இருப்பது போலவே அநேக பாடல்கள் இருக்கின்றன. கிண்டர் கார்ட்டன் முறையில் சில விளையாட்டுகளும், தொழில்களும், பாட்டுகளும் நடைபெறுகின்றன. சில பாடசாலைகளில், இவ்வகைய முறையும் நடைபெறுவதாகக் காணேம்.

இங்கிலந்து, ஜர்மனி, அமெரிக்கா முதலிய மேல்நாடுகளில் குழந்தைகளுக்கென்றே ஒருவகைப் பாடசாலையுண்டு. ரூஸோ, பெஸ்ட்டலோஜி, ஹெர்பார்ட்டு, புரோபெல் முதலிய பால போதகாசிரியர்கள் கொண்ட முறையை அனுசரித்து இந்தப் பாடசாலைகள் நடத்தப் பெறுகின்றன. அங்கு நான்கு வயது முதல் எட்டுவயது வரையிலுள்ள ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் கலந்து வாசிக்கிறார்கள். புஸ்தகங்களைக் கொண்டு வாசிப்பதென்பது இங்கே பெரும்பாலும் கிடையாது. புஸ்தகம் இருந்தாலும் வேடிக்கையும் கூத்துமாக இருக்கும் விசித்திரப் புஸ்தகங்களாகவே யிருக்கும். பிள்ளைகள் தாம் வசிக்கும வீடுகளுக்கும் இந்தப் பாடசாலைகளுக்கும் வித்தியாசம் காணமாட்டார்கள். தம் வீட்டைவிடப் பாடசாலையே அவர்களுக்கு பரம சந்தோஷத்தைக் கொடுக்கும் இடமாகும்.

நமது நாட்டில் சிறு பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதென்றால், மருந்து சாப்பிட வருவதுபோல் எண்ணுகிறார்கள். மேல் நாட்டுப் பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதென்றால் பக்ஷணம் சாப்பிடப் போவதுபோல் எண்ணுகிறார்கள். இது ஏன் இப்படி மாறுபடுகிறது? பாலர் பாடசாலையில் நிறைந்திருப்பவை யாவும் அவர்களுக்குரிய விளையாட்டுப் பொருள்களே. பலவித சித்திரப் படங்கள், விளையாடுங் கருவிகள், பட்சிகள், மிருகங்கள், யந்திரங்கள், செடிகள், கொடிகள் எங்கெங்கும் நிறைந்திருக்கும். தங்கள் இஷ்டம்போல் விளையாடவும் அனுமதி கிடைக்கிறது. தம்மை யொத்த சிறுவர்கள் திரளாக இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு இன்னும் என்னவேண்டும். தாய் தந்தையர்தாம் வேண்டும். பாலர் பாடசாலையில் பயிலும் பிள்ளைகள் தம் தாய் தந்தையரையும் வேண்டுவதில்லையாம். ஏன்?

பாலர் பாடசாலையில் உபாத்தியாயர்கள் எல்லாம் பெண் பால்களே. ஆலண்டு தேசத்தில் பாலர் பாடசாலையில் ஆடவர்கள்

உபாத்தியாயர்களாக இருத்தல் கூடாதென்று தீர்மானித்து விட்டார்கள். இங்கிலந்தில் இரண்டோர் இடங்களில் தவிர மற்றப் பாடசாலைகளில் ஆடவர்களை அமைப்பதில்லை. அமெரிக்காவிலோ பாலர் பாடசாலை ஓர் ஆடவன் இருக்கக் கண்டால் அனைவரும் அப்பாடசாலையை ஏளனஞ் செய்து இகழ்ந்து கூறுவர். அமெரிக்காவில் பாலர் பாடசாலை உபாத்தியாய ரென்றால் பெண்பால் என்றே அர்த்தமாகும். அதனாலேயே மேல் நாட்டில் பாலர் பாடசாலைகளுக்கென்று எழுதும் புஸ்தகங்களெல்லாம் பெண் பால்களைக் குறித்தே பேசுகின்றன.

பாலர் பாடசாலையில் பெண்களே உபாத்திமைத் தொழில் நடத்துவதால், அவர்கள் குழந்தைகளிடம் அதிக அன்புகொண்டு அவர்களைப் பக்ஷமாக நடத்துகிறார்கள். சிறு வயதில் குழந்தைகளுக்குப் பெண்பால்கள் உபாத்தியாயர்களாக அமைவதே சிறப்பு. இதனை உணர்ந்தே புரோபெல் ஆசிரியர் தம் பாடசாலைகளில் பெரும்பாலும் பெண்களையே உபாத்தியாயர்களாக நியமித்தனர். ரூஸோ என்னும் ஆசிரியர் தம்முடைய போதனை முறையில் பாலர் வகுப்பைப் பற்றிப் பேசாமலே விட்டுவிட்டார். காரணம் என்னவென்றால், சிறுவர்கள் சுமார் ஏழுவயது வரையில் தம் தாய்மாரிடத்திலேயே கல்வி கற்கவேண்டும் என்பது கொள்கை. நமது சாஸ்திரத்திலும் அக்ஷராப்பியாசம் சிறுவனுக்குத் தந்தையே செய்ய வேண்டும் என்பது விதி. இம்முறை பிராமண குடும்பங்களில் இன்னும் நடைபெற்று வருகின்றது. குழந்தைகளுக்குத் தாய்மார் கல்வி கற்பிக்கும் பெரும்பேறு எங்கெங்கும் நன்கு பரவாமையால் பாலர் பாடசாலைகள் ஏற்பட்டுள்ள இடங்களில் பெண்களே உபாத்தியாயராக விளங்குகின்றனர். அதனால் அவர்கள் குழந்தைகளுக்கு உற்ற தாயராக இருந்து விளையாட்டிலேயே உண்மைகளை விளக்குகிறார்கள். அதனால் குழந்தைகள் தம் பெற்றோரையும் மறந்து இன்பம் அனுபவிக்கிறார்கள்.

இத்தகைய பாலர் பாடசாலை இதுகாறும் நமது நாட்டில் ஒன்றேனும் ஏற்படவில்லை. இது பெருங்குறைவே. சென்னை முதலிய நகரங்களிலாயினும் ஒன்று இரண்டு இருந்தால் பேருபகாரமாக இருக்கும். சென்னையில் பீபிள்ஸ் பார்க் என்னும் சிங்காரத் தோட்டத்தில் இத்தகைய பாடசாலை ஒன்று ஏற்படு-

மானுல் எவ்வளவு உபயோகமாக இருக்கும். பணம் கொடுத்தாவது உள்ளே போகப் பிரியப்படும் சிறுவர்களுக்கு, அங்கேயே பாடசாலையில் படிப்பது பரமானந்தத்தை விளைக்கும் என்பதில் ஐயம் உண்டோ? அங்குள்ள செடிகொடிகளும் நீர் நிலைகளும் மரங்களும் பட்சிகளும் மிருகங்களும் மற்றும் பற்பல காட்சிப் பொருள்களும் சிறுவர்களுக்குச் சந்தோஷத்தையும் ஞானத்தையும் உண்டாக்கும் என்பதை எவரேனும் மறுக்க முடியுமோ. சென்னையில் சுமார் 40 மாடல் எலிமென்டரிப் பாடசாலைகள் கட்டி நன்மை செய்ய முன் வந்திருக்கும் கார்பொரேஷன் மெம்பர்கள் இத்தகைய பாடசாலை யொன்றும் விரைவில் அமைப்பார்கள் என்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

DUTIES OF A VILLAGE SCHOOLMASTER

கிராம உபாத்தியாயரின் கடமை

(136-ஆவது பக்கத் தொடர்ச்சி)

Excursion — வெளிப்பாடம்

11. பொருட் காட்சிகளில் — மலைச்சாரல், மலையுச்சி, மலையடிவாரம், மலைச்சரிவு, ரோட்டம், நீர் வீழ்ச்சி, கப்பல் யேற்றம், ஆயில் இஞ்சின், (Oil Engine) அணைக்கட்டு, வாராவதி, காற்றுக் காட்டி யந்திரம், வாயு யந்திரம், நீரிறைக்கும் விதம், பொருட் காட்சிசாலை (Museum) மிருகக் காட்சி சாலை, கப்பல், படகு, கட்டுமரம், கடற் கரையிலுள்ள மச்சக் காட்சிசாலை (Marine Aquarium) கடற்கரை விநோதங்கள் (சிப்பி, நத்தை, இவைகளின் பலவகைத் தோற்றங்கள் (கடலில் உள்ள ஜந்துக்கள்) மற்றும் உலகிலுள்ள பலவேறு பொருள்களையும் சௌகரியமான இடங்களில் கொண்டு போய்க் காட்டுதல் வெளிப் பிரயாணப் பாடமாகும்.

12. பயிர்க் காட்சிகளில் — தோப்புகள், தோட்டங்கள், புஷ்பத் தோட்டங்கள், படர் கொடிப் பந்தல்கள், கரும்புத் தோட்டம் (கரும்பாலை), பருத்திச்செடி, (இலவம் பஞ்சும், செடிப்

பஞ்சும்) ரப்பர் மரம், சிறுவாழை, கூந்தற் பனை, மூலிகைகள் (ஔஷதங்களுக்கு இன்னின்ன வகையில் உதவும் என்பது) புல் வகைகள், இலை தினுசுகள் (Crotons) கொடி வகை, (Creepers) நாற்றங்கால், உழவு, நடவு, களைபறித்தல், பலுமர மடித்தல், கொரு கலப்பையால் விதைத்தல், வேர் வாரியால் களையெடுத்தல், பரம்பு அடித்தல் முதலிய பயிர்த் தொழில்களையும், பயிர் செய்யும் விதங்களையும், எவ்வெக்காலங்களில் எவ்வெவ்வகைப் பயிர் செய்யப்படுமென்பதையும் குறித்துப் பிள்ளைகள் அறிய அவர்களை வெளியே கொண்டு போதலும் வெளிப் பிரயாணப் பாடமாகும். (இவை முக்கியமாய் நகரவாசிகளான பிள்ளைகள் அறிந்திருக்க மாட்டார்கள்.)

13. அன்றியும், சிறுவர் தம்மைத் தாம் காத்துக் கொள்ளும்படியான வகையில் அவர்களின் தேக அமைப்பைக் குறித்து அவசியம் அறிய வேண்டியவர்களா யிருத்தலால், தேகதத்துவ சாஸ்திரம் ஒருவாறு பள்ளிக் கூடங்களில் பயிற்றப் படுவதேனும், பிள்ளைகளுக்குத் தேகத்தின் அமைப்பும், அதன் வெவ்வேறு பாகங்களும், அவற்றின் அற்புதச் செய்கைகளும், ருஜு மார்க்கமாய் தெரியும்படி வைத்திய வித்தியாசாலை (Medical College)க்கு அவர்களைக் கொண்டுபோய் காட்டலும் அவசியமேயாகும். உடலெலும்பின் அமைப்பைக் காட்ட மனித தேகத்திலுள்ள எல்லா எலும்புகளையும் கோத்து அங்கு தொங்க விட்டிருக்கும். மேலும் தேக தத்துவத்தை விவரிக்கும் பலவகைப் படங்களையும் அங்கே காணலாம். (நல்லாசிரியன் 8-ஆவது சம்புடம், 8-ஆவது இலக்கப் பத்திரிகையில் 172-178 பக்கங்களையும் பார்க்க.)

14. செங்கற்பட்டில் திருட்டுப் பிள்ளைகளைச் சீர் திருத்தும் பொருட்டு ரிபார்மேட்டரி ஸ்கூல் (Reformatory School) என்று ஒன்று உண்டு. இதையும் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் போய் பார்க்கவேண்டும். பார்ப்பதனல் திருட்டுத்தனம் பொல்லாச் செய்கை யென்று பிரத்தியக்ஷப் பிரமாணமாக உணருவார்கள். அங்கு அத்திருட்டுப் பிள்ளைகளை அதிகாரிகள் நடத்துவதும், அவர்களுக்கு நற்குணம் உண்டாகும்படி கல்வி பயிற்றுவதும், பிழைப்புக் கிடமாக அவர்களுக்குத் தறிவேலை, தச்சவேலை, கன்னி வேலை முதலிய தொழிற் கல்வியும் கற்பித்து, பிற்காலத்தில் அவர்கள் உலகத்தில் பிரயோசனமுள்ளவர்க ளாகும்படி செய்வது-

மான சகல காரியங்களும் அங்கு நடந்தேறி வருவதும் காணலாம். (இந்தச் சந்தர்ப்பத்தில் நமது காருணிய கவர்மெண்ட்டாரின் உபகாரத்தைக் குறித்தும் பலவிதமாகப் பிரஸ்தாபிக்கலாம்.)

15. மேலும் சிறுவர்கள் தமக்கு பந்துக்களாகவும் சிநேகிதர்களாகவும் இருக்கிற நோயாளிகளையும் நேரிற் சென்று பார்க்கவும் அவர்களின் தேக ஸ்திதியை அன்போடு விசாரிக்கவும், அவர்களுக்கு வேண்டிய உதவியை வெறுப்பின்றிச் செய்யவும் பழகியிருக்க வேண்டும். பிள்ளைகள் நோயாளிகளிடத்தில் பரிதாபங் கொண்டு அன்பு பாராட்டவும், வேண்டிய பணிவிடைகளைச் செய்யவும் விரும்பியவற்றை உடனுக்குடன் கொண்டு வந்து கொடுக்கவும், நோயின் கொடுமையால் நோயாளிகள் சில சமயங்களில் கோபத்தைக் காட்டுகையில் தாமும் அவர்கள்மேல் கோபிக்காமலும், பொறுமையோடு பதில் சொல்லவும், அதைரியங் கொண்ட அவர்களைத் தைரியப்படுத்தவும் பழக்கி வைத்தலும் நலமாகும். (நோயாளிகளிடம் பொய் பேசாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம்).

16. நிற்க, வெளிப் பிரயாணபாட சம்பந்தமாக ஒவ்வொரு டசாலையிலும் பிள்ளைகளின் விவகார ஞாபகசக்தி விருத்தியின் பொருட்டு அடியிற் குறித்த வஸ்துக்களைச் சேகரித்துப் பத்திரப் படுத்தி வைக்க வேண்டும் — காந்த ஊசி, பூதக் கண்ணாடி, கம்பஸ், உஷ்ணமானி, வாயுமானி, ஸ்படிகம், அப்பிரகம், சலவைக் கல், முத்து, முத்துச் சிப்பி, பவழம், சூரிய காந்தி, காரீயம், பல தேச நாணயங்கள், பலவகை ஸ்டாம்புகள், பல திணுசு விதைகள், கல் வகைகள், மணல் வகைகள், கருங்காலி, செம்மரம் முதலிய மரத் திணுசுகள், கிளிஞ்சல் திணுசுகள், விசேஷ புஷ்பங்கள், விசித்திர இலைகள் முதலியனவும் உதவும் (புஷ்பங்களையும், இலைகளையும் அட்டையில் குத்தித் தைத்து, சுவரில் தொங்க விடவேண்டும்.)

17. பிள்ளைகள் பெரும்பாலும் ரெயிலேறிப் பிரயாணம் செய்திருப்பார்கள். ஆனால் அவர்கள் ஏறிச் சென்ற வண்டித் தொடர் எதனால் இழுக்கப் படுகிறதென்பதை அவர்கள் கவனித்திருக்க மாட்டார்கள். ரெயில் வண்டி விரைவாக ஓடுவதற்குச் சந்தோஷித் திருப்பார்கள். அது எதனால் அப்படி ஓடுகிறதென்பதைச் சிந்தித்திருக்க மாட்டார்கள். பட்டணத்தில் டிராம் வண்டி எதனால் ஓடுவதும், எரிகிற மின்சார விளக்குகள் எவ்வகையால் எரிவதும், தந்தித் தபால் எப்படிச் செல்வதும், இப்போது பட்டணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தந்திபில்லாத் தபால் எப்படி நடைபெறுமென்பதும், டெலிபோன் (Telephone) இன்னதென்பதும் குறித்துப் பிரஸ்தாபித்தும், நேரிற் கூட்டிச் சென்று காட்டியும் தெரிவிக்க வேண்டும்.

18. சிறுவர்கள் நாய், பூனை முதலிய மிருகங்களிடம் பிரதினமும் பழகியிருப்பார்களாயினும் அவற்றின் தேக அமைப்பைக் குறித்தும், சுபாவகுணங்களைப் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். இதுவே இப்படியெனின் அவர்களுக்குத் தூரமாயுள்ள புலி, சிங்கம், கரடி முதலிய மிருகங்களைக் குறித்து அவர்கள் என்ன அறிந்திருக்கப் போகிறார்கள். ஆகையால், இவர்கள் சென்னையிலுள்ள (Peoples' Park) சிங்காரத் தோட்டத்தில் அமைத்துவைத்திருக்கும் மிருகக்காட்சி (Menagerie)க்குக் கொண்டுபோகப்பட்டு உபாத்தியாயரால் அவற்றைப்பற்றி விவரிக்கப்படும் விஷயங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளச் செய்வதன்றி, பிள்ளைகள் தாமாகவே என்ன விசேஷங்களைக் கண்டார்களோ அவற்றைக் குறித்துக் குறிப்புப் புத்தகங்களில் குறிப்பிட்டுக் கொள்ளவும் செய்ய வேண்டும்.

19. வெளிப்பிரயாணப் பாடத்தை முக்கியமாய் இரண்டு விதமாகப் பிரித்துக் கொள்ளலாம். அவைகளில் —

(1) பள்ளிக்கூடத்தில் நடத்தும் பாடங்களை விவரித்தல். உதாரணமாக — சிவிக்ஸ் பாடத்தில் தபால் ஆபீசைக் குறித்துப் போதிக்கையில் ஊரிலுள்ள தபாலாபீசில் தபால் கட்டு அனுப்பும் போதும், வரும்போதும் அங்கு நடந்தேறும் விஷயங்களை நேரிற் சென்று கவனித்தல் அல்லது கைத்தொழிலைக் குறித்துப் போதிக்கையில் அத்தொழில் நடந்தேறும் இடத்திற்குச் சென்று நேரில் பார்த்தல்.

(2) இயற்கைப் பொருள்களை நேரிற் கண்டு ஆராய்தல். உதாரணமாக — மலையிருக்கும் இடத்திற்குச் சென்று அவ்விடத்தில் காணக்கூடிய விஷயங்களைக் கண்டு அவற்றைக் குறித்து விசாரித்தல்.

20. கடைசியில் குறித்த வெளிப்பிரயாணப் பாடத்திற்காக வெளியே போகப் பிரியப்படுகிற பிள்ளைகளை உபாத்தியாயர் ஒன்றுசேர்த்து குறித்த இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் அங்கு உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் கூடுமானால் சில நாள் வரையிலும் தங்கியிருந்து அங்குள்ள காட்சிகளைக் காண வேண்டும். மற்றெல்லாப் பாடங்களுக்கும் உள்ளதுபோலவே வெளிப்பிரயாணப் பாடத்திற்கும் நோக்கம் உண்டு. உபாத்தியாயர் வெளிப் பிரயாணப் பாடத்தைப்பற்றி போகவேண்டிய இடங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுவதன்றி அங்கே சென்று செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும் போதிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றியும் முன்னரே சித்தப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

21. பரந்த அறிவும் நிறைந்த கல்வியும் சமயோசித புத்தியுமுள்ள உபாத்தியாயர் வெளிப்பிரயாணப் பாடத்தை நன்கு விளக்கும் வல்லமை யுடையராவர். பெரும்பாலும் வெளிப்பிரயாணப் பாடம் இயற்கைப் பொருள்களைப் பற்றியே நிகழ்வதாகும். வெளியேறினபோது கண்ணுக்குத் தோற்றுவன யாவும் சிருட்டிப் பொருள்களாகவே யிருக்கும். அச்சிருட்டிப் பொருள்களைப் பற்றி அதிக ஆராய்ச்சி செய்த உபாத்தியாயரே அவற்றைப் பற்றிப் பிள்ளைகளுக்கு அநுபவசித்தமாகவும், பிரத்தியகூப் பிரமாணமாகவும் விளக்கக்கூடியவ ராவர். பிள்ளைகள் வெளியேறினபோதே அதிக உற்சாக முள்ளவர்களாக இருப்பார்கள். உற்சாகத்தின் மிகுதியால் அவர்கள் பல கேள்விகளைக் கேட்பார்கள். அவர்களுக்குத் தக்க விடை பகர்ந்து களிக்கச் செய்வது உபாத்தியாயரின் கடமையாகும்.

22. வெளிப்பிரயாணம் நடந்தேறியபின் அங்கே கற்ற விஷயங்களைக் குறித்து மறுதினமே வகுப்பில் உபாத்தியாயர் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவர வேண்டும். பிரஸ்தாபித்தவைகளைப் பிள்ளைகள் குறித்து வந்தவைகளைக் கொண்டும், பார்த்து வந்தவைகளைக் கொண்டும் அப்பாடத்தைப் புஷ்டிபடுத்தவேண்டும்; சம்பாஷிக்கச் செய்யவேண்டும்; முன் பின்னாக இருக்கக்கூடிய விஷயங்களை உபாத்தியாயர் முறைப்படுத்த வேண்டும். யாவரும் உணர்ந்த பிறகு அவற்றை வியாசமாக எழுதச் செய்து திருத்த வேண்டும். திருத்தியபடித் திரும்பவும் ஒருநாள் அவ்வியாசம்

எழுதச்செய்து பார்வையிடப்பட வேண்டும். எழுதுகையில் விஷயங்களைப் பத்திபத்தியாகப் பிரித்து எழுதச் செய்யவேண்டும்.

23. சாதாரணமாக வெளிப்பிரயாணப் பாடங்களுக்கு வெளியேறத்தக்க பிள்ளைகள் அங்கே சென்று செய்யுங்காரியங்களைச் செவ்வனே உணரக்கூடிய யுக்தியும், புத்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். தேகவலியற்றவர் வெளியேறத் தக்கவரன்று. மூன்றாவது வகுப்புக்குக் குறைந்த கல்வி யுடைய பிள்ளைகள் சாதாரணமாய் வெளியேறத் தக்கவரன்று. குறைந்த பட்சம் பதினைந்து வயதுக்குக் குறைந்த பிள்ளை வெளியேறலாகாது. என்றாலும் காட்டக்கூடியது சமீபத்தில் இருக்கும் பட்சத்தில் சிறு வகுப்புப் பிள்ளைகளையும் கூட்டிச் செல்வதில் ஆக்ஷேபமில்லை.

24. பெண் பிள்ளைகளும் வெளிப் பிரயாணப் பாடங்களுக்காக வெளியேறலாகும்; என்றாலும் அவர்களைக் கூட்டிச் செல்லும் உபாத்தியாயர் வெகு சாக்கிரதையுள்ளவரா யிருக்கவேண்டும். பெண்கள் சாதாரணமாய் வீட்டிலேயே அடைப்பட்டிருப்பவர்கள். இவர்களுக்குச் சாமானிய வஸ்து ஞானமே போதாமலிருக்கும். காணும் ஒவ்வொரு காட்சியும் அவர்களுக்குப் புதுமையாகவே தோற்றும். அவர்களை வெகு தூரமாவது அதிக விஷயங்களை யறிவிக்கவாவது கூட்டிச்செல்லல் கூடாத காரியம். ஆயினும் அவர்கள் காணக்கூடிய காட்சிகள் நெல்குத்தும் மிஷன், பஞ்சாலை, நெசவுத் தொழில், நந்தவனம், சோலை, தேவாலயம் முதலியவைகளாக இருந்தால்போதும்.

25. வெளிப்பிரயாணப் பாடம் பிள்ளைகளின் பாடத்திற்குச் சம்பந்தப்பட்டு இராதிருப்பது நன்றென்றும், நூதனமாயிருக்குமாயின் உற்சாகத்திற்கும், மனம் ஊன்றுதலுக்கும்இடமாக இருக்குமென்றும் சில உபாத்தியாயர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் வெளியேறிப்போன இடத்தில் அப்படிக்குப் பாடம் ஏற்படக்கூடியதாயிருந்தால் அப் புதுப்பாடத்தையும் கற்பிக்கலாகுமேயன்றி முதலடியில் அந் நோக்கத்தைக் கொண்டே வெளியேறுவது ஞாயமாக மாட்டாது. புதியபாடம் நடத்த நேரிடும்போதும் நடந்த பாடத்திற்குப் பொருத்திக் காரலேஷன் (Correlation) முறையிலேயே நடத்தவேண்டும். சிறு வகுப்புகளில் இம் முறை மிகவும் முக்கியமானது.

26. விளக்கவேண்டிய விஷயங்களை உபாத்தியாயர் விளக்கிய பின் பிள்ளைகளை அவரவர்கள் இஷ்டப்படி தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிந்துபோய் அலைந்து புதன விஷயங்களைக் கிரகித்து வரும்படி உபாத்தியாயர் ஏற்பாடு செய்யலாம். ஆனால் அவர்களை ஏற்ற சில நிபந்தனைகளுக் கிணங்கி வெளியே அனுப்பவேண்டும். யாவரும் குறித்த காலத்தில் இன்ன இடத்தில் தவறாமல் வந்து சேரவேண்டுமென்று திட்டஞ்செய் தனுப்பவேண்டும். இம்முறை கையாளும்போது அபாயத்துக் கிடமான ஸ்தானங்களை முன்னடியாய் எச்சரிக்கை செய்யவேண்டும். உபாத்தியாயரின் துணையின்றி தனிமையாய் வெளியே செல்லத் தகாதவர்களை .அவ்விதம் அனுப்பாமல் நிறுத்திவிட வேண்டும்.

27. பார்த்த இடங்களையே திரும்பத் திரும்பப் பார்க்கும்படி செய்யலாம். அப்படிப் பார்க்க நேருவதால் அவ்வக் காலங்களில் அவை விளங்கும் விதத்தை யறியலாகும். ஒரு விருக்ஷம் இலையுதிர்த்து தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுக்குங் காலம் வெவ்வேறாக இருக்குமே யன்றி யாவும் ஒருமிக்க நேராவன்றே? காலபேத ஜலப்புக் கேற்ப வேறுபட்டு விளங்கும் விருக்ஷத்தின் தன்மையைக் கவனித்தல் அவசியமே யாகும். இவ்வாறே ஏரி குளம், பயிர் பச்சை முதலியவற்றின் விருத்தி க்ஷயங்களும் காலத்துக்குத் தக்கபடி வெளிப் புறங்களில் மாறுபடும் காரியங்களும் சிறுவர் அநுபவத்தில் அறிவாராயின் பிற்காலத்தில் அவை அவர்களுக்குப் பயன் படுவனவாகும்.

28. க்ஷேத்திர கணித (Space Work) சம்பந்தமாக வெளிப் பிரயாணப் பாடம் நடத்துவது அவசியமாகும். அகலம், நீளம், பரப்பு முதலியவைகளை அளக்கவும், அவற்றின் பரிமாணங்களை யறியவும் அநுகூலமாக இருக்கும். இப்பாடம் பள்ளிக்கூடக் கட்டடத்திலேயே நடத்துவதாயின் சிலாக்கியமாக நடைபெறுதல் எவ்வளவுதான் கரும பலகையையும், அதற்கென்று ஏற்படுத்திக் கொண்ட உபகரணங்களையும் உபயோகித்து விளக்குவதாயினும் க்ஷேத்திரகணித பாடம் வெளியேறிப் பயிற்றப் படுவதற்குச் சமானமாகாது, (க்ஷேத்திரம் என்றால் இடம் என்று அர்த்தம் க்ஷேத்திரம் என்பது சிலர் எண்ணுமாறு சதுரக் கணக்கென்ற மாத்திரம் பொருள் படாது. இடத்தைக் கவரும் எவ்வகை கணித முறையும் க்ஷேத்திர கணிதமாகவே கொள்ளத் தகும்

அளக்கும் அளவுகளும் நிறுக்கும் நிறைகளும் க்ஷேத்திர கணிதமேயாகும். ஏனெனில் அவையும் அளவுக் கருவிகளின் இடத்தைக் கவர்கின்றன வல்லவா?

29. இனி உபாத்தியாயர்கள் தமது தொழிலின் அபிவிருத்திக்கும், விவகாரஞான விற்பத்திக்கும் அநுகூலமாகத் தாமே தனிப்பட வெளிப்பிரயாணப் பாடத்தின் பொருட்டு வெளியேற வேண்டியதும் அவசியமாகும். வித்தியாதிகாரிகளின் பிரேரேபணையால் ஆங்காங்கு அமைந்திருக்கும் உபாத்திமைச்சங்கங்களுக்கும் உபாத்தியாயர்கள் ஆஜராகி அங்கு நடக்கேறும் விஷயங்களை உணர்வதும் இவ்வியாசத்தின் தலைப்பின்கீழ் ஒருவாறு அமைவதாகும். இவர்கள் மாசம் ஒருமுறை விதித்த ஒரிடத்திற்கு மட்டும் தொலையாதென் றெண்ணி சென்றுவருதல மட்டும் போதாது. அநுகூலமான பல இடங்களுக்கும் போய், ஆங்காங்கு நடைபெறும் காரியங்களையும், போதனைமுறைகளையும், பிரசங்கங்களையும் கேட்டும், பார்த்தும், கவனித்தும், கிரகித்தும் அவற்றையெல்லாம் குறிப்பிட்டுக்கொண்டு வருதல் முக்கியம்.

30. உபாத்தியாயர்கள் இக் காரியத்தில் இம்மட்டும் திருப்தியடையாமல் பல வேறு பாடசாலைகளிலும் தாம் நடத்தும் தொழில் எவ்வாறு நடைபெறுகிறதென்று நேரிற் சென்று அங்கு விசேஷமாயிருப்பவைகளை அறிந்து வரவேண்டும். அடிக்கடி அநுகூலப்பட்டபோதெல்லாம் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வருதல் நலம். மேலும் அநுபவஸ்தர்களிடம் பழகி, தமது குறைகளைச் சீர்திருத்திக் கொள்வதும் அவசியம். தம்மிலும் அதிகம் கற்றறிந்தவர்களிடம் சென்றுவருதலும் வெளிப்பிரயாணப் பாடமேயாகும். குறிப்பிடக்கூடிய அரிய பெரிய விஷயங்கள் அனேகமும் அதற்கென்று பிரத்தியேகமாக வைக்கவேண்டிய ஒரு புஸ்தகத்தில் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும். இவ்வகைக் குறிப்புப் புஸ்தகம் 'போதனை சாதனம்' என்னும் பெயரால் வழங்கப்படலாகும்.

பூந்தமல்லி,
6-1-1915.

சி. வே. சண்முக முதலியார்,
செகண்டரி ஸ்கூல் மாஸ்ட்டர்.

OBJECT LESSONS IN NATURE KNOWLEDGE—THE CUD-CHEWERS.

(செம்மறியாடு, வெள்ளாடு, மாடு, மான், ஆன்டிலோப், ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி.)

அசைபோடும் பிராணிகள்

I. Examination of Pictured Animals —

(*A*) *Similarity* — (1) அசைபோடும் பிராணிகளெல்லாம் பொதுவாக ஒரே தோற்றமுடையவைகளாக இருக்கின்றன. தனிரவும் அவை புல் மேயும் சாந்தமுள்ள பிராணிகள். (2) எல்லாவற்றிற்கும் பிளவுபட்ட குளம்புகள் உண்டு. அவைகள் நீண்டு முன்னுலே இருவிரல்கள்போ லிருக்கின்றன பின்னுலே 'குதி முள்' என்று சொல்லப்படுகிற இரு சிறு விரல்களிருக்கின்றன. (3) எல்லாவற்றிற்கும் மேல்தாடையில் பற்களிரா. அதற்குப் பதிலாக அந்த இடத்தில் ஒரு மெத்தைபோல் ஈர் இருக்கிறது; நாவானது இலை தழைகளை இழுத்துக் கடிக்க ஏற்றதாய் நீண்டும், அழுத்தமாயும், கரடு முரடாயு மிருக்கிறது. (4) எல்லாவற்றிற்கும் நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட வயிறு உண்டு. (5) இந்த மிருகங்களை எல்லாம் நீண்ட அல்லது சுருங்கின அல்லது குட்டையான ரோமம் கவிந்திருக்கும். பின்னும் முதுகெலும்பை உடையதா யிருத்தல், குட்டி போட்டுப் பால் கொடுத்தல் முதலிய பல விஷயங்களில் ஒத்திருக்கின்றன.

(*B*) *Dissimilarity* —(1) சரீரத்தின் உருவமும் பருமனும், அவயவங்களின் நீளமும் பலவிதமாய் பேதப்பட்டிருக்கின்றன. (2) தோலின் நிறமும் அதன் அமைப்பும், வாலின் வடிவமும் பலவிதமாய் வித்தியாசப்பட்டிருக்கின்றன. (3) சிலவற்றிற்கு கொம்புக ளிருக்கின்றன. சிலவற்றிற்கு அவை யில்லை. தனிரவும் கொம்புகள் வடிவத்திலும் அமைந்திருக்கும் பொருள்களிலும் பேதப்பட்டிருக்கின்றன.

II. Detailed Examination of Horns —

(1) ஒட்டகம் தனிர அநேகமாய் மற்ற அசைபோடும் பிராணிகளுக்கெல்லாம் கொம்புகள் உண்டு. ஒட்டகத்திற்கோ கொம்பு சிறிதும் கிடையாது. ஒட்டகச் சிவிங்கிக்கு தலையின் ஒவ்வொரு பக்கத்திலும், நெற்றியின் முன்பக்கத்தின் மத்தியிலும் கெட்டியான கொம்புகள் சிறிது காணப்படும். (2) எருது, ஆடு, வெள்ளாடு முதலியவற்றின் கொம்புகள் குழலானவை, குளம்புகளைப்போலொத்த ஒருவிதப் பொருளால் செய்யப்பட்டதுமானவை. பெண்ணினிட ஆணுக்கு கொம்புகள் பெரியதாக யிருக்கும். பெண்ணுக்கிருப்பதுபோல அசைபோடும் அநேக பெண் மிருகங்களுக்குக் கொம்புகளே கிடையாது. (3) கலைமான் (Reindeer) தனிர மற்றப் பெண் மான்களுடைய கொம்புகளானது ஆண்மானுடையதைத் தக்கபடி அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் உண்மையில் கொம்புகள் அல்ல. கிளைகளோடு கூடிய சவைக் கொம்புகள் (Branching Antlers). அவை எலும்பைப்போலொத்த வஸ்துக்களாலானது. (4) ஆன்டிலோப்பு (Antelopes) என்னும பிராணிகள் அநேகமாய் சாதாரண மான்போலவே யிருக்கும். ஆனல் கொம்புகள் மாத்திரம் சாதாரண மான்களுக்கிருப்பதுபோலிராமல் வித்தியாசப்பட்டு வெள்ளாடுகளுக் கிருப்பதுபோலிருக்கும். (5) எருது, ஆடு, வெள்ளாடு முதலியவற்றின் கொம்புகள் நிலைவரமாயிருக்கும். மானின் கொம்புகளோ ஒவ்வொரு வருஷமும் உதிர்கின்றன.

III. Cud-Chewers or Ruminants —

(1) இந்தப் பிராணிகளெல்லாம் அசைபோடும் பிராணிகள் பொதுவில் பல குணங்களை உடையனவாயிருக்கின்றன. அதாவது பிளவுபட்ட குளம்புகளை யுடையனவா யிருக்கின்றன. மேல் தாடையில் பற்களில்லை. நாலு பாகங்களை யுடைய வயிறு உண்டு. (2) ஒரு அசைபோடும் பிராணியானது தன் நீண்ட நாக்கால் வாய்க்குள் புல் தழைகளைக் கூட்டுகின்றது. (3) பிறகு அந்த ஆகாரம் பான்ச் (Paunch) எனப்படும். முதல் வயிற்றிற்குள் போகும்படி சிட்டென்று விழுங்கப்படுகிறது. (4) வேண்டிய அளவு ஆகாரம் எடுத்துக்கொண்டதும் பிராணி கீழே படுத்து அல்லது நின்று அசை போடுகின்றது. அப்பொழுது முதல் வயிற்றிற்குள் சென்ற உணவு இரண்டாவது வயிறுகிய (Honeycomb) தேனி கோமுக்குப் போய் சிறிய உருண்டைகளாகத் திரண்டு திரும்பவும் இரண்டாவது வயிற்றிலிருந்து நேராக வாய்க்கு வரும். (5) பிறகு ஆகாரம் உமிழ்நீருடன் சேர்த்து சரியாக

அரைக்கப்பட்டு மானிபிளஸ் (Maniplies) என்று சொல்லப்படும் மூன்றாவது வயிற்றுக்குப் போய், பின் அங்கிருந்து உண்மையான வயிறுகிய நான்காவது வயிற்றுக்குள் (Stomach) செல்கின்றது. அங்கு அந்த உணவு சரியாய் ஜீர்ணிக்கப்படுகிறது. (6) அசை போடும் பிராணிகள் அநேகமாக கொம்புகள் உள்ளவை.

IV. The Camel and the Giraffe (Leading Features)—

(*A*) ஒட்டகம் வயிற்றின் அமைப்பால் வித்தியாசப்பட்டிருக்கிறது — (1) அதாவது மூன்றாவது வயிறு (Maniplies) கிடையாது. ஆனால் ஹனிகோம (Honeycomb) என்னும் இரண்டாவது வயிற்றின அறையானது விரிந்து, தண்ணீரைச் சேர்த்து வைத்துக்கொள்ளத்தக்கதாய் பெரிய பையாகிறது. தவிரவும் முதலாவது வயிற்றிலும் (Paunch) ஜலம் சேகரித்து வைத்துக் கொள்ளப்படுகிறது. (2) குளம்புகள் கிடையா. அதற்குப் பதிலாக அந்த இடத்தில் சுருங்கவும் விரியவும் கூடிய ரப்பர் போன்ற மெத்தை (Pad) யிருக்கிறது. (3) உஷ்ணமான மணலிலேயும் கடினமான பாறையிலேயும் முழங்கால்படியிட்டுப் படுக்க வேண்டியதா யிருப்பதால், கனத்த த்தாலாலாகிய உரத்த மெத்தை (Callous Pad) முழங்கால்களிலும் மார்பிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது. (4) மண்மாரி பெய்யும்பொழுது மண் மூக்குக்குள் நுழையாமல் காக்கக் கூடியதாய் அதன் மூக்குத் துவாரங்கள் மூடக்கூடியனவாயிருக்கின்றன. (5) மேல்தாடையில் பற்கள் உண்டு.

(*B*) ஒட்டகச் சிவிங்கியின் சுபாவங்கள் — (1) எல்லாப் பிராணிகளையும் விட ஒட்டகச் சிவிங்கியே மிக உயரமானது. அதாவது சுமார் 20 அடி உயரமிருக்கும். (2) மரங்களின் உச்சியிலுள்ள சிறு கொம்புகளாகிய உணவை எடுக்க ஏற்றதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. (3) முன் கால்கள் பின் கால்களை விட நீண்டதாய்த் தோன்றினாலும் உண்மையில் அப்படி நீண்டதல்ல ஆனால் தோள் பட்டை அமைப்பாலே அப்படித் தோன்றுகிறது. முதுகுப் பக்கம் கழுத்திலிருந்து வால் பக்கமாய் சரிவாக இருக்கும். (4) காக்கு விரும்பினால் வேட்டத்தக்கதும், மெல்லியதாகக் கூடியதுமானது.

T. A. EGYAMIAR,
Headmaster, Board School, Kalugumalai, &
Secretary Teachers' Association, Kalugumalai.

MEN AND MANNERS

நாலு ஜனங்களின் நடவடிக்கை

(39-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி.)

5. சாக்கியார்கள்—'சாக்கியார்' என்னுஞ் சொல் 'சிலாக்கிய வாக்குக்காரர்' என்னும் சொல்லினின்று மருவி வந்ததாகக் கூறுவார்கள். சிலாக்கியமான வாக்குக்காரர்கள் என்பது வாசாலகரைக் குறிக்கும்; அதாவது தடைபடாமல் திறமையுடன் பேசுந் தன்மையுள்ளவர்கள் என்று அர்த்தமாகும். இந்தச் சொல்லினால், மலையாளத்து ஜன சமுதாயத்தில் முற்காலங்களில் சாக்கியார்களுக்கு ஏற்பட்டிருந்த காரியம் இன்னதென்று தெரிகிறது.

ஜாதி நிர்ணயம் என்னும் நூலின்படி சாக்கியார் ஜாதி இக்தக் கலியுகத்தில் உண்டானதாகும். அந்தச் சாதியின் மூல புருஷனுக்கு ஜன சமுகத்தில் அந்தப் பதவி அளித்ததற்குக் காரணம், அவன் செய்திருந்த குற்றமொன்று அவனுக்குப் பூணூல் போட்ட பிறகு (உபநயன சம்ஸ்காரம் ஆனபிறகு) வெளிப்பட்டது. பூணூற் சடங்கு செய்வதற்கு முன்னால் குற்றம் வெளிப்பட்டிருந்தால், அந்தக் குற்றஞ் செய்தவர்களை நம்பியார் என்னுஞ் ஜாதியாக ஒதுக்கி வைப்பது வழக்கம். மலையாளத்துச் சாக்கியார்களுடைய தொழிலும் சூதருடைய தொழிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. மனுதர்ம சாஸ்திரத்தின்படி சூதனென்பவன் பிரதிலோம விவாகத்தினால் பிறந்தவன். பிரதிலோமம் என்பது பிராமண ஸ்திரீயை க்ஷத்திரியன் கலியாணஞ் செய்துகொள்வதாம். இதற்கு எதிரிடைப் பதம் அநுலோமம் என்னப்படும்; அது உயர்ந்த ஜாதிப் புருஷன் தாழ்ந்த ஜாதி ஸ்திரீயை மணப்பது.

சாக்கியார்களுக்குள் ஸ்திரீ பரம்பரையிலேயே ஆஸ்தி உரிமை செல்லுகின்றது. பெண்கள் தங்கள் ஜாதிப் புருஷர்களையே கலியாணஞ் செய்துகொண்டாலும் செய்து கொள்ளலாம்; இல்லாவிட்டால் நம்பூதிரிகளுடன் 'சம்பந்தம்' வைத்துக்கொண்டு இருக்கலாம். 'சம்பந்தம்' என்பது மலையாளத்தில் வழங்கும் ஒருவகையான விவாக முறை. சாக்கியார் ஸ்திரீகளுக்கு இல்லோடம்மமார் என்று பெயர். அவர்களுடைய ஆபரணங்கள் நம்பூதிரிகள் அணிபவைகளைப் போன்றிருக்கும்.

நம்பியார் ஜாதிப் பெண்ணே சாக்கியார் ஜாதிக்காரன் சம்பந்தஞ் செய்துகொண்டு மனைவியாக ஏற்கலாம். வைதிக காரியங்களை நடத்துவதற்குப் புரோகிதர்கள் சாக்கியார் ஜாதியிலேயே உண்டு. ஆனல், பிரஸவத்திற்குப் பிறகும் சாவுக்குப் பிறகும் பிராமணர்களைக் கொண்டு சாக்கியார்கள் புண்ணியாகம் செய்வித்து வீடுகளையும் தங்களையும் பவித்திரமாக்கிக் கொள்ளுகிறார்கள். அந்தத் தீட்டு அவர்களுக்குப் 11 நாள் உண்டு. அவர்கள் காயத்திரீ மந்திரத்தை 10 முறை ஜபிக்கத் தக்கவர்கள்.

சாக்கியார்களுக்கு பரம்பரையாக ஏற்பட்ட தொழில், ஏற்கெனவே நாம் குறிப்பிட்டிருப்பதுபோல், புராணக் கதைகளை பிரசங்கிப்பதாகும். பிராமணர்களல்லாத மற்றச் சாதியார்களுக்கு தசாவதாரங்களின் சரித்திரங்களே பெரிய மதக்கிரந்தங்களாகக் கொள்ளப்படுவன; அவைகளே அவர்களுக்கு வேதத்துக்கு ஒப்பானவைகளாகும். ஆதிகாலத்துப் பிராமணர்கள் தங்களுக்குரிய வைதிகச் சடங்குகளைச் செய்து முடித்த பிறகு ஒழிவுற்றிருக்கும் வேளைகளில், அதாவது பிற்பகலில், தசாவதாரக் கதைகளைப் படித்துப் பிரசங்கிக்கத் தக்க ஒய்வும் மற்றுமுள்ள அநுகூலங்களும் பெற்றிருக்கும் சாக்கியார்களைக் கொண்டு விரித்துரைக்கச் சொல்லிக் கேட்பது வழக்கம்.

மேற்சொல்லியவாறு பிரசங்கஞ் செய்வதற்கு ஏற்றவாறு அநேக கிரந்தகர்த்தர்கள் அந்தக் கதைகளை விரித்துத் தொகுத்துத் தொடுத்து எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிரந்தகர்த்தர்களுள் நாராயண பட்டபாதர் (பட்டத்திரிப் பாட்டு) என்பவர் ஒருவர். இவர் அநேக நூல்கள் செய்திருக்கின்றார். அவைகளுள் தூதவாக்கியம், பாஞ்சாலி சுயம்வரம், சுபத்திராஹரணம், கௌந்தேய யாஷ்டகம் என்பவை பிரபலமாக வழங்குகின்றன. இவையன்றி, போஜசம்பு, மகாநாடகம் முதலிய முதன்மையான சம்ஸ்கிருத கிரந்தங்களையும் சாக்கியார்கள் படித்துப் பிரசங்கஞ் செய்வார்கள்.

அவர்கள் பிரசங்கஞ் செய்யும்போது அந்தந்தச் சமயத்திற்கேற்றபடி அநேக நீளக் கதைகள் சொல்லுவார்கள். அவை மிக இனிமையாயும் வேடிக்கையாயும் இருக்கும். அவர்களுடைய வாசாலதையும், வாக்குகளில் அடங்கி யிருக்கும் ஆஸ்யரசத்

தையும் கண்டு கேட்டு ஆனந்தித்து ஜனங்களெல்லாரும் பரவசர்களாய் இருப்பார்கள்.

ஒவ்வொரு பெரிய கோவிலிலும் உற்சவகாலத்தில் சாக்கியார் கூத்து தவறாமல் அமைக்கப்படும். சாக்கியார் கூத்து என்பது அவர்களுடைய பிரசங்காபிநயங்கள் (ஆட்டபாட்டங்கள்) இந்தக் கூத்துகள் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தின் வடபாகங்களில் விசேஷமா யுண்டு. இந்தக் கூத்துகள் ஆடுவதற்காகத் தனியே ஒரு மண்டபம் அமைத்து வைத்திருப்பார்கள். அந்த மண்டபத்திற்குக் கூத்தம்பலம் என்று பெயர்.

கூத்தம்பலத்தில் விசித்திரமான நடை உடை பாவனைகளுடன் கூடி சாக்கியான் புராணக் கதைகளைப் பிரசங்கித்து ஆடித்துக் காட்டுவான். கோரணியான ஆடை உடுத்து அவன் ஒரு முக்காலிப் பலகையின்மீது வீற்றிருப்பான். அவனுடைய தலைப்பாகை விசித்திரமா யிருக்கும்; பொற்சரிகையும் பட்டும் இழைந்து பிரகாசமாக விளங்கும். வர்ணக் கரைகள் அமைந்த வேஷ்டியை இடையில் கட்டிக்கொண்டிருப்பான்; அதன் மடிப்புகள், பட்டை தீர்ந்ததுபோல, செங்குத்தாக இருக்கும். சாக்கியாரின் ஆடை விவரங்களை எடுத்துக் கூறுவது எளிதன்று. அதனில் அடங்கிய நுண்ணிய அம்சங்களும் கண்ணிய அம்சங்களும் அதிகம். அத்தகைய உடுப்பு சாக்கியார்களுக்கே உரியது.

சாக்கியாருக்குப் பின்னல் நம்பியார் நின்றுகொண்டிருப்பார். சாக்கியாருக்கும் நம்பியாருக்கும் ஒருவிதமான உறவு முறை பரம்பரையாக ஏற்பட்டிருக்கிறதென்று முன்னமே குறித்திருக்கிறோம். அவனுக்கு எதிரில் ஒரு பெரிய முரசு வைத்துக்கொண்டிருப்பான். அந்த முரசுக்கு மிளாவு என்று பெயர். அதன் மந்த ஸ்வரம் தூரத்தில் உண்டாகும் இடி முழக்கத்தின் எதிரொலிபோன் றிருக்கும். நம்பியார் இல்லாமல் சாக்கியார் கூத்து நடவாது. பிரசங்கத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் இடையிலும கூட அவன் தன்னுடைய பெரும் பேரிகையை முழக்குவான்; சாக்கியார் சம்ஸ்கிருத சுலோக மொன்று சொல்லி முடிக்கும்போதெல்லாம் அவன் கர்ஜிப்பான்.

சாக்கியார் கூத்துக்கு இன்றி யமையாத அங்கம் மற்றொன்று உண்டு. அதாவது, நங்கையார் என்னும் ஸ்திரீ. அவள் நம்பி-

யார் ஜாதிக்காரி. கையில் தாளத்தை வைத்துக்கொண்டு அவள் சாகுகியாருக்கு எதிரில் உட்கார்ந்திருப்பாள். அவள் அந்தக் கிங்கிணியை அப்போதைக்கப்போது ஒலித்துக்கொண் டிருப்பாள். அவள் சிறிதும் அசையாமல் சிலையைப்போல, சுகதோஷம், விசனம், ஆச்சர்யம் முதலிய உணர்ச்சிகளைச் சிறிதும் காட்டாமல் உட்கார்ந்திருப்பாள். சுற்றுமுற்றும் சந்தடி மிகுந்து எல்லாரும் குதூகலமாய் நகைத்து ஆடிப்பாடி அமளி எழுப்பிக்கொண்டு இருக்கையில், ஒருவர் மாத்திரம் கல்லைப்போல உணர்வற்றிருப்பது மிக விநோதமாகவும் அதிசயமாகவும் இருக்கின்றது. அந்த நங்கையார் அங்குள்ள ஆட்ட பாட்டங்களினுலாவது, கதையிற் சார மான சந்தர்ப்பத்தினுலாவது உணர்ச்சி மேற்கொண்டு கொஞ்சம் சிரித்தால் அந்தக் கூத்து உடனே நின்றுவிடும்; அதற்கு மேலே நடவாது. பிறகு அந்த இடத்தில் ஒருபொழுதும் கூத்து நடக்கக்கூடாது. இவ்விதமாகச் சில கோவில்களில் கூத்து நின்றுபோயிருக்கின்றது; அதுமுதல் இதுவரையில் அந்தக் கோவில்களில் கூத்து நடப்பதேயில்லை.

சாக்கியார் கதை செய்துகொண் டிருக்கையில், அந்தக் கதையில் வரும் விசேஷமான ஸ்திரீ புருஷ பாத்திரங்களை வர்ணித்துச் சொல்லும்போது, கதை கேட்டுக்கொண் டிருக்கும் தனவான்களில் எவரையேனும் ஒவ்வொரு வேளையில் அந்தப் பாத்திரங்களாகப் பாவித்துப் பேசுவான். கதையிற் குறித்த ஸ்திரீ புருஷர்களே எதிரில்வந்து தோன்றியிருப்பதுபோல நடிப்பான். கதை கேட்க வந்திருக்கும் தனவான்களை அந்தப் பாத்திரங்களாகக் குறிப்பிடுகையில், அவன் மிகவும் மரியாதையாகவும் பொதுவாகவும் பக்குவமாகவும் குறிப்பிடுவான். ஆதலால், அப்படிக் குறிக்கப் பெற்றவர் எவரும் அதற்காகக் கோபங் கொள்ளமாட்டார்கள்.

மிகுந்த அவாவுடன் கதையை உற்றுக் கேட்டுக்கொண் டிருக்கும் ஒருவனைச் சாக்கியார் உற்றுப் பார்த்து, அவனையே நேரில் கேட்பதுபோல அந்தக் கதையின் தொடர்ச்சியில் அநேக கேள்விகளைத் திட்டமாய்க் கேட்பார். அப்படிச் சாக்கியார் கேட்கும்போது அவன் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் அடக்கிக் கொள்வது மிகவும் கஷ்டமாயிருக்கும். துரியோதனனைப் பார்த்துக் கிருஷ்ணன் கேட்கும் கேள்விகளைச் சாக்கியார் அந்தச் சபையிலுள்ளவர் ஒருவரை நோக்கி அவரையே துரியோதனனுகப் பாவித்து நேர் நேராய் கேட்கும்போது, அந்தச் சபையினர் தம்மையே சாக்கியார் வினவுகிறார் என்று உணர்ந்தும், பதில் சொல்லாமல் அடக்கிக்கொண் டிருப்பதற்கு அருமையான பிரயத்தனம் செய்யவேண்டி வரும். சாக்கியார் கேட்கும் கேள்விகள் அவ்வளவு பிரத்தியக்ஷமாகவும் உணர்ச்சி யெழுப்பத் தக்கனவாகவும் இருக்கும். அப்படிச் சாக்கியாரினல் கேட்கப்பெற்றவர் எவரேனும் மெய் மறந்து அந்தக் கேள்விகளுக்கு பதில் பேசி விட்டால், உடனே அந்தக் கூத்தை நிறுத்திவிடுவது வழக்கம்.

சபையினர்களைக் கதா புருஷர்களாகப் பாவித்துப் பேசி நடிப்பதில் சாக்கியார் மிகச் சிறந்த தேர்ச்சி உள்ளவர்கள். உண்மையில் அந்தக் கதைப் புருஷர்களே எதிரில் நின்று விவகரிப்பது போலத் தோற்றும். இதனல் ஒரு சமயத்தில் ஒரு பிரமாதம் நடந்ததாகக் கூடச் சொல்லுவார்கள். இப்படி நடப்பதில் ஒரு சாக்கியாருக்கிருந்த அற்புதத் திறமையே, விபரீத விதிவசத்தால், அவருடைய பிராணத்துக்கு ஆபத்தாய் முடிந்தது.

ஒப்புயர் வில்லாத நாடகாலங்காரச் சிறப்புக்களுடன் அவன் மகாபாரதத்தின் ஒரு பகுதியை விளக்கி நடித்து வருகையில், பாண்டவரிடத்து அளவற்ற அபிமானமும் பக்ஷபாதமும் முள்ளவன் ஒருவன் அந்தக் கேட்போர் சபையில் உட்கார்ந்திருந்தான். பாண்டவர்களுக்கு விரோதமான விஷயங்களைச் சாக்கியார் விவரித்து விளக்கியபோது அந்தச் சபையினனுக்கு ஆக்கிரகம் பொங்கிற்று. அதை அவன் அடக்க முடியாமல் தன் இடத்தைவிட்டு எழுந்து கூத்து மேடைக்கு ஓடி அந்தச் சாக்கியாரை ஒரே அடியில் அடித்துக்கொன்று வீழ்த்தினன். பாண்டவர்களுக்கு ஊசி முனை குத்தும் இடங்கூடக் கொடுக்கமாட்டேன் என்று இரக்க மற்றுத் துரியோதனன் சொல்லியதை போல சாக்கியார் நடித்துக் காட்டினர். அவருடைய நடனம் போலிச் செயலாகத் தோன்றவில்லை; துரியோதனனே எதிரில் நின்று அப்படிச் சொல்லியது போல அவ்வளவு உண்மையாக எல்லாருக்கும் தோன்றிற்று. அப்படித் தோன்றும்படி நடிப்பது அற்புதமான சாமர்த்தியமே அந்தச் சாக்கியாருக் கிருந்த அதிசயமான சாமர்த்தியம் அவருக்குச் சாவாய் முடிந்தது.

இந்தச் சம்பவம் நடந்தது ஒரு கிருகஸ்தனுடைய மாளிகையிலாகும். இந்த உயிர்ச்சேதம் நடந்தது முதல், ஆலயங்களிலல்லாமல் குடிகளுடைய வீடுகளில் கூத்துகள் நடத்தக்கூடாதென்று விதிக்கப்பட்டதாம்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya."

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

சாவைன் என்னும் சிறுவன் ஓர் ஏழைக் குடியானவனுடைய பிள்ளை. பிரகாசமான முகமுடையவன்; கீண்டு வளர்ந்த புருவமும் சாந்த குணத்தை விளக்கக்கூடிய கண்களும் கண்டோர் மனத்தைக் கவரத்தக்க தன்மை வாய்ந்திருந்தன. அவனைப்போல் நான்குபேர் நுழையக்கூடிய பெரிய சட்டையிலும் நிஜாரிலும் புகுந்து நின்றான். அவன் போட்டுக்கொண்டிருந்த பூட்ஸுகளோ அவன் தகப்பனுருடையவை. அவனது அழகிய முகமும் சுறுசுறுப்பும் முதலில் கண்டபோதே டால்ஸ்ட்டாய் மனத்தை வசப்படுத்திவிட்டன. அதுவுமன்றி அவன் கணக்கில் ஒரு சிறு நிபுணன் என்றும் படிப்பில் அதிக ஆர்வமுள்ளவன் என்றும் அவர் கண்டதும் அவன்மேல் அவருக்கு அளவில்லாத அன்பு உண்டாய்விட்டது. அவனைப் பாடங் கேட்டபொழுது, அவன் தன் தலையை ஒருபுறம் சாய்த்துக்கொண்டு, கண்ணீர்விட்டுக் கலங்கி நின்றான். உற்றுக் கவனித்தால் அவன் தரையில் விழுந்து விடுவான்போலவே இருந்தது. இந்தக் காரணத்தினாலேயே இவன் இறக்கக்கூடிய தன்மைக்கும் வந்துவிடுவான்போல் இருந்தது. இது இவனுடைய முன் உபாத்தியாயர் இவனுக்கு உண்டாக்கிய பயத்தினால் உண்டாயிருக்குமா? அல்லது அவனுக்கு ஏற்பட்டுள்ள தற்பெருமையினால் என்று சாற்றலாமா? அல்லது, தன்னிலும் தாழ்ந்தவர்கள் என்று தான் மதிக்கக்கூடிய பிள்ளைகளின் சமூகத்தில் தனக்குள்ள பெருமிதத்தினால் என்னலாமா? இவ்வொரு விஷயத்தில் மாத்திரம் மற்றவர்களுக்கெல்லாம் தான் தாழ்வா பிருப்பதனாலும் தன்னுடைய உபாத்தியாயருக்குச் சங்கடமாகத்தானிருக்க

நேர்ந்திருப்பதனாலும் உண்டாகிய வெறுப்பினால் என்று விளம்பலாமா? மற்ற எந்த வகையினால் இவ்வகைய நிலையை அடைந்தான் என்று கூறுவது? இந்த இளைஞன் தன் உபாத்தியாயர் கூறிய கடுஞ் சொல்லினால் மனம் புண்பட்டு இருப்பதனால் இப்படியானனோ? அல்லது மேற்கூறிய விஷயங்கள் எல்லாம் ஒன்று கூடி இவனுக்கு இத்தன்மையை உண்டாக்கினவா? எதனால் உண்டாயிற்றோ, அதைக் கடவுள்தான் அறிவார். ஆனால் அந்த நாணம் அவனுக்கு இயற்கையிலேயே இருப்பதானாலும் அது நற்குணத்திற்கு விரோதமானதே. இவ்வினைஞனது நல்ல சுபாவங்களில் எல்லாம் இந்த நாணமும் கலந்திருக்கிறது. ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி இவ் வெட்கத்தை அறவே ஒழிக்க முயலலாம். இந்த துர்க்குணம் ஒழியும் வாயிலாக நற்குணமும் நழுவி நீங்கிவிட நேரினும் நேர்ந்துவிடுமே. அதற்கு என்ன செய்வது!

டால்ஸ்ட்டாய், புதிதாக வந்த உபாத்தியாயரைப் பார்த்து, 'பிள்ளைகள் எல்லாம் தத்தம் வகுப்பை விட்டு இஷ்டமானபடி போய் ஏறியும் குதித்தும் விளையாட விடும்' என்று சொன்னார். பிறகு அப்பாடசாலை படிப்படியாகவிருத்தியடையத்தொடங்கிற்று. சிக்கிர காலத்தில் இதே சாவைனைப் பற்றிப் பாடசாலைப் பதிவு புஸ்தகத்தில் மெச்சத் தகுந்த சிறந்த குணங்கள் குறிப்பிட்டிருப்பதை டால்ஸ்ட்டாய் கண்டு சந்தோஷித்தார்.

மீட்டர்லிவ் என்பவர் சமீபகாலத்தில் தேனீக்களின் தன்மையைப்பற்றி எழுதியிருக்கிறார். சுமார் 40 வருஷங்களுக்கு முன்னரே டால்ஸ்ட்டாய் பள்ளிக்கூடங்களின் தன்மையைப்பற்றி இதே மாதிரி எழுதியிருக்கின்றார். அவர் சொல்வதில் உபாத்தியாயருடைய கட்டுக் கடங்காததும், இன்னதென்று விவரித்துச் சொல்லக்கூடாததும் போதனை முறைகளுக்குச் சிறிதும் சம்பந்தப்படாததுமான சில விஷயங்கள் உண்டு. அப்படியிருந்தும் அவற்றினாலேயே காரியசித்தி உண்டாகின்றது. அதுதான் பள்ளிக்கூடத்தின் பாங்கு என்கிறார் டால்ஸ்ட்டாய். உபாத்தியாயருக்கு இந்தத் தன்மையில் அல்வழியான செல்வாக்கும் சிறிது உண்டு. ஏனென்றால், சில காரியங்களில் அவர் பிரவேசித்தால் அவை அழிந்துவிடவுங் கூடும். இப்படிப்பட்ட விஷயங்களைப் பிள்ளைகளை யோசித்துச் செய்யும்படி விட்டு விடுவதற்கேற்ப அவை விருத்தியாகிவிடுமென்கிறார்.

நீர் ஒரு பையனைக் கேள்வி கேட்கிறீர். அதற்கு மற்றொருவன் பதில் சொல்ல விரும்புகிறான். அப்போது அவன் தன்மைகள் எவை? அவன் உமது பக்கமாகத் திரும்பி மேல் விழுந்து, கண்ணைப் பரக்கத் திறந்துகொண்டு, மேல் விழுந்து உற்சாகத்தோடு இமைகொட்டாமல் உம்மையே பார்க்கிறான். அவன் வாயில் தோற்றும் வார்த்தைகளை அடக்கமுடியாது. அச்சமயத்தில் அவனைக் கேட்டால் அவன் அடக்கமுடியாத ஆர்வத்துடன் விரைந்து விடை கூறுவான். அவன் அப்போது கூறும் விடை பசுமரத்தாணிபோல் அவன் மனத்தில் பதிந்து விடும். அப்போது பதில் அவன் சொல்ல வொட்டாமல் கொஞ்ச நேரம் நிறுத்தி வைத்தால், அவன் தன் அருகிலிருக்கும் பிள்ளையைக் கிள்ளியாவது தன் விடையை வெளியிட்டு விடுவான்.

மற்றும் டால்ஸ்ட்டாய், அடிபிற்கண்டவாறு, நம் பிள்ளைகளைப் பரீக்ஷிப்பதும் வழக்கமாம். தமது பாடசாலையிலுள்ள பிள்ளைகள் வழக்கம்போல ஒழுங்கீனமாக இருக்கும்படி விட்டுவிட்டு அவர் வெளியே போய்விடுவார். அவர் கொஞ்சநேரம் பொறுத்து, திரும்பிவந்து, கதவருகில் நின்று, உள்ளே நடக்கும் விஷயத்தை உற்றுக் கவனிப்பார். அப்போது, பள்ளிக்கூடத்தில் தாம் இருக்கையில் இருந்த அமரிக்கையைவிட பதின் மடங்கு அதிகம் இருப்பதைக் காண்பாராம். பிள்ளைகள் தங்கள் பாடங்களைக் கவனிப்பதிலும், ஒருவருக்கொருவர் ஒப்பித்துக்கொள்வதிலும், ஒருவன் குற்றத்தை மற்றவன் திருத்துவதிலும் அமைந்திருப்பதைக் காண்பாராம். பழய மாதிரியான பாடசாலைகளில் பிள்ளைகள் தனித் தனியே இருந்து பாடம் படிக்கும்படி உபாத்தியாயர் திட்டம் செய்து விட்டு வெளியே போனால், அவர் அப்படிச் சென்று மறைந்ததும் பிள்ளைகள் எழுந்து பாட ஆரம்பித்து விடுவார்கள். இதன் கெடுதி உடனே வெளியாவது நிச்சயம். யாஸ்னேயா பாடசாலைக்குப் புதிதாக வந்த ஒரு பையன் ஒரு மாத காலம் அமரிக்கையாக இருப்பது நிச்சயம். பிறகு படிப்படியாய் மற்றப் பிள்ளைகளோடு கூடிப் பாடவும் ஆடவும் தனக்குண்டான இடத்தில அமரவும் வேறு பிள்ளைகளிடம் கேட்கும் விஷயங்களினபடி மனம் செலுத்தவும் வந்து விடுவான் என்கிறார் டால்ஸ்ட்டாய்.

பத்திராதிபர்.

LOYAL SONG

ராஜ வாழ்த்து

இது சென்னை மலையப்பன் வீதியிலிருக்கும்
கார்பொரேஷன் ஸ்கூலில் நடத்திய டெல்லிதர்பார்
கொண்டாட்டத்தின்போது பாடியது.

("லல்லலல்ல லாலலாய் — லலலலலல லாலலாய்")

1. சீர்த்தியுற்ற ஜ்யார்ஜனுங் - கீர்த்திபெற்ற மன்னரின்
   சேர்த்தியான செய்கையைப்- பூர்த்தியாகப் பாடுவோம்.

2. கல்வியிலா காலிலே - பல்கலை பயிற்றவே
   நல்வகையி னில்லுழைத் - தல்வழியை ஒட்டினர்.

3. தந்திதபா லின்றியே - முந்தைநாளில் நாமுமே
   சிந்தைநொந் திருந்ததை - விந்தையாக நீக்கினர்.

4. கஷ்டாலே நேரிடுங் - கஷ்டநஷ்ட நீங்கவே
   இஷ்டமுடன் போலிசை - ஸ்பஷ்டமாக நியமித்தார்.

5. வெயிலிருட்டி லஞ்சிநாம் - மயில்பல செல்லாமலே
   மெயில்ஸ்பெஷல் கூட்செனு-ரெயில்களி லமைத்தளார்.

6. வங்கமேறிக் கடலிலே - பங்கமின்றிச் செல்லவே
   சுங்கங்கொஞ்ச மாகவைத் - தெங்குமேக வேசெய்தார்.

7. வாதைபடு வோர்க்குநல் - வைத்யசாலை வைத்தனர்
   பாதைபாலங் கட்டியே - தாதைபோ லுதவினர்.

8. வண்டிவா கனங்களும் - கண்டியான மோட்டாரும்
   எண்டிசைசெ லேரோப்லேன் - உண்டுபண்ணி னாரோ.

9. பன்னும்பல நன்மைகள் - இன்னுமிங்கு செய்தநம்
   அண்ணல்ஜார்ஜ் மேரியோ - டிங்கிலத்தில் வாழ்கவே.

10. கார்பொ ரேஷனும்மிக - பேர்பெருகி வாழ்கவே
    சீர்பெருகு சென்னையும் - ஊர்மகிழ வாழ்கவே.

C. D. Singam.

HYGIENE

சுகாதாரம்

ஜலத்தில் அமிழ்தல் முதலியன

சிலர் தங்கள் வீட்டு ஓரத்திலுள்ள கால்வாய்களையும் கிணறுகளையும் தண்ணீர் நிரப்பியிருக்கும் பெரிய கொப்பரைகளையும் தொட்டிகளையும் சரியாகப் பந்தோபஸ்து செய்யாதிருப்பதால் அநேக பிள்ளைகள் இறந்துபோவதைப் பார்த்த நாம் பலவாறுகப் பரிதாபித்திருக்கிறோம். சிலர் தண்ணீரிலிருந்தெடுத்த பிள்ளைகள் மூச்சற்றிருப்பதைக் கண்டு அவைகளிறந்துபோயின வென்றெண்ணி அழுது புரண்டு பிழைக்கக்கூடிய பிள்ளைகளை அறிவீனத்தால் மரணத்திற்கு உட்படுத்திவிடுகிறார்கள். பிள்ளைகள் ஜலத்தில் விழுந்து 1 மணி நேரத்திற் கதிகப்படாதிருந்தால் சரியான சிகிச்சை செய்யும் பக்ஷத்தில் பிழைக்கு மென்பதில் யாதொரு தடையுமில்லை. விழுந்த குழந்தையை ஜலத்திலிருந்தெடுத்தவுடன் அதன் வாய், கண், காது, மூக்கு முதலியவைகளிலிருக்கும் மண் தாசி இலை தருமபு முதலிவைகளைத் துடைத்து விட்டுக் கட்டியிருந்த உடுப்புகளை நீக்கிப் பிள்ளை நன்றாய் சுவாசம் வாங்கத்தக்க காற்றோட்டமுள்ள இடத்தில் கம்பிளியின்மேல் குப்புறக்கிடத்தி, கையை நெற்றியின்கீழ் வைத்தால், பிள்ளை குடித்திருக்கும் ஜலமெல்லாம் அப்பொழுது வெளியே வந்துவிடும். பிள்ளையைப் பலதரமும் திருப்பித் திருப்பிச் சாய்த்துக் கிடத்தவேண்டும்.

பிறகு, காரமான கஷாயத்தில் சுண்ணாம்பு சேர்த்துப் பிசைந்து மூக்கில் பிடிக்கலாம். இரண்டு நாசிகளையும் அடைத்துக் கொண்டு வாயில் ஊதுவதும், திருத்தியை அமுக்குவதுபோல நெஞ்சை மெள்ள அமுக்குவதும் பிள்ளை மூச்சுவிட்டுப் பிழைப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

சிசுக்களைச் சில சமயங்களில் விஷ ஜந்துக்கள் கடிப்பதுண்டு. அப்போது, புண்ணில்லா வாயினுல் மேற்படி விஷத்தை அடிக்கடி உறிஞ்சி உமிழ்ந்து விடுவதே உத்தமம். நெருப்பில் காயப்பட்ட பிள்ளைகளுக்குத் தேங்காய் எண்ணெயும் சுண்ணாம்புத் தண்ணீரும் கலந்து போடவேண்டும். குழந்தை நஞ்சுப் பதார்த்தங்களைத் தின்றதாகக் கண்டால் கொஞ்சம் மிளகைக் கஷாயம் செய்து ஒரு சங்கு கொடுப்பதும் தவிர, முட்டையின் வெள்ளைக் கருவை மிகுதியாய்க் கொடுக்கலாம். பாலில் அரிசி மாவைக் கலக்கிக் கொடுத்துவர நஞ்சுகளின் வீறு முறியும். கடுகை அரைத்து உப்புக் கலந்த தண்ணீரில் கலக்கிக் கொஞ்சம் கொடுக்கலாம்.

B. S. MUTHUKAMATCHI PILLAI,
Board School, Iyampalayam,
Bandalagundu P. O.

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1915வது ஜனுவரிமீ | மாதம் 8

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

Teaching of History — சரித்திர பாடபோதனை

ஆரம்பத்தில் சரித்திர பாடம் போதிப்பதற்குப் பையில் என்னும் புஸ்தகமே சிறந்த கருவியாகும் என்று டால்ஸ்ட்டாய் எண்ணுகிறார். அதிலும் பழைய ஏற்பாடு என்னும் பகுதியே மிகச் சிறந்தது என்று மதிக்கிறார். மற்றெல்லாப் புஸ்தகங்களையும்விட இந்தப் புஸ்தகமே பிள்ளைகளுக்கு உற்சாகத்தை உண்டாக்குகின்றது என்று உறுதியாகக் கூறுகின்றார். 'மானிட வர்க்கத்தின் பூர்வகால சரித்திரமே எக்காலத்தும் எவருக்கும் குழந்தைப் பருவத்தில் வாசிக்க ஏற்ற நூலாகும்' என்பது தம்முடைய அபிப்பிராயம் என்பதை அவர் பல முறையும் கூறியிருக்கிறார். இந்த விஷயத்தில் வேறெந்தப் புஸ்தகமும் பையினுக்குப் பதிலாக

உபயோகப்படும் என்று எனக்குத் தோன்றவில்லை என்று டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். பைபிலை ஆதியோடந்தமாகச் சொல்வதைவிட்டு, அதை சுருக்கிச்சொல்வதும் அதில் அங்கு மிங்குமாக சிற்சில கதைகளைச் சுருக்கிச் சொல்வதும் கூட அவ்வளவாகப் பயன்படாதென்று அவர் வற்புறுத்திக் கூறுகிறார். சரித்திரபாடம் போதிக்கப் பைபிலே குற்றமற்ற சிறந்த புஸ்தகமென்று தம் அனுபவத்திற் கண்டாராம். குடியானவர்களுடைய பிள்ளைகளுக்கு அவர் அந்தப் புஸ்தகத்தை வாசித்துக் காட்டும்போது, அந்த நூலில் ஒருவார்த்தையையும் தாம் மாற்றியதில்லையென்றும், தாம் அதை அப்படி வாசிக்கையில் பிள்ளைகள் அனைவரும் அதிக அன்போடும் ஆர்வத்தோடும் சிந்தை செலுத்திக் கேட்டுக்கொண்டு இருந்தார்கள் என்றும் டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். 'அஹா, கொஞ்சம் கூர்ந்து கவனிக்கும் குழந்தைகளுக்கு அந்த நூலிற் காணும் அரிய விஷயங்கள் எல்லாம் எவ்வளவு எளிதில் விளக்கமாக விளங்குகின்றன!' என்று அவர் வியந்து கூறுகிறார். அதனால், இந்தப் பைபில் புஸ்தகம் இன்றி ஆரம்பத்தில் சரித்திர பாடம் எவ்வாறு நடத்தக்கூடும் என்று அவர் வியக்கிறார்.

சிறு பிள்ளைகள் லோக விஷயத்தில் முதலில் பிரவேசிக்க ஆரம்பிக்கும்போது புத்தம் புதியதும் அதிக அற்புத மானதும் ஆகிய அநேக விஷயங்கள் திரைகள் போலிருந்து அவர்களுடைய கண்களை மறைக்கின்றன. அந்தத் திரைகளை நீக்குவதற்கு இந்தப் பைபில் புஸ்தகமே சிறந்த கருவியாகும். ஆதலால், உபாத்தியாயர் தம் மாணாக்கர்களுக்கு வியப்பும் விருப்பமும் உதிக்கச்செய்து, தாம் சொல்லும் விஷயங்களை அவர்கள் பின்பற்றி நன்கு உணரும்படி செய்யவேண்டும். இப்படிப்பட்ட வியப்பையும் விருப்பத்தையும் பிள்ளைகளுக்கு உண்டாக்க வல்லது இந்தப் பைபில் என்னும் நூல் ஒன்றேயாகும் என்கிறார். ஆரம்பத்தில் இவ்விதமான வியப்பும் விருப்பும் பிள்ளைகளுக்கு அதிகமாக உண்டாகாமல் இருக்கலாம். அதனால், உபாத்தியாயர் அதிருப்தி கொள்ளுதல் கூடாது. டால்ஸ்ட்டாய் பிரபுவிடம் வாசித்திருந்த பிள்ளைகள் பைபில் கதைகளைக் கேட்டபிறகுதான் ருஷிய சரித்திரமும் மற்றுத் தேச சரித்திரமும் கேட்கச் சித்தமுடையவர்களானார்கள். முதலெடுப்பிலேயே தேச சரித்திரம் போதிக்கவேண்டும் என்னும் எண்ணத்தை டால்ஸ்ட்டாய் கொண்டதேயில்லையாம்.

மானிடவர்க்கத்தின் பலபட்ட எண்ணங்களை யெல்லாம் பைபிலைப் போல் வேறு எந்த நூலும் அவ்வளவு சுருக்கமாகவும் அவ்வளவு விளக்கமாகவும் எடுத்துக்காட்ட முடியாது என்கிறார். ஆதிகாலத்து மாந்தர்கள் தமக்குள் கொண்டிருந்த பாந்தவ்யம், குடும்பம், சினேகம், மதம் முதலிய வற்றை இந்தப் புஸ்தகத்தில்தான் காணலாம். அந்த நூல் குழந்தைத் தன்மையாலேயே கல்லறிவை எளிதில் உண்டாக்கி, அக்குழந்தைகளைத் தன் வசப்படுத்திக்கொள்கிறது என்கிறார். மற்றும் முடிவாகக் கூறுமிடத்து, ஹோமர் என்னும் புலவர் ஒருவர் இல்லாதிருந்தால் கிரீஸ் தேசம் எப்படி சிறந்து விளங்காமல் ஒழிந்திருக்குமோ, அப்படியே பைபில் என்னும் இந்தச் சிறந்தநூல் இல்லாதிருந்தால் நமது தேசமும் ஞான சூனியத்தை யடைந்திருக்கும். சிறுவர்களுக்கு அறிவுமுதிர்ச்சியும் பெரியோருக்கு ஞான விருத்தியும் உண்டாயிருக்கமாட்டாது என்று உறுதியாகக் கூறுகிறார்.

பைபில் கதைகளைச் சொல்லிக்கொண்டே படிப்படியாக சரித்திரபாடத்திற்குத் தாண்டுவது கொஞ்சம் கஷ்டமான காரியந்தான். பிள்ளைகள் முதலில் எகிப்து நாட்டினரிடத்தும் பொனீஷிய ஜனங்களிடத்தும் அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை. பைபிலைப் படிக்குமுன் பிள்ளைகள் தம் சொந்த மத சரித்திரமாகிய ருஷிய சரித்திரத்தைக் கேட்கவும் மனங்கொள்ளவில்லை. பைபில் சரித்திரத்தில் கொஞ்ச பாகத்தைக் கேட்டதும் அவர்கள் ருஷிய சரித்திரத்தைக் கேட்க அதிக ஆவல்கொண்டுவிட்டார்கள். ஆயினும், தம் தேசத்துக் கதைகளைக் கேட்கும்போது அவர்களுக்கு அவ்வளவாக விருப்பம் உண்டாகவில்லை. ருஷிய சரித்திரமும் அவ்வளவாக வியப்பை உண்டாக்கக்கூடியதன்று என்பதை டால்ஸ்ட்டாய் ஒப்புக்கொள்ளுகிறார்.

1812 ஆம் வருஷத்தில் ஜனுவரி, பெப்ருவரி மாதங்கள் என்னும் பெயர் கொண்ட இரண்டு பெரிய தளகர்த்தர்களால் பிரெஞ்சுப் படைகள் புறங்காட்டி யோடிய விஷயம் பிள்ளைகள் மனத்தில் அதிக ஆனந்தத்தையும் கிளர்ச்சியையும் உண்டாக்கிற்று. இந்த இரண்டு தளகர்த்தர்களுக்கோ மானிடர்க்குரிய இரத்தமாமிசங்களோடு கூடிய உறுப்புகள் ஒன்றேனும் இல்லை என்று கூறியபோது அவர்களுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. [இதன் விஷயம் என்னவென்றால்: ஜனுவரி, பெப்ருவரி மாதங்கள்

ருஷியாவில் கொடும் பனிக்காலம். அக்காலத்தில் ருஷியாவின்-மேல் படையெடுத்து வந்த நெப்போலியன் என்னும் பிரெஞ்சு வீரனுடைய படைகள் ருஷிய வீரரால் அடிபடா தொழியினும் அப் பனியின் கொடுமையால் தம் நாட்டை நோக்கித் திரும்பி-விட்டனர். இந்த விஷயத்தை டால்ஸ்ட்டாய் ஜனுவரி, பெப்ரு-வரி என்னும் ருஷிய தளகர்த்தர்களுக்குப் பிரஞ்சுப் படைகள் புறங்காட்டி யோடினர்கள் என்று உருவகப்படுத்திக் கூறுகிறார்.]

தேசாபிமானத்திற்கு விரோதமாகக் கங்கணம் கட்டிநின்ற டால்ஸ்ட்டாய் சுமார் 40 வருஷங்களுக்கு முன்னரே பிள்ளைகளுக்-குச் சரித்திரபாடம் போதிக்கத் தேசாபிமானமுள்ள போதனை முறைகளே தக்கவழி யென்று எடுத்துக் கூறியது ஆச்சரிய மானதேயாகும் ருஷியர் மாஸ்கோவிலிருந்து பின் வாங்கிய கதையை அவர் முதல் முதல் பிள்ளைகளுக்குச் சொன்னபோது அது அப்பிள்ளைகள் மனத்தில் ஒன்றும் அழியாத சம்பவமாக நிலை-த்து விட்டது. அதை நான் ஒருபோதும் மறக்க முடியாது என்று டால்ஸ்ட்டாய் கூறுகிறார். சரித்திரபாடம் போதிப்பதில் நிகழ்-கால விஷயத்திலிருந்து சென்ற கால விஷயத்திற்குச் சென்று போதிக்கும் மார்க்கமே சிறந்ததென்று விளங்கக் கூறினர். அங்-கிருந்த மற்றோர் உபாத்தியாயர் இதுவரையில் நடந்த முறைப்படி ஆதிகாலந் தொடங்கி ஆரம்பித்துப் போதித்து வந்தார். மத்திய கால சரித்திரம் நடத்தும்போது இரண்டு உபாத்தியாயர்களும் தம் பிள்ளைகளின் விருத்தியை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். டால்-ஸ்ட்டாய் ஒரு நாள் மற்ற உபாத்தியாயருடைய வகுப்பிற்குப் போய் பார்க்கும்போது, அந்த வகுப்பிலிருந்த பிள்ளைகள் எல்லாம் அந்தப் பாடத்தை வெறுப்புடன் கேட்டுக் கொண்-டிருந்தார்கள் என்பதை டால்ஸ்ட்டாய் உணர்ந்தார். அதுவுமன்றி அப்பிள்ளைகள் டால்ஸ்ட்டாயைப் பார்த்து, தமக்கு எதேனும் ஒரு நல்ல கதை சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அதுவே அந்தப் பிள்ளைகள் அந்தப் பாடத்தில் விருப்பங் கொள்ளவில்லை என்பதை உணர்த்து மல்லவா? பிள்ளைகள் கதை சொல்லும்படி கேட்டதும் டால்ஸ்ட்டாய் அங்கே உட்கார்ந்து விட்டார். பிரெ-ஞ்சுதேசத்தில் ராஜாங்கமாறுதல் ஏற்பட்டபிறகு நெப்போலியன் உன்னத பதவிக்கு வந்த விதங்களை விவரமாகக்கூற ஆரம்பித்தார். அப்போது கொஞ்சநேரம் வகுப்பு அமைதியற்று இருந்தது. சிலர்

மேஜைமீது ஏறினர்கள், சிலர் அதன்கீழ் மறைந்தார்கள், மற்றும் சிலர் பெஞ்சுக்குள் புகுந்தார்கள். ஆனாலும் கொஞ்ச நேரத்திற்-குப் பிறகு அனைவரும் அமைதியாக இருந்து கதை கேட்க ஆரம்-பித்தார்கள். பின்பு, நெப்போலியன் ருஷியாவை ஜயிக்கக் கொண்-டிருந்த எண்ணங்களை எல்லாம் எடுத்துக் கூற ஆரம்பித்தார்.

டால்ஸ்ட்டாய் நெப்போலியன் இந்த எண்ணங் கொண்டான் என்று சொன்னவுடனே, 'என்ன நம்மைக்கூட ஜயித்து விடு-வானு!' என்று ஒரு பையன் உரத்துக் கத்தினன்.

'பயப்படாதே! அலெக்ஜாந்தர் அவனோடு எதிர்த்துப் போர்-புரிவார்' என்றான் மற்றொருவன். அப்போது டால்ஸ்ட்டாய், 'அந்த நெப்போலியன் நமது ருஷிய சக்கரவர்த்தியின் சகோ-தரியை மணஞ் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணங்-கொண்டான்' என்றார். அதைக் கேட்டதும் பிள்ளைகள், 'அப்-படியா! அவனுவது நமது அரசரின் சகோதரியை மணப்-பதாவது. அவர் அந்த அரசியாரை மணந்து கொண்டால் நமது அரசர் அவனைத் தமக்குச் சரியாக நடத்திக் கவரவம் பாராட்ட வேண்டாமா? கூடாது, கூடாது! என்று ஆத்திரத்துடன் கூச்சலிட்டார்கள்.

'கூடாது, கொஞ்சம் பொறுக்கட்டும்' என்று பயமுறுத்தும் குறியுடன் பெட்கா என்னும் சிறுவன் கூறினன்.

'இருக்கட்டும், பிறகு கதை நடக்கட்டும்' என்று கூவினர்-கள் மற்றப் பிள்ளைகள்.

'பிறகு, அலெக்ஜாந்தர் சக்ரவர்த்தி நெப்போலியனுக்கு அடங்-காமல் அவனை யுத்தத்திற்கு அழைத்தார்' என்று டால்ஸ்ட்டாய் கூறியவுடன் எல்லாப் பிள்ளைகளும் எழுந்து, சந்தோஷித்து, 'அது தான், அதுதான் சரி' என்று கைகொட்டி ஆரவாரித்தார்-கள். 'ஆனால் நெப்போலியனே ஐரோப்பா கண்டத்திலுள்ள பன்னிரண்டு வகுப்பினர் சேர்ந்த ஒரு பெருஞ் சேனையோடு ருஷியாவில் நுழைந்தான்' என்று டால்ஸ்ட்டாய் கூறியபோது, பிள்ளைகள் எல்லாம் அதிகமும் கலக்கமடைந்தார்கள். அப்-போது, டால்ஸ்ட்டாய் பிரபுவின் ஸ்நேகரான ஜர்மனியர் ஒருவர் அந்த வகுப்பறையில் இருந்தார்.

பெட்கா அந்த ஜர்மனியரைப் பார்த்து, 'ஓகோ, நீர் கூட எங்களுக்கு விரோதியாக வந்தீர் அல்லவா?' என்று கேட்டான்.

'இருக்கட்டும், சும்மா இரு' என்றார்கள் மற்றப் பிள்ளைகள். 'பிறகு பெரும்போர் மடந்து, ருஷியர் பின்னிட்டார்கள்' என்று டால்ஸ்ட்டாய் சொன்னபோது, பிள்ளைகள் எல்லாம் அதிக துக்கங்கொண்டு, ருஷிய தளகர்த்தர்களை அதிகமும் நிந்திக்க ஆரம்பித்தார்கள்.

பத்திராதிபர்.

CLOTHING AND HEALTH

ஆடையும் ஆரோக்கியமும்

1. ஆடையைப்பற்றி இந்தப் பத்திரிகையின் 125-132 ஆம் பக்கங்களில் சில விஷயங்களை எடுத்துரைத்தோம். இப்பொழுது ஆரோக்கியத்திற்கும் ஆடைக்கும் உள்ள சம்பந்தத்தைச் சற்றுக் கவனிப்போம்.

2. ஆரோக்கிய சம்பந்தமாக ஆடையைப்பற்றி விசாரிப்பதில், மேற்றிசையார் தங்களுடைய ஸ்திரீகள் அணியும் மார்க்கச்சையையே முக்கியமாய்க் கவனிக்கிறார்கள். ஏனெனில், நாகரிக தேசங்களில் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் ஆடைகளுள் மிகக் கொடியது அதுவே. தேகத்திற்குள் பிராணதாரமாக இருக்கும் உறுப்புகள் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்யாமல் அந்த மார்க்கச்சை கெடுக்கின்றது.

3. அது ஈரற் குலையை (பித்தாசயத்தை) நெருக்குகின்றது; சிலவேளை அதனை இரண்டு துண்டாய் வெட்டிவிடுகின்றது; இரைப்பை, இரத்தாசயம், நுரையீரல் (சுவாஸாசயம்) ஆகிய இவைகள் ஒழுங்காக வேலை செய்யாமல் தடுமாறும்படி செய்கின்றது; அடி வயிற்றிலுள்ள உறுப்புகள் நிலைகுலையச் செய்கின்றது. இதனால் ஸ்திரீகளுக்கு அநேக கடுமையான நோய்களும் தீராத ஆபத்துக்களும் நேர்கின்றன.

4. இக் காலத்தில் செய்யும் மார்க்கச்சைகள் கூடிய வரையில் ஆரோக்கிய விதிகளை அனுசரித்துச் செய்யப் படுகின்றனவாம்; மார்பு அகன்று பருப்பதற்கும், அடிவயிற்று உறுப்புகள் கெடாதிருப்பதற்கும் வேண்டிய மாதிரி இப்பொழுது மார்க்கச்சைகள் சில செய்கின்றனராம். வயது முதிராத பெண்கள் மேற்றிசையாரது மார்க்கச்சைகளை அணியக் கூடாதென்று ஆரோக்கிய சாஸ்திரிகள் வற்புறுத்துகின்றார்கள்.

5. ஸ்திரீகளின் உருவத்தையும் ஆரோக்கியத்தையும் மேற்றிசையார் தரிக்கும் உயரமான பாதங்களுள்ள பாதரக்ஷைகள் கெடுக்கின்றன. ஸ்திரீகளின் பாதம் சிறியவைகளாய்த் தோற்ற வேண்டும் என்பது அந்தப் பாதரக்ஷையின் கருத்து. அழகெனக் கருதி ஆரோக்கியத்தைக் கெடுப்பது நவநாகரிகத்தின் இயல்பு என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தம். மேற்றிசையாரது நோக்கத்தைச் சற்று அதிகப் படுத்தியே சீன தேசத்தார் தங்கள் ஸ்திரீகளின் பாதங்களைக் குறுக்கி விகாரப் படுத்துகிறார்கள் போலும். இப்படிச் செய்வதனால் தேகத்தின் பாரத்தை யெல்லாம் பாதத்தில் ஒரு பாகம் தாங்க வேண்டியதாகின்றது; பாதத்து எலும்புகள் தமக்கு இயற்கை யல்லாத புதிய காரியங்கள் செய்ய வேண்டியதாகின்றது.

6. மேற்றிசையில் ஸ்திரீகளின் ஆடை மாத்திரமே குற்றமுள்ளதன்று. புருஷர்களின் மார்புச் சட்டைகளும் (Waist coats), உட் சட்டைகளும் (Shirts) கண்டனைக்கு உரியவைகளே. அவைகளை அணிபவன் கழுத்தையும் தோளையும் முன்னுக்குத் தள்ளவேண்டி யிருக்கின்றது. அப்படிக் கழுத்தும் தோளும் முன் தள்ளியிருப்பது க்ஷயரோகிக்கு அமையும் லக்ஷணமாம். உடற்புகளை நறுக்கித் தைத்திருக்கும் மாதிரியினால் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் நேரே நிமிர்ந்து நிற்க முடியாதவர்களாய் இருக்கிறார்களென்று இங்கிலாந்திலுள்ள பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சியைக் கவனிக்கும் அதிகாரி (Physical Director of Schools) கூறுகிறார்.

7. மேற்றிசையாரது உடுப்பு விசேஷங்களை நம்தேசத்தார் கைப்பற்றுஞ் சார்பு அதிகமாய்க்கொண்டிருப்பதனால், மேற்றிசையாரது உடுப்புகளிலுள்ள குணக்குறைகளில் சிலவற்றை இங்கே எடுத்துரைத்தோம். இதுவல்லாமல், உடுப்புகள் நெய்யப்படும் வஸ்துக்களையும் கவனிப்பது தகுதியாயிருக்குமென்று நம்புகிறோம்.

8. தேகத்து மேற்பரப்பின் சீதோஷ்ண ஸ்திதி மாறுமல் நேரோட்டமாய் இருக்கச்செய்ய வேண்டும் என்பது ஆடை அணிவதின் கருத்துக்களில் ஒன்றாகும். அப்படிச் செய்ய வேண்டுமானால், அது மிகுந்த உஷ்ணகர்ஷணியாய் (conductor of heat) இருக்கக் கூடாது; கூடியவரையில் நல்ல ஜலாகர்ஷணியாய் (ஈரத்தை இழுக்கத் தக்கதாய், conductor of moisture) இருக்க வேண்டும்.

9. ஆடையானது சூட்டையும் ஈரத்தையும் கொஞ்சங்கூட இழுக்காததாய் இருக்குமானால், அது ருஷ்யா தேசத்து ஸ்நானத்துக்கு ஈடாகும் (Russian bath), அல்லது கனத்த கம்பளிகளைச் சுற்றிக் கட்டிக் கொண்டதுபோலாகும். அப்படிச் செய்வது அனுகூலமாயிருப்பதல்லாமல், ஆரோக்கியத்தையும் நாசஞ் செய்கின்றது.

10. கொஞ்சமட்டும் தேகத்துச் சூடும் ஈரமும் தேகத்தை விட்டு வெளியேற வேண்டியதே; ஆனால், அவை விரைவாய் வெளியேறக் கூடாது. ஆகையால், தேகத்தின் மேற் பாகத்தில் ஒத்த சீதோஷ்ண ஸ்திதியைக் காப்பாற்றத் தக்க விதமாய் அவை வெளியேறுவதற்கு ஏற்றவாறு ஆடை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தக் காரணத்தினாலே குளிர்க் காலத்தில் கனமான ஆடை தரிக்கிறார்கள்; அந்த ஆடைகள் உஷ்ணகர்ஷணிகள் அல்ல.

11. உஷ்ணகர்ஷண சக்தி எந்த ஆடைக்கும் இல்லை. ஆடைக்குள்ளும் ஆடையின் படலங்களுக்குள்ளும் அடங்கியிருக்கும் வாயுவுக்குத்தான் அந்தத் தன்மையுண்டு. இந்தக் காரணத்தினாலே, நூல் அதிகமாய் உள்ள ஆடைகள்—அந்த நூல்கள் எந்த வஸ்துவினால் செய்யப்பட்டிருந்தபோதிலும் சரி—'உஷ்ணமாய்' (warm) இருக்கின்றன.

12. ஆடைகள் நெய்வதற்கு எந்த வஸ்துவை உபயோகிக்கலாமென்று பலகாலும் பலர் ஆலோசித்து ஆராய்ந்து பற்பல விதங்களாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். உள் ஆடைகள் கம்பளியாய் இருக்க வேண்டுமென்பார் சிலர்; சணல்நூலால் வலைக் கண்ணிபோலச் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பார் வேறு சிலர்; பருத்தி நூல் ஆடைகளே ஏற்றவை என்பார் மற்றவர்கள்,

13. பருத்தி நூலினால் வலைக் கண்ணிபோலச் செய்தல் ஆடை தைப்பதனால், கம்பளியினால் உண்டாகக் கூடிய நன்மை பெரும்பாலும் கிட்டும். பருத்திநூல் ஆடை துவைக்கத் துவைக்கச் சுருங்குவதில்லை. அதன்மீது கம்பளி ஆடைகளைத் தரித்துக் கொண்டால் தேகத்திலுள்ள ஈரம் விரைவில் ஆவியாய்ப் போய்விடாது. பருத்தி நூல் உள்ளாடைகள் விலை சரசமானவை, எளிதில் சுத்தப்படுத்தக் கூடியவை, சுருங்குந் தன்மை இல்லாதவை. ஆகையால், வருஷமுழுதும்—கோடைக் காலத்திலும் குளிர்க் காலத்திலும்—அநேகர் பருத்தி நூல் உள்ளாடைகளையே தரிக்கிறார்கள்.

14. எந்த ஆடையும் உஷ்ணம் உண்டாக்குவதில்லை யென்று மேலே 1 3-ஆம் பகுதியில் சொன்னோம். தேகத்தில் உஷ்ணத்தை உண்டுபண்ணும் மூலகாரணம் நாம் உட்கொள்ளும் உணவே. நாம் எவ்வளவு ஆஹாரம் ஜீர்ணித்துக் கொள்ள முடியுமோ அதற்குத் தக்கபடி விரைவாய் தேகத்தினின்று உஷ்ணம் வெளிப்பட்டுப் போகலாம். ஆகாரம் ஜீர்ணிக்க ஜீர்ணிக்க உஷ்ணம் உண்டாய்க்கொண்டே இருக்குமாதலால், தேகத்து உஷ்ணம் வாயு மண்டலத்தினுல் தணிந்து போகாதிருக்க நாம் முயற்சி செய்ய வேண்டியதில்லை. வயிற்றுக்குள்ளிருந்து மேலும் மேலும் உஷ்ணம் ஜனித்துக்கொண்டிருப்பதனால், தேகத்து மேற் புறத்து உஷ்ணம் காற்றினுல் ஆறிக் குளிர்மை கொள்ளாது.

15. அதிகமாய் ஜீர்ணித்துக் கொள்ளும் சக்தியுடையவர்களுக்கு அற்ப ஆடை போதும். ஏனெனில், அவர்களுடைய தேகத்தினின்று உஷ்ணம் வெளிப் படுவதைத் தடுக்க வேண்டிய அவசியகம் இல்லை. அதுபோலவே, இதற்கு எதிரிடையும் உண்மையாம். எப்படி யெனில், அதிகமான ஆடை தரித்தால் தேகத்தில் சாமானியமாய் இருக்க வேண்டிய உஷ்ணத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அற்ப உணவு போதும்.

16. உடம்போடு ஒட்டியிருக்கும்படியான ஆடை தரிப்பதை விட தளர்ச்சியான ஆடைகளே நல்லவை. ஏனெனில், தளர்ச்சியான ஆடைகளுக்குள் அதிக வாயு அடங்கும். அந்த வாயு உஷ்ணத்தை எளிதில் ஆகர்ஷித்து வெளி விடாது. அதிக வாயு உஷ்ணத்தை எளிதில் ஆகர்ஷித்து வெளி விடாது. அதிக வாயுவை அடக்கி வைத்துக் கொள்ளும் தன்மை இருப்பதனாலே

கம்பளிநூல் ஆடைக்குச் சிறந்த வஸ்துவாகின்றது. அதுவல்லாமல், ஈரத்தை உறிஞ்சுந் தன்மையும் கம்பளி நூலுக்கு இருக்கின்றது.

17. ஆரோக்கியமாய் இருக்கையில் தேகத்திலின்று ஈரம் எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அந்த ஈரத்தில் விஷத்தன்மையுள்ள அநேக உப்புக்களும் வேறு ஸத்துக்களும் கலந்திருக்கின்றன. ஆதலால், நாம் தரிக்கும் ஆடை ஈரத்தை உறிஞ்சுந்தன்மை யுள்ளதாய் இருக்க வேண்டும்.

18. தேகத்தை அடுத்துக் கம்பளிதரிக்கப் பிரியமில்லாதவர்கள் வேறு வஸ்துக்களினுல் செய்யப்பட்ட தளர்ச்சியான ஆடைகளைத் தரிக்கலாம். இக் காலத்தில் பட்டு நூல், பருத்தி நூல், சணல் நூல் முதலிய வஸ்துக்களினுற் செய்த உறிஞ்சுந் தன்மை யுள்ள உள்ளாடைகள் விலைக்குக் கிடைக்கின்றன. தேகத்தை யடுத்துப் பிளானல் தரிப்பதைவிட வேறு எந்த வஸ்துவினுற்செய்த ஆடையாயினும் தளர்ச்சியாயும் லேசாயும் உள்ளதைத் தரிப்பது நல்லது. ஏனெனில், இவைகளை அடிக்கடி ஜலத்தில் சுத்தப்படுத்தலாம்.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the "Arya", Madras.

OBEDIENCE
கீழ்ப்படிதல்

I. தாய் தந்தையர், ஆசிரியர், அறிவினுலும் வயதினுலும் சிறந்த பெரியோர், அரசர் முதலானவர்களிடத்தில் மனோவாக்குக் காயங்களால் வணக்கமாய் நடந்து கொள்வதே கீழ்ப்படிதலாம்.

II. அன்புடன் போஷித்து வளர்ப்பதில் தாயும், கல்வி கற்பித்து அறிவையும் நற்குணங்களையும் விருத்தி செய்து ஜீவனும் சத்துக்கு ஆதாரமான பொருள் சம்பாதிக்கும் திறமையை யுண்டு பண்ணுவதில் தகப்பனும், பெண்மகளா யிருந்தால், கொண்ட கணவனைப் பேணும்முறை, குடும்பத்தை நிர்வகிக்குந் திறமை, அடிசிற்றொழில் முதலானவற்றைக் கற்பித்து நல்ல மணாளனைத் தேடி விவாகம் செய்து கொடுப்பதில் இருவரும் எடுத்துக்கொள்ளுஞ்

சிரமங்களுக்கு அளவுமுண்டோ? ஆசிரியரும் அறிவிற்சிறந்த பெரியோரும், தங்களை அண்டினவர்களுக்கும், தங்களா லியற்றப் பட்ட நூல்களை கற்பவர்களுக்கும் அறியாமை, சந்தேகம், விபரீதங்களாகிய இருள் நீங்க ஞான ஒளியைத் தருகின்றனர். பெற்றோர் தம் மக்கள் க்ஷேமமாயிருக்க வேண்டிய வழிகளை எவ்வளவு கருத்துடன் தேடுகிறார்களோ அதுபோல செங்கோலரசர் தங்கள் பிரஜைகளெல்லாரும் எவ்விதங்களிலும் சௌக்கியமாயிருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றனர். உதாரணமாக நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்து தேசத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து ராஜப்பிரதிநிதி, கவர்னர், கலெக்ட்டர், கிராமாதிகாரி முதலான ஆளுகைக் கர்த்தர்களையும், மிலிட்டரி உத்தியோகஸ்தர், இஞ்சினீர்கள், டாக்டர்கள், ஜட்ஜுகள் தபால் உத்தியோகஸ்தர்கள் வித்தியாதிகாரிகள் முதலானவர்களையும் நியமித்து அளவிறந்த பணங்களைச் செலவிட்டு குடிகளுக்கு எவ்வளவு நன்மையைச் செய்து வருகின்றனர்!

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு (திருவள்ளுவர்)

என்றபடி, முற்கூறிய ஐந்தறிவுகளால் நாம் அடையும் நன்மைகளுக்காகவாவது அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது அவசியமன்றோ?

III. கீழ்ப்படிதலை 3 பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வோம்— (1) மன வணக்கம். (2) சொல் வணக்கம். (3) மெய் வணக்கம்.

1. மன வணக்கம் — பெரியோர்களின் எண்ணம், நடையுடைபாவனைகளை நினைத்து, மகிழ்ந்து அவர்கள் இவ் வுலகத்தில் மாதிரி புருடர்களாக இருந்து அநேக நன்மைகளைச் செய்யுமாறு தீர்க்காயுள் பெற்று வாழும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

2. சொல் வணக்கம் — பெரியோர்கள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கும் பொழுதும், வேறு அலுவலாயிருக்கும்பொழுதும், பேசத்தொடங்காமல் அவர்கள் சமயம் பார்த்துப் பேசவேண்டும். அப்படிப் பேசும்பொழுது 'ஐயா, தயவுசெய்து' முதலான வணக்க மொழிகளை உபயோகிக்க

வேண்டும். உரத்துப் பேசல், கோபமாய்ப் பேசல், அலட்சியமாய்ப் பேசல், எதிர்த்துப் பேசல், காணு விடத்துப் புரணிபேசல், அவர்கள் முன்னிலையில் மற்றவர்களோடு உல்லாசமாகக் கேலிப் பேச்சுப் பேசல் முதலான வழக்கங்களை நீக்கவேண்டும். ஏதேனும் ஒருமுறையைச் சொல்லி யழைக்கவேண்டுமே யொழிய, பெயரிட்டழைக்கலாகாது.

3. மெய் வணக்கம் — பெரியோர்களை முதலில் தரிசித்தவுடன் கைகூப்புதல், வந்தனம் செய்தல் முதலான ஏதேனும் ஒரு வணக்கக் குறியைக் காட்டவேண்டும். அவர்கள் கமது இருப்பிடத்திற்கு வந்தால் எழுந்திருந்து நின்று, அவர்கள் உட்கார்ந்த பிறகேனும் அவர்கள் உட்கார அனுமதி கொடுத்த பிறகேனும் நாம் உட்காரவேண்டும். அவர்கள் தோன ஸ்தானம் அல்லது ஆசனத்திலிருக்க நாம் உயர்ந்த ஸ்தானம் அல்லது ஆசனத்திலிருந்தலும், அவர்களுக்காக ஏற்பட்ட ஆசனத்திருத்தலுங் கூடாது. அவர்கள் முன்னிலையில், கால்களை நீட்டிக்கொண்டு உட்கார்தல், கால்மேல் கால் போட்டுக்கொள்ளல், படுத்துக் கொள்ளல், ஒழுங்கீனமாய் உடைகளைத் தரித்துக் கொள்ளல், சத்தம் உண்டுபண்ணுதல், தாம்பூலந் தரித்து நாசிகா சூர்ணம் உபயோகித்தல், சுருட்டுக் குடித்தல் முதலான தீர்வழக்கங்களை நீக்கவேண்டும்.

IV. கீழ்ப்படிதலில் மாணவர்க்கு உண்டுபண்ணும் விதம் —

1. எந்த விஷயத்தையும் வாய்மொழியாய்க் கற்பிப்பதினும், பிரத்தியக்ஷமாய்க் காட்டிப் போதித்தலே சிறுவர்கள் மனத்தில் சுலபமாயும் சீக்கிரமாயும் பதியும். உதாரணமாக, தெருக் கூத்துக்களையும், வினோதமான மனிதர்கள் உபாத்தியாயர்களின் நடையுடைபாவனைகளையும் கவனித்திருந்து, பிறகு அவர்களைக் காணுத விடத்து அதே மாதிரி நடித்து வேடிக்கை காட்டித் தாங்கள் சந்தோஷமடைவதோடு அண்டையில் நிற்கும் சிறுவர்களுங் களிப்படையச் செய்யுங்குணம் அநேக சிறுவர்களிடம் உண்டு இவ்வியற்கையான பாவனை சக்தி பிள்ளைகளிடம் இருத்தலினால் தான் வித்தியாதிகாரிகள் நேரில் காட்டிப் போத்தலையே விசேஷமாகக் கையாளும்படி கட்டாயப் படுத்துகின்றனர். ஆதலால் உபாத்தியாயர்கள், தமக்கு மேற்பட்ட அதிகாரிகளும், பெரிய மனிதர்களும் பாடசாலையைப் பார்வையிட வருங்காலங்களில்

அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தால், பிள்ளைகள் நேரில் பார்த்து அம்மாதிரியை அநுசரித்து நடப்பார்கள்.

2. பிள்ளைகள் அநேகமாக அறியாமையினாலேயே குற்றங்களைச் செய்வார்களே யொழிய வேண்டுமென்று செய்வதில்லை. ஆதலால், கீழ்ப்படிதல் முறைகளை ஒருதடவை எடுத்துச் சொல்லி அவ்வாறு நடந்துவரும்படி கட்டளையிட வேண்டும். மீறி நடப்பவர்களைக் கண்டிக்கவேண்டும்.

3. உபாத்தியாயரும் மேற்கூறிய பெரியோர்களுள் ஒருவராதலால், தம்மிடத்தில் பிள்ளைகள் மரியாதையாய் நடந்து கொள்ளக் கவனித்து அவ்வாறு நடக்காத சமயங்களில் 'இது குற்றம், இனிமேல் இப்படிச் செய்யக் கூடாது,' என்று எச்சரித்தும், கண்டித்தும் வரவேண்டும். தனக்குத்தானே மரியாதை கொடுக்கும்படி வற்புறுதல் நன்றன்றாயினும், அறியாத சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பொருட்டுச் செய்தல் குற்றமாகாது. ஒவ்வொரு தினத்திலும் பிள்ளைகள் உபாத்தியாயரை முதலில் காணும் பொழுது சலாம் செய்யும் வழக்கத்தையும், ஆசிரியர் முதல் முதல் வகுப்புக்குப் பாடம் நடத்தவரும் பொழுது பிள்ளைகளெல்லாரும் எழுந்திருந்து நின்று 'காலை வந்தனம் ஐயா' என்று சொல்லச் செய்ய வேண்டும். இவ் வழக்கம் பிள்ளைகளிட மிருந்தால், பள்ளிக்கூடத்தைப் பார்வையிட உத்தியோகஸ்தர்களும் பெரிய மனிதர்களும் வரும்பொழுது உபாத்தியாயரின் எச்சரிப்பில்லாமலே பிள்ளைகள் மேற்கூறிய வந்தனத்தைச் செலுத்துவார்கள்.

4. உபாத்தியாயர் வெளிபோகும் சமயங்களில் பிள்ளைகளின் கீழ்ப்படியாமையைத் தற்செயலாய்ப் பார்க்க நேரிட்டகாலத்தும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கும் உறவின் முறையார்களுக்கும் கீழ்ப்படியாதிருந்து அதனை உபாத்தியாயரிடத்தில் அவர்கள் புகார் செய்து கொள்ளும் பொழுதும், ஞாபகத்தில் வைத்திருந்து பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் விசாரித்துக் கண்டித்துவர வேண்டும்.

5. மாணாக்கர்கள் தங்கள் சகபாடிகளுக்குள், மூத்தவர்களிடத்தில் இளையவர்கள் மரியாதையாய் நடந்து கொள்ளக் கவனிப்பது.

V. கீழ்ப்படிதற் பயன் — நாம் தெருவில் போகும்பொழுது வழியிற்போகிற ஒருவன் நம்மைப் பார்த்து சலாம் செய்த மாத்திரத்திலேயே அவனிடம் ஒருவித அன்பு ஜனித்து அவனது யோக க்ஷேமங்களை விசாரித்தறியவும் கூடிய உதவிகளைச் செய்யவும் எண்ணம் உண்டாகிறது. அதுபோல நாம் பெரியோர்களிடத்தில் கீழ்ப்படிந்து நடந்துவந்தால் அவர்களுக்கு நம்மீது நல்லெண்ணமும் அன்பும் உண்டாகும். அநேக நன்மைகளை அதனால் நாம் பெறுவோம்.

S. KRISHNAN,
Board Elementary School,
Karungalakudi.

THE FIVE SENSES
பஞ்சேந்திரியங்கள்

எறும்பு கடை யானை தலைவரையா யுள்ள சகல ஜீவராசிகளிலும் மானிட ஜென்மம் எடுப்பது அரிது. மகத்துவமாகிய மானிடப் பிறவிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களின் பேறாலினால், இகபர சாதனங்களுக்குள்ள வற்றைச் செவ்வனே நடத்திச் சரடையும் பொருட்டு, ஜகதீசன் சிருஷ்டித்திருக்கிறார்.

சில அவயவங்கள், ஊழ்வினைப்பயனாலும் இடையிலுறும் சில காரணங்களாலும், நடுவில் பேதமடைந்து போவதும் உண்டு. அவ்வாறு இடையூறுகள் நேராதிருந்தும் இல்லாதது எவ்விதம் என்பதை சற்று விவரிப்போம்.

(1) மெய் — உயிரும், உடலும் சேர்ந்ததாகியும், மெய் என்று கூறப்படுவ தாகியுமுள்ள தேகமானது எடுத்து, பகுத்தறிவுற்று வாழ்ந்து இவ்வுலகினின்று நீங்கும் வரையும் சகல நற்குண நற்செய்கை பரோபகாரம், தெய்வசிந்தனை முதலியவற்றை அத்தியாவசியமாய்க் கடைப்பிடித்து நடக்கவேண்டியதிருந்தும், அதற்கு இத்தப் பஞ்சேந்திரியங்களும் உடனிருந்து உதவுவதில் இதுவுமொன்று. அப்படியிருக்க, இம்மெய்யானது மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அஞ்சி, ஒடுங்காமலும், அரசர், பெரியோர் என்ற பணிவில்லாமலும், தொழாமலும் எழுந்திராமலும் இருத்தல் பிறர் பயன் பொருட்டு இது சிரமப்படாமலும் கொஞ்ச வேலை ஓடி நடவாமலும், ஒன்றைக் கொடாமலும், எடாமலு மிருத்தல்.

(2) வாய் — ஒரு பலனுள்ள மாத்திலேறினால் நறுங்கனிகளை மாத்திரம் பறித்து அருந்திச் சந்தோஷிப்பது போலும், காயை இச்சியாது போலும், வாயினின்று வருகிற சொல்லானது வன்சொலன்றி இன்சொலா யில்லாமலும், மரியாதை சொல்லாமலும், வந்த பேரை வாவென்று பேசாமலும், பகவற் கீதைகளை வாயாற வாழ்த்தாமலும் பிறர் ஆபத்துதீர வாய் திறவாமல் மௌனமாயிருத்தல். வார்த்தை வந்து விட்டால் வகை தப்பியும் உளறல். சாதாரண காலங்களில் ஒருவர், தெரியாத வற்றைக் கேட்பின் தெரிந்தும் தெரியாதுபோ லிருத்தல். நியாயங்களை வினவ வேண்டிய விடத்து வினவியும் வினவாதவைகளை வினவாமலு மிருத்தல்.

(3) கண் — பார்ப்பனவற்றை முக்கியமாய்ப் பார்த்து, அதன் இயற்கை, சேர்க்கைகளை உற்று ஆராயாமலும், பார்க்கக் கூடாதவைகளைப் பார்த்துமிருத்தல். மனை, வாக்கு, காயங்களால் சில தப்பிதங்கள் நடத்தியும், கேட்பன வற்றைப் பார்த்து மிருத்தல் அறிந்தவர்களை மமதையாக அறியாது போல் பார்த்தல் அதீத விஷயங்களிலேயே தன் பார்வையை அதிகமாய்ச் செலுத்தல்.

4. மூக்கு — நற்கந்தங்களை அதிகமாய் விரும்புவது போல துர்க்கந்தங்களையும் மிகுதியும் விரும்பியும் நாசமடைதல். (உதாரணமாக குடியிருப்பு முதலிய சுற்றுப் புறங்களில் தனக்குச் சௌகரியமாக வைத்துக்கொள்ளச் சொல்லி நிபந்தனை செய்து கூட சிலர் கவனியாதிருந்து தன்பப்படுதல்) வாசனையினால் ஒரு வஸ்துவின் குணதோஷங்களைத் தெரிந்தும், தெரியாதுபோல் இடைஞ்சலுக் குட்படுத்தல், ஒருபுறத்து நிகழும் வாசனையைப் [illegible] பார்த்தும் பாராதுபோற் [illegible] வைத்தல்.

5. செவி — மூற்கூறிய நான்கு புலன்களுக்கு, ஒரு விஷயம் புலப்படாமல் மறைவாயிருந்து, இச்செவியினல் கேட்டுக்-கொண்ட பின்பாவது, அதைப் பரிசீலனம் செய்யாதிருத்தல். கூப்பிட்ட சத்தம் கேட்டும் பதில் அளியாமலும் பூராமலும் இருத்தல். நியாயாதிபதியாக துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலன முள்ள எஜமான், காரியாகாரியங்களின் தூட்பம் காதுக்கு எட்டியும், எட்டாததுபோலிருந்து நியாயவிரோதத்துக்கு இடங்-கொடுத்தல். சாதுக்களுடைய வாக்யம், சாஸ்திர புராணங்-களின் நீதி முதலியவற்றைக் கேளாமல், மூற்றிலும் விரோத மானவைகளின் சார்பிலே பிரியமாய்க் காது கொடுத்துக் கேட்டல்.

இதன் முக்கிய கருத்து யாதெனில், மேற்சொன்ன மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்க ளிருந்தால் மட்டும் போதாது. அவற்றில் எதெதை எவ்வெக்காலங்களில் உபயோ-கித்தால் நன்மையோ, அவ்வவற்றை அவ்வப்போது ஒழுங்கு செய்ய, தேகத்தை உழைத்தும், மொழியால் அன்பு பாராட்டி-யும், கண்ணுடி போன்ற நேத்திரத்தை நல்வழியில் செலுத்தியும், செவியைச் செம்மைப் படுத்தியும் வாழும் புருஷோத்தமனது கீர்த்தி எங்கும் பரவவும் தம் தம்மாலியன்றமட்டு மாவது திரிகரணசுத்தியோடு வாழ்த லவசியம். ஆனல் உலகப் பற்றற்று விளங்கும் பரமயோகிகள் மட்டும், ஐம்புலனை அடக்கி யிருக்க வேண்டிய தவசியம். அவர்கள் மட்டும் இருந்தும் இல்லாதது போற் பாவிக்கவேண்டும்.

இதைப் பிரதம பாடசாலைகளில் எவ்விதம் பயன் படுத்துவ-தானுல், தற்காலத்திய நூதன முறைக் கிணங்க கற்கும் மாணவர் களுக்கு எட்டும்படியாக, ஒன்றைப் போதிக்கும்போது தொட-வேண்டியவற்றைத் தொட்டுப் பார்க்கச் செய்தும், ருசி யறிய வேண்டிய சாதாரண வஸ்துக்களை வாயில் போடச் செய்-தும், பார்க்கக் கூடியவற்றை கூர்ந்து பார்க்கச் செய்தும், மூக்கினல் முகரச் செய்தும், செவியினல் கேட் டறியவேண்டி-யதைக் கேட்டறிந்து கொள்ளச் செய்தும் ஒவ்வொன்றின் இயற்-கைக்குணங்களை அறிந்துகொள்ளும்படி உபாத்தியாயர் சற்று சிர-மப்பட்டாலும் பிள்ளைகளின் அபிவிருத்தி மேலோங்கு மென்ப-தற்கு ஐயமில்லை.

ரா - செந்திப் பெருமாள் கவண்டன்,
போர்டு ஸ்கூல், பேரையூர்,
திருமங்கலம் தாலுக்கா.

THE SKY

ஆகாயம்

I. இது பூமியைச் சுற்றிலும் பரவி யிருக்கிறது. இதற்கு நிறை அல்லது கனம் உண்டு. ஆகாயம் பூமியின் மேற் பரப்பில் தங்கி யிருக்கிற படியால் அம்மேற் பரப்பைத் தன் கனங்கொண்டு அமுக்குகிறது. இதற்கு ஆகாய அமுக்கமென்று பெயர். இந்த அமுக்கம் 1 சதுர அங்குலத்துக்கு 15 பவுண்டுகள் வீதம் பூமியின் மேல் பரப்பை அமுக்குகிறது. ஆகாயத்தில பிராணவாயு, கரியமில வாயு, ஜல வாயு, உப்பு வாயு, நவாசார வாயு முதலியவை கலந்துள்ளன.

II. ஆகாயத்தின் சீதோஷ்ணம் பின்வரும் மூன்று விஷயங்-களில் பொருத்தியுள்ளது. (1) சூரியகிரணம் பூமியில் விழும் நிலை. (2) பகலின் அளவு. (3) கடல் மட்டத்திற்கு மேலே ஓரிடம் இருக்கும் உயரம்.

(1) சூரிய கிரணம் பூமியில் விழும் நிலை — சூரிய கிரணம் சாய்வு நிலையாய் ஆகாயத்தினூடே சென்று பூமிக்கு வந்தால் அதிக சூடா யிராது. ஆனல் சூரிய ரேகை செங்குத்தாய் பூமியில் சென்றல் அதிக சூடா யிருக்கும். ஏனெனில், சூரிய கதிர் சாய்ந்து விழும்போது, கதிர் பல பக்கமும் சிதறுண்டு போகிறது. ஆனல் செங்குத்தாய் விழும்போது, கதிர்கள் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் விழுவதால் ஆகாயம் அதிக சூடா யிருக்கும்; இக் காரணத்தின் படியே காலை மாலைகளில் உஷ்ணம் கொஞ்சமாயும், மத்தியான வேளைகளில் அதி உஷ்ணமாயு மிருக்கின்றது.

(2) பகலின் அளவு — பகல் அதிகமா யிருந்தால் ஆகாய உஷ்ணமும் அதிகமா யிருக்கும். ஆனல் பகல் கொஞ்சமாயும் இரவு அதிகமாயு மிருந்தால், ஆகாய உஷ்ணம் அதிகமிராது.

(3) கடல் மட்டத்திற்கு மேலே ஓரிடமிருக்கும் உயரம் — கடல் மட்டத்திற்கு மேலே உயரமா யிருக்கும் இடங்களிலுள்ள ஆகாயம் அதிக உஷ்ணமா யிராது. ஏனென்றல் சூரிய கிரணம் முதலில் பூமியின் மேற் பரப்பைத் தாக்கி பிறகு ஆகாயத்தை உஷ்ணப் படுத்துகிறது. இதுவுமல்லாமல் மேலே போகப் போகக்

குளிர்ச்சி அதிகரிக்கிறது. நீர் மட்டத்திற்கு தாழ்ந்த இடத்தி-லுள்ள ஆகாயம் அதிக உஷ்ணமா யிருக்கும். ஏனெனில், கீழே போகப் போக உஷ்ணம் அதிகம்.

III. சூரிய வெப்பத்தினல் ஆகாயம் அடையும் மாறுதல் :— (1) சூரிய உஷ்ணத்தினல் ஆகாயம் அகன்று விரிந்து (2) லேசாகி (3) மேலே எழும்பிப் போக (4) பக்கத்திலுள்ள கனதியான குளிர்ந்த ஆகாயம் அதினிடத்தை வந்து நிரப்பும். (5) இப்படிக் கனத்த ஆகாயம் இடம் பெயர்ந்து செல்வதினல் காற்று உண்-டாகிறது. இவைகளில் தென்மேற்கு, வடகிழக்குக் காற்றுகள் விசேஷித்தவை.

IV. காற்றுகளின் பெயர் — (1) வடக்கிலிருந்து வீசும் காற்றுக்கு வாடைக்காற்று என்றும், கிழக்கிலிருந்து வீசும் காற்றுக்கு கீழ்க் காற்று என்றும், தெற்கிலிருந்து வீசும் காற்-றுக்கு தென்றல் காற்று என்றும், மேற்கிலிருந்து வீசும் காற்-றுக்கு மேல் காற்று என்றும் பெயர்.

(2) பலமாய் வீசி அடிக்கும் காற்றுக்குப் புசல் காற்று அல்-லது சுழல் காற்று என்று பெயர்.

(3) திசை மாறுமலும், காலந் தவறுமலும் வீசும் காற்றுக்கு ஒழுங்காய் வீசும் காற்று என்று பெயர்.

(4) குளிர்ந்த காற்றுக்குக் குளிர் காற்று என்றும், உஷ்ண-மான காற்றுக்கு உஷ்ணக் காற்று என்றும் பெயர்.

(5) கடலினின்று தரையில் வீசி அடிக்கும் காற்றுக்குக் கடல் காற்று என்றும்; தரையினின்றும் வீசும் காற்றுக்குத் தரைக்காற்று என்றும் பெயர்.

V. வாயு மானி அல்லது ஆகாய அமுக்கத்தை அளவிடும் கருவி — 36 அங்குல நீளமுள்ளதும், லேசானதும் ஒரே உள்ள-ளவு உள்ளதும், ஒரு முனை மூடியதும் மறுமுனை திறந்துள்ளதும் கெட்டியுமான ஒரு கண்ணுடிக் குழாயை சற்று சரிவாய் சாய்த்து பாதரசத்தை மெதுவாக ஊற்றி, வாய்மட்டாக நிரப்பி, செங்குத்-தாய் நிற்கும்படி, அவ்வாயை பெருவிரலால் அழுத்தி, கொஞ்சமும் பாதரசம் ஊற்றதபடி பார்த்து, தலைகீழாய்க் கவிழ்த்து, இரண்டு விரலாழம் இருக்கும் பாத்திரத்தில் கவிழ்த்து பெரு விரலை எடு-

த்து விட்டு, கையால் அதன் தலைப்பைப் பிடித்துக் கொண்டால், 36 அங்குல முள்ள பாதரசத் துள் 30 அங்குலத்தில் நிற்கும், மீதி 6 அங்குல தூரம் பாதரசம் இல்லாமல் காலியா யிருக்கிறது. (தெற்கு டோரிசிலின் வாக்கும்" என்று பெயர். ஏனெனில் பாத்திரத்திலுள்ள பாதரசத்தின் மேற் பரப்பில் வாயுவின் கீழ் அமுக்கத்தினல் பாதரசம் 30 அங்குலம் தான் ஏறி இருக்கக் காணலாம்.

வாயு மானியின் பிரயோசனம் (1) மலைகளின் உயரத்தை அறியலாம்; எனெனில், உயரப் போகப் போகப் பாதரசதூணின் உயரமும் குறையும். ஏனெனில், உயரப் போகப் போக ஆகாய அமுக்கம் குறைகிறது. (2) பூமியில் எவ்வளவு ஆழம்போ யிருக்-கிறேமென்றும் அறியலாம். ஏனெனில், கீழே போகப் போக ஆகாய அமுக்கமும் அதிகப்படுவதால், பாதரச தூணின் உயரமும் ஏறியிருக்கும். (3) புயல் காற்று உண்டாகும் என்றும் அனு-மானிக்கலாம் — சூரிய உஷ்ணத்தினல் ஆகாயம் உஷ்ணமாகிப் பாதரச தூணின் உயரம் திடீரென்று குறைவதால் புயலுண்டா-கும் என்றும் நிதானிக்கலாம்.

VI. பாதரசம் இதற்குத் தெரிந்து கொள்ளப்பட்டது (1) பாதரசம் அதிக குளிர்ச்சியாயுள்ள தேசங்களில் உறையாது. தண்ணீர் உறைந்து விடும். பாதரசம் அதிக உஷ்ணமான இடங்-களில் ஆவியாகாது. ஆனல் தண்ணீர் ஆவியாகி விடும். (3) பாதரசம் கண்ணுடிக் குழையில் ஒட்டாது. ஆனல் தண்ணீர் ஒட்டும். ஒட்டாத வஸ்து கண்ணுடிக குழையில் தடை படாமல் ஏறும். தண்ணீரைவிடப் பாதரசத்தில் அதிக சீக்கிரம் உஷ்ணம் ஏறும். இத்தக்காரணத்தினல்தான் பாதரசத்தை வாயுமானி, உஷ்ணமானி முதலிய வற்றிற்கு உபயோகப் படுத்துகிறார்கள்.

எஸ். மனுவேல்,
ஹெட்மாஸ்ட்டர், லூத் மிஷியோன்
ஆண்பாடசாலை,
Kornod, மாயவரம்.

TEACHING OF POETRY

செய்யுள் போதிக்கும் முறை

பழைய முறை —

1. புஸ்தகத்தில் உள்ள செய்யுளைப் பாராமல் ஒப்பித்தல்.
2. பதம் பிரித்தல்.
3. பதங்களுக்கு அர்த்தம் சொல்லுதல்.
4. பொழிப்புரை கூறுதல்.
5. பாட்டின் கருத்துச் சொல்லுதல்.

இப்படிப்பட்ட குருட்டுப் பாடத்தினால் உண்டாகும் அசாதகங்கள்.

1. புத்தி விருத்தியாக இடமில்லை.
2. செய்யுளின் கருத்தை தெளிவாய் அறிய முடியாது.
3. பிள்ளைகளுக்கு வெறுப்பை யுண்டாக்கும்
4. செய்யுளில் சொல்லப்பட்ட விஷயங்கள் தங்கள் அனுபவத்திற்கு உட்பட்ட சம்பவங்களுக்கு ஒத்திருக்கின்றனவா வென்று அறிய இடமில்லை.

தற்கால முறை —

1. பாட்டின் கருத்தை தெளிவாய் விளக்கும்படியான ஒரு கதையைச் சொல்லுதல் அல்லது பாட்டின் கருத்தை விளக்கும்படி பிள்ளைகளின் அனுபவத்திற் குட்பட்ட விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தல்.

2. கதை சொல்லும்போது அல்லது பிள்ளைகள் சம்பாஷிக்கும்போது ஆங்காங்கு வரும் கடின பதங்களுக்கு அர்த்தம் சொல்லுதல்.

3. செய்யுள் சம்பந்தமாய் வரும் பதங்களை செய்யுள் கிரமப்படி வரிசையாய் ஒழுங்கு படுத்தி க. ப. வில் எழுதுதல்.

4. சந்திகளைச் சேர்த்தல்.

5. க. ப. வில் உள்ளதை பிள்ளைகள் வாசிக்கும்படி செய்தல்.

6. உபாத்தியாயர் — மாதிரியாக வாசித்துக் காட்டுதல்.

7. இராகத்தோடு வாசித்துக் காட்டி இராகத்தோடு பிள்ளை வாசிக்கச் செய்தல்.

8. உபாத்தியாயர் அப்பியாசமாக யோசனைக்குரிய சில கள்விகள் கேட்டல். (செய்யுள் சம்பந்தமாய்)

இம் முறைப்படி போதிப்பதால் உண்டாகும் சாதகங்கள் —.

1. யோசிக்கும் சக்தி விருத்தியாகும்.
2. புத்தி விசாலிக்கும்.
3. செய்யுளின் கருத்து தெளிவாய் தெரியும்.
4. பிள்ளைகளுக்குச் சலிப்பிராது.
5. செய்யுளில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் தங்கள் அனுபவத்திற் குட்பட்ட சம்பவங்களுக்கு ஒத்திருக்கிற தென்று தெளிவாய் அறிவார்கள்.

மாதிரிப் பாடம் —

செய்யுள்

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றுகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

என்ற செய்யுளை பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டுமென்று வைத்துக் கொள்வோம்.

ஆரம்பம்

பிள்ளைகளே!

நான் சொல்லுவதைக் கவனமாய் கேளுங்கள். மனிதராகிய நாம் எண்ணும் எல்லா விஷயங்களும் நமது எண்ணப்படி நிறைவேறுகிறதில்லை சில சமயங்களில் நாம் எண்ணிய படியே முடிகின்றது. சில நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்தது என்பதுபோல் முற்றிலும் நேர் விரோதமாய் முடிகின்றன. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்லுகிறேன்.

ஒரு நாள் ஒரு வேடன் வில்லும் அம்பும் கொண்டு காட்டிற்கு வேட்டையாடப் போனான். அன்றைய தினம் அவனுக்கு ஒரு விலங்காவது பறவையாவது புலப்படவில்லை. அதனால் அவன்

காடு முழுதும் அலைந்து திரிந்து, களைத்துப்போய் ஒரு மரத்தடியில் வந்து தங்கினான். அங்கு பாம்புப் புற்று ஒன்று இருந்தது. அதை இவன் கவனிக்கவில்லை. வேடன், ஆ தெய்வமே! இன்று பொழுது போக்க என்ன செய்வேன் என்று எண்ணுந்து பார்த்த பொழுது மரக்கிளை ஒன்றில் ஒரு ஜோடி புறுக்கள் உட்கார்ந்திருந்தன. வேடன் அதிக சந்தோஷப்பட்டு இரண்டையும் ஒரே முறையில் கொல்லக் குறிபார்த்தான். வேடன் இப்படி இருக்க, புறுக்கள் மரத்தை விட்டெழுந்த வுடனே அவற்றை கொண்டுபோக ராஜாளி ஒன்று வட்டமிட்டுக்கொண் டிருந்தது, இரண்டு பக்கத்திலும் துன்பத்தில் அகப்பட்டுக்கொண் டிருந்த புறுக்கள் நாம் இப்போதென்ன செய்வது, எல்லாம் தெய்வச் செயலின்படி யாகும், நம்மால் ஆவது சிறிது மில்லை என்று எண்ணி சும்மா இருந்தன.

வேடன் குறிப்பார்த்துக் கொண்டே மெல்ல மெல்ல நகர்ந்து புற்றுக்குச் சமீபத்தில் வந்து விட்டான். அப்புற்றில் தங்கியிருந்த நாகம் வெளியே வந்து அவன் அறியாதபடி அவன் காலில் தீண்டிற்று. உடனே விஷம் தலைக்கேறி மூர்ச்சை யடைந்து கீழே விழுந்து இறந்தான். அவன் கையில் பிடித்திருந்த அம்பு இலக்குத் தப்பி மேலே சென்று தற்செயலாக ராஜாளியின் உடலில் தைக்க அதுவும் கீழே விழுந்திறந்தது. இருதலைக் கொள்ளி எறும்புபோல் இருபக்கத்திலும் துன்பத்தில் அகப்பட்டு வருந்திய புறுக்கள் இரண்டும் தெய்வச் செயலால் துன்பம் நீங்கி இன்பம் அடைந்தன. புறுக்களைக் கொல்ல எண்ணங் கொண்ட வேடனும் ராஜாளியும் தமது எண்ணம் நிறைவேறாமல் தாங்களே மாண்டு போகநேரிட்டது. ஆகையால் எல்லாம் தெய்வச் செயலே யன்றி நம்மாலாவது ஒன்றுமில்லை யென்று விளங்குகிறது.

உபாத்தியாயர் — பிள்ளைகளே; இக் கதையில் யார் யார் என்ன எண்ணினார்கள்?

மாணாக்கன் — வேடனும் ராஜாளியும் புறுக்களைக் கொல்ல எண்ணினார்கள்.

உபா — அவர்கள் எண்ணினபடி முடிந்ததா?

மாணா — இல்லை.

உபா — பின் எப்படி முடிந்தது?

மாணா — முற்றிலும் மாறாக இருவரும் இறந்து போனார்கள்.

உபா — இதனால் நீங்கள் என்ன அறிந்து கொள்ளுகிறீர்கள்?

மாணா — நாம் எண்ணுகிறபடி ஒன்றும் முடிகிறதில்லை, நாம் ஒன்று நினைத்தால் அது ஒன்றாகிறது.

1. * ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்.

உபா — புறுக்களின் எண்ணம் எப்படியாயிற்று?

மாணா — அவைகள் எண்ணியபடி நிறைவேறிற்று.

உபா — எப்படி?

மாணா — இரண்டு பக்கத்திலும் துன்பத்தில் அகப்பட்ட நாங்கள் இப்போதென்ன செய்வோம், எல்லாம் தெய்வச் செயலின் படியே ஆகும் என்று தெய்வத்தை வேண்டினபடி துன்பத்தினின்று நீங்கின.

உபா — இதைக் கொண்டு நீங்கள் என்ன அறிகிறீர்கள்?

மாணா — சில சமயங்களில் நாம் எண்ணுகிற விஷயம் நிறை வேறும்.

2. * அன்றி அது வரினும் வந்து எய்தும்

உபா — வேடன், ராஜாளி, புறுக்கள் இவர்கள் நினைக்காத எந்தக் காரியம் சம்பவித்தது?

மாணா — வேடனும் ராஜாளியும் தங்களுக்கு மரணம் வருமென்றும் புறுக்கள் தப்பித்துக் கொண்டு போகுமென்றும் நினைக்கவில்லை. புறுக்கள் வேடனும் ராஜாளியும் உயிர் துறப்பார்களென்றும் நினைக்கவில்லை.

உபா — இதனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மாணா — சில சமயம் நாம் நினைக்காத ஒரு காரியம் கைகூடி வருகிறது.

உபா — ஆகையால் இப்படிப்பட்ட சம்பவங்கள் யாருடைய செயல்?

மாணா — சுவாமியின் செயல்.

3. * ஒன்றை நினையாதமுன் வந்துநிற்பினும் நிற்கும்

4. * எண்ணே ஆளும் ஈசன் செயல்.

N. B. இந்த அடையாளங்கள் உள்ள 1, 2, 3, 4 வரிகளை உபாத்தியாயர் அப்போதைக்கப்போது க. ப. வில். எழுத வேண்டியது.

கடின பத அர்த்தம் —

நினைக்கின்.....நினைத்தால்

ஒழிந்திட்டு.....நீங்கி

அன்றி.....அல்லாமல்

வரினும்.....வந்தாலும்

வந்து எய்தும்.....வந்து சேரும்

சந்திகளைச் சேர்த்தல் —

ஒன்றை நினைக்கினது வொழிந்திட் டொன்றுகும்

அன்றி யதுவரினும் வந் தெய்தும் — ஒன்றை

நினையாத முன் வந்து நிற்கினும் நிற்கும்

எணையாளு மீசன் செயல்.

உபாத்தியாயர் — மாதிரி வாசிப்பு வாசித்துக் காட்டி, பிள்ளைகளை வாசிக்கச் செய்தல். பிறகு ராகத்தோடு வாசிக்கக் கற்றுக் கொடுத்தல்.

அப்பியாசம் — மாணக்கரில் 4, 5 பேரை வாசிக்கச்செய்தி க. ப. வை திருப்பிவிட்டு, பாராமல் சொல்லச் செய்தல். சம்பந்தமாயுள்ள சில பழமொழிகளை வினவல்.

படிப்பினை — எல்லாம் ஈசன் செயலே. நம்மாலாவது ஒன்று மில்லை.

பழமொழி —

1. நாமொன்று நினைக்க தெய்வ மொன்று நினைத்தது.
2. கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டது.
3. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.
4. பிள்ளைவரம் கேட்கப் போய் புருஷனை இழந்தாற்போல்.
5. தலைவலி போய் பெருவலி வந்தது.

R. KRISHNASWAMY AIYAR,
Tranquebar.

1-MAR 1915 MADRAS

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1915வது பெப்ருவரிமீ | மாதம் 2

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

Teaching of History - சரித்திர பாட போதனை

(174-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமது தளகர்த்தர் ஏன் பின்வாங்கினர்? என்றான் ஒரு பிள்ளை. போரடினை என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ருஷியர்கள் தோல்வியடைந்தார்கள் என்று சொல்வது டால்ஸ்ட்டாய்க்கு வெகு கஷ்டமாக இருந்தது. அதைக்கேட்டும் பிள்ளைகள் அதிக வருத்தமடைவார்கள் என்று அவருக்கு நன்றாய்த் தெரியும்.

'எப்படியும் நாம் ஜயிக்காவிட்டாலும் அவர்களும் ஜயிக்கவில்லையே' என்று சொல்லிக் கொஞ்சம் திருப்தி அடைந்தார்கள் சிலர்.

நெப்போலியன் மாஸ்கோவை அடைந்து, நகர்க்கோட்டைச் சாவி தன் கைக்கு வருமென்றும், ஜனங்கள் எல்லோரும் வந்து தன்னைச்சரணுகதி அடைவார்கள் என்றும்சொல்ல நேர்ந்தபோது பிள்ளைகளெல்லாம் கோபாவேசத்துடன் கூக்குரலிட்டார்கள். ஆனல், மாஸ்கோவை கொளுத்திய விஷயத்தை மாத்திரம் மிகவும் சரியென்று ஆமோதித்தார்கள். அப்புறந்தான் வந்தது ஆர்பாட்டம் அப்பிள்ளைகளின் ஜயம்; அதாவது நெப்போலியன் பிடித்த ஓட்டம் பிரஞ்சுக்காரர் மாஸ்கோ நகரத்தைவிட்டுச் சென்றதும் ருஷிய தளகர்த்தர் அவர்களை துரத்திச் சென்று தாக்கியதும், டால்ஸ்ட்டாய் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொன்னர்.

பெட்கா என்னுஞ் சிறுவன் கோபத்தால் முகம் சிவந்து, பிரஞ்சுக்காரரை தானே குத்திக் கொன்று விடுவான்போல் பாவனைசெய்து 'ஆ! நமது தளகர்த்தர் நெப்போலியன் கண்ணைத் திறந்துவைத்தார்' என்று கத்தினன். வகுப்பு முழுவதும் உற்சாகம் பரவிமேலிட்டது. இந்த கலவரத்தில் ஒரு சிறு குழந்தை நசுங்கியும் விட்டான்.

ஆனல் சிறிது நேரத்திற் கெல்லாம் பிரஞ்சுக்காரர் குளிர்தாங்கமாட்டாமல் மாண்டார்கள் என்று கேட்டபோது பிள்ளைகள் கொஞ்சம் அதிதாபப்பட்டார்கள்.

பிறகு ஜர்மானியர் ருஷியாவைச் சேரத் தூலப்பட்டார்கள் என்றதும், பிள்ளைகளெல்லாம் டால்ஸ்ட்டாயின் ஜர்மன் நண்பர் மீது மறுபடியும் பாய்ந்தார்கள்.

அப்படியா, அதுவா உங்கள் நாட்டவர்களின் மகிமை! முதல் எங்களுக்கு விரோதமாய் இருப்பது, பிறகு நாங்கள் ஜயிக்கிறோமென்று தெரிந்து எங்கள் பக்கம் சாருவதோ!" என்ற கூச்சல் வகுப்பு முழுதும் நிரம்பியது.

டால்ஸ்ட்டாயின் ஜர்மன் நண்பர் பிள்ளைகளைப்பார்த்து, 'நீங்கள் கேட்ட கதை பக்ஷபாதமானது. உண்மையை ஒட்டியதன்று என்று சொன்னர். டால்ஸ்ட்டாய் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதாகவே யிருந்தது. (அக்காலத்து ருஷிய சக்கரவர்த்தியாக இருந்த) அலெக்ஜாண்டர் பிரஞ்சியாவின்மீது கொண்டிருந்த மோசக் கருத்துக்களையும் போலண்டுக்குச் செய்த குரூரத்தையும் டால்ஸ்ட்டாய் எடுத்துச் சொல்லி யிருந்தால் பிள்ளைகள் ஒரு

க்ஷணமும் நிதானித்துக் கேட்டிருக்க மாட்டார்கள். ஆகையினல் அவர் ஒரு கதையை ஜோடித்து அதற்குச் சரித்திர மென்று பேரிட வேண்டி யிருந்தது. இது தான் சுதேச சரித்திரத்தை பிள்ளைகளுக்குப் போதிக்க முயலுவதினல் உண்டாகும் பெரிய தீமை. சரித்திர பாட புத்தகம் எழுதுவோரும் உபாத்தியாயரும் பொய்களைக் கோவையாகச் சேர்த்து சொல்ல வேண்டி யிருக்கிறது. இதனல் பிள்ளைகளுக்கு என்ன நன்மை ஏற்படப்போகின்றதோ தெரியவில்லை.

ருஷிய தேசச் சரித்திரத்தைக் காட்டினும் அமெரிக்கா சரித்திரம் பிள்ளைகளுக்கு உற்சாகமும் அறிவும் தரத்தக்கது. பில்கிரிம்ஸ் பாதர்ஸ் என்பவர்கள் மதாபிமானத்தால் நாட்டை விட்டகன்றதும் தேயிலையின் பேரின் அநியாயமாக விதிக்கப்பட்ட தீர்வையை கொடுக்க மாட்டேனென்று மறுத்ததும், அடிமை யென்னும் கொடுமை நாட்டை விட்டொழிந்ததும், இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு நற்புத்தி புகட்டி நன்மார்க்கத்தை போதிப்பதற்கு அது கூலமாக இருப்பவை. ஆனல், விஷயங்களை இப்படி யார் உபயோகிக்கிறார்கள்? சுதேச வீரர்களின் குற்றங் குறைகளை மறைத்து வைத்து, விரோதிகளின் குணத்தைக் கேவலம் கெட்ட தாக வர்ணித்து, சரித்திர பாடம் முழுதும் பொய்ப்பாடமாக செய்து விடுவது வழக்கமாயிற்று. ஆனல் உலகமுழுதும் சகோதர பாவம் மேலிட்டு, அதனல் சுதேசாபிமானம் சரியன்று என்று எண்ணத் தகுந்த உச்ச நிலையையடைவது அசாத்தியமன்றே. ஒரு வேளை எல்லாப் பிள்ளைகளும் அந்நிலையை யடைவது சாத்தியமாகாமல் இருக்கலாம். இதந்த போதிலும் அப்படி அடையச் செய்ய முயல்வது நன் முயற்சியே யாகும். தேசாபிமான மென்றாலோ அதற்குக் குறைவில்லை. இயற்கையாக அது ஒவ்வொருவரிடமும் அமைந்திருக்கிறது. அதைத் தூண்ட வேண்டிய அவசியமும் இல்லை. அதினும் மெய்யை மறைத்து பொய்யைப் பேசித் தூண்டுவது மிகவும் தவறு.

மானுக்கன் தன் தேச சரித்திரத்தை யறியவேண்டுமானல் அது உண்மையான சரித்திரமாக இருக்கவேண்டும். அதைப் படிப்பதால் மற்றத் தேசத்தவரை வெறுத்து இகழும் பழக்கம் உண்டாகாம லிருக்கவேண்டும். தம்மைப்போலவர்க்கும் தேசாபிமானம் உண்டு; தம்மைப்போல அவர்களும் அந்த அபிமானம்

கொள்வது ஞாயமானதே என்று மாணாக்கர் உணரவேண்டும். இப்படிப்பட்ட உண்மையான சரித்திரத்தைக் கற்க மாணாக்கன் மனம் இணங்காதாயின், அவனதை அறவே ஒழித்து விடட்டும். உண்மையாக நாமெல்லோரும் பள்ளிக்கூடத்தில் படித்த சரித்திரத்தில் எவ்வளவு பாகம் ஞாபகத்தில் வைத்திருக்கிறோம்.

டால்ஸ்ட்டாய் பிரபு தன்வரைக்கும் பேசிக்கொள்ளுகிறார். அவருக்குத் தாம் பாடசாலையிற் கற்ற சரித்திர பாடத்தில் மறந்ததுபோக ஞாபகம் இருக்கும் பாகம் என்சைகிலோபீடியா வென்னும் உலகவகராதியினின்றும் அறிந்து கொள்ளக்கூடியதே என்கிறார். மானிட சரித்திர சாஸ்திரத்தைப் பற்றி சிறந்த படிப்பாளிகளின் அறிவுதான் எவ்வளவோ அறிய வேண்டியதில் அணுவளவென்றும் சொல்ல இடமில்லையே. இதை ஒழித்து, சம்பந்தப்படாத தேதிகளையும் உண்மை விளங்காத விஷயங்களையும் கற்பதனால் உண்டாகும் பயன் என்ன.

பிள்ளைகளுக்குச் சரித்திர பாடத்தில் ஏற்படுகிற விருப்பமானது முழுதும் அதிலிருக்கும் விநோத பாகத்தை சேர்ந்ததே யென்று டால்ஸ்ட்டாய் தீர்மானிக்கிறார்.

ராமுலஸ் ரீமஸ் என்பவர் ரோமாபுரியை ஸ்தாபித்த சரித்திரத்தைக் கேட்டுப் பிள்ளைகள் ஆநந்த மடைகிறார்கள் என்பது உண்மையே. ஆனால் உலகத்தில் ஒப்புயர்வின்றி ஓங்கிய பரிபாரத்திற்கு அவ்விருவர் அடி கோலினார்கள் என்னும் சிறந்த காரணத்தாலன்று; கதைகேட்க இன்பகரமாகவும் ஆச்சரியமானதாகவும் இருப்பதுதான் பிள்ளைகள் மனத்தைக் கவர்கிறது. ஜனங்கள் நாடுவிட்டு நாடுசென்று குடிப்புகுந்த விஷயத்தைக் கேட்கப் பிள்ளைகள் மனங்கொள்வதில்லை ஏனெனின்றால், அதில் விநோத மொன்றுமில்லை. விநோதமில்லாத சரித்திரம் வீணான சரித்திரமேயாகப் பிள்ளைகள் மனத்தில் ஏற்பட்டிருக்கிறது. தேச சரித்திரம் சரித்திரமென்ற காரணத்தால் சிறுவர்களுக்கு இன்பம் தருவதில்லை. ஆகையால், 'குழந்தைகளுக்கெழுதிய சரித்திரம்', 'குழந்தைகளுக்குச் சொல்லும் சரித்திரம்' என்னும் சொற்களுக்கு அர்த்தமே கிடையாது.

வேத புஸ்தகத்தை (Bible) உலகத்தின் குழந்தைப் பருவத்தை விளக்கும் சரித்திர புஸ்தகம் என்று கொண்டாடுவது அவர்

சரித்திரப்பாட சம்பந்தமாகக் கொண்ட கருத்தை ஒருவாறு விளக்குகிறது. கிரீஸ், ரோம், ஜர்மனி முதலிய நாட்டவரின் புராதனக் கதைகள் பிற்கால சரித்திரங்களைக் காட்டிலும் சிறுவர்களுக்கு அதிக நன்மை பயக்கக் கூடியவை; மஹா அலெக்ஸாந்தர், ஷார்லமேன் முதலியோர் நடத்திய யுத்தங்களைப் போலவே ட்ராய் நகர முற்றுகையின் விவரங்கள் சிறுவர்களின் புத்தி முதிர்ச்சிக்கு அநுகூலமாக இருக்கின்றன என்பது டால்ஸ்ட்டாயின் அபிப்பிராயம். அவ்விஷயத உலகமாகிய பண்டைக்கால உலகம் சிறுவர்கள் மனத்தை இயற்கையாகவே கவர்கின்றது. அம்மாதிரியான அறிவைப் புகட்டுவதனால் நன்மையேயன்றி, ஒருபோதும் தீமை விளைவதில்லை.

பத்திராதிபர்.

THE CORRELATION LESSON

மரம் ஏறினவன் பட்டபாடு

I. (a) வியாஸம் — கதை சொல்லல்

முனியன் கந்தன் என்று இரண்டுபேர் கூடப் பிறந்தவர். மணியம் வேலை செய்யும் அவர்களுடைய தகப்பனார், தினந்தோறும் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வந்தார். ஒருநாள் அந்த இருவரும் பள்ளிக்கூடம் போவதாகச் சொல்லிவிட்டு, ஊருக்குப் பக்கத்தில் இருந்த வயலுக்குப் போய்விட்டனர். அங்கு ஓர் அரச மரத்தில் சில கிளிகள் கூடுகட்டிக் குஞ்சு பொரித்து இருந்தன. அதைக் கண்ட கந்தன், வேண்டாமென்று முனியன் சொல்லச் சொல்லக் கேளாமல், அந்த மரத்தின் மேலேறி, கிளிக் கூட்டைப் பிரித்துக் குஞ்சுகளை யெடுக்கப் போனான். அந்த சமயத்தில் அவன் ஏறி யிருந்த கிளை ஒடிந்து கீழே விழ, கந்தன் தொண்டியானான்.

ஆகையினால் பிள்ளைகளே! 'பிராணிகளை இம்சிப்பதும் மரம் ஏறுவதும் கெட்ட காரியம் என்று நாம் தெரிந்து கொள்வோமாக!'

(b) வாசித்தல் (c) எழுதல்

முனியன்	மணியம்	பள்ளிக்கூடம்	கிளிகள்	குஞ்சுகளை
கந்தன்	வேலை	ஒருநாள்	கூடு	கிளை
தகப்பனார்	தினம்	ஊருக்கு	பிராணி	முறிந்து
அரசமரம்	அவர்	வயல்	இம்சை	கொண்டி
பிரித்து	பாடசாலை	மரத்தில்	ஏறி	பிள்ளை

II. (a) எண்ணளவு — (b) இட அளவு :—

(1) மணியம் வேலை சம்பந்தமாயும்,

(2) கூடப் பிறந்தவர்கள், தேகத்தின் அங்கங்கள்,

(3) பாடசாலைப் பிள்ளைகள், (4) மரங்கள், கிளிகள், குஞ்சுகள் இவற்றின் சம்பந்தமாயும்,

(b) (1) பிள்ளைகளின் உயரத்தையும், மரங்களின் உயரத்தையும் வயலின் தள அகலத்தையும் பற்றிக் கற்பிக்கலாம்.

III. பொது அறிவு —

(a) மணியம் வேலை, பள்ளிக்கூடம், (b) அரசமரம், கிளி, (c) வயல் இவைகளைப்பற்றிச் சொல்லலாம்.

IV. சித்திரம் —

கிளி, ஆலங்காய், கூடு, வயல், இவற்றின் சுபங்களை சமுதச் செய்யலாம்.

V. பாட்டு —

1. முனியன் கந்தனும் இருவர் சோதரர்
முறைமையாகப் பள்ளிக்கூடம் வினாவிற் சேரவே
தினமும் தந்தை தன் னனுபவிப்படி
சேருவார்க ளோர்நாளிற் சிறுவ ரிருவரும்.

2. பின்தை யாகவே விளையாட வெண்ணியே
அந்தமான வயலிற்சென்றார் அங்கோர் மரத்திலே
சொந்த மாகவே கிளிகள் கூடுகட்டியே
சுகித்துக் குஞ்சுகள் பொரித்திருப்பதையெடுக்கவெண்ணியே.

3. கந்த னென்பவன் முந்தி யேறியே
கடிது கிளிகளுடைய கூட்டைக் கையாற்பிரித்துமே
அந்த மிகுந்த குஞ்சை யெடுக்க ஆவலாய்
அவனிருந்த கொம்பு முறிந்து தலைகீழாகவே.

4. விழுந்து நொண்டியாய் மிகவும் வருந்தியே
மெலிந்து நொந்து நடக்கவுந்தான் வியர்த்தழுகினான்
குழந்தைமார்களே என்றும் மரத்தில் ஏறுதல்
கூடாதென்று நாமெல்லோரும் அறிந்து கொள்வோமே.

VI. தேகாப்பியாஸம் —

நொண்டிமாதிரி ஒரு காலை மடக்கிக்கொண்டு நடக்கச் செய்யலாம். அல்லது குந்தும்படி செய்யலாம்.

V. B. SANGAMESWARAM,
Supervisor of Schools,
Dharapuram.

A FARCE

ஒரு தமாஷ்

காவடிச்சிந்து மெட்டு

பட்சமுள்ள ஆறுநண்ப ருற்சவத்தைப் பார்க்க வேண்டிப்
பரபரப்புட னேயோர்நாள் செல்லவே — அவரில்
சுறுசுறுப் பில்லாம லொருவர் மெல்லவே.

வ்ழிநடந்து சற்றுநே ரானபின்பு ஸ்தூலதேகர்
மால்மிகுந்த ஸ்டேஷனுக்கு வந்தனர் — அவர்
மேலு மைந்து பேர்தமாஷ–காந்தனர்.

மிக்கஸ்தூல ரொக்கக்கனத்துப் பக்கமாக வந்திடாமுன்
டிக்கிட்டுகள் வாங்கிவண்டி யேறினர் — ஐவர்
தக்கப்பரி யாசஞ்செய்யச் சாரினர்.

ஊக்கமாக ஸ்தூலதேகர் சிக்கிரம் போய் வண்டியேறி
உட்கார்ந்த னரிருவரிடந் தன்னிலே — தாமொருவர்
மிக்கவுங் கால்கைபரப்பி முன்னிலே.

இப்படி யிருந்திடவே ரெயில்வண்டி செல்லஸ்தூல
ரேக்கமுற்று மைவரையும் பார்க்கவே — டிக்கெட்டுகள்
எவரிடத்தி லிருப்பதென்று கேட்கவே.

ஐந்துபேரில் விந்தையாக முந்தியொருவ ரெம்மிடத்தி
லுள்ளது டிக்கெட் மட்டுமாஜர் பண்ணினேனும் — உமக்கு நீரே
சொந்தத்தில் வாங்குவீரென வெண்ணினேனும்.

என்று சொல்லக் கேட்டஸ்தூலர் இதற்கென்ன செய்வதையோ
வென்று யேங்கி யேபயந்து நடுங்கினர் — மனங்கலங்கிச்
சோங்கியே படபடத் தொடுங்கினர்.

மற்றவர்க ளோயோயிவரை யுற்றுப்பார்த்தால் போலீஸ்வச
மாக வொப்பி வைத்திடுவா ரென்றனர் — தப்பாதிவர்க்கு
வந்திப்போ தண்டனையிடுவ ரென்றனர்.

டிக்கெட்டுகள் சோதிப்பவர்க்குத் தெரியாதிவ ரொளித்துக்கொண்டாற்
செய்வதென்ன வென்றொருவர் சாற்றினர் — அந்த விதமாய்ச்
செய்வதுந் தந்திர மெனத் தேற்றினர்

பலகையின்மீ ழேபுகுந்து படுத்துக்கொள்ளு மையாவென்று
பக்கமா யிடுக்கில் துறுத்தித் தாழ்த்தினர் — ஸ்தூலர்தம்மை
பண்புட னெல்லோருங்கூடி வீழ்த்தினர்.

இந்தவித மொருமணி நேரமாகக் கழிந்ததும்
இட்டரைவர் காலிவிடி பட்டனர் — அசைவதற்கும்
இடமின்றி ஸ்தூலர்மனம் பட்டனர்.

மூச்சுவிட முடியாம லாச்சுதையோ சுகமாக
முந்தியயான் வீட்டிலிருக்க வில்லையே — இந்தவிதம்
முடிந்ததேயென் கிரகசாரத் தொல்லையே.

இப்படி வருத்தப்பட்டே எப்படிச் சகிப்பே னென்று
இருதயத்தி லேநினைந்து வருந்தினர் — நண்பர்களும்
இடைவிடாமற் றிகில் விசனம் பொருந்தினர்.

ஐயா டிக்கெட் கலெக்ட்டரு மெய்யா யிதோ வருகிறாரே
அப்புறத்தி லுந்தலையைத் தாழ்த்துமே — உமதுகாலை
யுட்புறத்திலே மடக்கி வீழ்த்துமே.

பார்க்கப்போ கிறார்களும்மை யார்க்கும்மீ ரகப்படாது
பதுங்கிக்கொள்ளு மையாவென் றிசைத்தனர் — அதற்குஸ்தூலர்
ஒதுங்கிமெல்ல வேயுடம்ப சைத்தனர்.

எஞ்சின்றன்னைப் பார்க்கிலும் நீர் மிஞ்சியே கொரட்டைவிட
இசைந்து கொண்டீர் ஐயாவென்று கேட்டனர் — வயிறதனை
பிசைந்து கொண்டே ஸ்தூலர் கைகால் நீட்டினர்.

என்றுபற்பல விதமா யிட்டர்தமாஷ் செய்யஸ்தூலர்
என்னலினி பொறுக்கமுடிய வில்லையே — என்று
சொன்னலு மைவர்க்கிரக்க மில்லையே.

இன்னம்சற்று நேரமிந்தப் படியிருக்கி லென்பிராணன்
ஏகிவிடு மையாவென்று கூவினர் — அந்தகூணம்
வேகமோடு மேகலெக்ட்டர் மேவினர்.

டிக்கெட் டிக்கெட் டையாவென்று டிக்கட்கலெக்ட் டரும்கேட்க
சிலகாலஞ் சத்தமொன்று மில்லையே — ஸ்டேஷனில்
கலகல வென்பதுமாற வில்லையே.

டிக்கெட் கலெக்ட்டர் டிக்கெட்டுகள் தீர்க்கமாக எண்ணுவதைச்
செவி கொடுத்தே ஸ்தூலருற்றுக் கேட்டனர் — எக்ஜாமினரும்
கவனமாக டிக்கெட்டுகள் கூட்டினர்.

நூறுக்குநூறுக் கென்றே டிக்கட் சுருக்கமாகக் கத்தரித்தோர்
நபரெங்கே யென்று கலெக்ட்டர் கேட்டனர் — அவர்க்குடம்பு
நலமில்லையா யிவனொருவர் காட்டினர்.

சொந்தமுடனே விந்தையாக இந்தவிதமோர் நண்பர் சொல்லச்
சொகுசதா யெல்லோரும் வெகு தீரமாய் — சுக்கடவென்று
நக்கை செய்தார் கைகொட்டிநெடு நேரமாய்.

D. திருவேங்கட ஐயர்,
புள்ளாக்கவுண்டன் புதூர்.

SCHOOL GARDEN

தோட்டம் பயிரிடுதல்

பள்ளிக்கூடத் தோட்டமானது பள்ளிக்கூடத்திற்கு முன் பாவது பக்கத்திலாவது இருக்கவேண்டும். அது அதிக பெரிய தாய் இருக்கவேண்டிய தில்லை. 60 × 40 அடி இருந்தால் போதும்.

தோட்டமானது நீண்ட சதுரமாகவாவது நேர் சம சதுரமாகவாவது அமைக்கப்பட் டிருக்கலாம்.

மண் —

தோட்டத்தின் பூமியின்பேரிலுள்ள மண் அநேகமாக பாறைகளிலிருந்து பொடியாக்கப்பட்ட மணல் முதலியவைகளோடும் அழுகிப்போன தாவரவர்க்கத்தோடும் கலந்தே இருக்கும். அழுகிப்போன தாவரவர்க்கம் அதிகமாய் கலந்திருப்பதினால்தான் மண்ணின் நிறம் கறுப்பாய் இருக்கும்.

மண் இருவகைப்படும். (உ-ம்.)

1. களிப்பான மண்.

2. மணல் பாங்கான மண்.

பள்ளிக்கூட தோட்டத்திற்கு இந்த இரண்டுவித மண்ணும் கூடாது. ஆனால் இவை இரண்டும் அளவாக கலந்திருக்கும் கலப்புமண் சிலாக்கியம்.

களிமண்ணானது அதிக பிடிப்புள்ளதாயும் வேலை செய்ய அதிக கடினமாயும் இருக்கிறது. மணல் பாங்கான இடத்தில் இறைத்த ஜலமெல்லாம் பிரயோஜனப் படாமல் போகும். களி மண்ணோடு புதிதான சாணி எரு சேர்த்தால் நல்ல மண்ணாகும். அதோடு கொஞ்சம் சுண்ணாம்பையும் சேர்க்கலாம்.

மணற் பாங்கான நிலத்தை விருத்தி செய்யவேண்டுமானால் ஏரிகளின் வண்டலில் களிப்பும் சுண்ணாம்பும் சேர்த்தால் நல்ல மண்ணாகும். அதோடு நன்றாய் பழகின மாட்டு எரு முதலியவைகளைச் சேர்க்கலாம்.

தோட்டத்தின் மண்ணானது அநேகமாக 2 அடி ஆழமுள்ள நல்ல மண்ணோடு கூடியதாய் இருக்க வேண்டும்.

வேலி போடுதல் —

தோட்டத்திற்குள் ஆடு மாடு முதலிய ஜந்துக்கள் உட்புகுந்து செடிகளுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்கும் பொருட்டும் அதிலுள்ள செடிகளுக்கு அதிக பலமான காற்று முதலியவைகளிலிருந்து காப்பாற்றும் பொருட்டு வேலியானது முக்கியமாய் தோட்டத்தைச் சுற்றி அமைக்கப்படுகிறது.

வேலி இரண்டு விதமாக அமைக்கலாம் —

1. நிலையான வேலி.

2. தற்கால வேலி.

நிலையான வேலி. இரண்டு வகை —

1. உயிருள்ளவை.

2. உயிர் இல்லாதவை.

உயிர் இல்லாத வேலி — இரும்புத் தூண் முதலியவைகளை ஏற்படுத்தி அல்லது கிறுத்தி குறுக்காக கம்பி முதலியவைகளை உபயோகப் படுத்தி சாஸ்வதமான உயிர் இல்லாத வேலி ஏற்படுத்தலாம். உயிருள்ள சாஸ்வதமான வேலியை அநேக விதங்களாக ஏற்படுத்தலாம் (உ-ம்.) கொருக்காப்புளி, சவுக்கு, கற்றாழை, முதலியவைகளைக் கொண்டு வரிசையாக வைத்துப் பயிர் செய்து வேலியாக்கலாம்.

இவைகளில் கற்றாழையால் ஏற்படுத்தப்படும் வேலியானது பள்ளிக்கூடத்திற்கு ஏற்றது அல்ல. ஆனால் எப்பொழுதும் தற்கால வேலியைக் காட்டிலும் ஸ்திரமான வேலியாய் இருப்பது சிலாக்கியம்.

சவுக்கு வேலி வைக்கும் விதம் —

சவுக்கு மரமானது எப்பேர்ப்பட்ட தாழ்மையான மண்ணிலும் விருத்தியாகு மாகையால் அதைப் பயிர் செய்து வேலியாக்கச் செய்யலாம். இவ்வித வேலிக்கு 1½ அடி அகலம் இருப்பது நலம். தோட்டத்தைச் சுற்றிலும் 1½ அடி அகலத்திற்கு 1 அடி

ஆழம் பறித்து மேல் மண்ணை கீழே போட்டு கீழ் மண்ணை மேலே போட்டு, பள்ளத்தை நிரப்பிப் பள்ளத்தில் ஜலத்தைக் கட்டி நிறுத்தி, 10, 12 மணி நேரம் கழிந்த பிறகு 3 அல்லது நான்கு வரிசையில் ஒவ்வொரு செடிக்கும் நான்கு அங்குலம் விட்டு சவுக்கு நாற்றுகளை நட்டு, பிரதிதினம் ஜலம் வார்த்துக் கொண்டு வந்தால் 6 மாதத்திற் குள்ளாக நல்ல வேலியாகி விடும். நன்றாய் வளர்ந்த பிறகு 4 அடி உயரத்திற்கு வெட்டி விட்டுக்கொண்டே வரவேண்டும்.

கோருக்காப்புளி வேலி —

சவுக்குப் போலவே பள்ளம் வெட்டி அதை மூடின பிறகு நான்கு வரிசையாக, கொருக்காப்புளி விதையை விதைத்து கிரமமாய் ஜலம் வார்த்துக்கொண்டு வந்து 4, 5 அடி உயர்ந்த பிறகு ஒரே மட்டமாய் இருக்கும் பொருட்டு 4 அடி உயரத்திற்கு மேலில்லாமல் வெட்டிவிட்டு, பக்கங்களிலும் அதிக கிளைகள் போகாமல் கத்தரித்துக் கொண்டு வரவேண்டும். இவ்வித வேலி தோட்டத்தை காப்பாற்றுவதற்கே யன்றி அதன் மாசூல் அனுபவிக்க அல்ல.

எருக்கள் —

செடிகளும் பிராணிகளைப்போலவே அநேக அவயவங்களோடு கூடிய உயிர் உள்ளவைகள் ஆகையால் அவைகளும் ஒவ்வொரு பாகங்களை காட்டுவதற்கு ஆகாரத்தை வேண்டுகின்றன. அவ்வித ஆகாரமானது அநேகமாக பூமியிலேயே அகப்படுகிறபடியால் அவைகளை எடுத்துக் கொண்டே வருகின்றன. அப்படி எடுப்பதினால் பூமியிலுள்ள மர உணவு ஆகாரமானது குறைந்து கொண்டே வருகிறது. அப்படிக் குறைந்து கொண்டு வரும் ஆகாரத்தை விர்த்தி பண்ணுமல் போனால் செடிகள் பூமியில் நன்றாய் வளராமல் க்ஷீணதசை அடைகின்றன. அப்படி சாரம் குறைந்து க்ஷீணதசை அடையாமல் இருக்குப் பொருட்டு பூமியில் மர உணவு சாரத்தை விருத்தியாக்குவதற்காக பூமியில் நாம் எருவைச் சேர்த்து பூமியை அதிக மர உணவு சாரத்தோடு கூடியதாயிருக்கும்படி செய்கிறோம்.

எருக்கள் இரண்டு விதம் —

1. பொது எரு.
2. விசேஷ எரு.

1. பூமியில் உப்புவாயு, பாஸ்பரஸ் திராவகம், பொடாஷ் உப்பு, சுண்ணாம்பு முதலியவைகள் மரம் செடிகளினால் அதிகமாய் எடுக்கப்பட்டு பூமியில் சாரம் குறைந்து போவதற்கு இடமுண்டு. இவ்வித வஸ்துக்களை விருத்தியாக்குவதன் பொருட்டு நாம் உபயோகிக்கும் எருக்களுக்கு, பொது எரு என்று பெயர்.

2. இவ்வித எல்லா வஸ்துக்களையும் விருத்தியாக்காமல் இவைகளில் சிலவற்றை மட்டிலும் ஏராளமாக கொடுக்கும் எருக்களுக்கு விசேஷ எரு என்று பெயர்.

1. பொது எருக்களாவன: குதிரை எரு, ஆட்டு எரு.

2. விசேஷ எருக்களாவன: தோல்ஷாப்பு எரு, மர உப்பு, மாட்டெலும்பு. பின் சொன்னவை செடிகளுக்கு வேண்டிய சிலவற்றை மாத்திரம் விசேஷமாக கொடுக்கிறபடியால் விசேஷ எரு என்று பெயர். குதிரை எரு — இது அதிக உஷ்ணமான எரு; இதைப் புதிதாக உபயோகப்படுத்தலே கூடாது. ஆனால் ஒரு வருஷத்திற்கு மேல்பட்டு மட்கிப்போன எருவை உபயோகப் படுத்தலாம்; ஆனால் தானியம் விளையும்படியான பூமிக்கு உபயோகப் படுகிறதில்லை.

தோல் ஷாப்புகள் —

இதில் தோல் துண்டுகள் அதிலிருந்து வழித்து எடுக்கப்பட்ட மாம்ச வஸ்துக்கள் ஏராளமாக சுண்ணாம்பு முதலியவைகள் இருக்கின்றன. இதில் விசேஷமாக உப்பு வாயு இருப்பதினால் அதை விருத்தி செய்யும் பொருட்டு இவ்வித எருவை உபயோகிக்கலாம்.

இலையின் எருக்கள்:—

இலை முதலியவைகள் ஒரு குழியில் புதைத்துவைத்து 5-ல் மர்தம் வரையில் மடிந்த பிறகு அதோடு கொஞ்சம் மணல் செப் மண் முதலியவை கலந்து எருவாக உபயோகப்படுகிறது. இப்

பேர்ப்பட்ட மண்ணானது விதைமுளைப்பதற்கு தகுதியானது. இதில் மணலானது பேர்பாதி ஏற்பட்டிருந்தால் அது பதியம் முதலியவை போடுவதற்கு ஏற்றது. மரஉப்பு சாம்பல் முதலியவைகள் பூமியின் சாரத்தை இலை விருத்தி செய்யும்.

பழம் கொடுக்கும் மரங்களுக்கு எலும்பை எருவாக உபயோகப் படுத்தலாம்.

G. RANGA RAU,
Municipal School,
Pudur, Vanyambady.

MOTHER'S LOVE

அன்னை தன் அன்பு

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

நம்மால் எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத பேருதவியை நமக்குச் செய்கின்றவர்கள் பலருண்டு. அவர்களில் கடவுள், தாய், தந்தை, ஆசிரியன், அரசன் ஆகிய இவர்களே முதன்மை யானவர்கள்.

இப் பூமியில் நாம் பிறந்து வளர்ந்து வாழ்வதெல்லாம் கருணைக் கடலான கடவுளின் திருவருட் பயனன்றே! இப் பிரபஞ்சத்திலுள்ள அநந்த கோடி ஜீவ ராசிகளும் ஆதியில் சிறிதும் அறிவின்றிக் கல்மண்முதலான அசத்துக்களோடு ஒப்பாகக் கிடந்தன, கடவுள் அவைகளிடத்தில் கருணை கூர்ந்து எல்வகையிலாயினும் அவை கடைத்தேறும் வழியைக்காட்டி பேரின்ப வாழ்வு பெறட்டு மென்று கடாக்ஷித்தருளி, ஞானேந்திரியங்களும், கற்செயல்கள் செய்வதற்குத் துணைக் கருவிகளாகிய கை கால் முதலிய உறுப்புக்களும் அமைந்த அற்புத சிருஷ்டியாகிய சரீரத்துடனே இப் பூமியில் பிறக்கும்படி சங்கற்பித்து, இப் பூமியில் நமது நல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் பலவற்றையும் படைத்துப் பரிபாலித்து வருகின்றார்.

நமக்கு நன்மை செய்வதில் கடவுளுக்கு பிந்தியவர் நம்மைப் பெற்றெடுத்த தாயே. தாயானவள் குழந்தையைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்று பசிவேளை யறிந்து பாலூட்டி, தூங்கும் வேளை யறிந்து தாலாட்டி, அழுகிற வேளை யறிந்து சிரிப்பூட்டி, விளையாடுகிற வேளையில் சீராட்டி, குளிப்பாட்டுகிற வேளையில் குளிப்பாட்டி, ஈ எறும்பணுகாமலும் காற்றுப் படாமலும் கவனமாகக் காத்து, கண்ணை யிமை காப்பது போலப் பிறந்த நிமிஷ முதற் காப்பாற்றுகிறாள். சிறிதும் நோய் அணுக வொட்டாமல் சமயமறிந்து மருந்து கொடுத்துப் பரிகாரம் செய்கிறாள். குழந்தை பாலுண்டு வளர்ந்து வருங்காலத்தில் அதற்கு ஏதாவது நோய் வந்தால் அதற்காகத் தான் பத்திய மிருந்து, பரிவுடனே பாதுகாக்கிறாள். குழந்தை கொஞ்சம் பெரிதான பிறகு, அதற்குப் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். பலவகையான நல்லொழுக்க நற்செய்கைகளை நடத்திக் காட்டுகிறாள். தன் மகன் எத்தனை குற்றம் செய்தாலும் அது தாய்மனதுக்குத் தப்பிதமாகத்தோன்றாது. மகனுக்கு ஏதாவது ஒரு துன்பம் ஏற்பட்டால் அது தனக்கு நேரிட்டதைப் பார்க்கிலும் பதின் மடங்கு பெரிதாக நினைத்துப் பரிதாபப்படுவாள். மகனுக்குக் காலில் முள் தைத்தால் அது தாய்க்குக் கண்ணில் தைத்ததுபோ லிருக்கும். பிள்ளை கொஞ்சம புத்திசாலியாகி, படித்துப் பரீக்ஷையில் தேறினால், அதைப் பார்த்து மகிழ்ச்சி யடைபவர் மாதாவைப்போல் மற்றொருவருமில்லை.

'தன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்'

தாய் நமக்குச் செய்யும் உதவிகளுக்குப் பிரதியாக நாம் எத்தனை நாள் அவளுக்கு ஊழியம் செய்தாலும் நமது கடன் முற்றும் தீராது. ஆயினும், அவள் நம்மிடத்தினின்றும் வேறு ஒரு நன்மையையும் எதிர்பாராமல் நமது க்ஷேம மொன்றையே பெரிதாக நினைத்துப் போஷிக்கிறாள். ஐயோ பாவம்! அருமையிலும் அருமையான இப்படிப்பட்ட நற்றாயைச் சிலர் இளமையிலேயே பறிகொடுத்து விடுகிறார்களே, அவர்களுடைய தௌர்ப்பாக்கியத்தை என்னென்று சொல்லலாம்! எத்தனையே நிருத்து அணைத்து ஆதரித்தாலும், 'ஐயோ! தாயில்லாப் பிள்ளை' யென்றே பார்ப்பவர்களெல்லாம் பரிதபிக்கிறார்களல்லவா? பிள்ளை

களுக்குச் சந்தோஷ முண்டானாலும் தாயுடன் சொல்லவேண்டும். சங்கடம் வந்தாலும் தாயுடன் சொல்ல வேண்டும். தமது சுக துக்கங்களை வேறு யாரிடம் சொன்னாலும் தாயுடன் சொல்வது போல அவ்வளவு திருப்திகரமா யிராது. இவ்வளவு அன்புடையவ-ளாக மடிமே லெடுத்து மார்போடணைத்து பால் கொடுத்து மகிழ்வோடு வளர்த்த மாதாவை மூடர்கள் சிலர் மதி கெட்டுத் தள்ளாத காலத்தில் ஆதரியாமல் அல்லாட விடுகிறார்கள். அவர்-களிலும் கொடியவர்களான சிலர் ஐயோ, வாயினல் திட்டியும் கையினல் அடித்தும் பெற்ற தாயை அவமதிக்கிறார்கள். அத் தன்மையான நன்றியற்ற நீசர்களைக் கண்ணல் காணவுங் கூடாது. மனத்தினல் நினைக்கவுங் கூடாது.

நம்மைப் பெற்றெடுத்த தாயைத் தெய்வமாக நினைத்து, 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை,' 'தாயிற் சிறந்தொரு கோயி-லுமில்லை' என்னும் நீதிவாக்கியங்களை யுணர்ந்து மாதாவின் சொற்-படி கேட்டு நடந்து, தள்ளாத காலத்தில் அவளுக்குப் பலவித மான உபசாரங்களும் செய்து, அவள்மனத்துக்கு உவப்பாகநடந்து கொள்ளுகிறவர்களே உத்தம குமாரர்களாம். தாய் மனங்கோண நடக்கிறவர்கள் கடையரிலும் கடையரான கிராதகர்களாம்.

C. SESHACHALAM.

PRACTICAL GEOMETRY

கேஷத்திர கணிதம்

முதல் வகுப்பு.

சதுரம், நெடுஞ் சதுரம், முக்கோணம், விருத்தம், விருத்தார்த்தம், உபகரணங்கள்: — சதுரகாகிதத்துண்டுகள், குட்டையான குச்சிகள், நீளக் குச்சிகள், எலுமிச்சம் பழம், நூல் கயிறு, ஒருகத்தி, கரும்பலகை, கற்பலகை.

I. சதுரம் (Square).

(a) உபாத்தியாயர் சதுரமான காகிதத்தை எடுத்துக்கொண்டு மாணாக்கர்களுக்கும் ஒவ்வொரு சதுரக் காகிதத்தைக் கொடுத்து,

அந்தக் காகிதத்திற்கு நான்கு ஓரங்களிருக்கின்றன வென்பதையும் அதன் பெயர்களையும் சிறு கேள்விகளால் வருவிக்க.

(b) இந்தக் காகிதத்திற்கு நான்கு மூலைகளிருக்கின்றன வென்பதையும் அதன் பெயர்களையும் வருவிக்க.

(c) மாணாக்கர்களை மேல் ஓரமும் கீழோரமும் ஒன்றின்மேல் ஒன்று பொருந்தும்படி மடிக்கச்செய்து அவ்விரண்டு ஓரமும் சம நீளமாய் இருக்கின்றது என்பதை வருவிக்க.

(d) அம்மாதிரி இடது வலது ஓரத்தையும் மடித்துப்பார்க் கச்செய்க.

(e) பிறகு, இடது ஓரத்தின் மீது மேல் ஓரத்தையும் வலது ஓரத்தின் மீது கீழோரத்தையும் ஒன்றின்மேல் ஒன்று பொருந்தும் படி மடித்துப்பார்க்கச் செய்வதுடன், கீழ் ஓரத்தின் மீது இடது ஓரத்தையும் மேலோரத்தின் மீது வலது ஓரத்தையும் பொருந்தும் படி மடித்துப்பார்க்கச் செய்து எல்லா ஓரங்களும் ஒரே அளவாய் இருக்கிறது என்பதை வருவிக்க.

(f) அம்மாதிரியே மூலைகளையும் ஒன்றின்மேல் ஒன்று பொருந் தும்படி வைத்துப்பார்க்கச் செய்து, நான்கு மூலைகளும் ஒரே அளவாய் இருக்கின்றனவென்பதை வருவிக்க.

(g) இம்மாதிரி நான்கு ஓரங்களும், நான்கு மூலைகளும் ஒரே அளவாய் இருக்கும் வடிவத்திற்குத்தான் சதுர வடிவம் என்பதை போதித்து, அம்மாதிரி உருவத்தைக் கரும்பலகையில் வரைந்து மாணாக்கர்களைக் கற்பலகைகளில் வரையச் செய்க.

(h) உடனே கையிலிருக்கும் காகிதம் சதுரவடிவம் என் பதை மாணாக்கர்கள் மொழியால் வருவிக்க.

II. நெடுஞ் சதுரம்.

(a) உபாத்தியாயர் சதுர வடிவமான காகிதத்தை எடுத்துக் கொண்டு அம்மாதிரியாகவே மாணாக்கர்களுக்கும் ஒருகாகிதம் கொடுத்து இது சதுர வடிவமாய் இருக்கிறது என்பதை வருவிக்க.

(b) ஏதாவது இரண்டு எதிர் ஓரங்களை அதாவது, மேலோ ரம் கீழ் ஓரம் அல்லது இடது ஓரம் வலது ஓரங்களை ஒன்றின்மேல் ஒன்று பொருந்தும்படி மடிக்கச் செய்து முன்னிருந்த உருவத்-

திற்கும் இப்போது அமைந்திருக்கும் உருவத்திற்கு முள்ள பேதத்தை மாணக்கர்கள் மொழியால் வருவிக்க.

(c) உடனே குறுகிய ஓரங்கள் இரண்டையும் நீண்ட ஓரங்கள் இரண்டையும் ஒன்றோடு ஒன்று முறையே மடித்துப் பார்க்கச் செய்து இரண்டும் ஒரே அளவு என்பதை வருவிக்க.

(d) பிறகு, நான்கு மூலைகளையும் ஒன்றின் மேல் ஒன்று பொருந்தும்படி வைத்து அதுவும் ஒரே அளவுள்ளது என்பதை நிரூபிக்க.

(e) இம்மாதிரி இரண்டு நீண்டபக்கங்கள் ஒன்றுக்கொன்று சரியாயும், இரண்டு குறுகியபக்கங்கள் ஒன்றுக்கொன்று சரியாயும், நான்கு மூலைகளும் சம அளவாயும் இருக்கும் உருவத்திற்கு நெடுஞ் சதுரம் எனப் பெயர் என்பதை போதிக்க.

(f) உபாத்தியாயர் கரும்பலகையில் 'நெடுஞ் சதுர வடிவம்' ஒன்று வரைந்து மாணக்கர்களையும் தங்கள் கற்பலகைகளில் வரையச் செய்க.

(g) உடனே மாணக்கர்களிடம் சில நீண்ட குச்சிகளையும் சில குறுகிய குச்சிகளையும் கொடுத்து நெடுஞ் சதுர வடிவம் அமைக்கச் செய்யலாம்.

III. முக்கோணம்.

(a) உபாத்தியாயர் கரும்பலகையில் மூன்று புள்ளிகளை ஒரே கோட்டில் இல்லாதபடி மூன்று இடத்தில் வைத்து அது இருக்கும் மாதிரியை வருவிக்க.

(b) இதற்கு A, B, C, என்று பெயர்களை கொடுத்து, பிறகு AB, BC, CA, என்ற வரிசையில் புள்ளிகளைக் கோடுகளால் இணைக்கச் செய்க.

(c) இந்த உருவம் மூன்று கோடுகளும் மூன்று கோணங்களும் அடங்கியது என்பதை மாணக்கர்களிடமிருந்து வருவிக்க.

(d) இம்மாதிரி உருவத்திற்குத்தான் 'முக்கோணம்' என்பது என்று உபாத்தியாயர் சொல்லி மாணக்கர்களையும் தங்கள் கற்பலகைகளில் வரைந்து காண்பிக்கச் செய்யலாம்.

IV. விருத்தம்.

(a) உபாத்தியாயர் வகுப்பில் ஓர் எலுமிச்சம்பழத்தை காண்பித்து அது உருண்டையாய் இருக்கிறது என்பதை மாணக்கர்களிடமிருந்து வருவிக்க.

(b) உடனே, உபாத்தியாயர் அதை இரண்டாக நறுக்கி மாணக்கர்களிடம் காண்பித்து மூடியின் அடிபாகம் சக்கிரமாக இருக்கிறது என்பதை வருவிக்க.

(c) இம்மாதிரி உருவத்தையும் அதன் பெயரையும் கரும் பலகையில் வரைந்து மாணக்கர்களை வாசிக்கச் செய்யலாம்.

(d) ஒவ்வொரு மாணக்கனிடமும் நூல் கயிற்றைக்கொடுத்து அதன் இரண்டு நுனிகளையும் ஒன்றுசேர்த்து கரும்பலகையிலுள்ள உருவம்போல் அமைக்கச் செய்க.

(e) பிறகு மாணக்கர்களைத் தங்கள் கற்பலகைகளில் வரைந்து காண்பிக்கச் செய்யலாம்.

V. விருத்தார்த்தம்.

(a) ஒரு சாதத்தம்பழ மூடியை மாணக்கர்களிடம் காண்பித்து அதன் அடிப்பாகம் விருத்த வடிவமாய் இருக்கிறது என்பதை வருவிக்க.

(b) மறுபடியும் அந்த மூடியை குறுக்காக நறுக்கி காண்பித்து அதன் அடிப்பாகம் வளைவாக இருக்கிறது என்பதை வருவிக்க.

(c) இம்மாதிரி உருவம் ஒன்று கரும்பலகையில் வரையச் செய்து, முழுமூடியின் அடிபாகத்தைப் போலும் ஓர் உருவம் வரையச் செய்ய.

(d) முழுமூடியின் அடிப்பாகம் முழுவிருத்தமாய் இருக்கிறது என்பதையும், குறுக்காக நறுக்கின மூடியின் அடிப்பாகம் அரை விருத்தமாக இருக்கிறது என்பதையும் கரும்பலகையிலுள்ள உருவங்களைக்கொண்டு ஒத்துப் பார்க்கச்செய்து வருவிக்க.

(e) இம்மாதிரி அரை விருத்தமான உருவத்தைத்தான் **விருத்தார்த்தம்** என்பது என்று போதிக்க.

அப்பியாசம்.

1. உங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள மேஜை என்ன வடிவம்?

2. சதுர வடிவமான வஸ்துகள் சிலவற்றைச் சொல்லுக?

3. ஒரு ரூபாயின் உருவமும் பெயரையும் வரைக?

4. நார்த்தம்பழம் என்ன உருவம்? அந்த மாதிரி உருவமுள்ள பழங்கள் சில சொல்லுக?

5. விருத்தார்த்தம் என்பது என்ன?

6. "ப" என்ற எழுத்தில் எத்தனை கோணங்களிருக்கின்றன? என்ன கோணம்?

G. NARAYANASWAMY AIYAR,
S. S. Teacher,
Suppammalpatti.

CLOTHING MATERIALS

ஆடை நெய்யும் வஸ்து வகைகள்

நாகரிக தேசங்களில் இக் காலத்தில் சாதாரணமாய் வழங்கி நம் ஆடைகள் பட்டு நூல், கம்பளி நூல், சணல் நூல், பருத்தி நூல் முதலியவைகளினால் செய்யப்பட்டவை. வட துருவம், தென் துருவம் ஆகிய இவைகளை அடுத்த நாடுகளில் வசிப்பவர்கள், அவ்விடங்களைப் பார்க்கப் போகிறவர்களும், பதனிட்ட நாலினாற் செய்த ஆடைகளையும் தீண்ட மயிருள்ள தோல் ஆடைகளையும் அணிவார்கள். மேற்சொல்லிய ஆடை வகைகளுள் ஒவ்வொன்றையும் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுவோம்.

2. பட்டு — பட்டும், அதன் இனத்தில் ஒன்றுகிய மக்மல்லும் செல்வவான்களுக் குரியவைகளாம். அவர்களும் இவைகளைச் சாதாரணமாய்த் தினந்தோறும் அணிவதில்லை; பண்டிகை, கொண்டாட்டம், வைதிக காரியங்கள் முதலிய விசேஷ காலங்களில் அணிவார்கள். இவ்வாறு அப்போதைக்கப்போது உபயோகித்த போதிலும் அவைகளை ஒவ்வொரு சமயத்திலாவது நன்னீர்

தூய் துவைத்து அழுக்குப் போக்கிச் சுத்தப்படுத்தாமல் இருக்கக் கூடாது. ஏனெனில், தேகத்தினின்று இயற்கையாய் வெளிப்படும் எண்ணெய்ப் பசையும் வியர்வையும் படிந்து அவை நாளடைவில் சக்குப் பிடித்துப்போம். சாயப் பட்டு, 'கிங்காபு',* சித்திரப் பட்டு ஆகிய இவைகளில் சட்டைகள் தைத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில், அவை ரஸாபாஸமாயிருக்கும். உடுப்புகள் தைப்பதற்கு வங்காளம், சீனு, ஜப்பான், பர்மா முதலிய இடங்களிலிருந்து வரும் வெண்பட்டுக்களையாவது, கல்கத்தா, கொள்ளேகாலம் (கோயமுத்தூர் ஜில்லா) முதலிய இடங்களிலிருந்து வரும் நார்ப் பட்டுக்களையாவது உபயோகிக்கலாம்.

3. பிளானல் — சால்வையாகவாவது வெள்ளைக் கம்பளியாகவாவது இடுப்பிற் கட்டிக் கொள்வதற்கு உபயோகிக்கலாம். அவைகளையும் அப்போதைக் கப்போது உபயோகிக்கலாமே யல்லாமல், எப்பொழுதும் உபயோகிக்கக் கூடாது.

உடுப்புத் தைப்பதற்குப் பிளானல் கல்ல துணியே யாகும். மெல்லியதாயும் மிருதுவாயும் இருக்கிற காஷ்மீர பிளானலே உட் சட்டையாகத் தைத்துப் போட்டுக் கொள்வது நன்மை பயக்கும். பிளானலில் துவாரங்கள் அதிகம் இருப்பதால், உடம்பை யடுத்துத் தரித்துக் கொள்ளும் பிளானற் சட்டை உடம்பில் இருந்து வெளிப்படும் ஈரத்தை உடனுக்குடனே உறிஞ்சிவிடும்.

பிளானல் உட்சட்டையையும் அடிக்கடி நன்னீரில் காயவைக்கவேண்டியது அவசியமே. அதற்கு அனுகூல மில்லாவிட்டால், தேகத்தினின்று வெளிப்படும் மலங்களை யிழுத்துக்கொண்டு அது துர்நாற்றம் வீசும். அப்பொழுது அதை உபயோகிக்காமல் கழற்றி இரண்டொரு நாள் காற்றிலும் வெய்யிலிலும் ஆறப்போட்டு வைக்க வேண்டும். அப்படிச் செய்வதனால், அதன் துவாரக் கண்களிலுள்ள பிராணவாயுவினால், அதில் சேர்ந்திருந்த தேகத்து

---

* கிங்காபு — இது பெர்ஷியன் வார்த்தை; பல வர்ணங்களும் புட்டாக்க ளெனப்படும் புள்ளிகளும் வாய்ந்த பட்டுக்குப் பெயர். சித்திரப் பட்டு என்பது Damask; மக்மல் என்பது Velvet; சாயப் பட்டு என்பது சாதாரணமாய் நாம் காணும் சிவப்பு, மஞ்சள், பச்சை, ஊதா முதலிய வர்ணங்கள் ஏற்றப் பெற்றவை.

அழுக்கு முதலியன நீற்றுச் சுத்தமாய் விடும் (become oxidised); பிறகு, அத்தத் துர்நாற்றம் வீசாது. வியர்வையினல் பட்டாடைகளும் பருத்தி நூல் ஆடைகளும் நனைந்து கறைப்படுவது போலப் பிளானல் நனையாது.

பிளானலுக்குச் சவர்க்காரம் போட்டு வீட்டில் அதைக் கழுவலாம். ஆனல், அதைக் கற்களின் மீது பலமாய் அடித்துத் துவைக்கக் கூடாது; பலமாய் அடித்தால் அதன் நூல் இழைகள் தளர்ந்து போம்.

உடம்பைப் போர்த்துக் கொள்வதற்குக் கம்பளங்கள் உபயோகிக்கிறார்கள். குளிர் மிகுந்த தேசங்களில் கம்பளிப் போர்வை மிக அவசியமாகும். அது இல்லாவிட்டால் அவ் விடங்களில் வசிப்பது மிகக் கஷ்டம். உஷ்ண தேசங்களில் கம்பளிப் போர்வை அவ்வளவு அவசியமில்லை.

கம்பளி நூலும் பருத்தி நூலும் சேர்த்து நெய்யப்பட்ட துணிக்கு டுவீட் (Tweed) என்று பெயர். அது கம்பளி ஆடைகளைவிட விலை குறைந்தது; கம்பளிக்குப் பதிலாய் உபயோகிக்கத் தக்கது.

கழிவுபட்ட கம்பளி நூல்களையும் சிலும்புகளையும் அடித்து பெல்ட் (Felt), என்னும் துணியாக்குகிறார்கள். பெல்ட் என்பது அடிகம்பளம். அதைத் தண்ணீரில் நனைக்கக்கூடாது; நனைத்தால் தூள் தூளாய்க் கிழிந்துவிடும். குல்லாய்கள் செய்வதற்கும் மேசைப் போர்வைகள் முதலியன செய்வதற்கும் அடிகம்பளம் உபயோகிக்கப் படுகின்றது.

பிளானலை கோடைக் காலத்தில் உபயோகிக்கக் கூடாதென்பது தவறான கொள்கை. மாரி காலத்தில் அது நம் தேகத்துச் சூட்டை வெளி விடாமல் உள் அடக்கிக் காக்கும்; கோடைக் காலத்தில் வெளிச்சூடு தேகத்தில் தாக்காமல் தடுத்துக் காக்கும்.

4. லினன் (Linen, கித்தான்) — இது மழமழப்பாயும், உருமுள்ளதாயும், குளிர்ச்சி தரத் தக்கதாயும் இருக்கின்றது. ஆனல், அதிக விலையுள்ளதாதலால், இதை ஏழைகள் வாங்கித் தரித்துக்கொள்ள முடியாது. பருத்தி நூல் துணியினும் செய்த உட் சட்டைகளின் முன் கைப் பாகங்களுக்குக் கொஞ்சம் விறைப்பு உண்டாவதற்கு மாத்திரம் இதை நாம் உபயோகித்து வருகிறோம்.

சரவையான கித்தானை (Coarse Linen) புத்தகங்கள் கட்டுவதற்கும் (Book-binding), தபால்ரிஜிஸ்டர் கவர்களுக்கு உட் புறத்தில் ஒட்டி அவைகளைக் கெட்டியாக்குவதற்கும் உபயோகிக்கிறோம்.

5. பருத்தி நூல் — பருத்தி நூல் துணி விலை சரசமானது; எந்த நிலைமையி லுள்ளவர்களும் உபயோகிக்கத் தக்கது; இடுப்பு வேஷ்டியாகவும், உத்தரீயமாகவும் அங்கியாகவும், ஜமக்காளமாகவும், துப்பட்டியாகவும், சவுக்கமாகவும், இன்னும் பல வகைகளாகவும் உபயோகிக்கக் கூடியது.

எல்லா நிறங்களுள்ளும் வெண் நிறமே உத்தமமானது; தரிப்பதற்குக் கௌரவம் வாய்ந்தது. பகட்டான நிறம் எதுவும் தகுதியானதன்று; முக்கியமாய், ஆழ்ந்த சிவப்பு ஆடைகளும் கருஞ் சிவப்பு ஆடைகளும் பார்ப்பதற்கு வெறுப்பாய் இருப்பதன்றி, விநயக் குறைவைத் தெரிவிக்கும்.

சுற்றிலும் லேசான ரோஜாச் சிவப்பு நிறமும், மத்திய பாகத்தில் வெண் நிறமுமுள்ள ஆடை உடுப்பதற்கு ஏற்றதே; முக்கியமாய், இது இளைஞர்களுக்கு ஏற்றதாகும். அகலப் பட்டையான சரிகைக் கரையுள்ள ஆடைகள் தரிப்பது டம்பாசாரித் தனத்தைக் குறிக்கும்.

உட்சட்டைகளிலும், அங்கிகளிலும் கண்ணைப் பறிக்கத் தக்க நிறம் கூடாது; ஆழ்ந்த நிறமுள்ள கோடுகளும் கூடா; இவை காட்டு மிராண்டித்தனத்தைக் குறிக்கும்; இப்படிப்பட்ட உடுப்புகள் தரிப்பது நாகரிக லக்ஷணமன்று. சுத்த வெள்ளையான துணிகளிலாவது, லேசான கோடுகளுள்ள துணிகளிலாவது, வெள்ளைப் புள்ளிகளுள்ள துணிகளிலாவது, உடுப்புகள் தைப்பது உத்தமம். அதற்கு அடுத்த படியாய், சாம்பல் நிறமான துணிகளில் கோடு உள்ளவைகளை யேனும், கோடுகள் இல்லாதவைகளை யேனும் கொள்ளலாம். ஆயினும், ஆடைகளின் நிறம் அவரவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது.

வேஷ்டிகளுக்கும், உத்தரீயங்களுக்கும், உட் சட்டைகளுக்கும், மேல் சொக்காய்களுக்கும் கஞ்சிப் பசையூட்டி விறைப்புண்டாக்கிச் சுருக்கம் நீங்க 'இஸ்திரி' செய்வித்துத் தரித்துக் கொள்ளுதல் நற்பாங்கென வழங்குகின்றது. ஆனல், உடம்பை யடுத்து இருக்கும் ஆடைகளிற் படிந்திருக்கும் கஞ்சிப் பசை தேகத்தி-

னின்று வெளிப்படும் சாரத்தை இழுத்துக் கொண்டு, புளித்து அழுகித் துர்நாற்றம் வீசுவதன்றிப் பலவகையான சர்ம ரோகங்களை (Parasitic skin diseases) உண்டாக்கும்.

பற்பல அந்தஸ்திலுள்ளவர்களுடைய ஆடைகளை யெல்லாம் வண்ணன் வித்தியாசமின்றி ஒருமிக்கச் சேர்த்துக் குழப்புவதனல் நோய்ப் பட்டவர்களின் ஆடைகளினின்று மற்ற ஆடைகளுக்கு நோய்கள் பரவுதல் கூடும். அப்படி உண்டாகும் வியாதிகளுள் 'வண்ணன் வியாதி' (Dhoby's Disease) என்பது ஒரு சர்மரோகம்.

உடம்பை யடுத்துத் தரிக்கும் ஆடைகளை — வேஷ்டி, அங்கவஸ்திரம், உட்சட்டை முதலியவைகளை தினந்தோறும் வீட்டிலே துவைத்து சுத்தப்படுத்திக் கொள்வது உத்தமம்.

6. வேறு நூல் ஆடைகள் — இக் காலத்தில் வாழை நார், அன்னசி நார், கமுகு நார் முதலியவைகளினுற் செய்த வஸ்திரங்கள் வெளி வருகின்றன. இவை பருத்தி நூல் வஸ்திரங்களைப்போல விலை சரசமாயும், பட்டைப்போல பளபளப்பாயும், உரமுள்ளவைகளாயும், நீடித்து நிற்கக் கூடியவைகளாயும் இருக்கின்றனவாம்.

7. கையினுற் செய்த வஸ்திரங்கள் — யந்திரங்களினுற் செய்த வஸ்திரங்களைவிட, கையினுற் செய்த வஸ்திரங்கள் சற்று விலை யதிகமாய் இருந்த போதிலும், உரமுள்ளவைகளா யிருக்கின்றன. தையல் வேலையிலும், யந்திரத் தையலைவிடக் கைத் தையலே சிறந்தது. யந்திரங்களினுற் செய்யப்பட்ட வஸ்திரங்கள் விலை சரசமா யிருக்கின்றன; ஆனல், உறுதியா யிருப்பதில்லை. ஆகையினல், வெகு சீக்கிரம் கிழிந்து போகின்றன. கையினுற் செய்த நாட்டு வஸ்திரங்களோ உரமாயும், நீடித்து உழைக்கக் கூடியவைகளாயும் இருக்கின்றன.

(இன்னும் வரும்)

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of 'the Arya', Madras.

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1915ஆம் மார்ச்சு | மாதம் 10

TOLSTOY AS A SCHOOLMASTER
டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

Other classes — வேறு பாடங்கள்

சரித்திர பாடத்தைப் போலவே பூகோள சாஸ்திர பாட போதிப்பதுங் கஷ்டமென்று டால்ஸ்ட்டாய் சொல்லுகிறார். பூ தன்னைத்தானே சுற்றுகிறது என்றும் அது சூரியனையும் சுற் வருகிறதென்றும் கூறும் இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்க பிள்ளைகள் சந்தோஷ மடைவதில்லை. சரித்திரபாடத்தில், தற்கா சரித்திரத்திலிருந்து தொடங்குவது போலவே, பூகோள பாட திலும் தங்கள் கிராமத்தையே முதற்பாடமாகத் தொடங்கு ராம். அடுத்த கிராமத்தைப்பற்றி எடுத்துச் சொன்னபோ சிறிது சந்தோஷமாகக் கேட்டார்களாம். ஆனல் அதைப்பற்றி விஷயங்கள் பெரும்பாலும் அவர்களுக்கு முன்னமே தெரிந்திருக்

ததாம். அதிக தூரத்தில் உள்ள இடங்களைப்பற்றி அறிய அவர்கள் சிறிதும் ஆசைகொள்ள வில்லையாம். நானாவித தேசங்களைப் பற்றிச் சொன்ன கதைகளை மாத்திரம் சிரத்தையுடன் கேட்டார்களாம். ஆனால் இடையில் அவ்விடங்களைப்பற்றி பூகோள விஷயமாக ஏதேனும் சொல்லப் புகுந்தால் அந்தச் சிரத்தை குறைந்து விடுமாம். தங்களை ஏமாற்றிப் பூகோள பாடத்தைப் போதிக்கும் பொருட்டுக் கதைகளை உபாத்தியாயர் சொல்லுகிறார் என்று அறிந்த வுடனே அவர்களுக்கு அதிக கோபம் பிறந்து விடுகிறதாம். பிறகு அந்த வகுப்புக்கு வரவும் அவர்கள் மனங் கொள்வதில்லையாம்.

பாடசாலைகளில் பூகோள பாடம் போதிப்பது தவறு என்று டால்ஸ்டாய் தீர்மானிக்கிறார். ருஷிய பாஷையில் எழுதியுள்ள ஒரு நாடகத்தில் நடிப்பவன் ஒருவன் 'எல்லா தேசங்களையும் அறிந்து கொள்வதனால் ஏற்படும் குணமென்ன? எங்கே போக வேண்டுமானாலும் வண்டி ஓட்டுகிறவர்கள் கொண்டுபோய் விடுகிறார்கள்' என்று சொல்வதாக எழுதியிருக்கிறார். அது உண்மையே என்று டால்ஸ்ட்டாய் ஆமோதிக்கிறார்.

டால்ஸ்ட்டாய் ஓர் உபாத்தியாயருடைய நிலையிலிருந்து இவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்து தம் அபிப்பிராயத்தை விளக்கமாக எழுதுகிறார். இயற்கைப் பொருள்கள், செயற்கைப்பொருள்கள், கவியழகு முதலியவற்றைப் பற்றி மாணாக்கர்களுக்கு புகட்டவேண்டிய விஷயங்கள் எண்ணிறந்தவை தம் மனத்தில் இருக்கின்றன வென்றும், அவற்றில் சிலவற்றையேனும் செவ்வையாகப் போதிப்பதற்குக் காலம் கிடைக்கவில்லை யென்றும் வற்புறுத்திக் கூறுகிறார்.

நானாவிதப் பிரதேசங்களின் சீதோஷ்ண நிலைமைகளைவிட அதிக முக்கியமாக யாவரும் உணர்ந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல நம்மைச் சுற்றிலும் சதாகாலமும் இருந்துகொண்டிருக்கின்றனவென்று வற்புறுத்துகின்றார். மாணாக்கர்களுக்குப் பூகோளபாடத்தில் சிறிதும் ஊக்கம் கிடையாது. அதை அவர்கள் படிக்கவேண்டுமானால் முதல்முதல் பிள்ளைகளுக்கு அந்தப் பாடத்தில் ஊக்கம் பிறக்கச் செய்யவேண்டும்; அதற்குத் தூர தேசப் பிரயாணங்களைப்பற்றி எழுதியுள்ள புஸ்தகங்களைப் படிக்கச் செய்வது அநுகூலமாகும் என்று டால்ஸ்ட்டாய் எழுதியிருக்

கிறார். அதைவிட அநுகூலமானது தபால் தலைகளைச் சேகரிப்பது என்கிறார். சாதாரணமாக மாணாக்கர்கள் அறிந்த உபாத்தியாயர்களிடம் கற்றுக்கொள்வதைப் பார்க்கிலும் அதிகமாக மேற்கூறிய வழிகளில் கற்றுக்கொள்ளுகிறார்களாம்.

'செயற்கை யென்பது என்ன?' என்று டால்ஸ்ட்டாய் ஒரு புஸ்தகம் எழுதி யிருக்கிறார். அதில் அவர் கவி, சங்கீதம், சித்திரம் இவை யதேச்சைக்குறிய மாதிரியிலே வளர்ந்திருக்கின்றன வென்றும், அவை தற்காலம் க்ஷீணதசை யடைந்திருக்கின்றன வென்றும் உறுதியுடன் கூறியிருக்கிறார். யஸ்நயா பாடசாலையை நடத்திய காலத்திலே அவருக்கு இந்த அபிப்பிராயம் ஏற்பட்டு இருந்தது. சிறந்த செய்யுள் ஒன்றை எடுத்துப் பாடினால் அதைக் கேட்கப் பிரியப்படாத பிள்ளைகள் நாட்டுப்புறத்து வேலையாட்கள் பாடும் தந்தானா பாட்டைக் கேட்டு ஆநந்தமடைந்தார்களாம். அதனால் பிற்கூறியதே விசேஷம்; அதுதான் உண்மையான கவி என்று டால்ஸ்ட்டாய் எண்ணுகிறார். ஆகையால் சங்கீதத்திலும் நாட்டியத்திலும் தாம் தம் மாணாக்கர்களுக்குப் போதித்து வந்தது அவருக்கே திருப்திகரமாக இருந்திராது; ஏனெனில், அவருடைய அபிப்பிராயப்படி அவரே மாணாக்கராகவும் மாணாக்கர்கள் உபாத்தியாயர்களாகவுமன்றோ மாறவேண்டும். பிள்ளைகள் தம் உபாத்தியாயரிடமிருந்து கற்றுக்கொண்ட பிறகு பாடுவதைக் காட்டிலும் அதிக இன்பமாகக் கற்றுக்கொண்ட பிறகு பாடினார்கள் என்று அவரே சொல்கிறார். ஆனால் ருஷியர்கள் சங்கீதப் போக்குள்ள ஜாதியார்; அவர்களுக்குச் சுதேச விஷயமாக எண்ணிறந்த பாட்டுகளும் உண்டு.

சித்திரம் எழுதும் பாடத்திலும் கூடுமான அளவு மாணாக்கர்கள் யதேச்சைப்படி விட்டார். அதை அடக்கி வகுப்பில் ஏதேனும் ஒரு வஸ்துவைப் பிள்ளைகளின் எதிரே வைத்து அதைப் போல் எழுதச் செய்வதினால், அவர்கள் ஆயுள்நாள் வரையின் ஒன்றைப் பார்த்து எழுதும் வழக்கத்தையே கைக்கொள்ளுகிறார்களாம். பொதுவாக எல்லா விஷயத்திலும் மாணாக்கர்களின் அபிருசியை உபாத்தியாயர் சிதைத்துவிட லாகாது; அவருக்கு ஏற்பட்டுள்ள அபிருசியைப் பிள்ளைகளுக்கு வற்புறுத்திப் புகட்டுவது அவ்வாறு சிதைப்பதேயாகும் என்று டால்ஸ்ட்டாய் கூறுகின்றார்.

உபாத்தியாயர் தமது அபீஷ்டங்களை விசேஷமாகக் கொண்டு நாடுகிறாரோ அது போலவே மாணாக்கர்களும் செய்வது தான் நல்லது; அவர்களுக்கேன் அந்த உரிமை இல்லாமற் போக வேண்டும். உண்மையில் அவர்களுடைய அபிருசியானது பலவித காரணங்களால் கெட்டுக் கோணவழிகளில் பிரவேசிப்பதில்லை என்று டால்ஸ்ட்டாய் வாதிக்கிறார்.

ஐரோப்பாவில் பற்பல தேசங்களில் கல்வி விஷயமாக வழங்கிவரும் வழிகளை முற்றிலும் கவனியாமலே டால்ஸ்ட்டாய் பற்பல விதமான அபிப்பிராயங்கள் கொண்டுவிட்டார் என்று சொல்ல வொண்ணாது. ஜெர்மனி, பிரான்ஸு, சுவிட்ஜெர்லண்டு முதலிய தேசங்களுக்குப் போய் அநேக பாடசாலைகளைப் பார்த்தும், உபாத்தியாயர்களையும் மாணாக்கர்களையும் நேரே விசாரித்தும், அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளக்கூடியவற்றை யெல்லாம் அறிந்து கொண்டார்.

பத்திராதிபர்.

LIFE OF LATE HONOURABLE MR. GOKHALE, C. I. E.

காலஞ்சென்ற ஆனரபில் மிஸ்டர் கோகலே, C. I E.

நமது இந்தியாவிற்கு ஒரு திலகம்போல் விளங்கிய ஆனரபில் மிஸ்டர் கோகலே 1915 ஆம் வருஷம் பெப்ருவரி மாதம் 19உ வெள்ளிக்கிழமை இரவு 10½ மணிக்கு இம் மண்ணுலகை நீத்து விண்ணுலகை யடைந்ததைக் கேட்டு ஒவ்வொரு இந்தியனும் உடல் பதைக்கின்றது; உள்ளம் உடைகின்றது; கண்களில் நீர் ஆறுகப் பெருகுகின்றது. அந்தோ! இத்தகைய குணசீலரை நாம் இனிக் காணு நாள் எந்நாளோ! நம்முடைய இந்திய சகோதர சகோதரிகளுடைய மனத்தை யெல்லாம் தம்முடைய நற்செய்கை யென்ற ஓர் அரிய காந்தத்தால் இழுத்து விட்டதுமன்றி மேனாட்டார் பல்லோராலும் நன்கு போற்றவும் பெற்ற மிஸ்டர் கோகலேயின் ஜீவிய சரிதை பின் வருமாறு —

1866ஆம் வருஷத்தில் கோல்ஹாபூரில் மஹாராஷ்டிர பிராமண குலத்தில் ஏழ்மையான தோர் குடும்பத்தில் மிஸ்டர் கோகலே

பிறந்தார். அவ்வூரிலேயே உள்ள காலேஜில் கற்று F. A. பட்டப் பரீக்ஷையில் தேறிய பின்னர் பொம்பாயிலுள்ள எல்பின்ஸ்டோன் காலேஜில் போய்ச் சேர்ந்து 1884ஆம் வருஷத்தில் B. A. பட்டதாரியானார். பள்ளியிற் பழகுங்காலே அவரிடத்தில் பல அருமையான குண விசேஷங்கள் காணப்பட்டன. படிப்பு விஷயத்தில் அதிக ஊக்கமும் கவலையும் காட்டி, கற்றவற்றை மறவாது அவற்றின்படி அவர் நடப்பவராயினர்.

கனம் கோகலே

படிப்பு முடிந்ததும், அவர் உபாத்திமைத் தொழிலே மேற்கொண்டார். தேசத்தின்பொருட்டு உழைக்கும் குணம் வாய்ந்தவர்களும், கல்வியை நம் தேசத்தில் பரப்புவதற்கு ஏற்ற வழிகளைத் தேடுபவர்களுமாகிய ஆப்த் (Apt) ஆகர்கார் (Agarkar), திலக் (Tilak) என்ற மெம்பர்களையுடைய தக்ஷிண வித்யா சபை (Deccan Education Society) யில் மிஸ்டர் கோகலே மெம்பராஞர். பிறகு, புனாவிலுள்ள பெர்கூஸன் காலேஜில் (Fergusson College) ஆங்கிலம், கணிதசாஸ்திரம், தேசசரித்திரம், செல்வநூல் (Political Economy) முதலிய விஷயங்களின் போதகராய் அமர்ந்தார். அப்போது அவருக்கு மாதச் சம்பளம் ரூ 70. அந்தக் காலேஜிலேயே அவர் உழைத்துப் பிறருக்கு உதாரணமாக

நின்றது 20 வருஷ காலமேயாம். செல்வநூல் சம்பந்தமாக மிஸ்டர் கோகலே நாளும் அதிக ஆர்வத்தோடு பயின்று, அதில் இருக்கப் பெற்ற எல்லாப் பாகங்களையும் ஆதியோ டந்தமாகத் தம்முடைய மாணவர்களுக்குப் போதித்து வந்த பழக்கத்தால், அந்த சாஸ்திரத்தில் அவர் ஓர் அரிய நிபுணரானர். அவருடைய உண்மையான ஊக்கமும், சாமர்த்தியமும் சீக்கிரத்தில் அவரை அக் காலேஜின் பிரின்ஸிபா லாக்கின. அவரிடம் கல்வி பயின்று தற்போது பற்பல பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து இருப்பவர்கள் நூற்றுக் கணக்கான பேர்களென்னலாம். அப் பெருமான் போதித்த விஷயங்களுடன் அவருடைய உள்ளக் கிளர்ச்சியையும் தேசாபிமானத்தையும் மற்ற அருமையான குண விசேஷங்களையும் அம் மாணவர்கள் பாகங் கொண்டு போயிருக்கின்றனர். சரியான வழிகளில் நம் இந்திய மாணவர்கள் திருந்தி நடக்க ஆரம்பித்தில் மிஸ்டர் கோகலே எடுத்துக் கொண்ட ஊக்கத்திற்காகவும், மாணவர்களிடத்தில் பேரன்பு கொண்டு ஈடுபட்ட தன்மைக்காகவும், தம்முடைய வாழ்நாள் முழுதும் மாணவர்கள் சம்பந்தமாகச் செய்து காட்டியுள்ள பெரிய உபகாரங்களுக்காகவும் இந்தியா என்ற பொதுவான தாயின் குழந்தைகளாகிய நாம் எல்லோரும் 'கோகலே' என்ற அந்த குருமணிக்கு எக்காலும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மிஸ்டர் கோகலே, பெர்கூஸன் காலேஜில் போதகாசிரியராக இருக்கையிலேயே மிஸ்டர் ஜஸ்டிஸ் மஹாதேவ் கோவிந்த ரனடே இவருக்குப் பரிச்சயமானர். நியாய அவதாரமான அந்த ரனடே இவரிடத்திலுள்ள நற்குணங்களைக் கண்டு இவருக்கு எண்ணரிய உபதேசங்களைப் புகட்டினர். இவரிடம் கோகலே 14 வருஷகாலம் செல்வ நூல் பயின்றார்.

மிஸ்டர் கோகலே, எல்லாவித வித்தையிலும் பழக்கம் கொண்டவர் என்பதை விளக்க, மிஸ்டர் ரனடே யவர்கள் தூண்டுதலின் பேரில், புனாவில் சர்வஜன சபையின் ஆசாரணையின் கீழ் நடைபெற்ற ஒரு சமாசார பத்திரிகையின் பத்திராதிபரானது சான்று பகரும். பிறகு அவர் 'தக்ஷிண வித்யாசபை'யின் காரியதரிசியானர். புனாவில் நடைபெற்று வந்த 'சுதாரக்' (Sutharak) என்ற ஆங்கிலோ — மராதிப் பத்திரிகைக்குப் பத்திராதிபரானர்.

1895-ஆம் வருஷத்தில் புனாவில் கூடிய இந்திய நாஷனல் காங்கிரஸ் மகா சபைக்கும் (The Indian National Congress), பொம்பாய் மாகாண காங்கிரசுக்கும் (Bombay Provincial Congress) 4 வருஷகாலம் காரியதரிசியாக வேலை பார்த்து வந்தார். பொது விஷயங்களில் அவர் காண்பித்த மனோற்சாகமும் உண்மையான உழைப்பும் ஊக்கமும் உள்ளன்பும் வெகு சீக்கிரத்தில் இந்தியா முழுதும் பரவின. எந்த வகுப்பினரும் அவரை இந்தியாவின் 'வளர்பிறை' யென்று அழைக்கலாயினர். இவரிடத்தில் பொம்பாய் மாகாண வாசிகளுக்குப் பூர்ண நம்பிக்கை உண்டாய் விடவே, 1897 - ஆம் வருஷத்தில், மிஸ்டர் வாச்சாவுடன் (Mr. Wacha), மிஸ்டர் கோகலேயைத் தங்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து, இந்தியாவின் வரவு செலவு விஷயத்தைக் குறித்து வெல்பி கமிஷனிடம் (Welby commission) சாட்சிசொல்ல இங்கிலாந்திற்கு அவர்கள் அனுப்பினர்கள். இந்தியாவில் ஆங்கில அரசாங்கத்தின் அந்தரங்கமான எல்லா உட்செலவுகளையும் சாட்சிப் பிரமாணங்களுடன் தெளிவான பாஷையில் அங்கு எடுத்து உரைத்தது 31 வயது வாய்க்கப்பெற்ற இளங் குமாரராகிய மிஸ்டர் கோகலேயினுடைய மனப் பெருக்கையும், தேர்ச்சியையும் மேனாட்டார்க்கும் நன்றாய்க் காண்பித்தது மன்றி அவர்களே இவரிடத்தில் வியப்புக் கொள்ளும்படியாகவும் செய்தது. பிறகு, அவர், இந்திய விஷயங்களைக் குறித்துப் பற்பல இடங்களில் பெரிய கூட்டங்களின் இடையில் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்த தென்னப் பிரசங்கித்தார்.

பிறகு 1900, 1901 ஆம் வருஷங்களில் மிஸ்டர் கோகலே பொம்பாய் மாகாண சட்ட நிர்மாண சபையில் (Bombay Legislative Council) ஒரு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விரு வருஷங்களிலும் அவர் செய்த ஆறு பிரசங்கங்களும் ஆறு நவமணிகளாகக் கருதப்படுகின்றன.

தேசப் பொது விஷயங்களில் தம்முடைய கவனம் யாவும் செலுத்த நேர்ந்ததால் மிஸ்டர் கோகலே, தம்முடைய பழைய பெர்கூஸன் காலேஜில் தலைமைப் போதகாசிரியரான வேலையை ராஜீநாமா செய்ய அக் காலேஜார் அவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 25 பென்ஷனுக்கு கொடுக்க லாயினர்.

1902-ம் வருஷத்தில் ராஜப்பிரதி நிதியின் சட்ட நிர்மாண சபையில் மெம்பராக இருந்த மிஸ்டர் ஸர் பிரோஜ்ஷா மீடா (Sir Pherozeshah Mehta) என்னும் இந்திய தேசாபிமானி தம் முடைய ஸ்தானத்தைக் காலி செய்ததால், அவருக்குப் பின் மிஸ்டர் கோகலே தான் அந்த தன்மையை யடையத்தக்கவரானதால் அவ்வேலையில் அவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். தம்முடைய வாழ்நாள் முழுதும், பொம்பாய் மாகாண ஜனங்களின் பிரதிநிதியாக கூட சபையில் உழைப்பதாக மிஸ்டர் கோகலே மன உறுதி கொண்டு மிகுந்த உற்சாகத்துடனும் தக்க கவலையுடனும் தம் முடைய கடமையைச் சீராய் முடித்து வந்தார்.

இக்காலத்திலிருந்தநமது கோகலேயவர்களுக்குக் கீர்த்தியும், அதிகாரமும் வளர்பிறைபோல் ஓங்கவே, நமது இந்தியா விஷயமாக அவருடைய எண்ணிறந்த முயற்சிகள் அநேகமாய் சித்தி பெறுவனவாயின. முதலில் அவர் கொடுத்த பட்ஜட்பேச்சு அவருடையகளங்கமற்றதன்மையையும் உத்தமமானதேசாபிமான எண்ணத்தையும் வெளிப்படுத்தி, பிரஜைகளின் மனத்தில் பெரிய தோர் இன்பத்தை விளைவித்தது. மிஸ்டர் கோகலே,தாம் எடுத்து உரைக்கும் எந்த விஷயத்தையும் பிறர் மனம் உருகும்படியாயும், தக்க சாட்சிப் பிரமாணங்களுடனும், மேலதிகாரிகள் யாதொரு கஷ்டமின்றிச் சீக்கிரத்தில் அறிந்துகொள்ளும்படியாயும் பேசுந் திறமை யுடையவர் என்று இந்தியர் யாவருக்கும் நன்றாய்த் தெரிந்துவிட்டபடியால், அவர் எப்பேச்சுப் பேசினாலும் அவர்கள் அதை உள்ளவாறு அன்புடன் கேட்பார்கள்.

மிஸ்டர் கோகலே, தாம் எடுத்துப்பேசும் விஷயங்களில் குறிப்பான பல ஆதாரங்களை மேற்கோளாகச் சுட்டிக் காண்பிப்பார்; சீர்திருத்த விஷயங்களில் தம்முடைய முழுப்பயிற்சியையும், அறிவையும் விளக்கத் தெளிவாகவும், மிகவும் சுலபமான நடையில், உறுதியானமொழிகளில், சந்தர்ப்பத்திற் கேற்ற குரலில் வாக்குதாட்டிகம் நிரம்பியவராய் நன்கு பேச வல்லவர்; தம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பவர்; நமது இந்தியாவிற்கு என்ன நன்மைகள் புரியலாம் என்ற விஷயத்தையே எப்போதும் தம்முடைய சிந்தையில் எண்ணப் பெற்றவர். ஒரு மதாரமான பொருளைச் சுற்றிக் கவிந்து கொள்ளும் சுக்களைப்போல மதாசார விஷயத்திலும், இந்தியாவின் வரவு செலவு

விஷயங்களிலும் எப்போதும் அவருடைய ஆலோசனைகளைக் கேட்கப் பலர் சூழ்ந்திருப்பார்கள்.

அவ்வுவ் வருஷத்து இந்திய செலவு மிகவும் அதிக மென்றும் இன்னும் குறைக்கவேண்டுமென்றும் இந்தியா பின்னும் கூடிணதசை யடையும்படியான வீண் செலவுகளை அடியோடு நீக்க வேண்டுமென்றும் மிஸ்டர் கோகலே பொதுக் கட்டடங்களில் அடிக்கடி எடுத்து விளக்கினர். இந்தியர்களுக்குக் கவர்மெண்டில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுபடவேண்டுமென்று அவர் வாதாடினர். உப்புவரியை அடியோடு நீக்கவேண்டுமென்று நம் பொருட்டு ஆங்கில கவர்மெண்டை மன்றாடினர். கால்வாய்கள், போக்குவரவு முதலியவைகளின் சம்பந்தமாக ஏராளமான செல்வம் தரும்படியாகக் கேட்டார். நமது இந்திய சகோதரர்களுக்கு (Technical Education) தரவேண்டு மென்றும், கட்டாயமாகவும் இலவசமாகவும் நம் சிறுவர்களுக்கு எலிமென்டெரிக் கல்வி போதிக்கவேண்டுமென்றும், இவ்விதமான இன்னும் பல சீர் திருத்தங்களிலும் நிழைந்து அவ்வப் படித்துறைகளிலும் சற்றேனும் தயங்காது தம்மால் கூடிய வரையில் வாதாடி எண்ணரிய பல நன்மைகளை மிஸ்டர் கோகலே புரிந்தார்.

லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸிலில் அவர் நியாயமான பல வழிகளிலும் எழுந்து நின்று தம்முடைய மேலதிகாரிகள் அதிசயிக்குமாறு பேசவல்லவர் என்பதை விளக்கப் பின் வரும் சம்பவமொன்று காணக் கிடக்கின்றது. யூனிவர்ஸிடி பில்லைக் குறித்து (University Bill) அவர் வாதாடிய தினத்தன்று, தம்முடைய அரிய செய்கைகளால் இந்தியாவில் எப்போதும் தம்முடைய ஞாபகத்தை நிலைநாட்டிப் போன கர்ஸன் பிரபு தாம் அச் சமயம் வாயையே திறக்கப் போவதில்லை யென்றும் பெரு மௌனம் சாதிக்கப் போவதாகவும் நினைத்துச் சட்ட சபைக்கு வந்தார். மிஸ்டர் கோகலே அக்காலத்தில் சராமாரியாகப் பேசின வாக்கு சாதுர்யத்தைக் கண்டு அப் பிரபு தம்முடைய மௌனத்தை யடக்கி இவருக்குத் தக்க மறுமொழி கொடுத்தனர். உத்தியோக சம்பந்தமான இரகசிய பில்லைக் (Office Secret Bill) குறித்து அவர் கண்டனம் செய்ததும் சாமானியமாகக் கருதப் படத் தக்கதன்று.

(தொடரும்)

S. V. விவேகானந்தா.

CHILDREN'S FAULTS AND THEIR REMEDIES

குழந்தைகளின் குற்றங்களும் அவற்றைத் திருத்தும் விதமும்

(168ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகளுக் கெல்லாம் எதையும் அழித்து நாசம் செய்கிற சுபாவம் உண்டு. ஆனால் பிடிவாதமாய் நாசம் செய்ய விடக்கூடாது. குழந்தைகள் எதையாவது நாசம் செய்து விட்டால், அவர்களைத் துடுக்கான காரியங்களைச் செய்கிறவர்க ளென்று கோபிப்பது உண்டு. கோபிக்குமுன் சற்றே தீர்க்காலோசனை செய்ய வேண்டும். தாவர சாஸ்திரிகள் ஒரு குற்றமும் செய்யாத சிறு புஷ்பங்களை அழிப்பதும், வைத்தியர்கள் வாயில்லா ஜீவன்களை வெட்டிப் பரிசோதித்துப் பார்ப்பதும், தங்கள் ஞானத்தை அபிவிருத்தி செய்வதற்கும், மனிதர்களுக்கு நன்மை செய்யவும் கருதியே அல்லவா? அவர்களும் துடுக்கான காரியங்களைச் செய்கிறவர்க ளென்று அவர்கள்மீது நாம் ஏன் கோபிக்க லாகாது என்றால், அவர்கள் காரண மில்லாமல் ஒன்றையும் அழிப்பதில்லை. ஒரு குழந்தை, கண்ணை மூடித்திறக்கக் கூடிய ஒரு பொம்மை, கண்ணை மூடித்திறப்பதற்கு என்ன காரணமென்று யோசித்து, அதை யறிய வேண்டுமென்று அப் பொம்மையின் தலையை உடைத்து உள்ளிருந்த கண்ணின் அமைப்பைக் கண்டறிந்தது. இவ்வாறு செய்து பார்க்காவிடில் இந்தச் சந்தேகம் நெடுநாள் தீடித்திருக்கும்.

இன்னொரு பையனுக்குக் கடிகார யந்திரத்தி லிருக்கும் யந்திரங்களையும் ஆணிகளையும் தனித் தனியாகக் கழற்றிப் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசையைக் கண்ட தாயாரானவள் ஒரு பழய கடிகாரத்தைக் கொடுத்தாள். ஏனெனில் தன் குழந்தைக்குத் தனக்குத் தானே பரிசோதித்தறிந்து விஷயங்களைத் தெரிந்து கொள்ள இடம் உண்டாகுமன்றே.

எதையும் அழிக்க வேண்டுமென்ற ஆசையை ஒருவாறு திருப்தி செய்ய முயலலாம். கோடித் துணியைப்போல் தூரம் தூரமாக நெய்திருக்கும் துணியில் 2, 3 சதுர அங்குலம் கிழித்துக் கொடுத்து அதை நூல் நூலாக எடுக்கும்படி செய்து ஒரு பறவைக் கூடு, பிரஷ், சிறு தலையணை, சிறு பொம்மை முதலியவை போன்ற வஸ்துக்களைச் செய்யச் சொல்லலாம். இதைப் பொருட் பாடத்தோடும் சம்பந்தப் படுத்தலாம். பறவைகளைப் பற்றிய பாடம் நடத்திய பிறகு, பறவைக் கூட்டைப் போல் செய்து முட்டைகளுக்குப் பதிலாகச் சில வெள்ளை மணிகளைப் போட்டு வைக்கலாம். இதற்குப் புதுத்துணி வேண்டுமென்பதில்லை; ஒன்றுக்கும் உதவாத பழைய துணிகளை மூன்று வர்ணத்தில் நறுக்கி வைத்துக் கொள்ளலாம்.

அச்சிறு பருவம் கடந்து சிறு கத்தரி, கத்திகளைப் பிடிக்கும் வயது வந்த பிறகு, சித்திர உருவம் பதித்த பழய வர்த்தமான பத்திரிகைகளி லிருந்து அச்சித்திரங்களை உருக்குலையாமல் கத்தரித்து தம் தம் புத்தகங்களில் பசையால் ஒட்டுவது ஒழியா வேலையாய்ச் செய்துவரும் சிறுபிள்ளைகள் பலருண்டு. அச்சித்திரங்களின் கதையை அறிந்து அவைகளினடியில் அவற்றின் பெயர்களையும் ஒழுங்காய் எழுதி வைக்கும்படி உற்சாகப் படுத்தினால், அப்பிள்ளைகளுக்கு அத்தொழில் முன்னிலும் அதிக விருப்பத்தைத் தரும். படிப் படியாகச் சற்று நமது உதவியையும் பெற்றுக் கொண்டு, பதுமைகள் தட்டுகள் முட்டுக் கூடைகள் கப்பல்கள் ஜந்துக்கள் முதலான வைகளையும், முடிவில் விளையாட்டுக் கருவிகளையும் காகிதத்தில் கத்தரித்துக் கொள்வார்கள். இத் தன்மையாக அமைத்துக் கொண்ட விளையாட்டுக் கருவிகளை விலைக்கு வாங்கும் கருவிகளிலும் மேலானதாக மதிப்பார்கள். பிள்ளைகளுக்கு இவ் விதமாய்க் காகிதம் கத்தரிப்பதில் கை பழகிய பின்பு சற்று வெறுப் புண்டாகலாம்; அச்சமயத்தில் அப்பிள்ளைகளுக்குப் பலவித வர்ணங்களைக் கொடுத்து, தங்கள் தங்கள் புத்தகங்களில் ஒட்டிவைத்த பதுமைகள், மிருகங்கள், பக்ஷிகள், பூக்கள் முதலான பற்பல சித்திரங்களுக்கு வர்ணம் கொடுக்கும்படி இடங் கொடுத்தால், முன் நேரிட விருந்த வெறுப்பு நீங்கி மேன்மேலும் ருசி பிறந்து அப்பதுமை முதலானவைகளுக்கு வர்ணம் கொடுக்கப் பயில்வார்கள்.

இதனால் சில பிள்ளைகளுக்குத் தாங்களே உருவம் எழுதும்படி ஆசை யுண்டானால், அவர்களின் கண்களுக்கு எதிர்ப்படும் சித்திரங்களைப் போலவும் சிருஷ்டிப் பொருள்களைப் போலவும்

சித்திரிக்கவும், (தரையில் விதம் விதமான கோலங்களிடவும்) முயல்வார்கள். உபாத்தியாயரும் பெற்றோரும் பிள்ளைகளின் விருப்பத்தைக் குறைக்காமல் விருத்தி செய்து வந்தால், சித்திரிக்கும் தொழிலில் கை தேர்ந்து, பிற்காலத்தில் அப்படித் தேறின பிள்ளைகள் ஒழிவு காலங்களை இன்பமாய்ப் பயன் படுத்துவார்கள் அல்லவா?

இங்கிலாந்தில் சித்திர வித்தையில் நிபுணரென்று புகழ் பெற்ற ஒருவர், தாம் சிறுவனு யிருந்த காலத்தில் ஒருநாள் கைக் குழந்தையாகிய தம் தங்கையைப் போலப் படமெழுத முயன்று உருவாக்கின பின்பு, அந்தப் படத்தைக் கொண்டுபோய்த் தம் தாய்க்குக் காண்பிக்கையில், தாயானவள் அதைப் பார்த்துச் சந்தோஷித்துத் தன்னைக் கைகளால் தழுவி யெடுத்து முத்தமிட்டுக்கொண்டாள் என்றும், அந்த அன்புள்ள முத்தமே தன்னைச் சித்திர சிற்பியாக்கி விட்டது என்றும் சொல்லி யிருக்கிறார் என்று ஒருவர் சொல்லுகிறார்.

மற்றொரு புத்திமான் சித்திர மெழுதுவதையே தமக்கு ஜீவனத் தொழிலாய் அனுசரிக்காவிடினும் பட மெழுதுவதில் விசேஷ சாமர்த்தியம் உடையவராகையால் தம்முடைய ஒழிவு காலங்களி லெல்லாம் படமெழுதுவதையே பொழுது போக்கும் விநோதமாகக் கையாண்டு வந்தார். இப்படிச் சித்திர வித்தையில் அபிருசி பிறந்ததற்குக் காரணத்தை அடியிற் கண்டபடி எழுதுகிறார் — சித்திர வித்தையில் எனக்கு அதிக விருப்பம் உண்டானது என் தாயினாலேதான் என்று நினைக்கிறேன். அவள் தான் சிறு வயதில் தினந்தோறும் காலைப் பொழுதில் சித்திரம் எழுதி வந்ததாய்ப் பலதரம் கதை சொல்லி வந்ததுந் தவிர, எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் சில சில தினங்களில் படமெழுதும்படி இடங் கொடுத்துத் தெரியாத விஷயங்களைச் சொல்லிக் காட்டி எங்களை உற்சாகப்படுத்தி வந்தாள் இப்படி தன் குடிவாழ்க்கைக் குரிய காரியங்களிலும், பிள்ளைகளைப் பாதுகாத்து வருவதிலும் இடையிடையே சித்திர வேலை செய்து வந்தவளாயினும், அதனால் என் விஷயத்தில் விளையும் பயன் இப்படிப்பட்ட தென்பதை அவளும் அறிந்ததில்லை. பிறகு என் வாழ்நாள் முழுதும் ஒழிவு காலத்தில் படமெழுதுவதே பொழுது போக்காக அமைந்ததற்கு என் தாயின் நடக்கையே ஏதுவாயிற்று.

ஊசியும் சரடும் சிறு பெண்களுக்கு மிகுந்த இன்பத்தையும் பொழுது போக்கிற்கு ஏற்ற தொழிலையும் அமைக்கத் தக்க கருவிகளாகின்றன. சிறுமிகள் கையில் உடுப்புப்போட்ட பொம்மையைத் தருவது பிசகு, பொம்மைகளுக்கு அவர்களே உடுப்பு தைத்து உடுத்தும்படியாயும், ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு ஜதை பாவாடையும் ரவிக்கையும் தைத்து வைக்கும்படியாயும் நாம் தூண்டி விடவேண்டும். இவ்விதமாகச் செய்து வந்தால் சிறுமிகளுக்குத் தங்கள் பதுமைகளைச் சிங்காரித்துப் பத்திரமாக வைத்துப் பாராட்டும் விருப்பம் அதிகரிக்கும். பிறகு பொம்மை வைத்து விளையாடும் வயது கடந்தால் தம் தம் உடைகளைத் தக்கபடி தைத்து வைக்கும் திறம் இத்தேசத்துப் பெண்களுக்கு இப்பொழுது சாதாரணமா யிருக்கிறதைவிட விசேஷமாய் உண்டாகும். இந்துக்கள் குடும்பத்தில் வேண்டி யிருக்கிற தையல் வேலை மிகச் சொற்பம். அச் சொற்பத்தைத் தாய்மாரும் பெண்களுமே செய்து முடித்துக் கொள்வார்களானால், அவர்களுக்கு அதுவே ஒரு பாக்கியமா யிருக்கும். உபாத்தியாயர்களாகிய நாமும் இத் தொழிலை சிறுமிகளுக்குக் கற்பித்தல் மிக்க நலம். நாம் யாரிடத்தில் அன்பு வைத்திருக்கிறோமோ அவர்களுக்கு நாம் ஒரு காரியம் செய்து கொடுப்பது எப்பொழுதும் மனத்திற்குக் களிப்பைத் தருமாகையால், அவர்களுக்காகச் செய்கிற தையல் வேலையில், இப்பொழுது சோம்பலாயும் மந்தமாயு மிருந்து வீணுக்குகிற அநேக நாழிகைகள், கழிந்து போவது தெரியாமல் இன்பமாய்ப் போகும், இப்படித் தைத்துக் கொடுத்த உடுப்புகளைத் தரித்துக் கொள்ளும் ஆப்தர்களோ வென்றால், தையற்காரன் கூலிக்காகத் தைத்துக் கொடுக்கும் உடைகளை விட நன்கு மதித்துச் சந்தோஷப் படுவார்கள். தாய்களுக்கும் பெண்களுக்கும் வேறு வேலை யில்லாமல் ஒழிந்திருக்கும் போது உபயோகமாகத் தக்க பூப்போடுவது முதலான சித்திரத் தையலில் பயிற்சி செய்வது உசிதமான பொழுதுபோக்கும் தொழிலாகும்.

நானாவர்ண நூற் சரடுகளாலும், பட்டிழைகளாலும், பல வர்ண கம்பள நூல்களினாலும், சரிகையினாலும், சட்டைகள், குழந்தைக் குல்லாய்கள், கைக் குட்டைகள், அரைச் சொக்காய் முதலானவைகளுக்கு ஓரங்களில் கொடியும் பூவும் பேட்டு போடு-

கிறதும், பில்லைத் தலைக்கணை, திண்டு, பிரயாணப் பை, பணப்பை முதலியவைகளுக்கு ஓரங்கட்டி பூப் போடுகிறதும் எப்பொழுதும் பிரயோஜன முள்ள வேலையாகவே யிருக்கும். ஆகையால் பெண் கல்வியில் ஊசியை ஸ்திரமாய்க் கையாளும் பயிற்சி செய்விப்பது அதிக அவசியமான பகுதியே.

தையல் வேலையைப்பற்றி இங்கிலாந்து தேசத்தில் ஒரு பெரு மாட்டி பின் வருமாறு எழுதியிருக்கிறாள் என்று ஒருவர் எழுதுகிறார் — "நாணயமான சிறு ஊசியை நம்மில் மதியாதவர் யார்? சோம்பல், இளைப்பு, துக்கம் இவைகளில் ஏதாவது நம்மைப் பிடித்தால் அதை விலக்க அது ஒரு ஆயுதமாக விளங்குகின்றது. வறுமை வரும் காலத்தில் ஜீவனோபாயத்திற்குத் தகுந்த கருவியாகின்றது. மற்றக் காலங்களில் நமக்குப் பிரியமான தொழுமை யாகின்றது. ஆரம்பத்தில் பொம்மைக்குப் பெரும்படியாய்த் தைத்து உடுத்திய பாவாடை, தாய்க்கு முதல் தரம் தைத்துக் கொடுத்த நாணயத்தையல், தகப்பனுக்கு ஓரந்தைத்துப் பூப் போட்டுக் கொடுத்த கைக் குட்டை இவை முதல், தன்னைப் பாணிக்கிரகணஞ் செய்யும் புருஷன் சந்தோஷிக்கத் தக்க விசித்திரமாய்ச் செய்து கொடுக்கும் தையல் வேலை வரையில், நமக்கு ஊசி செய்கிற சகாயம் இவ்வளவென்று பெண்களன்றி மற்றவர்கள் கணக்கிட முடியாது. விவேக விருத்திக்குப் படிப்பது பெரிய காரியந்தான். மங்கையர்க்குக் கடவுளமைத்த பத்து விரலுக்கும் எவ்வளவு சிறுவயதில் ஊசித் தொழிலைப் பயிற்று வித்தாலும் அவ்வளவும் நன்மையாகவே முடியும். என்னுடைய சிறு பிராயத்தில் என் பொம்மை உடுப்புகளை நானே நீரில் ஊறவைத்து அழுக்கெடுக்கும்படி என் பெற்றோர் இடம் கொடுத்தது இப்போது என் ஞாபகத்தில் வருகிறது. அப்படி நீரில் தோய்ப்பதினால் நான் ஒரு விசேஷம் அறிந்து கொண்டேன். அதாவது, சாயச்சேலையையும் வெள்ளைச் சேலையையும் ஒரே ஜலத்தில் தோய்த்தால் வெள்ளைத் துணி கறைப் பட்டுப் போமென்று அறிந்தேன்"

ஒரு பெண்ணுக்கு அதின் பொம்மைகளினிடத்தில் விசேஷ பிரீதி முதலில் உண்டாகி விட்டால் வெகு நேரம் அந்தப் பொம்மையின் விளையாட்டிலேயே பொழுது போக்கி விடும். அவைகளுக்குப் பாவாடை முதலான உடுப்புதைக்கவும், அலங்கரிக்கவும், சாப்பாடு செய்து போடவும், பாட்டுப் பாடவும், பாடம் படிப்பிக்கவும், கண்வளரச் செய்யவும, நோய் வந்தால் மருந்து கொடுக்கவும், துஷ்ட நடத்தைக்குத் தண்டிக்கவும் இப்படிப் பற்பல வகையாய் விளையாடும். இவை யெல்லாம் அற்பமான வீண்காலப் போக்கு என்று ஒருவரும் அலக்ஷியம் செய்யக் கூடாது. இப்படிப் பொம்மைகளை வைத்து விளையாடும் சம்யங்களிலே தான் பிற்காலக் குடும்ப வாழ்க்கைக் குரியவைகளைப் பல விதமாய்த் தானே கற்றுக் கொள்ளுகின்றது. நமக்குத் தெரியாத பற்பல காரியங்களை விளையாட்டிலே தானாகக் கற்றுக் கொள்ளுகிறது. அதாவது தன் ஒழிவு காலத்தை ஏதாவது ஒரு காரியத்தில் போக்கக் கற்றுக் கொள்ளுகிறது.

ஒரு பையன் புலி வேட்டை யாடுவது போல் விளையாடுவதாலும் பையன்களோடு விளையாட்டாய்ச் சண்டை செய்வதாலும் அவன் மேன்மேலும் தைரியசாலியாகவும் ஆபத்துக்கு அஞ்சாதவனாகவும் தெரிகிறது. கதையை அநேக தடவை திருப்பித் திருப்பிச் சொல்வதை விட நாடக ரூபமாய் நடித்துக் காட்டுவதால் அக் கதை ஞாபகத்தில் நன்றாய்ப் பதிகிறது. இது விளையாட்டன்றி வேறு என்ன? கயிறு வைத்தல், மணி கோத்தல், மணல் வேலை, உருவஞ் செய்தல் முதலிய வேலைகள் விளையாட்டன்றி வேறு என்ன? சிறுவர்கள் பெரியவர்களைப் போலவும் மிருகங்களைப் போலவும் பக்ஷிகளைப் போலவும் நடிக்கிறார்கள். கழுதையைப்பற்றிய பாடம் நடந்த பிறகு சிறுவர்கள் வண்ணானைப் போலவும் கழுதை நிற்பதைப் போலவும், கத்துவது போலவும் நடிக்கிறார்கள். விளையாட்டுகளைப் பொருட் பாடத்தோடு சம்பந்தப்படுத்தி ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு விதமான விளையாட்டுகள் இருக்கும்படி செய்ய வேண்டும். இவ்வாறே பாடங்களுக்கு ஏற்றபடி விளையாட்டுகளை உபாத்தியாயர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

குழந்தையின் மனோபாவத்தை உள்ளபடி விளக்கிக் காட்டுவது விளையாட்டாகையால், விளையாட்டாவது மனுஷ்யவியல்பு குழந்தைப் பிராயத்தில் எவ்வளவு வளர்தலாகுமோ அவ்வளவையும் விளக்குதலான அறி குறியே என்று புரோபெல் சொல்லியிருக்கிறார். ஆகையால் விளையாட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் சம்பந்தமுண்டு எனத் தெரிகிறது. சிறு குழந்தைகளுக்கு எழு-

வது கணக்குப் போடுவது முதலிய பாடங்களை விளையாட்டின் மூலமாகவே நடத்த வேண்டும்.

சில சிறுவர்கள் வேடிக்கைக் கதைப் புத்தகங்கள் முதலானவைகளைப் படித்துக் கொண்டு உல்லாசமாய்க் காலத்தைப் போக்க விரும்புவதுண்டு. இவர்கள் விஷயத்தில் யோக்கியமான புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதும் அப்படிப்பில் அதிக காலம் செலுத்தி தேக சௌக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாமல் பார்ப்பதும் ஆகிய இவைகள் அன்றி நாம் வேறு முயற்சி செய்ய வேண்டிய அவசியமிராது. வேறு சிலர் தாமே சிறு கதைகள் எழுதத்தனப் பட்டு அதிலேயே அதிக நேரம் போக்குவார்கள். அவர்களை நாம் அப்படியே எழுதும்படி இடங்கொடுத்து, அல்லது அது நன்றாயிருக்கிற தென்று மெச்சிப் பேசி, அல்லது வேறொரு தகுந்த விஷயத்தை எடுத்துக் காட்டி இதைப் பற்றி எழுதினால் உசிதமாயிருக்கு மென்று சொல்லி உற்சாகப் படுத்தலாம். சில வேளைகளில் பெரிய பிள்ளைகளாய் இருப்பவர்களை ஒன்று சேர்த்து உபாத்தியாயராவது பெற்றோராவது ஒரே கதையை யாவது ஒரே விஷயத்தைப் பற்றி யாவது எழுதிக் காண்பிக்கும்படி ஏவினால், அதை அவர்கள் ஒருவனை யொருவன் முந்த வேண்டுமென்னும் ஆசையோடு எழுதுவார்கள். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் — சென்னை உத்தியான வனத்திற்கு மெ பிள்ளைகளை வகுப்பு உபாத்தியாயராவது பெற்றோராவது அழைத்துப் போய்க் காட்டியதாக வைத்துக் கொள்ளுவோம். சில நாள் கழிந்த பிறகு அப் பிள்ளைகளுக்குப் பொழுது போக்க ஒன்று மில்லாமல் மந்தமாயிருக்கிறதாகக் கண்டபோது, மேற்படி வனத்தில் அப்பிள்ளைகள் பார்த்த அதிசயங்களைப் பற்றித் தொடர்ச்சியாய் எழுதிக் காட்டும்படி சொன்னால் அவர்களுக்கு அதில் ஒரு பிரிய முண்டாகி எழுதத் தொடங்குவார்கள். அவரவர்கள் எழுதியதைப் பார்த்துத் திருத்தி, உயர்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டும் வருத்தத்தை மேல் போட்டுக் கொள்வாராயின் அவர்களுக்கு மேல் மேலும் அப்படி எழுதுவது இன்பத்தைத் தரும் தொழிலாகும். சற்று சிறு பிள்ளைகளுக்கோ வென்றால், அவர்கள் பற்பல இடங்களில் பார்த்த ஜந்துக்களின் உருவத்தை பள்ளிக்கூடம், வீடு இவ் விடங்களில் இருக்கும் படங்களைப் பார்த்து இன்னது இன்ன தென்று அறிந்து சொல்லும்படி பயிற்று விக்கலாம்.

மேற் சொல்லியவைகள் தவிர இத்தேசத்தில் என்னுடைய சொற்பகால அனுபவத்திற்குள் வாராத இன்னும் உசிதமான சில-வெவ்வேறு காரியங்கள் என்னைப் போன்ற உபாத்தியாயர்களுக்கும் தாயீ தந்தையர்களுக்கும் தோன்றலாம். நான் இவ்வியாசத்தில் எடுத்துச் சொல்ல முயன்ற தெல்லாம்,

1. சிறுவர்களுக்கும் பெரியவர்களைப் போலவே மந்தமாய்ச் சோர்ந் திருக்கும் தருணங்கள் சில உண்டு ; அப்பொழுது, 'நான் என்ன வேலை செய்யட்டும்?' என்று நம்மிடத்தில் வந்து நச்சு நச்சென்று கேட்பார்கள். அச்சமயம் நாம் வெருப்புறாமல் விருப்புடன் தகுந்த வேலை கொடுத்து உற்சாகப் படுத்த வேண்டும்.

2. ஒழிவுக் காலத்தைப் பயன் பெறப் போக்கும் வழியை எல்லோரும் கவனித் தறியவேண்டும். அப்படி அறிந்தவர்கள் சுகவாழ்வை அடைவார்கள்.

3. சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கற்பிக்கும் விதமும் அவர்கள் சுயமாய்த் தெரியும் விதமும் என்ற இம்மூன்று விஷயங்களே. இவைகளைத் தெரிந்து செய்யும் எனக்குத் தோன்றிய வரையில் எடுத் துரைக்கலானேன்.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர்,
தாழக்குடி, திருச்சி தாலுக்கா.

CLOTHING MATERIALS

ஆடை நெய்யும் வஸ்து வகைகள்

தேசத்துப் பொருளாதாய சம்பந்தமான பல முக்கியமான காரணங்களினாலும் வேறு பல காரணங்களினாலும் இத் தேசத்து வஸ்திரங்களையே நாம் அணிந்து கொள்ளல் வேண்டும். வெளிநாட்டு வஸ்திரங்கள் தற்காலத்திற்கு மலிவாய்த் தோன்றிய போதிலும் நாளடைவில் கணக்குப் பார்க்குமிடத்து, நமது நாட்டு வஸ்திரங்களே நமக்கு எல்லா விதத்திலும் அனுகூலமா யிருக்கின்றன. அவைகளையே நாம் வாங்கி அணியும் வழக்கம் ஏற்பட்டால் நம் நாட்டுக் கைத் தொழில் பலமுற்று ஓங்கும்.

மற்றெல்லா வகைகளிலும் போல இந்த விஷயத்திலும், பிறர் மீது சாராது தம்மீது சார்ந்திருத்தலே சிறந்த நற்குணமாம். நாட்டுக் கைத்தொழில்களை ஜனங்கள் ஆதரியாததனால் அவை பாழடைந்து தேசம் ஏழ்மைப்பட்டிருப்பதைப்பற்றி இதுவரையிற் சிந்திக்காதவர்கள் கிளின் பார்லோ (Mr. Glyn Barlow) என்பவர் இந்தியாவின் கைத் தொழில்களைப்பற்றி (see "Industrial India") எழுதியிருப்பதை வாசித்தால், இந்த விஷயத்தை ஆழ்ந்து ஆலோசித்து நாட்டுக் கைத் தொழில்களையே ஆதரிப்பவர்களாவார்கள்.

கிளின் பார்லோ துரையவர்கள் எழுதியுள்ளது வருமாறு —

'நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் இந்தியக் கனவான் தம்முடைய அறையைச் சுற்றிப் பார்த்துத் தம் நிலைமையை ஆலோசிப்பாராக. அன்னிய தேசத்து வியாபார முத்திரை இங்கும் அங்கும் எங்கும் அகப்படுகின்றது. அவருக்குப் பக்கத்தில் நின்றெரியும் விளக்கு ஜர்மனியிற் செய்யப்பட்டது; அதன்மீது வைத்துள்ள கண்ணாடிப் புகைப்போக்கி ஆஸ்டிரியாவிற் செய்யப்பட்டது; விளக்கில் வார்த்திருக்கும் எண்ணெய் ருஷியாவில் உண்டானது; அந்த விளக்கைக் கொளுத்தின தீக்குச்சி ஸ்வீடன் தேசத்திலோ ஜப்பான் தேசத்திலோ செய்யப்பட்டது. அவருடைய அலமாரியின்மீது நின்று டிக் டிக் என ஒலிக்கும் கடிகாரம் அமெரிக்காவிற் செய்யப்பட்டது; அவருடைய சட்டைப் பைக்குள் இருந்து டிக் டிக் என்னும் கைக்கடிகாரம் ஜினிவாவிற் செய்யப்பட்டது. அவருடைய மேஜையின்மீதுள்ள மசிக் கூட்டிலிருக்கும் மசி லண்டனிற் செய்யப் பட்டது; மசியைத் தோய்த்தெழுதும் அலகும், அதைச் செருகியிருக்கும் கட்டையும் பர்மிங்காமிற் செய்யப் பட்டவை; அவருடைய சட்டைப் பைக்குள்ளிருக்கும் ஈயலேகனி பவேரியாவிற் செய்யப்பட்டது.

'அவர் உடம்பிற் போட்டுக்கொண்டிருக்கும் சட்டையின் துணி யார்க்ஷயிற் செய்யப்பட்டது. காலில் அணிந்திருக்கும் பாதகோசம் ஜர்மனியிற் செய்யப்பட்டது. அவருடைய மனைவி பாவாடை முதலியன கத்தரிக்கும் கத்தரிக்கோல் ஜர்மனியிற் செய்யப்பட்டதாகும்; இல்லாவிட்டால் வெஸ்ப்பீல்டில் செய்யப்பட்டதாகும்; அந்தச் சீட்டித் துணி மான்செஸ்டரிற் செய்யப்பட்டது; அதை அவள் தைக்கும் நூலும் அங்கே செய்யப்பட்டதே; தைக்கும் ஊசி பர்மிங்காமிற் செய்யப்பட்டது. அவள் அணிந்திருக்கும் ரவிக்கைப் பட்டு பிரான்ஸ் தேசத்திற் செய்யப்பட்டது.

'கனவன் கடித்துத் தின்னும் பிஸ்கோத்து ரீடிங் என்னுமிடத்திற் செய்யப்பட்டது; பிஸ்கோத் வைத்திருக்கும் எனமாலிய தட்டு ஸ்டாப்

போர்டு ஷயரிற் செய்யப்பட்டது; அண்டையிலிருக்கும் சோடா வாட்டர் டம்ளர் ஆஸ்டிரியாவிற் செய்யப்பட்டது. சுவரில் தொங்கும் எண்ணெய் வர்ணப் படங்கள் ஜர்மனியில் செய்யப்பட்டவை; அவைகளைப் பொதிந்திருக்கும் சட்டங்களிலுள்ள மறையாணிகள் பர்மிங்காமிற் செய்யப்பட்டவை.'

8. படைக் கோலமணிதல் - The wearing of uniform.

உத்தியோக மரியாதையின் பொருட்டும், உத்தியோக விவகார அனுகூலத்தின் பொருட்டும், உத்தியோக நிர்ப்பந்தத்தின் பொருட்டும், படைக்கோலம் அணிந்துகொள்ள வேண்டியவர்கள் மாத்திரம் அப்படிப்பட்ட முழு உடுப்பு (காற் சட்டையும், கைச் சட்டையும்) தரிக்கவேண்டியது அவசியமாகும். நம்முடைய தேசத்துச் சீதோஷ்ண ஸ்திதிக்கும், வைதிக ஆசாரங்களுக்கும் அது ஏற்றதுமன்று, அனுகூலமானதுமன்று.

படைக்கோலம் தரிப்பவர்கள் மாத்திரம் அரைக் கச்சு அணிவது அவசிய மாகலாம்; இல்லாவிட்டால், காற் சட்டை இடுப்பில் நில்லாது தளர்ந்துபோம். பட்டிகை அல்லது அரைக் கச்சு (Belt or Sash) என்பது அனுவசியமானது; வீண் செலவுக் கேதுவான பெரு வாழ்வுச் சாதனம். அதனால், அணிபவனுடைய ஆரோக்கியம் மிகக் கெடுகின்றது. எப்படியெனில், அடிவயிற்றுப் பிரதேசத்தை அது இறுக்குவதனால் தேகத்திற்கு ஜீவாதாரமாயுள்ள காரியங்கள் கெடுகின்றன; தேகத்தில் இரத்த ஓட்டம், மூச்சு விடுதல், மூச்சு உட்கொள்ளல், ஜீர்ணகாரியம் முதலியன வெல்லாம் அடிவயிற்றை இறுக்குவதனால் கெடுகின்றன. அப்படிப்பட்ட பட்டிகைகளை ஸ்திரீகள் அணிவதனால், கருப்பையின் ஆரோக்கியம் சிதைவுறும்.

இடுப்பிற் கட்டிக்கொள்ளும் வேஷ்டியையும் இறுக்கிக் கட்டக்கூடாது. ஏனெனில், இறுக்கிக் கட்டுவதனால் இடுப்புக்கு இரத்த ஓட்டம் தடைபடும், அரைகடி என்னும் சர்மரோகம் உண்டாகும். இதனுண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கெட்டியாய் வேஷ்டியைக் கட்டியிருந்து அவிழ்த்தவுடனே செய்யும் காரியத்தைக் கவனிக்கவும். அதை அவிழ்த்தவுடனே பெரியதாய் முதல் தோன்றுகின்றது, ஆயாசம் தீர்கின்றது, மூச்சு தாராளமாய் விடுகிறான், அதுவரையில் கெட்டியாய்க் கட்டியிருந்த இடத்தை அவன் தன்னை அறியாமலே சொரியத் தொடங்குகிறான்.

அப்படிச் சொறிவதனால் இரத்தம் தாராளமாக ஓடி, எல்லா இடத்தும் இரத்தம் சமமாய்ப் பரவி நிற்பதற்காகும்.

இறுக்கமான உட் சட்டையாவது, அரைச் சட்டையாவது அணிவதனால் உண்டாகும் கஷ்டம் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்து இருக்கின்றது. இறுக்கமான உடுப்பினால் விளையும் தீமையை யொழிப்பதற்காகப் படைக்கோலம் அணிவோர் சிலர் தமது காற் சட்டையை ஒரு வாரினால் தோளினின்று தொங்க விட்டுக் கொள்கிறார்கள்.

புதுப்பாங்குகளை மேற் கொண்டு இடுப்பைக் குறுக்கிக் கொள்வது அழகெனக் கருதி இறுக்கமான கச்சைகள் அணிகிறவர்களுக்கு நேரிடும் துன்பங்களும் கஷ்டங்களும் பிரசித்தமாகவே இருக்கின்றன. அவர்கள் அழகெனக் கொள்ளும் வடிவம் மற்றவர்களுக்குச் சிலந்திப் பூச்சியின் வடிவத்தைப் போல் விகாரமாய்த் தோன்றுகிறது. இயற்கையில் இடுப்பு மெலிந்திருப்பது அழகின் லக்ஷண மென்பதற்கு ஐயமில்லை: ஆனால், செயற்கையினால் பலாத்காரஞ் செய்து இடுப்பைக் குறுக்குவது உடம்பை நெடுங்காலத்துக்கு விகாரப் படுத்திக் கொள்வதாகும்; அப்படி இடுப்பை நெருக்குவது மிகக் கொடிய காரியம். வழக்கமாய் இறுக்கமான வார்க் கச்சைகள் அணியும் ஸ்திரீகள் அநேகருக்கு ஈரற்குலை இரண்டு துண்டாக வெட்டுண்டுபோ யிருப்பதை அங்கங்கே பிரசித்தமாய்க் கண்டறிந்திருக்கிறார்கள்.

தலைப்பாகையும் தலையின் மீது இறுகக் கட்டிக் கொள்ளக்கூடாது. அது லேசாயும் தளர்ச்சியாயும் இருக்க வேண்டும். தலைக்குக் காற்றோட்டம் இருக்கும் பொருட்டு தலைப்பாகையின் உச்சி சற்றுத் திறந்திருக்க வேண்டும். அப்படிக் காற்றோட்டத்திற்கு வழி உண்டாக்கி வைக்கா விட்டால், அதிக உஷ்ணத்தினால் தலை மயிர் உதிர்ந்து வழுக்கந்தலையாகும்; இந்த வார்த்தை குல்லாய்களுக்கும் தொப்பிகளுக்குங் கூடப் பொருந்தும்.

காலுக்குப் பாதரக்ஷை வேண்டியது அவசியமே. ஆனால், முழு பூட்ஸ், அல்லது அரை பூட்ஸ் (Full boots or Half-boots) அணிவதனால் கால்விரல்கள் நெருக்குண்கின்றன; பாதங்களுக்கு இரத்த ஓட்டம் தாராளமாய்ச் செல்லாமல் தடைபடுகின்றது. மனுமம்மதியருடையமாதிரியை அனுசரித்துச் செய்யப்படும்பாதத்

திறப்புள்ள காற்சோடுகளும், இந்துக்களுடைய மாதிரியை அனுசரித்துச் செய்யப்பட்ட செருப்புக்களும், மரத்தினாற்செய்யப்பட்ட பாதக் குறடுகளும் காற்றோட்டத்திற்கு மிகுந்த அனுகூலங்களுடையனவாதலின், பாதரக்ஷைகளுள் உத்தமமானவை. சீனதேசத்து சொகுசுக்கார ஸ்திரீகளின் பாதங்கள் நெருங்கிக் கூழையாயிருப்பது மிக விகாரமென்பது வழக்கச் சொல்லாய் ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பிய மாதிரியான பூட்சுகள் அணிவதற்குச் சரண கோசங்கள் போட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. பாதரக்ஷையுடன் கூடவாவது, பாதரக்ஷை இல்லாமலாவது சரண கோசம் அணிவது குளிர் மிகுந்த தேசங்களில் மாத்திரம் அவசியமாகும். பூட்ஸ் அணிவது குளிர்மிகுந்து பனி மூடிக்கொண்டு இருக்கும் தேசங்களில் அவசியமாகும். பாதங்களை எப்பொழுதும் காற்றுப்படாமல் மூடிவைப்பதனால் அந்த வாயிலாகத் தேகத்தினின்று வெளிப்பட வேண்டிய உஷ்ணம் வெளிப்படாமல், மறுபடி தேகத்திலேயே திரும்பச் சார்கின்றது; அதனால் மூளை கொதிப்பெடுக்கும்; கண் பொங்கும். இதற்குத் திருஷ்டாந்தம், ஓர் அறைக்குள்ள இரண்டு ஜன்னல்களில் ஒன்றை அடைத்து விடுவதனால் அறைக்குள் உஷ்ணம் அதிகரிக்கும் என்பதை ஆலோசித்துப் பார்க்க.

தேசாசார உடுப்பு (National dress) — இந்திய மாணவர்களெல்லாரும் தங்களுடைய தேசாசார உடுப்புக்களைத் தரித்துக் கொள்ள வேண்டு மென்றும், அவர்கள் திருத்தமுறச் செய்யப்படாத அங்கில ஆடைகளை அணிந்து கொண்டு வெளிவரும் பொழுது மிக விகாரமாயும் இரண்டுங் கெட்டானையும் இருக்கிறார்களென்றும் அநேகர் அநேக இடங்களில் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தியர்களெல்லாரும் அணியக் கூடியதாய் ஒரே மாதிரியான தேசாசார உடுப்பு ஒன்று கிடையாதது கஷ்டமா யிருக்கின்றது.

காசிநகரில் நிலைகொண்டிருக்கும் சென்ட்ரல் இந்து கலாசாலை அதிகாரிகள் அங்குள்ள மாணவர்களுக் கெல்லாம் ஒரே மாதிரியான உடுப்பு விதிப்பதற்கு முயன்றபொழுது மேற்சொல்லிய கஷ்டம் நன்றாய்த் தெரிந்தது. அந்த விஷயமாய்க் கலாசாலை யதிகாரிகள் வெகு தர்க்கம் செய்து முடிவில் ஒரு தீர்மானம் செய்தார்கள். அதாவது, விவகார சமயங்களில் மாணவர்களெல்லாரும் காலோடு ஒட்டினாற்போலிருக்கிற காற் சட்டையும்,

முன்புறத்தில் குமிழ்கள் பொதிந்து மூடப்பெற்று முழங்காலுக்குக் கீழ்த் தணிந்திருக்கும் அங்கியும், தலையிற் பகடியுங் அணிய வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

மேற் சொல்லிய உடுப்பு வட இந்திய வாசிகளுக்கே உரிய தென்பது தெளிவு. பகரியும் காற்சட்டையும் அணிவதற்கு வங்காளத்துப் பையன்கள் ஆக்ஷேபித்தார்கள்; சென்னப்பட்டணத்துப் பையன்கள் காற்சட்டைக்கு ஆக்ஷேபித்தார்கள். சாதாரணமாய் உடுப்பதற்கு, இடுப்பில் வேஷ்டியும் நெட்டங்கியு (Long-coat)மாவது, வேஷ்டியும் நீளமாயும் தளர்ச்சியாயுமுள்ள உட்சட்டையு மாவது (long, flowing shirt) இருக்கலாமென்று முடிவில் எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள். அந்த உட்சட்டை எனப்பட்டது ஷர்ட் ஆகவாவது கீண்ட குடித்தினியாகவாவது, இரண்டு தோட்பட்டைகளின் மீதுமாவது ஒரு தோட்பட்டையின் மீதாவது குமிழிட்டு மூடத்தக்க சொக்காயாகவாவது இருக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இது ஹிந்துக்களுக்கு ஏற்றதாயும், அழகாயும், சுத்தமாயும் இருக்கும்; இந்தியாவில் வசிக்கும் ஐரோப்பியர்களும் இந்த உடுப்பையே மேற்கொள்ளலாம்.

உடுப்பு விஷயமாய்ச் சீர்திருத்தம் செய்வது எந்த வகையில் ஸாத்தியமென்றால், அந்தந்த மாகாணத்துப் பிள்ளைகள் அந்தந்த மாகாணத்துக்குரிய உடுப்பைத் தரிப்பதே உத்தமமென்று தோன்றுகின்றது. அந்தந்த மாகாணத்து முன்னோர்கள் அணிந்து வந்த ஆடையையே அந்தந்த மாகாணத்திலுள்ள இக்காலத்துப் பிள்ளைகளும் அணிவது ஏற்புடையதாகும். இதுவே தேசாசார உடுப்பு எனத் தகும்.

ஆங்கிலேயருடைய உடுப்பு முறையை மேற் கொள்ளுவது தவறு. அது இந் நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஏற்றதன்று; மிகவும் நன்றாய்க் கத்தரித்துத் தைக்கா விட்டால் அங்கிலேயருடைய கண்ணுக்கு நம்மவர் அணியும் அங்கில ஆடை கொடுங் கோரமாய் இருக்கும்.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் சிறு பிள்ளைகளுக்கு அங்கில ஆடை உடுத்துவது மிகுந்த தீமைவிளைக்கும்; ஏனெனில், அவ்வாடைகள் அப்போதைக் கப்போது துவைத்துச் சுத்தப்படுவதில்லை.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of the 'Arya', Madras.

ELEGY ON THE DEATH OF THE HONOURABLE MR. GOPALA KRISHNA GOKHALE, C. I. E.

கோகலே இறந்ததற் காற்றும லழுதகையறவு

இது 3-3-15ல் குன்னூரில் கூடிய உபாத்தியாயர் சங்கத்திற் படிக்கப்பட்டது.

1. அந்தணர்செய் தவப்பயனு யரும்பம்பாய்க்
கோர்மகனு யணைந்து வாழ்ந்து
சொந்தமென விந்தியர்யா ரையுமுரிமை
பாராட்டித் தோய்ந்து நாட்டி
லந்தமதாக் கல்விநலம் யாருமுற
வருமுயற்சி கையாண் டன்பின்
முந்துறுநம் மவர்பெருமை யேற்றமதை
யாங்கிலத்தும் மொழிந்த தக்கோய்!

2. வித்தையுளார் செயற்கரிய செயலிலையென்
றுலகமெலாம் வீறு காட்டப்
புத்திதரு னினதரிய முதற்றொழிலே
நம்மவர்க்குப் புகலா கிற்கு
மத்தகைய நின்னேமறக் கொடுங்காலன்
கைக்கொண்டா னெனு லந்தோ
புத்தியிலான் றறுகண்ணன் மாபாவி
யந்தனெனப் புகறற் கென்னே.

3. வெண்ணெய்திரண் டெடுக்கவரு மப்பொழுது
விரிந்துடைந்து விளைந்த தாழி
கண்ணெனக்கீழ் விழுந்தழிந்த தென்றெருவன்
கேட்டதனைக் கடிப்ப யாமு
மெண்ணரிய குணமுடைநின் றிறமையினு
ணட்டினல மேயு மென்ற
வெண்ணமெலாந் தொலைந் துடைந்து
துயர்க்கடலி லாழ்ந்தியிட ரெய்தினேமே

4. சிற்பிரிந்திந் தியமகளுந் திருவிழந்தாள்
சிறுவரென நின்ற யாமு
மற்புதத் தந்தையை யிழந்தோந்
தந்தைமகற் காற்றுதவி யழிந்ததென்று
மற்பெறவம் பலர்பரக்க வலர்தூற்றும்
வகைவாய்ந்த தையகோ வெம்
பொற்புறுவாழ் வெல்லாமுங் கெட்டதே
புகழுமினிப் பொருந்துமேயோ.

5. ஏங்கியாந் தேறும்வகை யறியாம
லிடைந்துதுய ரெய்தி நிற்கத்
தாங்கமுடியாத் துயரைத் தாழ்த்தற்குமென
வெமக்குச் சாற்றல் போலத்
தேங்கா தலிக்குமொழிச் சீனிவா
சச் செம்மல் சேர்ந்தெங் கண்ணைப்
பாங்குபெறத் துடைக்கின்ற ரென்னினுகின்
பழவுணர்வு பரிந்து போமோ.

சிவத்தியாகாகந்தன்,
ஆந்தாச்சிரமம்.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1915வது ஏப்பிரல்மீ | மாதம் 11

AN ALL INDIA MEMORIAL TO THE HON MR. GOPALA KRISHNA GOKHALE, C. I. E.

கனம் கோபால கிருஷ்ண கோகலே யவர்களின் ஞாபகச் சின்னம்.

ஞாபகச் சின்னமென்பது, காலஞ்சென்ற பெரியோர்கள் அவர்கள் பிறந்து வளர்ந்து படித்துத் தேசோபகாரமாக உழைத்து ஈற்பெயரடைந்த காலத்து அல்லது உயிர் நீத்த பின்பு (அவர்கள் பிரிவாற்றுமையால் துக்கித்து) அவர்கள் நினைவு என்றும் நிலைத்து நின்று ஆன்ம தேசத்துப் பிற்கால மாந்தருக்குத் தேசகாரியத்தில் வழிகாட்டியாக இருப்பதற்கு அமைக்கும்

குறியே ஞாபகச் சின்னமாம். சமீபத்தில் விண்ணுடைடைந்த கனம் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களுக்கு ஞாபகச்-சின்னம் அமைக்கும்படி இந்தியா தேச முழுதிலுமுள்ள அறிவாளிகள், தேசாபிமானிகள் அனைவரும் அவாவுகின்றார்கள். கோகலே யவர்களின் ஜீவியசரித்திரத்தால் பிற்காலத்து இந்தியச் சிறுவர் எவ்வளவு நன்னடக்கை, தேசாபிமானம், கற்றுக் கொள்ள இடமுண்டென்பது வெள்ளிடைமலை. இம்மகானுபாவருக்கு ஒரு ஞாபகச்சின்னமும் ஏற்படுமானால் மேற்கண்ட விசேஷ குணங்கள் விருத்தியாவதற்கு அவ்வப்போது நினைப்பூட்டி வருமன்றே? ஆதலால் ஞாபகச் சின்னம் அமைய வேண்டியது எவ்வாற்றானும் ஒப்பமுடிந்ததே.

இனி, எவ்விதமான ஞாபகச் சின்னம் அமைக்கவேண்டிய தென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? இதைத் தெரிந்து முடிவு செய்வதற்காகப் பத்திரிகைகள் பலப்பல வழிகளைக் காட்டுகின்றன. முக்கியமாய் கோக்கலே யவர்களின் திருவுருவச்சிலை யமைக்கவேண்டு மென்றும், அவர் கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றிப் பாராட்டிவந்த இந்திய ஊழியச் சங்கத்தை நிலையான தன்மையில் அமைக்கவேண்டு மென்றும், புத்தகாலயங்க ளமைக்கவேண்டு மென்றும், பலவாறு அபிப்பிராயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக இந்தியா கண்டத்து மாகாணங்கள் பலவுள்ளும் தனித்தனி மாகாணங்கள் தத்தம் எண்ணம்போல் மேற்கண்ட கருத்துக்களை நிறைவேற்றப் பொருட் சகாயமும் கேட்கின்றன. நமது சென்னை மாகாணமும் இதிற்பின்வாங்கவில்லை. இதன் தலைநகராகிய சென்னையிலும் ஒரு பிரபலகூட்டங்கூடி கோக்கலே அவர்களின் திருவுருவமைப்பதற்காகவும், இந்திய ஊழியச்சங்கத்தை விருத்திக்குக் கொண்டுவருதற்காகவும் தீர்மானித்துப் பொருளும் சேகரித்திருக்கிறார்கள், இன்னும் சேகரித்தும் வருகிறார்கள். பம்பாய் மாகாணம் திருவுருவச் சிலையமைப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. இப்படி யெல்லா மாகாணங்களும் செய்வதாகவே வைத்துக்கொண்டாலும் இவைகளாலெல்லாம் சாதாரண ஜனங்களுக்குப் பெரும்பிரயோஜனமும் படிப்புவாசனைகளை யறியாப் பாமர ஜனங்களுக்கு அறிவுவிருத்தியுமுண்டாகுமா வென்பதுதான் நமது சந்தேகம்

கனம் கோக்கலேயவர்கள் இராஜாங்க காரியத்தில் ஈடுபட்டு உழைத்த ஒன்பது வருஷகாலமாயும், அதற்கு முன்னும் அத்தகாரம் மூடியிருக்கும் ஜனங்களுக்கு அறிவையுண்டாக்கவும், பிழைப்பையுண்டாக்கவும் முயன்றார். அதிலும் கடந்த 4 வருஷகாலமாகக் கல்வியறிவையுண்டாக்கினால் ஜனங்களுக்கறிவு விருத்தியாகி அதனால் இந்தியா முன்னுக்குவர இடமுண்டாகுமென்று மேலைநாட்டி லிருப்பதுபோல கட்டாயப் பிரைமெரிக்கல்வியைக் கொடுக்கக் கவர்ன்மென்டாரோடு பெரும்போர் புரிந்தார். இம்மகானுபாவர் இக்காரியத்தில் ஜயமடையாது போயினும் வருஷாவருஷம் கவர்ன்மெண்டார் இதனை விருத்திக்குக் கொண்டுவந்தே தீரவேண்டுமென்று அக்கரை பாராட்டும்படியான தன்மைக்குக் கொண்டுவந்தார். வந்தாலும் இதில் இவர் திருப்தியடையவில்லை. இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கட்டாயம் படித்துத்தான் தீரவேண்டுமென்று சட்டமுண்டு பண்ணும்வரையில் தம்முயற்சியை விடப்போகிறதில்லை யென்று சொல்லிவந்தார். இப்புண்ணியவான் இதைத்தொடர்ச்சியாய் நடத்தி வெற்றிபெறுதற்கில்லாது போயினும் அவர் செய்த பெருமுயற்சி வீணைகலாமா வென்பதை இந்திய மகா ஜனங்கள் தற்காலம் யோசிக்க வேண்டும். இப்போது ஆங்காங்கு நடைபெறும் ஞாபகார்த்த ஆடம்பரங்களைக் கவனிக்க அவரது ஆன்மா கட்புலனுக்குத் தோன்றாது போயினும் செவிப்புலனுக்குப்படும்படி பேச முன்வந்ததாக உருவகிப்போமானால் அது இப்போது செய்யப்படுந் ஆரவாரத்தை யெல்லாம் மதியாமல் தன் உள்ளக்கிடையாயும், உறுதிநடையாயும், பற்றுக்கோடாயும் மிகுந்த கட்டாயப் பிரைமெரிக் கல்வியையே அணுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படியான முயற்சியை நாடவேண்டுமென்று வற்புறுத்தும் என்பது உண்மை.

இவ்வுண்மையை நாம் கவனிக்கவேண்டியது அவசியமல்லவா? கோக்கலே ஒருவர் போனாலும் அவர் ஆன்மார்த்தமாகக் கொண்டிருந்த எண்ணம் போகவில்லையல்லவா? அவ்வெண்ணம் இந்தியா முழுதையும் முன்னுக்குக் கொண்டுவரும்படியான முதற்சாதன மல்லவா? அம்முதற் சாதனம் சோர்வடையலாமா? ஒருபோதுங்கூடாது. ஆதலின் யாவரும் அவர்

கருத்தை நிறைவேற்ற முயலவேண்டு மென்பது ஒப்பமுடிந்தது. மாகாணம் தோறும் ஞாபகச்சின்னம்ஏற்படினும் இந்தியா முழுதுக்கும் ஞாபகச் சின்னமொன்றிருக்கும்படியாக கட்டாயப்படிப்பை அமுலுக்குக்கொண்டுவர முயலவேண்டும். இதற்கு வேண்டிய பொருட்சகாயமும் செய்துவைக்கப் பின்வாங்கலாகாது.

இது முடிவுக்குவர நாட்செல்லுமாதலின் அதுகாறும் எலிமென்ட்டெரிப் பாடசாலையில்லாத கிராமங்களில் சிறுவர்கள் கல்வியின்றிக் கெட்டுப்போகவும் விடக்கூடாது. கனம் கோக்கலே யவர்களின் ஞாபகமாக அவ்வவ்விடங்களில் எலிமென்ட்டெரிப் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டியது அவசியம். அவ்விடங்களிலும், பிறவிடங்களிலும் இக்கல்வி கட்டாயக் கல்வியாக்கப்பட வேண்டுமென்று முயல்வதில் சோர்விருக்கலாகாது; உழைப்பதில் இளைப்படையலாகாது. இதைச்செய்து முடிப்பதே அம்மகானுபாவருக்கு நாம் ஏற்படுத்தும் மேலான ஞாபகச் சின்னமாகும்.

பத்திராதிபர்.

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

பிரென்சு நாட்டுச் சிறந்த நகரங்களுள் ஒன்றாகிய மார்ஸெல்ஸ் (Marseilles) என்னும் நகரத்தில் உள்ள அநேக பாடசாலைகளை முக்கியமாகக் கவனித்துப் பார்த்தாராம். பார்த்ததில் அவை நல்ல நிலைமையில் இருக்கவில்லை யென்றும், ஆயினும் அந்நகரவாசிகள் அதி சூக்ஷ்ம புத்தியும், சாதுர்யமும் நாகரிகமும் உள்ளவர்களா யிருந்தார்களென்றும் சொல்லுகிறார். அதற்குக்காரணம் என்னவென்று டால்ஸ்ட்டாய் விசாரிக்கிறார். பள்ளிக்கூடங்களில் படித்த படிப்பினால் அவர்கள் அவ்வளவு புத்தியில் சிறந்திருக்கிறார்கள் என்பது சிறிதும் உண்மையாகாது; பள்ளிக்கூடத்திற்கு வெளியில்தான் அவர்களுக்கு புத்தியும் யுத்தியும் வளர்ந்திருக்கவேண்டும். வீதிகளிலும், அன்னசத்திரங்களிலும், நாடகசாலைகளிலும், காட்சிச்சாலைகளிலும்

மற்றும் கூலியாட்கள் உழைக்குமிடங்களிலும் இப்படிப்பட்ட நானவித இடங்களிலும் மனிதர் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்கள் அநந்த முண்டு. இவையே இயற்கையில் அமைந்த பாடசாலைகள். அந்நகரத்தில் இவ்வியற்கைப் பாடசாலைகள், பாடசாலைகள் என்று பெயர் வகிக்கும் மற்றப் பள்ளிகளை அடக்கித் தாமே நன்மை பயந்தன என்று டால்ஸ்ட்டாய் வெகு உற்சாகத்தோடு எழுதுகிறார்.

இதனால் அவர் கவனிக்கத்தகுந்த விஷயம் ஒன்று ஊகிக்கிறார். அதாவது எந்நாட்டிலும் நாகரிகம் உயர உயர பாடசாலைகளில் கல்வி சீர்மைகுலைந்து, வெளியிடங்களில் பரவி விடுகின்றது என்கிறார். ஆனால் அப்பள்ளிக்கூடங்கள் நாகரிகத்தோடே கல்விபோதனையில் உயரவேண்டுமானால், அவை மாணவர்களின் வீட்டுவாழ்க்கையை அநுசரிக்கவேண்டுமாம். ஏனெனில், வீட்டிலும் அதைச் சுற்றிலுந்தான் மாணவர் உலகத்தோடு கலக்கிறார்கள். தற்காலப்படிப்பை டால்ஸ்ட்டாய் முற்றிலும் கண்டிக்கிறார். அது வீண் உபத்திரவம் என்றும், அதன்பேரால் ஒருவன் மற்றொருவனைத் தன்னைப்போல் நடக்கும்படி வற்புறுத்தி அவனது சுதந்திரத்தைக் கொள்ளையடிப்பதே யாகு மென்றும் சொல்லுகிறார். அப்படிச்செய்ய யாருக்கும் உரிமையில்லை; அது பாபத்தொழிலே யாகும் என்கிறார்.

பாடசாலையில் மாணாக்கர்கள் படிக்கச்சென்று படும்பாட்டையும் அவர்கள் வீட்டிலோ வீதியிலோ யதேச்சையாகத் திரிந்து விளையாடுவதையும் எடுத்து விளக்கமாக ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். பாடசாலையிலோ அவர்கள் கவலையுற்று, அடங்கி ஒடுங்கி, சோர்ந்து, பயந்து, அமைதியற்று, கிளிப்பிள்ளை போல் விஷயம் உணராமல், பாஷை தெரியாமல், சொன்னதைச்சொல்லி, நத்தை ஓட்டுக்குள் சுருங்குவதுபோல, அவர்கள் ஆவியே உள்ளடங்கிப் பாடுபடுவதும் படிப்பாகுமோ! இச்சிறுவர்களே எவ்வளவு முகமலர்ச்சியோடு வினையாடுகிறார்கள். எவ்வளவு ஆநந்த மடைகிறார்கள். அப்போது அவர்கள் பேசும் பேச்சும் நடக்கும் மாதிரியும் எவ்வளவு அழகாகவும் இயற்கைக்குப் பொருந்தியதாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் அறிவு எப்படி விசாலமடையாமற் போகும்.

டால்ஸ்ட்டாய் 15 வருஷம் உபாத்தியாயராக இருந்து அனுபவமடைந்த பிரயோஜனத்தை 'பொது ஜனக்கல்வி' என்னும் வியாசத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். அதில் கல்விக்கு முக்கியாதாரம் பிள்ளைகளை யதேச்சையாக விடுவதேயாகும் என்று வற்புறுத்துகிறார். இவ்வித யதேச்சையானது பிள்ளைகளை தமக்கேற்ற பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொள்வதிலும் அவற்றில் தாங்கள் எதைக்கற்றுக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிப்பதிலும் அதை எவ்வாறு கற்றுக்கொள்வதென்றும் முடிவு செய்துகொள்வதிலும் இடந்தருகின்றது என்கிறார். பிள்ளைகளுக்கும் உபாத்தியாயருக்கும் இருக்கவேண்டிய சாதாரண ஒற்றுமை முறை அனுபவம் ஒன்றினால் மாத்திரம் காணக்கூடும் என்று கூறுகிறார். அழுத்தமான ஒவ்வொரு காரியத்திலும் பிள்ளைகளுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கவேண்டும் என்பது உபாத்தியாயரின் அறிவினாலும் அன்பினாலும் அளவிடப்படுவதாய் முடியும். ஆனால் பொதுவில் பிள்ளைகள் விஷயத்தில் நிர்ப்பந்தம் எவ்வளவு குறைவாக வற்புறுத்தப் படுகிறதோ அவ்வளவுக்குப் பள்ளிக்கூடத்தின் உயர்வு மிகவும் அதிகரிக்கும்.

பத்திராதிபர்.

NATURE STUDY IN ELEMENTARY SCHOOLS — A CONVERSATION ON PLANTAIN TREE

வாழை மரத்தைப்பற்றிய ஒரு சம்பாஷணை.

ராமன் — தம்பீ, தம்பீ, (வயதின் சிறுமை நோக்கி இங்ஙனம் ழைக்கிறான்) நான் உனக்கு ஒரு விடுகதை போடட்டுமா ?

கிருஷ்ணன் — நல்லது, நல்லது, அதென்ன ? சொல்லுர்ப்போம்.

ராமன் — ஊம்—மலையிலே மலைச்சார்பிலே
மகிழ்ந்து நிற்கிற பெண் பிள்ளாய்
கயல் உண்டு கெண்டை உண்டு
கீறி பார்க்க முள்ளில்லை.

கிருஷ்ணன் — இதென்ன விபரீதம், முள்ளில்லாத மீனும் உண்டா ?

ராமன் — எல்லாம் யோசித்துப் பார்த்தால் தெரியும், பதறாதே, பதறிய காரியம் சிதறியே போகுமென்பதை யறியாயா ?

கிருஷ்ணன் — (தனக்குள்) இதென்ன கதை ! புத்திக் கெட்டவில்லையே, (அதிக சந்தேகத்துடன்) வாழை மரமோ ?

ராமன் — நிரம்ப சந்தோஷம், வெகு புத்திசாலி நீ, சரி, வாழை மரத்தைப் பற்றி படிக்க ஆசைதானா உனக்கு?

கிருஷ்ணன் — கேட்டுக் கொண்டா சொல்லப் போகிறாய். நீ எனக்குத் தந்த விடுகதையினால் அடிமரத்தின் தன்மையை ஒருவாறு உணர்ந்தேன். இன்னம் என்ன ?

ராமன் — ஏனைய மரங்களில் மத்திய பாகம் சோற்றி, ஆனால் —

கிருஷ்ணன் — ஆம் ஆம் எனக்குத் தெரியும், வெண்மை நிறங்கொண்ட தண்டு ஒன்று மத்திய பாகமுழுவதும் வியாபித்திருக்கும், இதைக் குருத்து என்று சொல்லுவார்கள் இதைத் தின்றிருக்கிறேன் நானும்.

ராமன் — சரி, சரி, இத் தண்டின் நுனிப் பாகத்தில்தான் பூக்குலையும் பின்னர் அதினின்று பழக்குலையும் பக்குவமாகும்.

கிருஷ்ணன் — சரியான வாழை மரத்தின் வளர்ச்சி யென்ன ?

ராமன் — தண்ணீரின் செழிப்பை நோக்கி வளர்ச்சியும் பொருந்தி யிருப்பது எம் மரத்துக்கும் இயல்பேயாம். வாழை மரம் சாதாரணமாய் 13 அடி முதல் 18 அடி வரை வளரும்.

கிருஷ்ணன் — ஊம் — வாழை மரத்தின் இலைகள் பிளவு பட்டிராமல் ஏகமாய், பொருந்தி யிருந்தால் பார்வைக்கு வெகு அழகா யிருக்குமென்று நினைக்கிறேன். நீ என்ன எண்ணுகிறாய் ?

ராமன் — ஓகோ ! அப்படியா நினைக்கிறாய் ! அங்ஙனம் நினைக்க நேர்ந்தால் வாழைப் பழமும் சாப்பிட முடியாதென்று நினைக்கலாமே, சோற்றால் வனைந்த அடிமரம் கொண்டதுவாழை. ஓர்

இளங்காற்றுக்கும் விழுந்துவிடும் மரம்போல் அசைவதை நீ பார்க்கவில்லையா. இலைகள் கிழியாதிருப்பின் காற்றின் வேகத்தால் தாக்குண்டு கீழே விழுந்துபோம், இந் நஷ்டத்துக்கு நிவாரணமாக இயற்கையிலே அமைந்துள்ள ஏற்பாடாம் அது. ஆயினும் பிரசண்ட மாருதத்தினால் சில மரங்கள் விழுந்து கிடப்பதையும் இன்னும் சில மரங்களுக்கு முட்டு கொடுத்திருப்பதையும் நீ பார்த்ததில்லையா ?

கிருஷ்ணன் — இன்றுதான் எல்லாம் நன்குணர்ந்தேன். ஆம் ஆம், வாழை மரம், தண்ணீரும் சதையுமே யொழிய எலும்பில்லை.

ராமன் — சரி, கனியும் அத்தகைமை யுடையதுதானே.

கிருஷ்ணன் — வெகு விநோதம் ! அம்மரம், எப்படிக் காய்க்கும் ? எப்படிப் பூக்கும் ? சற்று விஸ்தரிக்க மாட்டாயா ?

ராமன் — அதையா கேட்கிறாய் ? முன் சொன்னபடி நடுவிலுள்ள சோற்றி தண்டின் முனையே வெளி வந்து, புஷ்பக் குலை தள்ளும். அதனால் இம்மரம் ஒரு தட்வை மாத்திரம் கனிகளை பிறப்பித்து மென்பதை நன்குணர்வாய். காலார்காத்தில் புஷ்பக் கொத்துக்கள் வரிசைக் கிரமமாய் பக்குவமாக, அவைகளை கவர்ந்திருக்கும் மடல்களும் வரிசைக் கிரமமாய் வதங்கி விழுகின்றன. ஒவ்வொரு மடலுக்கு மிடையிலுள்ள புஷ்பங்கள் விருத்தியாக, ஒரு சீப்புக் கனியாகும். ஒரு சீப்பில் சுமார் 10 முதல் 16 வரை பிஞ்சுகள் பிடிக்கின்றன. பின்னர், புஷ்பக்குலையின் தனிப்பாகம் பக்குவமாகாது விழுந்துவிடும்.

கிருஷ்ணன் — மிக்க நன்றாயிருக்கிறது, வாழைமரம் சுமார் எவ்வளவு காலம் உயிரோடிருக்கும் ?

ராமன் — ஒரு ஆறு மாதத்துக்குள் மரமாகி, மறு ஆறுமாதத்துக்குள் பூத்து, காய்த்து, கனி கொடுத்து, பட்டுப்போம்.

கிருஷ்ணன் — ஒருவருஷத்துக்குள் அவ்வளவு உயரமும் உன்னதமும் பெற்றுப் பொலிந்து விளங்கும் மரம் பட்டுப் போகுமா ?

ராமன் — இதன் செழிப்பை நோக்கிதானே நம்மவர் தங்கள் கலியாண வீடுகளிலும் கோவில்களிலும் உற்சவகாலங்களில் தெருக்களிலும் இம் மரங்களைக் கட்டி அலங்கரிக்கிறார்கள்.

கிருஷ்ணன் — கனி தருங்காலத்திற்குப் பின் மரம் மாண்டு போகிறதே, பின்னர் அது விருத்தியாவது எங்ஙனம் ?

ராமன் — வாழைத் தோட்டத்துக்கு ஒருகாலும் நீ சென்றதில்லையோ ? தோட்டத்தினுள் பெரிதும் சிறிதுமான அநேக கன்றுகள் வேரினின்று தளிர்த்து அடர்ந்திருப்பதை நீ ஒருகாலும் பார்த்ததில்லையா ?

கிருஷ்ணன் — ஓகோ, நான் பார்த்திருக்கிறேன். அப்படி அப்படித்தான் மரங்கள் விருத்தியாகின்றனவோ ? இப்பொழுதுதான் அறிந்தேன்; வாழை மரத்தின் பிரயோஜனங்கள் பெரும் பாலும் நானறிந்தவைகளே. அதைப்பற்றிச் சொல்லவேண்டுவதில்லை.

ராமன் — சரி, அது இருக்கட்டும். வாழை மரத்தினின்று நாம் ஒரு விஷயம் கற்றுக் கொள்ளலாம், சொல்ல வேண்டுமா ?

கிருஷ்ணன் — என்ன ! சொல்ல வேண்டுமா என்று கேட்கிறாய் ? அதுதானே விசேஷம்.

ராமன் — வாழைமரம் தான் கெட்டுப்போன காலத்திலும் ஒரு தர்ம காரியமாக இதர வாழைகளைப் பிறப்பிக்கிறது. அதுபோல, பெரியோர்கள் தாங்கள் வறுமையிலோ பிணியிலோ அல்லது வேறெந்த துன்பத்திலோ கெட்டுப்போன காலத்திலும் தருமம் செய்யப் பின் வாங்கமாட்டார்கள்.

கிருஷ்ணன் — காலமாகிறது எனக்கு, அண்ணா காலத்தினருமை நோக்காது இப் பெரும்பாடத்தைச் செவ்வனே புகட்டின உங்களுக்கு என் மனமுவந்த வந்தனம்.

ராமன் — மெத்த சந்தோஷம். வந்தனம்.

JAMES G. SUNDRAM,
C. M. S. Higher Grade Elementary School,
Satankulam, South Tinnevelly.

PANCHATANTRAM

பஞ்சதந்திரம்

சுகிர்லாபம்

தேன்புரண் டோடும் வான்றுறை யாறும்
கோதா வரியென் றோதா நிற்கும்
கானா றதனின் கரையா மருகில்
வானோர் நிமிர்ந்து வளம்பெற வளர்ந்து
தன்னிக ரற்ற வன்னிமர மொன்றில்
காகம் ஒன்று பேரகம் ஈட்டி
கண்ணிற் கண்ட கனிகளைத் தின்று
விண்ணிற் பறந்தும் மண்ணிற் றிரிந்தும்
காலம் முழுதும் சாலவே போக்க
கண்டா னொருநாள் திண்டோள் வலியனை
காலன் நிகர்த்த கோலைத் தாங்கி
கொலையைப் புரியும் வலையைக் கொண்டும்
வேடனா மொருவன் காடதா மங்கே
மனையைத் திருத்தித் தினையைத் தூவி
முளையை யறைந்து வலையை விரித்து
செடியின் மறைவில் நொடியிற் புகுந்தான்
கடிதோர் போழ்தில் கபோத ராஜனும்
சித்திரக் கிரீவனென் றுத்தமப் பெயரினோன்
பரிவா ரத்துடன் துணிவாய் வந்திட
கண்டா னிரையை விண்டான் றனக்கு
மானிட ரில்லாக் கானக மதனில்
தானிய மேது? தானிய மேது?
ஆனதா லிதனை யாலோ சிப்பேன்
என்றே தனக்குள் நன்றே நினைத்துச்
சேனையுந் தானும் மோனமாய் நிற்க
மட்டியா மொருவன் தட்டியே பேசிக்
கபோத ராஜனின் கட்டளை மீறி

விண்ணைத் துறந்து மண்ணிற் புகுந்து
சுற்றமுந் தானும் பற்றவே யிரைக்கா
அந்தோ! அந்தோ! அடைந்தன வலையை
தன்பரி வாரம் துன்புறக் கண்ட
கபோத ராஜனும் கழுத்தழ குள்ளோன்
தான்தனி நின்று தவிப்பதில் பயனில்
என்றிவ் வாறு இரங்கிய மனத்தனாய்
சென்றுதான் வலையில் ஒன்றியே நிற்க
இன்றினிச் செய்வதென் எந்தையை யுன்னி
எண்ணம் ஒத்து விண்ணிற் பறப்போம்
திண்ணிய வேடன் கண்ணிற் படாமலே
என்றிவ் வாறு இயம்பவே யரையன்
ஒண்ணிறக் கபோதம் விண்ணிற் பறந்தன.

எஸ். கிருஷ்ணன்,
தமிழ்ப் பண்டிதர், இந்து செகண்டரிஸ்கூல்,
மானாமதுரை.

TRAVEL

யாத்திரை

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போதல் யாத்திரையாம். யாத்திரை, பிரயாணம் என்பன ஒரு பொருட் சொற்கள். பயணம் என்ற பதத்தை 'யாத்திரை' என்பதற்குப் பதிலாக உபயோகித்தலும் உண்டு.

காலத்தின் அருமை யறிந்த மேனாட்டார், எவற்றையும் ஓல்லையில் திருந்தச் செய்யும் பொருட்டு, தரைமீதும், விரிந்த கடல்மீதும், பரந்த ஆகாயத்தின்மீதும் யாத்திரை செய்வதிலும் தமது அந்நிய நாட்டார் கண்ணுங் கருத்துங் கவரும்படியான விசித்திரப்பாடுள்ள பற்பல இயந்திரங்களைக் கண்டுபிடித்துள்ளார். அவற்றுள், ஆகாயத்தில் வெகு தூரம் பறப்பதற்கு ஏற்ற கருவியான — 'பலூன், ஏரோப்ளேன்' — என்ற ஆகாயக் கப்பல்களே சாலவுங் குறிக்கத்தக்கவை. தரைமீது யாத்திரை

செய்வதைக் காட்டிலும் விரிகடல் யாத்திரை செய்தலால் அதிக காலத்தை வீணே கழிக்கின்றோமில்லை. அக்கரையிலுள்ள இரங்கூனுக்குத் தரைமீது போவதைக் காட்டிலும் கடல்மீது போவதால் எவ்வளவு சீக்கிரம் போய்ச் சேர்கின்றோம் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? அதனிலும் எவ்வகையாலும் அதிசயிக்கத்தக்கது ஆகாய யாத்திரையேயாம். குறைந்தமணி நேரத்தில் நிறைந்த பல மைல்களை சிறந்த நம் செலவுச் சுருக்கால் தற்போது யாத்திரை செய்வது இந்த நூற்றாண்டின் மகிமையைக் கரதலாமலகம் போன்று இனிது தெரிவிக்கின்றது.

யாத்திரையா லுண்டாகும் பயன்கள் வாசாமகோசரம், பல வளஞ் செறிந்த பல வேறு தேயங்களில் வல்லமை மிக்க நல்ல சூடிமக்கள், பன்னெடும் பகலெலாம் பயின்ற பான்மையால் செய்து முடித்துள்ள எண்ணிறந்த காரியங்களின் சிறப்பையும், ஆகாயத்தை அளாவிய கட்டடங்களையும், அவர்களது நடையுடை பாவனை, வன்மை, குணங்கள், இராஜாங்க முறைமை முதலிய அருமையறிந்த பெருமையையும் யாத்திரையாலன்றி வேறு எவ்விதத்தால கண்டு களிகூருவது? சர்க்கரை யென்று ஓர் கடிதத்தில் எழுதி, அப்பதத்தை நக்கினால், எங்ஙனம் இனிக்காதோ, அங்ஙனமே சிறந்த வித்வான்களால் எழுதப்பெற்ற புத்தகங்களை மாத்திரம் வாசித்து நானுவித ஜனங்களின் தன்மையை யறிந்து கொள்வது நீர்மேலெழுத்திற்கு நேர்.

S. V. விவேகாநந்தா.

LESSON FROM SIMPLE NATURAL PHENOMENA — A LESSON FROM THE STARS

நக்ஷத்திரங்களினால் அறியக்கூடிய பாடம்.

1. Indroduction

(1) கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நாலு திக்குகளும் நாலு திசைகள் எனப்படும். நடுப்பகல் 12 மணிக்கு சூரியனுக்கு முதுகு காட்டி நின்றால் முன்பக்கம் வடக்கு, இடதுகைப் பக்கம் மேற்கு, வலதுகைப் பக்கம் கிழக்கு.

(2) மத்தியான மட்டுமல்ல, சூரியன் அஸ்தமிக்கிற சாயங்காலத்திலும் உதிக்கிற காலையிலும் இந்நான்கு திசைகளையும் கண்டறியலாம். காலையில் சூரியனுதிக்கிற திசையில் வலதுகையிருக்கும்படி இருகைகளையும் பக்கங்களில் நீட்டி நின்றால் வலதுகைப்பக்கம் கிழக்கு, இடதுகைப் பக்கம் மேற்கு, முன்பக்கம் வடக்கு, பின் பக்கம் தெற்கு.

(3) மாலையில் சூரியன் அஸ்தமிக்கிற திசைப் பக்கத்தில் இடதுகை யிருக்கும்படி இருகைகளையும் நேராக நீட்டி நின்றால் இடதுகைப் பக்கம் மேற்கு, வலதுகைப் பக்கம் கிழக்கு, முன்பக்கம் வடக்கு, பின் பக்கம் தெற்கு.



நடுப்பகலில் சூரியனைப் பார்த்து நின்று திசைகளை அறிதல்

II. Charles's Waein — (1) சந்திரனும் நக்ஷத்திரங்களும் இரவில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் இரவும் பகலும் பூராவும் வானத்திலேயே யிருக்கின்றன. அவைகளின் வெளிச்சம் சூரிய வெளிச்சத்தைவிட மிகவும் குறைந்தது. ஆதலால் அவைகள் நமக்குப் பகலில் கண்ணுக்குத் தெரிகிறதில்லை.



சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஆகாயத்திலிருப்பது.

(2) ஆகாயத்தின் ஒன்றுக்கொன்று சமீபத்தில் ஏழு பெரிய பிரகாசமுள்ள நக்ஷத்திரங்க ளிருக்கின்றன. அவைகள் பார்வைக்கு வண்டியும் குதிரைகளும் போலிருப்பதால் சிலர் அவைகளை வண்டியும் குதிரைகளும் போன்ற நக்ஷத்திரங்க ளென்றும், (Waggoner), சிலர் அவைகள் ஏர்போலவும் அதன் கைப்பிடி போலவு மிருப்பதால் கலப்பை போன்ற நக்ஷத்திர மென்றும், சிலர் நீண்டவாலுடன் கூடின கரடிபோ லிருப்பதால் பெரிய கரடி நக்ஷத்திர மென்றும் (The Great Bear) சொல்லுகிறார்கள். ஆனால் இவை முக்கியமாய் ஏழு நக்ஷத்திரங்கள் சேர்ந்த கூட்டமா யிருப்பதால் சப்தரிஷி நக்ஷத்திரங்கள் எனப்படும், இதில்தான் திசை காட்டிக ளிருக்கின்றன.

3. நடுப்பகல் 12 மணியில் சூரியனிருக்கிற பக்கமாகிய தெற்குப் பக்கம் முதுகு காட்டி நின்று வானத்தை நிமிர்ந்து பார்த்தால் அவ்விடத்தில் ஏழுநக்ஷத்திரங்களு மிருக்கும். கோடையானாலும் மழையானாலும் எக்காலத்திலேயும் இந்த நக்ஷத்திரக் கூட்டம் வடக்கு திசையிலேயே யிருக்கும். ஆனால் குளிர்காலத்தில் கோடை காலத்தைவிடச் சிறிது தாழவிருக்கும்.



III. Pointers

(1) குதிரை வண்டிபோ லிருக்கும் சப்த ரிஷி நக்ஷத்திரங்களில் (U. B.) உட்காரும் பாகம்போல நாலு நக்ஷத்திரங்கள் (A B C D) இருக்கும்.

(2) அவைகளின் பின்பக்கத்தில் இரு நக்ஷத்திரங்கள் (B C) இருக்கும்.

(3) இவைகளை (B C) துருவ நக்ஷத்திரத்தைக் காட்டுகின்றனவாதலால் இவைகள் (B C) காட்டி (Pointers) எனப்படும்.

IV. Pole Star

(1) காட்டியின் (B C) அடிப்பாக மூலமாய் நேராக அவைகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரத்தி லிருக்குமோ அவ்வளவுக்கு ஏழுபங்கு தூரத்திலும், வட அடிவானத்திற்கு (XY) 13°க்கு மேலேயும் பார்த்தால் ஓர் நக்ஷத்திரம் (P S) காணப்படும்.

(2) அந்த இடத்தில் பல நக்ஷத்திரங்க ளிருப்பினும் (P S) அது மற்ற நக்ஷத்திரங்கள் எல்லாவற்றிலும் பெரியதாயும் அதிகப் பிரகாசமுள்ளதாயுமிருக்கும். அதுதான் வட நக்ஷத்திரம் அல்லது துருவ நக்ஷத்திரம் (Pole Star) என்று சொல்லப்படும். அது இருக்குமிடம் வட பாகம். துருவ நக்ஷத்திரமாகிய இதை சப்த ரிஷி நக்ஷத்திரங்கள் சுற்றும்.

V. The use of knowing this.

(1) சப்த ரிஷி மண்டலத்தினுதவியால் காட்டிகளையும், காட்டியின் உதவியால் துருவ நக்ஷத்திரத்தையும், துருவ நக்ஷத்திரத்தின் உதவியால் வடக்கு திசையையும் கண்டுபிடிக்கலாம். பின் மற்ற திசைகளை இலேசாய் அறியலாம்.

(2) துருவ நக்ஷத்திரத்தைப் பார்த்து நின்று கொண்டு இரு கைகளையும் பக்கங்களில் நீட்டினால் பின்பக்கம் தெற்கு, வலது பக்கம் கிழக்கு, இடக்கைப் பக்கம் மேற்கு.

(3) பகலில் சூரியனுதவியால் திசைகளை அறிவது போல இரவில் சதா கப்பல்களிலேயே யிருக்கும் கப்பலோட்டிகளுக்கு திசைகளை யறிந்து கப்பலை நடத்த இந்த துருவ நக்ஷத்திரம் மிகவும் உதவியா யிருக்கின்றது.

(4) இது பூமியின் வடபாதி புருண்டையி லிருப்பவர்களுக்கே மிகுதியும் உபயோகமானது.

VI. Summary of the Lesson.

(1) சூரியன் இல்லாததான இரவில் மப்புமந்தார மில்லாமலிருக்கும் பொழுது நான்கு திசைகளையும் கண்டறிய வட நக்ஷத்திரம் உதவி செய்கிறது.

(2) வட நக்ஷத்திரத்தைக் கண்டு பிடிக்க சப்த ரிஷி நக்ஷத்திரங்களைப் பார்க்கவேண்டும். இது பிரகாசமுள்ள ஏழு நக்ஷத்திரங்களாலானது.

(3) துணியிலிருக்கப்பட்ட வண்டி நகூத்திரங்கள் இரண்டும் வடக்கு நகூத்திரத்தைக் காட்டுகிறபடியால் குறி காட்டி (Pointers) என்று சொல்லப்படும்.

T. A. EGYAMIAR,
Headmaster, Board School, Kalugumalai,
and Secretary, Teachers' Association,
Kalugumalai.

PHYSIOLOGY

தேக தத்துவ சாஸ்திரம்

தேகத்தின் அவயவங்களைப் பற்றியும் அவைகளின் செயல்களைப் பற்றியும் தெரிவிக்கும் சாஸ்திரம் தேகதத்துவ சாஸ்திரமாம்.

முதுகெலும்புள்ள ஜீவப்பிராணிகட்கு அதிகமான உடற் கூறுகளுண்டு. உதாரணம், மனிதன்.

எலும்புகளா லுபயோகமென்ன? பிராணிகளின் உடலைத் தாங்குவதற்கு மிக முக்கியம். இவ்வெலும்புகள் இருநூறுக்கு மேலுள்ளன. மிருகம், பட்சி முதலானவற்றிற்கு பலத்தையும் உறுதியையுந் தருகின்றன. பருமன், ஆகிருதி, உருவம் இவைகளைக் கொடுக்கின்றன.

சிலவற்றிற்கு எலும்புகள் தசைக்குள் அமைக்கப்பட்டுள்ளன. (உ-ம்) மனிதன், மாடு, சிலவற்றிற்கு தசைக்கு வெளியிலிருக்கின்றன. நண்டு, நத்தை, சிலவற்றிற்கு உள்ளும் புறம்புமாக அமைந்திருக்கின்றன — (உ-ம்) ஆமை.

எலும்பு எவைகளா லாக்கப்பட்டது?

Phosphate of lime — என்னும் சுண்ணாம்பும் Geletine என்னும் வச்சிரத்தைப் போன்ற ஒரு வஸ்துவும் சேர்த்தாக்கப் பட்டது. எலும்பிலுள்ள சுண்ணாம்பிற்காகவே அதை எருவாக உபயோகிக்கிறார்கள்.

வயது முதிர்ந்தவர்க்கு எலும்புகள் சுண்ணாம்பு அதிகப்பட்டு உறுதியாக இருப்பதால் முறிந்தால் கூடுவது கஷ்டம்.

குழந்தைகளுக்கு எலும்பு மிருதுவாக விருப்பதால் வளையுமேயன்றி சீக்கிரம் முறியாது. குருத்தெலும்புகளாதலால் முறிந்தாலும் சீக்கிரம் கூடும்.

SKELETON OF THE BODY — எலும்புக் கூடு

Bones — நீள எலும்புகள் — கை, கால், தொடை, தோள்.
தட்டை எலும்புகள் — தலை, இடை.
விரூப எலும்புகள் — கணுக்கால், கணுக்கை, முள்ளந்தண்டு.

எலும்புக்கூடுகள் 3. அவை—(1) தலை (2) உடல் (3) அவயவங்கள் கை, கால்.

தலை எலும்புகள் இருவகைப்படும் — கபாலம், முகம்.
கபால எலும்புகள் எட்டு, தலை எலும்புகள் பதினான்கு.

Teeth — பற்கள்	...	...	32
முன்பற்கள் ...	...	...	8
கோரைப் பற்கள்	...	...	4
கடைவாய்ப் பற்கள்	...	...	8 சிறியது
,, ,,	...	...	12 பெரியது
			32

சிறுவர்க்குப் பெரிய கடைவாய்ப் பற்கள் கிடையா. ஆகையால் (32—12) 20 பற்களே சிறுவர்க்கு உள்ளவை.

பற்களின் உபயோகம் —

ஆகாரத்தை மெல்லவும், எழுத்துக்களை நன்றாய் உச்சரிக்கவும் உதவுகின்றன

BODY — உடல்

முதுகெலும்பு அல்லது முள்ளந்தண்டு உடலைத் தாங்குகிறது. இது 26 சிறு எலும்புகளால் ஆக்கப்பட்டுள்ளது. 7 தலையைத் தாங்க கழுத்தில் 12 விலாவெலும்புகளுடன் பொருந்தியுள்ளன. 5 இடுப்பைத் தாங்குவன. மீதி முதுகெலும்பினடியிலுள்ளன. முதுகெலும்புகளின் னிடையில் மூளந்தெனும் குருத்தெலும்புகளுண்டு. இவைகளால் குனிய நிமிர அநுகூலமாக இருக்கிறது.

விலாவெலும்பு பக்கத்துக்கு 12 வீதம் (12+12=) 24 இருக்கின்றன.

PARTS OF THE BODY

அவயவங்கள்

முன் புஜம் 2
முன் கால் 2
மேல் புஜம் 1
மேல் கால் 1
} 6 எலும்புகளுள்ளன.

கை விரல்கள் 3×4 = 12
கட்டை விரல்கள் = 2
உள்ளங்கை = 5
பூட்டண்டை = 8 ஆக 27.
மொத்தம் 27+6=33 தண்டெலும்புகள்

கையைப் போலவே காலிலும் எலும்புகளுண்டு. பூட்டண்டை 7 ஆகையால் கையில்விட காலில் அதாவது பாதத்தில் ரு எலும்பு குறைவு. நடுத்தர மனிதன் உடலிலுள்ள எலும்புக்கு 25 பவுன் எடை இருக்கும்.

மூட்டுகள் — எலும்புகள் சேருமிடம் பூட்டு அல்லது மூட்டு எனப்படும். இவை மூவகைப்படும்.

1. கீல்மூட்டு (Hinge-Joint) — முழங்கை, மணிக்கட்டு, விரல், முழங்கால்.

2. பந்து கிண்ணம் (Ball and socket Joint) — தோள், தொடைச் சந்து.

3. முளை மூட்டு (Pivot Joint) — கபாலம், முள்ளந்தண்டு உச்சியுடன்சேருமிடம். மூட்டுகளில் கூடுகிற எலும்புகளின் நுனிகள் தேயாம லிருக்க மழமழவென ஒரு வஸ்து உண்டு. அதற்கு மூருந்து அல்லது குருத்தெலும்பு என்று பெயர்.

இவற்றை சவ்வு மூடிக்கொண் டிருக்கிறது. இதை கீல் சவ்வு (Synovial Membrane) என்கிறோம். இவ்விலிருந்து கிண கெய் அல்லது கீல் எண்ணெய் வரும். இதனால் எலும்புகள் உறைந்து தேயாம லிருக்கின்றன.

கீல் எலும்புகளின் முனைகள் புரளாம லிருக்க ஒருவித வலிய வெண்மையான கயிற்றால் கட்டப்பட்டுள்ளன.

C. D. SINGAM.

FOOD

ஆஹாரம்

1. ஒவ்வொருவரும் ஆஹாரம் உட்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கின்றதென்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், ஏன் உட்கொள்ள வேண்டுமென்பதை ஆராய்ந்து அறிபவர்கள் சிலரே. நம்முடைய தேகத்தில் பற்பல பாகங்களும் வேலை செய்துகொண்டே இருக்கின்றமையால் தேய்ந்து மெலிந்து போகின்றன; இத்தப் பரிக்ஷயம் (wear and tear) எப்பொழுதும் இடைவிடாது நடந்துகொண்டே யிருக்கிறது. இப்படிக் குறைந்துபோகும் பதார்த்தத்திற்கு ஈடு செய்யவேண்டியது அவசியமல்லவா? இது, ஜீர்ணித்து உதிர்ந்து போகும் சுவருக்கு மண்ணும் சுண்ணாம்பும் பூசுவதுபோலாகும். இப்படி ஈடு செய்வதற்கே நாம் உணவு உட்கொள்ளுகிறோம்.

2. அதுவல்லாமல், தேகம் வளர்ச்சி யடைவதற்காகப் புதிய பதார்த்தங்களை அப்போதைக்கப்போது நாம் தேகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. தேகம் வளர்ச்சி யடைந்தாலல்லாமல் பருத்துப் பலமா யிருக்காது. ஆகலால், எதாவது ஒருவிதமான ஆஹாரம் புசிக்கவேண்டும்; அது புஷ்டி தரத்தக்கதாய் இருக்க வேண்டும். தேகம் எப்பொழுதும் வளர்ந்துகொண்டே இராது. ஏறக்குறைய 40 வயது வரையில் வளர்ச்சி பெறும்; அதற்குப் பிறகு உட்கொள்ளும் உணவின் அளவு வரவரக் குறைவாகும்.

3. நாம் உட்கொள்ளும் உணவு நமது தேகத்தில் ஊறுகிற ஐந்துவகை ரஸங்களினால் நன்றாய் ஜீர்ணிக்கப்படுகிறது. அந்த ஐவகை ரஸங்களாவன — 1. உமிழ் நீர் (Saliva) 2. குகூஷி நீர் (Gastric juice), 3. பித்த நீர் (Bile), 4. கணைய நீர் (Panoreatic juice), 5. குடல் நீர் (Intestinal juice).

4. மேற்சொல்லிய ஐவகை நீர்களுள் உமிழ் நீர் என்பது வாயில் ஊறுகின்றது; குகூஷி நீர் என்பது வயிற்றில் (இரைப்பையில்) ஊறுகின்றது; பித்த நீர் என்பது ஈரல் குலை (Liver)யிலுள்ள பித்தாசயத்தில் (Gall bladder) ஊறுகின்றது; கணைய நீர் என்பது மண்ணீரலுக்கு (Spleen) அருகிலுள்ள கணையத்தில்

(Pancreas) ஊறுகின்றது; குடல் நீர் என்பது மணிக் குடலில் (Smaller Intestines) ஊறுகின்றது.

5. ஆஹாரம் முக்கியமாய் மூன்று வகைப்படும். அவையாவன — 1. பசை வகை (Starch food), 2. கருவகை (Albumin food), 3. கொழுப்பு வகை (Fat food), நெய், எண்ணெய் முதலியன). இவற்றுள், பசை வகை யாஹாரம் உமிழ் நீரினால் ஜீர்ணமாகின்றது; கரு வகை யாஹாரம் குகூழி நீரினால் ஜீர்ணமாகின்றது; கொழுப்புவகை யாஹாரம் பித்த நீரினாலும் கணைய நீரினாலும் ஜீர்ணமாகின்றது. இந்த நால்வகை நீர்களினாலும் முற்றும் ஜீர்ணிக்கப்படாத மூவகை யுணவுப் பாகங்களும் குடல் நீரினால் நன்றாய் ஜீர்ணிக்கப்படும்.

6. உணவு வகைகளையும், அவற்றை ஜீர்ணஞ் செய்யும் நீர்களையும் ஓர் அட்டவணையாகத் தொகுத்துக் காட்டுவோம் —

Digesting Juices ஜீர்ண ரஸங்கள்	Chief classes of food முக்கியமான உணவு வகைகள்	Remarks வசா
1. Saliva உமிழ் நீர்	1. Starch food பசை வகை யுணவு	
2. Gastric juice குகூழி நீர்	2. Albumin food கரு வகை யுணவு	
3. Bile பித்த நீர்	3. Fat food கொழுப்பு வகை யுணவு	
4. Pancreatic juice கணைய நீர்		
5. Intestinal juice குடல் நீர்	—	மற்ற நீர்களினால் முற்றும் ஜீர்ணமாகாமல் தங்கியிருக்கும் உணவுப் பாகம் குடல் நீரினால் ஜீர்ணிக்கப்படும்

7. ஜீர்ண காரியம் முதன் முதலில் வாயிலே தொடங்குவதால், எந்த உணவுப் பொருளையும் நன்றாய்மென்று உமிழ் நீருடன் கலக்க வேண்டும்; முக்கியமாய்ப் பசைவகை யுணவுகளை நன்றாய் மெல்ல வேண்டும். உணவு வாயில் அதிக நேரம் இருக்கால், இரைப் பையில் அதிக நேரம் இருக்கவேண்டி வராது. அதாவது, ஜீர்ண காரியம் முக்கால்வாசி வாயிலேயே நடந்து விடும்; ஆதலால், இரைப் பை செய்ய வேண்டிய வேலை கொஞ்சமாய் இருக்கும்.

8. சிரஞ்சீவிகளென வெகு காலம் திட சரீரத்தோடு ஜீவித்திருந்த பெரியோர்க ளெல்லாரும் உணவை விழுங்குமுன் நன்றாய் மென்று தின்றவர்களே. அறை குறையாக மென்ற உணவை விழுங்குவதனால், அதனை ஜீர்ணஞ் செய்யும் வேலை முழுதும் இரைப் பையே செய்ய வேண்டியதாகிறது; இப்படி அதிக வேலை செய்வதனால் அந்த உறுப்பு பலவீனப் படுகின்றது.

9. அதுவன்றி, பசைவகை உணவை ஜீர்ணஞ் செய்ய வேண்டுமானாலும், சர்க்கரையாக மாற்ற வேண்டுமானாலும் உமிழ் நீரின் உதவியே வேண்டும். அதை நன்றாய் மெல்லாமற் போனால் அது சர்க்கரையாக மாறாமல் வயிற்றுக்குள் இறங்குகின்றது. அங்கே அது ஜீர்ணமாகாமல் தங்கி யிருக்கும்; சர்க்கரை ஜீர்ணமாகுமிடத்திற்கு அது போய்ச் சேருகிறவரையில் அது அழுகி உருக்குலைந்துகொண் டிருக்கும்.

HINTS ON EATING

போஜன விதிக் குறிப்புகள்

1. நிதானமாய்ச் சாப்பிடுவதற்கு நேரமில்லாவிட்டால், அவசரமாய்ச் சாப்பிடுவதை விடக் கொஞ்சமாய்ச் சாப்பிடுவது நல்லது; சிறிதும் சாப்பிடாமலே ஓழிவது அதைவிட நலலது. அவசரமாய் விழுங்குவதற்கு அனுகூலமாய் இருக்கும் பொருட்டே அன்னத்தைக் குழம்பு, ரசம் முதலியவைகளுடன் கலந்து உண்பது கெட்ட வழக்கம்.

2. அப்போதைக் கப்போது உணவருந்தாமல் முற்றும் பட்டினியா யிருப்பது அநேக காரியங்களை உத்தேசித்து மிகவும் நல்லது. அந்தக் காரணங்க ளெல்லாம் ஒருவாறிருக்க, ஜீர்ண யந்திரங்களுக்கு ஒருநாள் ஓய்வு கொடுத்தது போலாகும். தினந்தோறும் கஷ்டப்பட்டுப் பாடங்களைப் படிக்கும் மாணவருக்கு

ஒருநாள் விடுமுறை கிடைத்தால், அவர்களுக்கு எவ்வளவு கொண்டாட்டமா யிருக்கும்? நாள்தோறும் வயலிலும் காட்டிலும் உழைத்து வயிறு வளர்க்கும் கூலிக்காரனுக்கு ஒருநாள் ஓய்வு கிடைத்தால் அவன் எவ்வளவு ஆனந்தப்படுவான்? அதுபோலவே ஜீர்ண உறுப்புக்களும் ஒருபொழுது ஓய்வு கிடைத்தால் மிகவும் சந்தோஷமுற்று மறுபடி வேலை செய்யும்பொழுது உற்சாகத்துடன் உழைக்கும்.

3. சாப்பிடும் வேளையையும், பட்டினி யிருக்கும் வேளையையும் ஒழுங்கு படுத்திக் கண்டிதமாய் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். வழக்கமான வேளை தப்பாமல் சாப்பிட வேண்டும்; வழக்கமான வேளை தப்பாமல் பட்டினி யிருக்க வேண்டும். நமக்கு நம்முடைய யஜமானர் வாரமுறையில்லாமல் வேலை கொடுப்பதும் ஓய்வு கொடுப்பதுமாய் இருந்தால், நமக்கு எப்படி யிருக்கும்? நாம் எதிர்பாராத வேளையில் வேலை செய்யவேண்டி வந்தால், நமக்கு எவ்வளவு கஷ்டமா யிருக்கும்? நாம் வேலை செய்யச் சித்தமா யிருக்கும் வேளையில் வேலை யில்லாமல் ஓய்ந்திறங்க வேண்டுமானால், நம்முடைய ஊக்கம் எவ்வளவு கெட்டுப்போம்? இந்த விஷயங்களை ஆலோசித்துப் பார்த்தால் ஜீர்ணயந்திரங்களுக்கு வேலை கொடுப்பதிலும் ஓய்வு கொடுப்பதிலும் நாம் ஒழுங்காய் இருக்க வேண்டுமென்பது உடனே நமக்குப் போதமாகும்.

4. வேலை செய்யும் வேளையையும், ஓய்வுகொண்டாடும் வேளையையும் ஒழுங்காய் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு, உணவருந்தும் வேளையையும், பட்டினி யிருக்கும் வேளையையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த விஷயத்தில் சிறிதும் குழப்பம் உண்டாகக் கூடாது. வேலை செய்யச் சித்தமாய் இராத வேளையில் நாம் வேலை செய்யவேண்டி வந்தால், அந்த வேலையைத் திருத்தமாயும் சந்தோஷமாயும் செய்யமாட்டோ மல்லவா? அதுபோலவே, ஜீர்ண யந்திரங்களும் கால நிர்ணயமில்லாமல் வேலை செய்ய வேண்டி வந்தால், தம் வேலையைத் திருத்தமாய்ச் செய்யா.

5. ஜீர்ண யந்திரங்களுக்கு அப்போதைக் கப்போது ஓய்வு கொடுக்க வேண்டியது அவசியம் என்னும் உண்மையையும்,

அப்படி ஓய்வு கொடுக்குங் காலம் ஓரே ஒழுங்காய் இருக்க வேண்டும் என்னும் உண்மையையும் நன்றாய் உணர்ந்தே ஆரியர்கள் ஏகாதசி உபவாசம், கிருத்திகை விரதம், அமாவாசை ஒருபொழுது முதலியன ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவர்களுடைய ஆசாரமுறை ஒவ்வொன்றும் இதுபோலவே தேகாரோக்கியத்தின் பொருட்டு விதிக்கப்பட்டதாம்.

6. ஒரே வேளையில் அதிகமான உணவை உட்கொள்ளக் கூடாது. அதனால் இரைப் பை பருத்து, அதன் சக்தியுள்ள மட்டும் நிகழ்ந்துவிடும்; அது முற்றும் நிகழ்ந்துவிட்டால், நன்றாய் ஜீர்ணம் செய்யச் சக்தி யற்றுப்போம். ஜீர்ண காரியம் சரியாய் நடந்தேறாது.

7. ஒருநாளில் பலமுறை உண்பது ஆரோக்கியத்திற்கு ஆனி. அவசரமாய் உண்பதனால் எவ்வளவு நீமை விளையுமோ அவ்வளவு நீமையும் பலமுறை உண்பதனால் விளையும். சிலர் ஒரு தினத்திற்கு 6 வேளை உணவு உட்கொள்ளும் வழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த உணவு சிலவேளை கெட்டிப் பதார்த்தமாகவும், சிலவேளை திரவ பதார்த்தமாகவும் இருக்கின்றது. நம்மவர்களில் சிலர் உணவு உட்கொள்ளும் முறை என்னவெனில், 1. அதிகாலையில் காப்பிக் கஷாயம், 2. பகற் போஜனம், 3. சிற்றுண்டி, 4. தேயிலைக் கஷாயம், 5. ராப் போஜனம், 6. படுக்கு முன் பால். இந்த வழக்கம் மிகவும் கெட்டது, கெட்டது.

8. மேற் சொல்லிய வழக்கத்தை நாகரிகத்திலும் ஐசுவரியத்திலும் மிகுந்தவர்கள் இக் காலத்தில் கைக் கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். யுக்தா யுக்தத்தை அனுசரித்து இந்த வழக்கத்தைக் கூடியமட்டும் தடுக்க வேண்டியது. வாலிபத்தில் மூன்று வேளைச் சாப்பாடும், அபர வயதில் இரண்டு வேளைச் சாப்பாடும் எல்லாருக்கும் போதுமானதா யிருக்கும். அப்படிச் சாப்பிடுவது வேளை (நேரம்) தவறாமல் சாப்பிட வேண்டும். "ஒருவேளை உண்பவன் யோகி, இரண்டு வேளை உண்பவன் போகி, மூன்று வேளை உண்பவன் ரோகி" என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. ஆனால், இக் காலத்துத் தொழில்களையும் நடவடிக்கைகளையும், வியவஹாரங்களையும், பதார்த்தங்களின் சத்துக் குறைவு முதலிய பல சந்தர்ப்பங்களையும் கவனிக்கு மிடத்து, பூர்வ வய-

துக்காரர்கள் தினந்தோறும் மூன்று வேளை புசிப்பது இக்காலத்தில் ஏற்குமென்று தோன்றுகிறது.

9 உட்கொண்ட உணவு இரைப் பையில் ஜீர்ணமாவதற்கு மூன்று மணி முதல் 4 மணி வரையில் செல்லுகின்றது. ஏழு நாழிகையில் குடலில் உணவு பூர்த்தியாய் ஜீர்ணமாகிற தென்று ஆரியர்கள் சொல்லுவார்கள். மேற்றிசை சாஸ்திரிகள் சொல்லுவதும் ஏறக்குறைய அவ்வளவே ஆகின்றது. நன்றாய் ஜீர்ணமான பிறகு, ஒரு மணி நேரமாவது இரைப் பைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். ஆதலால், ஒருமுறை உண்ட பிறகு, நாலு அல்லது 5 மணிநேரத்திற்குப்பிறகே மற்றொருமுறை புசிக்கலாம்.

10. காலையில் 9 மணிக்கு நல்ல சாப்பாடும், பகல் 2 மணிக்கு உபாயமான உணவும், இரவில் 7 அல்லது 8 மணிக்குச் சாப்பாடும் கொள்வது நியாயமான ஏற்பாடாகும். சாப்பாட்டு வேளைகளுக்கு இடை நேரத்தில் பக்ஷியங்கள் (சிற்றுண்டிகள்) தின்பதும், லவங்கம் முதலியன மெல்லுவதும், வெற்றிலையும் பாக்கும் அடிக்கடி போட்டுக் கொள்ளுவதும் சரியன்று; இந்த வழக்கம் மிகுந்த தீமை பயக்கும். இரைப் பை எப்பொழுதும் உணவை அரைத்துக் கொண்டே இருக்க வேண்டுமென்று நாம் எதிர் பார்ப்பது தகுமா?

11. அதுவல்லாமல், முதலில் உண்ட உணவு அறை குறையாய் ஜீர்ணமாகிக்கொண் டிருக்கையில், புதிய உணவு உட்கொண்டால், இரைப் பை நிலைபுரண்டு வயிற்றில் வலியுண்டாக்குகின்றது. ஆனல், அடிக்கடி உண்ணும் தீய வழக்கத்தை விட்டொழிக்காமல் மேலும் மேலும் பிடிவாதமாய் உணவருந்தினல், இரைப் பை தன்னுடைய வேலையைச் செய்வதில் மந்தப் படுகின்றது. அதை எழுப்பி ஊக்கமூட்டுவதற்குக் காரமான மருந்துகளைத்தின்ன வேண்டியதாகும். அந்த மருந்துகள் இரைப் பைக்கு அனுவசியமாய் ஏற்பட்ட தொந்தரவே யல்லவா? இவ்வாறு விடாமல் இரைப் பையைத் தொந்தரவு செய்துகொண் டிருந்தால் அது வெறுப்புற்று, சரியாய் ஜீர்ணம் செய்யாமல் உணவைக் கீழே தள்ளி விடுகின்றது; அதனல், மலபந்த ரோகம் உண்டாகின்றது.

(இன்னும் வரும்)

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of "the Arya," Madras

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 10 | 1915 வது மேமீ | மாதம் 12

TOLSTOY AS A SCHOOLMASTER

டால்ஸ்ட்டாய் — ஓர் உபாத்தியாயர்

Tolstoy's Later Views

டால்ஸ்ட்டாய் பிற்காலத்தில் கொண்டிருந்த அபிப்பிராயங்கள்

வித்தியா விஷயமாக டால்ஸ்ட்டாய் கொண்டிருந்த நூதன அபிப்பிராயங்கள் பிரசித்தி பெறுவதற்கு வெகுநாள் முன்னமே அவை அவர் மனத்தில் கருப்போல் கொன்றி யிருந்தன. 1862-ம் வருஷத்தில் அவர் எழுதின கடிதம் ஒன்று பிறகு வெளிவந்தது. அதனல் நெடுங்காலத்திற்கு முன்பே அவ் வபிப்பிராயங்கள் அவருக்கு ஏற்பட ஆரம்பித்தன வென்று நன்கு தெரிகிறது. போதனை விஷயமாய் அவர் முக்கியமாக வற்புறுத்தின

தெல்லாம் யதேச்சை என்னும் ஒரு சொல்லில் அடங்குகிறது. உலக வாழ்க்கையில் ஈடுபடும் மானிடர் யாவர்க்கும் யதேச்சை எவ்வளவு அவசியமோ அவ்வளவு பாடசாலையிற் பயிலும் மாணவர்க்கும் அவசியம் என்று எண்ணுகிறார். ஏனெனில் சிறுகாலையிலேயே அவ்வரிய குணத்தில் பழகி அதைக் கையாடாவிடில், பிறகு அவர்கள் அதை உள்ளவாறு உணராமலே இழக்கவும் நேரிடுமன்றோ?

முதலில் பாடசாலைகளில் காலவரையறை ஏற்படுத்திக்கொள்ளும் விஷயமாக, அவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது உபாத்தியாயர்களின் கடமை என்று பொதுவாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றாலும், அது ஒரு பெரிய நிர்ப்பந்தமாகப் பிள்ளைகளுக்கு ஏற்படலாகாது என்கிறார். பாடசாலைக்கு வருவதும் அகை விட்டுப் போவதும் மாணவர்களின் யதேச்சையை அநுசரித்தே இருக்கவேண்டுமாம். சாதாரணமாகப் பாடசாலையில் தங்குவது பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தைத் தரவேண்டுமாம்.

அப்போது அவர்கள் தாமாகவே காலத்தில் வந்து போவார்களாம். அவ்வாறில்லாத பாடசாலைகள் அவைகளில் போதிக்கும் உபாத்தியாயர்களின் குறைவையே குறிக்கும் என்கிறார். பிள்ளைகள் தாமாக காலத்தில் பாடசாலைக்கு வருவதுதான் விசேஷ நன்மையைக் கொடுக்கும் என்பதற்கு உதாரணமாக பசித்தபோதே புசிக்க வேண்டும் என்னும் நியாயத்தை எடுத்துக் காட்டுகிறார்.

வேறு காரணங்களைக் கொண்டும் யதேச்சை சிறுவர்களுக்கு அவசியம் என்பதை வற்புறுத்துகிறார்.

ஒரு வகுப்பில் புத்திகூர்மையுள்ள பிள்ளைகள் மற்றவரைப் புறங்கண்டு சிறக்கவேண்டுவது அவசியம். யதேச்சை இருந்தாலன்றி எந்தக் குழந்தையின் மனம் எந்த விஷயத்தில் இயற்கையான பற்றுடையதாயிருக்கிறது என்பதைக் கண்டறிய முடியாது. அன்றியும் குழந்தைகள் சிறுவயதிலேயே பாடசாலையில் யதேச்சை என்னும் அரிய குணத்தில் பழகாவிடில், வயது வந்த பிறகு அவர்கள் அதை எப்படி உணர்ந்துகொள்வது! படிக்குங்காலத்தில் பிறர் தம்மை அடக்கியாள்வதே வழக்க-

மாகப் பழகிவிட்டால், பிறகுங்கூட அவர்கள் அதை ஓர் அத்தியாவசியகமான விஷயமாகக் கொள்ளுவார்கள் அன்றோ? பிள்ளைகள் எதைக் கற்க விரும்புகிறார்களோ அதை அவர்களுக்குப் போதிப்பதே நாம் முக்கியமாகச் செய்யவேண்டிய காரியம். நாம் சரியான மாதிரியில் அவர்களை வளர்க்கும் பக்ஷத்தில், வெகு சிறு குழந்தைகளும் தாமே தம் பாடங்களைக் கற்க ஆவல்கொள்வார்கள். அதுவுமன்றி அவர்களே காலத்தில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வார்களாம். ஒருநாள் ஒரு வகுப்பில் போஜனம் ஆனவுடன் ஒரு பாடம் நடந்ததாம். அதனால் மறுதினமும் போஜனமானவுடன் அதே பாடம் நடக்கவேண்டுமென்று கேட்டார்களாம்.

பிரதிதினமும் தூங்கவேண்டிய 8 மணி நேரம் போக பாக்கியுள்ள 16 மணி நேரத்தில் பாதிகாலம் பிள்ளைகளின் வித்தியா விஷயமாகவே செல்லவேண்டுமென்கிறார். அவர்கள் புத்தி விசாலம் அடைவதற்கான முயற்சிகளில், இடையிடையே ஓய்வு நேரங்களும் விளையாட்டுக்களும் கலந்திருக்கவேண்டுமாம். புத்தி விசாலமடைவதென்றால் என்ன? அதுதான் ஒவ்வொருவனும் தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் பிறருக்காகவும் உழைப்பதும், சுத்தம், கிரமம், முதலிய ஒழுங்குகளை உணர்ந்து கொள்வதும், சமயல் முதலிய முக்கியமான தொழில்களைத் தெரிந்து கொள்வதுமாகிய விஷயங்களே என்று வற்புறுத்துகிறார். மிகுந்த பாதிகாலத்தைப் பாடபோதனைக்கென்று அவர் ஏற்படுத்தி வைப்பாராம். பிறகு ஏழு விஷயங்களை குறிப்பிட்டு, ஒவ்வொரு பிள்ளையையும் அழைத்து அவனுக்கு அவைகளில் இஷ்டமான விஷயம் எதுவோ அதை அவனே தேர்ந்தெடுக்கும்படி விடுவாராம். மேலும் இந்த விஷயமாக டால்ஸ்ட்டாய் பின் வருமாறு கூறுகிறார்.

'நான் இன்னொரு விஷயமும் சொல்லுவேன். அதாவது எவரும் தம் மக்களின் கல்வியின் பொருட்டு நூதனமான விஷயங்களைத் தேடிக்கொண்டு போகவேண்டியதில்லை. ஏற்ற பள்ளிக் கூடங்களை முன்னதாக ஆலோசித்து அறிந்து தேடிக்கொண்டு போவதும், அதற்காக ஊர்விட்டு ஊர்போவதும், உபாத்தியாயர்கள் மாணாக்கர்கள் முதலியவர்களைக் கூட இருக்கும்படி வரவழைப்பதும் ஆகிய இப்படிப்பட்ட விஷயங்கள்

முற்றிலும் அவசியம். சந்தர்ப்பங்கள் எவ்வாறு இருக்கின்றனவோ அவற்றிற் கேற்ப அவைகளை உபயோகப்படுத்திக் கொண்டு, மேல் ஆகவேண்டிய காரியங்களை அதது நேரும் போது, நேரும் வகையில், நேரும்படி விட்டுவிடுவதே உசித மாகும்.

'சித்திரம் சங்கீதம் ஆகிய இரண்டு பாடங்கள் போதிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உண்டு. பியானோ என்னும் வாத்தியத்தை கற்பிப்பது பெருந் தப்பிதமாகும். சித்திரத்திற் போலவே சங்கீதத்திலும் குழந்தைகள் தமக்குச் சமீப சாதகமாக இருக்கும் கருவிகளையே உபயோகிக்கும்படி செய்ய வேண்டும். அதாவது சித்திரம் எழுதப் பழகும்போது சீமைச் சுண்ணும்பு, கரி, பென்சல் ஆகிய சாதாரண வஸ்துக்களை உபயோகப்படுத்துவது போலவே, சங்கீதம் கற்பதிலும் தங்கள் குரலிலையே பாடிப் பழகச் செய்யவேண்டும். இது ஆரம்பத்தில் அனுஷ்டிக்க வேண்டிய கிரமம். போகப் போக யாரேனுஞ் சில பிள்ளைகள் வர்ணம் வைக்கவும் வீணை யுயர்ந்த வாத்தியங்களை வாசிக்கவும் இயற்கையான பற்று உடையவர்கள் என்று ஏற்பட்டால், அப்போது அவர்கள் அவைகளைக் கையாட விடவேண்டும். இம்மாதிரியான வேலைகளில் சில பிள்ளைகளுக்கு இயற்கையான சார்பு உண்டாவது உண்மையே. ஆயினும் அது விரும்பத்தக்க தன்று.

'மேற் சொன்னவாறு இவ் விரு விஷயங்களில் ஆரம்ப போதனைக்கு அநுகூலமாக சில புத்தகங்கள் சில நூதனமாக வெளிவந்துள்ளன.

'பாஷா போதனை விஷயமாக, நாம் எத்தனை பாஷைகள் போதிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதிக நன்மை உண்டு. முக்கியமாக போதிக்க வேண்டியவை பிரெஞ்சு பாஷையும் ஜர்மன் பாஷையுமே. கூடுமானால் இங்கிலீஷும் ஸ்பானிடோவும் கற்பிக்கலாம். ஏதேனும் ஒரு அன்னிய பாஷையைக் கற்பிக்கும்போது சுதேச பாஷையில் பிள்ளைகள் படித்திருக்கிற புத்தகங்களின் மொழிபெயர்ப்புக்களைப் படிக்கச்செய்வது நலம். அவ்வாறு கற்கும்போது அப்போதைக்கப்போது அவர்கள் படிக்கும் விஷயத்தைச் சற்றேறக்குறையக் கண்டறிந்தார்களா

வென்று தெரிந்துகொண்டு மேலே படிக்கச் செய்யவேண்டும். பிறகு முக்கியமான பதங்களையும் அவற்றின் பாகங்களையும் இலக்கணப் புணர்ச்சி விகாரங்களையும் கவனிக்கச் செய்ய வேண்டும்,' என்று விரிவாக எழுதியிருக்கிறார்.

பத்திராதிபர்.

LESSONS FROM COMMON OBJECTS

A LIQUID METAL — MERCURY

பாதரசம்

I. Properties (Like Water) — (1) ஓடக் கூடியது. (2) பரப்பை ஒரே மட்டத்தால் நிலை நிறுத்தக் கூடியது. (3) வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தின் உருவத்தை யடைவது, திட்டமான உருவமுடையதல்ல. (4) ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் ஊற்றக் கூடியது. (5) சிறு துளிகளாக சிதறக் கூடியது, மறுபடியும் துளிகள் கூட்டப்பட்டால் கூடி ஒன்று சேரக் கூடியது. (6) தகரம், ஈயம் முதலியவற்றைக் கரைக்கக் கூடியது. (7) சூடேற்றிக் காய்ச்சினால் நீராவியாக மாறும், குளிரப் பண்ணினதும் திரவமாகிவிடும், என்றாலும் சாதாரணமாய் திரவமாகவே யிருக்கும்.

II. Properties (Unlike Water) — (1) ரஸம் வைக்கப்பட்ட பாத்திரத்திலாகிலும், ஊற்றப்பட்ட இடத்திலாகிலும் தண்ணீரைப்போல ஈர அடையாளம் அல்லது தடம் உண்டு பண்ணுது. (2) ஈயத் தட்டின் மேலாகிலும் தகரத் தட்டின் மேலாகிலும் ரஸம் விடப்பட்டால் அது அவற்றுடன் சேர்ந்து விடும்.

III. What Mercury is. (A Meatal) — ரஸம் ஈயத்தைப் போல ஒரு பிரகாசமுள்ள உலோகம். ஈயம் ஜலத்தை விட 11 மடங்கும், ரஸம் ஜலத்தை விட 14 மடங்கும் கனத்ததாதலால், ரஸம் ஈயத்தைவிட கனமானது. ரஸம் பார்வைக்கு சிறிது வெள்ளிபோலிருப்பதால் அது 'குவிக் ஸில்வர்' (Quick Silver)

என்றும் சொல்லப்படும். ரஸம் சாதாரண சீதோஷ்ண நிலை-மையுள்ள இடங்களில் திரவமாயும், குளிர்ந்த தேசங்களில் கன வஸ்துவாயு மிருக்கும். கன வஸ்துவாக இருக்கையில் தகடாக அடிக்கவும், கம்பியாக அடித்து வீட்டிச் சுருட்டவும் கூடும். ஆனல் நம் தேசத்தில் அது எப்பொழுதும் திரவமாகவே இருக்கும்.

IV. How obtained—உலகத்தில் பல விடங்களில் பூமிக்-குள் சுரங்கங்களில் சிறிது பிரகாசமும், சிவந்த ஊதா நிற-முமான பவளமனேசிலை (Cinnabar) எனப்படும் கற்பாறைக ளிருக்கின்றன. அது நிரம்ப கந்தகமும் பாதரசமும் கலந்-துள்ள ஒரு சேர்க்கைப்பொருள். அதை வெட்டி யெடுத்துத் துண்டு துண்டாக உடைத்துச் சுண்ணும்புக் கல்லுடன் சேர்த்து எரித்தால் பாதரசம் ஈராவியாக எழும். பின்பு அதை ஓர் மண் குழாய் வழியாய் மற்றோர் பாண்டத்தில் சேகரித்து குளி ரப் பண்ணினல் பாதரசமாகும். சில இடங்களில் பாறைகளி லுள்ள துவாரங்களிலிருந்து சுத்தமான ரஸமாகவே அகப்-படுகின்றது.

V. Uses—(1) வெள்ளீயத்துடன் பாதரசத்தைக் கலந்து கண்ணுடியின் ஒரு புறத்தில் பூசினல் அது முகம்பார்க்கும் கண்ணுடியாக உதவும். (2) இது தங்கத்துடன் சேரும் குண-முடையதாதலால் சுரங்கத்திலிருந்து தங்கத் தூள்களை சிறிதும் விடாமல் எடுக்க உதவுகிறது. (3) வெர்மிலியன் (Vermilion) என்னும் ஒரு நிறம் உண்டாக்க உதவுகிறது. (4) உஷ்ணமானி (Thermometer), வாயுமானி (Barometer) முதலிய கரு-விகள் செய்ய உதவுகிறது; அவற்றல் முறையே தேகத்தின் சீதோஷ்ண அளவையும், காற்றின் தன்மையையும் அறியலாம்.

T. A. EGYAMIAR,
Headmaster, Board School, Kalugumalai,
and Secretary, Teachers' Association,
Kalugumalai.

HINTS ON EATING

போஜன விதிக் குறிப்புகள்

(முன் தொடர்ச்சி 264-ம் பக்கம்)

12. ஒருவன் முக்கியமான காரியமொன்று செய்துகொண் டிருக்கையில் அவனுக்குப் புதிய வேலையொன்றைக் கொண்டு வந்து கொடுத்தால், அவனுக்கு எவ்வளவு வெறுப்பும் கோபமும் வருமென்பது ஒவ்வொருவருக்கும் அனுபவத்தில் தெரியும். ஆனல், இந்த நியாயம் ஒவ்வொருவரும் கம்முடைய இரைப் பைக்குப் பொருந்துமென்று நினைக்குமளவு புத்தியைச் செலுத்-துவதில்லை. ஜீர்ண காரியம் முற்றுப் பெறுமல் இன்னும் நடந்து கொண் டிருக்கையில் புதிய உணவை ஜீர்ணிக்கும்படி அதற்குள் செலுத்தினல், மேலே சொல்லியது போல அது (இரைப் பை) கோபங்கொண்டு அஜீர்ணம், அக்னி மாந்தியம், வயிற்று வலி, மலபந்தம் முதலிய ரோகக் குறிகளைக் காட்டுகின்றது.

13. சிறிதும் அன்பும் ஆதரவும் காட்டாமல் இரைப் பையை ஒருவன் எப்பொழுதும் கஷ்டப் படுத்திக்கொண் டிருந்தால், அது கோபங் கொள்ளாதா? வேளையிலும், வேளை யில்லாத வேளையி-லும் இரைப் பைக்குள் உணவைப் போட்டுத் திணிக்கும் கெட்ட வழக்கத்தை ஒருவன் பிடிவாதமாய்க் கொள்வானுனல், ஏற்-கெனவே இரைப் பைக்குள்ளிருக்கும் உணவு முற்றும் ஜீர்ண-மாகாதிருக்கையில், மேலும் மேலும் அவன் இரைப் பையைக் கஷ்டப்படுத்துவதனல், அவன் இயற்கைக்கு விரோதமான காரி-யம் செய்தவனுவான்.

14. அவரவருக்குரிய காரியங்களைக் கிரமமாய்ச் செய்ய வைப்பதிலும், அப்படிச் செய்யாமல் தவறுகிறவர்களைத் தண்டிப்-பதிலும் இயற்கை சற்றும் பின் வாங்குவதில்லை. எவரிடத்தி-லும் இயற்கை வேலை வாங்குவதிலும் கண்டிதமே, விதி விரோத-மாக நடப்பவர்களைத் தண்டிப்பதிலும் இயற்கை மிகக் கண்டி-தமே. ஆகலால், மேற்சொல்லிய கெட்ட வழக்கத்தை விட்-டொழியாதவனுக்குப் பற்கள் வயது முதிராதிருக்கையிலே, சீக்-கிரத்தில் உதிர்ந்து போகின்றன. அதனல், அவன் கெட்டியான

பதார்த்தங்களையும் ஜீர்ணிக்க முடியாத உணவுப் பொருள்களையும் மென்று தின்னக்கூடாதவனாகிறான். இதுவே அவனுக்குத் தண்டனை. இவ்வாறு இரைப் பைக்கு இயற்கை சகாயஞ்செய்து அதன் வேலையை இலகுவாக்குகின்றது.

15. நடுப்பிராயத்தில் பற்களை இழந்தவனுடைய அனுபவத்தைக் கேட்டால், இரைப்பையில் புளிப்பும் கடுப்பும் இருக்கின்றனவென்றும், குடல்களில் மலச்சிக்கல்கள் இருக்கின்றனவென்றும், உணவில் உருசியும் ஆசையும் இல்லையென்றும் அவன் சொல்லுவான். இயற்கையின் உத்தேசத்தைக் கெடுப்பதற்கு மனிதன் பலவிதமான குயுக்திகள் செய்கிறான். தனக்குப் பல்லில்லாமையினால், கெட்டியான பதார்த்தங்களையும் ஜீர்ணிப்பதற்குக் கஷ்டமாயுள்ள உணவுகளையும் சிறிய உரலிற்போட்டு இடித்து, தன்னுடைய இரைப்பையின் நோக்கத்திற்கு விரோதமாக விழுங்குகிறான். ஐயோ! ஆரோக்கிய சாஸ்திரவிதிகளை அறியாமல் மனிதன் தனக்குக் கேடான காரியங்களையே ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து கஷ்டத்திற்கு ஆளாகிறான்.

16. சட்டியில் சோறு கொதித்துக்கொண்டிருக்கையில் வேகாத புதிய அரிசியை அந்தச் சட்டியிலே போட்டுச் சமைப்பார் உண்டோ? அது மடமை என்பது எல்லாருக்கும் தெரியாதா? அப்படித் தெரிந்திருந்தும், முதலில் புசித்த அன்னம் வயிற்றில் ஜீர்ணமாகிக் கொண்டிருக்கையில் இனி ஜீர்ணமாகவேண்டிய புதிய உணவைச் சிறிதும் யோசியாமல் மேலும் மேலும் எத்தனையோ தடவை வயிற்றுக்குள் ஜனங்கள் போடுகிறார்களே. இது எவ்வளவு அறிவீனம்? பாதி ஜீர்ணமான அன்னத்துடன், இனிப் புதிதாய் ஜீர்ணமாகவேண்டிய அன்னமும் சேர்ந்தால், எல்லாம் ஒன்றுச் சேர்ந்து நன்றாய் ஜீர்ணமாகித் தேகத்துக்கு நல்ல இரத்தமும் புஷ்டியும் தருமா? பாதிவெந்திருக்கும் அரிசியுடன் புதிய அரிசியைச் சேர்த்து வேகவைத்தால், இரண்டுங்கலந்து நன்றாய்ச் சமைந்து உருசியுடன் உண்ணத்தக்க அன்னமாகுமா?

17. நல்லதாயும், புஷ்டிகரத்தக்கதாயும், எளிதில் ஜீர்ணிக்கத்தக்கதாயுமுள்ள உணவை வேண்டிய அளவு உட்கொண்டால், அதுவெல்லாம் ஜீர்ணமாகி, அன்னரசமாய்த் திரிகின்றது. அந்த

அன்னரசம் மணிக்குடலை விட்டு வெளியேபோகுமுன், சக்கை ஒன்றும் விடாமலே, இரத்தத்தோடு கலந்து போகின்றது.

18. பெருங்குடல் என்பது தேகம் என்னும் வீடு முழுமைக்கும் ஏற்பட்ட பொதுவான சாக்கடை. தேகத்தினின்றும் கழிவுபடும் வஸ்துக்களில் பெரும்பாகம் இரத்தத்தின் மூலமாய் அந்தப் பெருங்குடலில் கொண்டுவந்து தள்ளப்படுகின்றது. அந்தக் கழிவடை வஸ்துக்களெல்லாம் நுண்ணிய குழல்களின் வழியாகப் பெருங்குடலில் வந்து சேருகின்றன; அங்கிருந்து அப்போதைக்கப்போது வெளியில் தள்ளப்படுகின்றன.

19. அப்படிப்பட்ட கழிவடை வஸ்து மிகவும் கொஞ்சமாகவே இருக்கும். கழிவடை வஸ்துவென்பது உணவிலுள்ள புஷ்டியான அம்சம் இரத்தத்துடன் கலந்தது போக மீக்கப்பட்ட சக்கை அல்லவென்பது, பலநாள் பட்டினி யிருப்பவர்களும், உணவே புசித்திராமல் அப்பொழுது பிறந்த சிசுவும் மலங் கழிப்பதனாலே விளங்குகின்றது.

20. ஆனால், பேராசை மிகுந்து பேரூண் உண்பவர்கள் தங்களுடைய தேகத்துக்கு அவசியமாய் வேண்டியதற்கு அதிகமான அளவு அன்னத்தைப் புசித்து ஜீர்ண யந்திரங்களுக்கு அதிகமான வேலை சுமத்துகிறார்கள். அதனால் அந்த உணவு அரை குறையாய் ஜீர்ணமாகின்றது; அவர்கள் ஒரு நாளைக்குப் பல தடவை மலோபாதை தீர்த்துக் கொள்ள வேண்டியதாகின்றது; ஒவ்வொரு தடவையும் ஏராளமான கழிவடை வஸ்துக்களை வெளியில் தள்ளவேண்டி யிருக்கின்றது.

21. அவ்வளவு அதிக ஆசை கொண்டு அதிக தீனி தின்பதனால் இரைப்பை நெகிழ்ந்து சட்டியைப் போல வயிறு பருக்கின்றது; அதிக வேலையினாலேயே ஜீர்ண யந்திரம் பலவீனப்படுகின்றது. அப்படிப் பெருந் தீனி தின்பவன் மற்றவர்களுடைய மதிப்பில் குறைந்து போகிறான்; அவர்கள் அவனை அன்னம் அரைக்கும் யந்திரமாகவே எண்ணுவார்களேயல்லாமல், மனிதனென மதித்துக் கௌரவிக்க மாட்டார்கள்.

22. அதிக வேலையினாலாவது, நெடும் பிரயாணத்தினாலாவது தூக்க மின்மையினாலாவது தேகம் களைத்திருக்கும் பொழுது

உணவு புசிக்கலாகாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சிறிது நேரம் ஓய்வுகொண்டு ஆயாசம் தீர்ந்த பிறகு புசிப்பது மிகவும் நல்லது.

23. மனவெழுச்சி மிகுதியாய் இருக்கும் பொழுது அன்னம் புசிக்கலாகாது. அதாவது, கோபம், விசனம், பயம், காமம் முதலியன மிகுந்திருக்கையில் உண்ணக் கூடாது. அப்படிப்பட்ட சமயங்களில், உண்மையில் பார்த்தால், உருசியும் விருப்பமும் இராவென்றே சொல்லலாம்.

24. அன்னம் புசிக்கையில் விசனம், கோபம், காமம், பயம் முதலியன மனத்தில் எழுவதற்குச் சற்றும் இடங் கொடுக்கக் கூடாது. சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் சச்சரவுகள் செய்வதும், சண்டை போடுவதும், குழந்தைகளை அடிப்பதும் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். மனமார உண்ணும் உணவு நன்றாய் ஜீர்ணமாகும்.

25. தூங்குவதற்குச் சற்று முன்னும், தூக்கத்தின் இடையில் எழுந்தும் உண்ணலாகாது. இந்த வேளைகளில் உட்கொள்ளும் உணவு நன்றாய் ஜீர்ணமாகாது; வயிற்று உப்பசம் உண்டாக்கும்; ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

26. தூங்கும் குழந்தைகளை எழுப்பி, அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஆடி விழுகையில் அவர்களுக்கு அன்னம் ஊட்டுவதும், பெரியவர்களை யேனும் சிறியவர்களை யேனும் எழுப்பிப் பால் குடிக்கக் கொடுப்பதும் மிக்க தீமை பயக்கும்.

27. பால் என்பது வெகு சீக்கிரத்தில் விலயமாகக்கூடிய (liable to ready de-composition) பதார்த்தம். அது சீக்கிரமாய் ஜீர்ணமாகாவிட்டால் புளித்துப் போம்: உறக்க வேளையில் அப்படி புது குடலில் புளித்து, மறுநாட் காலையில் புளியேப்பம் எழுப்புப்; வயிற்றை விரலினுல் தட்டினுல் பானையைத் தட்டுவது போன்ற சத்தம் உண்டாகும்.

28. இரவில் உணவு வெகு சிதானமாயும் (அதாவது, அதிகமில்லாமலும்) எளிதில் ஜீர்ணிக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும். தினத்தில் முக்கியமான உணவு ராத்திரி உணவாய் இருக்கக்கூடாது; அதாவது, பகற் போஜனத்தை முக்கியமான

உணவாய்க் கொண்டு தாராளமாய்ப் புசிக்கலாமே யல்லாமல், ராத்திரி உணவை முக்கியமான (பலமான) உணவாக்கக்கூடாது.

29 ஐரோப்பியர்கள் ராத்திரி உணவையே முக்கியமான உணவாய்க் கொண்டு, பலமான அன்னபானுதிகளை யருந்தி, நடனங்கள், கூத்துகள், ஆட்டங்கள் முதலிய பலவகையான விளையாட்டுக்களில் அமர்ந்து மனவெழுச்சி உண்டாக்கிக் கொள்வதற்கு சாஸ்திராதாரமே கிடையாது.

30. அன்னம் புசித்தவுடனே மிகுந்த சரீரப்பிரயாசைக்கிடமான காரியங்கள் செய்வது உயிருக்கே ஆபத்தாய் முடியும். அப்படிப்பட்ட ஆபத்துக்கள் அநேக இடங்களில் நடந்திருப்பதாகக் கேட்டிருக்கிறோம். 'உண்ட இளைப்பு தொண்டனுக்கும் உண்டு' என்னும் பழமொழி, அன்ன மருந்திய பிறகு சரீரத்திற்கு அதிகப்பிரயாசையான வேலைகொடுக்கக்கூடாதென்பதை வற்புறுத்துகின்றது.

31. போசனம் செய்தவுடனே விசனம், கோபம், பயம், முதலியன மனத்தில் எழுந்து ஒங்குவதற்கு இடங்கொடுக்கக் கூடாது. அப்படிப்பட்ட மனவெழுச்சி உண்டானுல், ஜீர்ண காரியத்தை நடத்துவதற்கு இரைப்பையைப் பலப்படுத்தப்போய்ச் சேரவேண்டிய இரத்தமெல்லாம் மூளைக்கு ஓடிப்போய்ச்சேரும். ஒரே காலத்தில் இரண்டு மூன்று முக்கியமான உறுப்புக்கள் துடியாய் வேலைசெய்ய முடியாது. ஆதலால் ஜீர்ணம் சரியாய் நடவாது.

32. மேற்சொல்லிய காரணத்தினுலேயே, சுறுசுறுப்பு மிகுந்த மாணவர்கள் ஒருகையால் உணவை எடுத்துப் புசித்துக் கொண்டு, மற்றொருகையில் புத்தகத்தைப் பிடித்துப் பார்த்துப் பாடம் படிப்பது ஆரோக்கியத்திற்கு ஆனிகரமானது.

33. சரீரத்திற்காவது, மனத்திற்காவது, புத்திக்காவது பிரயாசையான வேலைகொடுக்கவேண்டியிருக்கையில் வயிறு வெறுமையாய் இருப்பது நல்லது; வேண்டுமாயின், அற்பமாய் உண்ணலாம். இந்த ஆரோக்கிய விதியை அனுசரித்தே தவங்கள் செய்வதற்கும் வைதிககாரியங்கள் செய்வதற்கும் முதல் அங்கம் உபவாசமென்று (பட்டினியாய் இருக்கவேண்டுமென்று) ஆரியர்கள் விதித்திருக்கிறார்கள்.

34. நியூடன் முதலான பிரசித்தமான மகாசாஸ்திரிகள் எல்லாரும் உபவாசம் இருக்கையிலேயே அநேக சிக்கான சாஸ்திர நுட்ப விஷயங்களை ஆராய்ந்து தெளிவுற்றுச் சித்தாந்தம் செய்தார்கள். ஈசுவரப் பிரசாதம் கிடைக்கும் பொருட்டு இயேசுக் கிறிஸ்து 40 நாள் உபவாசம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of 'the Arya,' Madras.

SLEEP

நித்திரை

1. உழைத்து அலுப்புற்று ஓய்வு கொள்வதே நித்திரை எனப்படும். நித்திரை என்பது தேகத்தை ஆற்றித் தேற்றும் தன்மையுடையது; அந்த ஆறுதலினால் மறுபடி உழைப்பதற்கு வேண்டிய ஊக்கம் உண்டாகின்றது. நித்திரை என்பதே தூக்கம்.

2. 'தூக்கம்' என்னும் பதத்திற்கு 'தூக்குதல்' என்று அர்த்தமாம். தூக்குதலாவது தேகத்தின் அங்கங்களில் ஒவ்வொன்றையும் அதனதனுக்குரிய இயற்கையான நிலையில், மனத்தினால் ஏவப்பட்டு எழுச்சி கொள்ளாமல், சம நிரையாய் வைப்பதாம்.

3. தேகம் என்னும் யந்திரத்தை ஏவி நடத்தும் அதிகாரி மனம் ஆகும். தூங்கும் வேளையாவது மனமென்னும் அதிகாரி தேகத்துக்கு வேலை யிடாமல் ஒழிந்து உறைந்திருக்கும் வேளையாம். எந்த யந்திரமும் இடைவிடாமல் வேலை செய்துகொண்டிருப்பது முடியாத காரியமல்லவா?

4. பௌதிக சாஸ்திர நிபுணரென மேல்நாட்டுப் புலவர்களாலும், உலகத்திலுள்ள அறிஞர்களெல்லாராலும் புகழப்பெற்ற நமது கல்கத்தாவாசியாகிய ஜகதீசச் சந்திரவாசு (Professor Jagdis Chunder Bose) என்பவர் மிகுந்த ஆராய்ச்சிகள் செய்து, மரங்கள் செடிகள் முதலியனவும், யந்திரமென்னும் கருவியென்னும் சொல்லப்படும் ஜீவாங்கக் கட்டில்லாத வஸ்துக்களும் (Inorganic bodies) உழைப்பதனால் அலுப்புறுகின்றன வென்னும், பூர்த்தியாய் ஓய்வு கொள்வதனால், ஆறித் தேறுகின்றன

வென்றும் கண்டுபிடித்துச் சித்தாந்தஞ் செய்து உலகத்திற்குக் காட்டியிருக்கிறார்.

5. ரெயில்வே எஞ்சின்களும் வண்டிகளும் ஓடியோடி அலுப்புறுவதனால் தினம் மாறி தினம் அவைகளை ஓட்டாமல் ஓரிடத்தில் அமைதியாக விட்டு வைக்கிறார்கள்.

6. பிராணிகளின் உறுப்புகளுள் சலன உறுப்புகள் (கால்கள்), பணிவிடை யுறுப்புகள் (கைகள்), ஞானேந்திரியங்கள்* மற்றுமுள்ள சில உறுப்புக்கள் ஆகிய இவைகளெல்லாம் இயற்கையில் இரட்டையாய்ச் செய்யப்பட்டிருப்பதின் கருத்து, அவை மாறி மாறி வேலை செய்து ஓய்வுகொண்டு தேறி ஊக்கம் குன்றாதிருக்க வேண்டும் என்பதே என்று இக் காலத்துச் சாஸ்திரிகள் ஆராய்ந்து கண்டறிந்து சித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

7. இரவு பகல்கள் மாறிமாறி வருவதனாலும், இருதுக்கள்† மாறி மாறி வருவதனாலும் ஊக்கத்துடன் உழைத்த பிறகு இயற்கைக்கு ஒருவிதமாக ஓய்வு கொடுக்கின்றன. இப்படி ஓய்வு கொள்ளும் ஏற்பாடு இயற்கையில் அமைந்திராவிட்டால், உலகத்தில் எல்லாவிதமான சுறுசுறுப்பும், முயற்சியும், வாழ்க்கையும் வெகு விரைவில் மிகத்துக்ககரமாக முடிவு பெறவேண்டிவரும்.

8. தேகத்தில் ஒவ்வொரு பாகமும் அதனதனுக்குரிய வேலையை முறைப்படி செய்து வருவதனால், அதனதனிலும் தேய்வும் பலவீனமும் கழிவும் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட குறைவை நிறைவிக்கும் பொருட்டுப் புஷ்டிகரமான வஸ்துவை

---

* ஞானேந்திரியங்கள் என்பவை ஐந்து. அவை 1. தோல், 2. கண், 3. காது, 4. நாக்கு, 5. மூக்கு. இவைகளுள் பிரத்தியக்ஷத்தில் இரட்டையாய் நமக்கு தோற்றும் கண் காது மூக்கு ஆகிய இவைகளே இங்குக் குறிக்கப்பட்டவை.

† இருதுக்கள் ஆறு.—அவை 1. வருஷருது, 2. சரத்ருது, 3. ஹேமந்த ருது, 4. சிசிரருது, 5. வஸந்த ருது, 6. கிரீஷ்ம ருது என்பனவாம். இவை தமிழில் முறையே 1. கார், 2. குளிர், 3. முன்பனி, 4. பின்பனி, 5. இளவேனில், 6. முதிர்வேனில் என்னும் பருவங்களாகும். ஆவணி முதலாக இரண்டிரண்டு மாதம் ஒவ்வொரு பருவம். அங்கிலேயர் 1. Spring (வஸந்தகாலம்), 2. Summer (கோடைக்காலம்) 3. Autumn (இலையுதிர் காலம்), 4. Winter (மாரிகாலம்) என நான்கு பருவங்களே கணிப்பார்கள்.

அப்போதைக்கப்போது தேகத்தில் சேர்க்கவேண்டிய தாகின்றது; மேற்சொல்லியபடி கழிவுபட்ட மலத்தை அப்போதைக்கப்போது பிராணவாயுவினால் (Oxygen) தகித்து பஸ்பமாக்கி, அந்த இடத்தினின்று விரைவில் அப்பால் கொண்டுபோய், முடிவில் தேகத்தினின்று வெளிப்படுத்த வேண்டியிருக்கின்றது.

9. இவ்வளவு சிக்கான காரியத்தை நிறைவேற்றுவதற்காக, இதயத்தினின்று (Heart) இரத்தம் எப்பொழுதும் குழல்களின் வழியாய் இறைக்கப்படுகின்றது. இதயம் என்பது இடப்புறத்து மார்பின் அடியில் இருக்கின்றது. ஜீர்ணிக்கப்பட்ட ஆகாரத்திலுள்ள புஷ்டிகரமான அம்சமும், உட்கொள்ளப்பட்ட மூச்சிலுள்ள பிராணவாயுவும் இதயத்தினின்று வெளிப்படும் இரத்தத்தில் நிரம்பியிருக்கின்றன. அந்த இரத்தம் தேகத்தில் ஒவ்வொரு மூலைக்கும் முடுக்குக்கும் இறைக்கப்படுகின்றது; மயிர், நகம், எலும்புகள் முதலிய பாகங்களுக்கும் அந்த இரத்த புஷ்டிபோய்ச் சேருகின்றது.

10. இதயத்தினின்று குழல்களின் வழியாக இரத்தம் எப்பொழுதும் இறைக்கப்படுகின்றதென்று சொன்னேம். அது எப்படி இறைக்கப்படுகின்றது? இறைக்கும் சக்தி யாது? இதயம் அடிக்கடி குவிந்து விரிந்து கொண்டிருப்பதனாலும், அப்படியே இரத்த நாளங்களும் விரிந்து குவிந்து கொண்டிருப்பதனாலும் இரத்தம் இதயத்தினின்று குழல்களின் வழியாய்த் தேகமெங்கும் வியாபிக்கின்றது.

11. ஒரு சிறு ரப்பர் பையிலாவது, குழலிலாவது கொஞ்சம் நீரைவார்த்து, கையினால் அதை விட்டுவிட்டு அமுக்குவோமானால், அதிலுள்ள நீர் இருக்குமிடத்தினின்று முன் நகருமல்லவா? அப்படியே இரத்தம் இதயத்தினின்று குழல்களின் வழியாய்த் தேகத்தில் பரவுகின்றது. ஆனால், இதயத்தையும் இரத்தக்குழல்களையும் மற்றொருவர் கையினால் அமுக்கவேண்டியதில்லை. அவற்றிற்குள் இரத்தம் வந்துசேரும்பொழுதே அவைகளை அகற்றித் தனக்கு இடம் செய்து கொள்ளுகின்றது. ரப்பரை இழுத்து விட்டுவிட்டால், அது முன் இருந்த நிலைமைக்குத் தனக்குத்தானே வருவதுபோல, இரத்தம் புகுந்தபொழுது விரிவுற்ற இதயமும் குழல்களும் மறுபடி தம் பூர்வத்து நிலைமைக்கு வருவதற்கு முயற்சி செய்யும் அளவில் தமக்குத்தாமே சுருங்கி இரத்தத்தை அமுக்குகின்றன. அப்பொழுது அந்த இடத்திலுள்ள இரத்தம் முன் செல்லுகின்றது. அப்படியே ஒவ்வோரிடத்தினின்றும் முன் சென்று குழல்கள் போகும் இடமெல்லாம் இரத்தம் வியாபிக்கின்றது.

12. எந்த வஸ்துவையும் தன்னிடத்திற்கு இழுத்துக்கொள்ளும் சக்தி பூமிக்கு இருக்கின்றதல்லவா? இந்தக் கவர்ச்சியினாலே வஸ்துக்களுக்கு கனம் என்பது ஏற்படுகின்றது. இந்தக் கனம் இரத்தத்துக்கும் உண்டல்லவா? கனமான வஸ்துவை உயரத் தூக்குகிறவனுக்குக் கஷ்டம் அதிகமல்லவா? இரத்தத்தைத் தேகத்தின் மேற்பாகங்களுக்கு இறைக்கவேண்டுமானால், கனமான வஸ்துவை உயரத்தூக்குமளவு பிரயாசை உண்டல்லவா? ஆதலால், தேகத்தின் மேற்பாகங்களுக்கு இரத்த மனுப்புவதற்கு இதயம் மிகப்பிரயாசைப்பட வேண்டியதாகின்றது.

13. இந்தப் பிரயாசை ஒருபொழுது மேற்கொண்டு, மற்றொரு பொழுது மேற்கொள்ளாமல் விடத்தக்கதன்று. எப்பொழுதும், அதாவது உயிருள்ளளவும் இந்தப் பிரயாசையை மேற்கொள்ளவேண்டியது இதயத்தின் பொறுப்பாய் ஏற்பட்டிருக்கின்றதன்றே? இடைவிடாமல் இப்படி உழைத்துவரும் இதயம் ஓய்வைநாடுவது இயற்கையே யன்றே? அது காடும் ஓய்வு எப்படிப்பட்டதெனின். இரத்தம் இறைக்கும் வேலையைச் செய்யாமல் நின்று விடுவதன்று. ஆனால், இறைக்கும் பிரயாசையை சற்றுக்குறைவு படுத்திக்கொள்வதே. வேலை சற்றுக்குறைவதே இதயத்துக்கு ஓய்வு எனப்படும்.

14. இந்த ஓய்வு தேகத்தைத் தட்டையாய், ஸமாஜமமாய் (horizontally)க் கிடத்துவதனால் பெறப் படுகின்றது. முதுகைக் கீழே வைத்துக்கொண்டு, அதாவது, மல்லாக்குப்பறுத்து தலைக்கும் காலுக்கும் பக்கத்துக்கும் தலையணையும் தாழ்வணையும் இல்லாமற் படுத்துக் கொண்டால் சரியான ஸமாஜமம் நிலவரும்படி மானிட தேகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. படுத்துக் கொள்பவன் ஒரு புறமாய்த் திரும்பவேண்டியிருந்தால் மாத்திரம் இரண்டு மூன்று அங்குல கனமுள்ள மெல்லிய தலையணை ஒன்றிருப்பது அவசியமாகும்.

15. படுப்பதற்கு உத்தமமான நிலை மல்லாந்துபடுப்பதன்று; அதாவது, முதுகைத் தட்டையாய்க் கீழே வைத்துப் படுப்பதன்று. அந்த நிலையில் மூக்குத் துவாரம் ஒருவாறு அடைபடும்; குறட்டை விடவேண்டி வரும்; அல்லது, வாயினல் மூச்சு விடவேண்டி வரும்; முக்கியமாய், பருத்த தேகமுடையவர்களுக்கு இப்படி நேரும்.

16. மற்றும், முதுகெலும்புக்குள் குருத்துமூளை (Spinal cord) அடங்கி யிருக்கின்றது. படுக்கையுடன் முதுகெலும்பு சம்பந்தப்பட்டிருப்பதனல் அதற்குள்ளிருக்கும் குருத்துமூளை சூடி கொள்கின்றது (உஷ்ணமாகின்றது); முக்கியமாய், படுக்கை மெதுவாயும் வெப்பமாயும் இருந்தால் குருத்துமூளைக்குச் சூடு நன்றாய் ஏறுகின்றது. குருத்துமூளை சூடி கொள்வதனல் விரும்பத் தகாத கனவுகளும் அவற்றிற்குரிய தீமையான பயன்களும் ஏற்படுகின்றன. மாணவர்களுக்கும், நியாயாதிபதிகள், கணக்கர்கள் நரம்பு பலமில்லாதவர்கள் முதலாகப் பெரும்பாலும் உட்கார்ந்தே காலங் கழிப்பவர்களுக்கும் இந்த அவஸ்தை உண்டு.

17. இரைப்பை (குகூஷி Stomach) தேகத்தின் இடப் புறத்தில் இருப்பதனல் அதன் கனம் ஒரு புறமாய் இழிந்து தொங்கும்; அதில் உணவு நிரம்பி யிருந்தால் அதிகக் கனம் இருக்குமாகையால், அது அதிகமாய் இழிந்து தொங்கும். நல்ல தூக்கம் வருவதற்கு இது ஒரு தடையாகும். உறக்கத்திற்கு உத்தமமான நிலை இடப் புறத்தைக் கீழே வைத்துப் படுப்பதாம்.

18 ஆனல், மகா விஷ்ணு வலப்புறத்தைக் கீழே வைத்துப் பள்ளிகொண்டிருப்பதாகவே விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். மகாவிஷ்ணுவின் குகூஷியில் அண்டாண்டங்களெல்லாம் அடங்கி யிருக்கின்றனவென்பது நமது கொள்கை. அவர் இடப் புறத்தைக் கீழே வைத்துப் படுத்தால், அது ஜீர்ணத்துக்கு அநுகூலமான நிலையாதலின், அவருடைய வயிற்றில் அடங்கி யிருக்கும் உலகங்களெல்லாம் ஜீர்ணித்துப் போவது போலத் தோற்றக் கூடும். அந்தக் கோற்றமும் எண்ணமும் பக்தர்களுக்கு உண்டாகாதிருக்கும் பொருட்டு வலப் புறத்தைக் கீழே வைத்துச் சயனித்திருப்பதாக விக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்)

T. A. SWAMINATHA AIYAR,
Retired Editor of 'the Arya,' Madras.

KINDERGARTEN - STORY TELLING.

பாலபோதனை - கதை சொல்லுதல்.

1. சிறுபிள்ளைகள் வஸ்துக்களின் தன்மையை அறியும் வயது வந்ததும் கதை கேட்கப் பிரியப் படுகிறார்கள். சில பெற்றோர்கள் குழந்தைகள் சீக்கிரம் சாப்பிடவேண்டுமென்றல் கதை சொல்வதுண்டு. அப்படிப்பட்டவை, குருவிக் கதை, ஈக் கதை, காக்கையும் நரியும் வெள்ளரித்தோட்டம் போட்ட கதை முதலியனவாகும். அதே கதைகளை அவர்கள் தினமும் கேட்கப் பிரியப் படுகிறார்கள். சொல்பவர் முதலில் எப்படிச் சொன்னரோ அப்படியேதான் சொல்லவேண்டும். ஏதாவது கொஞ்சம் மாற்றினலும் அவர்கள் அதற்குச் சம்மதியார்கள்.

2. ஒரு கதையை வாசித்துக் கேட்பதைவிட ஒருவர் சொல்லக் கேட்டால் அதில் அதிக ஆநந்தம் உண்டு. கிராமங்களில் சில வயது சென்றவர்களைச் சுற்றிக் கதை கேட்பதற்கு அநேகர் உட்காருவதுண்டு. அவர்கள் சொல் சாதுர்யத்தால் பிள்ளைகள் மனத்தைக் கவர்ந்து விடுகிறார்கள். கதை கேட்கவேண்டுமென்ற ஆசை சிறு பிள்ளைகளிடத்தில் மட்டுமன்றி பெரியவர்களிடத்தும் உண்டென்பது புராணப் பிரசங்கங்கள் ஹரிகதாகாலக்ஷேபங்கள் நடப்பதினல் தெரியவருகிறது.

3. கதை சொல்லும் திறமை இயற்கையாகவே ஏற்படுவது. ஆனல் ஒருவர் பழக்கத்தினல் அந்தச் சக்தியைப் பெறலாம். கீழ்தரப் பாடசாலைகளில் உபாத்தியாயர் எப்படிக் கதை சொல்ல வேண்டுமென்றும் அதனல் அவர் போதனையை எப்படி மேன்மைப் படுத்தலாமென்றும் கவனிப்போம்.

4. கதை சொல்வதில் உபாத்தியாயரே ஒரு நாடக சாலை, அவரே நாடகம் நடிக்கும் பாத்திரங்கள். அவர் சொல்லும் கதைதான் ஒரு நாடகம். உபாத்தியாயர் கதை சொல்ல ஆரம்பிக்கு முன் கதையிலுள்ள விஷயங்கள் நடந்த இடங்கள் கதையில் சம்பந்தப்பட்டவர்களின் நிலைமை, சுபாவங்கள், முதலியவைகளை, முதல், முதல், விஸ்தரித்து தெளிவாகவும் தப்பிதமில்லாமலும் சொல்லவேண்டும். பாலர், முதல் வகுப்-

புகளில் கதைச் சங்கதிகளைச் சித்திர மூலமாக விளக்கிக் காட்ட வேண்டும். மேல் வகுப்புகளில் தீர்மானமாக முடிந்த சித்திரங்களை உபயோகியாமல் சில குறிப்புகளை உபயோகிக்கவேண்டும். அதாவது சில கோடுகளை மனிதர்கள் என்றும் சில கட்டிடங்களை வீடுகள் என்றும் காட்டலாம். (Frobel) ப்ரொபல் என்னும் பால போதனையில் தேர்ந்தவர் "தீர்மானம்கொடுத்த பொம்மைகளும் சித்திரங்களும் பிள்ளைகளின் கற்பனை சக்தியைக் குறைத்து விடுகின்றன" என்று சொல்லுகிறார். ஒரு குச்சியைப் பிள்ளைகளிடத்தில் கொடுத்து அதைக் குதிரையென்று நினைத்துக்கொள்ளச் செய்தால் அவர்கள் குதிரைச் சவாரி எப்படி யென்று பாவனை செய்கிறார்கள். இப்படிச் செய்வதால் பிள்ளைகள் கற்பனை சக்தி யதிகப்படும். பிள்ளைகள் மனக் கண்ணுக்கெதிரே கதை சம்பந்தமான விஷயங்களை நிற்கும்படி செய்துவிட்டு கதையை நடுவில் நிறுத்தாமல் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். சொல்லும்போதே அடுக்குத் தொடர்கள் உபயோகித்தால் பிள்ளைகளுக்கு இன்னும் அதிக சந்தோஷம் உண்டாகும்.

(உ - ம்) குழகுழ கன்னே, ஒரே ஒரு குருவியாம், காக்கா காக்கா.

5. கதை சொல்லிச் சற்றுநேரம் சும்மா இருந்து சொன்ன கதையைப் பிள்ளைகள் மனத்தில் நினைத்துக் கொள்ளச் சொல்லி, விட்டு விடவேண்டும். பிறகு சொன்ன கதையில் சில கேள்விகள் கேட்கவேண்டும். பிள்ளைகள் கதையை அறிந்திருக்கிறார்களா என்று பார்க்கச் சிலர் ஒவ்வொரு பிள்ளையையும் கதையைத் திருப்பிச் சொல்லச் செய்கிறார்கள். இதில் சொல்லுகிற பிள்ளையைத் தவிர மற்றவர்கள் கவனியாமலிருக்க இடம் கொடுக்கும். சில குறிப்பான கேள்விகள் மூலமாக எல்லாப் பிள்ளைகளும் கதையை யறிந்திருக்கிறார்களா என்று கண்டு பிடிக்கலாம். கதையைப் பிள்ளைகளைக் கொண்டே நடித்துக் காட்டச் சொல்லுவதும் பிள்ளைகள் கதையில் எவ்வளவு அறிந்திருக்கிறார்கள் என்பதை அறிய ஒரு வழியாகும். கதையில் வந்த சில பாகங்களைப்பற்றிப் பிள்ளைகள் சித்திரம் வரைதலும் பிள்ளைகள் மனத்திலுள்ள சங்கதியை வெளிப்படுத்தும்.

6. ஒவ்வொரு கதை முடிவிலும் சில உபாத்தியாயர்கள் சில நீதி கற்பிப்பதாக நினைத்து "ஆதலால் பொய் சொல்லக் கூடாது" என்று பிள்ளைகளுக்கு குருட்டுப் பாடம் போடச் சொல்லுகிறார்கள். ஒரு கதை சொல்லி, பொய்யினால் வந்த கேடுகளைச் சொல்லி விட்டு விட்டால் பிள்ளைகள் பொய் சொன்னதால் வந்த கேடுகளை நினைத்து நினைத்து அதைச் செய்யாமலிருக்க முயற்சி செய்வார்கள்.

7. கதை சொல்லுதல் வகுப்பிற்கேற்றபடி இருக்கவேண்டும். பாலர் வகுப்பில் வீட்டில் நடக்கும் சங்கதிகளும், சிறு குழந்தைகள், பிராணிகளைப்பற்றியும் கதை சொல்லவேண்டும். முதல் வகுப்புக்கு விசித்திரக் கதைகள் சொல்லவேண்டும். வனதேவதைகள், இன்னும் மற்ற தேவதைகள் எப்படிச் சில நல்ல குழந்தைகளைக் காப்பாற்றினார்கள் என்பதைப் பற்றிய கதைகள் சொல்லலாம். இரண்டாவது மூன்றாவது வகுப்புகளில் வாஸ்தவமாக இருந்த சில வீரர்களின் சரித்திரத்தையும் அவர்கள் சம்பந்தமான கதைகளையும் சொல்லவேண்டும். நான்காவதுவகுப்பில் சரித்திரக் கதைகள் சொல்லவேண்டும். குழந்தைப் பருவத்தில் பிள்ளைகளுக்கு வேலைசெய்ய வேண்டுமென்ற ஆசை அதிகமாகையால் வீரர்களின் செய்கைகளையும் யுத்தங்களையும் பற்றிய கதைகள் சொல்லி வந்தால் பிள்ளைகள் வயது வந்தபின் பெரிய காரியங்கள் செய்ய முயற்சி செய்வார்கள்.

8. கதையினால் வரும் நன்மைகள் — பாடசாலையில் போதிக்க வேண்டிய மற்றப் பாடங்களுக்கெல்லாம் இது ஓர் ஆதாரமாகிறது. வாசக பாடம், சித்திரம், களிமண் வேலை, காகித வேலை இன்னும் இதரதொழில்கள் ஏற்படுத்த கதை முக்கியமானது. நடித்துக் காட்டுதல், விளையாட்டு இவ்விரண்டும் கதையிலிருந்தே ஏற்படுகின்றன. கதையினால் பிள்ளைகளுக்கு நன்னடக்கை பழக்கலாம். நன்மை தீமையின்னதென்றும், நல்லது கெட்டது இன்னதென்றும் பகுத்தறியும் சக்தி கதையினால் ஏற்படுகிறது. வீரர்கள் கதையையும், மெய்சொல்லி ஜயித்தவர்கள் கதையையும் பற்றிக் கேட்ட பிள்ளைகள் ஒரு காலத்திலும் பொய் சொல்லமாட்டார்கள். பிள்ளைகள் மனத்தில் பெரியவர்களைப்பற்றிய ஞாபகமும் அபிமானமும் அசாத்திய தைரியமும் உண்டாக்க வேண்டும். உண்மை பேசுதலும் எல்லா விஷயங்களிலும் சரியாக இருத்தலும் கதையினால் பிள்ளைகளுக்கு உண்டாக்குகிறோம்.

P. C. KRISHNA AYYAR, B.A., L.T.,
3rd Asst., Govt. Training School, Dindigul.

A FIRST LESSON IN DECIMAL

தசாம்சத்தில் முதல் பாடம்

அநேகமாய், உயர்ந்த வகுப்புகளில் படித்துப் பரீக்ஷை தேறின மாணாக்கர்களிலும், சிலர், தசாம்ச பின்னக்கணக்குகளைக் குருட்டு வழியில் பார்க்கிறார்கள். இந்தக் குறைவானது மாணவர்கள், உபாத்திமார்களிடமிருந்து சம்பாதித்துக் கொண்டதே. உபாத்திமார்கள், தங்கள் நோக்கம் நிறைவேறும் பொருட்டு காரணகாரணங்களை விஸ்தரித்துச் சொல்லி, சுலபமான வழிகளில் பார்க்கும்படி செய்யாமல், வழிகளை மாத்திரம் சொல்லி இதை இந்த வழியில் செய், அதை அந்த வழியில் செய் என்று கண்டிப்பாய் சொல்லி விடுகிறார்கள். இப்படிப்பட்ட, குருட்டு வழிகளையே அநுசரித்து கணக்குப் பார்ப்பதினால் ஒவ்வொரு விஷயத்தின் காரணத்தை தெரிந்து கொள்ள இடமில்லாமல் போகிறது. ஆகையால், ஒரு கணக்கை நாம் சரியான வழியில் பார்க்கும்படி போதித்தாலும், காரணங்களை தெரிவிக்காமல் போதிப்பது நிஷ்ப்ரயோஜனமாகும்.

தசாம்ச பின்னம்

ஏதாவது ஒரு முழுப் பொருளை (வாழைப் பழம்) நம்மளரில், சிலருக்குள் பங்கிட்டுக் கொள்ளும்படி நேர்ந்தால் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை, சம பாகங்களாக பின்னப் படுத்துகிறோம். இதில் கவனிக்க வேண்டியது முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது பாகங்கள் சமபாகங்களாக இருக்கவேண்டியது அவசியந்தான். இல்லாவிடில், பங்கிட்டுக் கொள்பவர்களில் ஒருவருக் கொருவர் விவாதம் உண்டாகும். இங்கே ஒரு முழுப் பொருளை நம்முடைய சௌகரியப்படி பல சம பாகங்களாக பிரித்துக் கொள்ளுகிறோம் ஆனால் தசாம்சத்திலோ ஒரு முழுப் பொருளானது, 10, அல்லது பத்தின்வர்க்கங்களான 100, 1000, 10000, முதலிய இப்படிப்பட்ட சம பாகங்களாகத்தான் பிரிக்கப்படும். ஆகையால் இதற்கு தசாம்ச பின்னம் என்று பெயர் வந்தது. ஒரு பொருளை பத்து சம பாகங்களாகப் போட்டு, ஆவைகளில் ஒரு சம பாகத்தை எடுத்தால் பத்தில் ஒன்று என்று சொல்லுவோம். வகுக்கப்பட்ட சம பாகங்களிலிருந்து தொகுக்கப்பட்ட பாகங்களின் தொகைக்கு தகுந்தபடி பத்தில் ஒன்று, நூற்றில் ஒன்று ஆயிரத்தில் மூன்று, பத்தில் ஐந்து என பலவாறுகச் சொல்லுகிறோம்.

Graphical Representation

கபமய = 1 = 100 சிறிய சதுரங்கள்
கடதச = பத்தில் ஒன்று = ·1
நடவல = நூற்றில் ஒன்று = ·01
சதரன = பத்தில் இரண்டு = ·2
ப்ட்க்த் = நூற்றில் நான்கு = ·04

முழு எண்களுக்கும், தசாம்ச எண்களுக்கும் வித்தியாசம் தெரியும் பொருட்டு இரண்டிற்கும் இடையே அடையாளமாக ஒரு புள்ளி வைக்கப்படும். அதற்குத் தசாம்ச புள்ளி என்று பெயர்.

இது தசாம்ச புள்ளி (Decimal Point) எனப்படும். முழு எண்களிலுள்ள ஒவ்வொரு இலக்கமும் இரண்டுவித மதிப்புகளை உடையதாயிருக்கிறது. அதாவது எண் மதிப்பு (Intrinsic value) இட மதிப்பு (Local value)

*

IIII

இந்த நான்கு இலக்கங்களும் ஒரே விதமான உருவங்களுடையதாயிருந்தாலும் எண் மதிப்பு ஒன்றையும், இட மதிப்பு ஒன்றையும் இருக்கிறது. * I = 100

இங்கே இலக்கங்களின் இட மதிப்பானது வலது பக்கமிருந்து இடது பக்கம் போகப் போக பத்து மடங்கு அதிகமாய்க் கொண்டே போகிறது. அல்லது இடது பக்கமிருந்து வலது பக்கம் போகப் போகப் பத்து மடங்கு குறைந்து கொண்டே போகிறது. இதே போல தசாம்சத்திலும் கண்டு கொள்க.

தசாம்ச புள்ளிக்கு அடுத்த வலது பக்கத்திலுள்ள முதல் தசாம்ச பத்தில் ஒன்றுகளையும், இரண்டாவது தானம் நூற்றில் ஒன்றுகளையும், மூன்றாவது தானம் ஆயிரத்தில் ஒன்றுகளையும் குறிக்கும்.

பத்தில் ஒன்றானது முழுப் பொருளில் பத்தில் ஒரு பாகத்தைக் குறிக்கும் நூற்றில் ஒன்றானது பத்தில் ஒன்றில் பத்தில் ஒன்று. ஆயிரத்தில் ஒன்றானது நூற்றில் ஒன்றில் பத்தில் ஒன்று.

·1	= பத்தில் ஒன்று	எண் மானம்
·5	= பத்தில் ஐந்து	
·15	= நூற்றில் பதினைந்து	
·05	= நூற்றில் ஐந்து	
நூற்றில் ஐந்து	= ·05	எண் குறிப்பு
பத்தில் ஒன்பது	= ·9	
நூற்றில்முப்பத்தெட்டு	= ·38	

N. B — ஒரு இலக்கமும் சொல்லப்படாத தானத்தில் பூஜ்யம் போடவேண்டும். உதாரணமாக நூற்றில் ஐந்து = ·05. இங்கே பத்தில் ஒன்றுகளின் தானத்தில் ஒன்றும் சொல்லப்படாதாகையால் பூஜ்யம் போடப்பட்டது. தசாம்ச பின்னத்தைச் சாதாரண பின்னமாக மாற்றினால் பகுதி எண்கள் எப்பொழுதும் பத்து அல்லது பத்தின் வர்க்கங்களாகவே இருக்கும். (உ-ம்) ·25 = $\frac{25}{100}$; ·5 = $\frac{5}{10}$ ஆகையால் தசாம்ச பாடத்தில் முதல் பாடத்தை போதிக்கும் பொழுது மேல் கண்ட மாதிரியாக சதுரக் கட்டிடங்களின் மூலமாயாவது காகிதம் மடித்தலைக் கொண்டாவது விஸ்தரித்துப் போதித்தால் பிள்ளைகளுக்கு நன்றாய் விளங்கும். இதற்குச் சதுரக் கட்டிடங்கள் வரையப்பட்ட கரும்பலகை (Graph Board) மிகவும் நலம்.

R. KRISHNASWAMY IYER,
Head Master, Hindu Elementary School,
Hariharankudal Post, Thirukkaclaheri,
(Via) Tranquebar.

MUSEUM
மியூசியம்

(பாடசாலையில் நடந்த ஓர் சம்பாஷணை.)

மாணிக்கம் — என்ன ஸார்! பூச்சிகளைக் கொல்லுகிறீர்களே, அது பாவமல்லவா?

உபாத்தியாயர் — பூச்சிகளைக் கொல்லுவது பாவந்தான். ஆனாலும் நான் செய்வது பாவமாகாது.

மாணிக்கம் — பின் யார் செய்தால் பாவமாகும்?

உபாத்தியாயர் — என்னைப் போன்ற உபாத்தியாயர்கள் தவிர, மற்றவர்கள் யாதாமொரு ஜீவனை வதைத்தால் பாவமாகும்.

மாணிக்கம் — நீங்கள் கொன்றால் பாவமில்லை? மற்றவர்கள் கொன்றால் மட்டும் என் பாவமாகும்?

உபாத்தியாயர் — நாங்கள் காரியமாகக் கொல்லுகிறோம். மற்றவர்கள் காரிய மில்லாமல் கொல்லுகிறார்கள்.

மாணிக்கம் — அதெப்படி?

உபாத்தியாயர் — உதாரணமாக I. சிறுவர்கள், ஈயைப் பிடித்துக் கழுத்தில் சுருக்கிட்டு இம்சிப்பதும், தும்பியைப் பிடித்து வாலைத் துண்டித்து, பறக்க விடுவதும், அவைகளின் இறகுகளைக் கிள்ளிக் கீழே விட்டு அவைகள் துள்ளிக் குதித்து இம்சைப் படுவதை வேடிக்கையாய்ப் பார்த்திருப்பதும் முதலிய பல செய்கைகள் பாவத்திலும் பாவமல்லவா?

மாணிக்கம் — ஆம் பாவத்திலும் பாவமாகும். நீங்கள் கொன்றால் மட்டும் ஏன் பாவமில்லை?

உபாத்தியாயர் — நாங்கள் காரியமாகக் கொல்லுகிறோம்.

மாணிக்கம் — என்ன காரியமாகக் கொல்லுகிறீர்கள்?

உபாத்தியாயர் — உங்களுக்கு அவைகளைப் பற்றிப் பாடம் நடத்துவதற்காகத்தான்.

மாணிக்கம் — இவைக ளில்லாமல் பாடம் நடத்தினால் என்ன?

உபாத்தியாயர் — நடத்தலாம். 'ஈ' க்கு எத்தனை கால்? என்று கேட்டால், சிலர் இரண்டு என்றும். சிலர் நான்கு என்றும் சொல்வார்கள். இரண்டு மல்ல நான்குமல்ல ஆறு கால் என்றால் அப்பொழுது தான், எங்கே பார்ப்போம் என்று ஈயைப் பிடிக்க அங்கு மிங்கு மலைந்து ஈ அகப்படாவிட்டால் இந்தச் சந்தேகம் சதா மனத்தை வருத்திக் கொண்டே யிருக்கும். ஏற்கனவே ஒரு ஈயைக் கொன்று, ஒரு குண்டூசியில் குத்தி அதை நமது மியூசியத்தில் வைத்திருந்தால், சந்தேகந் தோன்றியவுடனே அதைத் தீர்த்துக்கொள்ளலா மல்லவா?

மாணிக்கம் — 'ஈ' க்கு ஆறுகால் என்று தான் தெரியுமே, அதை இம்சித்து ஊசியில் குத்தி வைத்திருக்க வேண்டிய அவசியத்திற்கு?

உபாத்தியாயர் — நமக்கு இருக்கட்டும், வண்ணத்திப் பூச்சி, தும்பி இவைகளுக்கு எத்தனை கால்கள்?

மாணிக்கம் — (சந்தேகத்துடன்) ஆறுகால்கள் ஸார். (வகுப்பிலிருந்த இருவர்)

லக்ஷ்மி — இல்லை ஸார் நான்குகால். (உடனே)

நாகரத்தினம் — இரண்டு கால் ஸார்.

உபாத்தியாயர் — மாணிக்கம்! பார்த்தாயா, இவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள். நீ ஆறு காலென்கிறாய்?

மாணிக்கம் — இல்லை ஸார்! ஆறு காலாட்டந்தானிருக்கிறது.

உபாத்தியாயர் — (பூச்சிகளை எடுத்துக் காட்டி) இதோ எத்தனை காலென்று பாருங்கள்.

மாணிக்கம் — நான் தான் ஆறு காலென்று சொன்னேனே.

உபாத்திபாயர் — சொன்னாய் சந்தேகந்தானே.

மாணிக்கம் — ஆம்.

உபாத்தியாயர் — இப்பூச்சிகள் நமது மியூசியத்தில் வைத்திருந்ததனால்தானே, இச் சந்தேகம் நிவர்த்தியாயிற்று.

மாணிக்கம் — ஆம் ஸார். நீங்கள் கொல்லுவது பிரயோஜனமாகத்தானிருக்கின்றது. இது பாவமானாலும் உங்கள் விஷயத்தில் பாவமாகாது. மற்றவர்கள் காரியமில்லாது கொல்லுகிறார்களே அது மகா பாவமாகும். ஆனால் இம்மாதிரி எல்லாப் பாடசாலைகளிலும் செய்து வைப்பார்களா?

உபாத்தியாயர் — செய்து வைத்திருப்பார்கள். நான் தயார் செய்து வைப்பது எம்மாத்திரம். மற்றப் பாடசாலைகளில் தயார்செய்து வைத்திருப்பதில் இது ஒரு அணுவாகுமா? ஆனால் எல்லாப் பாடசாலைகளிலும் தயார் செய்து வைக்கும்படி என்னைப் போன்ற உபாத்தியாயர்களைக் கேட்டுக்கொள்வோம்.

P. பரிமணப்பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர், போர்டு கொலஸ்ஸ்கூல்,
மகாதானபுரம், குளித்தலை தாலூகா.